
# 1992 அவ்யக்த முரளி



**<u>பொருளடக்கம் - 17</u>**

**18.01.1992 அவ்யக்த நாளன்று அவ்யக்த பாப்தாதா தனது குழந்தைகளுக்காக கூறினார்!**

**13.02.1992 அனேக ஜென்மங்கள் அன்பு நிறைந்த வாழ்க்கையை உருவாக்குவதற்கான ஆதாரம் இந்த ஜென்மத்தில் பரமாத்மாவின் அன்பு!**

**02.03.1992 மகா சிவராத்திரி கொண்டாடுவது என்றால் உறுதிமொழி எடுப்பது, விரதம் இருப்பது மற்றும் பலி கொடுப்பது!**

**16.03.1992 ஹோலி கொண்டாடுவது என்றால் திட சங்கல்பத்தின் அக்னியில் பலவீனங்களை எரிப்பது மற்றும் சந்திப்பின் ஆனந்தத்தைக் கொண்டாடுவது!**

**13.10.1992 முதன்மையானவர் ஆக வேண்டும் என்றால் ஞானம் மற்றும் யோகாவை சொரூபத்தில் கொண்டு வாருங்கள்!**

**01.04.1992 முன்னேறும் கலையை அனுபவம் செய்வதற்காக இரண்டு விஷயங்களின் சமநிலை -ஞானம் நிறைந்த பாவனை மற்றும் அன்பு நிறைந்த யோகா!**

**08.04.1992 பிரம்மாபாபா மேல் இருக்கும் அன்பின் அடையாளம் அவ்யக்த பரிஷ்தா ஆவது!**

**15.04.1992 சத்தியத்தின் கூடவே பண்புகளையும் தாரணை செய்யுங்கள்!**

**24.09.1992 சத்தியம் மற்றும் அசத்தியத்தின் முக்கியமான வித்தியாசம்!**

**03.10.1992 பிராமணன் என்றால் எப்பொழுதும் உயர்ந்த பாக்கியத்தின் அதிகாரி!**

**03.11.1992 ஆன்மீக கௌரவத்தின் அடையாளம் எப்பொழுதும் நிரம்பி முழுமையாக மற்றும் திருப்தியாக இருப்பது!**

**12.11.1992 எதிர்காலத்து உலக இராஜ்யத்தின் ஆதாரம் சங்கமயுகத்தின் சுயராஜ்யம்!**

**21.11.1992 கர்மங்களின் விளைவுகளின் இரகசியங்களைத் தெரிந்தவர் ஆகுங்கள்!**

**30.11.1992 அனைத்து பொக்கிஷங்களிலும் முழுமையானவர் ஆகுங்கள் -ஆசீர்வாதங்களைப் கொடுங்கள், ஆசீர்வாதங்கள் பெறுங்கள்!**

**10.12.1992 பூர்வஜ் (மூதாதையர்) மற்றும் பூஜைக்குரியவர் என்ற நினைவில் இருந்து அனைவரின் தெய்வீக வளர்ப்பைச் செய்யுங்கள்!**

**20.12.1992 கீழ்படிந்து (Obedient) நடப்பவர்கள் தான் சர்வ சக்திகளுக்கும் அதிகாரி!**

**31.12.1992 வெற்றி அடைவதற்கான சாதனம் அனைத்தையும் பயனுள்ளதாக உபயோகியுங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த நாளன்று அவ்யக்த பாப்தாதா தனது குழந்தைகளுக்காக கூறினார்:

இன்று எல்லையில்லாத தாய் தந்தைக்கு முன்னால் முழு எல்லையில்லாத குடும்பம் இருக்கிறது. இந்த சபை மட்டும் அல்ல ஆனால் நாலா புறங்களின் சிநேக, சகயோகி குழந்தைகளின் சிறிய பிராமண குடும்பம், மிகவும் (ப்யாரா) பிரியமான மற்றும் (ந்யாரா) தனிப்பட்ட குடும்பம், அளௌகீக குடும்பம், (ஸித்திரம்) உடலில் இருந்தாலும் (விஸித்திர) உடலுக்கு அப்பாற்பட்ட விந்தையான குடும்பம் முன்னால் உள்ளது. பாப்தாதா அமிர்தவேளை முதல் அனைத்து குழந்தைகளின் சிநேகத்தினுடைய, சந்திப்பு நிகழ்த்துவதற்கான, வரதானம் பெறுவதற்கான, இனிமையிலும் இனிமையான ஆன்மீக உரையாடலை கேட்டுக் கொண்டிருந்தார். அனைவருடைய மனதிலும் சிநேகத்தின் உணர்வு (பாவனை) மற்றும் சமானம் ஆவதற்கான சிரேஷ்ட (காமனா) விருப்பம் -இதே ஊக்கம் உற்சாகத்தை நாலா புறங்களிலும் பார்த்தார். இன்றைய நாள் பெரும்பான்மையான குழந்தைகளுக்கு முன்னால் முதல் நம்பர் சிறந்த ஆத்மா பிரம்மா தாய் தந்தை வெளிப்படையான (இமர்ஜ்) ரூபத்தில் இருந்தார். அனைவருடைய இதயங்களிலும் இன்று விசேஷமாக அன்பின் கடல் பாப்தாதாவின் அன்பின் சொரூபம் கண்கூடான ரூபத்தில் குழந்தைகளுக்கு முன்னால் இருந்தது. நாலா புறங்களின் அனைத்து குழந்தைகளின் சிநேகத்தின், இதயத்தின் கீதங்களுக்கு பாப்தாதா செவி மடுத்தார். சிநேகத்திற்கு (ரிடர்ன்) பதிலாக வரதாதா (வரமளிக்கும் வள்ளல்) தந்தை குழந்தைகளுக்கு இதே வரதானம் கொடுத்து கொண்டிருக்கிறார் -சதா ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு ஆத்மாவிடத்தும் ஒவ்வொரு நிலைமையிலும் சிநேகத்தின் மூர்த்தி ஆவீர்களாக. ஒருபொழுதும் தனது சிநேகத்தின் மூர்த்தி, சிநேகத்தின் குணங்கள், சிநேகத்தின் சம்பந்தம், தொடர்பு,... இவற்றை விட்டு விடாதீர்கள், மறந்து விடாதீர்கள். எந்தவொரு மனிதராகட்டும், இயற்கை ஆகட்டும், மாயை ஆகட்டும், எப்பேர்ப்பட்ட பயங்கரமான ரூபம்,

ஜ்வாலை ரூபம் தரித்து முன்னால் வந்தாலும் சரி ஆனால் பயங்கரமான ஜ்வாலை ரூபத்தை சதா சிநேகத்தின் குளிர்ந்த தன்மை மூலமாக பரிவர்த்தனை செய்து கொண்டே இருங்கள். இந்த புது வருடத்தில் விசேஷமாக சிநேகம் பெற வேண்டும், சிநேகம் கொடுக்க வேண்டும். சதா சிநேகத்தின் திருஷ்டி, சிநேகத்தின் உள்ளுணர்வு (விருத்தி), சிநேகம் நிறைந்த (க்ருதி) செயல்கள் மூலமாக, சிநேகம் நிறைந்த சிருஷ்டியை (படைப்பு) அமைக்க வேண்டும். யாராவது சிநேகம் கொடுக்கவிலிலை என்றாலும் கூட நீங்கள் மாஸ்டர் சிநேக சொரூப ஆத்மாக்கள் வள்ளலாகி ஆன்மீக சிநேகத்தை கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். இன்றைய ஜீவ ஆத்மாக்கள் சிநேகம் அதாவது உண்மையான அன்பிற்கான தாகம் கொண்டுள்ளார்கள். சிநேகத்தின் ஒரு கணம் அதாவது ஒரு துளிக்கான தாகம் கொண்டுள்ளார்கள். உண்மையான சிநேகம் இல்லாத காரணத்தால் கூழம்பி போய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையான ஆன்மீக சிநேகத்தை தேடிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட தாகம் கொண்ட ஆத்மாக்களுக்கு ஆதாரம் அளிப்பவர்கள் மாஸ்டர் ஞானக்கடலான நீங்கள் ஆவீர்கள். உங்களையே நீங்கள் கேளுங்கள் -ஆத்மாக்களாகிய உங்கள் அனைவரையும் பிராமண குடும்பத்தில் பரிவர்த்தனை செய்வதற்கான, கவருவதற்கான விசேஷ ஆதாரம் என்னவாக இருந்தது? இதே உண்மையான அன்பு, தாய் தந்தையரின் அன்பு, ஆன்மீக குடும்பத்தின் அன்பு -இந்த அன்பின் பிராப்தி தான் பரிவர்த்தனை செய்தது. ஞானமோ பின்னால் புரிந்து கொள்கிறீர்கள் ஆனால் முதல் கவர்ச்சி சுயநலமில்லாத குடும்ப உணர்வினுடைய அன்பு. இது தானே அஸ்திவாரமாக இருந்தது அல்லா? இதனால் தான் அனைவரும் வந்தீர்கள் அல்லவா? உலகத்தில் கோடானு கோடீஸ்வரர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் ஆனால் பரமாத்ம உண்மையான அன்பு பெறாத பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள். ஏன்? கோடானு கோடி செல்வத்தினால் இந்த அன்பு கிடைப்பதில்லை. அறிவியல் விஞ்ஞானிகள் கூட பாருங்கள் எவ்வளவு தான் அல்ப கால சுகத்தின் சாதனங்களை உலகிற்கு கொடுத்திருக்கிறார்கள் ஆனால் எவ்வளவு பெரிய விஞ்ஞானிகளோ அந்த அளவிற்கு இன்னும் ஏதாவது ஆராய வேண்டும்... இன்னும் ஏதாவது ஆராய வேண்டும் -இந்த ஆராய்ச்சியிலேயே மூழ்கி இருக்கிறார்கள். திருப்தியின் உணர்வு இல்லை. இன்னும் ஏதாவது செய்ய வேண்டும், இன்னும் ஏதாவது செய்ய வேண்டும்... இதிலேயே நேரத்தை இழந்து விடுகிறார்கள். அவர்களுடைய

உலகமே ஆராய்ச்சி செய்வதாக ஆகி விட்டுள்ளது. உங்களைப்போல சிநேகம் நிறைந்த வாழ்க்கையின் உணர்வு இல்லை. அரசியல் தலைவர்களைப் பாருங்கள் தங்களது பதவியை பாதுகாத்துக் கொள்வதிலேயே ஈடுபட்டுள்ளார்கள். நாளைக்கு என்ன ஆகுமோ -இந்த கவலையில் மூழ்கி விட்டுள்ளார்கள். மேலும் பிராமணர்களாகிய நீங்கள் எப்பொழுதும் பரமாத்ம அன்பின் ஊஞ்சலில் ஊஞ்சலாடுகிறீர்கள். நாளை பற்றிய கவலை இல்லை (கல்), (கால்) காலன் பற்றிய கவலையும் இல்லை. ஏன்? ஏனெனில் எது நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் நல்லதே மற்றும் எது நடக்கப்போகிறதோ அது இன்னுமே நல்லது என்பதை அறிந்துள்ளீர்கள். எனவே நல்லது, நல்லது என்று கூறியே நல்லவராக ஆகி விட்டுள்ளீர்கள்.

பிராமண வாழ்க்கை என்றாலே தீமைக்கு விடை கொடுத்து விடுவது (விதாயி) மேலும் எப்பொழுதும் நல்லதிலும் நல்லதாக உள்ளது என்பதற்கான (பதாயி) பாராட்டுக்கள் கொண்டாடுவது. இவ்வாறு செய்து விட்டுள்ளீர்களா? இல்லை, இப்பொழுது விடை கொடுத்தனுப்பி கொண்டிருக்கிறீர்களா? எப்படி பழைய வருடத்திற்கு விடை கொடுத்து விட்டீர்கள், புதிய வருடத்திற்கான வாழ்த்துக்கள் அளித்தீர்கள் அல்லவா? வாழ்த்துக்களின் கார்டுகள் நிறைய வந்துள்ளன அல்லவா? நிறைய குழந்தைகளினுடைய வாழ்த்துக்களின் கார்டுகள் மற்றும் கடிதங்கள் வந்துள்ளன. பாப்தாதா கூறுகிறார் -எப்படி புதிய வருடத்திற்கான கார்டு அனுப்பினீர்கள் மற்றும் சங்கல்பம் செய்தீர்கள் -ஆக சங்கம யுகத்திலோ ஒவ்வொரு நொடியும் புதியது ஆகும் அல்லவா? சங்கம யுகத்தின் ஒவ்வொரு செகண்டுக்கான வாழ்த்துக்களின் கார்டு அனுப்பி விடாதீர்கள். கார்டுகளை பாதுகாத்து வைப்பது கடினமாக போய் விடும் ஆனால் கார்ட்டிற்கு பதிலாக ரிகார்டு -பதிவேடு வையுங்கள் -ஒவ்வொரு நொடியும் புதிய அனுபவம் செய்தேனா? ஒவ்வொரு புதிய நொடி புதிய ஊக்கம் உற்சாகம் அனுபவம் செய்தேனா? ஒவ்வொரு நொடியும் தனக்குள் புதுமை அதாவது தெய்வீகத் தன்மை -விசேஷத் தன்மை என்ன அனுபவம் செய்தீர்கள்... அதற்கான வாழ்த்துக்கள் அளிக்கிறார். பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய எல்லாவற்றிலும் பெரியதிலும் பெரிய (செரிமனி) விழா எதுவாகும்? விழா என்றால் மகிழ்ச்சியின் நேரம் அல்லது மகிழ்ச்சியின் நாள். விழாவில் எல்லாவற்றையும் விட பெரியதிலும் பெரிய விஷயம், சந்திப்பு நிகழ்த்துவதற்கானது ஆக இருக்கும். சந்திப்பு

கொண்டாடுவது தான் குஷி கொண்டாடுவது ஆகும். உங்கள் அனைவருடைய பரமாத்ம சந்திப்பு சிறந்த ஆத்மாக்களின் சந்திப்பு ஒவ்வொரு நேரமும் நிகழ்கிறது அல்லவா? எனவே ஒவ்வொரு நேரமும் விழா ஆகியது அல்லவா? ஆடுங்கள், பாடுங்கள் மற்றும் சாப்பிடுங்கள் -இப்படித்தான் விழா நடக்கும். பிரம்மா தந்தையின் பண்டாராவிலிருந்து (பண்டக சாலை) சாப்பிடுகிறீர்கள். எனவே எப்பொழுதும் பிரம்மா போஜனம் சாப்பிடுகிறீர்கள். இல்லறத்தில் இருப்பவர்கள் யாரும் தங்களது சம்பாத்தியம் மூலமாக சாப்பிடுவதில்லை. சென்டரில் இருப்பவர்கள் சென்டரின் பண்டாரியிலிருந்து (உண்டியல்) சாப்பிடுவதில்லை ஆனால் பிரம்மா தந்தையின் பண்டாராவிலிருந்து சிவதந்தையின் பண்டாரியிலிருந்து சாப்பிடுகிறார்கள். எனது இல்லறம் என்பதும் கிடையாது, எனது சென்டர் என்பதும் கிடையாது. இல்லறத்தில் இருந்தாலும் கூட டிரஸ்டி ஆவீர்கள். தந்தையின் ஸ்ரீமத்படி (நிமித்தமாக) கருவியாகி உள்ளீர்கள் மேலும் சென்டரில் இருக்கிறீர்கள் என்றாலும் கூட தந்தையினுடைய சென்டர் ஆகுமேயன்றி என்னுடையது அல்ல. எனவே சதா சிவ தந்தையின் பண்டாரி ஆகும், பிரம்மா தந்தையின் பண்டாரா ஆகும். இந்த நினைவின் மூலமாக பண்டாரி கூட நிரம்பியதாக இருக்கும். பின் பண்டாரா கூட நிரம்பியதாக இருக்கும். எனது என்ற தன்மையை எடுத்து வந்தீர்கள் என்றால் பண்டாரா மற்றும் பண்டாரியில் முன்னேற்றம் ஏற்படாது. எந்தவொரு காரியத்தில் கூட ஏதாவதொரு விதமான தோஷம் அல்லது குறைவு இருக்கிறது என்றால் இதற்கான காரணம் தந்தைக்கு பதிலாக எனது என்ற தன்மையின் குற்றம் (கோட்) இருக்கிறது. எனவே குறைவு ஏற்படுகிறது. 'கோட்' என்ற வார்த்தை குறைவுக்கும் கூறப்படுகிறது மேலும் கோட் என்ற வார்த்தை அசுத்தத்தின் கலப்படத்திற்கும் கூறப்படுகிறது. எப்படி தங்கத்தில் கோட் -கலப்படம் ஏற்பட்டு விடுகிறது அல்லவா? ஆனால் பிராமண வாழ்க்கையோ ஒவ்வொரு நொடியும் விழா கொண்டாடுவதற்கான வாழ்த்துக்களினுடையது ஆகும். நல்லது.

அப்படியும் இன்றைய நாள் நீங்கள் அனைவரும் சப்தத்திற்கு அப்பாற்பட்டு செல்கிறீர்கள் மேலும் சப்தத்திற்கு அப்பாற்பட்ட இடத்தில் இருக்கும் பாப்தாதாவை சப்தத்தில் எடுத்து வருகிறீர்கள். இந்த பயிற்சி (பிராக்டிஸ்) மிகவும் நன்றாக இருக்கிறது -இப்பொழுதே மிகவும் சப்தத்தில் இருக்கிறீர்கள். கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தாலும் சரி,

அப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் கூட சப்தத்திற்கு அப்பாற்பட்டு சென்று விட வேண்டும் என்று சங்கல்பம் செய்தீர்கள் என்றால் ஒரு நொடியில் சப்தத்திலிருந்து தனிப்பட்டு ஃபரிஷ்தா நிலையில் நிலைத்து விட வேண்டும்... இப்பொழுதே கர்மயோகி, இப்பொழுதே ஃபரிஷ்தா அதாவது சப்தத்திற்கு அப்பாற்பட்ட அவ்யக்த ஸ்திதி. அப்படி இன்றி வாயுமண்டலம் மிகுந்த சப்தம் நிறைந்ததாக இருக்கிறது. எனவே சப்தத்திற்கு அப்பாற்பட்டு செல்வதில் நேரம் பிடிக்கும் என்பதல்ல. இல்லை. அவ்வாறு இருக்கக் கூடாது. ஏனெனில் கடைசி நேரத்தில் நாலா புறங்களிலும் மனிதர்களின், இயற்கையின் குழப்பங்களின் சப்தம் இருக்கும் -கூச்சலிடும், ஆடி விட செய்யும் இதே வாயுமண்டலம் இருக்கும். அப்பேர்ப்பட்ட நேரத்தில் தான் ஒரு செகண்டில் அவ்யக்த ஃபரிஷ்தா மற்றும் நிராகாரி அசரீரி ஆத்மா ஆவேன்... என்ற இந்த பயிற்சி தான் வெற்றியாளராக்கி விடும். இந்த நினைவு ஸ்மரணைக்குரிய அதாவது வெற்றி மாலையில் எடுத்து வரும். எனவே இந்த அப்பியாசம் இப்பொழுது முதற் கொண்டே மிகவும் அவசியம் ஆகும். இதற்கு தான் பிரகிருதி ஜீத், மாயா ஜீத் -இயற்கையை வென்றவர், மாயையை வென்றவர் என்று கூறப்படுகிறது. எஜமானர் ஆகி எப்பொழுது வேண்டுமோ வாய் மூலமாக ஒலிக்க செய்வது, எப்பொழுது வேண்டுமோ காதுகள் மூலமாக கேட்க செய்வது -வேண்டாம் என்றால் ஒரு நொடியில் ஃபுல்ஸ்டாப், முற்றுப் புள்ளி, பாதி புள்ளி அல்ல. ஃபுல்ஸ்டாப் -இது தான் பிரம்மா தந்தைக்கு சமானம் ஆவது ஆகும். சிநேகத்தின் அடையாளமே சமானம் ஆவது ஆகும். ஒவ்வொருவரும் எனது சிநேகம் அதிகமாக இருக்கிறது என்று கூறுவார்கள். யாரை வேண்டுமானாலும், யாருக்கு பிரம்மா தந்தை மீது அதிகமான சிநேகம் இருக்கிறது என்று கேட்டால் எனக்கு தான் என்றே கூறுவார்கள். எனவே எப்படி சினேகத்தில் என்னுடைய சிநேகம் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களோ அதே போல சமானம் ஆவதில் கூட நான் முதல் நம்பரில் வருபவருடன் கூடவே -ஜோடி மணியுடன் கூடவே மாலையின் மணியாக கோர்க்கப்படக் கூடியவனாகி விடுவேன் என்ற தீவிர புருஷார்த்தம் செய்யுங்கள். இதற்கு தான் சிநேகத்தின் (ரிடர்ன்) கைம்மாறு அளித்தீர்கள் என்று கூறுவார்கள். சிநேகத்தில் மதுபனுக்கு ஓடோடி வருவதில் புத்திசாலியாக இருக்கிறீர்கள். எல்லாரும் வேகம் வேகமாக ஓடி வந்து சேர்ந்து விட்டுள்ளீர்கள் அல்லவா? எப்படி இந்த (பிரத்யட்ச) கண்கூடான சொரூபம் காண்பித்தீர்களோ அதே போல சமானம் ஆவதற்குமான பிரத்யட்ச

சொரூபத்தைக் காண்பியுங்கள். இடம் சிறியதாக இருக்கிறது மேலும் இதயம் பெரியதாக இருக்கிறது. எனவே இடம் கிடைக்கவில்லை என்று புகார் செய்யாதீர்கள். இதயம் பெரியதாக இருக்கிறது என்றால் அன்பு இருக்குமிடத்தில் எந்தவொரு கஷ்டமும் கஷ்டமாகத் தோன்றாது. பாப்தாதாவிற்கு குழந்தைகள் கஷ்டப்படுவது பார்க்க பொறுக்காது. ஆம், யோகம் செய்யுங்கள். அப்பொழுது இடம் தயாராகி விடும். நல்லது.

நாலாபுறங்களின் தேச விதேசத்தின் சிநேகத்தில் மூழ்கி இருக்கும் சிறந்த ஆத்மாக்களின் நிறைய நிறைய சங்கல்பங்கள் மூலமாக, கடிதங்கள் மூலமாக செய்திகள் மூலமாக இந்த நினைவு நாள் அல்லது புது வருடத்தின் அன்பு நினைவு பாப்தாதாவிற்கு கிடைத்தது. எல்லாருக்கும் இதய பூர்வமாக இனிமையிலும் இனிமையான பிரியத்திலும் பிரியமான குழந்தைகளே என்று கூறி அன்பு நினைவுகள் அளித்து கொண்டிருக்கிறார். பறந்து கொண்டே இருக்கிறீர்கள் மற்றும் இன்னும் தீவிர வேகத்துடன் பறந்து கொண்டே இருங்கள். மாயையின் விளையாட்டை விளையாடுபவராகி பார்த்துக் கொண்டே செல்லுங்கள். இயற்கையின் நிலைமைகளை மாஸ்டர் சர்வ சக்திவானாகி விளையாடியபடியே கடந்து சென்று கொண்டே இருங்கள். தந்தையினுடைய கை (ஹாத்) மற்றும் திவ்ய புத்தியோகம் என்ற (ஸாத்) துணையினை சதா அனுபவம் செய்து சக்திசாலி ஆகி சதா பாஸ் வித் ஆனர் ஆகிக் கொண்டே செல்லுங்கள். சதா சிநேக மூர்த்தி பவ என்ற வரதானத்தின் ஸ்மிருதி சொரூபத்தை நினைவில் கொள்ளுங்கள். அப்பேர்ப்பட்ட சர்வ சிநேகி மூர்த்திகளுக்கு சதா மாஸ்டர் தாதா (மாஸ்டர் வள்ளலான) ஆத்மாக்களுக்கு தாய் தந்தையினுடைய சக்தி நிறைந்த அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

**தாதிகளிடம்**: தந்தையின் துணையினுடைய ஆஸ்தியே விசேஷ பவர்ஸ் சக்திகள் என்பதாகும். இந்த சக்திகள் மூலமாக அனைத்து காரியங்களும் சுலபமாகி முன்னேறிக் கொண்டே போகின்றன. அனைவரும் சமீபத்தின் துணையாளர்கள் ஆவீர்கள் அல்லவா? கூடவே இருக்கிறீர்கள் மேலும் கூடவே செல்வீர்கள் மற்றும் கூடவே ஆட்சி புரிவீர்கள். சங்கமத்தில் கூட சமீபத்தில், நிராகாரி உலகத்தில் கூட சமீபத்தில் மற்றும் ராஜதானியில் கூட சமீபத்தில் இருப்பீர்கள். பிறந்த உடனேயே சமீபத்தில் இருப்பது என்ற வரதானம் கிடைத்தது. அனைவருமே சமீபத் தன்மையின் வரதானம்

உடையவர்கள் -அவ்வாறு அனுபவம் ஆகிறது அல்லவா? துணையினுடைய அனுபவம் ஆவது -இதுவே சமீபத் தன்மையின் அடையாளம் ஆகும், தனியாக பிரிந்து விடுவது கடினம் ஆகும். கூடவே இருப்பது இயல்பாகவே இருக்கிறது. சமீபத் தன்மையின் கூட்டமைப்பிற்கு சமீபத்தில் உள்ளீர்கள். ராஜ்ய சிம்மாசனம் பெறுவீர்கள் அல்லவா? சிம்மாசனத்தின் மீதும் வெற்றி அடைவீர்கள் அல்லவா? எப்படி இப்பொழுது இதயத்தின் மீது வெற்றி உள்ளது, இதயத்தை வென்றீர்கள். பிறகு வரிசைக்கிரமமாக உலக ராஜ்ய சிம்மாசனத்தின் மீது வெற்றி ஏற்படும். அப்பேர்ப்பட்ட வெற்றியாளர்கள் ஆவீர்கள் அல்லவா? உங்களுடைய ஊக்கம் உற்சாகத்தை பார்த்து அனைவரும் ஊக்கம் உற்சாகத்தில் நடந்து கொண்டே இருக்கிறார்கள் மேலும் சதா நடந்து கொண்டே இருப்பார்கள். குழந்தைகள் தந்தையின் அற்புதத்தை பாடுகிறார்கள் மேலும் தந்தை குழந்தைகளின் அற்புதத்தை பாடுகிறார். நீங்கள் ஆகா பாபா ஆகா என்று கூறுகிறீர்கள் மேலும் பாபா ஆகா குழந்தைகளே ஆகா என்று கூறுகிறார். நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** நாம் அனைவரும் (பூஜ்ய) பூஜைக்குரிய மற்றும் (பூர்வஜ்) பூர்வீக ஆத்மாக்கள் ஆவோம் -இந்த அளவிற்கு போதை இருக்கிறதா? நீங்கள் அனைவரும் இந்த சிருஷ்டி என்ற விருட்சத்தின் வேர் பகுதியில் அமர்ந்துள்ளீர்கள் தானே? ஆதி பிதாவின் குழந்தைகள் ஆதி ரத்தினங்கள் ஆவீர்கள். எனவே இந்த விருட்சத்தின் வேர் பகுதியும் நீங்கள் ஆவீர்கள். கிளைகள் கொடிகள் எவையெல்லாம் வெளிப்படுகின்றனவோ, அவை விதைக்குப் பிறகு வேர் பகுதியிலிருந்து தான் வெளிப்படுகிறது. எனவே எல்லாவற்றையும் விட ஆதியான தர்மத்தின் ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள் மேலும் மற்ற அனைவரும் பின்னால் வெளிப்படுகிறார்கள். எனவே பூர்வீகமானவர்கள் ஆவீர்கள். எனவே நீங்கள் அஸ்திவாரம் ஆவீர்கள். எந்த அளவிற்கு அஸ்திவாரம் பக்குவமானதாக இருக்குமோ அந்த அளவிற்கே படைப்பு கூட பக்குவமானதாக இருக்கும். எனவே அந்த அளவிற்கு தங்கள் மீது கவனம் கொள்ள வேண்டும். பூர்வீகம் அதாவது வேர்ப்பகுதி ஆன காரணத்தால் விதையுடன் நேரிடையாக சம்பந்தம் உள்ளது. நாங்கள் நேரிடையாக பரமாத்மாவினால் படைக்கப்பட்டு இருக்கிறோம் என்று உங்களால் பெருமிதத்துடன் கூற முடியும். உங்களை யார் படைத்தார்கள் என்று உலகத்தாரை கேட்டுப் பாருங்கள். பகவான் படைத்தார் என்று

கேள்விப்பட்ட விஷயங்களை வைத்து கூறுவார்கள் ஆனால் அது பெயரளவில் தான் கூறுகிறார்கள் மேலும் நீங்கள் நேரிடையாக பரம ஆத்மாவின் படைப்பு ஆவீர்கள். தற்காலத்திய பிராமணர்கள் கூட நாங்கள் பிரம்மாவின் குழந்தைகள் ஆவோம் என்று கூறுகிறார்கள் ஆனால் நடைமுறையில் (பிராக்டிகல்) பிரம்மாவின் குழந்தைகள் நீங்கள் ஆவீர்கள். எனவே நான் டைரக்ட் -நேரிடையான படைப்பு என்ற மகிழ்ச்சி இருக்கிறது. எந்தவொரு மகான் ஆத்மா, தர்ம ஆத்மாவின் படைப்பு அல்ல. டைரக்ட் பரம ஆத்மாவின் படைப்பு ஆவீர்கள். எனவே டைரக்ட் என்பது எவ்வளவு சக்தி ஆகும். உலகத்தார் பகவான் ஏதோ ஒரு வேடத்தில் வந்து விடுவார் என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள் மேலும் நீங்கள் எங்களுக்கு பகவான் கிடைத்து விட்டார் என்று கூறுகிறீர்கள். ஆக எவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறது. உங்களை பார்த்து மற்றவர்களும் மகிழ்ச்சி அடைந்து விடும் அளவிற்கு அந்த அளவு குஷி இருக்கிறதா? ஏனெனில் மகிழ்ச்சியாக இருப்பவர்களின் முகம் என்றைக்குமே குஷி நிறைந்ததாக இருக்கும் அல்லவா?

**ஆஸ்பத்திரியில் பணி புரிபவர்களை பார்த்து:** ஆஸ்பத்திரியில் யாராவது துக்கமடைந்து வருகிறார் என்றால் திரும்பிச் செல்லும் பொழுது மகிழ்ச்சியுடன் செல்கிறாரா? அப்பேர்ப்பட்ட மகிழ்ச்சியின் வாயுமண்டலம் இருக்கிறதா? யார் வந்தாலும், துக்கத்தை மறந்து விட வேண்டும். ஏனெனில் மனிதரின் வைப்ரேஷன் (அதிர்வலை) மூலமாகத் தான் வாயு மண்டலம் அமைகிறது. எங்காவது துக்கமுடைய ஆத்மாக்களின் குழு இருந்தது என்றால் அங்கு இருக்கும் வாயுமண்டலம் கூட துக்கத்தினுடையதாக இருக்கும். அங்கு யாராவது சிரித்தபடியே வந்தாலும் கூட மௌனமாகி விடுவார் மேலும் எங்காவது மகிழ்ச்சியாக இருப்பவர்களின் குழு இருந்தது என்றால், குஷியின் குழு இருந்தது என்றால் எப்பேர்ப்பட்ட துக்கமுடைய ஆத்மாக்கள் வந்தாலும் கூட மாறி விடுவார்கள். அவசியம் தாக்கம் ஏற்பட்டு விடும். எனவே எவர் ஹேப்பி (என்றும் மகிழ்ச்சியாக) இருக்கும் ஹாஸ்பிடல் ஆகும் அல்லவா? ஹெல்தி (ஆரோக்கியமானது) மட்டும் அல்ல ஹேப்பி -மகிழ்ச்சியானதும் கூட. எல்லாரும் புன்முறுவலித்து கொண்டே இருந்தார்கள், சிரித்து கொண்டே இருந்தார்கள் என்றால் பாதி வைத்தியம் முடிந்து போய் விடும். குஷியே பாதி மருந்து, பின் மருந்துகளின் செலவு கூட மீதமாகி விடும் அல்லவா? நோயாளிகளும் கூட குறைந்த செலவில் நோயற்றவர் ஆகி விட்டோம்

என்று குஷி அடைந்து விடுவார்கள் மேலும் ஆஸ்பத்திரியின் செலவு கூட குறைந்து போய் விடும். மருத்துவர்களுக்கும் கூட நேரம் குறைவாக ஒதுக்க வேண்டி வரும். எப்படி சாகாரத்தில் பார்த்தீர்கள் -பிரம்மா தந்தைக்கு முன்னால் வந்தார்கள் என்றால் என்ன அனுபவம் கூறிக் கொண்டிருந்தார்கள். நிறைய விஷயங்களை எடுத்துக் கொண்டு வருவார்கள் ஆனால் தந்தைக்கு முன்னால் வந்த உடனேயே எல்லா விஷயங்களுக்கான தீர்வு உள்ளுக்குள்ளேயே கிடைத்து விடும். இந்த அனுபவங்கள் பற்றி கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதே போல மருத்துவர்களுக்கு முன்னால் யார் வந்தாலும் சரி, வந்த உடனேயே அங்கேயே பாதி வியாதி சரியாகி விட வேண்டும். எல்லா டாக்டர்களும் அப்படித் தானே இருக்கிறீர்கள் அல்லவா? எப்படி தந்தை அலௌகீகமானவரோ, பின் தந்தையின் குழந்தைகள் -யாரெல்லாம் காரியம் செய்வதற்கு (நிமித்தமாக) கருவியாக இருக்கிறார்களோ அவர்கள் கூட எல்லாரும் அலௌகீகமானவர்களாக இருப்பார்கள் அல்லவா? உங்கள் அனைவரினுடையதும் அலௌகீக வாழ்க்கையா? இல்லை, சாதாரண வாழ்க்கையா? எந்த அளவிற்கு தபஸ்யாவில் முன்னேறிக் கொண்டே செல்வீர்களோ, அந்த அளவிற்கு உங்களுடைய (வைப்ரேஷன்) அதிர்வலைகள் மிகவும் தீவிர வேகத்துடன் வேலை செய்யும். நல்லது. குறைந்த செலவில் அதிகமான பலன் அடையக் கூடிய ஆஸ்பத்திரியாக இருக்க வேண்டும். நேரமும் குறைவாக செலவிடப்பட வேண்டும் மேலும் ஸ்தூல பணம் கூட குறைவாக செலவிடப் பட வேண்டும் மற்றும் பலன் அதிகமான இருக்க வேண்டும். பெயர் பெரியது, செலவு குறைவானது. எனவே அப்பேர்ப்பட்ட அலௌகீக சேவாதாரிகள் ஆவீர்கள் அல்லவா? ஃபவுண்டேஷன் -அஸ்திவாரம் நன்றாக போட்டிருக்கிறீர்கள். ஆஸ்பத்திரி என்று தோன்றுகிறதா இல்லை யோகபவன் என்று தோன்றுகிறதா? இது ஆஸ்பத்திரி இல்லை ஆனால் யோக கேந்திரம் ஆகும், ஹேப்பி ஹவுஸ் ஆகும். இப்படி லௌகீகத்தில் கூட ஹேப்பி ஹவுஸ் அமைக்கிறார்கள். யாரெல்லாம் உள்ளே வருவார்களோ, சிரித்து கொண்டே இருப்பார்கள் ஆனால் இது மனதின் புன்முறுவல் ஆகும். அது சிறிது நேரத்திற்கானதாக இருக்கும் மேலும் இது சதா காலத்திற்கானதாக இருக்கும். நல்லது. எப்பொழுதுமே மகிழ்ச்சியான (மூட்) மனநிலையில் இருங்கள். என்ன ஆனாலும் சரி, உங்களுடைய (மூட் ஆஃப்) ஆகி விடக் கூடாது, மனநிலை மாறி விடக்

கூடாது. யாராவது நிந்தனை செய்தாலும் சரி அவமதித்தாலும் சரி ஆனால் நீங்கள் சதா மகிழ்ச்சியுடன் இருங்கள். நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 13.02.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## அனேக ஜென்மங்கள் அன்பு நிறைந்த வாழ்க்கையை உருவாக்குவதற்கான ஆதாரம் இந்த ஜென்மத்தில் பரமாத்மாவின் அன்பு!

இன்று அனைத்து சக்திகளின் கடல் மற்றும் உண்மையான அன்பின் கடல் பரந்த உள்ளம் உடைய பாப்தாதா தன்னுடைய மிகவும் அன்பான நெருக்கமான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இந்த ஆன்மீக அன்பு சந்திப்பு மற்றும் அன்பின் மேளா ஒன்று கூடுவதும் விசித்திரமான சந்திப்பாகும். இந்த சந்திப்பு பரந்த உள்ளம் உடைய தந்தை மற்றும் உண்மையான உள்ளம் உடைய குழந்தைகளின் சந்திப்பாகும். இந்த சந்திப்பு அனைத்து அனேக விதமான பிரச்சினைகளை விலக்கக்கூடியதாகும். ஆன்மீகக் கௌரவத்தின் நிலையை அனுபவம் செய்விப்பதாகும். இந்த சந்திப்பு சுலபமாக பழைய வாழ்க்கையை மாற்றக் கூடியதாகும். இந்த சந்திப்பு மிக உயர்ந்த பிராப்திகளின் அனுபவங்களில் நிரம்பியவராக ஆக்க கூடியதாகும். அந்த மாதிரி விசித்திரமான சந்திப்பில் நீங்கள் அனைத்து பதமாபதம் பாக்கியவான் ஆத்மாக்கள் வந்து சேர்ந்து விட்டீர்கள். இந்த பரமாத்மா மேளா அனைத்து பிராப்திகளின் மேளா மற்றும் அனைத்து உறவுகளின் அனுபவம் செய்விக்கும் மேளா ஆகும். அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியவராக்கும் மேளா ஆகும். எவ்வளவு பிரியமானது. மேலும் இந்த பிராப்திகளை அனுபவம் செய்வதற்கு பாத்திரமான நீங்கள், கோடியில் சிலர் மற்றும் அந்த சிலரிலும் சிலரான பரமாத்மாவிற்கு பிரியமான ஆத்மா ஆவீர்கள். கோடிக்கணக்கான ஆத்மாக்கள் இந்த பிராப்திகளை தேடிக் கொண்டிருக்கிறார்கள் மேலும் நீங்கள் சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் எப்பொழுதும் பரமாத்மா சந்திப்பிலேயே தான் இருக்கிறீர்கள், ஏனென்றால் உங்களுக்கு தந்தை பிரியமானவர்

மற்றும் தந்தைக்கு நீங்கள் பிரியமானவர்கள். அப்படியானால் பிரியமானவர்கள் எங்கு இருப்பார்கள்? எப்போதும் அன்பான சந்திப்பின் மேளாவில் இருக்கிறார்கள், அப்படி எப்பொழுதும் மேளாவில் இருக்கிறீர்களா? அல்லது தனியாக இருக்கிறீர்களா? தந்தை மற்றும் நீங்கள் உடன் இருக்கிறீர்கள் என்றால் என்னவாகி விடுகிறது? சந்திப்பு மேளா ஆகி விடுகிறது அல்லவா? யாராவது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்று கேட்டால், நாங்கள் எப்பொழுதும் பரமாத்மா சந்திப்பு மேளாவில் இருக்கிறோம் என்று உடனே பதில் கூறுவீர்கள். இதைத் தான் அன்பு என்று கூறப்படுகிறது. உண்மையான அன்பு என்றால் ஒருவர் இன்னொருவரை விட்டு உடலால் மனதால் பிரியாமல் இருப்பது. பிரிய முடியாது மற்றும் யாரும் பிரிக்க முடியாது. முழு உலகத்தில் உள்ள அத்தனை கோடி ஆத்மாக்களும், இயற்கை, மாயா, சூழ்நிலைகள் அனைத்தும் பிரிக்க விரும்பினாலும் கூட இந்த பரமாத்மா சந்திப்பிலிருந்து பிரிப்பதற்கு யாருக்கும் சக்தி கிடையாது. இதைத்தான் உண்மையான அன்பு என்று கூறுவது. அன்பை அழிக்க விரும்புவர்கள் அழிந்து விடுவார்கள் ஆனால் அன்பு அழிய முடியாது. அந்த மாதிரி உறுதியான, உண்மையான அன்பானவர்கள் தானே?

இன்று உறுதியான அன்பின் நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அந்த மாதிரியான அன்பு இப்பொழுது ஒரு ஜென்மத்தில் மட்டும் தான் கிடைக்கிறது. இந்த நேரத்தின் பரமாத்மாவின் அன்பு அனேக ஜென்மங்கள் அன்பு நிறைந்த வாழ்க்கையின் பிராப்தியை உருவாக்கி விடுகிறது. ஆனால் பிராப்தியின் நேரம் இந்த நேரம். விதை விதைப்பதற்கான நேரமும் இப்பொழுது தான். இந்த நேரத்திற்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. யார் உண்மையான உள்ளம் நிறைந்த அன்புடையவர்களோ, அவர்கள் எப்பொழுதும் அன்பிலேயே ஐக்கியமாகி இருக்கக்கூடிய லவ்லீன் ஆத்மாக்கள், எனவே அந்த மாதிரி அன்பில் மூழ்கி இருக்கும் ஆத்மாக்கள் அதாவது லவ்லீன் ஆத்மாக்களின் எதிரில் யாருக்கும், அருகில் வருவதற்கும் எதிர்ப்பதற்கும் தைரியம் கிடையாது. ஏனென்றால் நீங்கள் ஐக்கியமாகி இருக்கிறீர்கள். யாருடைய கவர்ச்சியும் உங்களை கவர்ச்சி செய்ய முடியாது. எப்படி அறிவியல் சக்தி பூமியின் கவர்ச்சியிலிருந்து தூரத்தில் கொண்டு செல்கிறதோ அதே போல் இந்த அன்பில் மூழ்கிய நிலை அனைத்து எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகளிலிந்து வெகு தொலைவில் கொண்டு

செல்லும். ஒருவேளை ஐக்கியமாக (லீன்) இல்லையென்றால் மேலே கீழே ஆக முடியும். அன்பு இருக்கிறது ஆனால் அன்பில் மூழ்கிப் போகவில்லை. இப்பொழுது நீங்கள் யாரிடமாவது உங்களுக்கு தந்தை மேல் அன்பு இருக்கிறதா? என்று கேட்டீர்கள் என்றால் ஆம் என்று உடனே அனைவரும் பதில் கூறுவார்கள், ஆனால் எப்பொழுதும் அன்பிலே மூழ்கி இருக்கிறீர்களா என்று கேட்டால் அப்பொழுது என்ன கூறுவார்கள்? இதில் ஆம் என்று கூற மாட்டார்கள். அன்பு மட்டும் இருக்கிறது என்று அது வரை மட்டும் இருந்து விடாதீர்கள். மூழ்கி விடுங்கள். இந்த உயர்ந்த நிலையைத் தான் மூழ்குவதைத் தான், மனிதர்கள் மிக உயர்ந்ததாக நம்புகிறார்கள். ஒருவேளை நீங்கள் யாரிடமாவது நாங்கள் ஜீவன் முக்தியில் (சொர்க்கத்தில்) வருபவர்கள் என்று கூறினால் இவர்களோ வாழ்க்கைச் சக்கரத்தில் வருபவர்கள் என்று நினைப்பார்கள். மேலும் நாங்கள் இந்த சக்கரத்திலிருந்து விடுபட்டு மூழ்கி விடுவோம். ஏனென்றால் மூழ்குவது என்றால் பந்தனங்களிலிருந்து விடுதலை அடைவது என்றும் நினைக்கிறார்கள். எனவே அவர்கள் மூழ்கி இருக்கும் நிலையை மிகவும் உயர்ந்ததாக நம்புகிறார்கள். ஒன்றாகி விட்டோம். மூழ்கி விட்டோம் ஆனால் அவர்கள் கூறும் அன்பில் இருக்கும் நிலை நாடகப்படி அந்த நிலை யாருக்குமே கிடைப்பதில்லை என்று நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். தந்தைக்குச் சமமாக ஆக முடியும் ஆனால் தந்தையுடன் ஒன்றாக ஆக முடியாது. அவர்களுடைய லீன் நிலையில் எந்தவொரு அனுபவமும் கிடையாது. எந்த பிராப்தியும் கிடையாது. மேலும் நீங்கள் லீன் ஆகவும் இருக்கிறீர்கள் கூடவே அனுபவமும் இருக்கிறது. பிராப்திகளும் இருக்கிறது. நீங்கள் அவர்களிடம் எந்த லீன் நிலைக்கு மற்றும் ஒன்றியிருக்கும் நிலைக்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்களோ அதன் அனுபவத்தை நாங்கள் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம் என்று சவால் விட முடியும். நீங்கள் எப்பொழுது லவ்லீன் ஆகி விடுகிறீர்களோ, அன்பில் மூழ்கி விடுகிறீர்களோ அப்பொழுது வேறு ஏதாவது ஞாபகம் இருக்கிறதா? தந்தை மற்றும் நான் சமமாக அன்பில் மூழ்கியிருக்கிறோம். தந்தையைத் தவிர வேறு எதுவுமே இல்லவே இல்லையென்றால், இரண்டும் சேர்ந்து ஒன்றாகி விடுகிறது. சமம் ஆவது என்றால் மூழ்கி விடுவது ஒன்றாகி விடுவது, அப்படி அந்த மாதிரி அனுபவம் இருக்கிறதில்லையா? கர்மயோகத்தின் நிலையில் அந்த மாதிரி லீன் ஆக இருக்கும் நிலையை அனுபவம் செய்ய முடியுமா? என்ன நினைக்கிறீர்கள்? கர்மயோகி நிலையில் அந்த மாதிரி லீன் ஆக முடியுமா

அல்லது இல்லையா? கடினமா? காரியமும் செய்யுங்கள் மேலும் லீன் ஆகவும் இருங்கள், அப்படி இருக்க முடியுமா? காரியம் செய்வதற்காக கீழே வர வேண்டியதில்லை. காரியம் செய்து கொண்டே லீன் ஆக இருக்க முடியுமா? அவ்வளவு திறமைசாலியாக ஆகி விட்டீர்களா?

கர்மயோகி ஆகுபவர்களுக்கு காரியத்தில் தந்தை உடன் இருக்கும் காரணத்தினால் அதிகப்படியான உதவி கிடைக்க முடியும். ஏனென்றால் ஒருவர் இருவராகி விட்டார். எனவே காரியம் பிரித்துக் கொடுக்கப்பட்டு விட்டது. ஒருவேளை ஒரு காரியத்தை ஒருவர் செய்கிறார் மற்றும் இன்னொருவர் துணையாகி விட்டால் காரியம் சுலபமாகுமா? அல்லது கடினமாகுமா? கைகள் உங்களுடையது தந்தையோ தன்னுடைய கை கால்களை உபயோகிக்க மாட்டார் இல்லையா? கைகள் உங்களுடையது தான் ஆனால் உதவி தந்தையினுடையது என்பதால் இரட்டை சக்தியுடன் காரியம் நன்றாக நடக்குமில்லையா? காரியம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் தந்தையின் உதவி இருக்கிறதென்றால் எப்போது ஊக்கம் உற்சாகம், தைரியம், களைப்பற்ற தன்மையின் சக்தியைக் கொடுக்கக் கூடியது. எந்த காரியத்தில் ஊக்கம் உற்சாகம் மற்றும் களைப்பற்ற தன்மை இருக்கிறதோ அந்த காரியம் நன்றாக நடந்தேறும் இல்லையா? அப்படி தந்தை கைகள் மூலமாக காரியம் செய்வதில்லை ஆனால் இந்த உதவி செய்யும் காரியம் செய்கிறார். எனவே கர்மயோகி வாழ்க்கை என்றால் இரட்டை சக்திகளோடு காரியம் செய்யும் வாழ்க்கை நீங்கள் மற்றும் தந்தை அன்பில் எந்தவொரு கடினமும் களைப்பும் அனுபவம் ஆவதில்லை. அன்பு என்றால் அனைத்தையும் மறந்து விடுவது. எப்படி நடக்கும் என்ன நடக்கும், சரியாக நடக்குமா? அல்லது நடக்காதா? இந்த அனைத்தையும் மறந்து விடுவது, நடந்தேறி இருக்கிறது. எங்கு பரமாத்மாவின் தைரியம் இருக்கிறதோ, எந்த ஒரு ஆத்மாவின் தைரியம் இல்லை, அப்படி எங்கு பரமாத்மா தைரியம் இருக்கிறதோ, உதவி இருக்கிறதோ அங்கு பொறுப்பில் இருக்கும் ஆத்மாவில் தைரியம் வந்தே விடுகிறது. மேலும் அப்படி துணையை அனுபவம் செய்யவர்கள் உதவியை அனுபவம் செய்பவர்களின் எண்ணத்தில் என்ன இருக்கிறது? ஒன்றும் புதியதல்ல வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது. வெற்றி கிடைத்தே தான் திரும். இது தான் உண்மையான அன்பானவர்களின் அனுபவம் எல்லைக்குட்பட்ட காதலிகள், நான் எங்கு இருக்கிறேனோ அங்கு நீயே நீயே தான் என்று அனுபவம் செய்கிறார்கள். அவர்கள் சர்வ

சக்திவான் இல்லை, ஆனால் தந்தை சர்வ சக்திவான் சாகார உடல் உள்ளவர் இல்லை. ஆனால் எப்பொழுது விரும்புகிறாரோ, எங்கே விரும்புகிறாரோ ஒரு நொடியில் அங்கு சென்றடைய முடியும் கர்மயோகி வாழ்க்கையில் லல்வீன் நிலை இருக்க முடியாது என்றும் நினைக்காதீர்கள். அந்த நிலை இருக்கிறது துணையின் அனுபவம் என்றால் அன்பில் நடைமுறை நிரூபணம் துணை தான். அப்படி சகஜயோகி நிரந்தரயோகி ஆகி விட்டீர்கள் இல்லையா? அன்பு செய்பவர் என்றால் எப்பொழுதும் சகஜயோகி. எனவே இந்த தபஸ்யா வருடத்தில் பரிசு வாங்கும் நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம் ஆனால் முடிவடையவில்லை. இதில் பயிற்சி அடைவதற்காக சேவையை எளிதாக்கி தபஸ்யாவிற்கு அதிக மகத்துவம் கொடுத்திருக்கிறோம் ஆனால் இயல்பாகவே மேடையை பார்ப்பார்கள். இது எல்லைக்கப்பாற்பட்ட உகை மேடை மற்றும் சுலபமாக முயற்சி செய்வதின் உயர்ந்த மேடையும் தான். இரண்டு மேடைகளும் உயர்வானவை. பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்களுக்கு உலகின் எதிரில், நான் தந்தைக்குச் சமமான ஒரு உதாரணம் என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கிறது. அந்த மாதிரி பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள் தானே நீங்கள்? ஸ்தாபனையின் ஆரம்பத்தில் இருந்து இது வரை பொறுப்பில் இருக்கிறீர்கள் மேலும் எப்பொழுதும் இருப்பீர்கள் அப்படித்தான் இல்லையா? இது கூட அதிகப்படியான அதிர்ஷ்டம் தான். மேலும் அதிர்ஷ்டம் உள்ளத்தின் அன்பை இயல்பாகவே அதிகரிக்கிறது. நல்லது. பொறுப்பில் இருந்து திட்டங்கள் உருவாக்குகிறீர்கள் பாப்தாதாவிடம் அலைகள் வந்து சேர்ந்து விடுகின்றன. நடைமுறையில் சுயம் தானும் சக்திசாலியாகி மற்றவர்களிலும் சக்தியை நிரப்பி பிரத்யக்ஷதாவை அருகில் கொண்டு வந்து கொண்டேயிருங்கள். இப்பொழுது பெரும்பான்மையான ஆத்மாக்கள் இந்த உலகைப் பார்த்து பார்த்து களைப்பு அடைந்து விட்டார்கள். புதுமையை விரும்புகிறார்கள். புதுமையின் அனுபவத்தை இப்பொழுது நீங்கள் செய்விக்க முடியும். இது வரை என்ன செய்திருக்கிறீர்களோ அவை மிகவும் நன்றாக இருக்கிறது. நடைமுறையில் கூட மிகவும் நன்றாக ஆகவேத்தான் வேண்டும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திட்டங்கள் நன்றாகவே தயாரித்திருக்கிறீர்கள். பிரம்மாபாபாவை பிரத்யட்சம் செய்தீர்கள் என்றால் கூடவே பாப்தாதாவையும் பிரத்யட்சம் செய்தீர்கள். ஏனென்றால் எப்பொழுது தந்தை அவரைத் தன்னுடையவர் ஆக்கினாரோ அப்பொழுது

தான் அவரும் பிரம்மா ஆனார். அப்படி தந்தையில் (பாப்) தாதா அடங்கியிருக்கிறார் மற்றும் தாதாவில் (பிரம்மா) தந்தை அடங்கியிருக்கிறார். அப்படி பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது என்றால் லவ்லீன் ஆத்மா ஆவது. அந்த மாதிரி தான் இல்லையா. நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** அனைவரின் உள்ளத்தின் விஷயங்கள் பரந்த உள்ளம் உடையவரிடம் மிக வேகமாக வந்து சேர்ந்து விடுகின்றன. நீங்கள் நினைக்கிறீர்கள் மேலும் அவை பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகின்றன, பாப்தாதாவும் அவரவர்களுடைய விதிப்பூர்வமான எண்ணம், சேவை மற்றும் ஸ்திதி (மனநிலை) அனைத்தையும் பார்த்துக் கொண்டேயிருக்கிறார், நீங்கள் அனைவரும் முயற்சி செய்பவர்கள் அனைவரிடமும் ஈடுபாடு இருக்கிறது ஆனால் வகை வகையாக கண்டிப்பாக இருக்கிறது. அனைவரின் லட்சியமும் உயர்ந்ததாக இருக்கிறது. மேலும் உயர்ந்த லட்சியத்தின் காரணமாகத்தான் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். சிலர் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள், சிலர் சாதாரண வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். முன்னேற்றமும் இருக்கிறது ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறது. தபஸ்யாவின் ஊக்கம் உற்சாகமும் அனைவரிலும் இருக்கிறது ஆனால் நிரந்தரம் மற்றும் சுலபம் இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. மிகவும் சுலபமான நிரந்தர நினைவிற்கான சாதனம் எப்பொழுதும் தந்தையிள் துணை அனுபவம் ஆகட்டும். துணையின் அனுபவம் நினைவு செய்வதற்கான கடின உழைப்பிலிருந்து விடுவித்து விடுகிறது. எப்பொழுது கூடவே இருக்கிறார் என்றால் நினைவும் இருக்குமில்லையா. மேலும் உடன் இருப்பது என்றால் கூடவே யாராவது உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதல்ல. துணை என்றால் உதவி செய்பவர் உடன் இருப்பவர் தன்னுடைய வேலையில் பிஸியாக இருக்கும் காரணத்தினால் மறக்கவும் முடியும் ஆனால் துணைவனை மறக்க முடியாது. எனவே ஒவ்வொரு காரியத்திலும் தந்தையின் துணை, துணைவன் ரூபத்தில் இருக்கிறதா? துணையாக இருப்பவரை ஒருபோதும் மறக்க முடியாது. துணையாக இருக்கிறார், துணைவனாகவும் இருக்கிறார், மேலும் இந்த துணைவன், காரியத்தை சுலபமான காரியமாக ஆக்குபவர். அவரை எப்படி மறக்க முடியும். சாதாரண முறையில் கூட ஒருவேளை யாராவது ஏதாவது ஒரு காரியத்தில் உதவி செய்தார் என்றால் அவருக்காக அடிக்கடி மனதில்

நன்றி எழுகிறது மேலும் தந்தையோ துணைவனாக் கஷ்டமானதை சுலபமாக ஆக்குபவர். அந்த மாதிரியான துணைவனை எப்படி மறக்க முடியும், நல்லது.

**வரதானம்: துக்கத்தை சுகமாகவும், இகழ்ச்சியை புகழ்ச்சியாக மாற்றி விடும் புண்ணிய ஆத்மா ஆகுக!**

புண்ணியாத்மா என்பவர் ஒருபோதும் யாருக்கும் துக்கம் தரமாட்டார். பெறவும் மாட்டார். மாறாக துக்கத்தையும் சுகமாக மாற்றி ஏற்றுக் கொள்வார். இகழ்ச்சியை புகழ்ச்சியாக புரிந்து கொண்டால் அப்பொழுது புண்ணியாத்மா என்று சொல்லப்படும். இந்த பாடத்தை சதா உறுதிப்படுத்துங்கள். அவதூறாக பேசுபவர்களையும் துக்கம் தரும் ஆத்மாக்களுக்கும் கூட தனது இரக்க சொரூபத்தின் மூலமாக இரக்கமான பார்வையில் பார்க்க வேண்டும். இகழ்வான பார்வையில் பார்க்கக் கூடாது. அவர்கள் இகழ்ந்தாலும், நீங்கள் பூவைத் துவுங்கள் அப்பொழுது புண்ணியாத்மா என்று அழைக்கப்படுவீர்கள்.

**சுலோகன்: பாப்தாதாவை கண்களில் வைத்திருப்பவரே உலகின் நட்சத்திரம், பாப்தாதாவை சாட்சாத்காரம் செய்விப்பவரே சிரேஷ்ட ஆத்மா!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 02.03.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகா சிவராத்திரி கொண்டாடுவது என்றால் உறுதிமொழி எடுப்பது, விரதம் இருப்பது மற்றும் பலி கொடுப்பது!

இன்று தெய்வீக மகா ஜோதி தந்தை தன்னுடைய ஜோதி புள்ளி குழந்தைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவும் மகான் ஜோதி மற்றும் குழந்தைகள் நீங்களும் மகான் ஜோதி சொரூபமாக இருக்கிறீர்கள். அப்படி தெய்வீக ஜோதியான தந்தை தெய்வீக ஜோதி ஆத்மாக்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார். இந்த மகான் ஜோதி எவ்வளவு அன்பானதாகவும் வேறுபட்டதாகவும் இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொருவரின் நெற்றியின் நடுவில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதியை பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு தெய்வீக மற்றும் பிரியமான காட்சியாக இருக்கிறது. பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்மீக நட்சத்திரங்களின் மிக நல்ல குழுவைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆன்மீக ஜோதிமய நட்சத்திர மண்டலம் தெய்வீகமானது மற்றும் மிகவும் அழகானது. நீங்கள் அனைவரும் கூட இந்த தெய்வீக நட்சத்திர மண்டலத்தில் பிரகாசித்துக் கொண்டி ருக்கும் தங்களுடைய புள்ளி சொரூபத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இது தான் மகா சிவராத்திரி ஆகும். சிவ ஜோதியின் கூடவே அனேக ஜோதிப்புள்ளி சாலிகிராமம் நீங்கள் இருக்கிறீர்கள். தந்தையும் மகான், குழந்தைகளும் மகான். எனவே மகா சிவராத்திரி என்று மகிமை செய்யப்படுகிறது. எவ்வளவு உயர்ந்த பாக்கியவான் ஆத்மாக்கள் நீங்கள். நீங்கள் சைத்தன்யமாக சாகார சொரூபத்தில் சிவபாபாவுடன் சிவராத்திரி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு பொழுதும் எண்ணத்திலும், கனவிலும் கூட இப்படி ஆன்மீக சிவராத்திரி கொண்டாடும் நாங்கள் சாலிகிராம ஆத்மாக்கள் என நினைத்ததில்லை. நீங்கள் அனைவரும் சைத்தன்யமாக கொண்டாடுகிறீர்கள். அதனுடைய ஞாபகார்த்தமாகத்தான் இப்பொழுது பக்தர்கள் மூலமாக ஜடச்சிலைகள்

மேல் சைத்தன்ய பாவனையுடன் கொண்டாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையான பக்தர்கள் சிலைகள் மேல் பாவனையுடன் பாவனை சொரூபத்தை அனுபவம் செய்கிறார்கள் மற்றும் நீங்கள் சாலிகிராமம் ஆத்மாக்கள் எதிரில் கொண்டாடுபவர்கள். அப்படி எவ்வளவு பாக்கியம் கிடைத்திருக்கிறது. லட்சங்கள், கோடி, பலகோடி இவை அனைத்தும் கூட உங்களுடைய பாக்கியத்தின் எதிரில் ஒன்றுமேயில்லை. எனவே அனைத்துக் குழந்தைகளும் நிச்சயத்தோடு ஒரு நொடியில் நாங்கள் பார்த்தோம், நாங்கள் அடைந்தோம் என்று கூறுகிறீர்கள். இந்த பாடல் அனைவரினுடையதா அல்லது சிலரினுடையதா? அனைவரும் பாடுகிறீர்கள் இல்லையா? அல்லது பார்ப்போம். அடைவோம் என்று பாடுகிறீர்களா? அடைந்து விட்டீர்களா? அல்லது அடைய வேண்டுமா? வெளிநாட்டவர் என்ன நினைக்கிறீர்கள்? அடைந்து விட்டீர்களா? தந்தையை பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? தந்தையைப் பார்த்திருக்கிறோம் அடைந்து விட்டோம் உள்ளத்தில் இருந்து கூறுகிறீர்கள். பார்ப்பது மற்றும் அடைவது கூட. என்ன? ஆனால் தந்தையை தன்னுடையவராக்கி விட்டீர்கள். தந்தை உங்களுடையவராகி விட்டார் இல்லையா? பாருங்கள், உங்களுடைய தந்தையாகி விட்டார் இல்லையா? எனவே தான் நீங்கள் கூறியதினால் தந்தை வந்து விடுகிறார் இல்லையா? அப்படி அதிகாரி ஆகி விட்டீர்கள் இல்லையா?

மகா சிவராத்திரிக்கு என்ன விசேஷங்கள் இருக்கின்றன? ஒன்று தந்தை முன் உறுதி அளிக்கிறீர்கள். மேலும் இன்னொன்று தந்தையின் மேல் உள்ள அன்பில் விரதம் இருக்கிறீர்கள். ஏனென்றால் அன்பு மற்றும் குஷியில் அனைத்தையும் மறந்து விடுகிறீர்கள். எனவே விரதம் இருக்கிறீர்கள். குஷி என்ற சத்துணவை அருந்தி விடுகிறீர்கள். எனவே மற்ற சத்துணவிற்கு அவசியம் இருப்பதில்லை. சந்திக்கும் குஷியின் காரணமாக விரதம் இருக்கிறார்கள் விரதம் குஷியின் அடையாளம் கூடத்தான். மேலும் விரதம் இருப்பது என்றால் அன்பில் தியாக பாவனையை வெளிப்படுத்துவது எதையாவது விடுவது என்றால் அது தியாக பாவனையின் அடையாளம். மூன்றாவது விஷயம், சிவராத்திரி என்றால் பலி கொடுப்பது. ஞாபகார்த்த ரூபத்தில் ஸ்தூல பலி கொடுக்கிறார்கள் ஆனால் என்ன ஆக வேண்டும்? மனம், புத்தி மற்றும் உறவில் சமர்ப்பணம் ஆக வேண்டும். இது தான் உண்மையான பலி கொடுப்பது. அப்படி இந்த மூன்று விசேஷங்களும் மகா சிவராத்திரியின்

விசேஷங்கள். சிவராத்திரி கொண்டாடுவது என்றால் இந்த மூன்று விசேஷங்களையும் நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவது சொல்வது மட்டும் இல்லை ஆனால் செய்வது சொல்வதும் செய்வதும் எப்பொழுதும் சமமாக இருக்கட்டும். பாப்தாதா குழந்தை களின் குஷி நிறைந்த செய்தியைக் கேட்டார். பாரதக் குழந்தைகள் ஆனாலும், வெளிநாட்டுக் குழந்தைகள் ஆனாலும் அனைவரும் மகா சிவராத்திரியின் சொரூபமாக நடைமுறையில் இருப்போம் என்று உறுதிமொழி எடுத்திருக்கிறார்கள். அப்படி உறுதிமொழி எடுப்பது என்றால், சொல்வது மற்றும் செய்வது இரண்டும் சமமாக இருப்பது. அனைவரும் முதலில் பாப்தாதாவிற்கு மிகப் பெரிய பிறந்த நாள் பரிசாக உறுதிமொழி அதாவது உயர்ந்த எண்ணத்தைக் கொடுத்திருக்கிறார்கள், இது மிக நல்ல விஷயம். எனவே பாப்தாதாவும் அனைத்துக் குழந்தைகளின் பரிசுக்கு நன்றி கூறுகிறார். பரிசாகக் கொடுத்த உறுதி மொழி எப்போதும் நினைவில் இருப்பதால் சக்தி நிறைந்தவராக ஆக்கிக் கொண்டிருக்கும். இதில் உறுதிமொழி கொடுக்கிறோம் என்றால் அதன்படி நடக்க முடியுமா? அல்லது முடியாதா? என்று முதலிலேயே நினைக்காதீர்கள். அவ்வாறு நினைத்தீர்கள் என்றால் பலகீனத்தை வரவேற்கிறீர்கள். அப்படி பலகீனம் அதாவது மாயாவை நீங்களே வரவேற்கிறீர்கள் என்றால் மாயாவோ வருவதற்காக முதலிலேயே தயாராக இருக்கிறது. இப்படி செய்வதால் நீங்கள் அதற்கு அழைப்பிதழ் கொடுக்கிறீர்கள். எனவே ஏதாவது எண்ணம் அல்லது காரியம் செய்கிறீர்கள் என்றால் சக்தி நிறைந்த நிலையில் நிலைத்திருந்து சக்திசாலியாக செய்யுங்கள். பலகீனமான எண்ணத்தைக் கலக்காதீர்கள். தைரியம் நம்முடையது. கவனம் நம்முடையது மற்றும் உதவி தந்தையினுடையது இருக்கவே இருக்கிறது என்ற உயர்ந்த எண்ணத்தை வையுங்கள். இந்த விதி மூலமாக உறுதி மொழியை நடைமுறையில் கொண்டு வருவதில் மிக சுலபமாக அனுபவம் செய்வீர் கள். நான் அநேக கல்பமாக வெற்றி அடைந்த ஆத்மா என்று எப்பொழுதும் நினையுங்கள். வெற்றியின் குஷி, வெற்றியின் போதை சக்திசாலி ஆக்கி விடும். வெற்றி பிராமண ஆத்மாக்களாகிய உங்களின் நிரந்தர துணைவனாக இருப்பதற்கு கட்டுப்பட்டு இருக்கிறது வேறெங்கு செல்லும்? பாண்டவர்களைத் தவிர வெற்றி வேறு யாருடனாவது துணையாக இருந்ததா? நீங்கள், அதே பாண்டவர்கள் தான் இல்லையா? எப்பொழுது தந்தை துணைவனாக இருக்கிறார் என்றால் வெற்றியும் உங்களுடைய துணைவன் தான். எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில்

வெற்றி திலகம் இடப்பட்டே தான் இருக்கிறது என்று பாருங்கள். யார் பிரபுவின் கழுத்தின் மாலை ஆகி விட்டாரோ அவருக்கு தோல்வி ஒரு பொழுதும் ஏற்பட முடியாது. முற்றிலும் வெற்றி அடைந்த ரூபத்தில் தன்னுடைய நினைவுச்சின்னமாக வெற்றி மாலையை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வெற்றி மற்றும் தோல்வி மாலை என்று மகிமை செய்யப்படவில்லை. வெற்றி மாலை என்று தான் மகிமை செய்யப்பட்டிருக்கிறது. வெற்றி மாலையின் மணிகள் நீங்கள் தான் இல்லையா? அப்படி வெற்றி மாலையின் மணிகள் ஒரு பொழுதும் தோல்வி அடைய முடியாது. ஒவ்வொருவரும் என்ன எண்ணத்தை உருவாக்கினார்களோ அந்த அனைத்துக் காட்சிகளையும் பாப்தாதா பார்த்தார். நல்ல ஊக்க உற்சாகத்தோடு, மிகுந்த குஷியோடு உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள். மேலும் சைத்தன்ய சாலிகிராமம் நீங்கள் உறுதிமொழி எடுத்தீர்கள். எனவே தான் பக்தர்கள் கூட அதன் ஞாபகார்தத்தை கொண்டாடிக் கொண்டேயிருக்கிறார்கள். (தபஸ்யாவின் சம்மந்தமாக நேற்று அனைவரும் 56வது சிவஜெயந்தியை முன்னிட்டு 56-உறுதி மொழிகள் எடுத்தார்கள்).

பலி கொடுக்கப்பட்டு விட்டது. பலி கொடுப்பது என்றால் மகா பயில்வான் ஆவது. எதை பலி கொடுக்கிறீர்கள்? பலகீனங்களை. எப்பொழுது பலகீனங்களை பலி கொடுத்து விட்டிர்களோ அப்பொழுது என்னவாகி விட்டீர்கள்? மகா பயில்வான் மிகப் பெரிய பலகீனம் தேக அபிமானம் ஆகும். உடலின் மேலிருக்கும் ஈர்ப்பை சமர்ப்பணம் செய்வது என்றால் அதன் வம்சத்தையும் சமர்ப்பணம் செய்வது ஆகும். ஏனென்றால் தேக அபிமானத்தின் சூட்சும வம்சம் மிக அதிகம் ஆகும். அநேக விதமான சிறிய பெரிய உடல் ஈர்ப்புகள் இருக்கின்றன. எனவே உடல் மேல் உள்ள ஈர்ப்பை பலி கொடுப்பது என்றால் வம்சத்தையும் சேர்த்து சமர்ப்பணம் ஆவது, அம்சத்தைக் கூட வைத்துக் கொள்ளாதீர்கள். அம்ச மாத்திரம் கூட ஒருவேளை இருந்து விட்டது என்றால் அடிக்கடி காந்தம் போல் இழுத்துக் கொண்டேயிருக்கும். உங்களுக்குக் கூட தெரியாமல் இருக்கும் விரும்பாவிட்டால் கூட காந்தம் தன் பக்கம் இழுத்து விடும் ஏதாவது ஒரு நேரத்திற்காக இந்த தேக அபிமானம் ஏதாவது காரியத்திற்கு உபயோகமாக இருக்கும் என்று கொஞ்சம் ஓரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்காதீர்கள். பின்பு, இது / இவர் இல்லாமல் காரியம் நடக்காது என்று கூறுகிறார்கள். காரியம் நடக்கிறது, ஆனால்

கொஞ்ச நேரத்திற்காக வெற்றி தென்படுகிறது. அபிமானத்தை சுவமானம் என்று புரிந்து கொண்டு விடுகிறீர்கள் ஆனால் இந்த அற்ப கால வெற்றியில் வெகு காலத்தின் தோல்வி அடங்கியிருக்கிறது. மேலும் எதை கொஞ்ச காலத்து தோல்வி என்று நினைக்கிறீர்களோ அது அனைத்து காலத்திற்கும் வெற்றியை பிராப்தி அடையச் செய்விக்கிறது எனவே தேக அபிமானத்தின் அம்ச மாத்திரத்தையும் சேர்த்து சமர்ப்பணம் ஆக வேண்டும். இதைத்தான் சிவதந்தை மேல் பலி கொடுப்பது, அதாவது மகா பயில்வான் ஆவது என்பதாகும். அந்த மாதிரி சிவராத்திரி கொண்டாடினீர்கள் இல்லையா? இந்த விரதத்தைக் கடைபிடிக்க வேண்டும். அவர்களோ (பக்தர்கள்) ஸ்தூல பொருட்களின் விரதம் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள் என்ன விரதம் வைத்துக் கொள்கிறீர்கள்? எப்பொழுதும் பலகீன உள்ளுணர்வை அழித்து நல்ல மற்றும் உயர்ந்த உள்ளுணர்வைக் கடைபிடிப்போம் என்று உயர்ந்த உள்ளுணர்வுகள் மூலமாக விரதம் இருக்கிறீர்கள். எப்பொழுது உள்ளுணர்வில் உயர்ந்த தன்மை இருக்கிறது என்றால் படைப்பு கூட உயர்ந்ததாகவே தென்படும் ஏனென்றால் உள்ளுணர்வு மூலமாக பார்வை மற்றும் செயலுக்கு தொடர்பு இருக்கிறது. எந்தவொரு நல்ல அல்லது தீய விஷயம் முதலில் உள்ளுணர்வில் எழுகிறது. பின்பு சொல்லில் மற்றும் செயலில் வருகிறது. உள்ளுணர்வு உயர்வாக இருக்கிறது என்றால் சொல்லும் செயலும் இயல்பாகவே உயர்வாக இருக்கும். உங்களுடைய விசேஷ சேவையாகிய உலக மாற்றம் கூட நல்ல உள்ளுணர்வு மூலம் தான் நடக்கிறது. உள்ளுணர்வு மூலமாக அதிர்வலைகள், வாயுமண்டலத்தை உருவாக்கு கிறீர்கள். அப்படி உயர்ந்த உள்ளுணர்வின் இந்த விரதத்தைக் கடைப் பிடிப்பது தான் சிவராத்திரி கொண்டாடுவது ஆகும். கொண்டாடுவது என்றால் ஆவது. சொல்வது என்றால் செய்வது என்று இதைக் கேட்டீர்கள் இல்லையா? ஸித்தி அடைந்த ஆத்மாக்கள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களை உலகியல் பாஷையில் ஸித்தி புருஷ் என்று கூறுகிறார்கள். மேலும் நீங்கள் ஸித்தி சொரூப ஆத்மா என்று கூறுவீர்கள். அவர்கள், அவர்களின் ஒவ்வொரு எண்ணமும் தனக்காக இருந்தாலும் சரி அல்லது மற்றவர்களுக்காக இருந்தாலும் சரி, அவைகள் காரியத்தில் ஸித்தி ஆகி விடுகின்றன. என்ன வார்த்தைக் கூறுகிறார்களோ அவையும் ஸித்தி ஆகி விடுகிறது. இதைத் தான் சத்தியமான வாக்கு (அருள் வாக்கு) என்று கூறுவார்கள். அப்படி அனைவரையும் விட மிகப் பெரிய ஸித்தி சொரூப ஆத்மாக்கள் நீங்கள் தான் இல்லையா? எனவே எண்ணம் மற்றும்

வார்த்தை ஸித்தி ஆகும் இல்லையா, ஸித்தி ஆவது என்றால் வெற்றி அடைவது. ஸித்தி ஆவது என்றால் பிரத்யக்ஷ சொரூபத்தில் வருவது. எனவே நாம் அனைவரும் ஸித்தி சொரூப ஆத்மாக்கள் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நாம் ஸித்தி சொரூப ஆத்மாக்களின் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு சொல், ஒவ்வொரு செயலும் தனக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் ஸித்தியை பிராப்தி செய்விக்கக்கூடியது, வீணானவை அல்ல சொன்னீர்கள் மற்றும் செய்தீர்களென்றால் ஸித்தியாகி விட்டது அல்லவா! சொன்னீர்கள். நினைத்தீர்கள் மற்றும் செய்யவில்லையென்றால் அது வீணாகி விட்டது. சிலர் என்னுடைய எண்ணம் மிக நன்றாக இருக்கிறது. மிக நல்ல நல்ல சிந்தனை, ஊக்கம் வருகிறது, தனக்காக மற்றும் சேவைக்காக, ஆனால் அவைகள் எண்ண அளவில் மட்டும் இருந்து விடுகின்றன. நடைமுறை காரியத்தில், சொரூபத்தில் வருவதில்லை என்று நினைக்கிறார்கள். அப்படியானால் இதை என்ன வென்று கூறுவீர்கள்? எண்ணம் மிக நன்றாக இருக்கிறது ஆனால் காரியத்தில் வித்தியாசம் ஏன்? இதன் காரணம் என்ன? ஒருவேளை விதை மிக நல்லது ஆனால் பழம் நன்றாக வரவில்லை என்றால் இதை என்னவென்று கூறுவது. நிலம் அல்லது மேற்பார்வை குறைவு இருக்கிறது. அதைப் போல் எண்ணமென்ற விதை நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் எண்ணம் வந்து சேருகின்றன. உடனே பழம் கிடைப்பது போல் மிக நன்றாக விதை விதைத்தீர்கள். மிக நல்ல எண்ணம் உருவாக்கினீர்கள் என்பதைப் பார்த்து பாப்தாதாவும் குஷி அடைகிறார் ஆனால் என்ன நடக்கிறது, உறுதியான தாரணை என்ற நிலத்தில் குறை இருக்கிறது. மேலும் அடிக்கடி கவனம் கொடுக்க வேண்டும் என்ற மேற்பார்வையில் குறைவு இருக்கிறது பாப்தாதா சிரிப்பூட்டும் விளையாட்டைப் பார்த்துக் கொண்டயிருக்கிறார். எப்படி சிறு குழந்தைகள் காற்று நிரம்பிய பலூனை பறக்க விடுகிறார்கள் இல்லையா? மிக நன்றாக காற்று (கேஸ்) நிரப்பி பறக்க விடுகிறார்கள் மற்றும் குஷி அடைகிறார்கள். பலூன் மேலே செல்கிறது. மிக நன்றாக பறக்கிறது ஆனால் பறந்து கொண்டிருக்கும் போதே கீழே வந்து விடுகிறது. எனவே முயற்சியில் ஒருபொழுதும் சோர்வு அடையாதீர்கள். செய்தே தான் ஆக வேண்டும், நடந்தே தான் ஆக வேண்டும். ஆகவே தான் வேண்டும், வெற்றி மாலை என்னுடைய நினைவுச்சின்னம் தான். சோர்வு அடைந்து, செய்யலாம், பார்க்கலாம் என்று நினைக்காதீர்கள். நாளை என்ன, இப்பொழுதே செய்து தான் ஆக வேண்டும். ஒருவேளை சோர்வை

சில விநாடி அல்லது நிமிடங்கள் கூட உங்கள் உள்ளே இடம் கொடுத்தீர்களென்றால் பின்பு அது சுலபமாக போகக்கூடியது அல்ல. அதற்குக் கூட பிராமண ஆத்மாக்களிடம் மகிழ்ச்சி வருகிறது. எனவே ஒருபோதும் சோர்வடையாதீர்கள். அபிமானமும் வேண்டாம், சோர்வும் வேண்டாம். சிலர் அபிமானத்தில் வந்து விடுகிறார்கள். சிலர் சோர்வடைந்து விடுகிறார்கள். இந்த இரண்டும் மகா பயில்வான் ஆக விடுவதில்லை. எங்கு அபிமானம் இருக்கிறதோ அங்கு அவமானத்தின் உணர்வுகளும் அதிகமாக வரும். சில நேரம் அபிமானத்தில், சில நேரம் அவமானத்தில் இரண்டிலும் விளையாடிக் கொண்டேயிருக்கிறார்கள். எங்கு அபிமானம் இல்லையோ அவருக்கு அவமானம் கூட அவமானமாகத் தென்படாது. அவர் எப்பொழுதும் பணிவு மற்றும் படைப்பு காரியத்தில் பிஸியாக இருப்பார். யார் பணிவாக இருப்பாரோ அவர் படைத்தல் காரியம் செய்ய முடியும். எனவே சிவராத்திரி கொண்டாடுவது என்றால் பணிவானவராகி படைத்தல் காரியத்தில் ஈடுபடுவது புரிந்ததா? எனவே இன்று அனைவரும் தங்களுடைய உள்ளத்தில் உயர்ந்த எண்ணம் என்ற கயிறு மூலமாக வெற்றிக் கொடியைப் பறக்க விடுங்கள். இந்த கொடி ஏற்றுவது பிராமணர்களின் சேவையின் ஒரு பழக்கமும், விதியும் தான் ஆனால் கூடவே எப்பொழுதும் வெற்றிக் கொடியையும் பறக்கவிட்டுக் கொண்டேயிருங்கள். ஏதாவது துக்கமான விஷயமாக இருந்தால் கொடியை கீழே இறக்கி விடுவார்கள் ஆனால் உங்களுடைய கொடி ஒருபொழுதும் கீழே வர முடியாது. அந்த மாதிரி கொடியைப் பறக்க விடுவீர்கள் இல்லையா?

நல்லது. தபஸ்யா வருஷத்தின் முடிவும் கிடைத்திருக்கிறது. அனைவரும் அவரவர்களின் நீதிபதியாகி மதிப்பெண் வரிசை கொடுத்திருக்கிறார்கள். நல்ல காரியம் செய்தார்கள். நாலா புறத்தின் பெரும்பான்மையான முடிவு மூலமாக இந்த தபஸ்யா வருடம் அனைவரையும் சுயமுன்னேற்றத்திற்காக கவனத்தை நன்றாக இழுத்திருக்கிறது என்று தென்படுகிறது. எப்பொழுது அட்டென்ஷன் செல்கிறது என்றால் டென்ஷனும் சென்று விடுமில்லையா? அப்படி மொத்த முடிவு அனேகருக்கு நன்றாக இருந்தது. இரண்டாம் நம்பரில் பெரும்பான்மையோர் இருக்கிறார்கள். மூன்றாம் எண்ணும் கூட இருக்கிறது ஆனால் முதல் மற்றும் நான்காம் நம்பர் குறைவாக இருக்கிறது. இரண்டாம் நம்பரின் கணக்குப்படி முதலும் நான்காவதும்

குறைவாக இருக்கிறது. மற்றபடி இரண்டாவது மற்றும் மூன்றவாதில் பெரும் பான்மையோர் இருக்கிறார்கள் மேலும் அனைவரும் இந்த தபஸ்யா வருடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதில் பாப்தாதா விசேஷமாக குஷி அடைகிறார். எனவே சோதனைத் தாள் வந்தது ஆனால் பெரும்பான்மையோர் நல்ல முறையில் தேர்ச்சி பெற்று விட்டார்கள். தபஸ்யா செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணம் வைத்தீர்கள் இல்லையா? இந்த எண்ணத்தின் சக்தி உதவி செய்தது. எனவே முடிவு நன்றாக இருக்கிறது, மோசம் இல்லை. பாராட்டுக்கள், மற்றபடி இப்பொழுது பரிசுகளையோ தாதிமார்கள் கொடுப்பார்கள். தந்தையோ அனைவருக்கும் மிக நன்றாக இருந்தது மிக நன்றாக இருந்தது என்ற பரிசைக் கொடுத்து விட்டார் ஆனால் தபஸ்யா வருடம் முடிவடைந்து விட்டது என்று அலட்சியமாகி விடாதீர்கள். இன்னும் பெரிய பரிசை வாங்க வேண்டும். காரியம் மற்றும் யோகாவின் சமநிலையின் பரிசு வாங்க வேண்டும் என்று கூறினோம் இல்லையா, சேவை மற்றும் தபஸ்யாவின் சமநிலையின் ஆசீர்வாதங்களை அனுபவம் செய்ய வேண்டும் மற்றும் பெயரளவிற்கு பரிசு வாங்க வேண்டும். உண்மையான பரிசோ தந்தை மற்றும் குடும்பத்தின் ஆசீர்வாதங்களின் பரிசாகும். அதுவோ அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

நல்லது. இன்று சூட்சும வதனம் உருவாக்கியிருக்கிறீர்கள். நன்றாக இருக்கிறது, வாயுமண்டலம் நன்றாக உருவாக்கியிருக்கிறீர்கள். அந்த ஜோதி மயமான தேசத்தின் முன்பு இந்த அலங்கரிக்கப்பட்ட சூட்சும வதனம் மாடல் மாதிரி தான் தென்படுகிறது இல்லையா. இருந்தாலும் குழந்தைகளின் ஊக்கம் மற்றும் உற்சாகம் வாயுமண்டல உள்ளுணர்வை அவசியம் இழுக்கிறது. அனைவரும் சூட்சும வதனத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? சாகார உடலிருந்து கொண்டே மனதால் சூட்சும வதனவாசியாகி சந்திப்பை நிகழ்த்துங்கள். குழந்தைகளுக்கு சூட்சும வதனம் அதிகம் பிடித்திருக்கிறது. எனவே தான் உருவாக்கினீர்கள் இல்லையா? என்பதை பார்த்து பாப்தாதாவிற்கு மிகுந்த குஷி இருக்கிறது. நன்கு கடுமையாக உழைத்து உருவாக்கியிருக்கிறீர்கள். மேலும் அன்போடு உருவாக்கியிருக்கிறீர்கள், உயர்ந்த ஊக்கம் உற்சாகத்தின் எண்ணத்தோடு உருவாக்கினீர்கள். எனவே பாப்தாதா எண்ணத்தை உருவாக்குபவர்களுக்கும், சாகாரத்தில் கொண்டு வருபவர்களுக்கும் அனைவருக்கும் பாராட்டுக்கள் கொடுக்கிறார். இது

கூட எல்லைக்கப்பாற்பட்ட ஒரு விளையாட்டு மேலும் வேறு என்ன விளையாடுவீர்கள்? இந்த விளையாட்டுத்தான் விளையாடுவீர்கள் இல்லையா? எப்போதாவது சொர்க்கம் உருவாக்குவீர்கள், எப்போதாவது சூட்சும வதனம் உருவாக்குவீர்கள். இது புத்தியை இழுக்கிறது.

**நல்லது. நாலாபுறமும் உள்ள அனைத்து ஜோதிப்புள்ளி சாலி கிராமங்களுக்கு தந்தையின் தெய்வீக பிறப்பு மற்றும் குழந்தைகளின் தெய்வீக பிறப்பிற்கு வாழ்த்துக்கள்!**

அந்த மாதிரி மிக உயர்ந்த எப்பொழுதும் ஸித்தி சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தெய்வீகமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களுக்கு எப்பொழுதும் அபிமானம் மற்றும் அவமானத்திலிருந்து விலகியிருந்து சுவமானத்தில் நிலைத்திருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உயர்ந்த முயற்சி மற்றும் உயர்ந்த சேவையின் ஊக்கம் உற்சாகத்தின் உயர்ந்த நம்பிக்கை தீபங்களை எரிய விடக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய இதயத்தில் வெற்றிக் கொடியைப் பறக்க விடக்கூடிய சிவசக்தி சேனைகளுக்கு, எப்பொழுதும் முயற்சியில் வெற்றியை சுலப மாக அனுபவம் செய்யும் வெற்றி சொரூப குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**56'வது சிவ ஜெயந்திக்காக பாப்தாதா கொடி ஏற்றி எல்லாக் குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் அளித்தார்!** சதா உலகத்தில் தந்தையும், வெற்றி பெற்ற குழந்தைகளும் இந்த சுகம் சாந்தி தரும் இந்தக் கொடி என்றென்றும் பறந்து கொண்டே இருக்கும். நாலா புறமும் சிவதந்தை மற்றும் சிவசக்திகளின் ஆன்மீகப் படையின் பெயர் எல்லா இடங்களிலும் பெயர் பெற்று வளர்ந்து கொண்டே இருக்கும். இந்த மகத்தான, உயரமான கொடியானது என்றென்றும் உலகில் அசைந்தபடியே தெரியும். இந்த அழியாத கொடி, அழியாத தந்தை மற்றும் அழியாத உயர்ந்த ஆத்மாக்களின் நினைவுச்சின்னமாகும். எனவே, மகிழ்ச்சியின் அலைகளுடன், மகிழ்ச்சியின் கொடி, தந்தையின் பெயரை உயர்த்தும் கொடி, தந்தையை வெளிப்படுத்தும் கொடி அசைத்து கொண்டே இருக்கும், அசைத்துக் கொண்டே இருப்பீர்கள். அத்தகைய மஹா சிவராத்திரியில், குழந்தைகள் உங்கள் அனைவருக்கும் மற்றும்

நாலா புறமும் உள்ள சர்வ பிராமண விசேஷ ஆத்மாக்களுக்கும் பிறந்த நாளுக்கான மிக்க வாழ்த்துக்களும் அன்பு நினைவுகளும்!

**வரதானம்: நேரத்தின் ஞானத்தை நினைவில் வைத்து அனைத்து கேள்விகளையும் முடிவு கட்டக்கூடிய சுயதரிசன சக்கரதாரி ஆகுக!**

எந்த சுயதரிசன சக்கரதாரி குழந்தைகள் சுயத்தை தரிசனம் செய்து விடுகிறார்களோ அவர்களுக்கு சிருஷ்டி சக்கரத்தின் தரிசனம் தானாக ஏற்பட்டு விடுகிறது. டிராமாவின் இரகசியத்தை தெரிந்திருப்பவர்கள் எப்பொழுதும் குஷியில் இருக்கிறார்கள். ஒரு பொழுதும் ஏன்? என்ன? என்ற கேள்வி எழ முடியாது. ஏனென்றால் டிராமாவில் தானும் நன்மை செய்பவர் மற்றும் நேரமும் நன்மை செய்வது. யார் தன்னை பார்க்கிறார்களோ, சுயதரிசன சக்கரதாரி ஆகிறார்களோ அவர் சுலபமாக முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்.

**சுலோகன்: அனேக ஆத்மாக்களுக்கு உண்மையான சேவை செய்ய வேண்டுமென்றால் நற்சிந்தனையாளர் ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 16.03.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஹோலி கொண்டாடுவது என்றால் திட சங்கல்பத்தின் அக்னியில் பலவீனங்களை எரிப்பது மற்றும் சந்திப்பின் ஆனந்தத்தைக் கொண்டாடுவது!

இன்று ஆன்மீகத் தோட்டத்தின் எஜமானர் பாப்தாதா இரட்டைத் தோட்டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். (இன்று மேடை மீது மிக அழகிய தோட்டம் அலங்கரிக்கப்பட்டுள்ளது). ஒருபக்கம் இயற்கையின் அழகு மற்றும் மறுபக்கம் ஆன்மீக ஆத்ம ரோஜாத் தோட்டத்தின் அழகு. டிராமாவில் ஆதி காலம் சத்யுகத்தில் இயற்கையின் சதோ பிரதான அழகு, மாஸ்டர் ஆதி தேவ், ஆதி சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களுக்குத்தான் பிராப்தி ஆகிறது. இந்த நேரம் இறுதி காலத்திலும் இயற்கையின் அழகைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் ஆதி காலம் மற்றும் இறுதி காலத்தில் எவ்வளவு வித்தியாசம் உள்ளது. உங்களுடைய சத்யுக ராஜ்யத்தில் இயற்கையின் சொரூபம் எவ்வளவு சிரேஷ்ட சதோ பிரதான அழகானதாக இருக்கும். அங்குள்ள தோட்டம் மற்றும் இங்குள்ள உங்கள் தோட்டத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது. அந்த உண்மையான நறுமணத்தை அனுபவம் செய்துள்ளீர்களா? இருந்தாலும் இயற்கையின் தலைவன் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள்தான். இயற்கையின் தலைவனாக இருந்தும், இந்த இயற்கையின் விளையாட்டைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள். இயற்கை குழப்பம் உண்டாக்கட்டும், அழகான விளையாட்டைக் காண்பிக்கட்டும் -இரண்டிலுமே இயற்கையின் எஜமான ஆத்மாக்கள் சாக்ஷியாகி விளையாட்டைப் பார்க்கிறீர்கள். விளையாட்டில் மகிழ்ச்சி ஏற்படுகிறது, பயப்படுவதில்லை. ஆதலால் பாப்தாதா தபஸ்யா மூலம் சாட்சிநிலையின் ஆசனத்தின் மீது ஆடாது அசையாமல் நிலைத்து இருப்பதற்கான விசேஷ பயிற்சி செய்வித்துக் கொண்டிருக்கிறார். எனில்

# 1992 அவ்யக்த முரளி

இந்த நிலையின் ஆசனம் அனைவருக்கும் பிடித்திருக்கிறதா அல்லது குழப்பத்தின் ஆசனம் பிடித்திருக்கிறதா? அசையாத ஆசனம் நன்றாக உள்ளதல்லவா! எந்த விஷயம் நடந்தாலும், இயற்கையினுடையதோ, மனிதர்களுடையதோ இரண்டுமே அசையாத நிலையின் ஆசனத்தைக் கொஞ்சம் கூட அசைக்க முடியாது. இந்தளவு உறுதியாக இருக்கிறீர்களா அல்லது இப்போது ஆக வேண்டுமா?

இயற்கையினுடைய ஐந்து விளையாட்டு உள்ளது மற்றும் மாயாவுடையதும் ஐந்து விளையாட்டு உள்ளது. இந்த பத்து விளையாட்டுகளையும் நல்ல விதமாகத் தெரிந்துள்ளீர்களா? விளையாடுபவர் விளையாட்டு இன்றி இருப்பாரா, என்ன? எப்போதாவது எந்த விளையாட்டாவது முன்னால் வந்து விட்டது; இந்நாட்களிலும் கூட பழைய உலகில் விளையாட்டைப் பார்க்கும் விருப்பம் நிறைய உள்ளதல்லவா? எவ்வளவு பிரியமாக விளையாட்டைப் பார்க்கிறார்கள். அவர்களோ பழைய உலகத்தினர் மற்றும் நீங்களோ சங்கம யுக பிராமண ஆத்மாக்கள் எனில் விளையாட்டைப் பார்க்க குஷி அடைய வேண்டுமா அல்லது பயப்பட வேண்டுமா? சிலர் விழுகின்றனர், சிலர் விழ வைக்கின்றனர் ஆனால் விளையாட்டைப் பார்ப்பவர்கள் விழுபவர்களைப் பார்த்தும் மகிழ்ச்சி அடைகின்றனர் மற்றும் வெற்றி அடைபவரைப் பார்த்தும் மகிழ்ச்சி அடைகின்றனர். எனில் இதுவும் கூட மிகப் பெரிய விளையாட்டாகும். ஆசனத்தை மட்டும் விட்டுவிடக் கூடாது. எவ்வளவுதான் யாராவது ஆட்டட்டும் ஆனால் சக்திசாலி ஆத்மாக்கள் உங்களை அசைக்க முடியாது. எனில் பாப்தாதா இன்று ஒவ்வொரு ஆன்மீக ரோஜாவையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்போது தோட்டத்திற்குள் அழைத்துள்ளீர்கள் எனில் தோட்டத்தில் இலைகளைப் பார்ப்பாரா அல்லது பூக்களைப் பார்ப்பாரா? இதுவும் கூட நன்றாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. உழைப்பு செய்யக்கூடியவர்களின் அதிசயம் நன்றாக உள்ளது ஆனால் பாப்தாதா ஆன்மீக மலர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். விதவிதமாக உள்ளது. சிலர் மிக அழகான நிறம் ரூபத்தை உடையவர்கள். நிறமும் உள்ளது, ரூபமும் உள்ளது. இன்னும் சிலர் நிறம், ரூபம், மணமும் உள்ளவர்கள்; சிலர் நிறம், ரூபம் மட்டும் உள்ளவர்கள். நிறமும் ரூபமும் எல்லாக் குழந்தைகளிடமும் வந்துள்ளது. ஏனெனில் தந்தையினுடைய தொடர்பின் நிறம் (ஸங்க் கா ரங்க்) எல்லாக் குழந்தைகளிடமும் ஒட்டிக் கொண்டு விட்டது. சிலர் வேலை விஷயங்களில், முயற்சியின்

விஷயங்களில் சம்பூர்ண திருப்தி இல்லாவிடினும் ஆனால் தந்தையினுடைய ஸங்க் கா ரங்க் அனைவருக்கும் மிகப் பிரியமாக உள்ளது. ஆதலால் நிறம் அனைவரிடமும் வந்துள்ளது மற்றும் ரூபமும் மாற்றம் அடைந்துள்ளது ஏனெனில் பிராமண ஆத்மாக்களாகி விட்டீர்கள். நல்லது, எப்பேர்பட்ட முயற்சியாளர் ஆத்மாவாகட்டும் ஆனால் பிராமண ஆத்மா ஆனதால் ரூபம் நிச்சயமாக மாறுகிறது. பிராமண ஆத்மாவுடைய ஜொலிப்பு, அழகு ஒவ்வொரு பிராமண ஆத்மாவிடமும் வந்து விடுகிறது. ஆதலால் நிறமும் ரூபமும் அனைவரிடமும் தெரிகிறது. மணமோ நம்பர்வாராக உள்ளது. மணம் என்றால் சம்பூர்ண பவித்ரதா! யாரெல்லாம் பிராமணர்கள் ஆகிறார்களோ அவர்களை பிரம்மாகுமார், பிரம்மாகுமாரி என்றே கூறப்படுகின்றனர். குமார், குமாரி ஆவது என்றால் தூய்மை ஆவது! தூய்மையின் தெளிவான விளக்கம் மிக சூட்சுமமானது. பிரம்மச்சரியம் மட்டும் கிடையாது. உடலால் பிரம்மச்சாரி ஆவதை சம்பூர்ண பவித்ரதா எனக் கூறுவதில்லை. மனதாலும் பிரம்மச்சாரி என்றால் தந்தையைத் தவிர வேறு யாரும் மனதில் இல்லை மற்றும் எவ்வித ஈர்ப்பிலும் வராது இருத்தல். உடலாலும் பிரம்மச்சாரி, சம்பந்தத்திலும் பிரம்மச்சாரி, சம்ஸ்காரத்திலும் பிரம்மச்சாரி! இதன் விளக்கம் மிகவும் அன்பானது மற்றும் மிகவும் ஆழமானது. இதனுடைய விஸ்தாரத்தைப் பின்னர் கூறுகிறோம். இன்றோ ஹோலி கொண்டாட வேண்டுமல்லவா, ஆழமான படிப்பு எதுவும் இல்லை, இன்று கொண்டாட வேண்டும்.

ஹோலி கொண்டாடுபவர்கள் நீங்கள் யார்? புனித அன்னப்பறவைகள், ஹோலி ஹன்ஸ்! புனித அன்னப்பறவைகள் எவ்வளவு அன்பாக இருக்கிறது. அன்னம் சதா நீரில் நீந்தக்கூடியது. புனித அன்னப்பறவைகளும் கூட ஞான நீரில் நீந்தக்கூடியவர்கள் ஆவார்கள். பறக்கக்கூடியவர்கள் மற்றும் நீந்தக்கூடியவர்கள். உங்கள் அனைவருக்கும் பறக்கவும், நீந்தவும் தெரியுமல்லவா; ஞான சிந்தனை செய்வதைத்தான் ஞான அமிர்தத்தில் நீந்துவது மற்றும் பறப்பது என்றால் சதா உயர்ந்த நிலையில் இருப்பது. இரண்டுமே தெரியுமல்லவா? எல்லோருடைய மனதிலும் தந்தையிடம் அன்பு என்னவோ 100-சதவீதத்திற்கும் மேலாக உள்ளது மற்றும் தந்தையினுடைய அன்பும் ஒவ்வொரு குழந்தையிடமும், கீழே விழுபவராகட்டும், மேலே ஏறுபவராகட்டும், விளையாட்டு காட்டினாலும்கூட, தந்தையின் அன்பு

உள்ளது. இது கொஞ்சம் குறும்பு செய்யும் குழந்தை என தந்தை விளையாட்டைப் பார்த்து புரிந்து கொள்கிறார். எல்லா குழந்தைகளுமே ஒரே மாதிரியாக இருக்க முடியாதுதானே! சிலர் குறும்புத்தனமாக, சிலர் அமைதியாக, சிலர் இனிமையானவராக இருப்பர், சிலர் மிகவும் வேகமான இயல்புடையவராக இருப்பர், இருப்பினும் குழந்தைகளா. குழந்தைகள் என்ற சொல்லே மிக அன்பானது. எப்படி உங்களுக்கு தந்தை என்ற சொல் மிக அன்பானது என்றால் தந்தைக்கு குழந்தைகள் அன்பானவர்கள். தந்தை ஒருபோதும் எந்த ஒரு குழந்தையிடமும் மனமுடைந்து போவதில்லை. சதா சுப நம்பிக்கையே வைக்கின்றார். ஒருவேளை யாராவது ஓரங்கட்டினாலும் பாப்தாதா அதன் மீதும் கூட நம்பிக்கையே வைக்கின்றார், இன்று இல்லை எனில் நாளை வந்து விடும் என. எங்கு செல்லும்? எப்படி சரீர கணக்கு வழக்கில் சிலர் அதிகம் நோய்வாய்ப்படுகின்றனர் எனில் அவர் குணமடைய அதிக காலம் ஆகிறது மற்றும் யார் கொஞ்ச காலம் நோய்வாய்ப்படுகின்றனரோ அவர் சீக்கிரம் குணமடைந்து விடுகிறார் ஆனால் நோய்வாய்ப்பட்டுள்ளார். எப்படிப்பட்ட நோயாகட்டும் ஸ்தூலமான சான்று இருந்தாலும் நோயாளி மீது ஒருபோதும் நம்பிக்கை இழப்பதில்லை. சதா நம்பிக்கை வைக்கின்றனர் -இன்று இல்லையேல் நாளை குணமாகி விடுவார் என! ஆதலால் பாப்தாதா எந்த ஒரு குழந்தையிடமும் நம்பிக்கை இழப்பதில்லை; சதா சுப நம்பிக்கைகளை வைக்கின்றார், இன்று கொஞ்சம் மந்தமாக இருக்கிறது, நாளை புத்திசாலி ஆகி விடும் என்று! எப்போது குறிக்கோள் ஒன்று, தந்தையும் ஒருவர் என்றால் தந்தையை விட்டு வேறு எங்கே செல்ல முடியும்? பின்பும் கூட ஆஸ்தி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தந்தையிடமிருந்து தானே கிடைத்தாக வேண்டும். தந்தையை திட்டினாலும்கூட தந்தை முக்தியின் ஆஸ்தியைக் கொடுத்தோ விடுவார். முழு உலகிலுள்ள எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தியின் அல்லது ஜீவன்முக்தியின் ஆஸ்தியோ கண்டிப்பாக கிடைத்தே ஆக வேண்டும். ஏனெனில் தந்தை சிருஷ்டியில் அவதரித்துள்ளார் என்றால் குழந்தைகள் ஆஸ்தியை இழக்கச் செய்ய அவரால் முடியாது. தந்தையோ ஆஸ்தி அளித்தே ஆக வேண்டும். எடுத்துக் கொள்கிறீர்களோ, இல்லையோ ஆனால் தந்தை கொடுத்தே ஆக வேண்டும். மற்றும் எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தை மூலம் ஆஸ்தி கிடைத்துள்ளது அப்போதுதானே தந்தை என கூறி, அழைக்கின்றனர் அல்லவா! தந்தை என்றாலே ஆஸ்தியை அளிப்பவர் என்றுதான் அர்த்தம்! எந்த ஒரு தர்மத்தில்

வேண்டுமானாலும் சென்றிருக்கலாம், இருப்பினும் தந்தை (Father) என கூறி நினைவு செய்கிறார்களா. ஒரு ஆத்மா கூட ஆஸ்தி இல்லாமல் இருக்க முடியாது. எனில் சாகார சிருஷ்டியில் பாகத்தை நடிக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்தி தரவில்லை என்றால் தந்தை என்று எப்படி கூறுவார்கள்? ஆனால் நீங்களோ நேரடியாக ஆஸ்தியைப் பெறுகிறீர்கள், அடையாளம் கண்டு கொண்டு பெறுகிறீர்கள். உங்களுடையது நேரடித் தொடர்பு. சாகாரத்தில் நிமித்தமான ஊடகமாக பிரம்மா ஆனார் ஆனால் பிரம்மாவிடம் யோகம் வைப்பதில்லை ஆனால் யோகம் தந்தையிடம் வைக்கிறீர்கள். பிரம்மாபாபாவும் கூறுகின்றார் -தந்தையை நினைவு செய்யுங்கள் என. இவ்வாறு கூறுவதில்லை -என்னை நினைவு செய்யுங்கள். தந்தையின்றி ஒருபோதும் முழு ஆஸ்தி வேறு எந்த சம்பந்தத்திலும் கிடைக்க முடியாது. நீங்கள் நேரடியாகத் தந்தையிடம் சம்பந்தம் வைத்து ஆஸ்தியின் அதிகாரத்தை முக்காலங்களிலும் அடைகிறீர்கள். இப்போதும்கூட ஆஸ்தி கிடைத்துக் கொண்டிருக்கிறதுதானே. சக்திகளின், குணங்களின் ஆஸ்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது. கிடைத்து விட்டதா? மற்றும் முக்திதாமத்திலும் கூட எங்கு இருப்பீர்கள்? அருகில் இருப்பீர்களா! எனில் இப்போதும் ஆஸ்தி உள்ளது, முக்திதாமத்திலும் கூட மற்றும் பின்பு 21-ஜென்மத்திலும் கூட ஆஸ்தி இருக்கிறது. எனில் முக்காலமும் ஆஸ்தியின் அதிகாரி ஆகி விடுகிறீர்கள். மனிதர்கள் கூறுகின்றனர்தானே, உங்கள் அனைவருடைய ஜீவன்முக்தியை விட எங்களுடைய முக்தி நன்றாக உள்ளது என. நீங்களோ சக்கரத்தில் வருவீர்கள், நாங்களோ சக்கரத்திலிருந்து விடுபட்டு விடுவோம் என. நீங்கள் உடனே கூற முடியும் முக்தியின் ஆஸ்தியோ எங்களுக்கும் கூட கிடைக்கும் ஆனால் நாங்கள் முக்திக்குப் பின் ஜீவன்முக்தியின் ஆஸ்தியை எடுத்துக் கொள்வோம். இரண்டு கிடைக்கிறது! முக்திதாமம் வழியாகச் செல்வீர்களா, எனில் நேரடித் தொடர்பு ஏற்பட்ட காரணத்தால் தற்சமயம் மற்றும் பின்பு இறந்த பிறகு மற்றும் மீண்டும் புதிய சரீரம் எடுக்கும்போதும் முக்காலங்களிலும் ஆஸ்தியின் அதிகாரி ஆகிறீர்கள். இவ்வளவு போதை உள்ளதா?

இன்று ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்களா. ஹோலியில் எரிக்கவும் படுகிறது மற்றும் கொண்டாடவும் படுகிறது. முதலில் எரிக்கின்றனர், பின்பு கொண்டாடுகின்றனர். ஹோலி கொண்டாடவது என்றால் கொஞ்சம் எரிப்பது மற்றும் கொஞ்சம் கொண்டாடுவது.

எரிக்காமல் கொண்டாடுவதில்லை. எனில் திட சங்கல்பத்தின் அக்னி மூலம் முதலில் தனது பலவீனங்களை எரிக்க வேண்டும் அப்போது கொண்டாடும் மகிழ்ச்சியின் அனுபவம் செய்ய முடியும். ஒருவேளை எரிக்கவில்லை என்றால் கொண்டாடும் மகிழ்ச்சியின் அனுபவம் எப்போதும் செய்ய முடியாது. ஹோலி என்ற சொல்லின் அர்த்தம் ஞாபகம் இருந்தது எனில் எரிக்கவும் செய்வீர்கள், இருப்பினும் எப்போதும் இருக்காது. ஹோலி என்ற சொல்லில் எரிப்பதும் உள்ளது, கொண்டாடுவதும் உள்ளது. இரண்டு அர்த்தங்கள் உள்ளது. ஹோலி என்பது உறுதியாக உள்ளதுதானே? எனில் ஹோலி என்றால் ஹோ - லி, முடிந்தது முடிந்து விட்டது. எந்த விஷயம் முடிந்து விட்டதோ அதற்குக் கூறப்படுகிறது ஹோலி! எது நடக்க வேண்டியிருந்ததோ அது ஹோ - லி. எனில் முடிந்ததை முடித்து விடுவது என்றால் ஹோலி எரிப்பது. மற்றும் எப்போது தந்தைக்கு முன் வருகிறீர்கள் எனில் கூறுகிறீர்கள் நான் தந்தையுடைய ஹோ - லி ஆகி விட்டேன். எனில் கொண்டாடுவது மற்றும் ஹோ - லி, முடிந்தது முடிந்து விட்டது. முடிந்ததை மறந்து விட வேண்டும், இது தான் எரிப்பது. எனவே ஹோலி என்ற ஒரே சொல்லில் எரிப்பது மற்றும் கொண்டாடுவது உள்ளது. நானோ தந்தையுடைய ஹோ - லி என பாட்டு பாடுகிறீர்களா. உறுதியாக உள்ளீர்களா? ஏனெனில் பாப்தாதா அனைவருடைய தபஸ்யாவின் கணக்கைப் பார்த்தார். தபஸ்யா ஒருவேளை எப்போதாவது குறைவாக ஆனது என்றால் அதற்கான காரணம் என்ன? முடிந்ததை முடிப்பதில் புள்ளி வைப்பதற்குப் பதில் கேள்விக்குறியிட்டு இருந்தீர்கள். மற்றும் சின்னத் தவறு செய்கிறீர்கள், சின்னதுதான் ஆனால் பேரிழப்பு ஆகி விடுகிறது. அந்தத் தப்பு என்ன செய்கிறீர்கள்? எதை மறக்க வேண்டுமோ அதை நினைவு செய்கிறீர்கள் மற்றும் எதை நினைக்க வேண்டுமோ அதை மறந்து விடுகிறீர்கள். எனவே மறக்க வருகிறதுதானே? தந்தையை மறக்க விரும்பவில்லை எனினும் கூட மறந்து விடுகிறீர்கள் மற்றும் எப்போது மறந்து விட வேண்டுமோ அப்போது என்ன சொல்கிறீர்கள் -மறக்க விரும்புகிறேன் ஆனால் மறக்க முடியவில்லை, அடிக்கடி ஞாபகம் வருகிறது. எனில் நினைவு செய்வது, மறப்பது என்ற இரண்டு விஷயங்கள்தான் வருகிறது, ஆனால் எதை நினைக்கணும், எதை மறக்கணும்? எந்த நேரம் மறக்கணுமோ அப்போது நினைக்கிறீர்கள் மற்றும் எந்த நேரம் நினைக்கணுமோ அப்போது மறக்கிறீர்கள். சின்ன தவறுதானே? எனில் இதை ஹோ - லி செய்து விடுங்கள், எரித்து விடுங்கள். அம்சத்தையும் முடித்து விடுங்கள். ஞானி

தூ ஆத்மா தானே? ஞானி என்றாலே அறிவுள்ளவர் என்று அர்த்தம். மற்றும் நீங்களோ முக்காலங்களையும் அறிந்தவர்களா! ஆதலால் ஹோலி கொண்டாடுவது என்றால் இந்த தவறை எரிப்பது. எதை மறக்க வேண்டுமோ அதை ஒரு நொடியில் மறக்க வேண்டும் மற்றும் எதை நினைக்க வேண்டுமோ அதை ஒரு நொடியில் நினக்க வேண்டும். காரணம் என்னவென்றால் புள்ளிக்குப் பதில் கேள்விக்குறி ஆகிறது. ஏன்'னு நினைக்கிறீங்க மற்றும் வரிசை (கியூ) ஆரம்பமாகி விடுகிறது. கேள்விக்குறி போடுவதால் மட்டுமே இப்படி அப்படி ஏன் என்ன நீண்ட வரிசை ஆரம்பமாகி விடுகிறது. மற்றும் புள்ளி வைப்பதால் என்ன ஆகிறது? நீங்களும் புள்ளி, தந்தையும் புள்ளி மற்றும் வீணானவற்றுக்கும் புள்ளி, முற்றுப்புள்ளி. மேலும் இந்த ஹோலி மூலம் சதா தந்தையுடைய 'ஸங்க் கே ரங்க்'ன் ஹோலி, சந்திப்பதும் ஹோலி கொண்டாடிக் கொண்டேயிருப்பீர்கள். எல்லாவற்றையும் விட உறுதியான நிறம் எது? இந்த ஸ்தூல நிறம் எவ்வளவுதான் உறுதியாக இருந்தாலும் ஆனால் எல்லாவற்றையும் விட சிரேஷ்ட மற்றும் எல்லாவற்றையும் விட உறுதியான நிறம் தந்தையுடைய 'ஸங்க் கே ரங்க்' ஆகும். எனில் இந்த நிறம் மூலம் கொண்டாடுங்கள். உங்களுடைய ஞாபகார்த்தம் தான் கோப கோபியர்கள் ஹோலி கொண்டாடுவது! அந்தப் படத்தில் என்ன காட்டுகிறார்கள்? தந்தை மற்றும் நீங்கள் இருவரும் சேர்ந்தே ஹோலி விளையாடுகிறீர்கள். ஒவ்வொரு கோப, கோபிகையுடன் கோபி வல்லபரைக் காட்டுகிறார்கள் எனில் இந்த தொடர்பு ஆயிற்றுதானே. உடனிருப்பது அல்லது தொடர்பு அவிநாசியானது, தந்தையுடைய 'ஸங்க் கே ரங்க்'ன் ஞாபகார்த்தம்தான் ஹோலி ராஸலீலையுடன் கூடவே இருக்கும் ரூபத்தில் காட்டப்பட்டுள்ளது. எனில் ஹோலி கொண்டாடத் தெரியும்தானே? இது நடந்தது, என்ன செய்வேன், விரும்பவில்லை ஆனால் நடந்து விட்டது... இன்று முதல் இதனை ஹோலி, எரியுங்கள், முடியுங்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருபோதும் சங்கல்பத்தில் கூட இவ்வாறு நினைக்க முடியாது. நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் கூட நன்றாக சேவையின் வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். தந்தையிடமும் அன்பு உள்ளது எனில் சேவையிலும் அன்பு உள்ளது. சேவை என்றால் சுயம் மற்றும் எல்லா ஆத்மாக்களுடன் கூடவே சேவை. முதலில் சுயம் ஏனென்றால் சுய ஸ்திதியிலிருப்பவர்தான் மற்ற ஆத்மாக்களை சூழ்நிலைகளிலிருந்து

வெளியேற்ற முடியும். சுயம் மற்றும் அனைவருடைய சமநிலையின் (balance) ஸ்திதியில்தான் சேவையின் வெற்றியே உள்ளது. சேவையில் மிகவும் பிஸியாக இருந்தேனா அதனால் சுய ஸ்திதியின் சார்ட் மந்தமாகி விட்டது என இப்படி ஒருபோதும் கூறாதீர்கள். ஒருபக்கம் சம்பாதிப்பது, மறுபக்கம் இழப்பது என்றால் மிச்சம் என்ன இருக்கும்? ஆதலால் எப்படி தந்தையும் நீங்களும் இணைந்தே இருக்கிறீர்களோ, உடலும் ஆத்மாவும் இணைந்தே உள்ளதோ, உங்களுடைய எதிர்கால விஷ்ணு சொரூபமும் இணைந்தே உள்ளதோ, அந்த மாதிரி சுய சேவை மற்றும் அனைவருக்கும் சேவை இணைந்தே இருக்கட்டும். இதை தனியாக்கி விடாதீர்கள், இல்லையேல் உழைப்பு அதிகம் மற்றும் வெற்றி குறைவாக கிடைக்கும். அரைகுறையாகி விடுகிறதுதானே!

இந்த குரூப்பின் சார்ட்டிலும் இரண்டாம் எண் அதிகமாக உள்ளது. முதலும் கூட குறைவு என்றாலும் நான்காவது, ஐந்தாவதும் குறைவுதான், இரண்டு வரை சென்று விட்டீர்கள் என்றால் இரண்டிற்கு முன் என்ன உள்ளது? ஒன்று தானே! இரண்டு வரை அடி எடுத்து வைத்து விட்டீர்கள் மீதம் இப்போது ஒரு அடி, ஒன்றில் வைக்க வேண்டும். அதற்கான வழி -இணைந்த சொரூபத்தினுடைய சேவை! குழந்தைகள் சேவைக்கான திட்டம் செய்து கொண்டிருக்கிறீர்களா. பாப்தாதாவோ சமிக்கை செய்தார் -இப்போது நேரத்திற்கு ஏற்றவாறு எந்த சேவை செய்தீர்களோ அவற்றை மிக நன்றாகச் செய்தீர்கள். இதனால் தந்தையை, தன்னை பிரத்யக்ஷம் செய்தீர்கள், வாயுமண்டலம் மற்றும் வைப்ரேஷன் மாற்றம் அடைந்தது. சிநேகி, சகயோகி ஆத்மாக்கள் நாலா புறமும் எண்ணிக்கையில் அருகில் வந்துள்ளனர். இப்போது அந்த மாதிரி சேவை செய்யுங்கள் இதனால் ஒருவர் மூலம் அநேகருக்குச் சேவை நடக்கட்டும். முழு உலகத்திற்கும் செய்தி அளிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் செய்தி அளித்ததால் யார் ராஜதானியில் வரக்கூடிய ஆத்மாக்களோ அவர்கள் தனது பாக்கியத்தை உருவாக்கி முன்னால் வந்து விட்டனர்; ஆனால் இப்போதோ செய்தி அளிப்பவர்களின் எண்ணிக்கை, வெளிப்பட்டுள்ள ராஜ்ய அதிகாரி குழந்தைகளை விட அதிகம் உள்ளது. ராஜ குடும்பத்தில் வருபவர்கள் அல்லது ராஜ சிம்மாசனத்தில் அமருபவர்கள் இருவருமோ நன்றாகவே வெளிப்பட்டுள்ளனர். ராஜ்ய அதிகாரிகளாக நீங்களா ஆவீர்கள். நீங்கள் ஆவீர்களா அல்லது பிறரை ஆக்குவீர்களா? பிறரை ராஜ்ய அதிகாரி ஆக்குவீர்கள் மற்றும் நீங்கள் என்ன ஆவீர்கள்?

எனில் இப்போது நாலா புறமும் செய்தி சென்றடைவதற்காக அத்தகைய ஆத்மாக்களை அருகில் கொண்டு வாருங்கள், அந்த ஒருவர் பலருக்காக நிமித்தமாகட்டும் அப்போது செய்தி அளிப்பதும் சீக்கிரமாக நடக்கும். ஆதலால் பாப்தாதா முன்பும்கூட சமிக்ஞை அளித்திருந்தார் -எங்கு அதிகத்திலும் அதிக எண்ணிக்கை உள்ளதோ, அவை நிறுவனங்கள் ஆகட்டும், தொழில்துறைகளாகட்டும், இரண்டிலுமே எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எனில் அத்தகைய ஆத்மாக்களை நிமித்தமாக்குங்கள், அவர் உங்களுடைய சேவையின் தோழனாகி மற்றவர்களையும் அருகில் கொண்டு வரட்டும். நீங்கள் செய்தி அளித்தபடியே முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். அவர்களை செய்தி அளிப்பதற்காக நிமித்தமாக்குங்கள். இப்போதோ ஆத்மாக்கள் உங்களுடைய நிலைக்கு ஏற்றவாறு உங்களுக்கு உருவான உருவாக்கப்பட்ட மேடை கிடைத்துள்ளது. மற்றவர்களுக்கும் சேவையில் உடல் மனம் பொருளை ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பு அளியுங்கள். மனதால் செய்யட்டும், பொருளால் செய்யட்டும் அப்போதுதான் சத்யுகத்தில் பிரஜையில் வருவார்கள். அவர்களையும் விதை விதைக்க விடுங்கள், நீங்களோ விதை விதைத்து விட்டீர்களா, பலன் அடைந்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது அத்தகைய குழு உருவாக்குங்கள், அவர்கள் ஒரு மாதத்திற்காக, இரண்டு மாதத்திற்காக சேவையின் குழுவில் சிலர் இந்த பக்கம், சிலர் அந்த பக்கம் செய்தி அளிக்க செல்லட்டும். ஒரே சமயத்தில் 7-8 குழுக்கள் உருவாக்குங்கள் மற்றும் உங்களது பகுதியில் ஒவ்வொரு குழுவும் சேவைக்காகச் செல்லட்டும். வேண்டுமானால் ஒரு சிறிய தேசத்திற்கோ, ஒரு பெரிய தேசத்திற்கோ. யார் யார் அருகருகே உள்ளனரோ, அங்கிருந்து குழுவைத் தயார் செய்து அந்த குழுவை அனுப்புங்கள் ஆனால் அந்த குழுவும் சேவை செய்வதற்கான இந்த விதியை புத்தியில் வைக்க வேண்டும் -அவர்கள் அத்தகைய முக்கியஸ்தர்களை விழிப்படையச் செய்து அவர் மூலம் மற்றவர்களையும் விழிப்படையச் செய்ய வேண்டும். அங்கிருந்தே தயார் செய்ய வேண்டும் மற்றும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். ஏனென்றால் எப்போது சேவை அதிகரிக்க விரும்புகிறீர்கள் எனில் முதலில் எழும் கேள்வியே, சகயோகிகள் (hands) எங்கிருந்து வருவார்கள்? ஒவ்வொரு இடத்திலும் இத்தகைய ஆத்மாக்களைத் தயார் செய்யுங்கள் மற்றும் தயாரானவர்களை மேலும் நம்பிக்கையானவர்களை விசேஷமாக

நேரம் ஒதுக்கி பயிற்சி அளியுங்கள் மற்றும் பின்பு அவர்கள் நடத்திக் கொண்டே இருப்பார்கள். மேலும் யார் நிமித்தமானவர்களோ அவர்கள் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். பழைய சென்டர்களோ பக்குவமடைந்து விட்டனர் எனில் புதியவைகளுக்குச் சென்றபடியே புதியவர்களை பழையவர்களாக்குங்கள். தகுதியுள்ளவர்களை உருவாக்குவதற்கான சாதனம் -அடிக்கடி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது! எங்கு அருகில் உள்ளதோ, எட்டோ, பத்தோ, ஆனால் அடிக்கடி பயிற்சி பெறுவது மிக அவசியம். எப்படி முன்பும் கூட பாரதத்திலும் சில சமயம் இளைஞர் குழு, சில சமயம் கல்விக் குழு, சில சமயம் மருத்துவர்கள் குழு உருவாக்கினீர்கள், அப்படி இருக்கக்கூடிய இடத்தில் குழு உருவாக்கி லட்சியம் வையுங்கள் இங்கிருந்துதான் யாரையாவது நிமித்தம் ஆக்குவது என்று. நிமித்தமாக்கிக் கொண்டே செல்லுங்கள், முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். இப்போது சம்பந்தம் தொடர்போ உங்களுக்கு நன்றாக ஏற்பட்டு விட்டது. எல்லோரிடமும் பிரபாவமும் நன்றாக உள்ளது. லட்சியம் வைப்பதால் அத்தகைய சகயோகி ஆத்மாக்களும் கூட கிடைத்து விடும். கான்ஃபிரன்ஸ், யோக ஷிவிர் இவற்றில் சொற்பொழிவாற்ற வேண்டும், சகயோகிகளைத் தயார் செய்வதுதான் லட்சியம் என்பது கூடாது. தேவையானால் கீதா பாடசாலை போல் நடத்துங்கள். மெல்ல மெல்ல கீதா பாடசாலை மூலம் கிளை சேவை நிலையம், கிளை சேவை நிலையம் சென்டர் ஆகி விடும்; ஆனால் எந்த ஒரு குழுவும் எங்கு வேண்டுமானாலும் செல்லட்டும் இணைந்த சேவையின்றி வெற்றி அசம்பவமாகும். அப்படியில்லை சேவை செய்ய செல்வது மற்றும் திரும்பும்போது மாயா வந்து விட்டது என சொல்லக்கூடாது, மனச்சோர்வடைந்தது, தொந்தரவு அடைந்தது. இந்த காரணத்தால் நிமித்த ஆத்மாக்களும் அவர்களை சேவையில் அனுப்புவதற்கு பயப்படுகின்றனர். தைரியம் வைப்பதில்லை. பிறகுக்குச் சேவை செய்து, தான் மந்தமாகி விடக்கூடாது என நினைக்கின்றனர். ஆதலால் இதை அடிக்கோடு இடுங்கள். சேவையில் வெற்றி அல்லது சேவையின் வளர்ச்சிக்கான சாதனம் -சுயம் மற்றும் அனைவரும் இணைந்த சேவையே!

எல்லா இரட்டை வெளிநாட்டினரும் எல்லா இடங்களிலிருந்தும் கடிதங்களை மிக அன்பு நினைவுகளோடு கொண்டு வந்துள்ளனர். பாப்தாதாவிடம் மூன்று விதமானக் கடிதங்கள் வந்தடைந்தன. ஒன்று,

அதிக அன்பின் உடையது, நற்செய்தி உடையது; இரண்டாவது, முயற்சியில் முன்னேறுவதற்கான லட்சியம் எப்படி வைத்துள்ளனர், அந்த விஷயத்தின் கடிதம்; மூன்றாவது, கொஞ்சம் கொஞ்சம் இடையிடையே குறும்புத்தனம் செய்வது. சிலர் ஒரு மாதிரி, வேறு சிலர் வேறு மாதிரி எழுதியுள்ளனர் ஆனால் பாப்தாதா எல்லாக் கடிதங்கள் எழுதிய குழந்தைகளுக்கு இந்த பதிலைத்தான் தருகிறார் -சதா இணைந்த சேவை மற்றும் ஸ்திதி, அதாவது தந்தை மற்றும் நீங்கள் இந்த இணைந்த ஸ்திதி, இணைந்த சேவை மற்றும் சதா பரிஷ்தா சொரூபத்தின் சம்பூர்ண லட்சியத்தை முன்னால் வையுங்கள். இன்று புருஷார்த்தி, நாளை பரிஷ்தா! சுயத்தின் சொரூபம் சதா நினைவில் இருப்பதுபோல் அப்படி பரிஷ்தா சொரூபம் முன்னால் இருக்கட்டும், தனது ஸ்தூல சொரூபத்தை ஒருபோதும் மறப்பதில்லைதானே. எப்படி உங்களது ஸ்தூல சொரூபம் சதா நினைவில் உள்ளதோ, அப்படியே தனது பரிஷ்தா சொரூபத்தையும் சதா தெளிவாக முன்னால் இருக்கட்டும். இப்போது உடனே பரிஷ்தா ஆகி விடுங்கள். பரிஷ்தாவாக இருந்தோம், பரிஷ்தாவாக இருக்கிறோம் மற்றும் கல்ப கல்பமாக பரிஷ்தாவாக நாம்தான் ஆக வேண்டும். எனில் தைரியம், ஊக்கம், உற்சாகத்துடன் பறந்து செல்லுங்கள். தூய்மையான இதயத்துடன் மிக நன்றாக எழுதுகிறீர்கள், இது இரட்டை வெளிநாட்டினரின் விசேஷமாகும், தெளிவாகத் தெரிகிறது. மறைக்கக்கூடியவர்கள் இல்லை. தெளிவு என்றால் உயர்ந்தது. இரட்டை வெளிநாட்டினரிடம் சோதனை செய்யும் சக்தியும் மிக நன்றாக உள்ளது. இப்போது மாற்றம் செய்யும் சக்தியை அந்தளவு மட்டுமே வையுங்கள். சோதனை செய்வது அதிகமாக உள்ளது, மாற்றம் செய்வது கொஞ்சம் குறைவாக உள்ளது, எனில் இதனையும் சமநிலையில் வையுங்கள். தெளிவான உள்ளத்துடன் தருகின்றனர் மேலும் எடுத்தும் கொள்கின்றனர். கைம்மாறும் உடனே கிடைத்து விடுகிறது. ஒருவேளை உண்மையான மனதுடன் யாராவது தனது பலகீனங்களையும் எழுதுகின்றனர் எனில் தந்தை மன்னிக்கும் கடல், அப்போதே பிரதிபலனாக மன்னிப்பும் அளித்து விடுகிறார். மிகவும் அன்பான மடல், மிகவும் அன்பான கடிதங்களைப் பாப்தாதா பார்க்கின்றார். பரிசளிப்பவர் தானே தந்தையின் பரிசு ஆவார். 'கிஃப்ட்' (பரிசு) தருவது என்றால் 'லிஃப்ட்' பெறுவது! எனில் பரிசு மட்டும் தருவதல்ல ஆனால் உயர்த்திக் கொள்வதாகும். நல்லது.

சென்ற கல்பத்தைப் போலவே ஆஸ்தி எடுத்துக் கொள்வதற்காக எல்லா புதுப்புது குழந்தைகளும் வந்தடைந்துள்ளீர்கள், இதற்காக பாப்தாதா வரவேற்பு அளிக்கின்றார் மற்றும் புதிய பிறப்பின் பிறந்த நாளுக்கான வாழ்த்துகளையும் அளிக்கின்றார்! நல்லது.

நாலா புறமுள்ள எப்போதும் இணைந்த ஸ்திதியில் நிலைத்திருக்கக்கூடிய, சதா இணைந்து சேவையில் களைப்பற்ற சேவை மூலம் நிமித்தம் ஆகக்கூடிய, சதா முடிந்ததை முடிந்ததாக்கி தந்தையின் 'ஸங்க் கே ரங்க்'ன் ஹோலி கொண்டாடக்கூடிய அன்ன-ஆத்மாக்களுக்கு, சதா முக்காலங்களின் ஆஸ்தியினுடைய குஷியில் இருக்கக்கூடிய, சதா சாஷியாகி இயற்கை மற்றும் மாயாவின் விளையாட்டை பார்க்கக்கூடிய -அந்த மாதிரி சதா வெற்றி, சதா பறக்கும் கலையில், சதா பரிஷ்தா சொரூபத்தை முன்னால் அனுபவம் செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**பார்ட்டிகளுடன்: (சாரம் மட்டும்)**

**1) எப்படி சப்தத்தில் வருவது மிக எளிதாக உள்ளதோ அதே போல் சப்தத்திலிருந்து விலகுவதும் அவ்வளவு எளிதாக உள்ளதா?** இந்த புத்திக்கான பயிற்சியை சதா செய்து கொண்டே இருங்கள், ஏனெனில் இது ஆத்மாவை சக்திசாலி ஆக்குகிறது. சப்தத்திலிருந்து விலகுவது என்றால் வாயும் மனதும், இரண்டுமே சப்தத்திலிருந்து விலகி, சாந்திக்கடலுடன் ஒன்றி விட வேண்டும். ஒரு நொடியாவது சப்தத்திலிருந்து விலகி இனிமையான அமைதியின் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். அமைதி மிகப் பிரியமாக ஏன் உள்ளது? ஏனெனில் ஆத்மாவின் சுய தர்மம் அமைதிதான், அசலான தேசமும் அமைதிதேசம் (சாந்திதாம்) ஆகும். இறுதியில் அசரீரிப் பயிற்சிதான் வேலைக்காகும். நான் ஆத்மா விலகியிருப்பவன், இந்த உடல் மூலம் இந்த பாகத்தைச் செய்து கொண்டிருக்கிறேன். இந்த விலகிய நிலையில்தான் இறுதியில் வெற்றியின் அல்லது 'பாஸ் வித் ஹானர்' உடைய சான்றிதழ் அளிக்கும்.
திரிகால தரிசி ஆத்மா ஒருபோதும் எந்த விஷயத்திலும் குழப்பமடைய முடியாது. குறிக்கோளும் பாதையும் தெளிவாக இருந்தால் குழப்பம் என்பதே இருக்காது. சதா தனது பாக்கியத்தின் பாடலை பாடிக் கொண்டே இருங்கள் -ஆஹா எனது சிரேஷ்ட பாக்கியமே ஆஹா!

பகவானுடையவராகி விட்டோம் -இதை விட பெரிய பாக்கியம் வேறு என்ன உள்ளது.

**2) சங்கம யுக பிராமணர்களின் கடமை அல்லது சேவையே -குஷியாக இருப்பது, குஷியைத் தருவது!** பாப்தாதா முன்பே கூறியிருந்தார் -நாசுக்கான நேரம் அருகில் வருகிறது எனில் பல ஆத்மாக்கள் உங்களிடமிருந்து கொஞ்ச நேரத்திற்காக குஷி கேட்டுப் பெற வருவார்கள் என்று. எனவே யாரும் வெறும் கையோடு திரும்பிச் செல்லக்கூடாது. எப்போதாவது மாயாவிடம் தோல்வி அடைந்தால் மனமுடைந்து போன முகம் தெரியக்கூடாது, குஷி தான் தெரிய வேண்டும். நீங்கள் அனைவரும் ஹீரோ-ஹீரோயின்கள், எனவே உங்களது பாகம் குஷியாக இருப்பது, குஷியை அளிப்பது. நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.04.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முன்னேறும் கலையை அனுபவம் செய்வதற்காக இரண்டு விஷயங்களின் சமநிலை -ஞானம் நிறைந்த பாவனை மற்றும் அன்பு நிறைந்த யோகா!

இன்று பாப்தாதா தன்னுடைய அன்பான பாவனை மூர்த்தி ஆத்மாக்களையும் மற்றும் ஞான சொரூப யோகி ஆத்மாக்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இரண்டு விதமான ஆத்மாக்களும்

தந்தைக்கு பிரியமானவர்கள் மற்றும் இருவருமே தந்தையிடமிருந்து அவரவர்களுடைய பிரத்யக்ஷ பலன் ஆஸ்தியின் அதிகாரிகளாக, எந்த அளவிற்கு அன்பு மற்றும் பாவனை இருக்கிறதோ அந்த அளவிற்கு இருக்கிறார்கள். ஞான சொரூப யோகி ஆத்மாக்கள் தன்னுடைய சக்திக்கேற்றபடி தந்தையின் நெருக்கத்தில், சமமாக அனைத்து சக்திகளின் அனுபவத்தின் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். இருவருமே பிராப்தி சொரூபமாக இருக்கிறார்கள் ஆனால் இரண்டு பிராப்தியிலும் வித்தியாசம் இருக்கிறது அன்பு மற்றும் பாவனை மூர்த்திக் குழந்தைகள் எப்பொழுதும் பாவனையின் காரணமாக நினைவில் இருக்கிறார்கள். தந்தையிடமிருந்து அன்பின் அனுபவம் செய்கிறார்கள். சக்தியின் அனுபவத்தையும் பாவனையின் பலனின் சொரூபத்தில் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் எப்பொழுதும் அனைத்து சக்திகளையும் அனுபவம் செய்வதில்லை. ஞான சொரூப யோகி ஆத்மாக்கள் எப்பொழுதும் அனைத்து சக்திகளின் அனுபவம் மூலமாக சுலபமாக வெற்றி அடைவதில் விசேஷ அனுபவம் செய்கிறார்கள். சமநிலை யின் அனுபவம் செய்கிறார்கள். அப்படி இரண்டு விதமான குழந்தைகள் வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் ஆடாத அசையாத நிலையின் அனுபவத்தை யோக சொரூப ஆத்மாக்கள் மட்டும் தான் செய்கிறார்கள். அன்பு மற்றும் பாவனை சொரூப ஆத்மாக்கள் பாவனை மூலமாக அன்பு மூலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் எல்லா நேரங்களிலும் வெற்றி அடைவதில்லை. அன்பு நிறைந்த ஆத்மாக்களின் மனதில், வாயில் எப்பொழுதும் பாபா பாபா இருக்கிறார். இந்த காரணத்தினால் ஒவ்வொரு நேரமும் உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறது. பாவனையின் பலன் தகுந்த நேரத்தில் தந்தை மூலமாகக் கிடைத்தே விடுகிறது ஆனால் சமமாக ஆவதில் ஞானி யோகி ஆத்மாக்கள் அருகில் இருக்கிறார்கள். எனவே பாவனை மற்றும் ஞான சொரூபம் ஆவதற்கான லட்சியம் வையுங்கள். எவ்வளவு பாவனை இருக்கிறதோ அவ்வளவே ஞான சொரூபமும் இருக்கிறது பாவனை மட்டும் மற்றும் ஞானம் மட்டும் இருப்பது கூட சம்பூர்ண நிலை இல்லை. ஞானம் நிறைந்த பாவனை. அன்பு நிறைந்த யோகி ஆத்மா இந்த இரண்டின் சமநிலை சுலபமாக முன்னேறும் கலையை அனுபவம் செய்விக்கிறது. தந்தைக்குச் சமம் என்றால் இரண்டின் சமநிலை. இந்த நேரம் பாவனை சொரூப ஆத்மாக்கள் சேவையில் அதிகம் வருகிறார்கள்.

இந்த ஆத்மாக்கள் கூட ஸ்தாபனையின் காரியத்தில் அதாவது ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தின் ஸ்தாபனை ஆனாலும், ராஜ்ய ஸ்தாபனை ஆனாலும், இரண்டுமே அவசியமாக இருக்கிறது ஆனால் இப்பொழுது நேரத்திற்கு ஏற்றபடி ஞானி யோகி ஆத்மாக்களின் அவசியம் மிக அதிகமாக இருக்கிறது. ஏனென்றால் வரும் காலத்தில் வைராக்கிய உள்ளுணர்வின் வாயுமண்டலத்தின் காரணமாக பாவனை சொரூப் ஆத்மாக்கள் இன்னும் சுலடமாக வந்தே தான் ஆவார்கள். எனவே சேவையின் லட்சியத்தில் ஞானி யோகி ஆத்மாக்களின் பக்கம் கவனம் அதிகம் தேவை. இந்த மாதிரியான ஆத்மாக்களின் பெருக்கம் அவசியமாக இருக்கிறது. புரிந்ததா. எண்ணிக்கை மிகவும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்காதீர்கள் ஆனால் அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக சர்வ சக்திகளின் அனுபவம் உள்ள ஆத்மாக்களை தயார் செய்யுங்கள். ராஜ்யத்தின் வளர்ச்சி மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது ஆனால் உலக மாற்றத்தில் இரண்டு சொரூபத்தின் சமநிலை வைக்கும் ஆத்மாக்கள் மட்டும் தான் பொறுப்பாளர் ஆகிறார்கள். ஏனென்றால் உலக மாற்றத்திற்கு மிகவும் சூட்சும சக்திசாலி நிலை உள்ள ஆத்மாக்கள் அவசிய மாக இருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக, உயர்ந்த எண்ணம் மூலமாக அனேக ஆத்மாக்களை மாற்றம் செய்ய முடியும். சுயம் அன்பு மற்றும் பாவனை உள்ள ஆத்மா தனக்குள் மிக நன்றாக நடந்து கொள்கிறார்கள் ஆனால் அந்த அன்பு மற்றும் பாவனை உலகத்திற்காக இருப்பதில்லை. தனக்காகவும். சில நெருக்கமான ஆத்மாக்களுக்காகவும் இருக்கிறது. எல்லைக்கு அப்பாற்பட்ட சேவை மற்றும் உலக சேவை சமநிலை.யில் உள்ள ஆத்மாக்கள் செய்ய முடியும். எல்லைக்கப்பாற்பட்ட சேவை தன்னுடைய சக்திசாலியான மனசக்தி மூலமாக சுப பாவனை மற்றும் சுப விருப்பங்கள் மூலமாக மாற்றம் செய்ய முடியும். அப்படி அந்த மாதிரி பாவனை மற்றும் ஞானம், அன்பு மற்றும் யோக சக்தி இருக்கட்டும். அந்த மாதிரியான ஆத்மாக்களாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது அன்பு பாவனை ஆத்மாக்களை மட்டும் பார்த்து குஷி அடைகிறீர்களா? நன்மை செய்பவர்களாக ஆகி விட்டீர்களா? அல்லது எல்லைக்கப்பாற்பட்ட உலக நன்மை செய்பவராக ஆகி விட்டீர்களா? -இதை சோதனை செய்யுங்கள். முடிவு என்ன கிடைத்திருக்கிறது. தந்தைக்கு இருவருமே பிரியமானவர்கள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். இரண்டு விதமான ஆத்மாக்களையும் பார்த்து பாப்தாதா குஷியடைகிறார். அன்பு

நிறைந்த ஆத்மாக்களாகி தந்தையை தன்னுடையவராக ஆக்கியும் விட்டார் இல்லையா. தெரிந்து கொண்டார், ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விட்டார். கோடியில் சிலரின் வரிசையில் வந்து விட்டார். தான் சென்றடைய வேண்டிய இடத்திற்கு சென்று விட்டார். உடல் அலைவதிலிருந்து மனம் அலைவதிலிருந்து தப்பித்துக் கொண்டார். எனவே குஷியடைகிறீர்கள் இல்லையா. குழந்தைகளும் குஷியடைகிறார்கள். தந்தையும் குஷியடைகிறார். குஷி நிறைந்த அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாகவே ஆகி விட்டீர்கள் இல்லையா, உலகத்தை ஒப்பிடும்போது தந்தையின் நேரடி குழந்தையாக ஆகுபவர்கள் எவ்வளவு சாதாரண ஆத்மாக்கள் என்று பாருங்கள். உலக ஆசிரியரின் மாணவர்கள் எவ்வளவு அதிசயமாக இருக்கிறார்கள் பாருங்கள். படிப்பிப்பவர் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் படிப்பவர்கள் சாதாரணமானவர்கள் ஆனால் சாதாரணமானவர் கள் தான் சாதாரண சொரூபத்தில் வரும் தந்தையை தெரிந்திருக்கிறார்கள். பாப்தாதாவும் வி.ஐ.பி ஆகி வருவதில்லை அல்லவா, சாதாரண ரூபத்தில் வருகிறார். ஏதாவது பிரதம மந்திரி அல்லது ஏதாவது ராஜாவின் உடலில் வருவதில்லை. எனவே தெரிந்து கொள்ளும் சாதாரணமானவர்கள் தான் பாக்கியத்தை அடைகிறார்கள். அதிர்ஷ்டசாலிகள் இல்லையா, எவ்வளவு பாக்கியம் கிடைத்திருக்கிறது -பல கோடி மடங்கு என்று கூறுவது கூட ஒன்றும் இல்லை.

இப்பொழுது கூட பாருங்கள் வந்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது இல்லையா. இவ்வளவு பெரிய ஹால் எப்படி உதவும் என்று முதலில் யோசித்தீர்கள் ஆனால் இப்பொழுது எப்படி இருக்கிறது? இதை விட பெரிய ஹால் வேண்டுமென்று இருக்கிறதல்லவா. எவ்வளவு பெரியதாக உருவாக்கிக் கொண்டே சொல்வீர்களோ அவ்வளவு சின்னதாகிக் கொண்டே இருக்கும் என்பது பிராமணர்களுக்கான வரதானம். யார் யார் வந்திருக்கிறீர்களோ, வந்திருக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறோம் ஆனால் பாவனை உள்ளவர்களாக மட்டும் இல்லாமல் ஞானியாக வும் ஆகுங்கள். இயற்கையைத் தெரிந்த ஞானியாகவும் ஆகுங்கள் ஞானம் ஆத்மாவினுடையது மட்டுமில்லை ஆத்மா, பரமாத்மா மற்றும் இயற்கை அதில் டிராமாவும் வந்து விடுகிறது. மூன்றின் ஞானமும் தேவை. எங்கு சென்று கொண்டிருக்கிறோம். மேலும் நமக்காக என்ன கவனம்

வேண்டும். ஒருவேளை இந்த இயற்கையின் ஞானம் இல்லையென்றால் ஞானம் நிறைந்தவர் இல்லை என்று தான் கூற முடியும். இடத்தின், நபரின், ஸ்திதியின் (மனநிலையின்) இந்த மூன்றின் ஞானத்தை வையுங்கள். பாவனை நிறைந்தவர்களாக மட்டும் ஆகாதீர்கள். செல்லவே வேண்டும். கொண்டு வரவே வேண்டும். ஞான சொரூடம் என்றாலே தொலைநோக்கு உடையவர். மூன்று காலத்தையும் தெரிந்தவர், ஒருவேளை மூன்றின் ஞானம் இருக்கிறது என்றால் வெற்றி கிடைத்து விடும். ஒருவேளை யாராவது தன்னுடைய தவறின் காரணமாக அடிக்கடி நோயுற்றவராக ஆகிறார் என்றால் அவரை ஞானி யோகி என்று பாப்தாதா கூறுவது இல்லை. ஞானத்தின் அர்த்தமே அறிவு அதாவது தெளிவாக புரிந்துகொள்வது. தன்னுடைய மன நிலையையும் புரிந்து கொள்வது. தன்னுடைய உடலையும் புரிந்து கொள்வது. ஆத்மாவின் நிலை, உடலின் நிலை. வாயுமண்டலத்தின் அனைத்து ஞானமும் புத்தியில் இருக்கிறது என்றால் ஞானம் நிறைந்தவர் ஆவார். எனவே பாவனையில் மட்டும் திருப்தி ஆகி விடாதீர்கள். வரக்கூடியது. கொண்டு வருவது இரண்டின் ஞானம் நிறைந்தவராக இருக்க வேண்டும். என்ன நடக்கிறது அதை இனிமையான டிராமாபடி தான் நடக்கிறது என்று கூறுவோம். குழப்பத்தில் வர மாட்டீர்கள் இல்லையா -ஆடாத நிலை ஆனால் வரக்கூடிய நாட்களுக்காக கவனம் வேண்டும். குழந்தைகள் எவ்வளவு கஷ்டத்தை சகித்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று பாப்தாதாவும் தெரிந்திருக்கிறார். இதற்காக வாழ்த்துக்கள் கொடுத்து விட்டோம். எந்த ஆத்மாவிற்கு என்ன ஆஸ்தியோ அது அவருக்கு கிடைத்தே தான் ஆக வேண்டும். ஆஸ்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர் ஒருவரும் இருக்க முடியாது. இங்கு நேர் எதிரில் அமர்ந்திருந்தாலும், தன்னுடைய இடங்களில் மன்மனாபவ நிலையில் இருந்தாலும் ஆஸ்தி அவசியம் கிடைக்க வேண்டும். இரட்டை ஞானம் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். அரைகுறையாக அல்ல. நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து அன்பு மற்றும் யோக சக்தியின் சமநிலையின் அனுபவி ஆத்மாக்களுக்கு, பாவனை மற்றும் ஞான சொரூப ஆத்மாக் களுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற லட்சியத்தை நிறைவேற்றக் கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் நெருக்கத்தை அனுபவம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஆடாத அசையாத

நிலையில் இருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

(குறிப்பு: இன்று மதுபன் வந்திருக்கும் கர்நாடகா ஜோனைச் சேர்ந்த இரண்டு வயதான சகோதரர்கள் ஒரு மணி நேரத்திற்குள் சரீரம் விட்டனர். எனவே பாப்தாதா விசேஷமாக அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்).

**தாதிகளுடன் சந்திப்பு:** குழுவின் சக்தியை அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல தைரியத்தோடு ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்து வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். பொறுப்பில் இருக்கும் ஆத்மாக்கள் உங்களுடைய தைரியம் அநேக ஆத்மாக்களின் தைரியத்தை அதிகரிக்கிறது. ஒவ்வொரு சூழ்நிலையின் அனுபவி ஆகி விட்டீர்கள். ஒன்றும் புதிதல்ல என்று தோன்றுகிறது இல்லையா. பாப்தாதா திரைச்சீலையின் பின்னிருந்து சக்தி கொடுக்கிறார் ஆனால் மேடையில் பாத்திரத்தை ஏற்று செய்பவர்கள் நீங்கள் ஆத்மாக்கள். நன்றாக உங்களுடைய பாத்திரத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா எப்பொழுதும் மகாவீரர்கள் அடங்கிய பொறுப்பில் இருக்கும் குழுவிற்கு அமிர்தவேளையில் முதன்முதலில் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும் கூறுகிறார். மேலும் அதுவே சக்தியென்று கூறினாலும், அன்பு என்று கூறினாலும், முழு நாளுக்கான போஷாக்கு ஆகி விடுகிறது. அந்த மாதிரி அனுபவம் ஆகிறது இல்லையா? அனைவரும் நன்றாக இருக்கிறீர்கள் தானே. தைரியம் மூலமாக வெற்றி கண்டிப்பாக இருக்கிறது.

**பார்ட்டிகளுடன் பாப்தாதாவின் சந்திப்பு: அனைவரும் தன்னை ராஜயோகி என்று அனுபவம் செய்கிறீர்களா?**

யோகி எப்பொழுதும் தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து இருப்பார். அப்படியானால் உங்கள் அனைவரின் ஆசனம் எது? ஆசனம் என்று எதைக் கூற முடியும்? விதவிதமான ஸ்திதிகள் (நிலைகள்) தான் விதவிதமான ஆசனங்கள். எப்பொழுதாவது தன்னுடைய சுவமானத்தின் நிலையில் நிலைத்து விட்டீர்கள் என்றால் சுவமானத்தின் நிலை ஆசனம் ஆகி விடுகிறது. எப்பொழுதாவது தந்தையின் மனசிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் நிலையில் நிலைத்திருக்கிறீர்கள் என்றால் மனசிம்மாசன நிலை ஆசனம் ஆகி விடுகிறது. எப்படி ஆசனத்தில்

ஒருமுகமாக ஆடாமல் அசையாமல் அமர்ந்து விடுகிறார்களோ அதைப் போல் நீங்களும் விதவிதமான நிலையின் ஆசனத்தில் நிலைத்து விடுகிறீர்கள். அப்படி பலவிதமான நிலை நன்றாக இருக்கிறது இல்லையா. ஒரே பொருள் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் ஆனால் அதை ஒருவேளை உபயோகித்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் அதுவும் நன்றாக இருக்காது. பல வகைகள் நன்றாக இருக்கும். அப்படி பாப்தாதா விதவிதமான நிலைகளின் விதவிதமான ஆசனங்களை கொடுத்திருக்கிறார். முழு நாளிலும் விதவிதமான நிலைகளை அனுபவம் செய்யுங்கள். எப்பொழுதாவது பரிஸ்தா நிலையின், எப்பொழுதாவது லைட் ஹவுஸ் நிலையின், எப்பொழுதாவது அன்பு சொரூப நிலை அதாவது லவ் லீன் நிலையின் ஆசனத்தில் அமர்ந்து விடுங்கள். மேலும் அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். நினைத்தீர்கள் பரிஸ்தா என்று அடுத்த வினாடி அந்த நிலையில் நிலைத்து விட்டீர்கள் என்ற அளவிற்கு அனுபவி ஆகி விடுங்கள். கஷ்டப்பட வேண்டியது இருக்கிறது என்பது வேண்டாம். நான் ஒரு பரிஸ்தா என்று நினைத்துக் கொண்டேயிருங்கள். மேலும் அடிக்கடி கீழே வாருங்கள். அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? நினைத்தீர்கள் மேலும் அனுபவம் ஆனது எப்படி ஸ்தூலமாக எங்கு விரும்புவீர்களோ அங்கு போய் அமர்ந்து விடுவீர்கள் இல்லையா. நினைத்தீர்கள் மேலும் அமர்ந்தீர்கள் என்று தானே இருந்தது. மற்றபடி அமரட்டுமா? அல்லது வேண்டாமா? என்று யுத்தம் செய்ய வேண்டியதாக இருந்ததா. அப்படி இந்த மனம் புத்தியின் அமருதலும் இந்த மாதிரி சுலபமானதாக இருக்க வேண்டும். எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்து விட வேண்டும். இதைத்தான் ராஜயோகி ராஜா என்று கூறுவது. இது ராஜா ஆகுவதற்கான யுகம் ஆகும். ராஜா என்ன செய்கிறார்? கட்டளை இடுகிறார் இல்லையா? ராஜ யோகி அதேபோல் மனம் புத்திக்கு கட்டளை இடட்டும். மேலும் அதே போல் அனுபவம் செய்யட்டும் ஆனால் மனம் புத்திக்கு பரிஸ்தா ஆகுக என்று கட்டளை இடுகிறீர்கள் மேலும் அது கீழே வந்து விடுகிறது என்று இருக்க வேண்டாம். அப்படியானால் ராஜாவின் கட்டளையை ஏற்றுக் கொள்ளவில்லை இல்லையா. யாருடைய கட்டளைகளை பிரஜைகள் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர் தான் ராஜா. இல்லை என்றால் தகுதியான ராஜா என்று கூற முடியாது. பெயரளவிற்குத்தான் ராஜா காரியத்திற்கான ராஜா இல்லையென்று கூறப்படும். அப்படியானால் நீங்கள் யார்? உண்மையான ராஜாவா? கர்மேந்திரியங்கள் உங்களுடைய கட்டளைகளை ஏற்று நடக்கின்றனவா?

மனம், புத்தி, சம்ஸ்காரம் அனைத்தும் உங்களுடைய கட்டளைக்குள் இருக்கின்றனவா? கோபப்படக்கூடாது என்று விரும்புகிறேன் ஆனால் அந்த மாதிரி ஆகி விடுகிறது என்ற நிலை இல்லையே? தேக அபிமானம் உள்ளவராக ஆக விரும்பவில்லை ஆனால் அப்படி ஆகி விடுகிறது என்றால் அவரை சக்தி நிறைந்த ராஜா என்று கூறுவோமா அல்லது பலகீனமானவராகவா? எனவே எப்பொழுதும் நான் ராஜயோகி ஆத்மா, ராஜ்ய அதிகாரி ஆத்மாவாக இருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். அதிகாரம் செயல்படுகிறதா? எந்தவொரு கர்மேந்திரியமும் ஏமாற்றம் கொடுக்க வேண்டாம். கட்டளைப்படி நடப்பவர்களாக இருக்கட்டும். நல்லது. ஓம் சாந்தி.

**வரதானம்: என்னுடையது என்ற குறையை நீக்கி நிரம்பிய நிலையை அனுபவம் செய்யும் முழுமையான டிரஸ்டி ஆகுக!**

ஒருவேளை தந்தையின் ஸ்ரீமத்படி பொறுப்பில் இருப்பவராகி இருக்கிறீர்கள் என்றால் என்னுடைய குடும்பமும் இல்லை, என்னுடைய சென்டரும் இல்லை. குடும்பத்தில் இருக்கிறீர்கள் என்றாலும் டிரஸ்டியாக இருங்கள். சென்டரில் இருக்கிறீர்கள் என்றாலும் தந்தையினுடைய சென்டர் அன்றி என்னுடையது அல்ல என்றிருக்கட்டும். எனவே எப்பொழுதும் சிவபாபாவின் பண்டாரி. பிரம்மாபாபாவின் பண்டாரா -இந்த நினைவின் மூலமாக நிரம்பிய நிலையை அனுபவம் செய்யுங்கள். என்னுடையது என்பதைக் கொண்டு வந்தீர்கள் என்றால் பண்டாரா மற்றும் பண்டாரியில் வளர்ச்சி இருக்காது. எந்தவொரு காரியத்திலும் ஒருவேளை குறை இருக்கிறது என்றால் இதற்கு காரணம் தந்தையினுடையது என்பதற்குப் பதிலாக என்னுடையது என்ற அசுத்தம் கலந்திருக்கிறது.

**சுலோகன்: தந்தைக்குச் சமமாக வேண்டும் என்றால் புரிந்து கொள்வது, விரும்புவது, செய்வது மூன்றையும் சமம் செய்ய வேண்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.04.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மாபாபா மேல் இருக்கும் அன்பின் அடையாளம் அவ்யக்த பரிஷ்தா ஆவது!

இன்று எல்லைக்கப்பாற்பட்ட தந்தை தன்னுடைய முதல் உயர்ந்த நேரடி படைப்பை பார்த்துக் கொண்டிருக்கிறார். பிராமண ஆத்மாக்கள் நேரடி சிவவம்ச பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் ஆவீர்கள். பிராமண ஆத்மாக்கள் ஆதி தேவ்'ன் ஆதி அதாவது முதல் படைப்பு ஆவீர்கள். எனவே கல்ப மரத்தில் பிராமணர்கள் அஸ்திவாரத்தில் அதாவது வேர்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள். உங்களுடைய இடத்தை பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? மரத்தில் முதல் படைப்பாகிய நீங்கள் விதையின் அருகில் வேர்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனவே நேரடி படைப்பாவீர்கள். மற்ற ஆத்மாக்கள் நேரடி தாய், தந்தையின் (சிவ தந்தை மற்றும் பிரம்மா தாய்) நேரடி பரமாத்மா படைப்பு இல்லை. நேரடி படைப்பாகிய உங்களுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. நேரடியாக விதையோடு சம்மந்தம் இருக்கிறது. அவர்களுக்கு மறைமுகமான சம்மந்தம் மற்றும் உங்களுடையது நேர்முகமானது. நீங்கள் அனைவரும் ஆன்மீக போதையில், நாங்கள் பரமாத்மாவின் குழந்தைகள் என்று கூறுவீர்கள். எந்தவொரு தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக்கள் வந்தாலும் அவர்கள் அனைவரும் தன்னை கிருஸ்துவன், பௌத்தி, இஸ்லாமியன் என்று கூறுவார்கள். நேரடியான சிவ வம்சம் மற்றும் ஆதி தேவ் பிரம்மாவின் படைப்பு என்று கூற மாட்டார்கள். கிருஸ்துவ வம்சம் கிருஸ்துவர்கள் தர்மத்தந்தை கிருஸ்துவின் கிருஸ்தவர் கள் என்று கூறுவார்கள். இதைத் தான் தெரிந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தர்மத்தந்தையின் வம்சம் ஆவார்கள். மேலும் நீங்கள் பரமாத்மாவின் வம்சம் என்று கூறுவீர்கள். அப்படி தர்ம தலைவர் (தந்தை) மற்றும் பரம தந்தை இருவருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. இரட்டை வெளிநாட்டினர் என்ன நினைக்கிறீர்கள் -பரம தந்தையினுடைவர்களா? அல்லது தர்மத்தந்தையினுடையவர்களா? பரம தந்தையின் உடையவர்கள் என்றால் நேரடி படைப்பாக வேண்டும். அப்படி நேரடியான

மற்றும் மறைமுகமானதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. போதையிலும் வித்தியாசம் இருக்கிறது என்றால் பிராப்தியிலும் வித்தியாசம் இருக்கிறது. எனவே பக்தி மார்க்கத்திலும் மறைமுகமாக தன்னுடைய இஷ்ட தேவி தேவதைகள் மூலமாக தந்தையை நினைவு செய்கிறார்கள். ஒருவேளை யாராவது சிவ பக்தர்களாக இருந்தாலும் கூட அவர்களும் சிவனையும் சங்கரையும் ஒன்று என்று நினைத்து நினைவு செய்கிறார்கள். அப்படியானால் மறைமுகமாக ஆகி விட்டது அல்லவா. இராமருக்கும் இவர் இராமேஸ்வரர் என்று தெரிந்திருக்கிறார்கள். ஆனாலும் இராமரைத் தான் நினைவு செய்கிறார். கள். அப்படி பக்தி மறைமுகமாக ஆகி விட்டது இல்லையா? ஏனென்றால் பக்த ஆத்மாக்களின் படைப்பும் பின்னால் வருபவர்கள் தான். நீங்கள் நேரடியான பரமாத்மா வம்ச ஆத்மாக்கள் ஆவீர்கள். துவாபர யுகத்தில் பக்தியும் செய்கிறீர்கள், அப்படி தெரியாமல் இருந்தும் கூட முதலில் சிவ தந்தைக்கு பக்தி செய்கிறீர்கள். பிரம்மா, விஷ்ணு சங்கர் இந்த சூட்சும தேவதைகளின் பூஜை பின்னால் ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் இல்லை. அப்படி மற்ற ஆத்மாக்களின் படைப்பும் கூட மறைமுகமான ஆத்மாக் களின் மூலமாக இருக்கிறது. மேலும் பக்தியில் கூட மறைமுகமான பக்தி தான் இருக்கிறது. நீங்கள் மறைமுகமான பக்தர்கள் இல்லை, நேர்முகமான பக்தர்கள். அதாவது சிவனின் பூஜையைத் தான் ஆரம்பம் செய்கிறீர்கள். அப்படி பிராப்தியில் கூட பாருங்கள். நேரடி ஆத்மாக்கள் உங்களுக்கு அதாவது நேர்முகமான படைப்பிற்கு அனேக ஜென்மங்களுக்காக ஆஸ்தி ஜீவன் முக்தியின் (சொர்க்கம்), கிடைக்கிறது. மற்ற ஆத்மாக்களுக்கு ஜீவன் முக்தியின் ஆஸ்தி இவ்வளவு காலத்திற்கு கிடைப்பதில்லை. உங்களுடைய. ஜீவன்முக்தி அரை கல்பம் இருக்கிறது. மேலும் மற்ற ஆத்மாக்களுக்கு ஜீவன்முக்தி மற்றும் ஜீவன் பந்தனம் இரண்டுமே அரை கல்பத்திற்குள் கிடைக்கிறது. அதுவும் கூட துவாபர யுகத்தில் ஆரம்பத்தில் வரும் ஆத்மாக்களுக்கு கிடைக்கிறது. பின்னால் வரும் ஆத்மாக்களுக்கு குறைந்த ஜென்மங்களிலேயே இரண்டுமே பிராப்தி ஆகிறது. மேலும் இதில் என்ன விசேஷம் என்றால் உங்களுடைய ஜீவன்முக்தி அதாவது தங்கம், வெள்ளி காலம் படைப்புச் சக்கரத்தின் தங்கம் மற்றும் வெள்ளி யுகத்தில் பிராப்தி ஆகிறது. உங்களுடைய பொன்னான காலம் என்றால் யுகமும் பொன்னானது தான். இயற்கையும் பொன்னாது தான். சிருஷ்டி சக்கரத்தை நன்றாக தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? மற்ற ஆத்மாக்களுக்கு எப்பொழுது பொன்னான காலமோ,

யுகம் செம்பு அல்லது இரும்பிற்கானதாக இருக்கும், செம்பு யுகத்தில் அவர்களுடைய பொன்னான காலம் மற்றும் உங்களுக்கு பொன்னான யுகத்தில் பொன்னான காலம் ஆகும். எவ்வளவு வித்தியாசம் ஆகி விட்டது. நீங்கள் சதோ பிரதானமாக (மிக உயர்ந்த நிலை) இருக்கிறீர்கள் என்றால் இயற்கையும் சதோபிரதானமாக இருக்கிறது அவர்கள் ரஜோபிரதான இயற்கையில் சதோபிரதான நிலையை அனுபவம் செய்கிறார்கள். பாருங்கள் நேர்முகமான மற்றும் மறைமுகமான படைப்பிற்குள் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அப்படியானால் நான் பரமாத்மாவின் நேர்முகமான படைப்பு என்ற போதை அவ்வளவு இருக்கிறதா? எப்பொழுதும் போதை இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது போதை ஏறுகிறதா? சதவிகிதத்தில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. சில நேரம் நூறு சதவிகிதம் இருக்கிறதென்றால் சில நேரம் ஐம்பது சதவிகிதம் ஆனால் என்ன இருக்க வேண்டும்? எப்பொழுதும் இருக்க வேண்டும் இல்லையா? அப்படி வேண்டும்? வேண்டும்? என்று எது வரை கூறுவீர்கள்? எப்பொழுதும் போதை இருக்கிறது என்று உடனேயே கூறுவதில்லை, இருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். எனவே யாரிடம் இந்த வேண்டும்? என்ற வார்த்தை இல்லாமல் ஆகி விடுகிறதோ அது தான் சம்பூர்ணம் ஆவது என்பதாகும். அனைவரின் வாயிலிருந்தும் இது வெளி வரட்டும். அதற்காக எத்தனை வருடங்கள் வேண்டும்? தந்தையும் கூட கேட்கிறார். எத்தனை வருடங்கள் வேண்டும். பத்து வேண்டுமா? அல்லது அதை விட அதிகமாக மற்றும் குறைவாக வேண்டுமா? ஏனென்றால் தபஸ்யா வருடம் ஆரம்பம் செய்தீர்கள். இப்பொழுதோ முடிவின் நேரம் வந்து விட்டது ஆனால் எப்பொழுது ஆரம்பம் செய்தீர்களோ அப்பொழுது அனைவரின் எண்ணம் என்னவாக இருந்தது? சம்பன்னம் ஆகி விடுவோம். இதைத்தான் நினைத்தீர்கள் இல்லையா. வருடமோ முடிந்து விட்டது ஆனால் நீங்கள் சம்பன்னம் ஆகி விட்டீர்களா? அல்லது ஆக வேண்டுமா? இன்னும் வருடங்கள் வேண்டுமா? ஒரு நொடியில் முக்தி. ஜீவன் முக்தியின் ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சவால் விடுகிறீர்கள் அல்லது 25-வருடங்களில் ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள் என்றா கூறுகிறீர்கள்? அப்படியானால் 12-மாதங்களில் எத்தனை விநாடிகள், எத்தனை நாட்கள் இருக்கின்றன? அப்படி பார்க்கும்போது அனைவரும் சம்பன்னம் ஆகி விட வேண்டுமா? அல்லது இப்பொழுது இன்னும் நேரம் வேண்டுமா? என்ன ரிசல்ட்டாக இருக்கிறது? எத்தனை வருடங்கள் வேண்டுமோ அதைச் சொல்லிவிடுங்கள்

இல்லையென்றால் இரண்டாவது வருடமும் முடிந்து விடும். பின்பு இன்னும் நேரம் வேண்டும் என்ற பாட்டையே பாடுவீர்கள் இந்த வேண்டும். வேண்டும். என்ற பாடல் எவ்வளவு நேரத்திற்கானது? பாடலுக்கான நேரம் மூன்று அல்லது ஐந்து நிமிடங்கள் இருக்கிறது இல்லையா? தபஸ்யா வருடத்தில் உறுதியான எண்ணத்தை உருவாக்கினீர்களா? அல்லது எண்ணத்தை (மட்டும்) உருவாக்கினீர்களா? உறுதியின் அடையாளம் வெற்றி அப்படி யானால் இந்த வருடத்தில் இன்னும் சக்தி நிறைந்த தபஸ்யா வேண்டும் இல்லையா? அல்லது சேவை செய்ய வேண்டுமா? இரண்டும் செய்ய முடியாதா? உங்களுடைய பட்டம் கர்மயோகி என்பது தானே? வெறும் யோகியா? பார்க்கப்போனாலும் எதில் சுய மற்றும் அனைவரின் சேவை அடங்கியிருக்கிறதோ அதைத்தான் சேவை என்று கூற முடியும். மற்றவர் களுக்கு சேவை செய்து கொண்டு தன்னுடைய சேவையில் அலட்சியமான வராக ஆகி விடுவது என்றால் உண்மையில் அதை சரியான சேவை என்று கூற முடியாது. சேவையின் பிராப்தி கிடைப்பது தான் உண்மையான சேவையின் விளக்கம் ஆகும். சேவை என்றால் பிராப்தி அதாவது பலன் சேவை செய்யுங்கள் பழத்தை (பலன்) சாப்பிடுங்கள். ஒருவேளை தன் பக்கம் அலட்சியமாகி விட்டீர்களென்றால் அந்த சேவை கடினமானது, அதிக செலவானது. களைப்படையச் செய்வது ஆனால் பிரத்யக்ஷ பலனாக வெற்றி இல்லை. முதலில் தன்னுடைய வெற்றி கூடவே மற்றவர்களின் வெற்றியும் அனுபவம் ஆகட்டும். இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். தனக்கு இருக்கிறது, மேலும் மற்றவர்க்கு இல்லையென்றால் கூட அதுவும் சரியான சேவை இல்லை. மேலும் மற்றவர்களுக்கு இருக்கிறது, தனக்கு இல்லை யென்றால் கூட அதுவும் சரியான சேவை இல்லை. சேவையில், சேவை மற்றும் யோகா இரண்டுமே சேர்ந்தே ஏன் இருப்பதில்லை? இதற்கு என்ன காரணம்? இதற்கு என்ன காரணம் என்றால் சேவையின் பிளான் (திட்டம்) -மிகவும் நன்றாக உருவாக்குகிறீர்கள் ஆனால் பிளைன் (தெளிவான) புத்தியாகி பிளான் உருவாக்குவதில்லை. பிளைன் புத்தி என்றால் சேவை செய்து கொண்டிருக்கும்போது பொறுப்புணர்வு மற்றும் பணிவுத்தன்மையைத் தவிர வேறெதுவும் புத்தியை தொட வேண்டாம். படைப்பு காரியத்தில் பணிவு நிலை குறைவாகி விடுகிறது. எனவே படைப்பு காரியம் எவ்வளவு வெற்றி அடைய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவ்வளவு வெற்றி அடைவதில்லை. சுப்பாவனை மற்றும் சுப விருப்பங்களின் விதையே பொறுப்புணர்வு மற்றும் பணிவுத்தன்மைதான். எல்லைக்குட்பட்ட பெயர்,

புகழ் இல்லை ஆனால் பணிவு எனவே சேவையின் திட்டம் தீட்டுவதற்கு முன்பு பிளைன் புத்தி உருவாக்குவது மிக அவசியம் ஆகும். இல்லையென்றால் பிளைன் புத்திக்கு பதிலாக ஒருவேளை புத்தியில் வேறு சரியில்லாத உள்நோக்கத்தின் குப்பை கலந்து விடுகிறது என்றால் எந்த சேவையின் திட்டம் உருவாக்குகிறீர்களோ அதில் இரத்தினங்களின் கூடவே கற்களும் பதிக்கப்பட்டு விடுகின்றன. இரத்தினமும், கல்லும் கலந்து விடுகிறது. ஒன்பது இரத்தினங்கள் பதிக்கிறீர்கள் என்றால் ஒரு கல் கலந்து விடுகிறீர்களா என்ன? எந்த ஒரு பொருளிலும் ஒன்பது உண்மையானது இருக்கிறது மேலும் ஒரு போலியானது இருக்கிறது என்றால் அதனுடைய மதிப்பு என்னவாக இருக்கும். மேலும் வாங்குபவரின் மனதில் இந்த ஒன்பது இரத்தினங்களும் உண்மையானதா? அல்லது கலப்படம் செய்யப்பட்டதா? என்ற எண்ணமும் வரும். எனவே சேவையின் திட்டத்துடன் அதன் கூடவே பிளைன் புத்தியின் கவனத்தை முதலில் வையுங்கள். ஒருவேளை பிளைன் புத்தி இருக்கிறது மேலும் சேவையின் திட்டம் அவ்வளவு பெரியதாக இல்லையென்றாலும் பிளைன் புத்தி உடையவருக்கு நஷ்டம் இல்லை, சுமை இல்லை. சேவையின் லாபம் குறைவு ஆனால் நஷ்டம் என்று கூற மாட்டோம் இல்லையா? கலப்படமான புத்தியிலோ நஷ்டம் இருக்கிறது எனவே இந்த வருடத்தையும் தபஸ்யாவின் அதன் வருடமாக செய்வீர்களா? சேவையிலோ கீழே வந்து விடுகிறோம் என்று கூறுகிறீர்கள், அப்படியானால் என்ன செய்வீர்கள்? தபஸ்யா மட்டும் செய்வீர்களா?

எப்பொழுது சுயம் தான் சம்பன்னம் ஆவீர்களோ அப்பொழுது உலக மாற்ற காரியமும் கூட முடிவடையும். உங்கள் அனைவரின் சம்பன்னத்தின் குறையின் காரணமாக உலக மாற்ற காரியம் முடிவடையாமல் நின்று கொண்டிருக்கிறது. இயற்கை தாசியாகி உங்களுடைய சேவைக்காக காத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் எப்பொழுது பிராமண ஆத்மாக்கள் பிராமணணிலிருந்து பரிஷ்தா மேலும் பரிஷ்தாவிலிருந்து தேவதை ஆகிறார்களோ அப்போது தான் நாங்கள் (இயற்கை) மனம் நிறைந்த அன்புடன் சேவை செய்வோம் என்று கூறுகிறது. ஏனென்றால் பரிஷ்தா ஆகாமல் தேவதை ஆக முடியாது. பிராமணணிலிருந்து பரிஸ்தா ஆகவே தான் வேண்டும். மேலும் பரிஷ்தாவின் அர்த்தமே யாருக்கு பழைய உலகம். பழைய சம்ஸ்காரம், பழைய உடலின் உணர்விலிருந்து

எந்தவொரு கவர்ச்சியின் உறவு இல்லையோ, அவர் தான். மூன்றிலும் தேர்ச்சி பெற வேண்டும். மூன்றிலிருந்தும் முக்தி அடைய வேண்டும். பார்த்தாலும் டிராமாவில் முதலில் முக்தியின் ஆஸ்தி பின்பு ஜீவன் முக்தியினுடையது தான். முக்திதாமம் செல்லாமல் ஜீவன் முக்தியில் நீங்கள் போக முடியாது. அப்படி பரிஷ்தா என்றால் முக்தி அடைந்த நிலை மேலும் முக்தியான பரிஷ்தாவிலிருந்து ஜீவன்முகத் தேவதா ஆவீர்கள். அப்படி எத்தனை சதவீதம் பரிஷ்தா ஆகி விட்டீர்கள்? அல்லது பிராமணன் ஆனதிலேயே குஷியோடு இருக்கிறீர்களா?

பரிஷ்தா ஆவது என்றால் அவ்யக்த பரிஷ்தா சொரூபத்தில் இருக்கும் பிரம்மாபாபாவின் மேல் அன்பு இருக்கிறது என்பதாகும். யாருக்கு பரிஸ்தா நிலையின் மேல் அன்பு இல்லையென்றால் பிரம்மாபாபா தன் மேல் அன்பு இருக்கிறது என்று ஏற்றுக்கொள்வதில்லை. அன்பின் அடையாளமே சமம் ஆவது தான். பிரம்மாபாபா பரிஸ்தாவாக இருக்கிறார். இல்லையா? பரிஸ்தாவாகி குழந்தைகள் உங்களை பரிஷ்தாவாக ஆக்குவதற்காக பரிஷ்தாக்களின் உலகில் தங்கியிருக்கிறார். வாய் மூலமாக மட்டும் தந்தை மேல் இருக்கும் அன்பை எப்படி வர்ணிப்பது என்று கூறாதீர்கள் ஆனால் பிரம்மாபாபா வாயினால் கூறுவதினால் மட்டும் குஷி அடைவ தில்லை. அவருக்கு சமமாக ஆவதில் தான் குஷியடைகிறார். சொல்லக் கூடியவர்கள் பக்தர்கள் கூட மிக அதிகமாக இருக்கிறார்கள். அன்பின் பாடல்கள் எத்தனை பாடுகிறார்கள். அவ்வளவு அன்பு நிறைந்த பாடல் பாடுகிறார்கள். அவைகள் சிலரை சிரிக்கவும் வைத்து விடுகிறது என்றால் சிலரை அழவும் வைத்து விடுகிறது. அவர்கள் அனைவரும் சொல்லக் கூடியவர்கள் ஆனால் நீங்கள் ஆகுபவர்கள். ஒருவேளை சொல்லிக் கொண்டு மட்டும் இருக்கிறீர்கள் என்றால் இப்பொழுது பக்தியின் அம்சம் இன்னும் இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். ஞான சொரூப ஆத்மா. யோக சொரூப ஆத்மா என்று கூற முடியாது ஆனால் பக்த யோகி ஆத்மா என்று கூறுவோம். இப்பொழுது என்ன செய்வீர்கள்? ஏதாவது புதுமை செய்வீர்களா? அல்லது எப்படி இந்த வருடம் செய்தீர்களோ அதையே செய்வீர்களா? யார் செய்பவர்களோ மற்றும் ஆகுபவர்களோ அவர்களை மட்டும் தான் பாப்தாதா சந்திட்டார், சொல்லிக் கொண்டிருப்பவரை மட்டும் சந்திக்க மாட்டார் என்ற அந்த மாதிரியான நேரமும் வரும்.. இப்பொழுதோ அனைவரையும், பாவனை நிறைந்தவர்களும் வாருங்கள். ஞானி யோகி

ஆத்மாக்களும் வாருங்கள் என்று அனுமதித்து விடுகிறார்கள் ஆனால் நேரம் மாறியே தான் ஆகும். எனவே உங்கள் மேல் இன்னும் பத்து மடங்கு கோடிட்டு மாற்றி காண்பியுங்கள். பின்பு பாப்தாதாவிடம் இது எப்படி நடக்கும்? ஏன் அப்படி செய்தார்கள்? என்று முறையீடு செய்யாதீர்கள். நீங்கள் முயற்சியில் கண்டிப்பாக இருக்கவில்லை என்றால் தந்தையும் கண்டிப்பாக இருக்க வேண்டியது இருக்கும். இப்பொழுதோ தந்தையின் அன்பு சொரூபத்தில் சென்று கொண்டிருக்கிறீர்கள், வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் சத்குருவின் ரூபம் தர்மராஜ் இப்பொழுது இல்லை. சத்குருவின் கட்டளையை தலை மேல் வைத்துக் கொள்வார்கள் என்று மகிமை செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதோ பாப்தாதா இனிமையான குழந்தைகளே! அன்பான குழந்தைகளே! என்று கூறி நடத்திக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அன்பு இருக்கிறது. சந்திக்க வேண்டும் என்ற தாகம் இருக்கிறது என்றால் சமம் ஆகி சந்தியுங்கள். மிகப் பெரிய வித்தியாசத்தோடு சந்தித்தீர்கள். சமம் ஆகி சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி இருக்கிறது ஆனால் இந்த மகிழ்ச்சி வேறு விதமானது. தந்தையை சந்தித்தோம். திருஷ்டியை வாங்கினோம் என்று அங்கு போனவுடன் ஏதாவது பலஹீனம் வந்தது, சக்தி கிடைத்தது மேலும் காரியத்தில் கொண்டு வந்தோம். ஓரிரு முறை வெற்றி அடைந்தோம், பின்பு பலஹீனம் ஆகி விட்டோம். அப்படியானால் இது ஒருவிதமான சந்திப்பு ஆனால் உண்மையான அன்பு. உண்மையான சந்திப்பு இதை விட மிக உயர்வானது, மிக மிக பிரியமானது அதை அனுபவம் செய்யுங்கள். புரிந்ததா.

சத்குருவின் ஏதாவதொரு கட்டளையை ஏற்று நடக்கவில்லையென்றால், சத்குரு என்பதை காண்பிப்பார் இல்லையா? தந்தையின் எதிரிலோ குழந்தைகளின் பெருமிதம் செல்லமாக இருப்பது எல்லாம் செல்லுபடியாகும். ஒருவேளை தந்தையிடம் உண்மையான அன்பு இருக்கிறது என்றால் இந்த வருடத்தில் பரிஷ்தா சமம் ஆகி காண்பியுங்கள். இப்பொழுது இவ்வளவு அதிகமானவர்கள் சந்திக்க வந்திருக்கிறீர்கள். மிகவும் நல்லது ஆனால் இன்னும் நல்லதிலும் நல்லதாக செய்யுங்கள். அன்பு வைப்பது மற்றும் அன்பின் பிரதிபலனை செயலில் காண்பிப்பது இரண்டிற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. அனைவரும் அன்பு செய்பவர்கள் தான். ஒருவேளை அன்பு இல்லை என்றால் இவ்வளவு பேர் ஏன் வருகிறார்கள்? ஆனால் செய்வது மற்றும

நடந்து கொள்வது இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அன்பு செய்பவர்கள் அனேகர் இருக்கிறார்கள் ஆனால் அன்பின் பிரதிபலனை செயலில் காண்பிப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். அப்படி பிரதிபலனை செயலில் காண்பிப்பவர்களா நீங்கள்? செயலில் காண்பிப்பவர்கள் வேண்டும் வேண்டும் என்று கூற மாட்டார்கள். வாயினால் மட்டும் இல்லை நடைமுறையிலும் கூடத்தான். தபஸ்யாவின் சார்ட் மூலமாகவும் தனக்கு மதிப்பெண்கள், சான்றிதழ் கொடுப்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள், ஆனால் அனைவரின் திருப்தியின் சான்றிதழ் வெகு சிலருக்குத்தான் கிடைக்கிறது. சார்ட் எழுதுபவர்களும் அதிகம் இருக்கிறார்கள். தனக்கு மிக நல்ல சான்றிதழ் கொடுப்பவர்களும் அதிகமாக தென்படுகிறார்கள். அதிகமில்லை ஆனால் கொஞ்சம் தான். இரண்டாம் எண்ணில் வருபவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள் ஆனால் அனைவரின் வாயிலிருந்து ஆம் இவர் நம்பர் ஒன் என்று வெளி வரட்டும். அனைவரின் இதயத்திலிருந்தும் இந்த ஆசீர்வாதங்களின் சான்றிதழ் கிடைக்கட்டும். இதைத் தான் நம்பர் ஒன் என்று கூறுவது. சில குழந்தைகள் கூறுகிறார்கள் நாங்களும் சரியாக இருக்கிறோம் ஆனால் சில ஆத்மாக்களுக்கு எங்களுடன் கடுமையான கணக்கு இருக்கிறது. அதனால் எவ்வளவுதான் அவரைத் திருப்திபடுத்தினாலும் அவர் திருப்தி ஆவதில்லை. பாப்தாதா இதற்காக. ஒருவேளை அந்த மாதிரி ஏதாவது கடுமையான கணக்கு வழக்குகள் இருந்தாலும் கூட குறைந்தது 95-சதவிகிதம் சான்றிதழ் கிடைக்க வேண்டும். 5-சதவிகிதத்தின் கடுமையான கணக்கு வழக்கு இருக்கிறது என்றால் அது தள்ளுபடி செய்யப்படும் ஆனால் 95-சதவிகிதம் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்கள் கொடுக்கட்டும் அனைவரிடமும் திருப்தியானவர்கள் யார் இருக்கிறார்? என்று சிலர் கூறுகிறார்கள். அந்த மாதிரி ஒருவர் கூட தென்படவில்லையே. இவரிடமே கோபம் இருக்கிறது என்றால் நம் மூலம் நடந்தால் அது என்ன பெரிய விஷயம் என்று பெரியவர்களுக்காக சிலர் நினைக்கிறார்கள் ஆனால் அவர்கள் மேல் 95-சதவிகிதம் உள்ளப்பூர்வமாக திருப்தியாக இருக்கிறார்கள். பெரியவர்களின் விஷயம் வேறு. பெரியவர்களுக்கு நீதிபதியாக வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது இருவரில் ஒருவரின் விஷயத்தை ஆம் என்று கூறினால் சம்மந்தப்பட்ட அவர் மிகவும் நல்லது என்று கூறுவார். மேலும் யாருடையதை இல்லை என்று கூறினால் இப்படி இருப்பதும் நல்லது இல்லை என்று சம்மந்தப்பட்ட அவர் கூறுவார். அப்படி நீதிபதி ஒருவருக்கு

ஆம் என்று கூறுவாரா? அல்லது இருவருக்குமா? எனவே அது வேறு விஷயம் ஆனால் உள்ளத்தின் தபஸ்யா, உள்ளத்தின் அன்பு, பொறுப்புணர்வு. நல்லுணர்வு, இந்த சான்றிதழ்களை எதிரில் கொண்டு வாருங்கள். பெரியவர்களிடமே திருப்தி இல்லை என்றால் நாங்கள் தேர்ச்சியடைந்து விடுவோம் என்று நினைக்காதீர்கள். 95-சதவிகிதம் ஒருவேளை திருப்தியாக இருக்கிறார்கள் என்றால் நம்பர் கிடைத்து விடும். புரிந்ததா. நல்லது.

நாலாபுறமும் உள்ள ஆதி பிதாவின் ஆதி படைப்பு, நேரடி படைப்பான உயர்ந்த ஆத்மாக்களுக்கு அனைத்து ஜீவன் முக்தியின் ஆஸ்தியை அனேக ஜென்மங்கள் பிராப்தி செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு அனைத்து பிராமணணிலிருந்து பரிஷ்தா, பரிஷ்தாவிலிருந்து தேவ ஆத்மா ஆகக் கூடிய அதிகாரி ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் பிளைன் புத்தி ஆகி சேவையின் பிளானில் வெற்றியை அடையக் கூடிய ஆத்மாக்களுக்கு, தந்தையுடன் உண்மையான அன்பு, உண்மை யான ஸ்நேகத்தை காண்பிக்கக்கூடிய அனைத்து நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தாதிகளுடன் சந்திப்பு:** அனைவரும் நன்றாக சேவை செய்தீர்கள் இல்லையா? அனைவரும் ஒன்றாக சேர்ந்து குழுவை அலங்கரிக்கும் சேவையை நன்றாக செய்திருக்கிறீர்கள். குழுவை அலங்கரிக்கும் சேவை எவ்வளவு பிரியமானது. எப்படி நகை வியாபாரி ஒவ்வொரு இரத்தினத்தையும் கறையற்றதாக ஆக்குகிறார் மற்றும் விலைமதிப்புள்ளதாக ஆக்குகிறார் இல்லையா? உங்கள் அனைவரினுடைய சேவையும் இதே போல் தான். என்னென்ன சின்ன சின்ன கறைகள் இருக்கின்றனவோ, அவைகளை சுத்தப்படுத்துவது, முழுமையாக்குவது, தந்தைக்குச் சமமாக ஆக்குவது, அந்த மாதிரி இந்த சேவையில் மகிழ்ச்சி இருக்கிறது இல்லையா? களைப்படைந்து விடவில்லையே. களைப்படைந்து விடுவது இல்லை தானே? உங்கள் அனைவரின் களைப்பற்ற சொரூபம் மூலமாக மற்றவர்களுக்கும் தூண்டுதல் கிடைக்கிறது. ஏனென்றால் சாகாரத்தில் நிமித்தமாக இருக்கும் சாகார ரூபம் நீங்களே தானே. அவ்யக்த நிலையில் அவ்யக்தத்தின் இலாபம் எடுப்பதில் அனைவரும் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள், ஆனால் சாகார ரூபத்தில் நீங்கள் தான் இருக்கிறீர்கள்.

எனவே பொறுப்பில் இருப்பவர்களின் பிரபாவம் அனைவர்களின் மேலும் ஏற்படுகிறது. நல்ல பங்கு கிடைத்திருக்கிறது இல்லையா. உங்களுக்குள் சந்தித்து ஒன்றாகி குழுவை உறுதியாக்கி முன்னேற வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய குழுவும் அனைவரின் எதிரில் ஒரு எடுத்துக் காட்டு நல்லது அனைவரும் நன்றாக இருக்கிறீர்களா? இராஜ்யம் உருவாகிக் கொண்டிருக்கிறது இல்லையா, நல்லது பெரியவர்களின் சக்தி தானாகவே காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறது. சொல்வதற்கும் அவசியம் இருப்பதில்லை. ஞானிகளாகவோ ஆகி விட்டீர்கள். இப்பொழுது யோகியாகி சக்தி கொடுப்பதற்கான தேவை இப்பொழுது இருக்கிறது. மற்றபடி ஞானியாவது மிகவும் சுலபம். நல்லது

**வரதானம்: தன்னுடைய அனைத்து பொறுப்புகளின் சுமையை தந்தையிடம் கொடுத்து விட்டு தான் லேசாக இருக்கும், பொறுப்பிலிருப்பவராகவும், பணிவானவராகவும் ஆகுக!**

எப்பொழுது தன்னுடைய பொறுப்பு என்று நினைத்து விடுகிறீர்களோ. அப்பொழுது தலை பாரம் ஆகி விடுகிறது. பொறுப்பு தந்தையினுடையது நான் ஒரு கருவியாக மட்டும் தான் இருக்கிறேன் என்ற இந்த நினைவு லேசாக்கி விடுகிறது. எனவே தன்னுடைய முயற்சியின் சுமை, சேவைகளின் சுமை, உறவு நெருக்கத்தில் வரும் சுமை அனைத்து சிறிய பெரிய சுமைகளை தந்தைக்குக் கொடுத்து விட்டு லேசாகி விடுங்கள். ஒரு வேளை லேசாகக்கூட, நான் செய்ய வேண்டியதாக இருக்கிறது, நான் தான் செய்ய முடியும் என்ற எண்ணம் வந்தது என்றால் இந்த நான் என்ற தன்மை பாரமாக்கி விடுகிறது. மே பணிவும் இருப்பதில்லை. நான் ஒரு கருவியாக பொறுப்பிலிருக்கிறேன் என்று புரிந்து கொள்வதால் பணிவு என்ற குணம் தானாக வந்து விடுகிறது.

**சுலோகன்: யாருடைய வாழ்க்கையின் அலங்காரமே திருப்தியோ அவர் தான் திருப்திமணி ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.04.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியத்தின் கூடவே பண்புகளையும் தாரணை செய்யுங்கள்!

இன்றைய நாட்களில் அனேக குழந்தைகளிடமிருந்து இந்த மாதிரி செய்தி வருகிறது. மாற்றுவோம் என்று பாப்தாதா கூறினார். இப்பொழுது பார்ப்போம் பாப்தாதா என்ன செய்கிறார் என்று தந்தைக்கும் சவால் விடுகிறார்கள். என்ன சொன்னாரோ அதை செய்கிறாரா? அல்லது செய்யவில்லையா? என்று பார்க்கலாம். தந்தை கூறினார் என்றால் தந்தை செய்கிறார் அல்லது செய்யவில்லை அது தந்தையின் பொறுப்பு. அல்லது சொன்னவர் என்றால் செய்தே தான் ஆக வேண்டும் என்று சவால் விடுவதா? தந்தைக்கு என்ன செய்ய வேண்டுமோ அதை யாராவது சொல்வதனால் செய்யவும் மாட்டார் மேலும் யாராவது சொல்லவில்லை என்பதனால் செய்யாமல் இருக்கவும் மாட்டார் ஆனால் தந்தைக்கும் கூட சவால் விடும் கடிதங்கள் அதிகமாக வருகின்றன. யார் ஆசிரியைகள் மேல் கோபமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இது நல்ல வாய்ப்பு கிடைத்து விட்டது. நன்மையே செய்யும் தந்தை ஒவ்வொரு காரியத்திலும் என்ன செய்தாலும் அதில் நன்மையே தான் இருக்கும். இதை மறந்து விடுகிறார்கள். பின்பு நீங்கள் இதை அவசியம் செய்ய வேண்டும் என்று கடிதம் எழுதுகிறார்கள். தந்தைக்கும் அனேகர் ஆசிரியர் ஆகி விட்டார்கள். தந்தை அந்த மாதிரியான தன்னுடைய குழந்தைகளுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார் ஆனால் எப்பொழுதும் பண்புடன் நடந்து கொண்டு தன்னை முன்னேற்றிக் கொண்டே செல்லுங்கள். பண்பு நிறைந்த வார்த்தை, பண்பு நிறைந்த நடத்தை இதில் தான் வெற்றி கிடைக்கிறது. ஒருவேளை சத்தியம் இருக்கிறது ஆனால் பண்பு இல்லையென்றால் வெற்றி கிடைப்பதில்லை. வெற்றி கிடைக்கவில்லை என்றால் மேலும் ஆவேசத்தில் வந்து விடுகிறார்கள் மற்றும் ஆவேசத்தில் யாரும் உணர்வில் இருப்பதில்லை என்ன செய்கிறோம். என்ன சொல்கிறோம் என்ற உணர்வு கூட இருப்பதில்லை மேலும் எப்பொழுது உணர்வு இல்லையென்றால உணர்வற்றவராக ஆக்குவதற்கு மாயாவிற்கு வாய்ப்பு

கிடைத்து விடுகிறது. எனவே ஒருவேளை ஏதாவது அசத்தியமான விஷயங்களை பார்த்தீர்கள் என்றாலும், கேட்டீர்கள் என்றாலும். அசத்திய சூழ்நிலையைப் பரப்பாதீர்கள். இது பாவச்செயல் இல்லையா? பாவச்செயலை பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை என்று சிலர் கூறுகிறார்கள் மேலும் அவரே அசத்திய விஷயத்தை சூழ்நிலையில் பரப்புவது இது எந்த மாதிரியான செயல்? இதை என்ன என்று கூறுவது? அவர்கள் புண்ணியம் செய்கிறார்களா? அசத்தியத்தைப் பார்த்தீர்கள் மற்றும் கேட்டீர்கள். இருந்தாலும் குடும்பம் தானே. லௌகீக குடும்பத்தில் கூட ஒருவேளை அந்த மாதிரியான விஷயம் பார்க்கப்பட்டாலும், கேட்கப்பட்டாலும் என்ன செய்வார்கள்? பரப்பப்படுமா? செய்தித்தாளில் போடப்படுமா? அல்லது காதால் கேட்டேன் மற்றும் உள்ளத்தில் அடக்கி விட்டேன் என்று இருக்குமா? அப்படி இந்த வீணான விஷயங்களை பரப்புவது கூட பாவத்தின் அம்சம் ஆகும். இந்த மாதிரி நிகழும் சின்ன சின்ன பாவங்கள் தன்னுடைய பறக்கும் கலையின் அனுபவத்தைப் பெற விடாது. ஏனென்றால் பாவம் மிகவும் சுமையானது. ஒருவேளை பாவத்தின் அம்சம் கூட இருக்கிறது என்றால் எப்படி மேலே பறப்பார்? சுமையை சுமந்து கொண்டு மேலே பறக்க முடியுமா? இன்றைய நாட்களில் மிகுந்த கௌரவமான (ராயல்) பேச்சை பரப்புகிறார்கள். இந்த புதிய செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று கூறுகிறார்கள். நீங்கள் மிகவும் முட்டாள் உங்களுக்கு எந்த செய்தியைப் பற்றியும் தெரிவதில்லை. என்னைப் பாருங்கள் எவ்வளவு ஞானம் நிறைந்தவனாக இருக்கிறேன் எவ்வளவு செய்தியைத் தெரிந்து வைத்திருக்கிறேன் என்றும் கூறுகிறார்கள். அந்த மாதிரி செய்தியைச் (காது கொடுத்துக்) கேட்பவர்கள் மீதும் பாவம் ஏற்படுகிறது மேலும் சொல்பவர்கள் மீதோ இன்னும் அதிகமாக பாவம் ஏற்படுகிறது. எனவே தபஸ்யா வருடத்தில் இந்த சூட்சும பாவங்களின் சுமைக்கு முடிவு கட்டுங்கள். அப்பொழுது தான் சமம் ஆக முடியும் இல்லையென்றால் நாம் தான் எந்த தவறும் செய்யவில்லையே என்று நினைக்கிறார்கள் ஆனால் இந்த மாதிரியான ராயல் தவறுகள் அதிகமாகச் செய்கிறார்கள். இதை ராயல் என்று நினைக்கிறார்கள். நான் கேள்விப்பட்டதை அப்படியே சொல்லி விட்டேன் இதில் என்னுடைய உள்நோக்கம் எதுவும் இருக்கவில்லை என்று நினைக்கிறார்கள் ஆனால் முடிவு என்னவாகி விடுகிறது? பரப்புவது என்றால் சுமையின் உரிமையாளர் ஆவது அப்படி இன்றைய நாட்களில் இதுவும் ஒரு பழக்கமாகி விட்டது. ஒருவர் இன்னொருவரை சந்திக்கிறார்

என்றால் முதலில் செய்தி சொல்வார்கள். புதுப்புது செய்திகள் யாருக்கும் சொல்லாதீர்கள், உங்களுக்கு மட்டும் தான் சொல்கிறேன் என்றும் கூறுவார்கள் ஆனால் தந்தையோ கேட்டு விட்டார் இல்லையா? பதிவேட்டில் கறை ஏற்பட்டு விட்டதா அல்லது இல்லையா? எனவே இந்த விஷயத்தில் கூட மிகவும் கவனம் கொடுங்கள். பாப்தாதாவுக்கு தெரிவதேயில்லை என்று மட்டும் நினைக்காதீர்கள். தாதிகளோ ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன தெரியும்? என்றும் நினைக்கிறார்கள். தாதிகளுக்கு தெரிவதில்லை ஆனால் உங்களுடைய பதிவேட்டில் தானாகவே குறிக்கப்பட்டு விடுகிறது. எப்பொழுது இன்றைய கம்ப்யூட்டரில் அனைத்து விஷயங்களும் நிரம்பி விடுகிறது என்றால் உங்களுடைய பதிவேட்டில் தானாகவே இந்த விஷயங்கள் பதியாதா என்ன? தாதிகள் பார்ப்பதில்லை. மற்றவர்களும் பார்ப்பதில்லை ஆனால் பதிவேடு பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே அந்த மாதிரி மாற்றத்தைக் கொண்டு வாருங்கள் ஏனென்றால் தபஸ்யா சக்தி நிறைந்ததாக இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்று பாப்தாதா ரிஸல்ட்டில் பார்த்தார். எப்பொழுதும் வெற்றி அடைவதில் தடையாக என்ன இருக்கிறது? இந்த தடைகளை தன்னிடம் இருந்து முழுவதும் இல்லாமல் செய்யுங்கள் மற்றவர் மாறினால் நான் மாறுவேன், இவரை மாற்றினீர்கள் என்றால் நான் மாறுவேன். இந்த மாதிரியான வார்த்தைகள் சரியானவையா? பெரியவர்கள் முன்பு விஷயத்தை வைப்பதற்கு அனைவருக்கும் உரிமை இருக்கிறது ஆனால் சத்தியம் மற்றும் மரியாதைப் பூர்வமாக வைக்க வேண்டும்.

இப்பொழுது எவ்வளவு வீட்டுப்பாடம் கிடைத்திருக்கிறது. இந்த வருடம் பதிவேட்டில் அந்த மாதிரி சூட்சும கறை கூட ஏற்பட வேண்டாம். அப்பொழுது தான் தந்தை மேல் அன்பு இருக்கிறது என்று தந்தை கூறுவார், இல்லையென்றால் தந்தையையும் குஷிப்படுத்துகிறார் தன்னையும் குஷிப்படுத்துகிறார் என்று நினைத்துக் கொள்வார். வீணான செய்திகள் முற்றிலும் அகன்று விட வேண்டும். இந்தவொரு பழக்கம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மேலும் இது தான் தபஸ்யாவின் தடையாக இருக்கிறது. இந்த பழக்கத்தை என்னுள் இல்லாமல் செய்யும் பொறுப்பை எடுத்துக் கொள்வேன் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும் புரிந்ததா? மற்றவர்கள் செய்தார்கள் அதனால் நானும் செய்து விட்டேன். அவர் நான்கு

வார்த்தைகள் சொன்னார் என்றால் நானும் ஒரு வார்த்தை கூறி விட்டேன் என்ன இது சரியா? இந்த பழக்கத்தை முடிவு கட்டுவதற்கு துணிவு இருக்கிறதா? இந்த புதிய நாகரீகம் (பேஷன்) பிராமண குலத்தில் இப்பொழுது வந்திருக்கிறது ஆனால் இது தவறான பேஷன். எனவே இதை முடிவு கட்டும் விழா கொண்டாடுவதற்கு துணிச்சல் இருக்கிறதா? முயற்சி செய்வோம் என்று யார் கூறுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பாருங்கள் இந்த சென்டரில் இந்த இடத்தில் இந்த சூழ்நிலை இருக்கிறது என்று பாப்தாதா சென்டரின் பெயரை அறிவித்து விடுவார். இது விருப்பமா? அல்லது பயப்படுவீர்களா? நம்முடைய பெயர் வர வேண்டாம் என்ற இந்த பயம் நல்லது தான். கை உயர்த்தி இருக்கிறீர்கள். பின்பு தர்மராஜ் புரியிலும் இந்த கை உயரும், தந்தையின் உடனிருக்கும் தர்மராஜரும் அனைவரும் கை உயர்த்தினார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார் ஆனால் இலாபம் யாருக்கு? எவ்வளவு விதிப்படி இருக்கிறதோ அவ்வளவு இலாபம். யார் விதிப்படி நடக்கிறார்களோ அவர்களுக்கு உள்ளுக்குள்ளேயே சுய இலாபம் ஏற்படுகிறது. வெளியில் இருந்து யாராவது இலாபம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் உள்ளே இருக்கும் லேசான தன்மை உள்ளுக்குள்ளேயே மேலும் குஷி ஏற்படுகிறது அல்லவா? அந்த இலாபம் மிகவும் அதிகமானது யாராவது நன்றாக சொன்னாலும் சொல்லாவிட்டாலும் தனக்குள்ளே நன்றாக ஆவதின் சக்தி வந்து விடுகிறது. புரிந்ததா? வருடத்தின் ரிஸல்ட்டைக் கேட்டீர்கள், இப்பொழுது என்ன செய்வீர்கள்? சுயமாற்றம் செய்ய வேண்டும். மற்றவர்கள் மாறுவது பற்றிய கவலையை வைக்காதீர்கள். இதை நற்சிந்தனையாளர் என்று கூற முடியாது. நாங்கள் கவலைப்படுவது இல்லை. ஏனென்றால் நல்லதை நினைப்பவர்கள் இல்லையா? என்றும் கூறுகிறார்கள் ஆனால் தன்னை மறந்து மற்றவர்களைப் பற்றி நல்ல எண்ணங்கள் வைப்பது இதை நற்சிந்தனையாளர் என்று கூற முடியாது. அனைவரின் கூடவே முதலில் தானும் இருக்க வேண்டும். தான் இல்லாமல் மற்றவர்களின் நற்சிந்தனையாளர் ஆனீர்கள் என்றால் பிரபாவம் ஏற்படாது. வெற்றி கிடைக்காது. முதலில் தான் மற்றும் தன்னுடன் சேர்த்து அனைவரும் இது தான் குழந்தைகள் மேல் இருக்கும் பாப்தாதாவின் உளப்பூர்வமான அன்பாகும். அன்பு செய்பவரிடம் எந்த குறை இருப்பதையும் பார்க்க முடியாது. இது தான் அன்பின் அடையாளமாகும் எந்த குறையும் கேட்க முடியாது. அவரையும் முழுமையானவராக ஆக்குவார் இது தான்

உள்ளத்தின் உண்மையான அன்பாகும். பாப்தாதா பரந்த உள்ளம் உடையவர். எனவே உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது. ஒவ்வொரு குழந்தையையும் சமமாக மற்றும் உயர்வாகப் பார்க்க விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையையும் வெற்றி மூர்த்தியாகப் பார்க்க விரும்புகிறார். கடினமாக உழைக்கும் மூர்த்தியாக அல்ல, வெற்றி மூர்த்தியாகப் பார்க்க விரும்புகிறார். நல்லது. இன்றோ பெரிய டோஸ் கிடைத்திருக்கிறது. ஜீரணிப்பதற்கு சக்தி இருக்கிறது இல்லையா? இன்று பாப்தாதா இது என்ன கூறி விட்டார் என்று பயப்படவில்லையே, நல்லது.

நாலாபுறமும் உள்ள எப்பொழுதும் நிச்சயபுத்தி உடைய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் நிச்சயம் மற்றும் வெற்றியை சமநிலைக்கு கொண்டு வரும் தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயமரியாதையிலிருந்து சுயமாற்றம் மற்றும் அனைவரின் மாற்றத்திற்காக நன்மை ஏற்படுத்தும் பாவனையை சரியாக வைக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாகி அன்பின் எடுத்துக்காட்டைக் கொடுக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சரியான ஆன்மீக உரையாடல் செய்து விஷயங்களை முடிவு கட்டும் ஆத்மாக்களுக்கு, பரந்த உள்ளம் உடைய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தாதிகளுடன் சந்திப்பு:** தடையின்றி சீசன் முடிவடைந்ததா? நீங்கள் சாட்சியாக இருந்து விதவிதமான காட்சிகளைப் பார்ப்பதில் மகிழ்ச்சி வருகிறது இல்லையா? நாடகம் என்றாலே விதவிதமான காட்சிகள் இருக்க வேண்டும். ஒருவேளை விதவிதமானவை இல்லை என்றால் நாடகத்தை ரசிக்க முடியாது. எனவே ஒவ்வொரு விஷயத்திலும் நல்லது நல்லது என்று சொல்லி நல்லதாக ஆகிக் கொண்டே இருந்தால் ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை அவசியம் அடங்கி இருக்கிறது. முழு விஷயமும் தீயதாக இருந்தால் கூட ஒன்றிரண்டு நல்லது அவசியம் இருக்கும். அந்த நல்லது தான் பாடம் கற்பிக்கிறது. மற்றவர்களின் ஆவேசம் இருக்கிறது, மற்றவர்கள் ஆவேசத்தில் வருகிறார்கள் ஆனால் அதில் நீங்கள் என்ன பாடம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்? எவ்வளவு அவர் ஆவேசம் செய்கிறாரோ அவ்வளவு அந்த விஷயம் உங்களுக்கு பொறுமையைக் கற்றுக் கொடுக்கிறது சகிப்புத்தன்மையைக் கற்றுக் கொடுக்கிறது. எனவே தான் என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அது

நல்லது. மேலும் என்ன நடக்குமோ அது இன்னும் நல்லதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். நல்லதை எடுத்துக் கொள்வதற்கு புத்தி மட்டும் வேண்டும் அவ்வளவு தான். தீயவைகளைப் பார்க்காமல் நல்லவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் தான் வரிசையின் எண் கிடைக்கிறது இல்லையா? நல்லது.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு: தன்னை ஞான சூரியனின் குழந்தை மாஸ்டர் ஞான சூரியன் என்று நினைக்கிறீர்களா?**

இருளை நீக்குவது. வெளிச்சத்தைக் கொடுப்பது. நீங்கள் அனைவரும் அஞ்ஞான இருளை நீக்குபவர்கள் தான் இல்லையா? தானே எப்பொழுதாவது இருளில் வந்து விடவில்லையே? தன்னுள் இருள் நீங்கி விட்டது. தானும் ஆத்மா ஜோதி அதாவது பிரகாச சொரூபமாக இருக்கிறீர்கள் மேலும் காரியமும் பிரகாசத்தைப் பரப்புகிறது. இருளில் மனித ஆத்மாக்கள் இங்கே போகலாமா, அங்கே போகலாமா, இந்த வழி சரியா? இந்த இடம் சரியா? அல்லது இல்லையா? என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் வெளிச்சத்தில் ஒரு நொடியில் சென்றடைய வேண்டிய இடம் தென்பட்டு விடுகிறது. அப்படி அனைவருக்கும் வெளிச்சம் மூலமாக அவர்களுடைய சொந்த இருப்பிடத்தை காண்பிப்பதற்கு பொறுப்பானவர்கள் நீங்கள். அலைந்து கொண்டிருக்கும் ஆதமாக்களுக்கு நிரந்தர இடம் கொடுப்பவர்கள். நீங்கள் ஒருவேளை யாராவது வெகு காலமாக அலைந்து கொண்டிருந்து பின்பு அவருக்கு யார் மூலமாவது நிரந்தர இருப்பிடம் கிடைத்து விடுகிறது என்றால் இருப்பிடத்தைக் காண்பிப்பவருக்கு எவ்வளவு ஆசீர்வாதம் கொடுப்பார். அதே போல் நீங்களும் எப்பொழுது ஆத்மாக்களுக்கு வெளிச்சம் மூலமாக இருப்பிடத்தைக் காண்பிக்கிறீர்களோ, காண்பிப்பதின் அனுபவம் செய்விக்கிறீர்களோ அப்பொழுது அந்த ஆத்மாக்னிடம் இருந்து எவ்வளவு ஆசீர்வாதம் வெளிப்படுகிறது மேலும் யாருக்கு ஆசீர்வாதம் கிடைக்கிறதோ அவர் எப்பொழுதும் முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பார். அவருக்கு ஒவ்வொரு விஷயத்திலும் முன்னேற்றம் இருக்கும் ஏனென்றால் ஆசிர்வாதங்கள் லிப்ட்'ன் வேலை செய்கிறது. எப்பொழுதும் சுலபமாக முன்னேறிக் கொண்டேயிருப்பார்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்காது. எனவே பக்தி மார்க்கத்தில் கூட எப்பொழுது அலைந்து அலைந்து களைப்படைந்து விடுகிறார்களோ அப்பொழுது ஏதாவது ஒரு ஆசீர்வாதம் கொடுங்கள் கருணை

செய்யுங்கள் என்று தந்தையிடம் கூறுகிறார்கள். அப்படி அனேக ஆத்மாக்களின் ஆசீர்வாதங்கள் ஆத்மாக்கள் உங்களுக்கு எளிதாக முன்னேறும் கலையை அனுபவம் செய்விக்கும். ஒன்று தந்தையின் ஆசீர்வாதங்கள் மற்றும் மற்ற ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களும் கிடைக்கிறது. பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வளமாக இருங்கள், முன்னேறிக் கொண்டே இருங்கள் என்று ஆசீர்வாதங்கள் கொடுக்கிறார்கள் ஆனால் ஆசீர்வாதங்களைப் பெறுபவர்கள் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். தந்தை அனைவருக்கும் கொடுக்கிறார் ஆனால் எடுப்பவர் தகுதியானவர் என்றால் அனுபவம் செய்கிறார் மேலும் தகுதியில்லை என்றால் வள்ளல் கொடுக்கிறார் ஆனால் எடுப்பவர் எடுப்பதில்லை. தகுதியாவதற்கான ஆதாரம் தூய்மையான புத்தி. தூய்மையான மனம் மற்றும் தூய்மையான புத்தி. யாருக்கு தூய்மையான புத்தி மற்றும் தூய்மையான மனம் இருக்கிறதோ அவர் ஒவ்வொரு நேரமும் தந்தையின் ஆத்மாக்களின் ஆசீர்வாதங்களை இயல்பாகவே அனுபவம் செய்கிறார். லௌகீக உலகத்தில் கூட ஒருவேளை யாராவது அந்த மாதிரி தேவையான நேரத்தில் யாருக்காவது ஆதரவு கொடுக்கிறார்கள். கஷ்டமான நேரத்தில் ஆதாரம் ஆகி விடுகிறார்கள் என்றால் வாயிலிருந்து ஆசீர்வாதங்கள் வெளிப்படுகிறது இல்லையா! நீங்கள் நீடூழி வாழ்க நீங்கள் எப்பொழுதும் வாழ்க்கையில் வெற்றி அடைபவராக இருங்கள் என்ற இந்த ஆசீர்வாதங்கள் அவசியம் வெளிப்படுகிறது. எனவே உங்களை நீங்களே கேளுங்கள். தந்தையின் ஆசீர்வாதங்கள் ஆத்மாக்களின் ஆசீர்வாதங்கள் அனுபவம் ஆகிறதா அல்லது மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கிறதா? ஆசீர்வாதங்களை எடுத்துக் கொண்டே செல்லுங்கள் மேலும் எப்பொழுதும் நிரம்பி இருங்கள். ஏனென்றால், யாரிடம் இருந்து ஆசீர்வாதங்கள் கிடைக்கிறதோ அவர் எப்பொழுதும் நிரம்பி இருப்பார். தன்னை ஒருபொழுதும் காலியாக அனுபவம் செய்ய மாட்டார்கள். அப்படியானால் அனைவரும் நிரம்பியிருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது காலியாகி விடுகிறீர்களா? இங்கிருந்து நிரம்பிச் செல்லுங்கள் பின்பு அங்கு சென்றவுடன் காலியாகி விடுகிறீர்கள் என்றிருக்கக்கூடாது. 63-ஜென்மம் காலியானது, இப்பொழுது இந்த நேரம் நிரம்பிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே நிரம்பும் நேரத்தில் காலியாக வேண்டாம். நிரப்பிக் கொண்டே இருங்கள். நிரம்பியதில் நிரப்புங்கள்.

காலியாகி நிரப்பாதீர்கள். இப்பொழுது காலியாவதற்கான நேரம் முடிந்து விட்டது.

அனைவரும் குஷியாக இருக்கிறீர்களா? எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் எவ்வளவு தான் பெரிய தடை வந்தாலும் ஆனால் குஷி இல்லாமல் ஆக வேண்டாம். /தன்னுடையது இல்லாமல் ஆகக்கூடாது இல்லையா? வருபவர் செல்வாரா? அல்லது இருப்பவரும் சென்று விடுவாரா? அப்படி குஷி நம்முடைய பொருள். குஷி தந்தையின் ஆஸ்தி அல்லவா! தடை வருகிறது மற்றும் சென்று விடுகிறது. எப்பொழுதாவது தடை வந்தது என்றால் சென்று விடுவதற்காக வந்திருக்கிறது என்று நினையுங்கள். யாராவது வீட்டிற்கு விருந்தினராக வருகிறார் என்றால் விருந்தினராக வந்தவர் அனைத்து பொருட்களையும் எடுத்துச் சென்று விடுவார் என்று அப்படி நடப்பதில்லை. கவனம் வைப்போம் இல்லையா? எனவே தடை வந்தது மற்றும் சென்று விடும் ஆனால் அந்த தடை உங்களுடைய குஷியை உடன் எடுத்துச் செல்ல வேண்டாம். எப்பொழுதும் குஷி உங்கள் கூடவே இருக்கட்டும். தந்தை இருக்கிறார் என்றால் குஷி இருக்கிறது. ஒருவேளை பாவம் இருக்கிறது என்றால் குஷி இல்லை. தந்தை இருக்கிறார் என்றால் குஷி இருக்கிறது. எனவே எப்பொழுதும் குஷியாக இருங்கள். நான் குஷியாக இருப்பவன் என்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளட்டும். குஷியாக இருப்பவரைப் பார்த்து மற்றவரும் குஷியாகி விடுவார். அழுபவர்களைப் பார்க்கிறார்கள் என்றால் மற்றவர்களுக்கும் அழுகை வந்து விடும். நல்லது.

**வரதானம்: ஏதாவது ஒன்றில் வசமாகியிருக்கும் ஆத்மாக்களுக்கு இரக்கம் என்ற குளிர்ந்த நீர் மூலமாக வரதானம் கொடுக்கும் வரதானி மூர்த்தி ஆகுக!**

ஒருவேளை யாராவது கோப அக்னியில் எரிந்து கொண்டே உங்கள் எதிரில் வந்தால் அவரை வசமாகியிருப்பவர் என்று புரிந்து தன்னுடைய இரக்கம் என்ற குளிர்ந்த நீர் மூலமாக வரதானம் கொடுங்கள். எண்ணையை தெளிக்காதீர்கள். ஒருவேளை யார் மேலேயாவது கோபத்தின் பாவனை வைத்தால் கூட எண்ணை தெளிப்பதாகும். எனவே வரதானி மூர்த்தி ஆகி சகித்துக் கொள்ளும் சக்தியின் வரதானம் கொடுங்கள். எப்பொழுது சைத்தன்யத்தில் இந்த சம்ஸ்காரத்தை நீங்கள்

நிரப்புவீர்களோ அப்போது ஜட சிலைகள் மூலமாக வரதானி மூர்த்தி ஆவீர்கள்.

**சுலோகன்: பரமாத்மாவின் சந்திப்பு கொண்டாட்டத்திலேயே இருந்தீர்கள் என்றால் மாயாவின் குழப்பம், பிரச்சனை முடிவடைந்து விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 24.09.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியம் மற்றும் அசத்தியத்தின் முக்கியமான வித்தியாசம்!

இன்று பரந்த உள்ளம் உடைய தந்தை தன்னுடைய அனைத்து குழந்தைகளின் உள்ளத்தின் ஆசையை நிறைவேற்றுவதற்காகவும் சந்திப்பை ஏற்படுத்துவதற்காகவும் வந்திருக்கிறார். அனைத்து குழந்தைகளும் அவ்யக்த ரூபத்திலோ சந்திப்பை செய்து கொண்டே தான் இருக்கிறார்கள். இருந்தாலும் வியக்த உடல் மூலமாக அவ்யக்த சந்திப்பை செய்ய வேண்டும் என்ற நல்லாசையும் வைக்கிறார்கள். எனவே தந்தைக்கும் அவ்யக்கத்திலிருந்து வியக்தத்தில் வர வேண்டியதாக இருக்கிறது. பாப்தாதா இந்த நேரம் நாலாபுறமும் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் மனதால் மதுபனில் இருக்கிறார்கள். நீங்கள் எதிரில் இருக்கிறீர்கள். மேலும் அனேக குழந்தைகள் அவ்யக்த ரூபத்தில் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவும் அனைத்துக் குழந்தைகளின் அன்பிற்குப் பிரதிபலன் கொடுத்துக் கொண்டிருக்கிறார். எங்கிருந்தாலும் நினைவு மூலமாக தந்தையின் அருகில் இதயத்தில் இருக்கிறார்கள். அனைவரின் அன்பின் இசையை பாப்தாதா கேட்டுக் கொண்டிருக்கிறார். குழந்தைகளுக்கும் தந்தையைத் தவிர நினைவு செய்பவர்கள் வேறு யாரும் இல்லை என்று தந்தை தெரிந்திருக்கிறார். மேலும் தந்தைக்குக் கூட குழந்தைகளைத் தவிர வேறு யாரும் இல்லை. நான் பாபாவினுடையவன் மற்றும் பாபா என்னுடையவர் என்ற நினைவிலேயே எப்பொழுதும் இருக்கிறார்கள். இந்த நினைவு சுலபமானது தான் மற்றும் சக்தி நிறைந்ததும் கூடத்தான். அந்த மாதிரி நினைவு சொருபமான அன்பான குழந்தை, நினைவில் என்ன கனவில் கூட ஒருபொழுதும் சக்தியில்லாதவராக ஆக முடியாது. சக்தியில்லாமல் ஆவது என்றால் என்னுடைய பாபா என்பதற்குப் பதிலாக வேறு ஏதோ என்னுடையது என்பது வந்து விட்டது. என்னுடைய ஒரே ஒரு பாபா இது தான் சந்திப்பைச் செய்வது. ஒருவேளை ஒருவர்க்கு பதில் இன்னொருவர்

என்னுடையவர் ஆகிறார் என்றால் என்னவாகி விடுகிறது? முதலில் கூறியது சந்திப்பு மற்றும் இது குழப்பம்.

அனேக குழந்தைகள், பாபாவோ என்னுடையவர் தான் ஆனால் வேறு ஓரிருவரையும் என்னுடையவராக ஆக்க வேண்டியதாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். வேறொன்றும் இல்லை. ஒரு ஆதாரம் மட்டும் வேண்டியதாக இருக்கிறது என்றும் கூறுகிறார்கள் ஆனால் உங்களுடைய உறுதிமொழி என்ன? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதா? அல்லது ஒரு தந்தை இன்னும் ஒருவர் என்பதா? வெகுளியாகி விடுகிறார்கள். அந்த ஒருவரில் அனேகர் உள்ளடங்கி இருக்கிறார்கள், எனவே குழப்பமாகி விடுகிறது. இந்த பழைய உலகத்தில் கூட அந்த மாதிரி அனேக பொம்மைகள் கிடைக்கின்றன, அவற்றில் வெளியிலிருந்து பார்ப்பதற்கு ஒன்று தென்படுகிறது ஆனால் ஒன்றிற்குள் ஒன்றாக அனேகம் இருக்கும். ஒன்றைத் திறந்தீர்கள் என்றால் இன்னொன்று வெளிப்படும், இன்னொன்றைத் திறந்தீர்கள் என்றால் மற்றொன்று வெளிப்படும். இதுவும் அந்த மாதிரியான பொம்மை தான். பார்ப்பதற்கு ஒன்று தான் தென்படும்; ஆனால் உள்ளே அனேகம் அடங்கியிருக்கும். மேலும் எப்பொழுது குழப்பத்தில் சென்று விடுகிறார்கள் என்றால் சந்திப்பைச் செய்வது எப்படி ஏற்பட முடியும். குழப்பத்திலேயே இருப்பார்களா? அல்லது சந்திப்பைக் கொண்டாடுவார்களா? இரண்டை மட்டும் நினைக்காதீர்கள். எண்ணத்தில் கூட ஒருவேளை ஒரு தந்தையைத் தவிர வேறு ஏதோவதொரு ஆத்மாவை மற்றும் இயற்கையின் சாதனத்தை என்னுடைய ஆதரவு என்று ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் ஈஸ்வரிய இயந்திரம் தானாகவே மிக வேகமாக காரியம் செய்கிறது. எந்த நொடி அந்தியரை ஆதரவாக ஆக்கினீர்களோ அந்த நொடியே மனம் புத்தி தந்தையிடமிருந்து விலகி விடுகிறது. சத்திய தந்தையிடமிருந்து விலகிய காரணத்தினால் புத்தி அசத்தியத்தைச் சத்தியம் என்றும் தவறைச் சரி என்றும் ஏற்க ஆரம்பித்து விடுகிறது. தவறான தீர்ப்பு கொடுக்க ஆரம்பித்து விடுகிறது. எவ்வளவு தான் யாராவது இது சரியில்லை என்று புரிய வைத்தாலும் அவர் சரியானதை, சத்தியத்தையும் கூட அசத்தியத்தின் சக்தி மூலமாக புரிய வைப்பவரை தவறு என்று நிரூபணம் செய்து விடும். இன்றைய நாட்களில் நாடகப்படி அசத்தியத்தின் இராஜ்யம் நடந்து கொண்டிருக்கிறது என்று எப்பொழுதும் நினைவு வைத்து கொள்ளுங்கள். மேலும் அசத்திய ராஜ்யத்தின்

அதிகாரி, ஜனாதிபதி இராவணன் ஆவான். அவருக்கு எத்தனை தலைகள். அதாவது அசத்தியத்தின் சக்தி எவ்வளவு பெரியது. அவருடைய மந்திரி, துணை மந்திரி கூட மிகப் பெரியவர்கள். அவருடைய நீதிபதி மற்று வக்கில் கூட மிகவும் நிறமைசாலிகள். எனவே தவறான தீர்ப்பின் கருத்துத்துளிகளை மிகவும் வகைவகையாக மேலும் வெளித்தோற்றத்தில் மிகவும் இனிமையானதாக கொடுக்கிறார்கள். எனவே சத்தியத்தை அசத்தியம் என்று நிரூபிப்பதில் மிகவும் திறமை நிறைந்தவர்கள் ஆனால் அசத்தியம் மற்றும் சத்தியத்தில் முக்கியமாக என்ன வித்தியாசம் இருக்கிறது. அசத்தியத்தின் வெற்றி அல்ப காலத்திற்காக இருக்கிறது. ஏனென்றால் அசத்தியத்தின் இராஜ்யம் கூட அல்ப காலத்திற்கானது தான். சத்தியத்தின் தோல்வி அல்ப காலத்திற்கானது மற்றும் வெற்றி சதா காலத்திற்கானது. அசத்தியத்தின் அல்ப கால வெற்றி அடைபவர்கள் அந்த நேரம் குஷி அடைகிறார்கள். எவ்வளவிற்கு கொஞ்ச நேரம் குஷியாகுகிறார்களோ மற்றும் தன்னை சரியென்று நிரூபிக்கிறார்களோ அவ்வளவு நேரம் வரும்போது மேலும் அசத்தியத்தின் அல்ப நேரம் முடியும் பொழுது எவ்வளவு அசத்திய வசமாகி போதையின் மகிழ்ச்சியைக் கொண்டாடினார்களோ அந்தளவே சத்தியத்தின் வெற்றி பிரத்யக்ஷம் ஆனவுடன் நூறு மடங்கு வேதனை அடைந்தே தான் ஆக வேண்டியதிருக்கிறது. ஏனென்றால் தந்தையிடமிருந்து விலகியதால், ஸ்தூலமாக விலகுவதில்லை. ஸ்தூலமாகவோ தன்னை ஞானி என்று நினைக்கிறார்கள் ஆனால் மனம் மற்றும் புத்தி மூலமாக விலகி விடுகிறார்கள். மேலும் தந்தையிடமிருந்து விலகுவது என்றால் அனைத்து பிராப்திகளின் அதிகாரத்தில் எப்பொழுதும் நிரம்பியிருப்பதற்குப் பதிலாக அரைகுறையான அதிகாரம் பிராப்தி ஆவதாகும். அசத்தியத்தின் பலம் மூலமாக அசத்தியத்தின் இராஜ்யத்தில் வெற்றியின் குஷி மற்றும் போதையை இந்த நேரமோ கொண்டாடி விடுவோம். நாளை என்பதை யார் பார்த்தது என்று சில குழந்தைகள் நினைக்கிறார்கள். யார் பார்ப்பார்கள் நாமும் மறந்து விடுவோம். அனைவரும் மறந்து விடுவார்கள் ஆனால் இது அசத்தியத்தின் முடிவாகும். எதிர்காலம் என்பது நிகழ்காலத்தின் நிழல் தான். நிகழ்காலம் இல்லாமல் எதிர்காலம் உருவாவது இல்லை. அசத்தியத்தின் வசமாகியிருக்கும் ஆத்மா நிகழ்காலத்திலும் அல்ப கால சுகத்தின் பெயர், புகழ் மரியாதையின் சுகங்களின் ஊஞ்சலில் ஆட முடியும் மேலும் ஆடவும் செய்கிறது ஆனால் அழியாத அதீந்திரிய

சுகத்தின் ஊஞ்சலில் ஆட முடியாது. அல்ப காலத்து பெயர், புகழ், மரியாதையின் மகிழ்ச்சியை கொண்டாட முடியும் ஆனால் அனேக ஆத்மாக்களின் உளப்பூர்வமான அன்பின், உளப்பூர்வமான ஆசிர்வாதத்தின் மரியாதையை அடைய முடியாது. வெளித்தோற்ற அளவிலான மரியாதையை அடைய முடியுமேயன்றி உளப்பூர்வமான மரியாதையை அடைய முடியாது. அல்ப கால மதிப்பு கிடைக்கிறது ஆனால் தந்தையிடம் இருந்து இதய சிம்மாசனத்தில் இருப்பவர் என்ற மதிப்பு எப்பொழுதும் அனுபவம் செய்ய முடியாது. அசத்தியத்திற்கு துணை இருப்பவர்கள் மூலமாக பெயர் கிடைக்க முடியும் ஆனால் பாப்தாதாவின் இதயத்தில் பெயர் கிடைக்க முடியாது. ஏனென்றால் பாப்தாதாவிடமிருந்து விலகி இருக்கிறார்கள். எதிர்காலத்தின் விஷயத்தை விடுங்கள் அது புரிந்தது ஒன்று தான், ஆனால் நிகழ் காலத்தில் சத்தியம் மற்றும் அசத்தியத்தின் பிராப்தியில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? இன்னொருவரை என்னுடையவர் ஆக்கினார் என்றால் அசத்தியத்தின் ஆதரவை எடுத்துக் கொண்டார். எவ்வளவு குழப்பமாகி விட்டது. சொல்லும்பொழுது வேறொன்றும் இல்லை எப்பொழுதாவது மட்டும் கொஞ்சம் ஆதரவு தேவையாக இருக்கிறது என்று கூறுவார்கள் ஆனால் உறுதிமொழியை மீறுவது என்றால் குழப்பத்திற்கு ஆளாவது. என்னுடைய ஒரே பாபா மற்றும் எப்பொழுதாவது இன்னொருவர் என்றா உறுதி அளித்திருக்கிறீர்கள்? இன்னொருவருக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? அல்ப காலத்திற்கான பெயர், மரியாதை, புகழிற்கான ஆதரவை எடுத்துக் கொள்ளுங்கள், இதில் நபர்களானாலும் அல்லது சாதனங்களானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறதா? எப்பொழுது வேறு யாருமே இல்லையென்றால் இன்னொருவர் எங்கிருந்து வந்தார்? இது அசத்தியத்தின் இராஜ்யத்தின் குழப்பத்தில் மாட்ட வைப்பதற்கான சாதுர்யம். எப்படி நான் என்னவாக இருக்கிறேனோ, எப்படி இருக்கிறேனோ அப்படி என்னை வரிசைக்கிரமமாக தெரிந்திருக்கிறார்கள் என்று தந்தை கூறுகிறார் இல்லையா? அதே போல் அசத்தியத்தின் ராஜ்ய அதிகாரி இராவணனையும் எப்படி இருக்கிறாரோ என்னவாக இருக்கிறாரோ அப்படியே எப்பொழுதும் தெரிந்திருக்கவில்லை. சில நேரம் மறந்து விடுகிறீர்கள் சில நேரம் தெரிந்து கொள்கிறீர்கள். இராஜ்ய அதிகாரி என்றால் இந்த சக்தி குறைவாக இருக்குமா? பொய்யோ, உண்மையோ ஆனால் இராஜ்யமோ

இருக்கிறது அல்லவா? எனவே தன்னை சோதனை செய்யுங்கள் மற்றவர்களை அல்ல.

இன்றைய நாட்களில் மற்றவர்களை சோதனை செய்வதில் அனைவரும் திறமைசாலிகளாக ஆகி விட்டார்கள். தன்னுடைய சோதனையாளர் ஆகுங்கள் மற்றும் மற்றவர்களை உருவாக்குபவராக ஆகுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார் ஆனால் நீங்கள் செய்வது என்ன? மற்றவர்களின் சோதனையாளர் ஆகி விடுகிறீர்கள் மற்றும் விஷயங்களை உருவாக்குவதில் மேக்கர் (உருவாக்குபவர்) ஆகி விடுகிறர்கள். பாப்தாதா தினந்தோறும் ஒவ்வொரு குழந்தையின் எந்த மாதிரியான கதைகளைக் கேட்கிறார்? கதைகளின் மிகப் பெரிய கணக்கு இருக்கிறது. எனவே தன்னை சோதனை செய்யுங்கள். மற்றவர்களைச் சோதிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள் என்றால் நீண்ட கதைகளாக ஆகி விடுகிறது. மேலும் தன்னைச் சோதித்தீர்கள் என்றால் அனைத்து கதைகளும் முடிவடைந்து ஒரு சத்திய வாழ்க்கையின் கதை நடைமுறையில் நடந்து கொண்டிருக்கும். பாபா உங்கள் மேல் மிகுந்த அன்பு இருக்கிறது என்று அனைவரும் கூறுகிறார்கள். கூற மட்டும் செய்கிறீர்களா அல்லது அன்பும் வைத்திருக்கிறீர்களா. என்னவென்று சொல்வது. சில நேரம் கூறுகிறீர்கள். சில நேரம் அன்பு செய்கிறீர்கள். பாபா தன்னுடைய அன்பின் நிரூபணத்தைக் கொடுத்து விட்டார். நீ எப்படி இருக்கிறாயோ, என்னவாக இருக்கிறாயோ என்னுடையவன் தான் ஆனால் குழந்தைகள் உங்களுக்கு நிருபணம் கொடுக்க வேண்டும். என்ன நிரூபணம் கொடுக்க வேண்டும். தந்தையோ, நீ என்னவாக இருக்கிறாயோ, எப்படி இருக்கிறாயோ என்னுடையவன் என்று கூறி விட்டார். மேலும் நீங்கள் என்ன கூறுவீர்கள்? என்ன இருக்கிறதோ அவைகள் அனைத்தும் நீங்கள் தான் என்றிருக்கிறதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் மற்றவர்களும் இருக்கிறார்களா? தந்தையிடம் அன்பு இருக்கிறது ஆனால் சில நேரம் அசத்திய இராஜ்யத்தின் பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள சத்தியத்தைச் சரியாக பகுத்தறியக் கூடிய, உண்மையான தந்தையின் உண்மையான குழந்தைகளுக்கு, அனைத்து அன்பில் மூழ்கியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றக்கூடிய சக்திசாலி ஆத்மாக்களுக்கு, அனைத்து சரியாக பகுத்தறியக்கூடிய சக்திசாலி

ஆத்மாக்களுக்கு, அனைத்து நினைவு மற்றும் சேவையில் தடையற்றவராக இருக்கக்கூடிய ஆத்மாக் களுக்கு, எப்பொழுதும் உடன் மற்றும் அருகில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: துக்க அலைகளிலிருந்து விடுபடுவதற்காக கர்மயோகியாகி காரியங்கள் செய்யுங்கள்!** அனைவரும் உங்களை ஸ்ரீமத்படி நடக்கும் உயர்ந்த ஆத்மாக்களாக அனுபவம் செய்கிறீர்களா? பெயரே ஸ்ரீமத். ஸ்ரீயின் அர்த்தம் உயர்ந்தது. அப்படி உயர்ந்த வழிப்படி நடப்பவர்கள் உயர்ந்தவர்கள் ஆனார்கள் இல்லையா. இந்த ஆன்மீக போதை எல்லைக்கப்பாற்பட்ட போதை இருக்கிறதல்லவா? அல்லது சில நேரம் எல்லைக்குப்பட்ட போதையும் வந்து விடுகிறதா? எனவே எப்பொழுதும் அனைத்து காரியங்களையும் செய்து கொண்டிருக்கும்போது எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக போதை இருக்கிறதா என்று உங்களைப் பாருங்கள். கூலி வேலை செய்தாலும் கூட, சாதாரண காரியம் செய்தாலும் தன்னுடைய உயர்ந்த போதையை மறந்து விடவில்லையே. வீட்டில் வேலை செய்யக்கூடிய சாதாரண மாதா நான் என்ற நினைவு இருக்கிறதா அல்லது நான் ஜகத்மாதா, ஜகத்திற்கு (உலகத்திற்கு) நன்மை செய்வதற்கு பொறுப்பிலிருக்கும் நான் இந்த காரியம் செய்து கொண்டிருக்கிறேன் என்ற நினைவு இருக்கிறதா? யாருக்கு இந்த ஆன்மீக போதை இருக்கிறதோ அவருடைய அடையாளம் என்னவாக இருக்கும். அவர் குஷியில் இருப்பார். எந்தவொரு காரியம் செய்தாலும் காரியத்தின் பந்தனத்தில் வர மாட்டார் விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருப்பார். காரியத்தின் பந்தனத்தில் வருவது என்றால் காரியத்தில் மாட்டிக் கொள்வது மேலும் யார் விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் இருக்கிறாரே அவர் காரியம் செய்து கொண்டே காரியத்தின் பந்தனத்தில் வருவதில்னை. கர்மயோகி ஆதி காரியம் செய்கிறார். ஒருவேளை காரியத்தின் பந்தனத்தில் வருகிறார் என்றால் குஷி மறைந்து விடும். ஏனென்றால் காரியம் நன்றாக நடக்காது ஆனால் கர்மயோகியாகி காரியம் செய்வதினால் துக்க அலைகளிலிருந்து விடுபட்டு விடுவார்கள். எப்பொழுதும் விலகியிருக்கும் காரணத்தினால் அன்பானவர்களாக இருப்பார்கள். என்ன எப்படி இருக்க வேண்டும் என்று புரிந்ததா?

கர்மபந்தனங்களிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும். கர்மத்தின் பந்தனம் இழுக்க வேண்டாம். எஜமானன் ஆகி காரியத்தைச் செய்விக்க வேண்டும். எஜமானன். விலகியிருப்பார் இல்லையா? எஜமானன் ஆகி காரியம் செய்விப்பதை பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை என்று கூறுவோம். அந்த மாதிரியான ஆத்மா எப்பொழுதும் தானும் குஷியாக இருப்பார் மற்றும் மற்றவர்களுக்கும் குஷி கொடுப்பார். அந்த மாதிரி இருக்கிறீர்களா? கேட்பதோ அதிகமாக கேட்கிறீர்கள், இப்பொழுது என்ன கேட்டீர்களோ அதை செய்ய வேண்டும். செய்தீர்கள் என்றால் அடைவீர்கள். இப்பொழுது செய்ய வேண்டும் உடனே அடைய வேண்டும். மாதாக்களுக்கு எப்பொழுதாவது துக்க அலை வருகிறதா? எப்பொழுதாவது மனதால் அழுகிறீர்களா? மனதால் அழும் அழுகை அனைவருக்கும் வர முடியும். எப்பொழுதும் குஷியாக இருங்கள் என்பது தான் ஸ்ரீமத். எப்பொழுதாவது அழுது கொள்ளுங்கள் என்பது ஸ்ரீமத் அல்ல. வெகு காலமாக மனதாலும் கண்களாலும் அழுதீர்கள், இராவணன் அழ வைத்தார் இல்லையா ஆனால் இப்பொழுது குஷியில் ஆடுவதற்காக தந்தையின் குழந்தையாகி இருக்கிறீர்கள், அழுவதற்காக அல்ல. அழுகை முடிந்து விட்டதா. துக்கத்தின் அலை வருவது. இது கூட அழுவது தான். இது மனதால் அழுவது ஆகி விட்டது. சுக வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். துக்கத்தின் அலை வர முடியாது. எப்பொழுது மறந்து விடுகிறீர்களோ அப்பொழுது வருகிறது. எனவே மறக்காதவர்களாக இருங்கள். இப்பொழுது என்னென்ன பலஹீனங்கள் இருக்கிறதோ அவற்றை மஹா யக்ஞத்தில் சுவாஹா செய்து விட்டுச் செல்லுங்கள். உடன் எடுத்துச் செல்லாதீர்கள். இங்கேயே சுவாஹா செய்து விட்டுச் செல்லுங்கள். சுவாஹா செய்யத் தெரியுமா? உறுதியான எண்ணம் வைப்பது என்றால் சுவாஹா செய்வது. நல்லது. அனைவரின் ஆசை நிறைவேறி விட்டதா? இப்படி சந்தித்துக் கொண்டிருக்கும் நீங்கள் பாக்கியவான்கள். வரக்கூடிய நாட்களில் என்ன நடக்குமோ. இந்த பாக்கியத்தையும் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவு எடுத்துக் கொண்டே செல்லுங்கள். பறந்து கொண்டே செல்லுங்கள். நான் மஹான் மற்றும் மற்றவர்களையும் மஹான் ஆக்க வேண்டும் என்பதைத் தான் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**குரூப்-2: அனைத்து சக்திகளையும் தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்தி மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகுங்கள்!**

சக்திகளின் பூஜையைப் பார்த்து என்ன நினைவில் இருக்கிறது? எப்படி சக்திகளை எட்டு கைகள் உள்ளவர்களாக காண்பிக்கிறார்கள் என்றால் நானும் அஷ்ட சக்திகள் உள்ள மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மா ஆவேன் என்று உங்களைச் சோதனை செய்கிறீர்களா? இந்த எட்டு, அடையாள மாத்திரமாகத் தான் ஆனால் அனைத்து சக்திகளும் இருக்கின்றன. சக்திகளின் பெயரைக் கேட்டு, சக்திகளின் பூஜையைப் பார்த்து அனைத்து சக்திகளின் நினைவு வருகிறதா? அல்லது பார்த்து குஷி மட்டும் அடைகிறீர்களா? ஜடமான சிலைகளில் எவ்வளவு அதிசயம் நிரப்பி விடுகிறார்கள். அப்படி சைத்தன்யமானவர்களுக்குத் தான் ஜடமானது உருவாகிறது இல்லையா? அப்படியானால் சைத்தன்யத்தில் நாம் எவ்வளவு அதிசயமானவர்களாக ஆகியிருக்கிறோம். அதாவது உயர்ந்தவர்களாக ஆகியிருக்கிறோம். அப்படியானால் இது நம்முடைய நினைவுச்சின்னம் என்று குஷி ஏற்படுகிறதா? அல்லது இவை தேவிகளின் நினைவுச்சின்னமா? தேவிகளுடன் கணேஷருக்கும் பூஜை நடக்கிறது இல்லையா? அப்படி நடைமுறையில் அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்கள். எனவே தான் நினைவுச்சின்னம் உருவாகியிருக்கிறது. அனைத்து சக்திகளும் அனுபவம் ஆகிறதா? என்று எப்பொழுதும் தன்னைச் சோதனை செய்யுங்கள். தந்தையோ கொடுத்திருக்கிறார் ஆனால் நான் எவ்வளவு எடுத்திருக்கிறேன். தாரணை செய்திருக்கிறேன் மேலும் தாரணை செய்ததற்குப் பின்பு தேவையான நேரத்தில் அந்த சக்தி காரியத்திற்கு உதவுகிறதா? ஒருவேளை தேவையான நேரத்தில் எந்த பொருளும் காரியத்திற்கு உதவவில்லை என்றால், இருப்பதும் இல்லாமல் இருப்பதும் ஒன்று தான். ஒரு பொருளை வைத்திருப்பதே தேவையான நேரத்தில் காரியத்திற்கு உபயோகம் ஆவதற்காகத்தான். ஒருவேளை தேவையான நேரத்தில் எரியத்திற்கு உதவவில்லை என்றால் என்னவென்று கூறுவது? இருந்தும் இல்லாமல் இருந்தது அப்படி இரண்டுமே ஒரே விஷயமாகி விட்டது. தந்தையோ கொடுத்திருக்கிறார் ஆனால் நான் எவ்வளவு எடுத்திருக்கிறேன் இதைச் சோதனை செய்யுங்கள். எப்பொழுது நடைமுறையில் காரியத்தில் வருகிறதோ அப்பொழுது தான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூற முடியும். சக்தி காரியத்திற்கு உதவவில்லை மற்றும் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவது அழகே இல்லை. ஒரு சக்தி

குறைவாக இருந்தாலும் கூட தேவையான நேரத்தில் ஏமாற்றத்தைக் கொடுத்து விடும். எந்த நேரமும் அந்த சக்திக்கான சோதனை வந்து விடுகிறது என்றால் பாஸ் ஆவீர்களா அல்லது பெயில் ஆவீர்களா? ஒருவேளை இல்லை என்றால் ஃபெயில் ஆவீர்கள், இருக்கிறது என்றால் பாஸ் ஆவீர்கள். இவரிடம் இந்த சக்தியின் குறை இருக்கிறது என்று மாயாவிற்கும் தெரியும். எனவே அதற்காகவே சோதனை வருகிறது. எனவே ஒரு சக்தி கூட குறைவாக இருக்கக் கூடாது. புரிந்ததா? சக்திகளோ வந்துவிட்டன ஒரு சக்தி குறைவு என்றால் பிரச்சனை ஒன்றும் இல்லை என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த ஒன்றில் தான் பிரச்சனையே. அந்த ஒன்றே ஃபெயில் ஆக்கி விடும். சூரிய வம்சத்தில் வர வேண்டும் என்றால் முழுமையாக பாஸ் ஆக வேண்டும். முழுமையாக பாஸ் ஆவதின் அர்த்தமே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவது. மாதர்களிடம் பொறுமை சக்தி இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கோபம் வந்து விடுகிறதா? பாண்டவர்களுக்கு கோபம் அல்லது ஆவேசம் வருகிறதா? பொறுமை சக்தியின் குறை இருக்கிறது என்றால் அப்பொழுது தான் வரும் இல்லையா? அனைத்து சக்திகளிலும் பொறுமை சக்தி கூட ஒரு சக்தி தான் இல்லையா. ஒரு சக்தியின் குறை இருக்கிறது என்றால் முழுமையாக பாஸ் ஆவீர்களா? அல்லது அறைகுறையாக பாஸ் ஆவீர்களா? எனவே அனைத்து சக்திகளையும் சோதனை செய்யுங்கள். ஒரு சதவிகிதம் கூட குறை இருக்க வேண்டாம். அதிகம் இல்லை கொஞ்சம் கோபம் வந்தது என்று அப்படி கூட இருக்க வேண்டாம். ஒருவேளை கொஞ்சம் கூட வந்தது என்றால் அதை ஃபெயில் என்று கூறுவோம். மேலும் கொஞ்சம்கொஞ்சம் ஃபெயில் ஆவதின் பழக்கம் ஏற்பட்டு விட்டது என்றால் முழுமையாக எப்படி பாஸ் ஆவார்கள்? எனவே ஒரு சக்தி கூட குறை இருக்க வேண்டாம். ஒன்று கொஞ்சம் குறைவாக இருக்கிறது அதிகரித்து விடும் என்று அலட்சியமாக இருக்க வேண்டாம். வெகு காலத்து குறை தேவையான நேரத்தில் ஏமாற்றத்தைக் கொடுத்து விடும். எனவே மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் அனைத்து சக்திகளினால் நிரம்பியவர் ஆகுங்கள். அனைத்து சக்திகளையும் காரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டே செல்லுங்கள் மேலும் பறந்து கொண்டே செல்லுங்கள். புரிந்ததா?

**குரூப்-3: என்னுடையது என்பதை உன்னுடையதாக மாற்றுவது தான் பிராமண வாழ்க்கை ஆகும்!** அனைவரும் தன்னை ஒருவரின்

பலம் மற்றும் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை என்று அனுபவம் செய்கிறீர்களா? ஒரு பாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது உறுதியாக் இருக்கிறது இல்லையா? அல்லது பாபாவும் இருக்கிறார் என்றால் குழந்தைகளும் இருக்கிறார்கள். உறவினர்களும் இருக்கிறார்களா? எப்பொழுது குழந்தைகளும் இருக்கிறார்கள், கணவனும் இருக்கிறார். மாமனார் மாமியார் இருக்கிறார்கள், இவர்கள் அனைவரும் இருக்கிறார்கள் என்றால் ஒருவர் எப்படி ஆக முடியும். எதிரில் இருக்கிறார்கள். பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் பின்பு ஒருவர் எப்படி ஆவது? இவர்கள் என்னுடையவர்கள் இல்லை ஆனால் தந்தை சேவைக்காக கொடுத்திருக்கிறார் அந்த மாதிரியான பார்வை மற்றும் உள்ளுணர்வு வைப்பதினால் ஒருவரின் நினைவு மட்டும் இருக்கும். எவ்வளவு பேர் இருந்தாலும், யார் இருந்தாலும், அனைவரும் தந்தையின் குழந்தைகள் மேலும் சேவைக்காக இந்த ஆத்மாக்கள் எனக்கு கிடைத்திருக்கின்றனர். மாமியார் இல்லை ஆனால் சேவைக்கான ஆத்மா அந்த மாதிரியான உள்ளுணர்வு இருக்கிறதா? மகளை, மகள் என்று புரிந்து கொள்கிறீர்களா? என்னுடைய கன்யா. என்னுடைய கன்யாவிற்கு நன்மை செய்யுங்கள் அந்த மாதிரி கூறுகிறீர்களா? தந்தை சேவைக்காக பொறுப்பாளர் ஆக்கியிருக்கிறார். வீட்டில் இருந்து கொண்டிருக்கவில்லை ஆனால் சேவா ஸ்தானத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். என்னுடையது அனைத்தும் உன்னுடையதாகி விட்டது. என்னுடையது ஒன்றும் இல்லை. உடல் கூட என்னுடையது இல்லை. எப்பொழுது என்னுடையது இல்லவே இல்லையோ தேக அபிமானம் எப்படி ஏற்பட முடியும், என்னுடையது என்பதில் தான் கவர்ச்சி ஏற்படுகிறது. என்னுடையது என்பது எப்பொழுது முடிவடைந்து விடுகிறது என்றால் மனம் மற்றும் புத்தியை தன் பக்கம் இழுக்க முடியாது. பிராமண வாழ்க்கை என்றால் என்னுடையதை உன்னுடையதில் மாற்றுவது. எனவே உன்னுடையது என்பது என்னுடையது ஆகி விடவில்லையே என்று அடிக்கடி சோதனை செய்யுங்கள். ஒருவேளை என்னுடையது என்பது இல்லை என்றிருந்து அனைத்தும் உன்னுடையதே தான் என்றிருந்தால் டபுள் லைட் ஆக இருப்பார். ஒருவேளை கொஞ்சம் கூட சுமை அனுபவம் செய்கிறீர்கள் என்றால் என்னுடையது கலப்படம் ஆகி விட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். பக்தி மார்க்கத்தில் அனைத்தும் உன்னுடையது என்று கூறுகிறார்கள். பிராமண வாழ்க்கையில் கூற வேண்டியது

இல்லை செய்ய வேண்டும். இதை செய்வது சுலபம் தான் இல்லையா. சுமையைக் கொடுத்து விடுவது சுலபமாக இருக்கிறதா? அல்லது எடுப்பது சுலபமாக இருக்கிறதா? உன்னுடையது என்று கூறுவதென்றால் சுமையைக் கொடுப்பது மற்றும் என்னுடையது என்று கூறுவது என்றால் சுமையை எடுப்பது. அப்படி இப்பொழுது ஒருவரின் பலம் மற்றும் ஒருவர் மேல் உள்ள நம்பிக்கை அவ்வளவுதான், ஒருவரே ஒருவர் தான். ஒன்றை எழுதுவது சுலபம் இல்லையா? அதனால் இந்த குழுவைச் சேர்ந்தவர்கள் உன்னுடையது என்று கூறுபவர்கள். நல்லது.

**குரூப்-4: யாருடைய கண் தந்தையைத் தவிர வேறு எங்கும் மூழ்கவில்லையோ அவர் தான் பூஜைக்குரியவர்!** நாம் கல்ப கல்பமாக மிக உயர்ந்த பூஜைக்குரிய ஆத்மாக்களாக ஆகிறோம் என்ற போதை எப்பொழுதும் இருக்கிறதா? எத்தனை தடவை உங்களுடைய பூஜை நடந்திருக்கிறது? நான் பூஜைக்குரிய ஆத்மா என்ற இந்த பூஜைக்குரிய தன்மையின் அனுபவமாக என்ன ஏற்படுகிறது? அடையாளம் என்ன? போதை இருக்கிறது, குஷி இருக்கிறது அது சரி தான் ஆனால் நான்தான் பூஜைக்குரிய ஆத்மாவாக இருந்தேன் என்று எந்த சம்ஸ்காரம் மூலமாக புரிந்து கொள்கிறீர்கள் யார் பூஜைக்குரிய ஆத்மாக்களோ அவர்களுடைய விசேஷங்கள் என்னவாக இருக்கிறது? எந்த விசேஷத்தின் ஆதாரத்தில் பூஜைக்குரியவராக ஒருவர் ஆகிறார்? குடும்பத்தில் கூட பாருங்கள் சிலரை, இவரோ பூஜைக்குரியவர் என்று கூறுகிறார்கள். பூஜைக்குரிய ஆத்மாவின் அடையாளம் என்னவென்றால் அவர் ஒருபொழுதும் எந்தவொரு பொருளுக்குப் பின்னும், நபருக்குப் பின்னாலும் தலை வணங்க மாட்டார். அனைவரும் அவர் முன்னால் தலை வணங்குவார்கள் ஆனால் அவர் தலை வணங்க மாட்டார். பணிவோடு தலை வணங்குவது அது வேறு விஷயம் ஆனால் தலை வணங்குவது என்றால் பிரபாவம் அடைவது. பூஜைக்குரியவரின் முன்பு அனைவரும் தலை வணங்குவார்கள் ஆனால் பூஜைக்குரியவர் தலை வணங்குவதில்லை. அப்படி எந்த விதமான ஓர் அல்லது சாதனங்கள் கவர்ச்சிப்பது பூஜைக்குரியவரின் அடையாளம் இல்லை. எனவே ஒருபொழுதும் எந்தவொரு கவர்ச்சியில் மனம் மற்றும் புத்தி தலை வணங்குவதில்லையே, பிரபாவத்தில் வரவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒரு தந்தையைத் தவிர வேறு பங்கும் மனம், புத்தி தலை வணங்குவது இருக்க வேண்டாம். பூஜைக்குரியவர் என்றால் தலை

வணங்க வைப்பவரேயன்றி தலை வணங்குபவர் அல்ல. யார் ஒவ்வொரு கல்பத்திலும் பூஜைக்குரியவராக இருப்பாரோ அவருடைய அடையாளம் என்னவாக இருக்கும்? ஒரு தந்தையைத் தவிர வேறு எங்கேயும் அவருடைய கண்கள் மூழ்காது. இவர் மிகவும் நல்லவர், இது மிக நல்ல பொருள் என்பது கூட இருக்காது. பூஜைக்குரிய ஆத்மாக்களின் எதிரில் அனைத்து நபர்களும், சாதனங்களும் தானாகவே தலை வணங்கும். இஷ்ட தேவதைகள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்கள் முன் பக்தர்கள் நல்லதிலும் நல்ல பொருட்களை படைப்பார்கள். இஷ்ட தேவதைகள் இந்த பொருட்கள் மேல் பிரபாவம் ஆவதில்லை. ஆனால் அந்த பொருட்கள் அவைகளே அவர் முன்னால் வந்து தலை வணங்குகின்றன. அப்படி ஒரு தந்தையைத் தவிர வேறெங்கும் மனம், புத்தி தலை வணங்காமல் இருப்பது தான் பூஜைக்குரியவரின் அடையாளம் ஆகும். மரியாதைக் கொடுப்பது, அன்பு காண்பிப்பது, பணிவாக இருப்பது இவையெல்லாம் வேறு, ஆனால் பிரபாவம் ஆவது முற்றிலும் வேறு. அப்படி பூஜைக்குரிய ஆத்மாக்களாக இருந்தீர்கள் மற்றும் அடிக்கடி ஆவீர்கள். இந்த அடையாளத்தை உங்களுக்குள் சோதனை செய்யுங்கள. எப்பொழுதாவது ஏதாவது சம்ஸ்காரத்தின் வசமாக ஆத்மா வசப்பட்டு விடுகிறது என்றால் கூட தலை வணங்குவது தான். உதாரணமாக ஏதாவது பிராமண ஆத்மா, பூஜைக்குரிய ஆத்மா, இன்று கோபத்தின் வசமாகி விட்டேன், பேராசையின் வசமாகி விட்டேன், அபிமானத்தின் வசமாகி விட்டேன் என்று கூறுகிறார் என்றால் இது தலை வணங்குவதாக ஆனதா? அல்லது தலை வணங்க வைப்பதாக ஆனதா? அப்படி பூஜைக்குரியவர் ஒருபொழுதும் தலை வணங்குவதில்லை. பூஜைக்குரியவர் மேல் அனைவரும் சுவரப்பட்டு அவர்களே முன்னுக்கு வருகிறார்கள். பூஜைக்குரியவர் ஒருவர் முன்னாலும் கவரப்படுதில்லை. அப்படி இந்த அடையாளத்தைப் பாருங்கள். ஒருவேளை எப்பொழுதாவது தலை வணங்குவது ஏற்பட்டு விடுகிறது என்றால் பூஜை கூட எப்பொழுதாவது தான் நடக்குமேயன்றி எப்பொழுதும் நடக்காது. பூஜைக்குரியவரிலும் வரிசை இருக்கிறது. விதவிதமானவர்களும் இருக்கிறார்கள். சில பூஜைக்குரியவர்கள் எப்பொழுதும் பூஜை செய்யப்படுகிறார்கள். மேலும் சிலருக்கு எப்பொழுதாவது பூஜை நடக்கிறது, சிலருக்கு விதிப்படி பூஜை நடக்கிறது. மேலும் சிலருக்கு செய்ய வேண்டுமே என்று பூஜை நடக்கிறது. கோவில்களிலும் வித்தியாசம் இருக்கிறது இல்லையா. அப்படி இங்கேயும் அதே போல் தான். யார் விதிப்படி ஸ்ரீமத்தை கடைபிடிக்கவில்லையோ,

செய்ய வேண்டுமே என்ற நிலை இருக்கிறதோ. அமிர்தவேளை எழுந்திருக்க வேண்டும். யோகாவில் அமர வேண்டும் ஆனால் யாரும் பார்க்கவில்லை கேட்கவில்லை என்றால் இவர் எழுந்திருக்கவில்லை பின்பு எழுந்து அமர்ந்த பின் தந்தையுடன் சந்திப்பை ஏற்படுத்துகிறாரோ அல்லது தூக்கத்தில் ஏற்படுத்துகிறாரோ. இது ஏதோ செய்ய வேண்டுமே. ஏனோ தானோ என்ற நிலை தான் ஏற்பட்டது இல்லையா. அமிர்தவேளை எழுந்திருந்தார் அமர்ந்தார் ஆனால் விதிப்பூர்வமாக இல்லை. அதனால் மூர்த்தியையும் அமர வைத்து விடுகிறார்கள் ஆனால் பூஜை விதிப்பூர்வமாக நடப்பதில்லை. எப்பொழுது ஈடுபாடு ஏற்பட்டுவிடுகிறதோ அப்பொழுது வளைந்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஈடுபாடின்றி வளைந்து கொடுப்பது நிகழ்வதில்லை. இன்றைய பக்தர்களில் கூட அற்ப கால பிராப்தியின் பக்கம் ஈடுபாடு இருப்பதினால்தான் தலை வணங்குதலும் ஏற்படுகிறது. இன்றைய நாட்களில் பூஜைக்குரியவரின் பக்கம் ஈடுபாடு இல்லை. அற்ப கால பிராப்தியின் பக்கம் ஈடுபாடு இருக்கிறது ஆனால் பிராப்தி செய்விப்பவர்கள் பூஜைக்குரிய ஆத்மாக்கள். எனவே தலை வணங்குவது அவர்கள் பக்கமாகவே ஆகி விடுகிறது. அப்படி பூஜைக்குரியவர்களின் அடையாளம் என்னவென்று புரிந்ததா? ஒவ்வொரு கல்பத்தின் உயர்ந்த பூஜைக்குரிய ஆத்மாக்கள் எப்பொழுதும் தங்களை நிரம்பியவராக அனுபவம் செய்வார்கள். யார் நிரம்பியவராக இருக்கிறாரோ அவருடைய கண் எதன் மேலும் போவதில்லை. பூஜைக்குரிய ஆத்மா நிரம்பியவராக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதுமே தன்னுடைய ஆன்மீக போதையில் இருப்பார். அவருடைய மனம் புத்தியின் தலை வணங்குதல் எங்கேயும் இருக்காது. உடலின் உறவினர்கள் மேலும் இருக்காது. மேலும் உடல் சம்மந்தப்பட்ட பொருட்களின் மேலும் இருக்காது. அனைவரிடமிருந்தும் விலகிய மற்றும் அனைவருக்கும் அன்பிற்குரியவராக இருப்பார். பிராமண வாழ்க்கையின் மகிழ்ச்சியே ஜீவன் முக்தி நிலையில் இருக்கிறது. விலகியிருப்பது என்றால் முக்தி, சம்ஸ்காரத்திற்கும் வசமாகாமல் இருப்பது. என்ன செய்வது? எப்படி செய்வது? என்று எப்பொழுது கூறுகிறீர்கள் என்றால் அந்த நேரம் ஜீவன் முக்தி ஆனதா அல்லது ஜீவன் பந்தனம் ஆனதா? செய்ய விரும்பவில்லை ஆனால் நடந்து விடுகிறது. இது தான் ஜீவன் பந்தனம் ஆகும். விருப்பம் இல்லை ஆனால் பிடித்திருந்தது. அறிவுரை கூற வேண்டும் ஆனால் கோபம் வந்தது இது தான் ஜீவன் பந்தனத்தின் நிலை. பிராமணன்

என்றால் ஜீவன் முக்தி, ஒருபொழுதும் எந்தவொரு பந்தனத்திலும் கட்டப்பட முடியாது. நல்லது.

**குரூப்-5: குழுவில் அனைவருடன் இருந்தும் விலகி மற்றும் அன்பாக இருப்பது தான் தந்தையைப் பின்பற்றி நடப்பதாகும்!** இது விதவிதமானவர்கள் அடங்கிய குரூப். அனைத்தையும் விட நல்லதிலும் நல்ல குரூப் என்று எதைக் கூற முடியும், அதன் விசேஷத்தன்மை என்னவாக இருக்கும்? யார் குரூப்பில் இருந்து கொண்டே தடைகள் அற்றவராக இருந்தார்களோ, திருப்தியாக இருந்தார்களோ அதைத் தான் மிகவும் நல்ல குரூப் என்று கூற முடியும். யாராவது தனியாக தடையற்று இருப்பது என்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் பெரிய குழுவிலும் இருந்து கொண்டே தடைகள் அற்றவராக இருக்க வேண்டும். அப்படி நீங்கள் அனைவரும் குழுவில் இருந்து கொண்டே தடைகளற்றவராக இருக்கிறீர்களா? எவ்வளவு தான் குழப்பம் இருந்தாலும் சுயம் அசையாதவராக இருக்கும் அந்த மாதியான குருப்பைச் சேர்ந்தவரா? எப்படி தந்தை தனியாக இருக்கவில்லை இல்லையா. குடும்பஸ்தர் அல்லவா. அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய குடும்பம் தந்தையினுடையது. மேலும் எவ்வளவு பெரிய குடும்பமோ அந்தளவிற்கே விலகியிருந்து மற்றும் அனைவரின் அன்பிற்குரியவராக இருக்கிறார். எவ்வளவு சேவையோ அவ்வளவு விலகியிருக்கிறார். அப்படி நீங்களும் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் தான் இல்லையா. எனவே உங்கள் அனைவரின் ஞாபகார்த்தமாக இங்கு அச்சல்கர் (அசையாத வீடு) உருவாக்கப்பட்டிருக்கிறது. யாராவது எவ்வளவு தான் அசைத்தாலும் அசையாதவர்கள் தான் இல்லையா. ஒரு பக்கம் ஒருவர் தொந்தரவு செய்கிறார், இன்னொரு பக்கம் இன்னொருவர் தொந்தரவு செய்கிறார் என்றால் என்ன செய்வீர்கள்? தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்றால் குழப்பம் ஏற்படுமா? யாராவது உங்களை நிந்தனை செய்தால் குழப்பம் ஏற்படுமா? அசையாத நிலை என்றால் நாலாபுறமும் எவ்வளவு தான் யாராவது அசைப்பதற்கு முயற்சி செய்தாலும் எண்ணத்தில் கூட ஆடாத அசையாத நிலை இருக்கட்டும். பாருங்கள். நீங்கள் நல்லவர்கள் அதனால் தான் தந்தை விரும்பி உங்களை அவருடையவராக ஆக்கியிருக்கிறார். நன்றாக இருக்கிறீர்கள் மேலும் எப்பொழுதும் நன்றான இருப்பீர்கள். நல்லது, நல்லது என்று நினைப்பதனால் நல்லதாகவே ஆகி விடும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிலும் விசேஷத்தை தான் பார்க்கிறார். விசேஷத்தைப் பார்த்து வர்ணனை செய்து செய்து விசேஷமாக ஆகியே விடுவார்கள். நேற்று இருந்தார், இன்று இருக்கிறார் மற்றும் நாளை ஆவார் இன்று மற்றும் நாளை இதில் முழு டிராமாவும் வந்து விடுகிறது. எவ்வளவிற்கு எவ்வளவு சம்பூர்ணமாக ஆகிக் கொண்டே இருப்பீர்களோ இந்த தினைவு தெளிவாகிக் கொண்டே இருக்கும். எவ்வளவிற்கு நினைவு தெளிவாகிறதோ அவ்வளவு இயற்கையாகவே போதை இருக்கும். நல்லது. நாலாபுறமும் உள்ள இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு இரட்டை போதையில் இருப்பதற்கான வாழ்த்துக்கள். ஒன்று நினைவின் போதை, இன்னொன்று சேவையின் போதை அப்படி இரட்டை போதை ஆனது இல்லையா. நல்லது. தைரியம் குழந்தைகளினுடையது மற்றும் உதவி தந்தையினுடையது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குழந்தைகளும் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும், எப்பொழுதாவது குப்தமாகி விடுகிறார்கள். எப்பொழுதாவது பிரத்யக்ஷமாகி விடுகிறார்கள் அவ்வளவு தான் ஆனால் தைரியம் மற்றும் உதவிக்கு பாத்திரமானவர்கள். நல்லது, அனைவருக்கும் நினைவு.

**குரூப்-6: ஒவ்வொரு பிராமணனும் பிரம்மாபாபாவின் பிரதிபிம்பம் ஆகட்டும், இதுதான் தந்தையின் உயர்ந்த எதிர்பார்ப்பு!** மதுபன் நிவாசிகளுக்கு எத்தனை பிரத்யக்ஷ பலன்கள் கிடைத்திருக்கின்றன? மதுபனின் விசேஷம் என்ன? அது வேறு எங்குமே கிடைக்க முடியாது. உயர்ந்த கர்ம பூமியில் வசிப்பவர்கள் எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றி நடக்கிறார்கள். பிரம்மாபாபாவின் விசேஷ கர்ம பூமி என்பது தான் மதுபனின் உயர்நிலை. அப்படி மதுபன் நிவாசிகள் என்னென்ன காரியங்கள் செய்கிறார்களோ, அவர்கள் தந்தையைப் பின்பற்றி செய்கிறார்கள். கர்மபூமியின் விசேஷத் தன்மையே காரியத்தினுடையது தான். அப்படி காரியத்தில் பின்பற்றி நடப்பது இருக்கிறதா? அமிர்த வேளையில் தொடங்கி இரவு வரை என்னென்ன காரியங்கள் செய்கிறீர்களோ அதில் தந்தையைப் பின்பற்றுதல் இருக்கிறதா? மதுபன் நிவாசிகளுக்கு கர்ம பூமியின் நினைவு அதிகப்படியான பலமாக இருக்கிறது. அது செய்யும் காரியத்தில் தென்படுகிறதா அல்லது தென்படனுமா, என்னவென்று சொல்வது? நீங்கள் உங்களைப் பார்க்கிறீர்களா? ஒவ்வொரு அடியையும் கண் முன்னால் கொண்டு வாருங்கள் -எழுவது, அமருவது, நடப்பது, பேசுவது, உறவு நெருக்கத்தில்

வருவது -அனைத்திலும் பிரம்மாபாபாவின் காரியத்தைப் பின்பற்றுதல் இருக்கிறதா? கர்ம பூமியின் இலாபமே இது தான் இல்லையா. அப்படியானால் அவ்வளவு இலாபத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? சக்திகள் என்ன நினைக்கிறீர்கள்? கர்ம பூமியின் இலாபத்தை எவ்வளவு மதுபனில் இருப்பவர்கள் எடுக்கிறார்களோ அவ்வளவு மற்றவர்கள் எடுப்பதற்கு இங்கு வர வேண்டியதாக இருக்கிறது. மேலும் உங்களுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கிறது. வரதான பூமி ஆகும். கர்மபூமி ஆகும் அப்படி ஒவ்வொரு காரியமும் வரதானத்திற்குத் தகுதியானவை. யாராவது பார்த்தால் கூட வாயிலிருந்து வரதானம் வெளிப்படட்டும். இதைத் தான் வரதான பூமியின் வரதானத்தை எடுப்பது என்று கூறுவது. சாதாரண காரியம் செய்து கொண்டிருந்தாலும், சாதாரண காரியத்திலும் விசேஷத்தன்மை தென்படட்டும். இது தான் மதுபனின் விசேஷத்தன்மை இல்லையா. இதில் சர்டிபிகேட் வாங்க வேண்டும். இன்று இன்கம் டேக்ஸின் சர்டிபிகேட் கிடைத்தது இல்லையா. அப்படியானால் மதுபனில் இருப்பவர்கள் எந்த சர்டிபிகேட் வாங்கினார்கள்? வாங்கியவர்கள் அதிகாரிகள்தான். முக்கியமாக பிரம்மாபாபாவின் கர்ம பூமியில் வசிப்பவர்களிடமிருந்து ஒரு விசேஷ உயர்ந்த எதிர்பார்ப்பு இருக்கிறது. மதுபனின் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் உயர்ந்த ஆத்மா, ஒவ்வொரு காரியத்திலும் பிரம்மாபாபாவின் காரியத்தின் பிரதிபிம்பம் ஆகட்டும். கண்ணாடியில் என்ன தென்படும். ஒருவேளை நீங்கள் கண்ணாடியின் எதிரில் நின்றீர்கள் என்றால் அப்படியே நீங்கள் தான் தென்படுவீர்களா? அல்லது வேறு யாருமா? அப்படி பிரம்மாபாபாவின் காரியங்கள் உங்களுடைய காரியம் என்ற கண்ணாடியில் தென்படட்டும். பாக்கியம் நிறைந்தவர்கள் என்று அனைவரும் எப்பொழுதும் கூறவும் செய்கிறீர்கள் மேலும் அப்படியானவர்கள்தான் ஆனால் ஒவ்வொரு காரியத்திலும் பிரம்மாபாபாவின் காரியம் தென்படட்டும். இந்த சர்டிபிகேட்டை யார் வாங்குவார்கள் மேலும் எப்பொழுது வாங்குவார்கள்? வாங்க வேண்டும் தான் இல்லையா? அல்லது வாங்கி விட்டீர்களா? யார் இந்த சர்டிபிகேட்டை வாங்கி விட்டார்களோ அதாவது ஒவ்வொரு காரியத்திலும் பிரம்மாபாபாவின் காரியங்கள் தென்படுகிறது என்று, அவருடைய வார்த்தை பிரம்மாபாபாவின் வார்த்தைகளுக்கு சமமாக இருக்கும், அமருவது, எழுவது, பார்ப்பது, நடப்பது அனைத்தும் தந்தைக்குச் சமமாக இருக்கும். அந்த மாதிரியான சர்டிபிகேட் வாங்கி விட்டீர்களா? யாருக்கு வாங்க வேண்டுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். சொல்வதற்கு

முன்பு செய்க காண்பிப்போம் என்பது கூட நல்லது தான் ஆனால் ஒவ்வொரு காரியமும் தந்தைக்குச் சமமானதாக இருக்கட்டும் என்ற இலட்சியம் வையுங்கள். பிரம்மாபாபாவைப் பின்பற்றுவது சுலபம் தான் இல்லையா. நிராகாரி ஆவது என்றால் எப்பொழுதுமே நிராகார நிலையில் நிலைத்திருப்பது, அதை விட காரியத்தில் பின்பற்றுவது சுலபம் தான். அப்படி பிரம்மாபாபாவும் கடினமில்லாத சுலபமான வேலை தான் கொடுக்கிறார். அப்படி மதுபனில் எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் பிரம்மாபாபாவின் காரியங்கள் தென்பட வேண்டும் என்ற இலட்சியத்தை அனைவரும் வையுங்கள். காரியத்தில் பிரம்மாவை சர்வ வியாபியாக ஆக்க முடியுமா? எங்கு பார்த்தாலும் பிரம்மாவிற்கு சமமாக இருக்கட்டும். முடியும் தான் இல்லையா. மதுபனின் மகிமை என்றால் மதுபன் நிவாசிகளின் மகிமை. மதுபனின் சுவர்களின் மகிமை இல்லை மதுபன் நிவாசிகளின் மகிமை. மதுபனின் மகிமையை நாலாபுறத்தில் இருந்தும் தினந்தோறும் கேட்கிறீர்கள் இல்லையா. மதுபன் நிவாசிகளின் மகிமை இருக்கிறது இல்லையா? அது வேறு யாருக்காவது இருக்கிறதா? உங்கள் அனைவரினுடையது தான் இல்லையா. நாம் மதுபன் நிவாசி என்ற போதையோ இருக்கத்தான் செய்கிறது. எப்படி இந்த போதை இருக்கிறதோ அப்படி இவர்கள் பிரம்மாபாபாவிற்கு சமமாகத் தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள் என்ற போதையும் வெளிப்படையாக தென்படட்டும். நல்லது. அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? ஏதாவது தேவையாக இருக்கிறதா? கிடைக்கும் பூமியில் அமர்ந்திருக்கிறீர்கள் எவ்வளவு கவலையற்று அமர்ந்திருக்கிறீர்கள். உடல் உழைப்பு செய்கிறீர்கள், மற்ற அனைத்துமோ தயாராக கிடைக்கிறது. யார் உடலால் உழைப்பு செய்வதில்லையோ அவரை உடற்பயிற்சி என்ற உழைப்பை செய்ய வைக்கிறார்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் தான் இல்லையா, உடற்பயிற்சி செய்ய வேண்டியதில்லை. கை, கால்கள் எப்பொழுதும் வேலை செய்து கொண்டேயிருக்கின்றன. எவ்வளவிற்கு யார் கடினமான காரியம் செய்கிறாரோ அவ்வளவிற்கு பாதுகாப்பாக இருக்கிறார். மாயாவிடமிருந்தும் பாதுகாப்பாக இருக்கிறார். உடல் நோய்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கிறார். புத்தியும் மிகவும் பிஸியாக இருக்கிறது இல்லையா. வேறு வீணானது எதுவும் ஓடாது இல்லையா. அப்படி யார் எப்பொழுதும் பிஸியாக இருக்கிறாரோ அவர் மிகுந்த அதிர்ஷ்டசாலி தான் இல்லையா. தன்னை எப்பொழுதும் பிஸியாக வைத்துக்

கொள்ளுங்கள். நல்லது. மதுபன் நிவாசிகளுக்கு முதல் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுவும் அதிர்ஷ்டம் தான். இப்பொழுது பாப்தாதாவிற்கு செய்து காண்பிக்க வேண்டும். புரிந்ததா.

**வரதானம்: எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்யக்கூடிய சுயமாற்றம் செய்பவரிலிருந்து உலக மாற்றம் செய்பவர் ஆகுக!**

எந்தவொரு எண்ணத்தையும் சம்ஸ்காரத்தையும் ஒரு நொடியில் எதிர்மறையிலிருந்து நேர்மறையாக மாற்றி விட வேண்டும். இதற்காக முழு நாளிலும் டிராபிக்கை நிறுத்துவதற்கான பயிற்சி தேவை. ஏனென்றால் வீணான மற்றும் எதிர்மறையான எண்ணங்களின் வேகம் மிக அதிகமாக இருக்கும். மிக வேகமான நேரத்தில் சக்தி நிறைந்த பிரேக் போட்டு மாற்றுவதற்கான பயிற்சியைச் செய்யுங்கள். அப்பொழுதுதான் தன்னுடைய வீணானதை மாற்றி சுயமாற்றம் செய்பவரிலிருந்து உலகமாற்றம் செய்பவராக ஆக முடியும். மேலும் தன்னுடைய பரிஷ்தா சொரூபம் மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு சுகம், சாந்தியின் வரதானம் கொடுக்க முடியும்.

**சுலோகன்: டிராமாவின் ஞானத்தை நினைவில் வைத்துக் கொள்பவர் தான் ஒன்றும் புதிதல்ல என்ற விதி மூலமாக வெற்றி அடைபவர் ஆக முடியும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.10.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணன் என்றால் எப்பொழுதும் உயர்ந்த பாக்கியத்தின் அதிகாரி!

இன்று பாக்கியத்தை உருவாக்கும் பாப்தாதா தன்னுடைய அனைத்து குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். இவ்வளவு உயர்ந்த மேலும் இவ்வளவு எளிதாகப் பிராப்தி ஆவது அந்த மாதிரி பாக்கியம் முழு கல்பத்திலும் ஆத்மாக்களாகிய உங்களைத் தவிர வேறு யாருக்குமே இருப்பதில்லை. பிராமண ஆத்மாக்கள் நீங்கள் மட்டும்தான் இந்த பாக்கியத்தின் அதிகாரி ஆவீர்கள். இந்த பிராமண ஜென்மம் இருப்பதே சென்ற கல்பத்தின் பாக்கியத்தின் அனுசாரம் தான். ஜென்மமே உயர்ந்த பாக்கியத்தின் ஆதாரத்தில் இருக்கிறது. ஏனென்றால் பிராமண ஜென்மம் சுயம் பகவான் மூலமாக கிடைக்கின்றது. அனாதி தந்தை மற்றும் ஆதி பிரம்மா மூலமாக இந்த ஆன்மீக ஜென்மம் கிடைத்திருக்கிறது. ஜென்மமே பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக ஏற்பட்டிருக்கிறது என்றால் அந்த ஜென்மம் எவ்வளவு பாக்கியம் நிறைந்ததாக இருக்கும். தன்னுடைய இந்த உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுது நினைவில் வைத்து மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் நினைவு வெளிப்படையாக இருக்கட்டும். எப்பொழுதும் மனம் மூலமாக வெளிப்படுத்துங்கள். புத்தியில் மட்டும் நிரம்பியிருக்கிறது என்று அந்த மாதிரி வேண்டாம் ஆனால் ஒவ்வொரு நடத்தை மற்றும் முகத்தில் நினைவு சொரூபமாக வெளிப்படையாக தனக்கு அனுபவம் ஆகட்டும் மற்றும் இவருடைய நடத்தையில் முகத்தில் உயர்ந்த பாக்கிய ரேகைகள் தெளிவாக தென்படுகிறது என்று மற்றவர்களுக்கும் தெரியட்டும், எத்தனை விதமான பாக்கியம் கிடைத்திருக்கிறது. அதனுடைய பட்டியல் எப்பொழுதும் புத்தியில் தெளிவாக இருக்கட்டும். டைரியில் மட்டும் பட்டியல் இருக்க வேண்டாம் ஆனால் நெற்றியின் நடுவே பாக்கியத்தின் ரேகை பிரகாசமாக தென்படட்டும்.

முதல் பாக்கியம் -ஜென்மமே பாக்கியத்தை உருவாக்குபவர் மூலமாக கிடைத்திருக்கிறது. இரண்டாவது விஷயம் -சுயம் பகவான் ஒருவரே தந்தையாகவும், ஆசிரியராகவும் சத்குருவாகவும் இருப்பது. வேறு எந்த ஆத்மாவிற்கும் மற்றும் தர்ம ஆத்மா, மகான் ஆத்மாவின் பாக்கியத்தில் இல்லை. முழு கல்பத்தில் அந்த மாதிரி யாராவது இருக்கிறார்களா? ஒருவரின் மூலமாகவே தந்தையின் உறவு மூலமாக ஆஸ்தி பிராப்தி ஆவது, ஆசிரியரின் ரூபத்தில் உயர்ந்த படிப்பு மற்றும் பதவியின் பிராப்தி ஆகிறது. சத்குருவின் ரூபத்தில் மகாமந்திரம் மற்றும் வரதானம் கிடைக்கிறது. ஆஸ்தியில் அனைத்துப் பொக்கிஷங்களின் அதிகாரத்தை அடைந்திருக்கிறீர்கள். அனைத்துப் பொக்கிஷங்கள் தான் இல்லையா? ஏதாவது பொக்கிஷத்தின் குறை இருக்கிறதா? டீச்சர்களுக்கு ஏதாவது குறை இருக்கிறதா? வீடு பெரியதாக இருக்க வேண்டும். நல்ல மாணவர்கள் இருக்க வேண்டும் -இந்தக் குறை இருக்கிறதா? இல்லை தானே. எவ்வளவிற்கு சேவை தடையின்றி அதிகரிக்கிறது என்றால் சேவையின் கூடவே சேவைக்கான சாதனங்கள் சுலபமாகவும் தானாகவும் அதிகரிக்கவே செய்யும்.

தந்தை மூலமாக ஆஸ்தி மற்றும் உயர்ந்த பாலனை (வளர்ப்பு) கிடைத்துக் கொண்டிருக்கிறது. பரமாத்மா பாலனை என்றால் எவ்வளவு பெரிய விஷயம். பரமாத்மா பாலனை செய்பவர் என்று பக்தியில் பாடுகிறார்கள் ஆனால் பாக்கியவான் ஆத்மாக்களாகிய நீங்கள் ஒவ்வொரு அடியும் பரமாத்மா பாலனை மூலமாகத்தான் நடக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்கள். பரமாத்மாவின் ஸ்ரீமத் தான் பாலனை. ஸ்ரீமத் இன்றி அதாவது பரமாத்மாவின் பாலனை இன்றி ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. அந்த மாதிரியான பாலனை இப்பொழுது தான் கிடைக்கிறது, சத்யுகத்தில் கூட கிடைப்பதில்லை. அது தேவ ஆத்மாக்களின் பாலனை மற்றும் இப்பொழுது பரமாத்மாவின் பாலனையில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். எங்களை வளர்ப்பவர் சுயம் பகவான் என்று இப்பொழுது பிரத்யட்சம் அனுபவம் மூலமாக உங்களால் சொல்ல முடியும். உள்நாட்டிலிருந்தாலும் வெளிநாட்டிலிருந்தாலும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் என்னை வளர்ப்பவர் சுயம் பரமாத்மா என்று உடனே கூறுவார். அவ்வளவு போதை இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது மெர்ஜ் (உள்ளடங்கி) ஆகி விடுகிறதா? மற்றும் எப்பொழுதாவது எமெர்ஜ் (வெளிப்படுதல்) ஆகிறது என்றிருக்கிறதா? பிறந்தவுடனேயே அளவற்ற

பொக்கிஷங்களினால் நிரம்பியிருக்கிறீர்கள், அழியாத ஆஸ்தியின் அதிகாரத்தை எடுத்து விட்டீர்கள். பிறந்தவுடனேயே திரிகாலதரிசியான சத்தியமான ஆசிரியர் மூன்று காலங்களின் படிப்பை எவ்வளவு சுலபமான விதி மூலமாக படிப்பித்து விட்டார். எவ்வளவு உயர்ந்த படிப்பு மேலும் படிப்பிப்பவரும் எவ்வளவு உயர்ந்தவர் ஆனால் யாருக்கு படிப்பிக்கப்படுகிறது? யார் மேல் உலகமே நம்பிக்கை இழந்திருந்ததோ அவர்களை நம்பிக்கைக்குரியவராக ஆக்கப்பட்டிருக்கிறது. படிப்பிக்க மட்டும் செய்யவில்லை ஆனால் படிப்பதற்கான லட்சியமே உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி அடைவது தான். பரமாத்மா படிப்பின் மூலமாக உயர்ந்த பதவியை அடைந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா, அந்த மாதிரியான பதவி முழு உலகின் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவியின் முன் எவ்வளவு உயர்ந்தது. அனாதி சிருஷ்டி சக்கரத்தில் துவாபர யுக ஆரம்பத்திலிருந்து என்னென்ன அழியக்கூடிய பதவிகள் கிடைத்திருக்கின்றனவோ அவைகளில் மிக உயர்ந்த பதவியாக முதலில் இராஜ பதவியை மகிமை செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய இராஜ பதவிக்கு முன்பு அந்த இராஜ பதவி உயர்ந்ததா என்ன? இன்றைய நாட்களில் ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி பதவி உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி ஆகும். மிகப் பெரிய படிப்பு மூலமாக தத்துவஞானி ஆவார்கள், சேர்மன், டைரக்டர் ஆகியவர்கள் ஆவார்கள். பெரிய பெரிய ஆபிசர் ஆவார்கள் ஆனால் இவை அனைத்து பதவிகளும் உங்களுக்கு எதிரே ஒன்றுமேயில்லை. உங்களுடைய இந்த ஒரு ஜென்மத்தில் பல ஜென்மங்களுக்கான உயர்ந்த பதவி அடைவதற்காக பரமாத்மாவின் கியாரன்டி (உறுதி) இருக்கிறது. மேலும் அந்த (வெளியுலக) ஒரு ஜென்ம படிப்பு மூலமாக அந்த ஒரு ஜென்மத்தில் கூட பதவி அடைவதற்கான எந்த கியாரன்டியும் இல்லை. அப்படியானால் நீங்கள் எவ்வளவு பாக்கியவான்கள். உங்களுக்கு கிடைக்கும் பதவியும் மிக உயர்ந்தது மற்றும் ஒரு ஜென்மத்தின் படிப்பு மூலமாக அனேக ஜென்மங்களின் பதவி கிடைக்கிறது. அப்படியானால் பாக்கியம் தான் இல்லையா! அந்த பாக்கியம் முகம் மூலமாக தென்படுகிறதா? நடத்தை மூலமாக தென்படுகிறதா? ஏனென்றால் நடத்தை மூலமாக மனிதனின் நிலை தெரிந்து விடுகிறது. எனவே உங்களுடைய இவ்வளவு உயர்ந்த பாக்கியத்தின் நிலை தென்படும் அளவிற்கு உங்களுடைய நடத்தை இருக்கிறதா? அல்லது இப்பொழுதும் சாதாரணமாக தென்படுகிறீர்களா? என்னவாக இருக்கிறது? சாதாரணத்தில் தன்மை தென்படட்டும். உங்களுடைய ஜடச்சிலைகள்

மகான் தன்மையை இதுவரை அனுபவம் செய்விக்கின்றன. இப்பொழுது கூட எப்படிப்பட்ட ஆத்மாவையும் லட்சுமி நாராயணன், சீதா ராம் மற்றும் தேவிகள் ஆக்கி விடுகிறார்கள் என்றால் சாதாரண நபரிலும் மகான் தன்மையை அனுபவம் செய்து தலை வணங்குகிறார்கள் இல்லையா? உண்மையிலேயே இவர் நாராயணன் மற்றும் இராம் இல்லையென்று தெரிந்தும் இருக்கிறார்கள். அப்படி அலங்கரிக்கப்பட்டிருக்கிறார்கள், இருந்தாலும் அந்த நேரம் மகான் தன்மையின் காரணத்தினால் தலை வணங்குகிறார்கள். மனதால் நினைத்து பூஜை செய்கிறார்கள் ஆனால் நீங்களோ சுயம் சைத்தன்ய தேவி தேவதைகளின் ஆத்மாக்கள் ஆவீர்கள். சைத்தன்ய ஆத்மாக்கள் உங்களிடமிருந்து எவ்வளவு மகான் தன்மை அனுபவம் ஆக வேண்டும். அப்படி ஆகிறதா? உங்களுடைய உயர்ந்த பாக்கியத்தை கை மற்றும் தலை மூலமாக இல்லாமல் மனதால் நமஸ்காரம் செய்யட்டும். மனதால் உங்களுடைய பாக்கியத்தை அனுபவம் செய்து தானும் குஷியில் நடனமாடட்டும்.

இவ்வளவு உயர்ந்த படிப்பின் பிராப்தி உயர்ந்த பாக்கியமாகும். மனிதர்கள் படிப்பு படிப்பதே இந்த வாழ்க்கையில் உடலை நிர்வகிப்பதற்கு வேண்டிய சம்பாத்தியம் செய்வதற்காக, அதைத்தான் சோர்ஸ் ஆஃப் இன்கம் (வருமானத்திற்கான ஆதாரம்) என்று கூறுகிறார்கள். உங்களுடைய படிப்பு மூலமாக சோர்ஸ் ஆஃப் இன்கம் எவ்வளவு? நிரம்பி வழியுமல்லவா. உங்களுடைய வருமானத்தின் கணக்கு என்ன? அவர்களுடைய கணக்கோ லட்சங்களில் கோடிகளில் இருக்கும் ஆனால் உங்களுடைய கணக்கு என்ன? உங்களுடைய வருமானம் எவ்வளவு? ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு அப்படி முழு நாளிலும் எத்தனை அடி எடுத்து வைக்கிறீர்கள். மேலும் எத்தனை மடங்கு சேமிக்கிறீர்கள்? இந்த மாதிரியான வருமானம் வேறு யாருக்காவது இருக்கிறதா? உங்களுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம். அப்படியானால் தன்னுடைய படிப்பின் பாக்கியத்தை வெளித்தோன்றும் அளவிற்கு அனுபவம் செய்யுங்கள். யாரிடமாவது கேட்கிறீர்கள் என்றால் பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரிகளோ ஆகி விட்டோம் என்று கூறுகிறார்கள் ஆனால் பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரி என்றால் உயர்ந்த பாக்கியத்தின் ரேகை நெற்றியில் பிரகாசமாக தென்பட வேண்டும். அப்படியின்றி பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரியாகத்தான் இருக்கிறோம். கிடைத்து விடும் ஏதாவது ஆகித்தான் விடுவோம், அந்தப் பாதையில் சென்று

கொண்டுதான் இருக்கிறோம். ஆகித்தான் விட்டோம் இல்லையா...? ஆகி விட்டீர்களா? அல்லது பாக்கியத்தைப் பார்த்து பறந்து கொண்டிருக்கிறீர்களா? இதில் ஆகித்தான் விட்டோம். ஆகிக் கொண்டுதான் இருக்கிறோம், நடந்து கொண்டுதான் இருக்கிறோம் இந்த வார்த்தைகள் யாருடையது? உயர்ந்த பாக்கியவானுடைய வார்த்தைகளா இவை? பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரி என்றால் மகிழ்ச்சியோடு அன்பு நிறைந்த வாழ்க்கையை வாழ்பவர்கள். எப்பொழுதாவது கட்டாயத்தில் பேரில், எப்பொழுதாவது அன்போடு அந்த மாதிரி இல்லை. எப்பொழுதாவது ஏதாவது பிரச்சனை வருகிறதென்றால் என்ன கூறுகிறீர்கள்? விரும்பவில்லை ஆனால் கட்டாயமாகி விட்டது. பாக்கிவான் என்றால் கட்டாயங்கள் முடிவடைவது, அன்போடு நடந்து கொள்பவர். விரும்பத்தான் செய்கிறோம் ஆனால் இந்த மாதிரியான பாஷை பாக்கியவான் பிராமண ஆத்மாக்களுடையது இல்லை. பாக்கியவான் ஆத்மாக்கள் அன்பின் ஊஞ்சலில் போதையில் பறப்பார்கள், பறக்கும் கலையின் மகிழ்ச்சியில் இருப்பார்கள். கட்டாயங்கள் அவர்களுக்கு எதிரில் வர முடியாது புரிந்ததா? தன்னுடைய உயர்த்த பாக்கியத்தை உள்ளடக்கி வைக்காதீர்கள். வெளிக் கொண்டு வாருங்கள்.

மூன்றாவது விஷயம் சத்குரு மூலமாக என்ன பாக்கியம் கிடைத்திருக்கிறது? முதலில் மகாமந்திரம் கிடைத்தது. சத்குருவின் மகாமந்திரமாக என்ன கிடைத்தது? தூய்மையாகுங்கள். யோகியாகுங்கள். பிறந்தவுடனேயே இந்த மகாமந்திரம் சத்குரு மூலமாக கிடைத்தது. இந்த மகாமந்திரம் தான் அனைத்து பிராப்திகளின் சாவி ஆகும், இது அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைத்திருக்கிறது. வாழ்க்கை, தூய்மையான வாழ்க்கைதான் அனைத்து பிராப்திகளின் ஆதாரமாகும். எனவே இது தான் சாவி ஆகும். ஒருவேளை தூய்மையில்லை, யோகி வாழ்க்கை இல்லை என்றால் அதிகாரியாக இருந்தும் கூட அதிகாரத்தின் அனுபவம் செய்ய முடியாது. மகாமந்திரம் அனைத்து பொக்கிஷங்களின் அனுபவத்தின் சாவி ஆகும். அந்த மாதிரி சாவியின் மகாமந்திரம் உயர்ந்த பாக்கியமாக சத்குரு மூலமாக அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. மேலும் கூடவே சத்குரு மூலமாக வரதானங்கள் பிராப்தியாகியிருக்கின்றன. வரதானங்களின் பட்டியலோ மிகவும் நீளமானது இல்லையா. எத்தனை வரதானம் கிடைத்திருக்கிறது?

அவ்வளவு வரதானங்களின் பாக்கியம் பிராப்தியாகியிருக்கிறது. வரதானங்களினாலேயே முழு பிராமண வாழ்க்கையும் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் மேலும் நடத்த முடியும். எத்தனை வரதானங்கள், பட்டியல் தெரியுமா? அப்படி ஆஸ்தியும் இருக்கிறது. படிப்பும் இருக்கிறது மற்றும் மகா மந்திரத்தின் சாவி வரதானங்களின் சுரங்கமும் இருக்கிறது. அப்படியானால் எவ்வளவு பாக்கியவானாக ஆகி விட்டீர்களா அல்லது மறைத்து வைத்திருக்கிறீர்களா? பின்பு கடைசியில் திறப்பீர்களா? வெகு காலமாக பாக்கியத்தை அனுபவம் செய்யவர் கடைசியிலும் பல கோடி மடங்கு பாக்கியவானாக பிரத்யக்ஷம் ஆவார். இப்பொழுது இல்லையென்றால் கடைசியிலும் இல்லை. இப்பொழுது இருக்கிறது என்றால் கடைசியிலும் இருக்கிறது. சம்பூர்ணமாக கடைசியில் தான் ஆக வேண்டும் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். சம்பூர்ணமான வாழ்க்கையின் அனுபவம் இப்பொழுதிருந்தே ஆரம்பமானால் கடைசியில் பிரத்யக்ஷ ரூபத்தில் வருவீர்கள். இப்பொழுது தனக்கும் அனுபவம் ஆகட்டும். மற்றவர்களுக்கும் அனுபவம் ஆகட்டும், நெருக்கத்தில் உறவில் யார் வருகிறார்களோ அவர்களுக்கும் அனுபவம் ஆகட்டும். பின்பு கடைசியில் உலகத்தில் பிரத்யக்ஷம் ஆகும். புரிந்ததா?

பாப்தாதா இன்று அனைத்து குழந்தைகளின் உயர்ந்த பாக்கிய ரேகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வளவு பாக்கியத்தைத் தந்தைப் பார்த்தாரோ அந்தளவிற்கு அனுபவத்தை குழந்தைகள் குறைவாக செய்கிறார்கள். பாக்கிய சுரங்கம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது ஆனால் சிலருக்கு காரியத்தில் ஈடுபடுத்தத் தெரியும் மற்றும் சிலருக்கு காரியத்தில் ஈடுபடுத்தத் தெரியாது. எவ்வளவு ஈடுபடுத்த முடியுமோ அவ்வளவு ஈடுபடுத்துவதில்லை அனைவருக்கும் ஒரே மாதிரி தான் கிடைத்திருக்கிறது ஆனால் பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தி தந்தையின் பொக்கிஷத்தை தன்னுடைய பொக்கிஷமாக அனுபவம் செய்வதில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். தந்தை வரிசைக்கிரமமாக கொடுக்கவில்லை. அனைவருக்கும் நம்பர் ஒன் ஆகத்தான் கொடுத்திருக்கிறார் ஆனால் காரியத்தில் ஈடுபடுத்துவதில் அவர்கள் தனக்குத் தானோ நம்பரை ஏற்படுத்தி விட்டார்கள். புரிந்ததா, நம்பர் ஏன் உருவாகிறது? எவ்வளவு உபயோகிப்பீர்களோ, காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அவ்வளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். உள்ளடக்கி வைத்துக்

கொண்டீர்களென்றால் அதிகரிக்காது. மேலும் தானும் அனுபவம் செய்ய மாட்டார். மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்க முடியாது. எனவே நடத்தை மற்றும் முகத்தில் கொண்டு வாருங்கள், புரிந்ததா, என்ன செய்ய வேண்டுமென்று? என்ன நம்பர் கிடைத்தாலும் நல்லதா? 108ல் வரவில்லையென்றால் 16,000-ல் கூட கிடைத்து விடட்டும், ஏதாவது ஒன்று ஆவோம் இல்லையா ஆனால் 16,000-ன் மாலை எப்பொழுதும் ஜபிக்கப்படுவதில்லை, எங்காவது எப்பொழுதாவது ஜபிப்பார்கள். 108'ன் மாலையையேயா எப்பொழுதும் ஜபித்துக் கொண்டே இருப்பார்கள். இப்பொழுது நான் யார்? இதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை நீங்களோ 16,000-ல் வருவீர்கள் என்று தந்தை கூறுகிறார் மற்றும் வேறு சிலரும் கூறுகிறார்கள் என்றால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? ஏற்றுக் கொள்வீர்களா? கேள்விக்குறி ஆரம்பம் ஆகி விடும் இல்லையா. எனவே நான் யார் என்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள மிக உயர்ந்த பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, அனைத்து பிறந்தவுடனேயே பரமாத்ம ஜென்மத்தின் அதிகாரத்தைப் பிராப்தி அடைந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து உயர்ந்த ஆஸ்தி மற்றும் பரமாத்ம பாலனையை எடுக்கக்கூடியவர்களுக்கு, சத்தியமான ஆசிரியர் மூலமாக உயர்ந்த படிப்பின் உயர்ந்த வருமானம் செய்பவர்களுக்கும் மற்றும் சத்குரு மூலமாக மகாமந்திரம் மற்றும் அனைத்து வரதானங்கள் பிராப்தி செய்யக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பு செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: சரியான சேவை மற்றும் சரியான நினைவின் அடையாளம் தடையின்றி இருப்பது மற்றும் தடைகளற்றவராக ஆவது!** எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தின் பாடல் தானாகவே மனதில் பாடிக் கொண்டிருக்கிறதா? இது ஆரம்பமும் முடிவும் இல்லாத அழியாத பாடல். இதைப் பாட வைக்க வேண்டியது இல்லை தானாகவே பாடுகிறது. எப்பொழுதும் இந்தப் பாடல் ஒலிப்பது என்றால் எப்பொழுதுமே தன்னுடைய குஷியின் பொக்கிஷத்தை அனுபவம் செய்வது. எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா? பிராமணர்களின்

வேலையே குஷியாக இருப்பது மற்றும் குஷியைக் கொடுப்பது. இந்த சேவையிலேயே எப்பொழுதும் பிஸியாக இருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது மறந்தும் போய் விடுகிறதா? மாயா வருகிறது என்றால் என்ன செய்கிறீர்கள்? எவ்வளவு நேரம் மாயா இருக்கிறதோ அவ்வளவு நேரம் குஷியின் பாடல் நின்று விடுகிறது ஒலிப்பதில்லை. தந்தையின் துணை எப்பொழுதும் இருக்கிறது என்றால் மாயா வர முடியாது. மாயா வருவதற்கு முன்பு தந்தையின் துணையிலிருந்து பிரித்து தனியாக ஆக்குகிறது. பின்பு முற்றுகையிடுகிறது. ஒருவேளை தந்தை உடன் இருக்கிறார் என்றால் மாயா நமஸ்காரம் செய்யும், முற்றுகையிடாது. அப்படியானால் எப்பொழுது மாயாவை என்னுடைய எதிரி என்று மிகவும் நன்றாக தெரிந்து கொண்டீர்களோ பின்பு ஏன் வர விடுகிறீர்கள்? துணையை (பாபாவின்), விட்டு விடுகிறீர்கள் இல்லையா, எனவே மாயா வருவதற்கான வாயில் கிடைத்து விடுகிறது. வாசலில் ஒரு பூட்டு அல்ல இரண்டு பூட்டு போடுங்கள். இன்றைய நாட்களில் ஒரு பூட்டு உபயோகப்படுத்தப் படுவதில்லை. அப்படி இரட்டை பூட்டு -நினைவு மற்றும் சேவை. சேவையும் கூட சுயநலமற்ற சேவை, இது தான் பூட்டு. ஒருவேளை சுயநலமற்ற சேவை இல்லையென்றால் அந்த பூட்டு பலஹீனமாக ஆகி விடும். திறந்து விடும். நினைவு கூட சக்திசாலியானதாக வேண்டும். சாதாரண நினைவு இருக்கிறதென்றால் கூட பூட்டு என்று சொல்ல மாட்டோம், எனவே எப்பொழுதும் சோதனை செய்யுங்கள் -நினைவோ இருக்கிறது ஆனால் சாதாரண விளைவு இருக்கிறதா அல்லது சக்திசாலியான நினைவு இருக்கிறதா? அதே போல் சேவை செய்கிறீர்கள்? ஆனால் சுயநலமற்ற சேவையா அல்லது ஏதாவது சுயநலம் நிரம்பியிருக்கிறதா? சேவை செய்தும் கூட, நினைவில் இருந்தும் கூட ஒருவேளை மாயா வருகிறது என்றால் சேவை மற்றும் நினைவில் அவசியம் ஏதோ குறை இருக்கிறது என்றாகும். நான் எப்பொழுதும் குஷியில் பாடல் பாடும் உயர்ந்த பாக்கியவான் ஆத்மா என்ற நினைவிலேயே முன்னேறிக் கொண்டிருங்கள். சரியான யோகா மற்றும் சரியான சேவை யின் அடையாளமே தடையின்றி இருப்பது மற்றும் தடைகளற்றவராக ஆவது. தடையின்றி இருக்கிறீர்களா அல்லது எப்பொழுதாவது தடைகள் வருகிறதா? பின்பு சில நேரம் தேர்ச்சி பெற்று விடுகிறீர்கள், சில நேரம் கொஞ்சம் தோல்வி அடைந்து விடுகிறீர்கள். ஏதாவது ஒரு விஷயம் வருகிறது அதில் ஒருவேளை இது ஏன், இது என்ன என்று எந்த விதமான லேசான ஃபீலிங் (feeling உணர்வு வருகிறது)

என்றால் அது தடை ஆகும். எனவே வீணான ஃபீலிங்'கிலிருந்து விடுபட்டவராகவும் ஃபீலிங் அணுக முடியாத ஆத்மாவாக ஆகி விட்டோமென்றால் மாயாயை வென்றவர் ஆகி விடுவோமென்று எப்பொழுதும் நினையுங்கள். இருந்தாலும் பாருங்கள் தந்தையின் குழந்தையாக ஆகி விட்டீர்கள், தந்தையினுடையவராக ஆவது என்பது எவ்வளவு குஷியான விஷயம், பகவானின் இவ்வளவு நெருக்கமான உறவில் வருவோமென்று ஒருபொழுதும் கனவில் கூட நினைத்ததில்லை ஆனால் உண்மையிலேயே நடைமுறையில் ஆகி விட்டோம். அப்படியானால் என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள். நான் எப்பொழுதும் குஷி என்ற பாடல் பாடுபவன். இந்த குஷியின் பாடல் ஒருபொழுதும் முடிவடைய முடியாது. டீச்சர்களின் அர்த்தமே தன்னுடைய ஃபீச்சர்ஸ் (features லட்சணங்கள்) மூலமாக அனைவருக்கும் பரிஸ்தாவின் லட்சணங்களை அனுபவம் செய்விப்பவர். அந்த மாதிரி டீச்சர்களா? சாதாரண ரூபம்  தென்பட வேண்டாம். எப்பொழுதும் பரிஷ்தா ரூபம் தென்படட்டும் ஏனென்றால் டீச்சர்கள் பொறுப்பில் இருப்பவர்கள் அல்லவா. எனவே யார் பொறுப்பில் இருப்பவர் ஆகிறாரோ மேலும் அவர் சுயம் என்ன அனுபவம் செய்கிறாரோ அதை மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விப்பார். பொறுப்பில் இருப்பவர்களாக ஆகியிருக்கிறீர்கள் இது பாக்கியம் தான். இப்பொழுது இந்த பாக்கியத்தின் அனுபவத்தை தன்னுள் அதிகரியுங்கள் மற்றும் மற்றவர்களுக்கும் அனுபவம் செய்வியுங்கள். அனைத்தையும் விட முக்கியமான விஷயம் அனுபவிமூர்த்தி ஆவதாகும்.

**குரூப்-2: என்னுடைய பாபா என்று நினைவில் கொண்டு வருவது என்றால் அனைத்து பிராப்திகளின் பொக்கிஷம் நிரம்புவது ஆகும்!**

எப்பொழுதும் சக்திசாலியாக இருப்பதற்கான அனைத்தையும் விட சுலபமான விதி என்ன, எந்த விதி மூலமாக சுலபமாகவும் எப்பொழுதும் தடைகள் அற்றவராகவும் இருக்க முடியும் மேலும் ஏறும் கலையின் அனுபவம் செய்ய முடியும்? அனைத்தையும் விட சுலபமான விதி என்னவென்றால் வேறு எதுவும் மறந்து விட்டாலும் ஒரு விஷயத்தை ஒருபொழுதும் மறக்க வேண்டாம்- என்னுடைய பாபா தந்தை. என்னுடைய பாபா என்று இதயப் பூர்வமாக ஏற்றுக் கொள்வது, இது தான் முன்னேறுவதற்கான அனைத்தையும் விட சுலபமான விதியாகும். என்னுடையது, என்னுடையது என்ற உணர்விற்கான சம்ஸ்காரமோ வெகு

காலமாக இருக்கவே இருக்கிறது. அதே சம்ஸ்காரத்தை மாற்ற மட்டும் வேண்டும். அநேக என்னுடையதை ஒரு என்னுடைய பாபா என்பதில் உள்ளடக்க வேண்டும். ஒருவரை நினைவு செய்வது சுலபம் தான் இல்லையா? மேலும் என்னுடைய ஒன்றில் அனைத்தும் வந்து விடுகிறது. அப்படி அனைத்தையும் விட சுலபமான விதி என்னுடைய பாபா என்பதாகும். என்னுடைய என்ற வார்த்தை அப்படிப்பட்டது, விரும்பாவிட்டாலும் நினைவில் வருகிறது. என்னுடையதை நினைவு செய்ய வேண்டியதாக இருப்பதில்லை ஆனால் இயல்பாகவே நினைவு வருகிறது. மறப்பதற்கு முயற்சி செய்தாலும் கூட என்னுடையது மறப்பதில்லை. யோகா ஒருவேளை பலகீனமாக இருக்கிறது என்றாலும் கூட அதற்கு காரணம் என்னுடையது என்பது தான். மேலும் யோகா சக்திசாலியாக இருக்கிறது என்றாலும் அதற்கும் காரணம் என்னுடையது தான், என்னுடைய பாபா என்றால் யோகா சக்தி சாலி ஆகி விடுகிறது. மேலும் என்னுடைய உறவினர், என்னுடைய பொருள் என்ற இந்த அநேக என்னுடையவை நினைவு வருகிறது என்றால் யோகா பலகீனமாவதாகும். அப்படியானால் சுலபமான விதி மூலமாக ஏன் முயற்சியை அதிகரித்துக் கொள்ளக்கூடாது. விதி மூலமாகத் தான் ஸித்தி (வெற்றி) பிராப்தி ஆகிறது. ரித்தி ஸித்தி அற்ப காலத்திற்கானதாக இருக்கிறது ஆனால் விதி மூலமாக பிராப்தி ஆகும் ஸித்தி அழியாததாக இருக்கிறது. அப்படி இங்கு ரித்தி ஸித்தியின் விஷயம் இல்லை ஆனால் விதி மூலமாக ஸித்தியை பிராப்தி செய்ய வேண்டும். விதியைக் கடைபிடிக்கத் தெரியுமா அல்லது கடினமானதாக இருக்கிறதா? பலகீனமானவராக ஆவது என்றால் கடினம் அனுபவம் ஆவதாகும். பலகீனமின்றி கடினம் இருப்பதில்லை. அப்படியானால் நீங்கள் பலகீனமானவர்களா? அல்லது மாயா சில நேரம் பலகீனமாக்கி விடுகிறதா? ஒருவேளை என்னுடைய பாபா நினைவு வருகிறது என்றால் தந்தை சர்வ சக்திவான் இல்லையா! நினைவு வருவதினால் தன்னுடைய மாஸ்டர் சர்வ சக்திவானின் சொரூபம் நினைவு வருகிறது என்னுடைய பாபா என்று கூறினாலேயே தந்தை யார் என்ற அந்த நினைவு வருகிறது. மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவதினால் பலகீனமானவராகவும் ஆவதில்லை. கடினம் அனுபவம் செய்பவராகவும் ஆவதில்லை. எப்பொழுதும் சுலபமாக அனுபவம் ஆகிறது. எவ்வளவிற்கு எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அவ்வளவு எளிதிலும் எளிதாக அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும்

-என்னுடைய பாபா. என்னுடைய பாபா நினைவில் வருகிறது மேலும் அனைத்து பிராப்திகளின் பொக்கிஷம் அனுபவம் ஆவது. அப்படி பொக்கிஷம் நிரம்பி இருக்கிறது இல்லையா, அனைத்து பொக்கிங்களும் நிரம்பி இருக்கிறதா? அல்லது சில நிரம்பியிருக்கிறது மற்றும் சில நிரம்பவில்லையா? சுகத்தின் அனுபவமோ ஆகிறது ஆனால் அமைதியின் அனுபவம் ஆவதில்லை. சக்தியின் அனுபவம் ஆவதில்லை என்று அப்படியில்லை. அனைத்து பொக்கிஷங்களின் அதிபதியின் குழந்தை. தந்தையின் பொக்கிஷம் என்பது என்னுடைய பொக்கிஷம். அப்படி எவ்வளவு நிரம்பியிருப்பீர்களோ, நிரம்பிய பொருள் ஒருபொழுதும் ஆடாது. கொஞ்சம் காலியானாலும் ஆடும். அப்படி எப்பொழுதும் நிரம்பியிருப்பது என்றால் எப்பொழுதும் ஆடாமல் இருப்பது. குழப்பம் இல்லாத நிலை. ஒருபொழுதும் புத்தி சஞ்சலம் அடைய முடியாது. ஏதாவது விகாரத்தின் வசமாவது என்றால் புத்தி சஞ்சலம் ஆவது, ஆடாத அசையாதவர்களாக இருக்கிறீர்கள் மேலும் எப்பொழுதும் இருப்பீர்கள். நல்லது.

**குரூப்-3: நினைவு மூலமாக அனைத்து காரியங்களும் தானாகவே வெற்றியடைகின்றன, சொல்வதற்கும் கேட்பதற்கும் அவசியம் இல்லை!** எப்பொழுதும் மற்றும் சுலபமாக யார் நினைவில் வருகிறார்? (பாபா) பாபாவும் ஏன் நினைவில் வருகிறார்? (அன்பிற்குரியவர்) அப்படி யார் அன்பிற்குரியவராக இருக்கிறாரோ அவரை நினைவு செய்ய வேண்டியதில்லை அவருடைய நினைவு தானாக வருகிறது. அவர் மேல் உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறது. உண்மையான அன்பு இருக்கிறது, சுயநலமற்ற அன்பு இருக்கிறது. அப்படி அனைவரையும் விட அன்பிற்குரியவர் யார்? தந்தை, அப்படியானால் தந்தையை மறப்பது கடினமா அல்லது நினைவு செய்வது கடினமா? எப்பொழுதாவது ஒருமாதிரியான சூழ்நிலை வருகிறது என் நிலை எப்படி ஆகி விடுகிறது? பின்பு நினைவு செய்ய வேண்டியது இருக்கிறதா? அல்லது நினைவு தானாக வருகிறதா? என்ன ஆகிறது? சூழ்நிலையின் அர்த்தமே வெளியில் இருந்து வருவது. தன்னுடையதில்லை. மற்றது. மற்றவர்கள் மூலமாக வரும் நிலையைத்தான் சூழ்நிலை என்று கூறப்படுவது. அப்படி சூழ்நிலை சக்திசாலியாக இருக்கிறதா? அல்லது தன்னுடைய நிலை சக்திசாலியாக இருக்கிறதா? ஆனால் அந்த நேரம் என்ன ஆகிறது? அந்த நேரம் சூழ்நிலை சக்தி நிறைந்ததாக ஆகி விடுகிறது. பின்பு நினைவு

செய்ய வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய பாபா, அன்பான பாபா என்றால் அன்பானவரை ஒருபொழுதும் மறக்க முடியாது. மேலும் சுயநலமற்ற அன்பு தந்தையைத் தவிர வேறு எந்த ஆத்மாவிடமிருந்தும் கிடைக்க முடியாது ஆத்மாவிற்கு தனக்காக ஏதாவது சுயநலம் இருக்கிறது. ஆனால் பரமாத்மா சுயநலம் அற்றவர். ஏன்? ஏனென்றால் பரமாத்மா கொடுப்பவர், ஆத்மா வாங்கிக் கொடுப்பவர். ஆத்மா தாமே கொடுப்பவர் இல்லை ஆனால் வாங்கிக் கொடுக்க முடியும். மேலும் பரமாத்மா அவரே கொடுப்பார். நீங்கள் யார்? மாஸ்டர் வள்ளல் தான் இல்லையா! உண்மையிலேயே கொடுப்பது என்றால் அதிகரிப்பது, எவ்வளவு கொடுக்கிறீர்களோ அவ்வளவு அதிகரிக்கிறது. அழியும் பொக்கிஷம் கொடுப்பதினால் குறைகிறது. மேலும் அழியாத பொக்கிஷம் கொடுப்பதினால் அதிகரிக்கிறது. ஒன்றைக் கொடுங்கள் ஆயிரம் அடையுங்கள். அப்படியானால் கொடுக்கத் தெரியுமா? அல்லது எடுக்க மட்டும் தெரியுமா? யார் கொடுக்க முடியும்? யார் அவரே நிரம்பியிருக்கிறாரோ. ஒருவேளை தானே குறைவாக இருக்கிறார் என்றால் கொடுக்க முடியாது. அப்படி வள்ளல் என்றால் எப்பொழுதும் நிரம்பியிருப்பவர் முழுமையாக இருப்பவர். அப்படியானால் சுலபமான நினைவாக எது ஆனது? அன்பான பாபா! ஏதாவது தேவைக்காக நினைவு செய்யாதீர்கள். தேவைக்காக நினைவு செய்வதில் கடினம் ஏற்படும். அன்போடு நினைவு செய்வது மிகச்சுலபமாக இருக்கும். தேவைக்காக நினைவு செய்வது நினைவே இல்லை. வேண்டுகோள் விடுப்பதாகும். அப்படி வேண்டுகோள் விடுக்கிறீர்களா? இந்த மாதிரி செய்து விடுங்கள். இந்த மாதிரி செய்யுங்களேன். இந்த மாதிரி இருக்க வேண்டும் இல்லையா... இந்த மாதிரி கூறுகிறீர்களா? நினைவு மூலமாக அனைத்து காரியங்களும் தானாகவே வெற்றியாகி விடுகின்றன. கூறுவதற்கு அவசியம் இல்லை. வெற்றி பிறப்புரிமை ஆகும். அதிகாரம் கேட்பதால் கிடைப்பதில்லை. தானாகவே கிடைக்கிறது. அப்படி நீங்கள் அதிகாரியா அல்லது கேட்பவரா? அதிகாரி என்னுடைய அதிகாரம் என்று எப்பொழுதும் போதையில் இருப்பார். கேட்பது முடிந்துவிட்டது இல்லையா. தந்தையிடம் கூட கேட்க வேண்டாம். இதைக் கொடுத்து விடுங்கள், கொஞ்சம் குஷி கொடுத்து விடுங்கள், கொஞ்சம் அமைதி கொடுத்து விடுங்கள்... அப்படி கேட்கிறீர்களா? தந்தையின் பொக்கிஷம் என்னுடைய பொக்கிஷம். எப்பொழுது என்னுடைய பொக்கிஷம் என்றால் கேட்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது. அப்படி அதிகாரி வாழ்க்கையின் அனுபவம்

செய்பவர்கள் தான் இல்லையா. அதேக ஜென்மங்கள் கேட்பவர்களாக இருந்தீர்கள். இப்பொழுது அதிகாரி ஆகியிருக்கிறீர்கள். எப்பொழுதும் இந்த அதிகாரத்தின் போதையில் இருங்கள். பரமாத்மா அன்பின் அனுபவி ஆத்மாக்கள் நீங்கள். எனவே எப்பொழுதும் இந்த அனுபவத்தின் மூலமாக சகஜயோகியாகி முன்னேறிச்சென்று கொண்டேயிருங்கள். அதிகாரி ஆத்மாக்கள் கனவில் கூட கேட்க முடியாது. குழந்தையிலிருந்து எஜமானனாக இருப்பவர்கள் நீங்கள். நல்லது.

**குரூப்-4: ஏக்ரஸ் (ஒருமுகமான) நிலையை உருவாக்குவதற்காக ஒருவரின் நினைவிலிருங்கள், டிரஸ்டி ஆகுங்கள்!** எப்பொழுதும் ஏக்ரஸ் நிலையில் நிலைத்திருப்பதற்கான எளிதான விதி என்ன? ஒருவரின் நினைவு ஏக்ரஸ் நிலையை உருவாக்குகிறது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. ஏனென்றால் ஒருவரில் அனைத்தும் அடங்கியிருக்கிறது. எப்படி விதையில் அனைத்து விஷயங்களும் அடங்கியிருக்கிறது இல்லையா! மரத்தின் ஒவ்வொன்றையும் நினைவு செய்வது கடினம் ஆனால் ஒரு விதையை நினைவு செய்தீர்கள் என்றால் அனைத்தும் சுலபமாகி விடுகிறது. தந்தையும் விதை ரூபமாக இருக்கிறார். அவரில் அனைத்து உறவுகளின், அனைத்து பிராப்திகளின் சாரம் அடங்கியிருக்கிறது. ஒரு தந்தையை நினைவு செய்வது என்றால் சார சொரூபம் ஆவது. அப்படி ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று இந்த ஒருவரின் நினைவு ஏக்ரஸ் நிலையை உருவாக்குகிறது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அல்லது குடும்பத்தில் இருக்கிறீர்கள் என்றால் இன்னொருவர் மற்றொருவர் இருக்கிறார்களா? என்னுடைய குழந்தை, என்னுடைய குடும்பம் என்று இந்த மாதிரி இல்லையா? அப்படியானால் ஒரு தந்தை என்று இல்லை தானே. என்னுடைய குடும்பமா? அல்லது உன்னுடைய குடும்பமா? டிரஸ்டியாக இருந்து கவனிக்கிறீர்களா அல்லது குடும்பஸ்தனாகி கவனிக்கிறீர்களா? டிரஸ்டி என்றால் உன்னுடையது மேலும் குடும்பஸ்தன் என்றால் என்னுடையது. அப்படியானால் நீங்கள் யார்? என்னுடையது, என்னுடையது என்று இருந்து என்ன கிடைத்தது? என்னுடைய இது, என்னுடைய இது… என்னுடைய, என்னுடைய என்ற விஸ்தாரத்தினால் என்ன கிடைத்தது? ஏதாவது கிடைத்ததா? அல்லது இழந்தீர்களா? எவ்வளவு என்னுடையது என்னுடையது என்று கூறினீர்களோ, அந்தளவு என்னுடையது எதுவுமே இல்லாமல் ஆகி விட்டது. டிரஸ்டி வாழ்க்கை

எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது. கவனித்துக் கொண்டும் எந்த சுமையும் இல்லை. எப்பொழுதும் லேசாக இருக்கும் நிலை. பாருங்கள் குடும்பஸ்தனாகி சுமையைத் தூக்கி தூக்கி என்ன நிலைமை ஆகி விட்டது. உடலையும் இழந்தீர்கள், மனதையும் அமைதியில்லாமல் ஆக்கினீர்கள் மேலும் உண்மையான செல்வத்தையும் இழந்தீர்கள். உடலை நோயானதாக ஆக்கினீர்கள், மனதை அமைதியில்லாமல் ஆக்கினீர்கள் மேலும் செல்வத்தில் எந்த சக்தியும் இல்லாமல் ஆகி விட்டது. இன்றைய ஆயிரம் ரூபாய் முந்தைய காலத்தின் ஒரு ரூபாய்க்கு சமம் அப்படி செல்வத்தின் சக்தி சென்று விட்டது இல்லையா! இப்பொழுது சுமை தூக்குவதின் அனுபவத்தையும் செய்து விட்டீர்கள் மேலும் லேசாக இருப்பதின் அனுபவத்தையும் செய்து விட்டீர்கள் என்பதினால் அனுபவசாலிகள் ஒருபொழுதும் ஏமாற்றம் அடைய மாட்டார்கள். எப்பொழுதாவது ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவேளை மாயாவிடம் ஏமாற்றம் அடைகிறீர்கள் என்றால் ஏமாற்றம் அடைவதின் அடையாளம் என்னவாக இருக்கிறது. துக்கத்தின் அலை. கொஞ்சமாவது துக்கத்தின் அலை எண்ணத்தில் கூட வருகிறது என்றால் அவசியம் எங்கோ ஏமாற்றம் அடைந்திருக்கிறார் என்பதாகும். எனவே எந்த விஷயத்தில் ஏமாற்றம் கிடைத்தது, ஏன் துக்க அலைகள் வந்தன என்று சோதனை செய்யுங்கள். சுகம் அளிப்பவரின் குழந்தைகள் தான் நீங்கள், இல்லையா! அப்படி சுகமளிப்பவரின் குழந்தைகளுக்கு துக்க அலைகள் வர முடியுமா? கனவு கூட மாறி விட்டது. சுகத்தின் கனவு வரட்டும், குஷியின் கனவு வரட்டும், சேவையின் கனவு வரட்டும், தந்தையின் சந்திப்பைக் கொண்டாடும் கனவு வரட்டும். சம்ஸ்காரமும் மாறி விட்டது என்றால் கனவும் மாறி விட்டது. நல்லது.

**குரூப்-5: யார் நஷ்டோ மோகா ஆகி நினைவு சொரூபமாக இருக்கிறாரோ அவர்தான் எவர் ரெடி ஆனவர்!** சதா தன்னை சர்வ பிராப்தி ஸ்வரூபமான சிரேஷ்ட ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? ஏனெனில் பிராப்தி சொரூபம் தான் பிறருக்கும் சர்வ பிராப்திகளையும் செய்ய வைக்கக் கூடியதாகும். கொடுப்பதில் தானாகவே பெறுவதும் அடங்கி உள்ளது! இப்போது தனது சகோதர-சகோதரிகளின் வறிய நிலையைப் பார்த்து கருணை வருகிறது அல்லவா? எப்போது பரமாத்மாவின் பிராப்திகளுக்கு அதிகாரி ஆகி விட்டீர்களோ, மனதில் அடைந்து விட்டேன் என்ற பாடலைப் பாடுகிறீர்கள் தானே? அடைய

வேண்டியதை அடைந்து விட்டேன் (பானா தா ஸோ பா லியா...). சம்பன்னம் ஆகி விட்டீர்கள். இப்படி சம்பன்னம் ஆகி விட்டீர்களா அல்லது வினாசம் வரை ஆவீர்களா? ஒருவேளை நேரம் உங்களை சம்பன்னம், சம்பூரணம் ஆக்கியது என்றால் படைப்பு சக்திசாலியானதா அல்லது படைப்பவரா? எனவே நேரத்தை ஆக்கக்கூடாது ஆனால் நேரத்தை அருகில் கொண்டு வர வேண்டும். நேரத்திற்காக காத்திருப்பவர்களாக ஆகக் கூடாது. எப்போது அடைந்து விட்டீர்களோ, அடைந்த சந்தோஷத்தில் இருப்பவர்களே சதா காலமும் எவர் ரெடி ஆனவர். நாளையே விநாசம் நடந்தது என்றால் நீங்கள் தயாரா? இல்லை சிறிது காலம் தேவையா? எவர் ரெடி, நஷ்டோ மோகா, ஸ்மிருதி சொரூபம் -இதில் 'பாஸ்' ஆகி விட்டீர்களா? எவர் ரெடி என்றாலே நஷ்டோமோகா ஸ்மிருதி ஸ்வரூபம். அல்லது அந்த நேரத்தில் நினைவுக்கு வருமா எனத் தெரியவில்லை -குழந்தை என்ன செய்து கொண்டிருக்கிறதோ, எங்கு இருக்கிறதோ, சின்ன பேரக்குழந்தைகளுக்கு என்ன ஆயிற்றோ?... அதே விநாசம் ஆகியிருந்தால் இது ஞாபகத்திற்கு வருமா? கணவருக்கும் நல்லதே நடக்கட்டும், பேரக்குழந்தைகளுக்கும் நல்லதே நடக்கட்டும், அவர்களை இங்கு அழைத்து வந்து விடலாமா -இந்த நினைவு வருமா? வியாபாரம் என்ன ஆச்சோ, பணம் என்ன ஆகுமோ, ரோடு பிளந்து விட்டால் என்ன செய்வது? திடீர் என்ற (அசானக்) பேப்பர் வரும், பாருங்கள். சதா அன்பானவராகவும் விலகியவராகவும் இருப்பதுதான் தந்தைக்கு சமம் ஆவது! எங்கு இருந்தாலும், எப்படி இருந்தாலும் ஆனால் விலகியே இருப்பது. இந்த விலகி இருப்பது தான் தந்தையின் அன்பை அனுபவம் செய்விக்கும். தன் மீதோ அல்லது பிறர் மீதோ கொஞ்சம் கூட ஈர்ப்பு இருந்தது என்றால் அது விலகியவராக ஆக்க விடாது. விலகியவராக மற்றும் அன்பானவராக இருப்பதன் பயிற்சி நம்பரில் முன்னேறச் செய்யும். இதற்கான எளிய முயற்சி -நிமித்த பாவனை! நிமித்தம் என்று புரிந்து கொள்வதால் நிமித்தம் ஆக்குபவரின் நினைவு வந்து விடுகிறது. என் குடும்பம், என் வேலை,... இல்லை; நான் நிமித்தம் ஆனவன்! நிமித்தம் என புரிந்து கொள்வதால் பேப்பரில் 'பாஸ்' செய்து விடுவீர்கள். நல்லது.

**குருப்-6: டபுள் லைட் ஆவதற்கு தந்தை சொல்வதைக் கேளுங்கள், தந்தையின் சிரேஷ்ட கர்மத்தைப் பின்பற்றுங்கள்!** நீங்கள் அனைவரும் சரீரம் அல்லது ஸ்திதியில் நெருக்கமாக இருக்கும் ஆத்மாக்களா! அபுவில் இருப்பவர்கள் என்றால் அபுவின் பாபாவைப்

போன்ற ஸ்திதியில் இருப்பவர்கள். எப்படி அபு மீது அன்பு உள்ளது எனில், நீங்கள் அருகில் இருக்க விரும்புகிறீர்களா? அவ்வாறு அத்தகைய தந்தை மீதும் அன்பு உள்ளதல்லவா. அன்பின் அடையாளம் சமமாக ஆவது. எனவே நீங்கள் அனைவரும் அன்பைக் கொடுப்பவர்கள் மற்றும் அன்பின் அடையாளத்தைக் காண்பிப்பவர்களா. மருத்துவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அனைவரும் லேசாக இருக்கிறீர்களா? இருப்பதில், வருவதில், உண்பதில் -எல்லாவற்றிலும் லேசாக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கனமா?மனதில் ஒன்றாக இருப்பவர்களுக்கு பிறகு குஷியானது எல்லாவற்றையும் மறக்கச் செய்கிறது. குஷியில், உணவு கூட குளிர்ந்தோ, சூடாகவோ உணரப்படாமல் மிகவும் அன்பானதாகவேத் தெரிகிறது, இனிமையாக தெரிகிறது. மிகவும் குஷியான சந்தர்ப்பம் இருக்கும்போது, நீங்கள் அதை குளிர்ச்சியாக சாப்பிடுகிறீர்களா அல்லது சூடாக சாப்பிடுகிறீர்களா -உங்களுக்கு நினைவிருக்கிறதா? அது குஷியை வயிற்றில் நிரப்புகிறது! எனவே ஒன்றாகவே இருப்பவர்கள் என்றால் குஷி நிரம்பியவராக இருப்பவர்கள் இல்லையா? அப்படித்தானே! உங்கள் அனைவருக்கும் ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்தது, இதுவும் நாடகத்தின் மிக உயர்ந்த எதிர்காலம். நீங்கள் இரட்டை வெளிநாட்டவர்கள் மற்றும் இரட்டை சேவாதாரிகள். நீங்கள் இரட்டை சேவை செய்கிறீர்களா அல்லது மருந்துகளை மட்டும் கொடுக்கிறீர்களா? ஒரே நேரத்தில் இரட்டை சேவை செய்வதற்கு நிமித்தமானவர்கள். இரட்டை சேவாதாரிகள், இரட்டை அன்பு மற்றும் ஒத்துழைப்புக்கு தகுதியானவர்கள் ஆகிறார்கள். நன்றாக இருக்கிறது. நெருக்கமாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது. நெருக்கத்தில் இருப்பவர்களிடம், அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா, நலமாக இருக்கிறீர்களா என்று கேட்க வேண்டிய அவசியம் உள்ளது, அனைவரும் நலமா? மதுபன் நிவாசி ஆவது என்றாலே சதா குஷியில் பறப்பது. எனவே மருத்துவமனையில் வேலைகள் எப்படி போய்க் கொண்டிருக்கிறது? இறக்கைகள் இருக்கிறதல்லவா! ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகளால் பறந்து கொண்டிருக்கிறீர்கள்! இரட்டை வெளிநாட்டினருக்கு சதா பறக்கும் கலைதானே? அல்லது சில நேரம் ஏறும் கலை, சில நேரம் நகரும் கலை மற்றும் சில நேரம் பறக்கும் கலையா? எப்போதும் பறக்கும் கலை. ஏனென்றால் நேரம் பறக்கும் கலையுடன் ஓடிக் கொண்டிருக்கிறது. பறக்கும் கலையுடன் நீங்கள் முன்னேறாவிட்டால் முடிவு என்னவாக இருக்கும்? எனவே, நேரத்திற்கு முன்பாகவே நீங்கள் தயாராகுபவர்களா?

நேரத்திற்காக காத்திருக்கக் கூடாது ஆனால் நேரம் சிரேஷ்ட ஆத்மாக்கள் உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறது. டபுள் விதேஷி என்பது உங்கள் பெயர் மற்றும் நடத்தை டபுள் லைட்! சுமை சுமக்கும் அனுபவம் 63-ஜென்மங்கள் செய்து விட்டீர்கள். இப்போது டபுள் லைட்'ன் இரட்டை அனுபவம் செய்வதற்காக இந்த பிராமண பிறப்பு; எனவே, இப்போது சதா டபுள் லைட் ஆக இருங்கள். மருத்துவர்களும் டபுள் லைட் ஆக இருக்கிறீர்களா அல்லது ஏதாவது சுமை உள்ளதா? பார்ப்பதற்கும், கேட்பதற்கும் சுமை இருக்கிறதா? அல்லது சில நேரங்களில் சற்று சுமையாக இருக்கிறதா? அதனால் தான் பாப்தாதா கூறுகிறார் -எந்த ஒரு விஷயத்தில் ஆர்வம் இல்லையோ, எந்த சம்பந்தமும் இல்லையோ, அதைக் கேட்டாலும் கேட்காதீர்கள், பார்த்தாலும் பார்க்காதீர்கள். பார்க்கும்போதும், கேட்கும்போதும் எதுவும் நினைக்காதீர்கள். அப்படி நினைக்க வேண்டும் எனில் தந்தை சொல்வதை மட்டும் கேளுங்கள், தந்தையின் சிரேஷ்ட கர்மத்தை மட்டுமே பின்பற்றுங்கள்! சதா டபுள் லைட் ஆக இருப்பதற்கு இது தான் விதி! உடலில் வரும் பயனற்றதை நீக்குவதே மருத்துவர்களின் வேலை. மருத்துவர்களின் சிறப்பே -வீணானதை நீக்குவது, சக்திசாலி ஆக்குவது! ஆன்மீகத்திலும் இதே வேலைதான் மற்றும் ஸ்தூலத்திலும் இதே வேலைதான். தவிர, நீங்கள் சேவையை நன்றாகச் செய்கிறீர்கள், முடிவு நன்றாக இருக்கிறது மேலும் அது மிகச் சிறந்ததாகவும் ஆகும். அன்புடன் சேவை செய்கிறீர்கள். நீங்கள் முதலில் அன்பின் மருந்தைக் கொடுக்கிறீர்கள், பின்னால் பிற மருந்துகளைக் கொடுக்கிறீர்களா; எனில் பாதி வேலையை அன்பானது செய்து விடுகிறது. நல்லது. அபு நிவாசிகளும் அதிர்ஷ்டசாலிகள். சரியான நேரத்திற்கு வர வேண்டும் என்பதில்லை, ஏனெனில் இங்கேயேதான் இருக்கிறீர்கள்!மருத்துவர்கள் அனைவரும் உங்கள் சேவையை விரும்புகிறீர்களா, இல்லை ஏதோ கொஞ்சமா? வேறு எங்கேயாவது அப்படியே சுற்றி வர விரும்புகிறீர்களா? பெரிய நகரங்களுக்குப் போனால் பெரிய சேவை செய்யலாம் என்று அப்படி நினைப்பதில்லையே? குஷியாக இருக்கிறீர்களா! அனைவரும் நன்றாக இருக்கிறீர்கள். நல்லது.

**வரதானம்: பகுத்தறியும் சந்தி மூலமாக தீயசேர்க்கை மற்றும் வீணான சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக இருக்கக்கூடிய சக்திசாலியான ஆத்மா ஆகுக!**

அனேகக் குழந்தைகள் தீய சேர்க்கையிலிருந்தோ தப்பித்து விடுகிறார்கள் ஆனால் வீணான சேர்க்கையின் பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள். ஏனென்றால் வீணான விஷயங்கள் சுவாரஸ்யமானதாகவும் வெளியிலிருந்து கவரக்கூடியதாகவும் இருக்கும். எனவே வீணானவை களைக் கேட்காதீர்கள், வீணானவைகளைப் பேசாதீர்கள், வீணானவைகளைச் செய்யாதீர்கள் வீணானவைகளைப் பார்க்காதீர்கள் மற்றும் வீணானவைகளை நினைக்காதீர்கள் என்பது தான் பாப்தாதாவின் அறிவுரை. தந்தையைத் தவிர வேறு எந்த சேர்க்கையின் பிரபாவத்தில் வராத அளவிற்கு சக்திசாலியானவர்களாக ஆகுங்கள். பகுத்தறியும் சக்தி மூலமாக தீயவை மற்றும் வீணான சேர்க்கையை ஆரம்பத்திலேயே பகுத்தறிந்து மாற்றி விடுங்கள். அப்பொழுது நாள் சக்திசாலியான ஆத்மா என்று கூறப்படுவீர்கள்.

**சுலோகன்: எப்பொழுதும் லேசானத் தன்மையை அனுபவம் செய்ய வேண்டும் என்றால் குழந்தை மற்றும் அதிகாரத்தன்மையின் சமநிலை வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.10.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முதன்மையானவர் ஆக வேண்டும் என்றால் ஞானம் மற்றும் யோகாவை சொரூபத்தில் கொண்டு வாருங்கள்!

இன்று சத்தியமான ஆசிரியர் தன்னுடைய உயர்ந்த படிப்பை தாரணை செய்யும் ஒவ்வொரு ஈஸ்வரிய மாணவரும் இந்த ஈஸ்வரிய படிப்பை எது வரை தாரணை செய்திருக்கிறார் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார். படிப்பிப்பவர் ஒருவர் தான். படிப்பும் கூட ஒன்று தான் ஆனால் படிப்பவர்கள் படிப்பில் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாள் பாடமும் முரளி மூலமாக ஒவ்வொரு இடத்திலும் ஒரே மாதிரியானதைத் தான் கேட்கிறார்கள். அதாவது ஒரே பாடத்தைத்தான் படிக்கிறார்கள். முரளி அதாவது பாடம் ஒவ்வொரு இடத்திலும் ஒன்றாகத்தான் இருக்கிறது. தேதியில் மாறுதல் இருக்க முடியும் ஆனால் முரளி அதே ஒன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் வரிசைக்கிரமம் ஏன்? ஏனென்றால் இந்த ஈஸ்வரிய படிப்பில் கேட்பது மட்டும் அல்லாமல் ஒவ்வொரு மகாவாக்கியத்தையும் சொரூபத்தில் கொண்டு வர வேண்டும் என்பது தான் படிப்பதற்கான விதி. அப்படி கேட்பதில் அனைவரும் ஒரே மாதிரி தான் இருக்கிறார்கள் ஆனால் சொரூபம் ஆவதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். அனைவரின் இலட்சியமும் நான் முதன்மையானவர் ஆக வேண்டும் என்று தான் இருக்கிறது. அந்த மாதிரி இலட்சியம் இருக்கிறது அல்லவா? இலட்சியம் முதன்மை ஆக வேண்டும் என்று இருக்கிறது ஆனால் ரிஸல்ட்டில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். ஏனென்றால் இலட்சியத்தை இலட்சணத்தில் கொண்டு வருவது இந்த விஷயத்தில் இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

இந்த படிப்பில் பாடங்கள் கூட அதிகம் கிடையாது. நான்கு பாடங்களைத் தாரணை செய்ய வேண்டும். இதில் என்ன கடினம் இருக்கிறது. மேலும்

நான்கு பாடங்களுமே ஒன்றோடு ஒன்று சம்மந்தப்பட்டது. ஒருவேளை ஒரு பாடமாகிய ஞானத்தை முழுமையாக விதிப்பூர்வமாக தாரணை செய்யுங்கள். அதாவது ஞானத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் சொரூபத்தில் கொண்டு வாருங்கள். ஞானமே முக்கியமாக இரண்டு வார்த்தைகளில் அடங்கியது, அதை படைப்பவர் மற்றும் படைப்பு மற்றும் மேலும் இறைவன் மற்றும் அவரிடமிருந்து கிடைக்கும் ஆஸ்தி என்று கூறுகிறீர்கள். படைப்பவர் தந்தையைப் பற்றிய ஞானம் வந்து விடுகிறது அதாவது பரமாத்மாவின் அறிமுகம், அவருக்கும் நமக்கும் உள்ள உறவு தெளிவாகி விட்டது. மேலும் படைப்பு அதாவது. முதல் படைப்பாகிய நான் உயர்ந்த ஆத்மா ஆவேன் மேலும் இரண்டாவதாக ஆத்மா எனக்கு இந்த எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தில் முழு கல்பத்திலும் என்னென்ன பங்கு இருக்கிறது. இந்த எல்லைக்கப்பாற்பட்ட நாடகத்தில் முழு கல்பத்திலும் என்னென்ன பங்கு -இந்த முழு ஞானமும் அனைவரிடமும் இருக்கிறது அல்லவா ஆனால் உயர்ந்த ஆத்ம சொரூபமாகி ஒவ்வொரு நேரமும் உயர்ந்த பங்கைச் செய்வது இதில் சில நேரம் நினைவிருக்கிறது, சில நேரம் மறந்து விடுகிறார்கள். ஒருவேளை இந்த இரண்டு வார்த்தைகளின் ஞானம் இருக்கிறது என்றாள். யோகாவும் கூட இந்த இரண்டு வார்த்தைகளின் ஆதாரத்தில் தான் இருக்கிறது இல்லையா? ஞானத்தோடு யோகாவிற்கு இயல்பாகவே சம்மந்தம் இருக்கிறது. யார் ஞான சொரூப ஆத்மாவோ அவர் யோக சொரூப ஆத்மாவாக அவசியம் இருப்பார். அப்படி ஞானத்திற்கும் யோகாவிற்கும். சம்மந்தம் இருக்கிறது இல்லையா. மேலும் யார் ஞானியாக மற்றும் யோகியாக இருப்பாரோ அவருடைய தாரணையும் உயர்ந்ததாக இருக்குமா அல்லது பலஹீனமானதாக இருக்குமா? இயல்பாகவே உயர்ந்ததாக இருக்கும் இல்லையா? சுலபமானதாக இருக்கும் இல்லையா? அல்லது தாரணையில் கடினம் இருக்குமா? யார் ஞான சொரூப ஆத்மா மற்றும் யோக சொரூப ஆத்மா அவர் தாரணை செய்வதில் பலஹீனமானவராக இருக்க முடியுமா? இல்லை இருக்க முடியாது ஆனால் இருக்கிறார்கள். அப்படியானால் ஞானம் யோகா இல்லையா? ஞானியாக இருக்கிறார் ஆனால் ஞான சொரூப ஆத்மா என்ற அந்த நிலை இல்லை. யோகா செய்பவராக இருக்கிறார் ஆனால் யோகி வாழ்க்கை வாழ்பவராக இல்லை. வாழ்க்கை எப்பொழுதும் இருக்கிறது மேலும் வாழ்க்கை இயல்பானதாக இருக்கும். யோகி வாழ்க்கை என்றால் யோகியின் சுயமான இயற்கை சுபாவம் உடையதாக இருக்கும்.

63-ஜென்மங்களின் நினைவிழந்த சம்ஸ்காரம் மற்றும் பலஹீனத்தின் சம்ஸ்காரம் மூலம் சுபாவமாகி பிராமண வாழ்க்கையில் அங்கங்கே முயற்சி செய்வதில் தடைகள் ஏற்படுத்துகின்றன. எவ்வளவு தான் இதை மாற்றம் செய்யுங்கள் என்று தானும் மற்றும் மற்றவர்களும் கவனத்தை வைக்கிறார்கள் மேலும் இது மாற வேண்டும் என்று தானும் உணர்கிறார் ஆனால் தெரிந்திருந்தும் விரும்பியும் கூட என்ன கூறுகிறீர்கள்? விரும்பவில்லை தான் ஆனால் என்னுடைய சுபாவம் இது என்று கூறுகிறீர்கள். அப்படி இயல்பு இயற்கையானதாக ஆகி விட்டது இல்லையா. யாருடைய வார்த்தைகளில் மற்றும் நடத்தையில் ஞானம் நிரம்பிய நடத்தை மற்றும் யோகி வாழ்க்கைக்கேற்ற நடத்தை மற்றும் வார்த்தைகள் இல்லையென்றால் அவர்கள் என்ன கூறுகிறார்கள்? என்னுடைய இயல்பான வார்த்தையே அப்படித்தான், பேச்சின் தொணியே அப்படித் தான் என்று தான் கூறுவார்கள். மேலும் என்னுடைய நடத்தையே கம்பீரமானதாகவும் காரிய சம்மந்தப்பட்டதாகவும் தான் இருக்கும் என்று கூறுவார்கள். ஆவேசம் இல்லை ஆனால் காரிய சம்மந்தப்பட்டது என்று நல்ல பெயர் சொல்கிறார்கள். எனவே விரும்பியும், புரிந்தும் இயல்பு, இயற்கையான காரியத்தை செய்து கொண்டிருக்கிறது, அதில் கடினமாக செய்ய வேண்டியது எதுவும் இல்லை. அந்த மாதிரி யார் ஞான வாழ்க்கை யோகி வாழ்க்கையில் இருக்கிறார்களோ அவர்களின் ஒவ்வொரு காரியமும் ஞானம் மற்றும் யோகம் நிரம்பியதாக இருக்கும் அதாவது ஞானம் மற்றும் யோகம் இதுவே அவர்களுடைய இயல்பாகி விடுகிறது மற்றும் இயல்பான காரணத்தினால் உயர்ந்த காரியம் மற்றும் சரியான முறையில் செய்யும் காரியம் இயற்கையாகவே நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இயல்பு இயற்கையானதாக ஆக்கி விடுகிறது என்று புரிந்து கெண்டீர்களா. எனவே ஞானம் மற்றும் யோகம் மூலம் இயல்பாக ஆகி விடட்டும் -இதைத்தான் ஞானி வாழ்க்கை, யோகி வாழ்க்கை வாழ்பவர் என்று கூறப்படுகிறது. அனைவரும் ஞானிகள் தான். அனைவரும் யோகிகள் தான் ஆனால் வித்தியாசம் என்ன இருக்கிறது? ஒன்று ஞானம் கேட்பவர் மற்றும் சொல்பவர், சக்திக்கேற்றபடி வாழ்க்கையில் கொண்டு வருபவர். இரண்டாவது -ஞானம் மற்றும் யோகாவை ஒவ்வொரு நேரமும் தன்னுடைய வாழ்க்கையின் இயல்பாக ஆக்குபவர்கள். அனைவரும் மாணவர்கள் தான் ஆனால் இந்த வித்தியாசம் இருக்கும் காரணத்தினால்

வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறீர்கள். யாருடைய இயல்பே ஞானி யோகியினுடையதாக இருக்குமோ அவருடைய தாரணையும் இயற்கையாகவே இருக்கும். இயற்கையான சுபாவம், சம்ஸ்காரமுமே தாரணை சொரூபமாக இருக்கும். இந்த குணத்தை நான் தாரணை செய்யட்டும். அந்த குணத்தை தாரணை செய்யட்டும் என்று அடிக்கடி முயற்சி செய்ய வேண்டியது இருக்காது ஆனால் ஆரம்ப அஸ்திவாரம் போடும் சமயத்திலேயே ஞானம், யோகா மற்றும் தாரணையை தன்னுடைய வாழ்க்கையாக ஆக்கி விட்டார். எனவே இந்த மூன்று பாடங்களுமே அந்த மாதிரியான ஆத்மாவிற்கு இயல்பான அனுபலங்களைக் கொடுப்பதாக ஆகி விடுகிறது. எனவே இந்த மாதிரி ஆத்மாக்களை சகஜயோகி, சகஜஞானி, சகஜதாரணா மூர்த்தி என்று கூறப்படுகிறது. மூன்று பாடங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. யாரிடம் இவ்வளவு அனுபவங்களின் பொக்கிஷம் நிரம்பி இருக்குமோ. அந்த மாதிரியான நிரம்பிய மூர்த்திகள் மாஸ்டர் வள்ளல் ஆகி விடுகிறார்கள். வள்ளல் என்றால் சேவாதாரி. வள்ளல் கொடுக்காமல் இருக்க முடியாது. கொடுக்கும் தன்மையின் சம்ஸ்காரம் மூலமாக இயல்பாகவே சேவையின் பாடம் நடை முறையில் எளிதானதாக ஆகி விடுகிறது. அப்படி நான்கிற்கும் சம்மந்தம் இருக்கிறது இல்லையா. யாராவது என்னிடம் நல்ல ஞானம் இருக்கிறது ஆனால் தாரணையில் குறை இருக்கிறது என்றால் அவரை ஞானி என்று கூற முடியுமா? ஞானத்தை மற்றவர்களுக்கும் கொடுக்கிறீர்கள் இல்லையா? இருக்கிறது அப்பொழுது தானே கொடுக்கிறீர்கள் இல்லையா? ஒன்று புரிந்து கொள்வது, இன்னொன்று சொரூபத்தில் கொண்டு வருவது, புரிந்து கொள்வதில் அனைவரும் திறமைசாலிகள், புரிய வைப்பதிலும் அனைவரும் திறமைசாலிகளாக இருக்கிறார்கள் ஆனால் முதன்மையானவர் ஆக வேண்டும் என்றால் ஞானம் மற்றும் யோகாவை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். பின்பு வரிசைக்கிரமமாக இருக்க மாட்டீர்கள், முதன்மையில் இருப்பீர்கள்.

இன்று சத்தியமான ஆசிரியர் தன்னுடைய நாலாபுறமும் உள்ள ஈஸ்வரிய மாணவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அப்படி என்ன பார்த்தோம்? அனைவரும் நம்பர் ஒன் ஆக தென்பட்டார்களா அல்லது நம்பர்வாராக (வரிசைக்கிரமமாக) தென்பட்டார்களா? ரிஸ்ல்ட் என்னவாக இருக்கும்? அல்லது நம்பர்

ஒன்னாகவோ ஒருவர் இருப்பார், நாங்களோ நம்பாவாராகத் தான் வருவோம் என்று நினைக்கிறீர்களா? முதல் பிரிவில் வர முடியும் இல்லையா. அதில் ஒருவர் மட்டும் இருப்பதில்லை. எனவே ஒருவேளை அடிக்கடி கடுமையான உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதன் மூலம் ஞானப் பாடத்தின் இரண்டு வார்த்தைகள் அதாவது படைப்பவர் மற்றும் பணடப்பு என்ற படிப்பை சொரூபத்தில் கொண்டு வரவில்லை என்று நிரூபணமாகிறது. வாழ்க்கையில் மூல சம்ஸ்காரத்தின் ரூபத்தில், இயல்பின் ரூபத்தில் மற்றும் சகஜ சுபாவத்தின் ரூபத்தில் கொண்டு வரவில்லை என்பது நிரூபணமாகிறது.. பிராமண வாழ்க்கையின் இயற்கையான சுபாவம், சம்ஸ்காரமே யோகி வாழ்க்கை வாழ்க்கை ஆகும். வாழ்க்கை என்றால் நிரந்தரமாக எப்பொழுதும் இருப்பது. 8-மணி வாழ்க்கை இருக்கிறது, பிறகு 4-மணி நேரம் இல்லை என்று அப்படி இருப்பதில்லை. இன்று 8-மணி நேரத்தின் யோகியானேன், இன்று 12-மணி நேரத்தின் யோகியானேன். இன்று 2-மணி நேரத்தின் யோகியானேன் என்று சொல்லும் இவர்கள் யோகா செய்யக்கூடிய யோகிகள், யோகி வாழ்க்கை வாழும் யோகிகள் அல்ல. முக்கியமாக அனைவரும் சேர்ந்து ஒரு குழுவாக அமருவதின் காரணமே அனைவரின் யோக சக்தியினால் வாயுமண்டலம் மூலமாக பலஹீனமான முயற்சியாளர்களை மற்றும் உலகின் அனைத்து ஆத்மாக்களையும் யோக சக்தி மூலமாக பரிவர்த்தனை செய்வதற்காகத் தான். எனவே அதுவும் அவசியம் தான். ஆனாலும் நீங்கள் உங்களுடைய துண்டிக்கப்பட்ட யோகாவையே செய்து கொண்டிருப்பதற்காக அந்த யோகாவில் அமருவதில்லை. குழுவின் சக்தி இதுவும் சேவைக்காகப் பொறுப்பாகிறது ஆனால் என்னுடைய தொடர்பு மீண்டும் இணைக்கப்பட்டு விடட்டும் என்பதற்காக மட்டும் யோக பட்டியில் அமரவில்லை. ஒருவேளை பலஹினமானவராக இருந்தால் அதற்காக அமருகிறீர்கள் மற்றும் ஆத்ம சொரூப நிலையில் இருந்தீர்கள் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகி, மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி ஆகி அனைவருக்கும் சகயோகம் கொடுக்கும் சேவை செய்கிறீர்கள். எனவே படிப்பு என்றால் சொரூபம் ஆவது நல்லது.

இன்று தீபாவளி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். கொண்டாடுவதற்கான அர்த்தம் என்ன? தீபாவளியில் என்ன செய்கிறீர்கள்? தீபத்தை ஏற்றுகிறீர்கள். இன்றைய நாட்களிலோ

(மின்சார) லைட்டை எரிய விடுகிறார்கள். மேலும் லைட்டின் மேல் யார் வருகிறார்கள்? விட்டில் பூச்சி. மேலும் விட்டில் பூச்சியின் விசேஷத்தன்மை என்னவாக இருக்கிறது? பலியாவது. அப்படியானால் தீபாவளி கொண்டாடுவதின் அர்த்தம் என்னவாக இருக்கிறது? அப்படியானால் பலியாகி விட்டீர்களா? அல்லது இன்று ஆக வேண்டுமா? ஆகி விட்டீர்களா? அல்லது ஆக வேண்டுமா? (ஆகி விட்டோம்) அப்படியானால் தீபாவளியோ கொண்டாடி விட்டீர்கள், பின்பு ஏன் கொண்டாடுகிறீர்கள்? எப்பொழுது பலியாகி விட்டீர்கள் என்றால் தீபாவளி கொண்டாடி விட்டீர்கள். அல்லது இடையிடையே சுற்றி வருவதற்காகப் போகிறீர்களா? பலியாகி விட்டீர்கள் ஆனால் கொஞ்சம் சிறகுகள் இன்னும் இருக்கிறது. அதன் மூலம் கொஞ்சம் சுற்றி வந்து விடுகிறீர்கள். அப்படி சுற்றி வருபவர்கள் இல்லை தானே நீங்கள். சுற்றி வருவது என்றால் ஏதாவது மாயாவின் ரூபத்தோடு முட்டி மோதுவதாகும். மாயாவுடன் முட்டி மோதுகிறீர்களா அல்லது மாயாவை தோல்வி அடையச் செய்கிறீர்களா? அல்லது சில நேரம் வெற்றி அடைகிறீர்களா, மற்றும் சில நேரம் மோதுகிறீர்களா? தீபாவளி, இது உங்களுடைய ஞாபகார்த்தத்தைத் தான் கொண்டாடுகிறீர்கள். உங்களுடைய ஞாபகார்த்தம் தான் இல்லையா? அல்லது முக்கியமான ஆத்மாக்களின் ஞாபகார்த்தமா, நீங்கள் பார்க்கக்கூடியவர்கள் மட்டும் தானா? உங்கள் அனைவரின் ஞாபகார்த்தம் தான். எனவே இன்றைய நாட்களில் தீபங்களுக்கு பதிலாக அனேக எண்ணிக்கையில் சின்னச்சின்ன பல்புகளை எரிய வைக்கிறார்கள். தீபங்களை ஏற்றுகிறார்கள் என்றால் எண்ணிக்கையில் அதை விட குறைந்து விடும் ஆனால் உங்களுடைய எண்ணிக்கையோ அதிகம் இல்லையா. அப்படி அனைவரின் நினைவாக அதிகமான சின்னச்சின்ன பல்புகளை பிரகாசமாக எரிய விடுகிறார்கள். அப்படி உங்களுடைய ஞாபகார்த்தத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். எப்பொழுது தீபத்தைப் பார்க்கிறீர்களோ அப்பொழுது இது நம்முடைய ஞாபகார்த்தம் என்று நினைக்கிறீர்களா? நினைவு வருகிறதா? யார் சைத்தன்ய தீபமாக இருக்கிறாரோ அவர் தன்னுடைய ஞாபகார்த்த ஜட தீபத்தைப் பார்க்கிறார், இது தான் சங்கமயுகத்தின் விசேஷத்தன்மை சைத்தன்யமாக நீங்கள் இருக்கிறீர்கள் ஜட ஞாபகார்த்தத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், அப்படியே பார்த்தாலும் எந்த நாள் தீபாவளி கொண்டாடுகிறீர்களோ அந்த நாள் தான் உண்மையிலேயே தீபாவளி நாளாகும். இதுவே உலகத்திலுள்ளவர்கள் நாளை நிர்ணயம்

செய்திருக்கிறார்கள் ஆளால் உங்களுடைய நாளோ உங்கள் கையில் இருக்கிறது. எனவே எந்த நாள் பிராமணர்கள் நீங்கள் கொண்டாடுகிறீர்களோ அது தான் உண்மையான நாள் ஆகும். எனவே ஏதாவது ஒரு நாள் நிர்ணயம் செய்கிறார்கள் என்றால் யாரிடம் கேட்கிறார்கள்? பிராமணர்கள் மூலமாகத்தானே தேதியை நிர்ணயம் செய்கிறார்கள். எனவே இன்று பாப்தாதா அனைத்து உள்நாட்டு வெளிநாட்டின் எப்பொழுதும் பரிகாசமாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும் தீபங்களின் தீபாவளிக்காக வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். தீபாவளி வாழ்த்து என்றால் எல்லா வளமும் நிரம்பியவராக ஆவதற்கான வாழ்த்து.

அந்த மாதிரி எப்பொழுதும் பிரகாசமாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும் ஜோதிகளுக்கு, எப்பொழுதும் சுயம் பிரகாச ரூபமாகி அனேகர்களின் இருளை நீக்கக்கூடிய உண்மையான தீபங்களுக்கு, எப்பொழுதும் நான்கு பாடங்களையும் வாழ்க்கையில் கொண்டு வரக்கூடிய, அனைத்து பாடங்களிலும் முதன்மையில் வர வேண்டும் என்ற இலட்சியத்தை இலட்சணத்தில் கொண்டு வரக்கூடிய, அந்த மாதிரியான ஞான சொரூப ஆத்மாக்களுக்கு, யோக சொரூப ஆத்மாக்களுக்கு, தெய்வீக குண சொரூப ஆத்மாக்களுக்கு, நிரந்தர சேவாதாரி மற்றும் உலக நன்மை செய்யும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

**பாப்தாதா குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: யாருடைய முகத்திலும் நடத்தையிலும் குஷியின் ஜொலிப்பு தென்படுகிறதோ அவர் தான் அதிர்ஷ்டம் நிறைந்தவர்!**

அனைவரும் தன்னை எப்பொழுதும் அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? அதிர்ஷ்டம் நிறைந்த ஆத்மாக்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? அவருடைய முகத்திலும் நடத்தையிலும் எப்பொழுதும் குஷியின் ஜொலிப்பு தென்படும். எந்த வொரு ஸ்தூலமான காரியம் செய்து கொண்டிருந்தாலும், சாதாரண காரியம் செய்து கொண்டிருந்தாலும் ஒவ்வொரு காரியம் செய்யும் பொழுதும் குஷியின் ஜொலிப்பு தென்படட்டும். இதைத்தான் நிரந்தர குஷியில் மனம் ஆடிக் கொண்டிருக்கட்டும் என்று கூறுவார்கள். எப்பொழுதும் அந்த மாதிரி இருக்கிறீர்களா? அல்ல சில சமயம் அதிகமாக

குஷியும், சில சமயம் குஷி குறைவாகவும் இருக்கிறதா? குஷியென்ற பொக்கிஷம் தன்னுடைய பொக்கிஷம் ஆகி விட்டது. தன்னுடைய பொக்கிஷம் எப்பொழுதும் கூடவே இருக்கும் இல்லையா? அல்லது எப்பொழுதாவது இருக்குமா. தந்தையின் பொக்கிஷத்தை தன்னுடைய பொக்கிஷமாக ஆக்கினீர்களா? அல்லது தன்னுடைய பொக்கிஷம் என்பது மறந்து விடுகிறதா? தன்னுடைய ஸ்தூலமான பொருட்கள் நினைவில் இருக்கிறது இல்லையா. அந்த பொக்கிஷங்கள் கண்களில் தென்படும் ஆனால் இந்த பொக்கிஷம் கண்களில் தென்படாது. உள்ளத்தில் அனுபவம் செய்கிறீர்கள். அனுபவமான விஷயம் எப்பொழுதாவது மறக்குமா என்ன? எனவே நான் குஷி என்ற பொக்கிஷத்தின் அதிபதி என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவிற்கு பொக்கிஷம் நினைவில் இருக்கிறதோ அந்தளவு போதை இருக்கும். இந்த ஆன்மீக போதை இவரிடம் ஏதோ இருக்கிறது என்று மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்கும். மாதர்களுக்கு முழு நாளும் என்ன நினைவிருக்கிறது? தந்தை மட்டும் நினைவிருக்கிறதா? அல்லது வேறு ஏதாவதும் நினைவிருக்கிறதா? ஆஸ்தியின் குஷி தென்படும் இல்லையா. எப்பொழுது பிராமண வாழ்க்கையின் உலகமே ஒரு தந்தை என்றால், உலகத்தைத் தவிர வேறு என்ன நினைவு வரும். எப்பொழுதும் உள்ளத்தில் தன்னுடைய உயாந்த பாக்கியத்தின் பாடலை பாடிக் கொண்டேயிருங்கள். இந்த மாதிரியான உயர்ந்த பாக்கியம் முழு கல்பத்திலும் பிராப்தியாகுமா? முழு கல்பத்திலும் இப்பொழுது தான் பிராப்தி ஆகிறது என்றால் இப்போதைய குஷி, இப்போதைய நினைவு வருகிறதா? ஏதாவது உறவில் மேலே கீழே போகிறது என்றால் பாசம் வருகிறது? முழுமையாக இல்லாமல் ஆகி விட்டதா? என்ன நடந்தாலும் எனக்கு பற்றுதல் பாசம் என்று கூறுபவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. பற்றுதலுக்கான சோதனைத் தாள் வரட்டும்? பாண்டவர்கள் பற்றுதலை வென்றவர்கள் இல்லையா. உறவு முறையில் ஏதாவது பிரச்சனை வந்ததின் பின்பு பற்றுதலை வென்றவர்களா? இப்பொழுது கூட இடையிடையே மாயா சோதனைக்குள்ளாக்குகிறது இல்லையா? அதில் வெற்றி அடைகிறீர்களா? அல்லது எப்பொழுது வருகிறதோ அப்பொழுது கொஞ்சம் தொய்வடைந்து விடுகிறீர்களா? எனவே பொழுதும் குஷியின் பாடலைப் பாடிக் கொண்டேயிருங்கள். புரிந்ததா? என்ன தான் போனாலும் குஷி மட்டும் போக வேண்டாம். மாயா எந்த ரூபத்தில்

வந்தாலும் கூட குஷி போக வேண்டாம். அந்த மாதிரி குஷியாக இருப்பவர்கள் தான் எப்பொழுதும் அதிர்ஷ்டம் நிறைந்தவர்கள்.நல்லது.

இப்பொழுது ஆந்திரா மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள் என்ன அதிசயம் செய் வேண்டும்? எந்தவொரு ஆத்மாவும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விட வேண்டாம். ஒவ்வொருவருக்கு செய்தி கொடுக்க வேண்டும். எங்கு நீங்கள் இருந்தாலும் அனைத்து ஆத்மாக்களுக்கும் செய்தி கிடைக்க வேண்டும். எவ்வளவு செய்தி கொடுப்பிர்களோ அவ்வளவு குஷி அதிகரித்துக் கொண்டு இருக்கும். நல்லது.

**குரூப்-2: பரமாத்மா அன்பை அடைய வேண்டும் என்றால் விலகியிருப்பவராக ஆகுங்கள்!** எப்பொழுதும் தன்னை ஆன்மீக ரோஜா என்று நினைக்கிறீர்களா? ஆன்மீக ரோஜா என்றால் எப்பொழுதும் ஆன்மீகத்தின் நறுமணத்தினால் நிரம்பிய ஆத்மா. யார் ஆன்மீக ரோஜாவாக இருக்கிறாரோ அவருடைய வேலை எப்பொழுதும் நறுமணம் கொடுப்பது, நறுணம் பரப்புவது ஆகும். ரோஜா மலர் எவ்வளவு மணம் நிறைந்ததாக இருக்கிறதோ அவ்வளவு முட்களும் இருக்கின்றன ஆனால் முட்களின் பிரபாவத்தில் வருவதில்லை. முட்களின் காரணமாக எப்பொழுதாவது ரோஜா மலர் பாதிக்கப்படுவதில்லை. எப்பொழுதும் மலர்ந்து நன்றாக இருக்கிறது. முள் இருக்கிறது ஆனால் முட்களில் இருந்து விலகியிருந்து அனைவருக்கும் பிரியமானதாக இருக்கிறது. தானே விலகியிருக்கிறது அதனால் பிரியமானதாக இருக்கிறது. ஒருவேளை அதுவே முட்களின் பாதிப்பில் வந்து விடுகிறது என்றால் அதை யாரும் தொடக்கூட மாட்டார்கள். அப்படி ஆன்மீக ரோஜாவின் விசேஷம் என்னவென்றால், எந்த விதமான முள்ளாக இருந்தாலும், சிறியதோ அல்லது பெரியதோ, லேசானதோ அல்லது வீரியமானதோ எதுவாக இருந்தாலும் எப்பொழுதும் விலகியிருப்பவர் மற்றும் தந்தைக்குப் பிரியமானவர். பிரியமானவராக ஆவதற்கு என்ன செய்ய வேண்டும்? விலகியிருக்கும் தன்மை பிரியமானவராக ஆக்குகிறது. ஒருவேளை ஏதாவது பாதிப்பில் வந்து விடுகிறார் என்றால் தந்தைக்கு பிரியமானவரும் இல்லை, பிராமண குடும்பத்திற்குப் பிரியமானவரும் இல்லை. ஒருவேளை உண்மையான அன்பை அடைய வேண்டும் என்றால் அனைத்து எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்தும் விலகியவராக ஆகுங்கள். தன்னுடைய உடலிலிருந்தும் விலகியவராக ஆகுங்கள். யார்

தன்னுடைய உடலிலிருந்தும் விலகியவராக ஆக முடியுமோ அவர் தான் அனைவரையும் விட பிரியமானவர் ஆக முடியும். சிலர் எங்களுக்கு எவ்வளவு அன்பு கிடைக்க வேண்டுமோ அவ்வளவு கிடைப்பதில்லை என்று நினைக்கிறார்கள். ஏன் கிடைப்பதில்லை? ஏனென்றால் விலகியிருப்பவராக இருக்கவில்லை. இல்லையென்றால் பரமாத்மா அன்பு அழிவில்லாதது, குறைவில்லாதது. அனைவருக்கும் கிடைக்கும் அளவிற்கு இருக்கிறது ஆனால் பரமாத்மா அன்பைப் பெறுவதற்கான விதி விலகியிருப்பவராக ஆவது. விதி தெரியவில்லை என்றால் ஸித்தியும் (காரியம் கைகூடுவது) கிடைப்பதில்லை. சிவநேச குழந்தைகள் பாபாவுடன் சந்திப்பை நிகழ்த்த விரும்புகிறோம் ஆனால் பதில் கிடைப்பதில்லை என்று கூறுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? முதலில் விலகியவராக ஆனால் தான் அன்பு கிடைக்கும். அன்பைப் பெறுவதற்கான அஸ்திவாரம் ஒருவேளை உறுதியாக இருக்கிறது என்றால் என்ன பெற வேண்டுமோ அது கிடைக்கவில்லை என்பதே இருக்க முடியாது. ஏனென்றால் தந்தையின் உத்திரவாதம் இருக்கிறது. ஒரு விஷயத்தை நீங்கள் செய்யுங்கள் மற்ற அனைத்தையும் நான் செய்கிறேன் என்ற உத்திரவாதம் இருக்கிறது. அந்த ஒரு விஷயம் என்னை இதயப்பூர்வமாக நினைவு செய்யுங்கள், ஏதாவது காரியத்திற்காக அல்ல என்பதாகும். தடை வந்தால் நான்கு மணி நேரம் யோகா செய்வார்கள். மேலும் தடை விலகி விட்டது என்றால் நினைவும் இல்லாமல் ஆகி விடுகிறது. அப்படியானால் இது காரியத்திற்காக நினைவு செய்வதாக ஆகி விட்டது இல்லையா. ஆசையை (இச்சா) நிறைவேற்றுவதற்கான நினைவாக இன்றி நல்லவராகி (அச்சாவாகி) நினைவு செய்யுங்கள். இந்த வேலை வேண்டும். இதற்காக நான் நினைவு செய்ய வேண்டும் என்று அப்படி கிடையாது. தகுதியானவராகி பரமாத்மா அன்பை அனுபவம் செய்ய முடியும். ஆன்மீக ரோஜா என்றால் பரமாத்மா அன்பிற்குத் தகுதியான ஆத்மாக்கள், பரமாத்மா அன்பிற்கு முன்னால் ஆத்மாக்களின் அன்பு என்னவாக இருக்கிறது. ஒன்றுமே இல்லை! எப்பொழுது பரமாத்மா அன்பின் அனுபவி ஆகுகிறீர்கள் என்றால் உள்ளத்தில் இருந்து என்ன வெளிப்படுகிறது? எந்தப் பாடலைப் பாடுகிறீர்கள். அடைந்து விட்டோம் வேறொன்றுமே இல்லை. அந்த மாதிரி பிராப்தியின் அதிகாரி ஆத்மாவாக ஆகுங்கள். தகுதியின் அடையாளம் பிராப்தி ஆவதாகும். ஒருவேளை பிராப்தி இல்லை என்றால், குறைவாக இருக்கிறது என்றால் தகுதி குறைவாக இருக்கிறது என்று புரிந்து

கொள்ளுங்கள். ஏனென்றால் கொடுப்பவரோ வள்ளல் மேலும் குறைவில்லா பொக்கிஷம் இருக்கிறது அப்படியானால் ஏன் கிடைக்காது? தகுதியாக இருந்தால் அனைத்துப் பிராப்தி இருக்கிறது. எப்பொழுதும் பாபா என்னுடையவர் என்றால் பிராப்தியும் எப்பொழுதும் இருக்கும் இல்லையா? எப்பொழுதும், ஏதாவது எல்லைக்குட்பட்ட பாதிப்பில் இருந்து விலகி இருக்கவே தான் வேண்டும். ஒருபொழுதும் பாதிப்பில் வர வேண்டாம். பின்பு அடிக்கடி தகுதியானவர் ஆவதற்கான பயிற்சி செய்கிறீர்கள் என்றால் கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கும். எனவே எல்லைக்குட்பட்ட பிரபாவத்தில் வராமல் எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட பிராப்திகளில் மூழ்கி இருங்கள். எனவே ஆன்மீக ரோஜா நான் எப்பொழுதும் ஆன்மீகத்தின் நறுமணத்தில் இருக்கிறேனா, விலகியிருக்கிறேனா அன்பிற்குத் தகுதியானவராக ஆகியிருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள் ஏனென்றால் ஆத்மாக்கள் மூலமான பிராப்தியையோ 63-ஜென்மங்கள் செய்தாகி விட்டது. அதனுடைய விளைவாக என்ன இருந்தது? இழந்து விட்டீர்கள் இல்லையா? இப்பொழுது அடைவதற்கான நேரம். எல்லைக்குட்பட்ட பிராப்திகள் என்றால் இழப்பது. எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தி என்றால் சேமிப்பாவது. நல்லது.

**குரூப்-3: கனவிற்கும் ஆதாரம் நமது இந்த வாழ்க்கை!** நீங்கள் உட்காருவதற்கு, அருகில் செல்வதற்கு இந்த சரீரம் மூலம் முயற்சி செய்கிறீர்கள். இதற்காகத்தான் ஓடி வருகிறீர்கள் அல்லவா. அதனால் அருகில் இருப்பது நன்றாக இருக்கிறதுதானே; ஆனால் அது சிறிது நேரத்திற்கானது. எனில் சதா நெருக்கமாக இருந்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்! யார் சதா தந்தைக்கு நெருக்கமாக இருக்க முடியும்? நெருக்கமாக இருப்பவர்களின் சிறப்பு என்னவாக இருக்கும்? ஒரே மாதிரியாக (சமமாக) இருக்குமல்லவா. ஒத்திருப்பவர் அருகில் இருக்கிறார்! இந்த குறுகிய நேர நெருக்கம் அன்பாகத் தோன்றுவது போல், எப்போதும் நெருக்கமாக இருப்பவர்கள் எவ்வளவு அன்பாக இருப்பார்கள்! எனவே நீங்கள் சதா நெருக்கமாக இருக்கிறீர்களா அல்லது சிறிது நேரம் மட்டுமே நெருக்கமாக இருக்கிறீர்களா? நெருக்கமாக இருப்பதற்காகத்தான் பக்தி மார்க்கத்தில்கூட, சத்சங்கத்திற்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. உடன் இருப்பது என்றால் அருகில் இருப்பதாகும். அவர்களோ கேட்பவர்கள் மட்டுமே ஆனால் நீங்களோ

ஒன்றாக இருப்பவர்கள். அப்படித்தானே நீங்கள் ஒருபோதும் முகத்தைத் திருப்புவதில்லையே? மாயா வந்து இப்படி அப்படி உங்கள் முகத்தைத் திருப்பி விட்டால்?சீதையைப் போல மாயாவை உங்களால் அடையாளம் காண முடியவில்லை என்றால் -நீங்கள் இப்படி ஏமாந்து போவதில்லைதானே? ஏமாற்றப்பட்டவர்கள் சந்திர வம்சி ஆகிறார்கள். எனவே, நீங்கள் மாயாவை நன்கு அறிந்தவர்கள், இல்லையா? தந்தையையும் தெரிந்து கொண்டவர்கள் மேலும் மாயாவை மிகவும் நன்றாகத் தெரிந்தவர்கள். இப்போது மாயா ஒரு புதிய ரூபத்தில் வந்தாலும் அதை அடையாளம் காண முடியுமா? அல்லது புதிய தோற்றத்தைப் பார்த்தால், எனக்கு என்ன தெரியும் என்று சொல்வீர்களா! சக்திகளால் அடையாளம் காண முடியுமா? அல்லது சில சமயங்களில் நீங்கள் பயந்து விடுகிறீர்களா? தந்தையை ஒதுக்கி வைக்கும்போதுதான் நீங்கள் பயப்படுகிறீர்கள். ஒருவேளை தந்தையுடன் இருந்தால், மாயாவுக்கு அருகில் வர தைரியம் இருக்காது. எனவே அடையாளம் என்பது கோடு, மாயா இந்த அடையாள கோடிற்குள் வர முடியாது. எனவே நீங்கள் கோடிற்குள் இருக்கிறீர்களா அல்லது சில நேரங்களில் உங்கள் எண்ணங்களிலிருந்து கொஞ்சம் வெளியே வருகிறீர்களா? ஒருவேளை எண்ணத்தாலும் கூடவே இல்லாமல், வெளியே வந்து விட்டால் நீங்கள் மாயாவின் நண்பனாகி விடுவீர்கள். சங்கல்பத்திலும் அல்லது கனவிலும்கூட, தந்தையிடமிருந்து விலகக்கூடாது. கனவுகள் என் கட்டுப்பாட்டில் இல்லை என்பது அல்ல. கனவிற்கும் ஆதாரம் இந்த வாழ்க்கைதான்!ஒருவேளை இந்த வாழ்க்கையில் மாயாஜீத் ஆக இருந்தீர்கள் எனில் மாயாவின் ஒரு அம்சம் கூட கனவில் வரவே முடியாது. எனவே, மாயா கனவில் கூட வர முடியாதவாறு நீங்கள் மாயா-ஃப்ரூப் (maya-proof) ஆகி விட்டீர்களா? கனவையும் லேசாக எடுத்துக் கொள்ளாதீர்கள். ஏனெனில் கனவிலும் பலவீனமாக இருந்தால், அது அவர் எழுந்த பிறகும், அந்த எண்ணங்கள் கண்டிப்பாக தொடரும் மற்றும் யோகா (நினைவு யாத்திரை) சாதாரணமாக ஆகி விடும். எனவே, எண்ணத்தால் என்ன ஆனால் கனவில்கூட மாயை உங்களிடம் போரிட முடியாதவாறு வெற்றியாளர் ஆகுங்கள். சதா மாயாஜீத் என்றால் சதா தந்தையுடன் நெருக்கத்தில், கூடவே இருப்பவர் ஆகும். தந்தையிடமிருந்து என்னை பிரிக்க யாருக்கும் சக்தி இல்லை என்று சவால் விடுபவர்களா? நான் வெற்றி பெறவில்லை என்றால், வேறு யாரால் வெற்றி பெற முடியும் என்று குஷியோடு இதயத்தில் இருந்து ஓசை வெளி வரட்டும்.

கல்பத்திற்கு முன்பும் வெற்றி பெற்றுள்ளோம். இது உங்கள் நினைவில் சதா அனுபவம் ஆகட்டும் -நாம்தான் இருந்தோம், நாம்தான் இருக்கிறோம், நாம்தான் இருப்போம்! நல்லது.

**குரூப்-4: நன்மை இல்லாத காட்சிகளிலும் நன்மை தென்படட்டும்!**

சென்ற கல்பத்தில் வந்த அதே தந்தை மீண்டும் கிடைத்திருக்கிறார் என்று தந்தை மேல் நிச்சயம் இருக்கிறதா? அதே போல் நானும் தந்தையுடன் பங்கேற்று செய்து கொண்டிருக்கும் சென்ற கல்பத்து அதே விசேஷ ஆத்மா என்று தன் மேல் நிச்சயம் இருக்கிறதா? அல்லது தந்தை மேல் நிச்சயம் அதிகமா இருக்கிறது மற்றும் தன் மேல் குறைவாக இருக்கிறது. அப்படியா? சரி டிராமாவில் என்னென்ன நடக்கிறதோ அதன் மேலும் உறுதியான நிச்சயம் இருக்கிறதா? டிராமாவில் என்ன நடக்கிறதோ அவை அனைத்தும் நன்மையே செய்யும் யுகத்தின் காரணமாக நன்மையே தான் என்றிருக்கிறதா அல்லது கொஞ்சம் நன்மையில்லாததும் நடந்து விடுகிறது, யாராவது இறந்து விடுகிறார் என்றால் அதில் நன்மை இருக்கிறதா? அவர் இறந்து கொண்டிருக்கிறார் மேலும் நீங்கள் நன்மை என்று கூறுகிறீர்கள் -நன்மை இருக்கிறது. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது -இதில் நன்மை ஏற்பட்டதா? அப்படி நஷ்டமும் கூட நன்மை பயப்பது தான். ஞானத்தில் வருவதற்கு முன்பு எந்த விஷயம் உங்களிடம் வராமல் இருந்ததோ அவை ஞானத்தில் வந்ததற்கு பின்பு வருகிறது என்றால் அதில் நன்மை இருக்கிறதா? மாயா ஒருவரை மேலே கீழே ஆக்குகிறது என்றால் அதில் நன்மை இருக்கிறதா? இதில் என்ன நன்மை இருக்கிறது? மாயா உங்களை அனுபவி ஆக்குகிறது. நல்லது, அப்படி டிராமாவின் மேல் இந்தளவு அசைக்க முடியாத நிச்சயம் இருக்கட்டும். பார்ப்பதற்கு நல்ல விஷயமாக இல்லாம இருந்தாலும் அதிலும் கூட வெளியில் தெரியாத நன்மை என்ன அடங்கியிருக்கிறது என்று அதைத் பகுத்தறிய வேண்டும். எப்படி சில பொருட்கள் இருக்கின்றன அவை வெளியில் பார்க்கும் பொழுது கவர் நன்றாக இருக்காது, ஆனால் உள்ளே நல்ல பொருட்கள் இருக்கும். வெளியில் பார்த்தீர்கள் என்றால் உள்ளே என்ன இருக்கிறது என்று தெரிய முடியாத அளவிற்கு இருக்கும் ஆனால் கண்டறிந்து அதை திறந்து உள்ளே பார்த்தீர்கள் என்றால் மிக நல்ல பொருள் வெளிப்படும். அப்படி டிராமாவின் ஒவ்வொரு விஷயத்தையும் பகுத்தறியும் புத்தி தேவையாக இருக்கிறது. அந்த மாதிரி நேரத்தில் நிச்சயம் எவ்வளவு இருக்கிறது

என்று தெரிய வருகிறது. சூழ்நிலை எதிரில் வருகிறது, மேலும் சூழ்நிலை நேரத்தில் நிச்சயத்தின் நிலை இருக்கிறது என்றால் தான் நிச்சயபுத்தி உடைய வெற்றியடைபவர் என்று கூறப்படும். அப்படி மூன்றின் மேலும் -தந்தை மேல், தன் மேல் மற்றும் டிராமா மேல் உறுதியான நிச்சயம் தேவையாக இருக்கிறது. வலியில் துடித்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் கூறுகிறார்கள் ஆஹா ஆஹா டிராமா, அந்த நேரம் கதறுவீர்களா அல்லது ஆஹா ஆஹா என்று கூறுவீர்களா? 'ஐயோ பாபா காப்பாற்றுங்கள்' என்று மாட்டீர்களா? எப்பொழுது நிச்சயம் இருக்கிறது என்றால் நிச்சயத்தின் அர்த்தமே சந்தேகத்தில் பெயர் அடையாளம் இல்லாமல் இருப்பது. என்ன தான் நடந்தாலும் ஆடாத அசையாத நிச்சயபுத்தி இருக்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையும் சஞ்சலத்தில் கொண்டு வர முடியாது ஏனென்றான சஞ்சலத்தில் வருவது என்றால் பலஹீனம் ஆவது. எந்த ஒரு பொருளும் அதிகமாக சஞ்சலத்தில் வந்து விட்டால், ஆடிக் கொண்டே இருக்கிறது என்றால் உடைந்து விடும் இல்லையா. அப்படி எண்ணத்தில் கூட சஞ்சலம் இருக்க வேண்டாம் அந்த மாதிரியான ஆடாத அசையாத ஆத்மா அசைக்க முடியாத இராஜ்யத்தின் அதிகாரி ஆகுகிறார். சத்யுகம் திரேதாவில் அசைக்க முடியாத இராஜ்யம் இருக்கிறது. அந்த இராஜ்யத்தை யாரும் அடைய முடியாது. வேறு எந்தவொரு இராஜாவும் சண்டையிட்டு இராஜ்யத்தைப் பறிப்பது என்பது நடக்க முடியாது. எனவே இது அழியாத அசைக்க முடியாத இராஜ்யம் என்று மகிமை செய்யப்படுகிறது. அனேக ஜென்மங்கள் இந்த அசைக்க முடியாத துண்டிக்க முடியாத இராஜ்யம் செய்கிறீர்கள் ஆனால் யார் அதிகாரி ஆகிறார்கள். யார் இங்கு சங்கமயுகத்தில் ஸ்திரமாக துண்டிக்கப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள் தான். ஒருவேளை மூர்த்தியும் கூட துண்டிக்கப்பட்டு விடுகிறது என்றால் அதற்கு பூஜை நடக்காது. அதை மியூசியத்தில் வேண்டுமானால் வைப்பார்களேயன்றி பூஜை நடக்காது. எனவே அந்த மாதிரி அசைக்க முடியாத நிச்சயபுத்தி உடைய ஆத்மாக்களாக ஆக வேண்டும். யாராவது வெற்றி அடைந்தால் அந்த மாதிரி நிச்சயபுத்தி ஆத்மாவின் மனதில் எப்பொழுதும் வெற்றியின் குஷியில் இருக்கிறார். அவரின் உள்ளே எப்பொழுதும் குஷியின் இசை ஒலித்துக் கொண்டே இருக்கும். இன்றைய உலகில் கூட யாராவது வெற்றி அடைந்தால் வாத்தியங்கள் முழங்குகிறது இல்லையா? எப்பொழுதும் குஷியின் வாத்தியங்கள் முழங்கிக் கொண்டேயிருக்கின்றன. அடிக்கடி இசைக்க வேண்டியதில்லை

தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது இசைக்கருவிகள் நின்று விடுகின்றனவா? பக்தியில் கூட முடிவில்லாத பாடல்கள் என்று கூறுகிறார்கள். தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கும். அப்படி முடிவில்லாத பாடல் ஒலித்துக் கொண்டேயிருக்கட்டும். இரட்டை வெளிநாட்டினரிடம் தானாகவே பாடல் ஒலிக்கின்றதா? எப்பொழுதும் ஒலிக்கின்றதா? அல்லது எப்பொழுதாவதா? எப்பொழுதும் ஒலிக்கின்றது. அனைத்தையும் விட மிகப் பெரிய குஷியின் பொக்கிஷம் இப்பொழுது கிடைக்கிறது. அதைப் பாதுகாக்கத் தெரியுமா? பாதுகாப்பதற்கான விதி எப்பொழுதும் தந்தையை உடன் வைத்துக்கொள்வது, ஒருவேளை தந்தை எப்பொழுதும் உடன் இருக்கிறார் என்றால் தந்தையின் துணை தான் பெரியதிலும் பெரிய பாதுகாப்பு சாதனம் ஆகும். அப்படி பொக்கிஷத்தை பாதுகாப்பாக வைக்கத் தெரியுமா அல்லது மாயா திருடிச் சென்று விடுகிறதா? மறைந்து மறைந்து வந்து விடுவதில்லையே? அதுவும் பொல்லாதது. வருவதில் கூட குறைந்ததல்ல ஆனால் தந்தையின் துணை மாயாவை விரட்டுவதாகும். அப்படியானால் நீங்கள் எந்த மாதிரியான ஆத்மா? நிச்சய புத்தியுடைய வெற்றி ஆத்மாக்கள் ஆவீர்கள். எப்பொழுதும் வெற்றியின் திலகம் நெற்றியில் இடப்பட்டு இருக்கிறது. அந்தத் திலகத்தை யாரும் அழிக்க முடியாது. அழியாத திலகம் ஆகும் இல்லையா. அல்லது மாயாவின் கை வந்து விடுகிறது என்றால் அழிந்து விடுகிறதா? நல்லது. அனைவரும் மஹான் ஆத்மாக்கள் தான் இல்லையா. எந்த இடத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் ஆனால் இந்த நேரம் அனைவரும் மதுபன் நிவாசிகள் ஆவீர்கள். மதுபன் என்று சொன்னவுடனேயே குஷி ஏற்படுகிறது இல்லையா. ஏன்? மதுபன் என்று கூறியவுடன் மதுபனின் பாபா நினைவு வந்து விடுகிறது. எனவே மதுபன் நிவாசி ஆவதை விரும்புகிறீர்கள். இங்கேயே இருந்து விடலாம் என்று அனைவரும் விரும்புகிறீர்கள் இல்லையா? அந்த நாளும் வந்து விடும். கட்டில் கிடைக்காது, தலையணை கிடைக்காது பின்பு தாக்கம் எப்படி வரும்? அந்த மாதிரி தூங்குவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? உங்களுடைய கையையே தலையணையாக்க வேண்டியது இருக்கும். கல்மேல் தூங்க வேண்டியது இருக்கும். அப்படி எத்தனை நாள் தூங்குவர்கள்? அனைத்து பயிற்சியும் இருக்க வேண்டும். ஒருவேளை சாதனம் கிடைக்கிறது என்றால் நன்றாகத் தூங்குங்கள் ஆனால் கிடைக்கவில்லை என்றால் தூக்கம் வரவில்லை என்று அந்த மாதிரியான

பழக்கம் இருக்க வேண்டாம். இப்பொழுதோ சிலருக்கு கட்டில் தேவையாக இருக்கிறது. சிலருக்கு தனி அறை தேவையாக இருக்கிறது. எனவே அதிகமானவர்களை அழைப்பதில்லை. ஒருவேளை அனைவரும் தரையில் தூங்கினீர்கள் என்றால் எத்தனை பேர் வரமுடியும்? எண்ணிக்கை இரண்டு மடங்கு ஆக முடியும் இல்லையா. பின்பு காலில் வலி எடுக்கிறது, முதுகு வலி இருக்கிறது உட்கார முடியாது என்று யாராவது கூறுவீர்களா? என்ன கிடைத்தாலும், உணவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அதற்கும் தயாராக இருக்கிறீர்களா? அந்த சோதனையும் வரும். இரட்டை வெளிநாட்டினர் தரையில் தூங்க முடியுமா? அந்த அளவு உறுதியாக வேண்டும். ஒருவேளை படுக்கை கிடைத்தாலும் நல்லது கிடைக்காவிட்டாலும் நல்லது. ஐயோ, ஐயோ என்று கூற மாட்டீர்கள். சகித்துக்கொள்வதில் மாதர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். பாண்டவர்களும் திறமைசாலிகள் தான் எப்பொழுது இத்தனை பேர் ஒன்றாக இருக்கிறீர்கள் என்றால் குழுவின் குஷி அனைத்தையும் மறக்கச் செய்து விடுகிறது. அப்படி நிச்சயம் இருக்கிறது இல்லையா? பிராமண வாழ்க்கை என்றால் மகிழ்ச்சியே மகழ்ச்சி தான். எழுந்தாலும் மகிழ்ச்சி தான் தூங்கினாலும் மகிழ்ச்சி தான்.

**குரூப்-5: தன்னுடைய உயர்ந்த கௌரவத்தில் இருந்தீர்கள் என்றால் துயரங்கள் முடிவடைந்து விடும்!** அனைவரும் தங்களுடைய ஸ்தூல சீட்டில் (இருக்கையில்) செட் ஆகி (அமர்ந்து) விட்டீர்கள். செட் ஆவதில் குஷி ஏற்படுகிறது இல்லையா. அப்செட் ஆவது நன்றாக இருப்பதில்லை மேலும் செட் ஆவது நன்றாக இருக்கிறது. அப்படி மனம் மற்றும் புத்தியின் நிலை என்ற சீட்டில் எப்பொழுதும் செட் ஆகி இருக்கிறீர்களா? அல்லது அப்செட்டும் ஆகி விடுகிறீர்களா? அப்செட் ஆவதினால் துயரம் ஏற்படுகிறது மற்றும் செட் ஆவதினால் குஷி ஏற்படுகிறது. ஆறுதலும் கிடைக்கிறது. அப்படி எப்பொழுதும் குஷியில் இருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் துயரமாகவும் ஆகி விடுகிறீர்களா? தன்னுடைய கௌரவத்தை மறப்பது என்றால் துயரத்திக்குள்ளாவது. சங்கமயுகத்தில் பிராமணர்கள் உங்களுடைய அனைத்தையும் விட பெரியதிலும பெரிய கௌரவம் எது? ஈஸ்வரிய கௌரவம் தான் இல்லையா? மிக உயர்ந்த ஆத்மாக்கள் அப்படி மிக உயர்ந்தவராக ஆவதின் கௌரவம். அப்படி நான் தான் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானின் குழந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவன் என்று நினைவிருக்கிறது. எப்பொழுது இந்த கௌரவம்

நினைவிருக்கிறது என்றால் ஒருபோதும் துயரம் இருக்காது. யார் எவ்வளவு தான் தொந்தரவு செய்தாலும் நீங்கள் துயரத்தில் வர மாட்டீர்கள், ஏனென்றால் உங்களின் கௌரவம் மிக உயர்ந்தது. சில நேரம் காரிய விவகாரத்தில் மற்றும் சில நேரம் சூழ்நிலையின் காரணமாக துயரம் ஏற்படுகிறதா? 63-ஜென்மங்கள் துயரம் இருந்தது. அலைவது என்றால் துயரம் ஆவது. பக்தியில் அலைகிறார்கள் இல்லையா? அப்படி அரைக்கல்பம் துயரத்தில் இருந்ததின் அனுபவம் செய்து விட்டீர்கள். இப்பொழுதோ கௌரவத்தில் இருப்பீர்கள் இல்லையா? தேவதைகளின் கௌரவத்தை விட உயர்ந்தது இந்த பிராமணர்களின் கௌரவம். தேவதைகளின் கிரீடம் மற்றும் ஆசனத்தை விட உயர்ந்த ஆசனம் இப்பொழுது இருக்கிறது. அப்படி ஆசனத்தில் அமர தெரியுமா அல்லது கீழே வழுக்கி வந்து விடுகிறீர்களா? அனைவருக்கு ஆசனம் மற்றும் திலகம் கிடைத்திருக்கிறது மற்றும் கிரீடமும் கிடைத்திருக்கிறது. சேவையின் கிரீடம் கிடைத்திருக்கிறது. கிரீடம் தலையில் நிற்கிறதா அல்லது இறங்கி விடுகிறதா? அப்படி ஆசனதாரி ஆத்மாக்கள் ஒருபோதும் துயரம் அடைய முடியாது. ஆசனத்தை யாராவது பறித்து விட்டார்கள் என்றால் துயரம் ஆகி விடுகிறார்கள். எனவே எப்பொழுதும் தன்னுடைய பிராப்திகளின் நினைவை வையுங்கள். நோட்புக்கில் மட்டுமின்றி புத்தியிலும் வையுங்கள். ஒருவேளை பிராப்திகளின் பட்டியல் எதிரில் இருக்கிறது என்றால் தன்னுடைய உயர்ந்த கௌரவத்தின் நினைவு எப்பொழுதும் இருக்கும். ஒரு பிராப்தியை எதிரில் வைத்தால் கூட எவ்வளவு சக்தி வருகிறது. மேலும் அனைத்து பிராப்திகளின் நினைவு இருக்கிறது என்றால் சர்வ சக்திவானின் நிலை எளிதில் ஏற்பட்டு விடும். எப்பொழுது பிராப்திகளின் பட்டியல் புத்தியில் எப்பொழுதும் இருக்கிறது என்றால் தானாகவே மனதால் உள்ளத்தால் என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்ற பாடல் பாடிக் கொண்டே இருப்பார்கள். அடைந்து விட்டேன் என்று எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார்கள். உலகத்தினர் அடைவதற்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். நீங்களோ அடைந்து விட்டோம் அலைவது முடிவடைந்து விட்டது எங்களுடைய இடம் கிடைத்து விட்டது என்று கூறுகிறீர்கள். இப்பொழுது மனம் வீணான எண்ணங்களில் அலைகிறதா? எப்பொழுதெல்லாம் மனம் அல்லது புத்தி அலைகிறது என்றால் எதை அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்ற

பாடலைப் பாடுங்கள். தந்தை கிடைத்து விட்டார் என்பதால் அனைத்தும் கிடைத்து விட்டது. இதே போதையில் இருங்கள், புரிந்ததா?

நான் டில்லியைச் சேர்ந்தவன் அல்லது காசியைச் சேர்ந்தவன் என்ற இந்த நினைவை வைக்காதீர்கள். ஒருபொழுதும் குடும்பத்தில் இருக்கிறேன் அல்லது வீட்டில் இருக்கிறேன் என்று நினைக்காதீர்கள். சேவை ஸ்தானத்தில் இருக்கிறீர்கள். சேவை ஸ்தானம் என்று நினைப்பதால் விலகியவராகவும், அன்பானவராகவும் இருப்பீர்கள். வீடு என்று நினைப்பதினால் எனது எனது என்று வரும். மேலும் சேவை ஸ்தானம் என்றால் டிரஸ்டியாக இருப்பீர்கள். குடும்பஸ்தன் என்றால் என்னுடையது மேலும் டிரஸ்டி என்றால் உன்னுடையது.  அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்தாகி விட்டது. எனவே அனைத்தும் உன்னுடையது. எப்பொழுது நான் பாபாவினுடையவன் மற்றும் பாபா என்னுடையவர் என்று நினைத்தீர்களோ, எண்ணம் எதுவோ அதை நடைமுறையில் கொண்டு வர வேண்டும். எண்ணத்தில் மட்டும் இல்லாமல் சாகார சொரூபத்தில் ஒவ்வொரு காரியத்தில் "என்னுடைய பாபா" என்று உணர்ந்து நடக்க வேண்டும். என்னுடைய தந்தை விதையாக இருக்கிறார், விதையில் முழு மரமும் அடங்கி விடுகிறது. நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு நாளின் முரளி சாதனம் மூலமாக விணானவைகளை இல்லாமல் செய்யக்கூடிய கௌரவமாகத் தேர்ச்சி அடைபவர்கள் ஆகுக!**

ஒவ்வொரு நாளின் முரளி மனதை பிஸியாக வைப்பதற்கான சாதனம் ஆகும், முரளியில் ஏதாவது ஒரு கருத்தை சிந்தனை செய்து கொண்டேயிருந்தீர்கள் என்றால் மனம் பிஸியாகி இருக்கும் மேலும் வீணானவை தானாகவே இல்லாமல் ஆகி விடும். மனதை வீணாக எண்ணங்கள் வராத அளவிற்கு மனம், சொல், செயலின் சேவையில் பிஸியாக ஆக்கி விடுங்கள். அப்பொழுது தான் முடிவு பரீட்சையில் கௌரவமாகத் தேர்ச்சி அடைய முடியு ஒருவேளை வீணான எண்ணம் ஓடுவதற்கான பயிற்சி இருக்கும் என்றால் அந்த நேரத்தி ஏமாற்றம் அடைவீர்கள்.

**சுலோகன்: திட்டத்தை நடை முறையில் கொண்டு வருவதற்காக குழந்தை மற்றும் அதிகாரத்தன்மையின் சமநிலை வையுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 03.11.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக கௌரவத்தின் அடையாளம் எப்பொழுதும் நிரம்பி முழுமையாக மற்றும் திருப்தியாக இருப்பது!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள தன்னுடைய ராயல் (கௌரவமான) குடும்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முழு கல்பத்திலும் மிகவும் ராயலான ஆத்மாக்கள் நீங்கள் தான். எல்லைக்குட்பட்ட இராஜ அதிகாரத்தில் இருந்த ராயல் குடும்பங்கள் மிகவும் மகிமை செய்யப்பட்டிருக்கின்றன ஆனால் ஆன்மீக ராயல் குடும்பம் என்று நீங்கள் மட்டும் தான் மகிமை செய்யப்படுகிறீர்கள். ராயல் குடும்பத்தைச் சேர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் ஆதி காலத்திலும் அனாதி காலத்திலும் மேலும் இப்போதைய சங்கமயுகத்திலும் ஆன்மீக கௌரவம் நிறைந்தவர்கள், அனாதி காலத்தில் இனிமையான இல்லத்தில் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுடைய ஆன்மீகத்தின் ஜொலிப்பு மற்றும் பிரகாசம் மற்ற ஆத்மாக்களை விட உயர்ந்ததாகும். அனைத்து ஆத்மாக்களும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதி சொருபத்தில் தான் இருக்கிறார்கள், இருந்தாலும் உங்களுடைய கௌரவத்தின் பிரகாசம் தெய்வீகமானது. எப்படி சாகார உலகத்தில் கூட ஆகாயத்தில் அனைத்து நட்சத்திரங்களும் பிரகாசமாகத் தென்படுகின்றன ஆனால் சில விசேஷமாக பிரகாசமாக இருக்கும் நட்சத்திரங்கள் இயல்பாகவே தன்பக்கம் கவருகின்றன. ஒளி இருந்தும் கூட அவைகளுடைய ஒளி விசேஷமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகத் தென்படுகிறது. அப்படி ஆன்மீக கௌரவத்தின் ஜொலிப்பு விசேஷமாக அனுபவம் ஆகிறது. இதே போல் ஆதி காலம் சத்யுகம் அதாவது சொர்க்கத்தில் ஆத்மாக்கள் நீங்கள் விஷ்வ இராஜாவின் ராயல் குடும்பத்தின் அதிகாரி ஆகுகிறீர்கள். ஒவ்வொரு இராஜாவிற்கும் ராயல் குடும்பம் இருக்கும் ஆனால் ஆத்மாக்கள் உங்களுடைய ராயல் குடும்பத்தின் கௌரவம் மற்றும் தேவ மக்களின் கௌரவம் முழு கல்பத்திலும் வேறெந்த ராயல்

குடும்பத்தினருக்கும் இருப்பதில்லை. இவ்வளவு உயர்ந்த கௌரவத்தை சைத்தன்ய ரூபத்தில் பிராப்தி செய்திருக்கிறீர்கள். எனவே உங்களுடைய ஜட சிலைகளுக்கும் எவ்வளவு கௌரவமாகவும் மரியாதையாகவும் பூஜை நடக்கிறது. முழுக் கல்பத்திலும் கௌரவத்தின் விதிப்படி வேறெந்த தர்மத் தந்தைக்கோ. தர்ம ஆத்மா அல்லது மகான் ஆத்மாவிற்கோ அந்த மாதிரி பூஜை நடப்பதில்லை. எப்பொழுது ஜடச் சிலைகளுக்குக் கூட கௌரவமாக பூஜை நடக்கிறதென்றால் சைத்தன்யத்தில் எவ்வளவு ராயல் குடும்பத்தினராக ஆவீர்கள். அப்படியானால் அவ்வளவு ராயல் நிறைந்தவர்களாக இருக்கிறீர்களா? இப்பொழுது சங்கம யுகத்திலும் ஆன்மீக கௌரவம் அதாவது பரிஷ்தா சொரூபமாக ஆகிறீர்கள். ஆன்மீக தந்தையின் ஆன்மீக ராயல் குடும்பத்தினராக ஆகிறீர்கள். அப்படி அனாதி காலம், ஆதி காலம் மற்றும் சங்கமயுக காலம் ஆகிய மூன்று காலங்களிலும் நம்பர் ஒன் ராயலாக ஆகிறீர்கள். நான் மூன்று காலத்திலும் ஆன்மீக கௌரவம் நிறைந்த ஆத்மா என்ற போதை இருக்கிறதா?

இந்த ஆன்மீக கௌரவத்தின் அஸ்திவாரம் என்ன? முழுமையான தூய்மை. முழுமையான தாய்மை தான் கௌரவம் ஆகும். எனவே தன்னுடைய ரூபத்திலிருந்து ஆன்மீக கௌரவத்தின் ஜொலிப்பு அனைவருக்கும் எவ்வளவு அனுபவம் ஆகிறது என்று உங்களை நீங்களே கேளுங்கள். ஆன்மீக கௌரவத்தின் வெளிப்பாடு ஒவ்வொரு செயலிலும் அனுபவம் ஆகிறதா? லௌகீக உலகத்தில் கூட ஒருவருடைய அல்ப கால கௌரவத்தை தெரிந்திருக்காவிட்டாலும் அவருடைய முகம் மற்றும் நடத்தை மூலமாக அனுபவம் ஆகிறது. அப்படி ஆன்மீக கௌரவம் குப்தமாக இருக்க முடியாது, அதுவும் தென்படுகிறது. எனவே என்னுடைய முகத்தில், நடத்தையில் கௌரவம் தென்படுகிறதா? என்று ஒவ்வொருவரும் ஞானத்தின் கண்ணாடியில் அவரவர்களை பாருங்கள் அல்லது சாதாரண முகம் மற்றும் சாதாரண நடத்தைத் தென்படுகிறதா? எப்படி உண்மையான வைரம் தன்னுடைய பிரகாசத்தின் காரணத்தினால் எங்கும் மறைந்திருக்க முடியாது. அப்படி ஆன்மீக பிரகாசம் உடையவர்கள், ஆன்மீக கௌரவமானவர்களும் மறைந்திருக்க முடியாது.

அனேகக் குழந்தைகள் தங்களை குஷிப்படுத்துவதற்காக நாங்கள் ரகசிய ஆத்மாக்கள் எனவே எங்களை யாரும் தெரிந்து கொள்வதில்லை. நேரம்

வரும்பொழுது தானாகவே தெரியும் என்று நினைக்கிறார்கள் மற்றும் கூறவும் செய்கிறார்கள். ரகசியமாக முயற்சி செய்வது மிக நல்ல விஷயம் தான் ஆனால் குப்த முயற்சியாளரின் ஜொலிப்பு மற்றும் பொலிவு, ஆன்மீக கௌரவத்தின் பிரகாசம் மற்றவர்களுக்கு அவசியம் அனுபவம் செய்விக்கும். சுயம் தன்னை எவ்வளவு தான் குப்தமாக வைத்திருந்தாலும் அவருடைய வார்த்தை, அவருடைய உறவு நெருக்கம், ஆன்மீக செயல்பாடுகளின் பிரபாவம் அவரை வெளிப்படுத்துகிறது. அதைத் தான் உலகிலுள்ளவர்கள் சாதாரண வார்த்தைகளில் சொல் மற்றும் செயல் என்று கூறுகிறார்கள். அப்படி சுயம் தன்னை வெளிப்படுத்துவதில்லை ரகசியமாக வைக்கிறார்கள், இது பணிவின் விசேஷத்தன்மை ஆகும் ஆனால் மற்றவர்கள் அவர்களுடைய சொல், செயல் மூலமாக அவசியம் அனுபவம் செய்வார்கள் அப்படி இவர் ரகசிய முயற்சியாளர் என்று மற்றவர்கள் கூறட்டும். ஒருவேளை நான் ரசுசிய முயற்சியாளர் என்று தன்னையே கூறுகிறார்கள் என்றால் இதை ரகசியமாக வைத்தாரா? அல்லது வெளிப்படுத்தினாரா? ரகசியம் என்று கூறுகிறார்கள் ஆனால் நான் குப்த முயற்சியாளர் என்று அவர்களே சொல்கிறார்கள். இது குப்தமாக இருப்பதா? குப்த முயற்சியாளர்கள் அனேகர் எங்களை பொறுப்பில் இருக்கும் தாதிகள் தெரிந்திருக்கவில்லை என்று கடிதங்களிலும் எழுதுகிறார்கள். அவர்களே நாங்கள் என்ன செய்வோம், என்ன நடக்கும் என்று நீங்களே பார்க்கப் போகிறீர்கள் என்றும் எழுதுகிறார்கள். அப்படியானால் குப்தமாக வைத்திருந்தார்களா? அல்லது வெளிப்படுத்தினார்களா? குப்தமாக முயற்சி செய்பவர்கள் தன்னை குப்தமாக வைத்திருக்கட்டும், இது மிகவும் நல்லது தான் ஆனால் வர்ணனை செய்யாதீர்கள் மற்றவர்கள் உங்களைச் சொல்லட்டும். யார் தன்னைப் பற்றியே கூறுகிறாரோ அவரை என்னவென்று கூறுவது? (மீயா மிட்டு) அப்படி மியா மிட்டு (தனக்கு எல்லாம் தெரிந்தது போல் பேசுவது, நடப்பது) ஆவது மிகவும் சுலபமாக இருக்கிறது இல்லையா.

என்ன கேட்டுக் கொண்டிருந்தீர்கள்? ஆன்மீக கௌரவம்! ராயல் ஆத்மாக்கள் எப்பொழுதும் நிரம்பிய முழுமையானவராக இருக்கிறார்கள். மேலும் முழுமையின் அடையாளமாக, அவர்கள் எப்பொழுதும் திருப்தியான ஆத்மாவாக இருக்கிறார்கள். திருப்தியான ஆத்மா ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு ஆத்மாவின் உறவு நெருக்கத்தில் வரும்பொழுதும், அவர்களைத் தெரிந்திருந்தும்

திருப்தியாக இருக்கிறார். எவ்வளவு தான் திருப்தியில்லாமல் ஆக்கும் சூழ்நிலைகள் அவர் எதிரில் வந்தாலும் முழுமையான திருப்தியான ஆத்மா அதிருப்தி செய்பவருக்குக்கூட திருப்தி என்ற குணத்தை சகயோகம் என்ற ரூபத்தில் கொடுப்பார். அந்த ஆத்மாவிற்காக இரக்க மனம் உடையவராகி சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்கள் மூலமாக அவரையும் மாற்றுவதற்கு முயற்சி செய்வார். இது தான் ஆன்மீக கௌரவமான ஆத்மாக்களுடைய உயர்ந்த காரியம் ஆகும். ஸ்தூலமான ராயல் ஆத்மாக்கள் ஒருபொழுதும் சின்னச்சின்ன விஷயங்களில், சின்னச்சிள்ள பொருட்களில் தன்னுடைய புத்தி மற்றும் நேரத்தைக் கொடுப்பதில்லை. பார்த்தும் பார்க்காமல் இருப்பார்கள், கேட்டும் கேட்காமல் இருப்பார்கள். அதே போல் ஆன்மீக ராயல் ஆத்மா எந்தவொரு ஆத்மாவின் ராயல் இல்லாத சின்னச்சின்ன விஷயங்களில் தன்னுடைய புத்தியையும் நேரத்தையும் செலவழிக்க மாட்டார்கள். கௌரவம் என்றால் எந்தவொரு தரமில்லாத விஷயத்திலும் கண்கள் போகாமாலிருப்பது என்று உலகத்தினர் கூறுகிறார்கள். ஆன்மீக ராயல் ஆத்மாக்களின் வாயிலிருந்து ஒருபொழுதும் வீணான மற்றும் சாதாரண வார்த்தைகள் வெளிப்படாது. ஒவ்வொரு வார்த்தையும் சரியானதாக இருக்கும். சரியானதின் அர்த்தமே வீணான பாவம் (நோக்கம்) இல்லாமல் அவ்யக்த பாவம் மற்றும் அவ்யக்த பாவனை. இதைத்தான் கௌரவம் என்று கூறப்படுவது. இந்த நேரத்தின் ராயல்டி (கௌரவம்) எதிர்காலத்தில் ராயல் குடும்பத்தில் வருவதற்கு அதிகாரி ஆக்குகிறது. எனவே உள்ளுணர்வு ராயலாக இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். உள்ளுணர்வு ராயல் என்றால் எப்பொழுதும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பங்களின் உள்ளுணர்வு மூலமாக ஒவ்வொரு ஆத்மாவுடன் காரிய சம்மந்தத்தில் வருவதாகும். ராயல் பார்வை என்றால் எப்பொழுதும் பரிஷ்தா ரூபம் மூலமாக மற்றவர்களையும் பரிஷ்தா ரூபத்தில் பார்ப்பதாகும். கிருத்தி என்றால் காரியத்தில் எப்பொழுதும் சுகம் கொடுப்பது, சுகம் எடுப்பது. இந்த உயர்ந்த காரியத்தின் அனுசாரம் காரிய சம்மந்தத்தில் வரட்டும். அந்த மாதிரி ராயலாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது வேண்டுமா? பிரம்மாபாபாவின் சொல் மற்றும் செயல், முகம் மற்றும் நடத்தையின் ராயல்டியைப் பார்த்திருக்கிறீர்கள். அந்த மாதிரி பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடங்கள். சாகாரத்தில் இருப்பவரைப் பின்பற்றி நடப்பது சுலபம் தானே. பிரம்மாவைப் பின்பற்றினீர்கள் என்றால் பிள்பற்றியதாக தானாகவே ஆகி விடும். ஒருவரைப் பின்பற்றி

நடக்கலாம்? தந்தைக்குச் சமம் ஆவதற்கான விஷயங்களை தினந்தோறும் கேட்கிறீர்கள். கேட்பது என்தால் பின்பற்றி நடப்பதாகும். காப்பி அடிப்பது சுலபம் இல்லையா? அல்லது காப்பி அடிப்பது கூடத் தெரியாதா?

பாப்தாதா இன்று ஒரு விஷயத்தைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருந்தார். மதுபனிற்கு வருகிறார்கள் என்றால் விசேஷமாக குருவார் (வியாழக்கிழமை) நாள் அன்று என்ன செய்கிறார்கள்? ஒன்று 'போக்' ஸ்வீகாரம் செய்விக்கிறார்கள். மற்றும் என்ன செய்கிறார்கள்?, அதை மதுபனில் மட்டும் தான் செய்கிறார்கள்? உயிரோடு இருந்தே இறந்ததற்கான 'போக்'. நீங்கள் அனைவரும் உயிரோடு இருந்தே இறந்ததற்கான 'போக்' கொடுத்தாகி விட்டதா? உயிரோடு இருந்தே இறந்தது என்று கூறி கொண்டாடுவது சுலபம் தான் என்று பாப்தாதா புன்முறுவல் செய்து கொண்டிருந்தார். மேடையில் அமர்ந்தாகி விட்டது. திலகம் இடப்பட்டு விட்டது. இறந்து விட்டார்கள் ஆனால் உயிரோடு இருந்து கொண்டே இறப்பது என்றால் பழைய சம்ஸ்காரங்களிலிருந்து இறப்பது. பழைய சம்ஸ்காரம், பழைய உலகின் கவர்ச்சியிலிருந்து இறப்பது இது தான் உயிரோடு இருந்து கொண்டே இறப்பது ஆகும். 'போக்' கொடுத்து விட்டீர்கள். பண்டாராவில் பணம் போட்டு விட்டீர்கள். மேலும் உயிரோடு இருந்து கொண்டே இறப்பது ஆகி விட்டது, இதுவோ மிகவும் சுலபம் ஆனால் இறந்து விட்டீர்களா? பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரம் இவைகளிலிருந்து எண்ணம் மற்றும் கனவிலிருந்தும் கூட இறந்ததைக் கொண்டாட வேண்டும் என்று பாப்தாதா யோசித்துக் கொண்டிருந்தார். அந்த மாதிரி யார் உயிரோடு இருந்து கொண்டே இறப்பார்கள் மற்றும் எப்பொழுது கொண்டாடுவீர்கள்? ஒருவேளை மேடையில் அமர வைக்கிறார்கள் என்றாலும் சம்மந்தப்பட்ட அனைவரும் அமர்ந்து விடுகிறார்கள். மேடையில் அமருவது என்னவோ பொதுவான விஷயம் ஆனால் புத்தியை அமர வைக்க வேண்டும். இதைத் தான் உயிரோடு இருந்து கொண்டே இறப்பதை சரியாகக் கொண்டாடுவது ஆகும். எப்பொழுது இறந்து விடுகிறீர்களோ இறப்பது என்றால் மாறுவது. அந்த மாதிரி உயிரோடு இருந்து கொண்டே இறப்பது, இதற்காக எத்தனை பேர் தயாராவார்கள்? என்ன செய்வது நீங்கள் விரும்பவில்லை ஆனால் அப்படி ஆகி விட்டது என்று சென்டருக்குப் போய் சொல்வீர்களா? இங்கேயோ உயிரோடு இருந்து கொண்டே இறந்ததை கொண்டாடி விட்டுச் செல்கிறார்கள். பின்பு ஏதாவது ஒரு விஷயம் வருகிறது என்றால்

உயிர் பெற்று எழுந்து ஓடுகிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். நினைவுச்சின்னத்தில் கூட, இராவணனின் ஒரு தலையை வெட்டுகிறார்கள் என்றால் இன்னொன்று வந்து விடுகிறது என்று காண்பிக்கிறார்கள். இங்கேயும் கூட ஒரு விஷயம் முடிகிறது என்றால் இன்னொரு விஷயம் உருவாகி விடுகிறது. நாமோ இராவணனைக் கொன்று விட்டோம். பின்பு எங்கிருந்து வந்தான் என்று நினைக்கிறார்கள் ஆனால் மூல அஸ்திவாரத்தை அழிக்காத காரணத்தினால் ஒரு உருவத்தை மாற்றி இன்னொரு உருவத்தில் வந்து விடுகிறார். அஸ்திவாரத்தை அழித்து விட்டீர்கள் என்றால் உருவத்தை மாற்றி மாயா முற்றுகை இடாது, நிரந்தரமாக விடை பெற்றுச் சென்று விடும். புரிந்ததா என்ன ஆக வேண்டும் என்று. ஆன்மீக கௌரவமானவர்கள் ஆக வேண்டும். ஒவ்வொரு காரியமும் ஆன்மீக கௌரவமான குடும்பத்திற்கு ஏற்றதாக இருக்கிறதா? என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். எப்பொழுது 99-சதவிகிதம் வார்த்தை செயல் மற்றும் எண்ணங்கள் கௌரவமானதாக இருக்குமோ அப்பொழுது தான் எதிர்காலத்தில்கூட ராயல் குடும்பத்தில் வருவார் என்று நினைக்க முடியும். நானோ வந்தே விடுவன் என்று அப்படி நினைக்காதீர்கள். சரி, முழுமையாகவில்லை என்றால் ஒரு சதவிகிதம் விலக்கு அளிக்கிறோம் ஆனால் 99-சதவிகிதம் கௌரவம் நிறைந்த சம்ஸ்காரம் வார்த்தை மற்றும் எண்ணம் இயற்கையாக இருக்க வேண்டும். அடிக்கடி யுத்தம் செய்ய வேண்டியதாக இல்லாமல் இயற்கையான சம்ஸ்காரமாக ஆகி விடட்டும். நல்லது.

நாலாபுறமும் உள்ள ஆன்மீக கௌரவம் நிறைந்த ராயல் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தூய்மையின் மூலமாக கௌரவத்தை அனுபவம் செய்விக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் பரிஷ்தா சொரூப சம்ஸ்காரத்தை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் உயர்ந்த பிராமண உலகத்தில் பிராமண சம்ஸ்காரத்தை அனுபவம் செய்யும் ஆன்மீ, ராயல் குடும்பத்திற்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: சேவையில் பிஸியாக இருந்தால் சகஜமாக மாயாஜீத் ஆகி விடுவீர்கள்!** எப்பொழுதும் தன்னுடைய சக்திசாலியான உள்ளுணர்வு

மூலமாக சூழ்நிலையை மாற்றம் செய்யக்கூடிய உலகத்தை மாற்றும் ஆத்மாக்கள் தான் நீங்கள் இல்லையா? இந்த பிராமன வாழ்க்கையின் முக்கியமான தொழில் என்ன? தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக வார்த்தைகள் மூலமாக மற்றும் காரியம் மூலமாக உலக மாற்றம் செய்வதாகும். அந்த மாதிரி முழுமையாக ஆகி விட்டீர்களா? அல்லது வினாசம் வரை ஆவீர்களா? ஒருவேளை நேரம் முழுமையானவராகவும் சம்பூர்ணமானவராகவும் ஆக்கியது என்றால் படைப்பு சக்திசாலியாக ஆனதா? அல்லது படைப்பவர் சக்திசாலி ஆனரா? எனவே நேரம் வரும்பொழுது ஆகாதீர்கள் நேரத்தை அருகில் கொண்டு ரெ வேண்டும். நேரத்திற்காகக் காத்திருப்பவர்கள் நீங்கள் இல்லை. எப்பொழுது அடைந்து விட்டீர்களோ, அடைந்ததின் குஷியிலிருப்பவர்கள் எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பர். நாளை வினாசம் ஏற்படுகிறது என்றால் தயாராக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் நேரம் வேண்டுமா. தயார் நிலை, பற்றுதலை வென்ற நிலை, நினைவு சொரூபத்தில் இருப்பது. இவைகளின் தேர்ச்சியாகி விட்டீர்களா? தயார் நிலையின் அர்த்தமே பற்றுதலை வென்று நினைவு சொரூபத்தில் இருக்கும் நிலை அல்லது அந்த நேரம் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ, எங்கே இருப்பார்களோ சின்னச் சின்ன பேரக்குழந்தைகளுக்கு என்னவாகும் என்று நினைவு வருமா? கணவனுக்கும் நன்மை நடக்கட்டும். பேரக்குழந்தைகளுக்கும் நன்மை நடக்கட்டும். அவர்களையும் இங்கே அழைத்து வர வேண்டும் என்று நினைவு வருமா? வியாபாரத்திற்கு என்னவாகும்? பணம் எங்கே போகும்? சாலை உடைந்து விட்டால் பின்பு என்ன செய்வீர்கள்? பாருங்கள். திடீர் என்று தான் சோதனை வரும்.

எப்பொழுதும் விலகியவராகவும் அன்பானவராகவும் இருப்பது தான் தந்தைக்கு சமமானவராக ஆவதாகும். எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் விலகியிருப்பவராக இருக்க வேண்டும். இந்த விவகிய தன்மை தந்தையின் அன்பை அனுபவம் செய்விக்கிறது. சிறிதளவு தன் மேல் அல்லது வேறு யார் மேலேயும் இருக்கும் பற்றுதல் விலகியிருப்பவராக ஆக விடாது. விலகியிருப்பவர் மற்றும் அன்பாக இருப்பதின் பயிற்சி உங்களுடைய வரிசை எண்ணை முன்னுக்குக் கொண்டு செல்லும். இதற்கான சுலபமான முயற்சி பொறுப்புணர்வு ஆகும். பொறுப்பில் இருப்பவராக நினைப்பதால் பொறுப்பில்

இருப்பவராக ஆக்கியவரின் நினைவு வரும். என்னுடைய குடும்பம், என்னுடைய வேலை என்று வேண்டாம். நான் பொறுப்பில் இருக்கிறேன். பொறுப்பில் இருப்பவராக நினைப்பதால் பரீட்சையில் தேர்ச்சி பெற்று விடுவீர்கள். என்ன, அனைவரும் அப்படி சேவை செய்கிறீர்களா? அல்லது நேரம் கிடைப்பதில்லையா? பேசுவதற்கு நேரம் இல்லை என்றால் உள்ளுணர்வு மூலமாக மனசேவை மூலமாக மாற்றம் செய்வதற்கான நேரம் இருக்கிறது இல்லையா? சேவாதாரி ஆத்மாக்கள் சேவை இல்லாமல் இருக்க முடியாது. பிராமண ஜென்மமே சேவைக்காகத் தான். மேலும் எவ்வளவு சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்களோ அவ்வளவு மாயாவை வென்றவர்கள் ஆவீர்கள். அப்படி சேவையின் பலனும் கிடைத்து விடட்டும் மேலும் மாயாவையும் சுலபமாக வென்று விடட்டும். அப்படி இரட்டை இலாபம் இருக்கிறது இல்லையா. சிறிதளவு புத்திக்கு ஓய்வு கிடைத்தால் அதை சேவையோடு இணைத்து விடுங்கள். பார்க்கப் போனால் பஞ்சாப், ஹரியானாவில் சேவை உணர்வு அதிகமாக இருக்கிறது. குருதுவாராக்களுக்குப் போய் சேவை செய்கிறீர்கள் இல்லையா, அது ஸ்தூலமான சேவை மற்றும் இது ஆன்மீக சேவை. சேவைக்காகத் தவிர நேரத்தை வீணாக்க வேண்டாம். நிரந்தரமான யோகி, நிரந்தரமான சேவாதாரி ஆகுங்கள். சேவையை எண்ணத்தின் மூலம் செய்தாலும் சரி, வார்த்தைகள் மூலம் சரி அல்லது காரியங்களின் மூலம் செய்தாலும் சரி தான். தன்னுடைய தொடர்பு கூட சேவை செய்ய முடியும். இது சுலபம் தான் இல்லையா. எனவே எப்பொழுதும் சேவாதாரியாக இருக்கிறேனா அல்லது சில நேரம் சேவாதாரியாக இருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை சில நேரத்து சேவாதாரியாக இருந்தீர்கள் என்றால் இராஜ்ய பாக்கியமும் நேரத்திற்குத் தான் கிடைக்கும். இந்த நேரத்து சேவை எதிர்காலத்து பிராப்தியின் ஆதாரம். நாங்கள் சேவை செய்ய வேண்டும் என்று விரும்பினோம் ஆனால் நேரம் இல்லை என்று யாரும் சாக்கு போக்கு கொடுக்க முடியாது. சிலர் உடல் ஒத்துழைப்பதில்லை. கால்கள் வேலை செய்வதில்லை, என்ன செய்வது என்று கூறுகிறார்கள் ஆனால் புத்தி வேலை செய்கிறது இல்லையா. அப்படியானால் புத்தி மூலமாக சேவை செய்யுங்கள். சௌகரியமாக கட்டிலில் அமர்ந்து கொண்டு சேவை செய்யுங்கள். ஒருவேளை முதுகு வலிக்கிறது என்றால் படுத்துக் கொள்ளுங்கள் ஆனால் சேவையில் பிஸியாக இருங்கள். பிஸியாக இருப்பது தான் முயற்சி ஆகும். கடுமையாக உழைக்க வேண்டியது

இருக்காது. அடிக்கடி மாயா வருவது மற்றும் விரட்டுவது என்றால் கடும் உழைப்பு இருக்கிறது இல்லையா? மற்றும் யுத்தம் நடக்கிறது. இல்லையா? பிஸியாக இருப்பவர் யுத்தத்திலிருந்து விடுபட்டு விடுகிறார். பிஸியாக இருக்கிறீர்கள் என்றால் மாயாவிற்கு வருவதற்கு துணிச்சல் இருக்காது. மேலும் எவ்வளவு தன்னை பிஸியாக வைப்பீர்களோ அவ்வளவே உங்களுடைய உள்ளுணர்வு மூலமாக சூழ்நிலை மாறிக் கொண்டே இருக்கும். சூழ்நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. என்ன செய்வது என்று எந்தவொரு பிரமண ஆத்மாவும் நினைக்க முடியாது. மோசமாக இருக்கிறது என்பதால் தான் மாற்றம் செய்கிறீர்கள். மோசமாகவே இல்லை என்றால் என்ன செய்வீர்கள்? நல்லதை மாற்றுவீர்களா என்ன? அப்படி தீயதை நல்லதாக ஆக்குவது தான் உலக மாற்றம் செய்பவரின் வேலை ஆகும். எனவே மோசமானதாகத் தான் இருக்கும். மோசமானதை நல்லதாக மாற்றுபவர்கள் நீங்கள் தான். உலக மாற்றத்தின் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். அதனால் தான் இதுவரை உங்களுடைய மகிமை பாடப்படுகிறது. சக்திகளின் மகிமையில் உங்களை எவ்வளவு மகிமை செய்கிறார்கள். அப்படி உங்களுடைய மகிமையைக் கேட்டுக் குஷி ஏற்படுகிறது இல்லையா? பாண்டவர்களுக்கும் மகிமை இருக்கிறது. லட்சுமியுடன் அவசியம் கணேசரையும் வைக்கிறார்கள். அப்படி பாண்டவர்கள் தன்னுடைய சென்ற கல்பத்தின் நினைவுச்சின்னங்களை இப்பொழுது நீங்களே புரிந்து கொண்ருக்கிறீர்கள். கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். குஷி ஏற்படுகிறது இல்லையா? எப்படிப்பட்ட துன்பம் நிறைந்த காட்சிகளாக இருந்தாலும் மேலும் குஷியில் ஆடிக் கொண்டே இருக்குமளவிற்கு குஷி இருக்கிறது. கால்களால் ஆட வேண்டாம் மனதில் குஷியால் ஆடுகிறார்கள். ஏன் குஷியில் ஆடுகிறீர்கள்? ஏனென்றால் ஒன்றும் புதிதல்ல. நடந்தே தான் ஆக வேண்டும் என்ற ஞானம் இருக்கிறது. வேதனை தரும் விஷயங்களை கேள்விப்பட்டு எப்பொழுதாவது பயப்படுகிறீர்களா? உறுதியானவர்களா? ஒருவேளை பிராமண ஆத்மாக்கள் நீங்கள் உறுதியாகவில்லை என்றால் வேறு யார் ஆவார்கள்? மாஸ்டர் சர்வ சக்திவான் ஒருபோதும் பயப்படுவதில்லை. எப்பொழுதாவது அந்த மாதிரி சூழ்நிலை வந்தால் என் உடன் இருப்பவர் யார் என்று முதலில் நினையுங்கள். பாண்டவர்கள் எவ்வளவு சகித்துக் கொண்டார்கள் இருந்தாலும் தந்தை உடன் இருந்த காரணத்தால் வெற்றியாளர்கள் ஆனார்கள். அப்படி வெற்றிக்கு உறுதியளிக்கப்பட்டு

இருக்கிறது. உடன் தந்தை இருக்கிறார் என்றால் வெற்றியாளர் ஆவதற்கு உறுதி இருக்கிறது. எனவே ஒருபோதும் எந்த விஷயத்திலும் பலஹீனமானவர் ஆகாதீர்கள். உலகம் பயப்படட்டும் நீங்கள் குஷியில், மகிழ்ச்சியில் பயப்படுபவர்களுக்கு சக்தி கொடுங்கள். எப்பொழுதும் எதிரில் மரணத்தைப் பார்த்துக் கொண்டே தந்தையின் நினைவு வருகிறது. இல்லையா? அப்படி இன்னும் நினைவில் இருப்பதற்கான சூழ்நிலை கிடைத்திருக்கிறது. அப்படியே மரணம் அடையும் நேரத்தில், யார் நினைவு வருகிறது என்று கூறப்படுகிறது? அப்படி உங்களுக்கும் கூட அகால மரணத்தின் செய்தி கிடைக்கிறது. மரண உலகத்தைப் பார்த்து தன்னுடைய சொர்க்கம் அதாவது அமர உலகம் நினைவு வருகிறது. இன்று மரண உலகம், நாளை நம்முடைய இராஜ்யம் இருக்கும் என்ற குஷி இருக்கிறது இல்லையா? இன்றை நாளைப் பார்த்து நாளையின் நினைவு இன்னும் அதிகமாக வருகிறது. அப்படி அனைவரும் பயமற்றவர்களாக இருப்பவர்கள் தான் இல்லையா. நல்லது.

**குரூப்-2: நான் இரட்டைக் கதாநாயகன் -இந்தப் பதவியின் நினைவின் மூலமாக ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததாக இருக்கும்!** அனைவரும் தங்களை இந்த நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் உயர்ந்த கதாபாத்திர ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தை உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கிறார். அதே போல் உயர்ந்ததிலும் உயர்ந்த பாத்திரம் ஏற்று செய்யும் ஆத்மாக்கள் நீங்களும் உயர்ந்தவர்கள் ஆவீர்கள். இரட்டைக் கதாநாயகன் ஆவீர்கள். வைரத்திற்குச் சமமான வாழ்க்கையும் இருக்கிறது. மேலும் கதாநாயகப் பாத்திரம் ஏற்று செய்பவர்களாகவும் இருக்கிறீர்கள். அப்படியானால் ஒவ்வொரு காரியத்திலும் எவ்வளவு போதை இருக்க வேண்டும். ஒரு வேளை இந்த உயர்ந்த பாத்திரம் நினைவில் இருக்கிறது என்றால், எப்படி நினைவு இருக்கிறதோ அப்படி நிலை இருக்கும் மேலும் எப்படி நிலை இருக்கிறதோ அப்படி காரியங்கள் இருக்கும். அப்படியானால் எப்பொழுதும் இந்த நினைவு இருக்கிறதா? எப்படி உடல் ரூபத்தில் என்னவாக இருக்கிறீர்களோ, எப்படியாக இருக்கிறீர்களோ அது எப்பொழுதும் நினைவு இருக்கிறது இல்லையா? அதேபோல் ஆத்மாவின் தொழில், ஆத்மாவின் சொரூபம் என்னவாக இருக்கிறது எப்படி இருக்கிறது அதுவும் நினைவு இருக்க வேண்டும் இல்லையா. உடல் அழிவது தான் ஆனால் அதன் நினைவு அழியாமல் இருக்கிறது. ஆத்மா

அழியாதது, அப்படியானால் அதன் நினைவும் அழியாததாக இருக்கிறதா? எப்படி நான் உடல் என்பது பழக்கமாகி விட்டது. தவறான பழக்கம் தான் ஆனால் பழக்கம் மிகவும் உறுதியாகி விட்டது. அதனால் மறக்க விரும்பினாலும் மறப்பதில்லை. அப்படி தன்னுடைய சரியான சொரூபமும் அந்த மாதிரி உறுதியாக வேண்டும். உடலின் தொழில் கனவில் கூட நினைவிருக்கிறது. சிலர் எழுத்தராக இருக்கிறார். சிலர் வக்கீலாக இருக்கிறார், சிலர் வியாபாரம் செய்பவராக இருக்கிறார் இவை மறப்பதில்லை. அதே போல் இந்த பிராமண வாழ்க்கையில் நான் ஹீரோ பாத்திரம் ஏற்று செய்பவன் என்பது உறுதியாக இருக்க வேண்டும், இயற்கையாகவே இருக்க வேண்டும். அப்படி இயற்கையான வாழ்க்கை இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். எது இயற்கையானதோ அது எப்பொழுதும் இருக்கிறது மற்றும் எது இயற்கையான தில்லையோ அது எப்பொழுதாவது இருக்கிறது. எனவே நான் இரட்டை கதாநாயகன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். இந்த போதையில் நஷ்டம் இல்லை. மற்ற போதையில் நஷ்டம் இருக்கிறது. இது எல்லைக்குட்பட்ட போதை இல்லை எல்லைக்கப்பாற்பட்ட ஆன்மீக போதை ஆகும். அந்த போதையில் கூட அனைத்து விஷயங்களும் தானாவே மறந்து விடுகிறது மறக்க வேண்டியதாக இருப்பதில்லை. எப்பொழுது இந்த ஆன்மீக போதை ஏற்படுகிறது என்றால் எல்லைக்குட்பட்ட விஷயங்கள் மறந்து விடுகிறது. மறப்பதற்கான முயற்சி செய்ய வேண்டியதாக இருப்பதில்லை. நான் ஹீரோ பாத்திரம் செய்யும் ஆத்மா என்பது நினைவு இருக்கிறது என்றால் தானாவே ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததாக இருக்கும். ஒவ்வொரு காரியத்தின் மூலம் இவர் சாதாரணமானவர் அல்ல, விசேஷ ஆத்மா என்று அனைவருக்கும் அனுபவம் ஆகும். அந்த மாதிரி நினைக்கிறீர்களா? அல்லது எப்படி அனைவரும் இருக்கிறார்களோ அப்படியே நாம் தான் என்றா? வித்தியாசமானவராகப் படுகிறீர்களா? எத்தனை அஞ்ஞானிகள் இருந்தாலும் அனேக அஞ்ஞானிகளின் மத்தியில் நீங்கள் 'ஞானி ஆத்மா' பிரியமானவராக அனுபவம் ஆகும். இதைத்தான் கதாநாயகப் பாத்திரம் ஏற்று செய்பவர் என்று கூறப்படுவது. அந்த மாதிரி இருக்கிறீர்களா? தான் மட்டும் நினைத்தால் போதாது, மற்றவர்களும் அனுபவம் செய்யட்டும். இவர் வித்தியாசமானவர் என்று உள்ளுக்குள்ளேயே புரிந்து கொள்ளட்டும். விரும்பாவிட்டாலும் அனைவரும் உங்கள் எதிரில் தலை வணங்குவார்கள்.

**குரூப்-3: உயர்ந்த பாக்கியத்தின் நினைவு சொரூபம் ஆனீர்கள் என்றால் துக்க அலைகள் வர முடியாது!** தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தைப் பார்த்து பாக்கியத்தை உருவாக்கும் தந்தை எப்பொழுதும் இயல்பாகவே நினைவிற்கு வருகிறார் இல்லையா? பாக்கியத்தை உருவாக்குபவர் மற்றும் பாக்கியம் இரண்டும் நினைவு இருக்கிறது இல்லையா? என்னென்ன பாக்கியம் கிடைத்திருக்கிறது என்ற அதன் நினைவு எப்பொழுதும் எமர்ஜ் (வெளிப்படும்) ரூபத்தில் இருக்கட்டும். நினைவிருக்கிறதே என்று அப்படி இருக்க வேண்டாம். வெளியில் தென்படட்டும் ஏனென்றால் முழு கல்பத்திலும் இந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் ஒருபொழுதும் கிடைக்க முடியாது. சத்யுகத்தின் பாக்கியம் மற்றும் இந்த நேரத்தின் பாக்கியத்தில் என்ன வித்தியாசம் இருக்கிறது? இந்த நேரத்தின் பாக்கியம் உயர்ந்தது இல்லையா? ஏனென்றால் இந்த நேரம் வைரத்திற்குச் சமமானது மற்றும் சத்யுகத்தில் தங்கத்திற்குச் சமமானதாக ஆகி விடும். அதனால் எப்பொழுதும் உள்ளத்தில் உயர்ந்த பாக்கியத்தின் பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள். தானாகவே ஒலிக்கிறதா? அல்லது எப்பொழுதாவது நின்று விடுகிறதா? எப்பொழுதும் ஒலிக்கிறதா? அல்லது எப்பொழுதாவது கெட்டுப் போய் விடுகிறதா? ஏனென்றால் அழியாத பிராப்தியை செய்விப்பவர் பாக்கியத்தை உருவாக்குபவர் ஆவார். என்ன பாக்கியம் கிடைத்திருக்கிறதோ ஒருவேளை அதன் லிஸ்ட் (பட்டியல்) எடுத்தோம் என்றால் எவ்வளவு நீளமாக இருக்கும். மிக நீளமான லிஸ்ட் இல்லையா. அதனால் தான் எவ்வளவு கிடைத்திருக்கிறது, என்ன கிடைத்திருக்கிறது? என்று கேட்டால் கிடைக்காதது எதுவுமில்லை என்று கூறுகிறார்கள். இதன் மூலம் அனைத்தும் கிடைத்து விட்டது என்பது நிரூபணமாகிறது. என்ன கிடைத்திருக்கிறதோ அதைப் பாதுகாக்கத் தெரியுமா? அல்லது எப்பொழுதாவது யாராவது திருடிச் சென்று விடுகிறார்களா? மாயா திருடிச் சென்று விட வில்லையே? தாய்மார்களுக்கு எப்பொழுதாவது கொஞ்சமாவது துக்கத்தின் அலை வருகிறதா? அப்படியென்றால் அந்த நேரம் தன்னுடைய பாக்கியம் மறந்து விடுகிறது இல்லையா. நினைவில் கொண்டு வருகிறீர்கள். இதன் மூலம் நினைவு இழந்து விட்டீர்கள் என்று நிரூபணம் ஆகிறது. எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் இருங்கள். உலகத்தினர் பாக்கியத்தின் பின்னால் அலைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் உங்களுக்கு வீட்டில் அமர்ந்தபடியே பாக்கியத்தை உருவாக்கும் தந்தை பாக்கியத்தைக் கொடுத்து விட்டார். எவ்வளவு பெரிய மாற்றம்

வந்து விட்டது. ஒருபொழுதும் தன்னை இந்த உயர்ந்த பாக்கியத்திலிருந்து பிரித்து வைக்காதீர்கள். என்னுடைய பாக்கியம் என்றால் என்னுடையது எப்பொழுதாவது மறக்குமா என்ன? தந்தையால் கொடுக்கப்பட்ட பொக்கிஷம் தன்னுடையது இல்லையா. இது வரையிலும் கூட உங்களுடைய பாக்கியத்தின் மஹிமையை எவ்வளவு செய்து கொண்டிருக்கிறார்கள், அந்த அளவு உயர்ந்த பாக்கியவான் ஆத்மாக்கள் ஆகிறீர்கள். இந்த கீர்த்தனைகள் அனைத்தும் என்ன? உங்களுக்குக் கிடைத்தி பாக்கியத்தின் மஹிமைகள் தான். அப்படி எப்பொழுதாவது ஏதாவது தேவி தேவதைகளின் கீர்த்தனையைக் கேட்கிறீர்கள் என்றால் என்ன உணர்வு ஏற்படுகிறது? என்னுடைய பிராப்திகளின் மஹிமையைச் செய்கிறார்கள் என்று புரிந்து கொள்கிறீர்கள். மஹிமையை சைத்தன்யமாக கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். தன்னுடைய ஜட மூர்த்திகளின் இருக்கிறது? யாருக்கும் குறைவாக இருக்கவில்லை. வரிசைக்கிரமமாகவே இருப்பார்கள் தான் மிக அதிகமான குஷி யாருக்கு இல்லையா? அனைவரும் நம்பர் ஒன் ஆக இருக்கிறீர்களா? தடைகளை வென்றதில் நம்பர் ஒன் யார்? எந்த தடை வந்தாலும் அதை அழிப்பதில் நம்பர் ஒன் யார்? எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு நாள் ஆனதா? அல்லது ஒரு மணி நேரம் ஆனதா? நம்பர் ஒன் என்றால் எந்தவொரு தடையும் வருவதற்கு முன்பே தெரிந்து விட வேண்டும். நல்லது.

**குரூப்-4: விக்ன வினாஷக் (தடைகளை அழிப்பவர்) ஆவதற்காக சர்வ சக்திகளினால் நிரம்பியவர் ஆகுங்கள்!** அனைவரும் தன்னை தந்தையின் காரியத்தில் எப்பொழுதும் துணையாக இருப்பதாக நினைக்கிறீர்களா? எது தந்தையின் காரியமோ அது நம்முடைய காரியம். தந்தையின் காரியம் என்ன -பழைய உலகத்தைப் புதியதாக மாற்றுவது, அனைவருக்கும் சுகம் சாந்தியை அனுபவம் செய்விப்பது. இது தான் தந்தையின் காரியமாகும். அப்படி எது தந்தையின் காரியமோ அது தான் குழந்தைகளின் காரியம். தன்னை எப்பொழுதும் தந்தையின் ஒவ்வொரு காரியத்திலும் உடன் இருப்பவராக நினைப்பதினால் சுலபமாகவே தந்தையின் நினைவு வருகிறது. காரியத்தை நினைவு செய்வதினால் காரியம் செய்பவரின் நினைவும் தானாகவே வருகிறது. இதைத் தான் சுலபமான நினைவு என்று கூறப்படுகிறது. அப்படி எப்பொழுதும் நினைவிருக்கிறதா? அல்லது நினைவு செய்ய வேண்டியதாக இருக்கிறதா? எப்பொழுது ஏதாவது மாயாவின் தடை வருகிறது என்றால்

நினைவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படியே பாருங்கள் உங்களுடைய ஞாபகார்த்தமாக விக்ன வினாஷக் இருக்கிறார். கணேஷரை என்னவென்று கூறுகிறார்கள்? விக்ன வினாஷக். அப்படி விக்ன வினாஷக் ஆகி விட்டீர்களா இல்லையா? விக்ன வினாஷக் என்றால் முழு உலகத்தின் விக்ன வினாஷக். தன்னுடைய விக்ன வினாஷக் இல்லை. தன்னுடையதிலேயே மூழ்கி இருந்தீர்கள் என்றால் உலகத்திற்காக எப்பொழுது செய்வீர்கள்? அப்படி நீங்கள் முழு உலகத்தின் விக்ன வினாஷக் ஆவீர்கள். அவ்வளவு போதை இருக்கிறதா? அல்லது தனக்கு ஏற்பட்ட தடைகளிலேயே அங்கும் இங்கும் ஓடுவதிலேயே மூழ்கிப் போயிருக்கிறீர்களா? யார் எப்பொழுதும் அனைத்து சக்திகளினால் நிரம்பி இருக்கிறாரோ அவர் தான் விக்ன வினாஷக் ஆக முடியும். எந்தவொரு விக்னத்தையும் வினாஷம் செய்வதற்கு என்ன அவசியமாக இருக்கிறது? சக்திகளின் அவசியம் இருக்கிறது இல்லையா. ஒருவேளை ஏதாவது சக்தி இல்லை என்றால் விக்னத்தை வினாசம் செய்ய முடியாது, எனவே தன்னை எப்பொழுதும் தந்தையின் உடன் இருப்பவர் என்றும் உலகத்தின் விக்ன வினாஷக் என்றும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். விக்ன வினாஷக்கின் எதிரில் எந்தவொரு விக்னமும் வர முடியாது. ஒருவேளை தன்னிடமே வந்து கொண்டிருக்கிறது என்றால் மற்றவர்களினுடையதை எப்படி வினாசம் செய்வீர்கள். அனைத்து சக்திகளின் பொக்கிஷம் இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறதா? எந்தவொரு பொக்கிஷமும் ஒருவேளை குறைவாக இருக்கிறது என்றால் தேவையான நேரத்தில் வெற்றி அடைய முடியாது. எனவே அனைத்து பொக்கிஷங்களும் இருக்கின்றனவா, அனைத்து சக்திகளும் இருக்கின்றனவா என்று தன்னுடைய இருப்பைச் சோதனை செய்யுங்கள். ஏனென்றால் தந்தை அனைவருக்கும் அனைத்து சக்திகளும் கொடுத்திருக்கிறார். அல்லது சிலருக்கு குறைவாக கொடுத்திருக்கிறார் மற்றும் சிலருக்கு அதிகமாக கொடுத்திருக்கிறாரா? அனைவருக்கும் அனைத்து சக்திகளும் கொடுத்திருக்கிறார் இல்லையா. மேலும் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்றும் கூறுகிறீர்கள் தானே. அப்படி அனைத்து சக்திகளும் என்னுடைய ஆஸ்தி ஆகும். ஆஸ்தி ஒருபொழுதும் தன்னை விட்டுப் போக முடியாது. ஆஸ்தியின் போதை இருக்கிறது இல்லையா. ஒருவேளை யாருக்காவது மிகப் பெரிய ஆஸ்தி கிடைத்து விடுகிறது என்றால் எவ்வளவு போதை, எவ்வளவு குஷி இருக்கிறது. உங்களுக்கோ அழியாத

ஆஸ்தி கிடைத்திருக்கிறது. அப்படியானால் போதையும் அழியாததாக இருக்க வேண்டும் இல்லையா? அப்படி எப்பொழுதும் போதை இருக்கிறதா? குழந்தை என்றால் உரிமையாளர். பாப்தாதா குழந்தைகளின் சேவையின் வளர்ச்சியைப் பார்த்து குஷியடைகிறார். குவான்டிடி (அளவு) மற்றும் குவாலிட்டி (தரம்) இரண்டும் இருக்கிறது இல்லையா. சேவையில் இரண்டின் சமநிலை இருக்கிறதா? அல்லது குவான்டிடி அதிகமாக இருக்கிறது. குவாலிட்டி குறைவாக இருக்கிறதா? தந்தைக்கோ குவான்டிடியும் வேண்டும் குவாலிட்டியும் வேண்டும். குவாலிட்டியின் சேவை வேண்டுமென்று எதற்காக கூறுகிறார்? ஏனென்றால் குவாலிட்டியான ஒருவர் அனேக குவான்டிடிகளைக் கொண்டு வருவார். இருந்தாலும் தந்தைக்கு பிரியமானவர்களோ இன்றைய நாட்களின் கணக்குப்படி சாதாரண ஆத்மாக்கள் தான். அவர்களும் விசேஷமானவர்கள் தான் ஆனால் இன்றைய உலகின் கணக்குப்படி சாதாரணமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். சாதாரண ஆத்மாக்கள் மிக உயர்ந்தவர்களாக ஆகி விட்டார்கள், இது தான் அதிசயம். இந்த ஆத்மாக்கள் கூட இவ்வளவு ஆஸ்திக்கு அதிகாரிகளாக ஆவார்கள் என்று நினைத்துக் கூட பார்க்க முடியாதவர்கள் தான் இவர்கள். உலகம் யோசித்துக் கொண்டே இருக்கிறது மற்றும் நீங்கள் ஆகி விட்டீர்கள். அவர்களோ எந்த வேஷத்தில் வருவார், எப்பொழுது வருவார் என்று தேடிக் கொண்டே இருக்கிறார்கள். மேலும் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? அடைந்து விட்டோம், அப்படி அடைந்து விட்டோம் என்பதின் குஷி இருக்கிறது இல்லையா! அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷம் குஷி தான். ஒருவேளை குஷி இருக்கிறது என்றால் அனைத்தும் இருக்கிறது. மற்றும் குஷி இல்லை என்றால் ஒன்றுமே இல்லை. மாதர்கள் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது மனதால் அழவும் செய்கிறீர்களா? பாண்டவர்கள் அழுகிறீர்களா? கண்களால் அழுவதில்லை. மனதால் அழுகிறீர்களா? சோர்வு அடைகிறீர்களா? எப்பொழுதாவது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்றால் சோர்வடைந்து விடுகிறீர்களா? அப்படி சோர்வு அடைவது கூட மனதால் அழுவது ஆகும். சோர்வாக இருந்தீர்கள் என்றால் சிரிப்பு வராது, அதாவது குஷி மறைந்து விட்டது இல்லையா. இப்பொழுது சோர்வடையவும் முடியாது ஏனென்றால் பிராப்திகளின் எதிரில் இந்த சிறு சிறு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட அளவில்லன பிராப்திகளின் எதிரில் இது என்ன பெரிய விஷயம். எப்பொழுது பிராப்திகளை மறந்து

விடுகிறீர்களோ அப்பொழுது சோர்வு அடைந்து விடுகிறீர்கள். என்ன நடந்தாலும் சரி ஒருபொழுதும் தந்தையின் பொக்கிஷத்தை இழக்கக் கூடாது. குஷி தந்தையின் பொக்கிம் ஆகும், அதை ஒருபொழுதும் விடக்கூடாது. உடலே போய் விட்டாலும் குஷி போகக்கூடாது என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம் இல்லையா. இவ்வளவு உறுதியாக ஆவது தான் பிராமண வாழ்க்கை ஆகும். புரிந்ததா? சோர்விற்கு விவாகரத்து கொடுத்து விடுங்கள். விவாகரத்து கொடுத்தவர்களை உடன் வைத்துக் கொள்வதில்லை. விவாகரத்து கொடுத்து விட்டீர்கள் என்றால் முடிந்து விட்டது என்பதாகும்.

**குரூப்-4a: பீஸ் பார்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சாந்தி மேளாவில் சேவைப் பொறுப்பிலிருந்த சேவாதாரிகளுக்காக!**

சேவையிலோ நல்ல தைரியம் வைக்கக் கூடியவர்கள் தான். மேளா நன்றாக செய்திருந்தீர்கள். அனேக ஆத்மாக்களுக்கு சுலபமாக அமைதியை அனுபவம் செய்விப்பது எவ்வளவு புண்ணிய காரியமாகும். அப்படி புண்ணிய ஆத்மாவாகி புண்ணியத்தின் முதலீட்டை சேவை மூலமாக சேமித்துக் கொண்டிருக்கிறீர்கள். மிக நன்றாக அன்போடு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த சேவையும் குஷியை அதிகரிக்கிறது. அப்படி முதலில் தன்னை அனுபவி ஆக்குகிறார்கள் பின்பு மற்றவர்களுக்கு அனுபவம் செய்விக்கிறார்கள். பாக்கியத்தை உருவாக்குவதற்காக பொன்னான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நன்றாக இருந்தது, சகஜ சாதனமும் இருந்தது. சிம்பிளாகவும் இருந்தது. நல்லது. குஜராத்தை சேர்ந்த இளைஞர்கள் தடைகளற்றவர்களாக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் தடைகளும் இருக் கின்றனவா. தந்தையைப் பாருங்கள் என்றிருந்தால் எப்பொழுதும் தடைகளற்றவர்களாக இருப்பீர்கள் சகோதரியைப் பார்ப்பது, சகோதரனைப் பார்ப்பது என்றிருந்தால் ஏதாவது குழப்பம் ஏற்படுகிறது. எனவே எப்பொழுதும் தந்தையைப் பாருங்கள். பிரம்மாபாபா என்ன செய்தார்? என்று பாருங்கள். நல்லது. மாதர்களோ நடனம் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள் கும்பி நடனமும் ஆடுகிறார்கள், குஷியில் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள். கும்மி அடிக்கிறார்கள் என்றால் ஒருவர் இன்னொருவருடன் சந்திப்பு ஏற்படுகிறது இல்லையா. என்ன நடனம் ஆடினாலும் ஒருவர் இன்னொருவருடன் சேர்த்து விடுகிறார்கள் இல்லையா. ஒருவர் கையை உயர்த்துகிறார். இன்னொருவர் கையை

கீழே கொண்டு வருகிறார் என்றால் நன்றாக இருக்குமா? அந்த மாதிரி சம்ஸ்காரம் ஒத்துப்போகும் மாதிரி கும்மி நடனம் ஆட வேண்டும். புரிந்ததா. இந்த கும்ம அடித்தலையோ அஞ்ஞானிகள் கூட செய்கிறார்கள் ஆனால் ஞானிகளுக்கு எந்த கும்மியடித்தல் செய்ய வேண்டும்? சம்ஸ்காரம் ஒத்துப் போவதற்கான கும்மி. அனைவரின் சம்ஸ்காரம் தந்தைக்கு சமமானதாக இருக்கட்டும். இந்த சம்ஸ்காரம் இணைந்து போகும் நடனம் ஆடத் தெரியுமா அல்லது சில நேரம் தெரிகிறது, மற்றும் சில நேரம் தெரியவில்லையா? இப்பொழுது இந்த விசேஷத்தைப் பார்க்க வேண்டும். சம்ஸ்காரத்தின் மோதல் ஏற்பட வேண்டாம், சம்ஸ்காரததை ஒத்துப் போக வைக்க வேண்டும். ஒருவேளை யாராவது தவறு செய்தாலும் நீங்கள் சரி செய்யுங்கள் நீங்கள் தவறு செய்யாதீர்கள். அவருக்கு இன்னும் அதிகமாக அமைதியின் சகயோகம் கொடுங்கள். எனவே புரிந்ததா. நீங்கள் விக்ன வினாஷக் ஆத்மாக்கள். நம்முடைய ஞாபகார்த்தம் தான் விக்ன வினாஷக் என்று எப்பொழுதும் அனுபவம் செய்யுங்கள். விக்ன வினாஷக்காக ஆவதற்கான விதி என்ன, எப்படி விக்ன வினாஷக் ஆக முடியும்? அமைதியின் மூலமாகவா அல்லது எதிர்ப்பதினாலா அல்லது கொஞ்சம் குழப்பம் செய்வதினாலா? அமைதியாக ஆக்க வேண்டும் மற்றும் அமைதியின் மூலமாக அனைத்து காரியத்தையும் நிறைவேற்ற வேண்டும். கொஞ்சம் குழப்பம் செய்வதினால் அனைவரின் கவனத்தை இழுக்கிறோம் என்று கூறாதீர்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். இப்படிச் செய்வதால் கவனத்தை இழுக்கவில்லை, டென்ஷனை உருவாக்குகிறீர்கள். எனவே விக்ன வினாஷக் ஆக வேண்டும் என்றால் அமைதியின் மூலமாக ஆக வேண்டுமேயன்றி குழப்பம் செய்வதினால் இல்லை. எப்பொழுதும் அமைதியான நிலை, அமைதியின் சக்தி எவ்வளவு பெரிய தடையாக இருந்தாலும் அதை சுலபமாக முடித்து விடுகிறது. அப்படியானால் அமைதி சக்தியின் சேமிப்பு இருக்கிறது இல்லையா. நல்லது.

**குரூப்-5: பிராமண வாழ்க்கையின் சேஃப்டியின் (பாதுகாப்பின்) சாதனம் தந்தையின் குடை நிழல்!** ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே தந்தையின் குடை நிழலின் கீழேயே இருப்பவராக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? குடை நிழல் பாதுகாப்பின் சாதனமாகி விட்டும். எப்படி ஸ்தூலமான உலகத்தில் வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்காக

குடைநிழலின் ஆதாரத்தை எடுக்கிறார்கள். அதுவோ ஸ்தூலமான குடைநிழல். இது தந்தையின் குடைநிழல், இது ஆத்மாவை ஒவ்வொரு நேரமும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது. ஆத்மா எந்தவொரு அற்ப கால கவர்ச்சியினால் கவரப்படுவதில்லை, சேஃப் (safe) ஆக இருக்கிறது. அப்படி தன்னை எப்பொழுதும் குடைநிழலின் உள்ளேயே இருக்கும் சேஃப் ஆக பாதுகாப்பாக உணருகிறீர்களா? பாதுகாப்பாக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் ஷேக் (ஆட்டம்) வந்து விடுகிறதா? கொஞ்சம் கூட இந்த சாகார உலகத்தின் மாயாவின் பிரபாவத்தின் ஷேக் வர வேண்டாம். ஏனென்றால் ஷேக்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக பாபா அந்த மாதிரி சாதனம் கொடுத்திருக்கிறார். அனைத்தையும் விட எளிதான அந்த சாதனம் -தந்தையின் குடைநிழல். ஒரு விநாடி கூட எடுப்பதில்லை. பாபா என்று கூறுங்கள் மற்றும் பாதுகாப்பாகி விடுவீர்கள். அப்படி பாதுகாப்பாக இருக்கிறீர்களா? ஏனென்றால் இன்றைய உலகத்தில் அனைவரும் பாதுகாப்பின் வழியை தேடுகிறார்கள். எந்த விஷயத்தை பேசினாலும் முதலில் பாதுகாப்பை யோசிப்பார்கள் பின்பு செய்வார்கள். அப்படி இன்றைய நாட்களில் அனைவரும் ஸ்தூலமாகவும் சூட்சுமமாகவும் பாதுகாப்பை விரும்புகிறார்கள். அப்படி தந்தையும் கூட பிராமண வாழ்க்கையில் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பதற்கான சாதனம் கொடுத்திருக்கிறார். எப்பேற்பட்ட சூழ்நிலை வந்தாலும் நீங்கள் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்க முடியும். அந்த மாதிரி பாதுகாப்பாக இருக்கிறீர்களா? அல்லது குழப்பத்திலும் வந்து விடுகிறீர்களா. எவ்வளவு எளிதான சாதனம் கொடுத்திருக்கிறார். கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை. இது கஷ்டமான மார்க்கம் இல்லை ஆனால் தன்னுடைய பலஹீனங்கள் கஷ்டத்தை அனுபவம் செய்விக்கின்றன. எப்பொழுது பலஹீனமானவராக ஆகி விடுகிறீர்களோ அப்பொழுது கடினமாக இருக்கிறது. எப்பொழுது சக்திசாலி ஆகி விடுகிறீர்களோ அப்பொழுது சுலபமாக இருக்கிறது. எளிதானது தான் ஆனால் தானே கடினமாக அனுபவம் செய்விப்பதற்கு பொறுப்பாளர் ஆகி விடுகிறீர்கள். கடினத்தில் களைப்பு ஏற்படுகிறது. மேலும் சுலபமானதில் குஷி ஏற்படுகிறது. ஒருவேளை ஏதாவது ஒரு காரியத்தில் சுலபமாக வெற்றி ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்றால் குஷி இருக்கும் இல்லையா. கடினமாக செய்ய வேண்டியது இருக்கிறது என்றால் களைப்பு ஏற்படும். அப்படியானால் குஷி நல்லதா களைப்பு நல்லதா? பாப்தாதா

எப்பொழுதும் குழந்தைகளை அரைக்கல்பம் கடினமாக உழைத்தீர்கள், இப்பொழுதும் கடினமாக உழைக்க வேண்டாம். இப்பொழுது மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள் என்று கூறுகிறார். மகிழ்ச்சியோடு இருக்கும் நேரத்திலும் கஷ்டப்பட வேண்டியது இருக்கிறது என்றால் எப்பொழுது மகிழ்ச்சியோடு இருப்பீர்கள்? இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுதும் இல்லை. எனவே எப்பொழுதும் சுலபம் என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருப்பவர்கள். அப்படி எப்பொழுதும் குடைநிழலின் உள்ளேயே இருக்கிறீர்களா அல்லது வெளியில் வந்து பார்ப்பதில் மகிழ்ச்சி ஏற்படுகிறதா? சிலர் நல்ல இடங்களில் அமர்ந்து இருப்பார்கள், ஆனால் பார்க்கும் பழக்கம் இருக்கிறது என்றால் நல்ல இடத்தையும் விட்டுவிட்டு பார்த்துக் கொண்டே இருப்பார்கள், வெளியில் சென்று சுற்றி வருவார்கள் அப்படிப்பட்ட பழக்கம் இல்லை அல்லவா? குடை நிழலின் உள்ளே இருப்பதின் மகிழ்ச்சியை அனுபவம் செய்யுங்கள். இது என்ன, இது ஏன், இது எப்படி என்றிருந்தால் குடை நிழலின் உள்ளே இருந்து வெளியில் வந்த சுற்றி வருவதாகும். இந்த குடை நிழல் எப்பொழுதும் சேஃப்பாக இருப்பதின் உயர்ந்த கோடாகும் கோட்டிற்கு வெளியே செல்வதினால் சோக வனம் கிடைக்கிறது மற்றும் கோட்டின் உள்ளே இருப்பதினால் அசோக வனம் கிடைக்கிறது. ஏதாவது சோகம் இருக்கிறதா என்ன? எப்பொழுதாவது துக்கத்தின் அலை வருகிறதா? ஏதாவது ஒரு விஷயத்தில் கொஞ்சமாவது எண்ணத்தில்கூட ஒருவேளை துக்கத்தின் அலை வருகிறது என்றால் சோக வனத்தில் இருக்கிறீர்கள். சங்கமயுகத்தில் தந்தை அசோக வனத்தில் இருப்பதற்கான சாதனம் கூறுகிறார். மேலும் இந்த நேரத்து பயிற்சியின் மூலமாக அனேக ஜென்மங்கள் சோகமற்று இருப்பீர்கள். சோகத்தின் பெயர் அடையாளம் கூட இருக்காது. அப்படி எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கும் உயர்ந்த ஆத்மாக்கள் என்ற இந்த அனுபவத்தை செய்து கொண்டே செல்லுங்கள். சக்தி நிறைந்த தந்தை, சக்தி நிறைந்த குழந்தைகள் அப்படியானால் குடைநிழல் பிடித்திருக்கிறது இல்லையா. நல்லது.

**குரூப்-6: பரமாத்மா அன்பிற்குரியவர்களாக ஆனீர்கள் என்றால் சுலபமாக மாயாவை வென்றவர் ஆகி விடுவீர்கள்!** அனைவரும் தங்களை பரமாத்ம ஜோதியில் பலியாகும் வீட்டில் பூச்சி என்று நினைக்கிறீர்களா? வீட்டில் பூச்சிகள் இரண்டு விதமானவை இருக்கின்றன -ஒன்று சுற்றி வருவது, இன்னொன்று நொடியில்

(விளக்கில்) விழுந்து பலியாவது. நீங்கள் அனைவரும் எந்த விதமான விட்டில் பூச்சிகள்? பலியாகி விட்டீர்களா? அல்லது ஆகக்கூடியவர்களா? அல்லது இப்பொழுது கொஞ்சம் யோசிக்கிறீர்களா? யோசிப்பது என்றால் சுற்றி வருவது. பலியானதிற்குப் பிறகு சுற்றி சுற்றி வர வேண்டிதிருக்காது. அனைவரும் பலியாகி விட்டீர்களா? எப்பொழுது ஏதாவது நல்ல பொருள் கிடைத்து விடுகிறது மேலும் இதை விட நல்ல பொருள் வேறு எதுவுமே இல்லையென்று புரிந்து விட்டால் யோசிப்பதற்கு அவசியம் இருப்பதில்லை. அந்த மாதிரி தான் முடிவெடுத்திருக்கிறீர்கள் இல்லையா? பாப்தாதாவிற்கு அந்த மாதிரி நிச்சயபுத்தியுள்ள வெற்றியடையும் இரத்தினங்களைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதிகமான குஷி யாருக்கு இருக்கிறது?, தந்தைக்கா? அல்லது உங்களுக்கா? குழந்தைகளுக்கு அதிக குஷி இருக்கிறது என்றால் தந்தைக்கு முதலில் இருக்கிறது என்று தந்ை கூறுகிறார். பாருங்கள் பாப்தாதா எங்கெங்கிருந்தெல்லாம் தேர்ந்தெடுத்து உங்களை தோட்டத்தின் ஆன்மீக ரோஜா மலராக்கியிருக்கிறார். இந்த ஒரு குடும்பத்தினராக ஆவதில் எவ்வளவு குஷியிருக்கிறது. இவ்வளவு பெரிய குடும்பம் யாருக்காவது இருக்குமா? பின்பற்றி நடப்பவர்கள் இருக்க முடியும் ஆனால் குடும்பம் இருக்க முடியாது. எவ்வளவு குஷிகள் இருக்கின்றன. தந்தை கிடைத்ததின் குஷி, தன்னுடைய பாக்கியத்தின் குஷி மற்றும் குடும்பத்தின் குஷி. குஷியே குஷி தான் இல்லையா? அமிர்தவேளையில் கண் திறந்தவுடனேயே குஷியின் ஊஞ்சலில் ஆடுகிறீர்கள் மேலும் இரவில் தூங்குகிறீர்கள் என்றாலும் குஷியின் ஊஞ்சலில் தூங்குகிறீர்கள். இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட சுகத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்றால் யாரிடம் கேட்க வேண்டும்? என்னிடம் கேளுங்கள் என்று ஒவ்வொருவரும் கூறுவார்கள். இது சுத்தமான போதை, தேகப் பற்றுதலின் போதையில் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர்களின் ஆன்மீக போதை இருக்கிறது. ஆன்மீக போதை எல்லைக்குட்பட்ட போதையாக மட்டும் ஆக்காதீர்கள். பாப்தாதாவிற்கு மிக அதிகமான அன்பு குழந்தைகளின் மேல் இருக்கிறது. அதன் அடையாளம் என்ன? ஏதாவது நடைமுறையில் உள்ள அடையாளம் சொல்லுங்கள் (அனைவரும் கூறினார்கள்). பாருங்கள், ஒவ்வொரு நாளும் இவ்வளவு பெரிய கடிதம் (முரளி) வேறு யாரும் எழுதுவது இல்லை இந்த மாதிரி அன்பு வேறு யாரும் செலுத்த மாட்டார்கள். பரமாத்ம அன்பிற்கு உரியவர்கள் நீங்கள். எப்பொழுதாவது ஒரு நாளாவது கடிதம்

தவறியிருக்கிறதா? அந்த மாதிரியான காதலன் முழு கல்பத்திலும் இருக்க முடியாது. கூறிய இந்த அனைத்து விஷயங்களையும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நேரமும் இதே பிராப்திகள் நினைவு இருக்கிறது என்றால் இந்த பிராப்திகளின் முன்னால் வேறு எந்த ஒரு நபரும், பொருளும் ஒருபோதும் கவர முடியாது, மேலும் எப்பொழுதும் சுலபமாக மாயாவை வென்றவர் ஆகி மற்றவர்களையும் ஆக்குவீர்கள். நல்லது.

**வரதானம்: எண்ணத்திலிருந்தும் என்னுடையது என்ற அழுக்கை நீக்கி சுமையிலிருந்து லேசாக இருக்கக்கூடிய பரிஷ்தா ஆகுக!**

என்னுடையது என்பதன் விஸ்தாரமே சுமை தான். ஏதாவது என்னுடையது. என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய இயல்பு, ஏதாவது என்னுடையது இருக்கிறதென்றால் சுமை இருக்கிறது. மேலும் சுமையுள்ளவர் மேலே பறக்க முடியாது. பரிஷ்தா ஆக முடியாது. எண்ணத்தில் கூட என்னுடையது என்ற உணர்வு வருகிறது என்றால் அழுக்காகி விட்டோம் என்று புரிந்து கொள்ளுங்கள். எந்தவொரு பொருளின் மேலும் அழுக்கு ஏறி விட்டால் அழுக்கின் சுமை ஆகி விடும். எனவே அனைத்து சுமைகளையும் தந்தையிடம் ஒப்படைத்து, என்னுடையது என்ற அழுக்கை நீக்கினீர்கள் என்றால் பரிஷ்தா ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: ஒவ்வொரு சூழ்நிலையிலும் முழுமையாக தேர்ச்சி அடைபவர் தான் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 12.11.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எதிர்காலத்து உலக இராஜ்யத்தின் ஆதாரம் சங்கமயுகத்தின் சுயராஜ்யம்!

உலகைப் படைக்கும் பாப்தாதா இன்று தன்னுடைய அனைத்து சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுதைய சங்கமயுகத்தின் சுயராஜ்ய அதிகாரியாகிய நீங்கள் எதிர்காலத்தில் உலக இராஜ்ய அதிகாரி ஆகிறீர்கள். ஏனென்றால் சுயராஜ்யத்தின் மூலமாகத்தான் உலக இராஜ்யத்தின் அதிகாரத்தைப் பிராப்தி செய்கிறீர்கள். இந்த நேரத்து சுயராஜ்ய பிராப்தியின் அனுபவம் எதிர்கால உலக இராஜ்யத்தையும் விட உயர்ந்த அனுபவம் ஆகும். முழு நாடகத்தினுள் இராஜ்ய அதிகாரிகள் இராஜ்யம் செய்து வருகிறார்கள். அதில் அனைத்தையும் விட உயர்ந்தது முதன்மையானது சுயராஜ்யம், அதன் ஆதாரத்தில் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள் பல பிறவிகள் சத்யுகம் மற்றும் திரேதாயுகம் வரை உலக இராஜ்ய அதிகாரி ஆகிறீர்கள். அப்படி சுயராஜ்யம் முதன்மையானது, பின்பு அரைக் கல்பம் உலக இராஜ்ய அதிகாரி மற்றும் துவாபர யுகத்திலிருந்து இராஜ்யம் நடக்கத்தான் செய்கிறது ஆனாலும் உலக இராஜ்யம் இல்லை, அந்தந்த பிராந்தியத்தின் இராஜ்யம் நடக்கிறது. முழு உலகிலும் ஒரு இராஜ்யம் என்பது சத்யுகத்தில் மட்டும் தான் இருக்கிறது. அப்படி மூன்று விதமான இராஜ்யத்தைக் கூறினோம். இராஜ்யம் என்றால் அனைத்து அதிகாரங்களின் பிராப்தி சத்யுகம் திரேதாவின் அரசியல், துவாபர யுகத்தின் அரசியல் மற்றும் சங்கமயுகத்தின் அரசியல் இந்த மூன்றையும் மிகவும் நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள்.

சங்கமயுகத்தின் அரசியலில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் சுயத்தின் இராஜ்ய அதிகாரி ஆகுகிறார். ஒவ்வொருவரும் இராஜயோகியாக இருக்கிறார்கள். அனைவரும் இராஜயோகிகளா? அல்லது பிரஜாயோகிகளா? இராஜயோகி தான் இல்லையா? அப்படி இராஜயோகி என்றால் இராஜா ஆகக்கூடிய யோகி ஆவார். சுயராஜ்ய அதிகாரி

ஆத்மாக்களுக்கு முக்கியமான நெறிகள் இருக்கின்றன. இராஜா தன்னுடைய சேவையின் உதவியாளர்களுக்கு, பிரஜைகளுக்கு எப்படி கட்டனை இடுகிறாரோ அந்த கட்டளைப்படி. அதே விதிப்படி உதவியாளர்களும் பிரஜைகளும் காரியம் செய்கிறார்கள். அதே போல் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள் உங்களுடைய யோக சக்தி மூலமாக ஒவ்வொரு கர்மேந்திரியத்திற்கும் எப்படி கட்டளை இடுகிறீர்களோ அதே போல் ஒவ்வொரு கர்மேந்திரியமும் உங்களுடைய கட்டளைக்குட்பட்டு நடக்கிறது. இந்த ஸ்தூல உடலின் அனைத்து கர்மேந்திரியங்கள் மட்டுமின்றி மனம், புத்தி, சம்ஸ்காரமும் இராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் உங்களுடைய கட்டளைப்படி நடக்கின்றது. எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அப்படி மனம் அதாவது எண்ண சக்தியை அங்கே நிலைத்திருக்கச் செய்ய முடியும். அதாவது மனம், புத்தி, சம்ஸ்காரத்திற்கும் இராஜ்ய அதிகாரி நீங்கள். சம்ஸ்காரத்திற்கும் வசம் ஆகாமல் சம்ஸ்காரத்தை தன்னுடைய வசம் ஆக்கி உயர்ந்த நெறிப்படி காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். உயர்ந்த சம்ஸ்காரத்தைக் கடைப்பிடித்து உறவு நெருக்கத்தில் வருகிறீர்கள். அப்படி சுயராஜ்யத்தின் நெறியே மனம், புத்தி, சம்ஸ்காரம் மற்றும் அனைத்து கர்மேந்திரியங்கள் மேல் சுயம் அதாவது ஆத்மாவின் அதிகாரம் இருப்பது தான். ஒருவேளை ஏதாவது ஒரு கர்மேந்திரியம், சில நேரம் கண் ஏமாற்றுகிறது. சில நேரம் வார்த்தைகள் ஏமாற்றுகிறது. சொல் அதாவது வாய் ஏமாற்றுகிறது. சம்ஸ்காரம் தன்னுடைய கட்டுப் பாட்டில் இல்லையென்றால் அவரை சுயராஜ்ய அதிகாரி என்று கூற முடியாது. அவரை சுயராஜ்ய அதிகாரத்தின் முயற்சியாளர் என்று கூறலாம். அதிகாரி இல்லை ஆனால் முயற்சியாளர். உண்மையில் இராஜ்ய அதிகாரி ஆத்மாவை கனவில் கூட ஏதாவது ஒரு கர்மேந்திரியம், மனம், புத்தி, சம்ஸ்காரம் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அதிகாரி ஆவார், அதிகாரி ஒருபொழுதும் அடிமையாக முடியாது. அடிமையாக இருக்கிறார் என்றால் அதிகாரி ஆவதற்கான முயற்சி செய்பவர் என்பதாகும். எனவே அதிகாரியா? அல்லது முயற்சியாளரா? என்று உங்களை நீங்களே கேளுங்கள். அதிகாரி ஆகி விட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி சுயராஜ்யத்தின் ஆன்மீக போதை என்ன அனுபவம் செய்விக்கிறது? என்ன ஆகி விடுகிறீர்கள்? கவலையற்ற மகாராஜா பேகம்பூரின் (துக்கம் இல்லாத ஊரின்) மகாராஜா ஆகி விடுகிறீர்கள். அனைவரையும் விட மிகப் பெரிய மகாராஜா, கவலையற்ற

மகாராஜா. மேலும் அனைத்தையும் விட மிகப்பெரிய இராஜ்யம் பேகம்பூரின் (துக்கம் இல்லாத ஊரின்) இராஜ்யம் ஆகும். பேகம்பூரின் இராஜ்ய அதிகாரியின் எதிரில் உலக இராஜ்யம் கூட ஒன்றுமே இல்லை. பேகம்பூரின் இராஜ்யத்தின் அதிகாரம் மிக உயர்ந்தது மற்றும் சுகம் நிறைந்தது. அதன் பெயரே பேகம் அதாவது துக்கம் இல்லாதது. அப்படி பேகம்பூரின் அனுபவம் இருக்கிறது இல்லையா? அல்லது எப்பொழுதாவது கீழே வந்து விடுகிறீர்களா? எப்பொழுதும் போதையில் பேகம்பூரின் மகாராஜா என்ற இந்த அதிகாரத்திலேயே இருங்கள். கீழே வராதீர்கள். பாருங்கள், இன்றைய இராஜ்யத்தில் கூட ஒருவேளை யாராவது நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் என்றால் அவருக்கு அதிகாரம் இருக்கிறது மற்றும் நாளை நாற்காலியிலிருந்து இறங்கி விட்டார் என்றால் அதிகாரம் இருக்கிறதா? சாதாரணமானவராக ஆகி விடுகிறார். அப்படி நீங்களும் சுயராஜ்யத்தின் போதையில் இருக்கிறீர்கள். அழியாத ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருக்கிறீர்கள். அனைவரிடமும் ஆசனம் இருக்கிறது இல்லையா? பின்பு ஏன் ஆசனத்தை விடுகிறீர்கள்? எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருங்கள், ஆன்மீக போதையில் இருங்கள். அகால தக்த் (அழியாத ஆசனம்) என்றால் அமிர்தசரஸில் இருக்கும் அந்த அகால் தக்த் இல்லை, இந்த அகால தக்த். இந்த அகால தக்த் அனைவரிடமும் இருக்கிறது. அப்படி அகால தக்தில் அமர்ந்திருப்பவராக சுயராஜ்ய அதிகாரியாக யார் ஆக்கினார்? தந்தை ஒவ்வொரு பிராமணக் குழந்தையையும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் இராஜாவாக ஆக்கி விட்டார்.

முழு சிருஷ்டி சக்கரத்தினுள்ளும் அந்த மாதிரி ஏதாவது ஒரு தந்தையின் அனைத்து குழந்தைகளும் இராஜா குழந்தைகளாக இருக்க முடியுமா? லட்சுமி நாராயணன் கூட அந்த மாதிரி ஆக முடியாது. எனது அனைத்துக் குழந்தைகளும் இராஜா குழந்தைகள் என்று தந்தை பரமாத்மா மட்டும் தான் கூறுகிறார். இது இராஜா குழந்தை என்று உலகத்தில் மேலோட்டமாகக் கூறி விடுகிறார்கள் ஆனால் அந்தக் குழந்தை உண்மையில் வேலைக்காரனாக இருந்தாலும் அல்லது எதுவாக இருந்தாலும் சொல்லும் பொழுது இராஜா குழந்தை என்று தான் கூறுகிறார்கள் ஆனால் இந்த நேரம் நீங்கள் நடைமுறையில் இராஜயோகியாக அதாவது இராஜா குழந்தைகளாக ஆகிறீர்கள். எனவே தந்தைக்கும் போதை இருக்கிறது மற்றும் குழந்தைகளுக்கும் போதை

இருக்கிறது. அப்படி சுயராஜ்யத்தின் நெறிமுறைகள் என்னவாக இருந்தது? சுயத்தின் மேல் இராஜ்யம், ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் மேல் அதிகாரம் இருக்கட்டும். பார்க்க விரும்பவில்லை தான் ஆனால் பார்த்து விட்டேன் என்று அப்படி இருக்கக்கூடாது. கண்கள் திறந்திருந்தன இல்லையா, எனவே பார்க்கும்படி ஆகி விட்டது. காதிற்கு கதவுகள் இல்லை, எனவே நிறைய விஷயங்கள் வந்து விழுந்து விடுகின்றன ஆனால் இரண்டு காதுகள் இருக்கின்றன. ஒருவேளை அந்த மாதிரி விஷயத்தைக் கேட்டு விட்டாலும் வெளியேற்றுவதற்கும் கூட வழி இருக்கிறது. எனவே பாரதத்தில் தான் விசேஷமாக பாபுவின் (மகாத்மா காந்தி) நினைவில் தீயவைகளைப் பார்க்காதீர்கள். தீயவைகளைக் கேட்காதீர்கள். தீயவைகளைக் கூறாதீர்கள் என்ற படம் இருக்கிறது. அவர்கள் மூன்றைக் காண்பிக்கிறார்கள். நீங்கள் நான்கைக் காண்பிக்கிறீர்கள். தீயவைகளை நினைக்கவும் செய்யாதீர்கள். ஏனென்றால் முதலில் நினைப்பது, பின்பு சொல்வது அதன் பின்பு பார்ப்பது நடக்கிறது. எனவே கன்ட்ரோலிங் பலர் (கட்டுப்படுத்தும் சக்தி) ரூலிங் பவர் (ஆளுமை சக்தி) வையுங்கள். இராஜா என்றால் ரூலிங் பவர். இராஜாவாக இருந்து ரூலிங் பவர் இல்லை என்றால் யார் அவரை இராஜாவாக ஏற்றுக் கொள்வார்கள், அப்படி சுயராஜ்யம் என்றால் ரூலிங் பவர் மற்றும் கன்ட்ரோலிங் பவர்.

நிறைய குழந்தைகள் பகுத்தறிவதில் திறமைசாலிகளாக இருக்கிறார்கள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருந்தார். ஏதாவது தவறு நடக்கிறது, அது விதிப்படி இல்லை, என்றால் இதை செய்யக்கூடாது, இது சத்தியம் இல்லை. இது சரியில்லை, வீணானது என்று நினைக்கிறார்கள் ஆனால் புரிந்து கொண்ட பிறகும் அதை செய்து கொண்டே இருக்கிறார்கள் அல்லது செய்து விடுகிறார்கள். அப்படியானால் இதை என்னவென்று சொல்வது? எந்த சக்தியின் குறை இருக்கிறது? கட்டுப்படுத்தும் சக்தி இல்லை. எப்படி இன்றைய நாட்களில் கார் ஓட்டுகிறார்கள். விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று பார்க்கவும் செய்கிறார்கள். பிரேக் போடுவதற்கு முயற்சியும் செய்கிறார்கள் ஆனால் பிரேக் வேலை செய்யவில்லை என்ற அவசியம் விபத்து ஏற்படும் இல்லையா? பிரேக் வேலை செய்கிறது ஆனால் சக்திசாலியாக இல்லை. அதனால் இந்த இடத்திற்குப் பதிலாக அந்த இடத்தில் பிரேக் பிடிக்கிறது என்றால் என்ன ஆகும்? இந்த நேரத்தில் மற்றதின் வசமானவர் ஆகி விடுவார்

இல்லையா? விரும்பிய போதிலும் செய்ய முடிவதில்லை. பிரேக் போட முடியவில்லை அல்லது பிரேக் சக்திசாலியானதாக இல்லாத காரணத்தினால் சரியாக பிடிக்கவில்லை. அப்படி இதை சோதனை செய்யுங்கள். உயர் மலைப் பகுதியில் ஏறுகிறீர்கள் என்றால் என்ன எழுதப்பட்டிருக்கிறது? பிரேக்கை சோதவை செய்யுங்கள். ஏனென்றால் பிரேக் பாதுகாப்பிற்கான சாதனம் ஆகும். அப்படி கண்ட்ரோலிங் பவரின் மற்றும் பிரேக் போடுவதின் அர்த்தம், பிரேக் இங்கே போடுகிறீர்கள் ஆனால் சற்று தள்ளி அங்கே போய் நிற்கிறது என்பதல்ல. ஏதாவது ஒரு வீணானதை இது தவறு என்று புரிந்து அதை கண்ட்ரோல் செய்ய விரும்புகிறீர்கள். அப்படியானால் அந்த நேரமே தவறை சரியானதில் மாற்றம் செய்ய வேண்டும். இதைத் தான் கண்ட்ரோலிங் பவர் என்று கூறப்படுகிறது நினைக்கவும் செய்கிறேன் ஆனால் அரை மணி நேரம் வீணாக சென்று விடுகிறது. பின்னர் கட்டுப்பாட்டில் வருகிறது என்று அப்படியும் இருக்க வேண்டாம். மிகவும் முயற்சி செய்து அரை மணி நேரத்திற்குப் பின்பு மாற்றம் ஏற்படுகிறது என்றால் அதை கன்ட்ரோலிங் பவர் இல்லை, ரூலிங் பவர் இல்லை என்று கூறப்படும். இதில் கொஞ்சம் கொஞ்சம் அடிமைத்தனமும் மற்றும் கொஞ்சம் கொஞ்சம் அதிகாரத் தன்மையும் கலந்திருந்தது. அப்படியானால் அவரை இராஜ்ய அதிகாரி என்று கூறுவோமா? அல்லது முயற்சி செய்பவர் என்று கூறுவோமா? எனவே இப்பொழுது முயற்சி செய்பவராக இல்லாமல் இராஜ்ய அதிகாரி ஆகுங்கள். இந்த சுயராஜ்ய அதிகாரத்தின் மகிழ்ச்சி மிகவும் உயர்ந்தது.

சுயராஜ்ய அதிகாரி என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சியே மகிழ்ச்சியிலிருப்பதாகும். மகிழ்ச்சியிலிருப்பவர் ஒருபோதும் ஏதாவது ஒரு விஷயத்தில் குழப்பத்தில் வர மாட்டார். ஒருவேளை குழம்புகிறார் என்றால் மகிழ்ச்சி இருப்பதில்லை. அப்படி சுயராஜ்யத்தின் நெறிமுறை என்ன மற்றும் உலக இராஜ்யத்தின் தெறிமுறை என்ன என்று புரிந்ததா? பிரஜையாக இருந்தாலும் சரி அரச குடும்பத்தில் இருந்தாலும் சரி ஆனால் பிரஜை, பிரஜை இல்லை, பிரஜையும் ஒரு குடும்பம். குடும்பத்தின் நெறிமுறை இது தான். சத்யுகம், திரேதாவின் இராஜ்ய நெறிமுறை அதாவது அரசியல், இராஜா என்று கூறுவார்கள் ஆனால் இராஜாவாக இருந்தும் கூட மிகவும் அன்பான தத்தையின் சொரூபத்தில் இருக்கிறார். குடும்பத்தின் விதி மூலமாக அரசியல் நடக்கிறது. இராஜ்ய செயல்பாடுகள் வேறு வேறு கைகளில் இருந்தும் குடும்ப அன்பின்

விதிப்படி காரியங்கள் நடக்கும். இராஜாவிடம் அதிகமான பணம், செல்வம் இருக்கிறது மற்றும் பிரஜையில் சிலருக்கு உணவு கூட கிடைக்கவில்லை என்றிருக்காது. துவாபர, கலியுக அரசியலில் சட்டம் மற்றும் ஒழுங்கு இருக்கிறது ஆனால் உலக இராஜ்யம், தேவ இராஜ்ய காலத்தில் சட்டம் இல்லாமல் அன்பு மற்றும் சம்மந்தத்தின் விதிப்படி இராஜ்யம் நடக்கிறது. எந்தவொரு ஆத்மாவும் துக்கம் என்ற வார்த்தையைத் தெரிந்திருப்பதில்லை. இராஜாவாக இருந்தாலும், பிரஜையாக இருந்தாலும் இருவருக்கும் துக்கம் மற்றும் அமைதியின்மை என்ற பெயர் அடையாளமே கிடையாது. துக்கம் என்றால் எப்படி இருக்கும் என்ற ஞானமே கிடையாது, துக்கத்தின் அஞ்ஞானம் இருக்கும். எப்படி இந்த நேரத்தில் கூட உங்களை பாப்தாதா எந்த நெறிமுறையில் நடாத்திச் செல்கிறார்? அன்பு மற்றும் ஸ்ரீமத் ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருக்கிறீர்கள் என்றால் கடுமையான கட்டளை இருவதற்கு அவசியமே இருப்பதில்லை. ஒருவேளை நெறிமுறைகளை மறக்கிறார் கள் என்றால் சுயம், தன்னை கலியுக நெறிமுறையில் நடத்துகிறார் என்பதாகும். அப்படி உலக இராஜ்யத்தின் நெறிமுறை கூட மிகவும் விரும்பத்தக்கது ஏனென்றால் அனேகம் இல்லை, ஒரு இராஜ்யம் மற்றும் குறையில்லா பொக்கிஷம் இருக்கிறது. பிரஜை கூட அனைத்தும் நிரம்பியவராக இருப்பார்பு இன்றைய நாட்களின் பெரிய பெரிய செல்வந்தர்களை விட அதிகமாக இருக்கும். இல்லை என்றது பெயர் அடையாளமே இருக்காது ஆனால் இதன் ஆதாரம் என்ன? சுயராஜ்யம். இந்த நேரம் சம்பள்ளம் ஆகிறீர்கள், எனவே பரமாத்மா செல்வங்களின் சம்பன்ன நிலை சத்யுகம் திரேதா யுகத்தின் அனேக ஜென்மங்களில் பிராப்தி ஆகிறது. எனவே நம்பர் ஒன் இராஜ்யம் சுயராஜ்யம், பின்பு உலக இராஜ்யம் மற்றும் மூன்றாவது துவாபர கலியுகத்தின் வேறு வேறு தேசங்களின் இராஜ்யம். இந்த இராஜ்யத்தையோ மிகவும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள், வர்ணனை செய்ய வேண்டிய அவசியமில்லை. அப்படி எப்பொழுதும் எந்த போதையில் இருக்க வேண்டும்? சுயராஜ்யம் நம்முடைய பிறப்புரிமை ஆகும். எந்த ஜென்மத்தின்? பிராமண ஜென்மத்தின், பிரம்மாபாபா ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் பிறந்தவுடனேயே சுயராஜ்யத்தின் திலகத்தை இட்டு விட்டார். திலகதாரிகள் தான் நீங்கள் இல்லையா. நினைவிற்கான திலகம் இடப்பட்டிருக்கிறது. திலகமும் இருக்கிறது. ஆசனமும் இருக்கிறது மற்றும் கிரீடமும இருக்கிறது. கிரீடம் அணிந்தவர்கள் தான் இல்லையா? எந்த கிரீடம்? உலக நன்மை என்ற

பொறுப்பு கிரீடம். உலகத்திற்கு நன்மை செய்பவர்கள் தான் இல்லையா. தூய்மையின் கிரீடம் மற்றும் உலக நன்மைக்கான கிரீடம் என்று இரண்டு கிரீடங்கள் இருக்கின்றன. தூய்மையின் கிரீடம் ஒளி வடிவமான கிரீடம் மற்றும் உலக நன்மைக்கான கிரீடம் சேவைக்கான கிரீடம்.

நீங்கள் உலக சேவாதாரிகள் தான் இல்லையா. நான் இந்த மாகாணத்தின் சேவாதாரி என்று நினைக்காதீர்கள். நான் குஜராத்தைச் சேர்ந்தவன். நான் இராஜஸ்தானைச் சேர்ந்தவன். நாள் டில்லியைச் சேர்ந்த சேவாதாரி என்று நினைக்காதீர்கள். உலக சேவாதாரி ஆவீர்கள். எங்கேயிருந்தாலும் உள்ளுணர்வு மற்றும் பார்வை எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்கிறது. ஒருவேளை உலக சேவாதாரியாக ஆகவில்லை என்றால் சுயராஜ்யமும் இல்லை. உலக இராஜ்யமும் இல்லை. பின்பு துவாபர கலியுகத்தின் பிராந்திய இராஜாவாக ஆக வேண்டியதாக இருக்கும் ஆனால் உலக இராஜ்ய அதிகாரிக்காக எப்பொழுதும் தன்னுடைய கிரீடம், திலகம் மற்றும் ஆசனம் இவைகளில் எப்பொழுதும் நிலைத்திருங்கள். உடலால் ஆசனத்தில் அமர வேண்டியதில்லை ஆனால் புத்தி மூலமாக நினைவின் நிலையில் நிலைத்திருக்க வேண்டும். நிலையில் நிலைத்திருப்பது இது தான் ஆசனத்தில் அமர்வது. அதில் நீங்கள் எப்பொழுதும் அமர முடியும். உடலால் எத்தனை மணி நேரம் உட்காருவீர்கள்? களைப்படைந்து விடுவீர்கள் இல்லையா! ஆனால் புத்தி மூலமாக நிலையில் நிலைத்திருப்பது இது தான் ஆசனதாரி ஆவது. இது சுலபம் தாள் இல்லையா. அப்படி சுயராஜ்யத்தின் போதையில் நிரந்தரமாக நிலைத்திருங்கள். புரிந்ததா என்ன செய்ய வேண்டுமென்று? முயற்சி செய்பவராக இல்லாமல் அதிகாரி ஆக வேண்டும்.

அனைவரும் சந்திப்பைக் கொண்டாடினீர்களா? அனைவரும் பரமாத்மா சந்திப்பு என்ற மேனாவைக் கொண்டாடுவதற்காக ஓடி ஓடி வருகிறார்கள். அப்படி சந்திப்பதற்கான மேளாவில் வந்திருக்கிறீர்கள் இல்லையா. இது மேளாவாகத் தென்படுகிறதா? அல்லது கூட்டமாகத் தென்படுகிறதா? சௌகரியம் இருக்கிறது இல்லையா. அனைத்து சௌகரியங்களோடு தங்குவது, சாப்பிடுவது மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் சௌகரியமானதாக இருக்கிறது இல்லையா? இருந்தாலும் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள் நீங்கள். அந்த (வெளியுலக) மேளாக்களிலிருப்பது போல் மண் தரையில் தங்கவில்லை இல்லையா. கட்டிலும், படுக்கையும்

கிடைத்தது இல்லையா? அந்த மேளாக்களிலோ குளித்தாலும் மண். தங்கினாலும் மண். சாப்பிட்டாலும் மண் கூடவே வரும். இங்கு குழந்தைகள் தன்னுடைய வீட்டிற்கு வருகிறார்கள். போதையோடு வருகிறீர்கள். தந்தையும் குஷி அடைகிறார் மற்றும் குழந்தைகளும் குஷி அடைகிறார்கள். இந்த அறையில் பின்னால் அமர்ந்திருப்பவர்கள். அனைவரையும் விட முன்னால் இருக்கிறீர்கள். ஏனென்றால் பாப்தாதாவின் முதல் பார்வை கடைசி வரை போகிறது. நல்லது.

அனைத்து சுயராஜ்ய அதிகாரி, கவலையில்லா மகாராஜா குழந்தைகளுக்கு, அனைத்து உலக இராஜ்ய அதிகாரி பல ஜென்மங்கள் சம்பூர்ணம் சம்பன்னமாக இருக்கக்கூடிய ஆத்மாக் களுக்கு, எப்பொழுதும் திலகம், கிரீடம் அணிந்துள்ள ஆசனதாரி அதிகாரி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய விசேஷ குழந்தைகளுக்கு, நேர் எதிரில் இருப்பதாக அனுபவம் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனைத்து குழத்தைகளுக்கும் பாப்தாதாவினுடைய பல மடங்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

கூடவே அனைவரின் அன்பான கடிதங்களுக்கும் பதில் கொடுக்கிறோம். உள்நாட்டினரும் வெளிநாட்டினரும் இருவருமே அவரவர்கள் விதிப்படி சுயமுயற்சியில் வெற்றியை அடைந்து கொண்டிருக்கிறார்கள் மற்றும் சேவையிலும் கூட எப்பொழுதும் முன்னேறிச் செல்வதற்கான உற்சாகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே ஒவ்வொருவரும் எந்தவொரு மூலையில் இருப்பவரானாலும் அவருடைய நினைவு, சேவைச் செய்தி, அன்பான கடிதம், நிலையின் ஊக்க உற்சாகத்தின் செய்தி அனைத்தும் கிடைக்கப் பெற்றோம். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் பெயரோடு சேர்த்து, ஒவ்வொருவரின் விசேஷத்தையும் சேர்த்து மிகமிக மிகுந்த அளவு அன்று நினைவுகளையும் அன்பையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும் எப்பொழுதும் இதே நினைவு, அன்பின் வளர்ப்பில் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள், பறந்து கொண்டிருக்கிறீர்கள் மேலும் பறந்து பறந்து இலக்கை அடைந்தே தான் ஆக வேண்டும் அல்லது அடைந்தே விட்டீர்கள் என்று கூட கூறலாம். அப்படி அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: பாதக சூழ்நிலை ஒருபோதும் மேலே, கீழே உங்களை கொண்டு செல்லாத அளவிற்கு சுய நிலையை சக்திசாலியாக ஆக்குங்கள்!** சதா பிரகாசித்துக் கொண்டிருக்கும் தன்னுடைய பாக்கிய நட்சத்திரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? பாக்கிய நட்சத்திரம் எவ்வளவு நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்தின் பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறீர்களா? என்ன பாடல் பாடுகிறீர்கள்? ஆஹா என்னுடைய உயர்ந்த பாக்கியம். இந்தப் பாடல் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கிறதா? தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறதா அல்லது முயற்சி செய்ய வேண்டியிருக்கிறதா? தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது இல்லையா! ஏனென்றால் பாக்கியத்து உருவாக்குபவர் உங்களுடையவர் ஆகி விட்டார். அப்படி எப்பொழுது பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தை ஆகி விட்டீர்கள் என்றால் இதை விடப் பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும். பாக்கியத்தை உருவாக்குபவரின் குழந்தைகள் என்பது மட்டும் எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். உலகத்தினரோ தன்னுடைய பாக்கியத்தின் வரதானத்தைப் பெறுவதற்காக இங்கு அங்கு என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். மற்றும் உங்கள் அனைவருக்கும் வீட்டில் அமர்ந்தபடியே பாக்கியத்தின் பொக்கிஷம் கிடைத்து விட்டது. கடுமையாக உழைப்பதிலிருந்து விடுபட்டு விட்டீர்கள் இல்லையா? அப்படி பாடுபடவும் இல்லை மேலும் பிராப்தியும் அதிகம். இதைத் தான் பாக்கியம் என்று கூறுவது. பாடுபடாமல் கிடைத்து விடுவது. ஒரு ஜென்மத்தில் 21-ஜென்மங்களின் பிராப்தியை அடைவது என்பது எவ்வளவு உயர்ந்ததானது. மேலும் பிராப்தியும் அழியாதது, துண்டிக்க முடியாதது. யாரும் இதைத் துண்டிக்க முடியாது. மாயாவும் சமர்ப்பணம் ஆகி விடுகிறது. எனவே துண்டுபடாமல் இடைவிடாது இருக்கிறது. யாராவது சண்டையிட்டு வெற்றி பெற நினைத்தால், பெற முடியுமா? யாருக்கும் அந்த சக்தி கிடையாது. அப்படி உறுதியான பிரிக்க முடியாத பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள். நிலையையும் இப்பொழுது அந்த மாதிரி உறுதியாக்குங்கள். எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும் உங்களுடைய (மன) நிலையை மேலே, கீழே ஆக்காதீர்கள். தந்தை அழியாதவராக இருக்கிறார். பிராப்திகளும் அழியாதவைகளாக இருக்கின்றன. அப்படியானால் நிலையும் என்னவாக இருக்க வேண்டும்? அழியாததாகத்தான் இருக்க வேண்டும் இல்லையா? அனைவரும்

தடையற்றவராக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் தடை வருகிறதா? விக்ன வினாசக் (தடைகளை அழிப்பவர்) என்ற மஹிமை செய்யப்படுகிறீர்கள் இல்லையா? எப்படிப்பட்ட தடை வந்தாலும் நான் விக்ன விநாசக் ஆத்மா என்று நினைவு வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய இந்தப் பட்டம் எப்பொழுதும் நினைவு இருக்கிறதா? நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால், மாஸ்டர் சர்வ சக்திவான் எதிரில் எவ்வளவு பெரியதான விஷயம் இருந்தாலும் ஒன்றுமே இல்லை. எப்பொழுது ஒன்றுமே இல்லையென்றால் அதனுடைய பிரபாவம் என்ன ஏற்பட முடியும்?

**குரூப்-2: எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கு "அனேக" எனதுகளை "ஒரு" எனதாக மாற்றம் செய்யுங்கள்!** அனைவரும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கான எளிதான முயற்சி என்ன? (நினைவு) நினைவில் கூட என்ன நினைவு வைப்பது சுலபமாக இருக்கிறது? என்னுடையது என்பது சுலபமாக்கி விடுகிறது. என்னுடையது என்பது இருக்கிறது என்றால் என்னுடையது சுலபமாக நினைவு வருகிறது. அப்படி என்னுடையது என்ற உரிமையோடு நினைவு செய்வது -இது தான் சுலபமான விதி ஆகும். ஒருவேளை குஷி குறைகிறது என்றால் அதற்குக் காரணமே என்னுடையவர் என்ற உரிமையோடு தந்தையை நினைவு செய்யவில்லை. ஏனென்றால் நினைவில் தடை ஏற்படுத்துகிறது என்றால் அது என்னுடையது என்பது தான் -என்னுடைய உடல், என்னுடைய உறவு -இந்த என்னுடையது என்பது தான் தடைகள் ஏற்படுத்துகிறது. எனவே இந்த "அனேக என்னுடைய" என்பதை " என்னுடைய ஒரு பாபா" வில் மாற்றி விடுங்கள். இது தான் சுலபமான விதி ஏனென்றால் வாழ்க்கையில் மிகப் பெரிய பிராப்தியே குஷிதான். ஒருவேளை குஷியில்லையென்றால் பிராமண வாழக்கையே இல்லை. பிராமண வாழ்க்கையின் மூச்சு குஷி தான். எனவே எப்பொழுதும் குஷியாக இருங்கள். தந்தை கிடைத்திருக்கிறார் என்றால் அனைத்தும் கிடைந்து விட்டது. எப்பொழுது ஏதாவது பிராப்தியில்லையோ அப்பொழுது குஷி மறைந்து விடுகிறது. அப்படி பிராமணன் என்றால் அனைத்தும் கிடைத்து விட்டது. பிராப்தியின் அடையாளம் குஷியாகும். நீங்கள் குஷியாகவும் இருப்பவர்கள் மேலும் அனைவருக்கும் குஷியைக் கொடுப்பவர்களும் தான். யார் மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள்? யாரிடம் இருப்பு

இருக்கிறதோ அவர் தான். தனக்காக இருப்பு இருக்கிறது ஆனால் மற்றவர்களுக்காகவும் அந்த அளவே இருப்பு சேமிப்பாகி இருக்கட்டும். எனவே அந்த அளவு நிரம்பியிருக்கிறதா என்று எப்பொழுதும் உங்களின் இருப்பைச் சோதனை செய்யுங்கள். உள்ளுக்குள்ளேயே மாயா இருப்பைக் காலி செய்து விடுகிறது மேலும் நீங்கள் இன்னும் இருப்பு இருக்கிறது என்று நினைத்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுதாவது ஏதாவது பாதக சூழ்நிலை வந்தால் என்னுடைய குஷி எங்கே சென்றது என்று தெரியவில்லை? என்று கூறுகிறார்கள். ஏன் சென்றுவிட்டது? உள்ளுக்குள்ளேயே இருப்பு முடித்து விட்டது. எனவே தன்னுடைய இருப்பு நிரம்பி இருக்கிறதா என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். ஏனென்றால் மாயானிற்கும் பிராமணர்கள் மிகவும் பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள். அதுவும் தன்னுடையவராக ஆக்கும் முயற்சியை விடுவதில்லை. எனவே ஒவ்வொரு நேரமும் எச்சரிக்கையாகவும், புத்திசாலியாகவும் இருங்கள்.

**குரூப்-3: பிரம்மாபாபாவின் சம்ஸ்காரத்தை தன்னுடைய சம்ஸ்காரமாக ஆக்குவது தான் தந்தையைப் பின்பற்றி நடப்பதாகும்!** எப்பொழுதும் தன்னை உலகை மாற்றுபவர் என்று அனுபவம் செய்கிறீர்களா? உலகை மாற்றுவதற்கான விதி என்ன? சுயமாற்றம் மூலம் உலக மாற்றம். வெகு காலத்து சுயமாற்றத்தில் மூலம் தான் வெகு காலத்து இராஜ்ய அதிகாரம் கிடைக்கும். சுயமாற்றம் வெகு காலத்திற்குத் தேவையாக இருக்கிறது. ஒருவேளை கடைசியில் சுயமாற்றம் ஆகிறது என்றால் உலக மாற்றத்திற்கு பொறுப்பானவராகக் கூட கடைசியில் தான் ஆவீர்கள். பின்பு இராஜ்யத்தை கடைசியில் பெற வேண்டும் அல்லது ஆரம்பத்திலிருந்தே எடுக்க வேண்டுமா? நல்லது. எடுப்பது ஆரம்பத்திலிருந்து மற்றும் செய்வது கடைசியில் அப்படியா? ஒருவேளை வெகு காலத்திற்கு எடுக்க வேண்டும் என்றால் சுயமாற்றம் கூட வெகு காலத்திற்குத் தேவையாக இருக்கிறது. ஏனென்றால் சம்ஸ்காரம் உருவாகிறது. இல்லையா? அப்படி வெகு காலத்து சம்ஸ்காரம் விரும்பாவிட்டாலும் தன் பக்கம் இழுக்கிறது. இதுவும் வெகு காலத்து உறுதியான முயற்சி இல்லையென்றால், லேசானதாக இருந்தால், லேசான முயற்சியும் தன் பக்கம் இழுக்கும் பிறகு முடிவு என்னவாகும்? முழுமையாகத் தேர்ச்சி பெற முடியாது இல்லையா? எனவே இப்பொழுதிலிருந்தே சுயமாற்றத்திற்கான சம்ஸ்காரத்தை

உருவாக்குங்கள். இயற்கையான சம்ஸ்காரமாகி விடட்டும். எது இயற்கையான சம்ஸ்காரமாக இருக்கிறதோ அதற்காக கடுமையாகப் பாடுபட வேண்டியது இருக்காது. சுயமாற்றத்திற்கான விசேஷ சம்ஸ்காரம் என்ன? எது பிரம்மாபாபாவின் சம்ஸ்காரமோ அதுதான் குழந்தைகளின் சம்ஸ்காரமும். அப்படி பிரம்மாபாபா தன்னுடைய சம்ஸ்காரமாக எனது உருவாக்கியிருந்தார், அதை சாகார உடலின் கடைசி நேரத்தில் கூட நினைவூட்டினார்? நிராகரி, நிர்விகாரி, நிர்அஹங்காரி -இது தான் பிரம்மாபாபாவின் அதாவது பிராமணர்களின் சம்ஸ்காரம். அப்படி இந்த சம்ஸ்காரம் இயற்கையானதாக இருக்கட்டும். நிராகாரமாக இருக்கவே இருக்கிறீர்கள். இதுவோ உண்மையான சொரூபம் இல்லையா? மேலும் எத்தனை தடவை நிர்விகாரி ஆகியிருக்கிறீர்கள். அனேக தடவை ஆகியிருக்கிறீர்கள் இல்லையா. பிராமண வாழ்க்கையில் சிறப்பம்சமே நிர்அஹங்காரி (அஹங்காரமற்ற நிலை). அப்படி இந்த பிரம்மாவின் சம்ஸ்காரம் தன்னுள் உண்மையிலேயே உருவாகியிருக்கிறதா என்று பாருங்கள். இது பிரம்மாவின் சம்ஸ்காரம். இது என்னுடைய சம்ஸ்காரம் என்று அப்படியில்லை. பாலோ பாதர் (தந்தையை பின்பற்றி நடப்பது) இல்லையா? முழுமையாக பின்பற்ற வேண்டும் இல்லையா? எனவே எப்பொழுதும் இந்த உயர்ந்த சம்ஸ்காரத்தை எதிரில் வையுங்கள். முழு நாளும் என்ன காரியம் செய்தாலும் ஒவ்வொரு காரியம் செய்யும் பொழுதும் இந்த மூன்று சம்ஸ்காரங்களும் எமர்ஜ் (வெளிப்படும்) ரூபத்தில் இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். அப்படியானல் வெகு காலத்து சம்ஸ்காரம் சுலபமாக ஆகி விடும். இது தான் இலட்சியம் இல்லையா? முழுமையாக ஆக வேண்டும் என்றால் சீக்கிரமாக ஆகுங்களேன். சமயம் வரும் அத்தருணத்தில் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கக்கூடாது, நேரத்திற்கு முன்பே தன்னை முழுமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நேரம் படைப்பு ஆகும் மேலும் நீங்கள் மாஸ்டர படைப்பவர். படைப்பவர் சக்திசாலியானவரா அல்லது படைப்பா? இப்பொழுது முழுமையாகவே சுயமாற்றம் செய்யுங்கள். பிராமணர்களின் அகராதியில் எப்பொழுது என்பது இல்லை. இப்பொழுது என்பது தான். அந்த மாதிரி உறுதியான பிராமணன் தான் நீங்கள் இல்லையா!

**குரூப்-4: வெற்றியின் ஆதாரம் தெய்வீகத்தன்மை!** பாப்தாதா மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் தெய்வீக புத்தியின் வரதானம் கிடைத்திருக்கிறது. இந்த தெய்வீக புத்தியின் வரதானத்தை அனைவரும் தன்னுடைய வாழ்க்கையில் காரியத்தில ஈடுபடுத்தியிருக்கிறீர்களா?

ஏனென்றால் எப்பொழுது வரதானத்தை காரியத்தில ஈடுபடுத்துகிறீர்களோ அப்பொழுது தான் வரதானத்தின் லாபம் இருக்கிறது. தெய்வீக புத்தியின் வரதானம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது ஆனால் எவ்வளவு உபயோகிக்கிறீர்கள்? எந்த ஒரு பொருளும் உபயோகிப்பதால், காரியத்தில் ஈடுபடுத்துவதால் அதிகரிக்கிறது மேலும் அதன் சுகத்தில் குஷியின் அனுபவமும் ஆகிறது. அப்படி தெய்வீக புத்தியை எவ்வளவு காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள் என்பதின் அடையாளம் என்னவாக இருக்கும்? வெற்றி ஏற்படும். ஒவ்வொரு காரியமும் தெய்வீகமானதாக, ஆன்மீகமானதாக அனுபவம் ஆகும். சாதாரணமாக இருக்காது. ஏனென்றால் காரியத்தில் தெய்வீகத்தன்மைதான் வெற்றியின் ஆதாரமாகும். அப்படி தெய்வீக புத்தியின் அடையாளம் ஒவ்வொரு காரியத்திலும் தெய்வீகத் தன்மை. அல்லது சில நேரம் சாதாரண காரியமும் நடந்து விடுகிறதா? அப்படி அனுபவம் செய்கிறீர்களா? தெய்வீகப் புத்தியைப் பெறும் ஆத்மாக்கள் எப்பொழுதும் தெய்வீகம் இல்லாததைக் கூட தெய்வீகமாக ஆக்கி விடுகிறார்கள். எப்படி பாரஸ் என்பது இரும்போடு ஒட்டும்போது இரும்பும் பாரஸ் (தங்கம்) ஆகி விடும் என்று கூறுகிறார்கள். அப்படி தெய்வீக புத்தி என்றால் தங்கபுத்தி. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? ஏனென்றால் புத்தி ஒவ்வொரு விஷயத்தையும் கிரஹிக்கிறது. தெய்வீக புத்தி தெய்வீகத்தைத் தான் கிரஹிக்கும். அந்த மாதிரி மாற்றம் செய்ய முடியுமா? தெய்வீகமில்லாததை தெய்வீகமாக மாற்ற முடியுமா? அல்லது தெய்வீகமின்மையின் பிரபாவம் ஏற்பட்டு விடுமா? ஏதாவது தெய்வீகமற்ற விஷயம் நிகழ்ந்து விடுகிறது. தெய்வீகமற்ற காரியம் நடந்து விடுகிறது என்றால் அதன் பிரபாவம் உங்கள் மேல் ஏற்படுமா? தெய்வீக புத்தியின் வரதானம் மூலமான மாற்றும் சக்தி, தெய்வீகமில்லாததை தெய்வீகமாக மாற்றி விடும். தெய்வீகமற்ற சூழ்நிலை அல்லது தெய்வீகமற்ற நடத்தை, வார்த்தைகள் தெய்வீக புத்தி மேல் பாதிப்பை ஏற்படுத்தாது. அந்த மாதிரி நிலை உள்ளவர்களைத்தான் தெய்வீக புத்தி வரமடைந்த மூர்த்தி என்று கூறப்படும். எப்படி வாட்டர் ப்ரூஃப் (தண்ணீரால் பாதிக்கப்படாதது) ஃபயர் ப்ரூஃப் (நெருப்பால் பாதிக்கப்படாதது) இருக்கிறது. அறிவியல் சாதனங்கள் வாட்டர் ப்ரூஃப் ஆக்கி விடுகிறது. பயர் ப்ரூஃப் ஆக்க முடிகிறது. அப்படியானால் அமைதியின் சக்தி மாற்றம் செய்ய முடியாதா? பாதிக்கப்படாததாக ஆக்க முடியாதா? இது தெய்வீகமானது, இது தெய்வீகமற்றது என்று தெரிந்து கொள்வது வேறு விஷயம் ஆனால்

பிரபாவத்தில் வருவது வேறு விஷயம். தெய்வீகத்தின் சக்தி உயர்ந்ததா அல்லது தெய்வீகமற்றதின் பக்தி உயர்ந்ததா? அப்படியானால் தெய்வீகத்தன்மையின் பிரபாவம் தெய்வீகமற்றதின் மேல் ஏற்பட வேண்டும் இல்லையா? எனவே இப்பொழுது தெய்வீக புத்தியின் வரதானத்தைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். ஈடுபடுத்தத் தெரியுமா அல்லது சில நேரம் மறந்து விடுகிறீர்களா? அரைக்கல்பம் மறப்பவர்களாக ஆனீர்கள் ஆனால் இப்பொழுது மறக்காதவர்களாக ஆக வேண்டும். தெய்வீக புத்தி அப்படிப்பட்ட உயர்ந்த இயந்திரம், அந்த இயந்திரம் மூலம் மனிதனை என்ன, இயற்கையையும் கூட தெய்வீகமாக்க முடியும். மனிதனை தெய்வீகமாக ஆக்குவதினால் இயற்கையின் மேல் தானாகவே பிரபாவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். முதலில் தன்னில் எப்பொழுதும் தெய்வீக புத்தி வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறதா என்று உங்களைப் பாருங்கள். இயற்கையையும் மாற்றும் அளவிற்கு சக்தி இருக்கிறதா? இது பரமாத்மாவின் வரதானம். ஏதோ மஹாத்மா அல்லது தர்மாத்மாவின் வரதானம் இல்லை. அதனால் எப்படி தந்தை சர்வ சக்திவானோ, அதேபோல் வரதானமும் சர்வ சக்திவான் இல்லையா? எனவே எப்பொழுது ஏதாவது காரியம் செய்கிறீர்களோ, அப்பொழுது தெய்வீக புத்தியின் வரதானம் மூலம் காரியம் செய்கிறோமா அல்லது தாரண புத்தியால் காரியம் செய்கிறோமா என்று முதலில் சோதித்துப் பாருங்கள். உங்களுடைய தெய்வீகத் தன்மையின் பிரபாவம் உலகைத் தெய்வீகமாக்கி விடுகிறது. இது தான் உங்களுடைய தொழில் இல்லையா? இஞ்சினியர், கிளார்க், டாக்டராக இருக்கிறேன், இன்னவாக இருக்கிறேன். இந்தத் தொழிலோ உடல் நிர்வாகத்திற்காகத்தான் ஆனால் உண்மையான தொழில் உலகை மாற்றம் செய்வதாகும். அந்த மாதிரி புரிந்து காரியம் செய்கிறீர்களா?

ஒருவேளை வரதானத்தைக் காரியத்தில் உபயோகிக்கிறீர்கள் என்றால் வரதானத்தின் பிராப்தி எப்பொழுதும் சுலபமாக அனுவம் செய்விக்கும். வரதானம் இருக்கும் பொழுது பாடுபட வேண்டிய அவசியம் இல்லை. அப்படி தெய்வீக புத்தி வரதானம் ஆகும். 63-ஜென்மங்கள் மிகவும் பாடுபட்டு விட்டீர்கள். இப்பொழுது கடைப்பட்டு உழைப்பது வேண்டாம், அனைத்தும் எளிதாக நடக்க வேண்டும். ஒருவேளை பிராமண வாழ்க்கையிலும் கடுமையாக பாடுபட வேண்டியிருக்கிறது, யுத்தம்

செய்ய வேண்டியிருக்கிறது என்றால் எப்பொழுது மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் இருப்பீர்களா? நல்லது. ஓம் சாந்தி.

**குரூப்-5: மாற்றிக் கொள்ளும் சக்தியின் மூலமாக வீணானதை சக்தியானதாக ஆக்குவது தான் புனித அன்னப்பறவை ஆவதாகும்!**

எப்பொழுதும் தன்னை புனித அன்னப்பறவை என்று நினைக்கிறீர்களா? புனித அன்னப் பறவையின் செயல்கள் என்னவாக இருக்கிறது? வீணானது மற்றும் சக்தியானதை பகுத்தறிவது. அதுவோ (அன்னப்பறவை) கூழாங்கல்லையும், இரத்தினத்தையும் பிரிக்கிறது ஆனால் நீங்கள் புனித அன்னப்பறவைகள் சக்தியானவைகளை தாரணை செய்கிறீர்கள். வீணானதை அழிக்கிறீர்கள். அப்படி சக்தியானது மற்றும் வீணானது, இதைப் பகுத்தறிந்து மாற்றம் செய்வது. இது தான் புனித அன்னப்பறவையின் செயலாகும். முழு நாளிலும் வீணான எண்ணம், வீணான வார்த்தை வீணான செயல் மற்றும் வீணான உறவு நெருக்கம் என்று என்னவெல்லாம் நடக்கிறதோ அந்த வீணானவற்றை இல்லாமல் செய்வது தான் புனித அன்னப்பறவை ஆகும். யார் எவ்வளவு தான் வீணானவற்றைப் பேசினாலும் நீங்கள் வீணானவற்றை ஏற்றதில் மாற்றம் செய்யுங்கள். வீணானதை தன்னுடைய புத்தியில் ஏற்றுக் கொள்ளாதீர்கள். ஒருவேளை வீணான எண்ணம். வீணான வார்த்தை, வீணான செயல் இவற்றில் ஏதோ ஒன்றைக் கூட ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் ஒரு வீணானது அனேக வீணானவற்றிற்கு பிறப்பைக் கொடுக்கும். ஒரு வீணான வார்த்தை கூட தொட்டு விட்டது என்றால் அனேக வீணானவற்றின் அனுபவம் செய்விக்கும். இதைத் தான் நீங்கள் ஃபீலிங் வந்து விட்டது (feeling உணர்வுகளைப் பாதிப்பது) என்று கூறுகிறீர்கள். ஒரு வீனான எண்ணத்தின் ஃபீலிங் வந்தது என்றால் அது ஃபீலிங்கை அதிகரிக்கும். எனவே வீணானதின், அது செயலாக இருந்தாலும் அல்லது வேறென்னவாக இருந்தாலும், பிறப்பு மிக வேகமாக ஏற்படுகிறது. ஒரு வீணான வார்த்தை சொன்னீர்கள் என்றால் அதை நிரூபிப்பதற்காக எத்தனை வீண் வார்த்தைகள் பேச வேண்டியதாக இருக்கிறது. ஒரு பொய்யை நிரூபிப்பதற்காக எத்தனை பொய் பேச வேண்டியதாக இருக்கிறது என்று மனிதர்கள் கூறுகிறார்கள் இல்லையா? எனவே வீணானதின் கணக்கு முடிந்து விடட்டும் மற்றும் எப்பொழுதும் சக்தியின் கணக்கு சேமிப்பாகிக் கொண்டே இருக்கட்டும். அவர்கள் வீணானதைக்

கொடுத்தாலும் நீங்கள் அதை மாற்றி சக்தியானதாக ஏற்றுக் கொள்ளுங்கள். அந்த அளவிற்கு மிக வேகமாக மாற்றும் சக்தி தேவையாக இருக்கிறது. எப்படி இன்றைய விஞ்ஞானம் வீணானதை நல்லதாக மாற்றி விடுகிறது. அனேக வேஸ்ட் பொருட்களை பெஸ்ட்'ல் மாற்றம் செய்து விடுகிறார்கள். உங்களுடைய படைப்பு இவ்வளவு வேகமாக மாற்றம் செய்ய முடிகிறது. எப்படி பாருங்கள். உரம் இருக்கிறது இல்லையா. உரமோ கெட்ட பொருள் ஆனால் எதை விளைவிக்கிறது? உரம் அறுவறுப்பானது ஆனால் எப்பொழுது பூ பூக்கிறது என்றால் மணம் நிறைந்ததாக இருக்கிறதா? அல்லது துர்நாற்றம் வீசுவதாக இருக்கிறதா? அப்படி உரத்தில் மாற்றம் செய்யும் சக்தி இருக்கிறது இல்லையா? தான் எப்படி இருந்தாலும், எதை விளைவிக்கிறது? பழம், மலர், காய்கறிகள்.... அப்படி உங்களுடைய படைப்பில் எவ்வளவு சக்தி இருக்கிறது. அப்படியானால் உங்களில் அதை விட அதிக சக்தி இருக்கிறது இல்லையா? அவர் கடும் சொல் சொல்லட்டும் நீங்கள் அதை மலராக மாற்றி ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் கோபப்படட்டும் நீங்கள் அவருக்கு குளுமையான தண்ணீர் கொடுங்கள். இந்த மாற்றம் செய்யும் சக்தி தேவையாக இருக்கிறது. புனித அன்னப்பறவையின் செயல் இதுவே தான். அந்த மாதிரியான வாழ்க்கை உருவாகி இருக்கிறதா? அல்லது என்ன செய்வது, சொன்னதே மிக மோசமாக இருந்தது இல்லைய?, செய்ததே மிக மோசமான காரியம், அவரும் மிக மோசமானவர் என்று கூறுவீர்களா? ஆனால் மோசமானதைத் தான் நல்லதாக ஆக்க வேண்டும். நல்லதையோ நல்லதாக ஆக்க வேண்டாம். நீங்கள் நல்லவராக வந்தீர்களா? அல்லது மோசமானவர்களாக வந்தீர்களா? உங்களைத் தந்தை நல்லவராக ஆக்கி விட்டார் இல்லையா? அல்லது இவர் மிகவும் மோசமானவர் இவரை எப்படி நல்லவராக ஆக்குவேன் என்று கூறினாரா? யோசித்தரா? ஆக்கி விட்டார் இல்லையா? அப்படி தந்தை உங்கள் அனைவரையும் கெட்டதிலிருந்து நல்லவராக ஆக்கினார். மேலும் நீங்கள் கெட்ட விஷயத்தை நல்லதாக ஆக்க முடியாதா? கெட்டதின் பிரபாலம் உங்கள் மேல் பட்டு விடுகிறது. சூழ்நிலையே கெட்டதாக இருந்தது இல்லையா? இது புனித அன்னப்பறவையின் இலட்சணம் இல்லை. எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும், எப்படிப்பட்ட உளுணர்வு இருந்தாலும், எப்படிப்பட்ட வார்த்தை இருந்தாலும், எப்படிப்பட்ட பார்வை இருந்தாலும் புனித அன்னப்பறவை அனைத்தையும் புனிதமாக்கி விடுகிறது. எப்பொழுதும் இந்த சக்தி இருந்து மேலும் எப்பொழுதும் அந்த

மாதிரி மிக வேகமாக மாற்றம் செய்யும் விதி வந்து விட்டது என்றால் என்ன ஆகி விடுவீர்கள்? பரிஷ்தா. பரிஷ்தா யாருடைய பிரபாவத்திலும் வருவதில்லை. தன்னுடைய காரியம் செய்தது மற்றும் சென்று விட்டது. பரிஷ்தா ஒருபொழுதும் எந்தத் தடையின் வசம் ஆவதில்லை. தடைக்கும் வசமாவதில்லை. எந்தவொரு நபருக்கும் வசமாவதில்லை. அப்படி புனித அன்னப்பறவை என்றால் பரிஷ்தா. சேவை செய்தார் மற்றும் விலகி விட்டார். அப்படிப்பட்ட நிலை எப்பொழுதும் இருக்கிறதா? அந்த மாதிரி புனித அன்னப்பறவையாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள் இல்லையா? எப்பொழுது புனித அன்னப் பறவையாகிய எனது காரியம் என்ன என்ற ஞானம் இருக்கிறது என்றால் ஞானத்தின் சக்தி மூலமாக மாற்றம் செய்ய முடியாதா? அடுத்த வருடமும் ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லாதீர்கள். தீவிரமாக முயற்சி செய்யவரின் லட்சியமே "இப்பொழுது" செய்ய வேண்டும் என்பது தான். மெதுவாக முயற்சி செய்பவரின் லட்சியம் "எப்பொழுதாவது" என்றிருக்கிறது. நீங்கள் தீவிரமாக முயற்சி செய்பவர்கள் தான் இல்லையா. செய்யக்கூடியவர்கள் தான் என்று பாப்தாதாவோ ஒவ்வொரு ஆத்மா மேலும் எப்பொழுதும் உயர்ந்த பாவனை வைக்கிறார். எனவே இந்த உயர்ந்த பாவனையை நடைமுறையில் கொண்டு வர வேண்டியதாக இருக்கும் -இப்பொழுது செய்தே தான் ஆக வேண்டும். நடந்தே தான் ஆக வேண்டும். ஒருவேளை எண்ணத்தில் நடந்தே தான் ஆக வேண்டும், செய்தே தான் ஆக வேண்டும் என்ற இலட்சியம் இருக்கிறது என்றால் இந்த எண்ணம் கண்டிப்பாக வெற்றியைப் பிராப்தி செய்விக்கும். ஏனென்றால் திடத்தன்மை வெற்றியின் சாவி ஆகும். அப்படி எப்பொழுதும் வெற்றியை உடன் வைத்துக் கொள்ளுங்கள்.

**குரூப்-6: சாதாரணத்தில் மஹான் தன்மையை அனுபவம் செய்விப்பதுதான் சேவையின் சகஜ சாதனம் ஆகும்!** அனைத்து செல்வந்தர்களையும் விட மிகப் பெரிய செல்வந்தர் யார்? முழுச் சக்கரத்தினுள்ளும் அனைத்து செல்வந்தர்களையும் விட மிகப் பெரிய செல்வந்தர் ஆத்மாக்கள் நாங்கள் தான் என்று யார் நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். எதில் செல்வந்தராக இருக்கிறீர்கள்? எத்தனை விதமான செல்வம் கிடைத்திருக்கிறது? அந்த பட்டியல் நினைவிருக்கிறதா? அதிகமான பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரு நாளில் எவ்வளவு வருமானம் செய்கிறீர்கள் என்று தெரியுமா? பல மடங்கு வருமானம் செய்கிறீர்கள். கிராமத்தில் இருக்கிறீர்கள் மற்றும் பல மடங்கு வருமானம் செய்து கொண்டிருக்கிறீர்கள். பார்ப்பதற்கு சாதாரணமாக இருக்கிறீர்கள், ஆனால் அனைத்து செல்வந்தர்களையும் விட மிகப் பெரிய செல்வந்தராக இருக்கிறீர்கள். இது தான் பரமாத்மா தந்தையின் அதிசய காரியம். எனவே அனைத்து செல்வந்தர்களையும் விட பெரிய செல்வந்தர்கள் இங்கு அமர்ந்திருக்கிறார்கள் என்று செய்தித்தாளில் போடலாம். பின்பு அனைவரும் உங்கள் பின்னால் வருவார்கள். இன்றைய நாட்களில் பயங்கரவாதிகள் கூட செல்வந்தர்களை விடுவதில்லை. அவர்களும் உங்கள் பின்னால் வந்தால் என்ன செய்வீர்கள்? அவர்களையும் கூட செல்வந்தர்களாக ஆக்கி விடுவீர்கள் இல்லையா? பாருங்கள் எவ்வளவு சாதாரண ரூபத்தில் இருக்கிறீர்கள். யாராவது உங்களைப் பார்த்து முழு உலகத்திலேயும் மிகப் பெரிய செல்வந்தர் என்றும் பல மடங்கு வருமானம் செய்பவர்கள் என்றும் நினைப்பார்களா? ஆனால் சாதாரணத் தன்மையில் மஹான் தன்மை அடங்கியிருக்கிறது. எவ்வளவு சாதாரணமாக இருக்கிறீர்களோ அவ்வளவு உள்ளே மஹானாக இருக்கிறீர்கள். எனவே தந்தை என்னவாக இருந்த என்னை என்னவாக ஆக்கி விட்டார் மேலும் என்னென்ன கொடுத்திருக்கிறார் என்ற போதை இருக்கிறதா? இரண்டு விஷயங்களும் நினைவிருக்கிறது இல்லையா? அப்டியானால் ரிச்சஸ்ட் இன் தி வேர்ல்ட் (உலகில் அனைவரையும் விட பெரிய செல்வந்தர்) என்று செய்தித்தாளில் போடலாம் இல்லையா? மேலும் பாருங்கள் பொக்கிஷங்கள் கூட எந்தத் திருடனாலும் கொள்ளையடிக்க முடியாது, நெருப்பால் எரிக்க முடியாது மற்றும் தண்ணீரில் மூழ்கடிக்க முடியாது, அந்த மாதிரியானது. அந்த மாதிரி பொக்கிஷத்தை தந்தை கொடுத்திருக்கிறார். அழியாத பொக்கிஷங்கள் தான் இல்லையா? அழியாத பொக்கிஷங்கள் யாருமே அழிக்க முடியாதது. மேலும் எவ்வளவு சுலபமாகக் கிடைத்து விட்டது. எவ்வளவு பொக்கிஷங்கள் இருக்கின்றனவே அதற்காக ஏதாவது கொஞ்சம் உழைக்க வேண்டியதாக இருந்ததா? தியாகம் செய்தீர்களா? அல்லது பாக்கியம் கிடைத்ததா? தியாகம் செய்தாலும் கூட தீயவைகளைத் தான் செய்தீர்கள் இல்லையா? தீயவைகளை விடுவது கூட ஏதாவது விடுவதாக ஆகுமா என்ன? உலகம் கூறுகிறது தியாகம் செய்தோமென்று மேலும் நீங்கள் கூறுகிறீர்கள் பாக்கியம் என்று. செல்வந்தனை செல்வந்தனாக ஆக்குவது பெரிய

விஷயம் இல்லை அல்லவா? ஏழையைச் செல்வந்தனாக ஆக்குவது, இது தான் அதிசயம். இன்றைய நாட்களில் அழியும் செல்வத்தின் செல்வந்தர்கள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களைத் தந்தை செல்வந்தர்களாக ஆக்குவதில்லை அவர்களுக்கு பாக்கியமே இல்லை. பாக்கியம் இருப்பதோ ஏழைகளுக்குத் தான். எப்பொழுதாவது யார் யார் (புகழ் பெற்ற நபர்களின் பட்டியல்) என்பதில் உங்கள் பெயர் வந்திருக்கிறதா? மற்றவர்களின் பெயர் வருகிறது இல்லையா? மேலும் தந்தையின் அகராதியில் (டிக்ஷனரி) யார் யார் என்பதின் உங்களுடைய பெயர் இருக்கிறது. பகவானின் புத்தகமே வித்தியாசமானது. அவ்வளவு நஷா இருக்கிறதா? பூமி மற்றும் ஆகாயத்தையும் அளந்து விடுங்கள், அதையும் விட அதிகமான குஷி இருக்கிறது இல்லையா. முடிவில்லாதது தான் இல்லையா? ஆகாயம் மற்றும் பூமியிலோ எல்லைக்குட்பட்டதாக ஆகி விடும். உங்களுடையது அதையும் விட எல்லைக்கப்பாற்பட்டது. எல்லைக்கப்பாற்பட்ட அதிபதியாக ஆகி விட்டீர்கள் தான் இல்லையா. எப்பொழுது தந்தையும் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையோ பிராப்தியும் எல்லைக்கப்பாற்பட்டதைத் தான் செய்விப்பார் இல்லையா? அப்படியானால் என்ன நினைவிருக்கிறது? எல்லைக்கப்பாற்பட்ட தந்தை கிடைத்தார். எல்லைக்கப்பாற்பட்ட இராஜ்ய பாக்கியம் கிடைத்தது, எல்லைக்கப்பாற்பட்ட பொக்கிஷம் கிடைத்தது. போதை இருக்கிறதா? ஒவ்வொரு காரியத்திலும் இந்த ஆன்மீக போதை தனக்கும் மற்றும் மற்றவர்களுக்கும் அனுபவம் ஆக வேண்டும். அவர் புரிந்தாலும் புரிந்து கொள்ளாவிட்டாலும், இவர் குஷியில் மகிழ்ச்சியில் இருக்கிறார் என்று அவ்வளவாவது கூறுவார் இல்லையா? இதை அனுபவம் செய்விக்க முடியும் இல்லையா? எப்படி மதுபனில் வருகிறார்கள் என்றால் தெரியாதவர்கள் கூட என்ன அனுபவம் செய்கிறார்கள்? இங்குள்ள சூழ்நிலை மற்றும் இங்குள்ள ஆத்மாக்கள் குஷியாக இருப்பவர்கள், வாயுமண்டலமும் குஷியாக இருக்கிறது என்று இதைத் தான் அனுபவம் செய்கிறார்கள் இல்லையா? அப்படி உங்கள் அனைவரின் உறவு நெருக்கத்தில் இவர்கள் தெய்வீக ஆத்மாக்கள், நிரம்பிய ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்யட்டும். அந்த மாதிரி அனுபவம் செய்கிறார்கள். தேக அபிமானத்தின் காரணத்தினால் வெளியில் சொல்லவில்லை என்றாலும் உள்ளுக்குள்ளே தெரிந்திருக்கிறார்கள் தான். ஏனென்றால் ஒருவேளை வெளிப்படையாக உங்களைக் கூறினார்கள் என்றால் தானும் ஆக வேண்டியது இருக்கும் இல்லையா. எனவே சொல்ல மாட்டார்கள்

-ஆனால் உள்ளே அவசியம் உணர்வார்கள். அப்படிப்பட்ட உயர்ந்தவர்கள் தான் இல்லையா. எனவே தான் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட சுகத்தைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் உங்களிடம் கேளுங்கள் என்ற மஹிமை இருக்கிறது. பாருங்கள் பகவானின் விருப்பம் என்னவாக இருக்கிறது? யாரை ஒருவரும் விரும்புவதில்லையோ அவரை பகவான் விரும்புகிறார். தந்தையின் பார்வை யார் மேல் பட்டது? உங்கள் அனைவரின் மேல். இவ்வளவு புகழ் பெற்றவர்களின் மேல் பார்வை செல்லவில்லை. உன்னுடைய வழி மற்றும் செயல் உனக்குத்தான் தெரியும் வேறு யாருக்கும் தெரியாது என்று கூறுகிறார்கள் இல்லையா? அப்படி பரமாத்மா நம்மை விரும்பினார் என்ற போதை இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினர் இரட்டை போதையில் இருக்கிறார்கள். பாரதவாசிகளையோ பாரதத்திலேயே வந்து தேர்ந்தெடுத்தார் ஆனால் இரட்டை வெளிநாட்டினரை எங்கிருந்து தேர்ந்தெடுத்தார். இவ்வளவு தூரத்திலிருந்து தந்தை நம்மை தேர்ந்தெடுத்தார். அப்படியானால் இரட்டை போதை இருக்கிறது இல்லையா? எப்படி ஆத்மாவும் உடலும் சேர்ந்தே இருக்கிறது. மேலும் எப்பொழுதும் சேர்ந்திருக்கிறது. அப்படி இந்த போதை ஆத்மாவுடன் எப்பொழுதும் சேர்ந்திருக்கிறது. அந்த மாதிரி போதையில் இருக்க கூடிய உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்கள். எப்பொழுதும் குஷியில் நடனம் ஆடுபவர்கள். ஏதாவது பிராப்தி கிடைத்தது என்றால் குஷியில் நடனம் ஆடுகிறார்கள். உங்களுக்கோ ஒவ்வொரு அடியிலும் பிராப்தியே பிராப்தி தான். பிராப்தியில்லாத பொருள் பரமாத்மா கஜானாவில் ஒன்றும் இல்லை என்று உள்ளம் கூறும் அளவிற்கு பிராப்தி இருக்கிறது. பிராமணர்களின் பொக்கிஷங்களில் அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன என்ற பாட்டு இந்த நேரத்திற்குரியது தான். நல்லது.

**வரதானம்: சுகசொரூபமாகி அனைவருக்கும் சுகம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் சுக வள்ளல் ஆகுக!**

சங்கமயுக பிராமணன் என்றால் துக்கத்தின் பெயர் அடையாளம் இல்லை. ஏனொன்றால் சுக வள்ளலான குழந்தைகள் நீங்கள் மாஸ்டர் சுகவள்ளல் ஆவீர்கள். யார் மாஸ்டர் சுகவள்ளலே, சுக சொருடமாக இருக்கிறார்களோ அவர்களே துக்கத்தில் எப்படி வர முடியும். புத்தியால் துக்கமான உலகத்திலிருந்து விலகி விட்டீர்கள். அவர்கள் தானும் சுக சொரூபத்தில்

இருக்கவே செய்கிறார்கள், கூடவே மற்றவர்களுக்கும் எப்பொழுதும் சுகம் கொடுக்கிறார்கள். எப்படி தந்தை ஒவ்வொரு ஆத்மாவிற்கும் எப்பொழுதும் சுகம் கொடுக்கிறார். அதே போல் தந்தையின் காரியம் எதுவோ அது தான் குழந்தைகளின் காரியமும். யாராவது துக்கம் கொடுக்கிறார் என்றாலும் நீங்கள் துக்கம் கொடுக்க முடியாது. உங்களுடைய சுலோகன் துக்கம் கொடுக்காதீர்கள். துக்கம் எடுக்காதீர்கள்.

**சுலோகன்: மகிழ்ச்சியோடு இருப்பது மற்றும் உள்ளடக்கி இருப்பதின் சமநிலையைக் கடைபிடித்து ஒரே ரசனையின் நிலையில் நிலைத்திருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.11.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மங்களின் விளைவுகளின் இரகசியங்களைத் தெரிந்தவர் ஆகுங்கள்!

இன்று அனைத்து பொக்கிஷங்களைக் கொடுக்கக் கூடிய தந்தை, அனைத்துக் குழந்தை சேமிப்புக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். பொக்கிஷங்களோ அனைத்துக் குழந்தை குறைவில்லாமல் கிடைத்திருக்கிறது. மேலும் அளைவருக்கும் ஒருவர் மூலமாக அனைத்துப் பொக்கிஷங்களும் ஒரே மாதிரி கிடைத்திருக்கின்றன. ஒரு பொக்கிஷம் இல்லை, ஆனால் அனேக பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன. இருந்த போதிலும் சேமிப்புக் கணக்கு ஒவ்வொருவருக்கும் வேறு வேறாக இருக்கிறது. சிலர் அனைத்துப் பொக்கிஷங்களையும் நல்ல முறையில் சேமிப்பு செய்திருக்கிறார்கள் மேலும் அனேகர் சக்திக்கேற்றபடி சேமிப்பு செய்திருக்கிறார்கள். மேலும் எவ்வளவு சேமித்திருக்கிறார்களோ அந்த அளவே அவருடைய நடத்தையிலும் முகத்திலும் ஆன்மீக போதை தென்படுகிறது. சேமிப்பு செய்ததின் ஆன்மீக பெருமிதம் அனுபவம் ஆகிறது. எவ்வளவு பெருமிதம் இருக்கிறதோ அவ்வளவு கவலையற்ற மகாராஜாவின் ஜொலிப்பு அவருடைய ஒவ்வொரு காரியத்திலும் தென்படுவது தான் ஆன்மீகப் பெருமிதத்தின் முதல் அடையாளமாகும். ஏனென்றால் எங்கு ஆன்மீகப் பெருமிதம் இருக்கிறதோ அங்கு எந்தக் கவலையும் இருக்க முடியாது. எப்படி வெளிச்சமும் இருளும் ஒன்றாக இருக்க முடியதோ அதே போல் இந்த பெருமிதம் மற்றும் கவலை இரண்டும் ஒரே நேரத்தில் ஒன்றாக இருக்க முடியாது.

கவலையற்ற மகாராஜாவின் விசேஷம் என்னவென்றால் அவர் எப்பொழுதும் கேள்விகள் நிறைந்தவராக இல்லாமல் மகிழ்ச்சி நிறைந்தவராக இருக்கிறார். ஒவ்வொரு காரியத்திலும் அதாவது தன்னுடைய சம்மந்தத்தில் மற்றும் அனைவரின் சம்மந்தத்தில் மேலும்

இயற்கையின் சம்மந்தத்திலும் எந்தவொரு விஷயத்திலும் எந்தவொரு நேரத்திலும் எண்ண அளவில் கூட இது ஏன் அப்படி? மற்றும் இது என்ன நடந்து கொண்டிருக்கிறது? இந்த மாதிரியும் நடக்குமா என்ன? என்ற கேள்விக்குறிகள் இருக்காது. மகிழ்ச்சி நிறைந்த ஆத்மா ஒவ்வொரு காரியத்தைச் செய்து கோண்டே, பார்த்துக் கொண்டே, கேட்டுக் கொண்டே நினைத்துக் கொண்டே என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அது எனக்காக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது மேலும் எப்பொழுதும் நல்லது தான் நடக்கும் என்பது அவருடைய எண்ணத்தில் தெளிவாக இருக்கிறது. கேள்வி நிறைந்த ஆத்மா என்ன? ஏன்? அப்படியா? இப்படியா? இந்த குழப்பத்தில் கவலையற்ற நிலையிலிருந்து தன்மை கவலையில் கொண்டு வந்து விடுகிறார். மேலும் கவலையற்ற ஆத்மா தீயதையும் நல்லதில் மாற்றி விடுகிறார். எனவே அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

இன்றைய நாட்களில் விஞ்ஞான சாதனங்கள் மூலமாகக் கூட வீணான, கெட்டுப்போன பொருட்களைக் கூட மாற்றி நல்ல பொருட்களாக ஆக்கி விடுகிறார்கள். அப்படி மகிழ்ச்சி நிறைந்த ஆத்மா விஷயம் தீயதானாலும் சம்மந்தத்தில் தீய அனுபவம் ஏற்பட்டாலும் அவர் தன்னுடைய அமைதி சக்தியின் மூலமாக அந்த தீயதையும் நல்லதில் மாற்றி தனக்குள்ளும் தாரணை செய்வார் மற்றும் மற்றவர்களுக்கும் தன்னுடைய சுப் பாவளை நிறைந்த உயர்ந்த எண்ணங்கள் மூலமாக பேவைகளை மாற்றி நல்லவைகளைத் தாரணை செய்வதற்கான சக்தி கொடுப்பார். விஷயமே எப்பொழுது தீயதாக மற்றும் தவறாக இருக்கிறது என்றால் தவறை தவறு என்று கூற வேண்டியதாக இருக்கும் இல்லையா மற்றும் தவறை தவறு என்று புரிந்து கொள்ளவே வேண்டியதாக இருக்கும் என்று நினைக்கிறார்கள் மற்றும் கூறுகிறார்கள்; ஆனால் தவறை தவறு என்று புரிந்து கொள்வது, புரிந்து கொள்வது, தெரிந்து கொள்வது வேறு விஷயம்; ஆனால் ஞானம் நிறைந்த ரூபத்தில் இதை புரிந்து கொள்ளும் கணக்குப்படி புரிந்து கொண்டீர்கள். அந்த மாதிரி சரி மற்றும் தவறை தெரிந்து கொள்பவர்கள் எந்தவொரு ஆத்மாவின் தீயதை. தீய ரூபத்தில் தன்னுடைய புத்தியில் தாரணை செய்ய மாட்டார்கள், இது தான் அவர்கள் புரிந்து கொள்ளும் விதம். அப்படி புரிந்து கொள்வது வேறு விஷயம், புரிந்து கொள்வது வரை சரி தான் ஆனால் தன்னுள் மற்றும் தன்னுடைய எண்ணத்தில், புத்தியில், உள்ளுணர்வில் மற்றும் வார்த்தைகளில்

மற்றவர்களின் தீயவைகளை தீய ரூபத்தில் கையாளவும் வேண்டாம். உள்ளடக்கவும் வேண்டாம். அப்படி புரிந்து கொள்வது மற்றும் தாரணை செய்வது இதில் வித்தியாசம் இருக்கிறது.

தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, இது தவறு தான். தவறை தவறு என்று சொல்ல வேண்டியது இருக்குமில்லையா? என்று கூறுகிறார்கள் ஆனால் புத்திசாலிகளின் வேலை என்னவாக இருக்கிறது? புத்திசாலி ஒருவேளை இது தீயது என்று புரிந்து கொள்கிறார் என்றால். தீயது என்று தெரிந்த பின்பும் தன்னிடம் சேர்த்து வைப்பாரா என்ன? தன்னிடம் மிகவும் நன்றாக பாதுகாப்பாக வைப்பாரா? விட்டு விடுவார் இல்லையா அல்லது சேர்த்து வைப்பது தான் புத்திசாலித்தனமா? இது புத்திசாலித்தளமா? மேலும் யோசியுங்கள். ஒருவேளை தீய விஷயம் மற்றும் தீய நடத்தையை தன்னில் தாரணை செய்து விட்டார் என்றால் அவருடைய புத்தி, உள்ளுணர்வு மற்றும் வார்த்தைகளை முழுமையாக சுத்தமானதாக ஏற்றுக் கொள்ளப்படுமா? ஒருவேளை கொஞ்சமாவது ஏதாவது குறை மற்றும் கறை இருந்து விடுகிறது, அழுக்கு இருந்து விடுகிறது என்றால் டிபக்ட் உள்ளவரை (சரியில்லாதவரை) ஒருபொழுதும் பெர்பெக்ட் (சரியானவர்) என்று கூற முடியாது. மகிழ்ச்சி நிறைந்தவராக இருக்க முடியாது. ஒருவேளை யாருடைய தீயவைகளும் எண்ணங்களில் இருக்கிறது என்றால் அவருடைய எண்ணம் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்க முடியாது மற்றும் எண்ணத்திலிருக்கும் விஷயங்கள் அவசியம் வார்த்தைகளில் வரும். இதை அவர் ஒருவரின் முன்பும் சொல்லலாம் அல்லது பல பேர் முன்பும் வர்ணனை செய்யலாம் ஆனால் கர்மங்களின் விளைவுகளின் ஆழ்ந்த இரகசியத்தை எப்பொழுதும் முன்னுக்கு வையுங்கள். ஒருவேளை யாருடையவும் தீய மற்றும் தவறான விஷயங்களை எண்ணத்திலும் வைத்து கூடவே வர்ணனையும் செய்கிறீர்கள் என்றால், இந்த வீணான வர்ணனை செய்வது என்பது உயர்ந்த விரிந்த கோபுரத்தில் சப்தம் செய்தால் அந்த சப்தம் அவரிடமே பெரிய சப்தமாக வந்து சேருவது போல் ஆகும். பெரிய விரிந்த கோபுரத்தில் சப்தம் செய்து பார்த்திருக்கிறீர்களா? அப்படி ஒருவேளை யாரையாவது நிந்தனை செய்யும், தவறை தவறாக பரப்பும் சம்ஸ்காரம் இருக்கிறது என்றால் இதைத் தான் நீங்கள் பழக்கம் என்று கூறுகிறீர்கள். அப்படி இன்று நீங்கள் யாரையாவது நிந்தனை செய்கிறீர்கள், தன்னை பெரிதாக நினைத்துத் தவறிலிருந்து விலகி

இருப்பவர் என்று நினைத்து வர்ணனை செய்கிறீர்கள், ஆனால் நீங்கள் யாரையாவது நிந்தனை செய்தீர்கள் என்றால் நாளை உங்களை பல மடங்கு நிந்தனை செய்வார்கள் ஏனென்றால் இந்த தவறான விஷயங்கள் மிக வேகமாக ஏதாவது ஒரு நோய்க்கிருமிகள் வேகமாக பரவுவதைப்போல் பரவுகிறது. யாரை நிந்தனை செய்கிறீர்களோ அவர் வரை சென்றடைகின்றது, இது உறுதியான நியமம் மற்றும் கர்மங்களின் தத்துவமாகும். நீங்கள் ஒரு நிந்தனை செய்திருப்பீர்கள் மேலும் உங்களை தவறு என்று நிரூபிப்பதற்காக உங்களை பத்து நிந்தனை செய்வார். அப்படியானால் முடிவு என்னவானது? கர்மங்களின் விளைவு என்னவானது? திரும்பி எங்கு வந்தது? ஒருவேளை அந்த ஆத்மாவை சரி செய்ய வேண்டுமென்ற சுபபாவணை உங்களுக்கு இருக்கிறது என்றால் சுபபாவனையின் சொரூபத்தில் இருந்து தவறான விஷயத்தை விசேஷமாக நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் சொல்லுங்கள், பரப்புவது தவறாகும். நான் யாருக்கும் சொல்லவில்லை ஆனால் அவர் சொல்லிக் கொண்டிருந்ததினால் ஆமாம் மேல் ஆமாம் போட்டேன். சொல்லவில்லை என்று அனேகர்கள் கூறுகிறார்கள். உங்களுடைய பக்தி மார்க்கத்தின் சாஸ்திரங்களிலும் தீய காரியம் செய்யவில்லை ஆனால் பார்க்கவும் செய்தார், உடந்தையாகவும் இருந்தார் என்றால் அது பாவம் என்று வர்ணிக்கப்பட்டு இருக்கிறது. ஆமாம் மேல் ஆமாம் போடுவது, இது கூட கர்மங்களின் விளைவுகளின்படி பாவத்திற்குரியதாகி விடுகிறது. இன்றைய காலங்களில் கர்மங்களின் விளைவுகளின் ஞானத்தை மிக லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் ஆனால் இந்த சின்ன சின்ன சூட்சும பாவம் உயர்ந்த சம்பூர்ண நிலையில் தடை ரூபமாக ஆகின்றன. லேசாக எடுத்துக் கொள்வதின் அடையாளங்கள் என்ன? அவர் எப்பொழுதும், இதையோ மற்றவர்களும் செய்கிறார்கள், இன்றைய நாட்களில் இதுவெல்லாம் சகஜம் என்று நினைக்கிறார்கள். புரிந்து கொள்கிறார்கள். அல்லது தன்னைத் தானே லேசாக ஆக்கிக் கொள்வதற்காக நான் சிரிப்பு உணர்வில் சொல்லி விட்டேன், என்னுடைய உள்நோக்கம் அதுவாக இருக்கவில்லை, அப்படியே சொல்லி விட்டேன் என்று கூறுவார்கள். இது சம்பூர்ண ஸித்தியை அடைவதில் சூட்சும தடையாகி விடுகிறது. எனவே ஞானமோ மிக அதிகமாக கிடைத்து விட்டது. படைப்பவர் மற்றும் படைப்பின் ஞானத்தைக் கேட்பது, வர்ணனை செய்வது மிகவும் தெளிவாகி விட்டது ஆனால் கர்மங்களின் விளைவுகளின் ரகசியத்தின் ஞானம் எப்பொழுதும் புத்தியில் தெளிவாக இருப்பதில்லை. எனவே

லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் அனேகக் குழந்தைகள் ஆன்மீக உரையாடல் செய்யும் போது தன் மேலேயே புகார் கூறுகிறார்கள். எப்படி தந்தை குழந்தைகள் மேல் உயர்ந்த எதிர்ப்பார்ப்புகள் வைத்திருக்கிறார். என்ன விரும்புகிறாரோ, எவ்வளவு விரும்புகிறாரோ அவ்வளவு இல்லை என்று தந்தை கூறுவது போல். இதன் காரணம் என்ன? இந்த மிக சூட்சும வீணான செயல் புத்தியை, மனதை உயர்ந்த அனுபவம் செய்ய விடுவதில்லை. யோகா செய்ய அமருகிறார்கள் ஆனால் மிகுந்த நேரம் யுத்தம் செய்வதிலேயே சென்று விடுகிறது, வீணானவைகளை விலக்கி சக்திசாலி ஆவதில் நேரம் சென்று விடுகிறது. எனவே என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு உயர்வாக ஆகிறார்கள் என்றால் உயர்வில் கவனம் கூட உயர்ந்ததாக வைக்க வேண்டும்.

பிராமண வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். மகிழ்ச்சியோடு இருப்பது என்றால் மனதில் பட்டதெல்லாம் செய்வது, மகிழ்ச்சியோடு இருப்பது என்று அர்த்தமல்ல. இந்த அற்ப கால வார்த்தைகளின் மகிழ்ச்சி மற்றும் அற்ப கால உறவு நெருக்கத்தின் மகிழ்ச்சி எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருந்து வேறுபட்டதாகும். இதையே மகிழ்ச்சி என்று நினைக்காதீர்கள். மனதில் பட்டதை சொன்னேன், மனதில் பட்டதைச் செய்தேன் நானோ மகிழ்ச்சியாக இருக்கிறேன். அற்ப கால மனமகிழ்ச்சியுடையவராக ஆகாதீர்கள். நிரந்தரமாக ஆன்மீக மகிழ்ச்சியில் இருங்கள். இது தான் சரியான பிராமண வாழ்க்கை, மகிழ்ச்சியோடும் இருங்கள் மேலும் கர்மங்களின் விளைவுகளைத் தெரிந்தவராகவும் இருங்கள். அப்பொழுதுதான் என்ன விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அந்த மாதிரி அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். புரிந்ததா? கர்மங்களின் விளைவுகளின் இரகசியங்களைத் தெரிந்தவர் ஆகுங்கள். பொக்கிஷங்களின் சேமிப்பின் முடிவை பின்பு கூறுவோம். நல்லது.

நாலாபுறமும் உள்ள கவலையிலிருந்து விடுபட்ட கவலையில்லா மகாராஜா ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தனக்காகவும், மேலும் மற்றவர்களுக்காகவும் உயர்ந்த மாற்றக்கூடிய சக்தியை காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் படைப்பவர் மற்றும் படைப்பினை தெரிந்த மற்றும் கர்ம தத்துவங்களைத் தெரிந்த,

அந்த மாதிரி ஞான சொருப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தாதிகளுடன் சந்திப்பு:** இந்த நேரம் எந்த விஷயத்தின் அவசியமாக இருக்கிறது? கர்மத்தின் ஆழமான விளைவு களின் ஞானம் உள்ளடங்கிப் போய் விட்டது. எனவே அலட்சியத்தன்மை இருக்கிறது. முயற்சி செய்யவர்களும் தான் ஆனால் முயற்சியில் அலட்சியம் வந்து விடுகிறது. எனவே இப்பொழுது இதன் அவசியம் இருக்கிறது. பாப்தாதா அனைவரின் ரிசல்ட்டைப் பார்க்கிறார். என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அது நன்றாக இருக்கிறது ஆனால் இப்பொழுது நல்லதிலும் நல்லதாக ஆகவே வேண்டும். பிஸியாக இருக்க வேண்டியதாக இருக்கிறது இல்லையா? அதிக நேரம் எதில் பிஸியாக இருக்க வேண்டியதாக இருக்கிறது? எந்த விஷயத்தில் அதிக நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது? உங்களுடைய நிலை விலகியதாகவும் அன்பானதாகவும் இருந்தாலும் கூட நேரத்தைக் கொடுக்கத்தான் வேண்டியதாக இருக்கிறது. அப்படி இந்த நேரமே மிகவும் சக்திசாலியான லைட் உறவுஸ், மைட் ஹவுஸின் வைப்ரேஷனைப் பரப்புவதில் செல்கிறது என்றால் என்னவாகி விடும்? சேர்ந்த குழு ரூபத்தில் இந்த சூழ்நிலை இருந்து வேறு எந்த விஷயமுமே இல்லை என்றால் வைப்ரேஷன் உலகத்தில் அல்லது இயற்கை வரை சென்றடையுமா என்ன? இப்பொழுது அனைவரும் எப்பொழுது எங்களுடைய படைப்பவர் மற்றும் மாஸ்டர் படைப்பவர் சம்பன்னம் அல்லது சம்பூர்ணம் ஆகி எங்கள் மூலமாக தன்னுடைய வரவேற்பை செய்விப்பார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையும் கூட வரவேற்கும் இல்லையா. அப்படி வெற்றி மாலை மூலமாக அது வரவேற்கும் நாளும் வரத்தான் போகிறது. எப்பொழுது வெற்றியின் மேள தாளம் முழங்குமோ அப்பொழுது பிரத்யட்சத்தாவின் மேள தாளம் முழங்கும். முழங்கவே தான் வேண்டும் இல்லையா. நல்லது.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: வெற்றிமாலையில் வருவதற்காக தீவிர முயற்சியாளர் ஆகுங்கள்!** எப்பொழுதும் தீவிரமாக முயற்சி செய்யும் ஆத்மா நான் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது பிராமணன் ஆனீர்கள் என்றால் முயற்சி செய்பவர்களாகவும் தானாக ஆகி விட்டீர்கள். தீவிரமாக முயற்சி செய்பவரா அல்லது முயற்சி மட்டும் செய்பவரா?

கேட்பது மற்றும் சொல்லக்கூடியவரை முயற்சி செய்பவர் என்று கூறலாமா அல்லது தீவிர முயற்சி செய்பலர் என்று கூறலாமா? கேட்பது மற்றும் சொல்வது, அதன் பின்பு என்ன நடக்கிறது? தீவிர முயற்சி செய்பவர் என்று யாரைக் கூற முடியும், கேட்பவரையா அல்லது அந்த மாதிரி ஆகுபவரையா? யார் மாலையின் 16,108-வது நம்பரில் இருக்கிறாரோ அவர் கூட கேட்கவும் மற்றும் மற்றவர்களுக்குச் சொல்லவும் தான் செய்கிறார். இல்லையென்றால் மாலையில் எப்படி வருவார் ஆனால் 108-ன் மாலையில் யார் வருவார்கள்? 108-மணி மாலையின் பெயர் வெற்றி மாலை. 16,000-மணி மாலையின் பெயர் வெற்றி மாலை இல்லை. அப்படி கேட்பது மற்றும் கூறுவது இதை அதிகமானவர்கள் செய்கிறார்கள் ஆனால் கேட்பது மற்றும் ஆகுவது இதைத் தான் தீவிர முயற்சி செய்பவர் என்று கூறப்படுகிறது. தீவிரமாக முயற்சி செய்பவர்கள் 108-இருக்கிறார்கள் மற்றும் முயற்சி செய்பவர்கள் 16,000-இருக்கிறார்கள். எனவே நான் தீவிரமாக முயற்சி செய்பவனா அல்லது முயற்சி செய்யவனா என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். என்னவாக இருக்கிறாரோ, எப்படி இருக்கிறாரோ அதை அதிகமானவர்கள் தன்னைத்தானே தெரிந்து கொள்ள முடியும். வெகு குறைந்தவர்கள்தான் தன்னையே தெரியாதவர்களாக இருக்கிறார்கள், தவறை சரியென்று புரிந்து நடந்து விடுகிறார்கள். அதிகமானவர்கள் தன்னுடைய மனதில் தன்னைத் தானே நான் யார் என்று சத்தியமாகத் தெரிந்திருக்கிறார்கள். எனவே எப்பொழுதும் தன்னைப் பாருங்கள் மற்றவர்களை அல்ல. தன்னுடைய முயற்சியை சோதனை செய்யுங்கள் மற்றும் தீவிர முயற்சியாக மாற்றுங்கள். இல்லையென்றால் கடைசி நேரம் வரும்பொழுது மாற்ற முடியாது. அந்த நேரம் படிப்பிற்கான நேரம் முடிவடைவதால் பரீட்சைக்கான நேரத்தில் படிப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. யாராவது ஒரு மாணவன் ஒரு கேள்விக்கு பதில் தெரியவில்லை புத்தகத்தைப் படித்து பதில் கொடுத்து விடலாம் என்று நினைத்தால் அது சரியாக இருக்குமா? அல்லது தவறாக ஆகுமா? அப்படி அந்த நேரம் தன்னை மாற்ற முடியாது. என்னவாக இருக்கிறாரோ, எப்படி இருக்கிறாரோ அப்படியே பிராப்தியை அடைந்து விடுவார் ஆனால் இப்பொழுது வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது மிகவும் தாமதம் என்ற அறிவிப்புப் பலகை போடப்படவில்லை. தாமதம் என்று போடப்பட்டிருக்கிறது. தாமதம் ஆகி விட்டீர்கள் ஆனால் மிகவும் தாமதம் ஆகவில்லை. எனவே இன்னும் வாய்ப்பு இருக்கிறது. சில மாணவர்கள்

ஆறு மாதத்தில் கூட ஒருவேளை சரியான முயற்சி செய்கிறார்கள் என்றால் கௌரவமாக தேர்ச்சி அடைந்து விடுவார்கள் ஆனால் நேரம் முடிவடைந்த பின்பு ஒன்றுமே செய்ய முடியாது. தந்தையும் கூட இரக்கம் காட்ட நினைத்தாலும் காட்ட முடியாது. இவர் நல்லவர், இவருக்கு மதிப்பெண்கள் கொடுத்து விடலாம் என்று தந்தை செய்ய முடியுமா? எனவே இப்பொழுதிலிருந்தே செக் (சோதனை) பண்ணுங்கள் மற்றும் சேஞ்ச் (மாற்றம்) ஆகுங்கள். அலட்சியத்தை விட்டுவிடுங்கள். சரி தான், சென்று கொண்டிருக்கிறோம். சென்றடைந்து விடுவோம் இவையெல்லாம் அலட்சியத் தன்மை ஆகும். அலட்சியமாக இருப்பவர்களுக்கு இந்த நேரம் மகிழ்ச்சியாக இருக்கிறது. யார் அலட்சியமானவராக இருப்பாரோ அவருக்கு எந்த கவலையும் இருப்பதில்லை, அவர் ஓய்வாக இருப்பது தான் எல்லாம் என்று புரிந்து கொள்கிறார். எனவே அலட்சியத்தன்மையை வைக்காதீர்கள். எப்பொழுதும் அலெர்ட்டாக இருங்கள். நீங்கள் பாண்டவ சேனை இல்லையா? சேனை அலட்சியமாக இருக்குமா? அல்லது அலெர்ட்டாக இருக்குமா? சேனை என்றால் அலெர்ட் எச்சரிக்கை மற்றும் கவனமாக இருப்பவர்கள். அலட்சியமாக இருப்பவரை படையிலிருக்கும் படைவீரனாகக் கூற முடியாது, எனவே அலட்சியத்தன்மை வேண்டாம் கவனம் இருக்கட்டும் ஆனால் கவனம் கூட இயற்கையான விதியாகி விடட்டும். சிலர் அடென்ஷனாக இருக்க வேண்டும் என்று டென்ஷளையும் வைக்கிறார்கள். டென்ஷனான வாழ்க்கை எப்பொழுதுமே இருக்க முடியாது. டென்ஷனான வாழ்க்கை கொஞ்ச காலம் இருக்கும். இயற்கையாகவே இருக்காது, அப்படி அடென்ஷன் வைக்க வேண்டும் ஆனால் அட்டென்ஷன் வைப்பது பழக்கமாகி விடட்டும். எப்படி மறந்ததின் பழக்கம் ஆகி விட்டது இல்லையா. விரும்பாவிட்டாலும் மறந்து விடுகிறது. அப்படி இது பழக்கமாகி விட்டது இல்லையா? இயல்பாகி விட்டது இல்லையா? அப்படி நினைவு சொரூபமாக இருப்பதின் பழக்கம் ஆகி விடட்டும். அடென்ஷனின் பழக்கம் ஆகி விடட்டும். எனவே தான் பழக்கத்தினால் மனித ஆத்மா நிர்பந்தம் ஆகி விடுகிறார் என்று கூறப்படுகிறது. விரும்பாவிட்டாலும் நடந்து விடுகிறது இதைத் தான் நிர்பந்தம் என்று கூறப்படுவது, அந்த மாதிரி தீவிர முயற்சி செய்பவர்கள் ஆகி விட்டீர்களா? தீவிர முயற்சி செய்பவர் என்றால் வெற்றி அடைபவர். அப்பொழுது தான் மாலையில் வர முடியும். வெகு காலத்து பயிற்சி தேவையாக இருக்கிறது. எப்பொழுதும் அலெர்ட் என்றால் எப்பொழுதும்

எவரெடி! வினாச நேரம் வரை இருப்போமா அல்லது அதற்கு முன்பு கூட போக முடியுமா? இதில் உங்களுக்கு என்ன நிச்சயம் இருக்கிறது. அதற்கு முன்பு கூட போக முடியும் இல்லையா. எனவே எவரெடியாக இருக்க வேண்டும். வினாசம் உங்களுக்காகக் காத்திருக்கட்டும், நீங்கள் வினாசத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்காதீர்கள். அது உங்களுடைய படைப்பு. நீங்கள் படைப்பவர். எனவே எப்பொழுதும் எவரெடியாக இருக்க வேண்டும். என்ன புரிந்து கொண்டீர்கள்? அடென்ஷன் வையுங்கள். என்னென்ன குறைகளை உணர்கிறீர்களோ அவற்றை மிக வேகமாக முடிவு கட்டுங்கள். சம்பன்னம் ஆவது என்றால் பலஹீனங்களை முடிவு கட்டுவதாகும். அப்படியில்லாமல் இங்கே வந்தீர்கள் என்றால் இங்குள்ளவர்களாக, அங்கே சென்றீர்களென்றால் அங்குள்ளவர்களாக ஆகாதீர்கள். அனைவரும் தீவிர முயற்சியாளர்களாகிச் செல்லுங்கள். நல்லது.

**குரூப்-2: எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பதற்கான இடம் -இதயம் நிறைந்த தந்தையின் இதய சிம்மாசனம்!** எப்பொழுதும் தன்னை இதயம் நிறைந்த தந்தையின் இதயத்தில் இருப்பவர்களாக அனுபவம் செய்கிறீர்களா? இதயம் நிறைந்தவரின் இதயம் என்ற சிம்மாசனம் இருக்கிறது இல்லையா? அப்படி இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்கள் என்று உங்களை நினைக்கிறீர்களா? எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது இறங்குகிறீர்கள். எப்பொழுதாவது ஏறுகிறீர்கள் என்று அந்த மாதிரியா? ஒருவேளை யாருக்காவது ஆசனம் கிடைத்து விடுகிறது என்றால் யாராவது ஆசனத்தை விடுவார்களா? இதுவோ உயர்ந்த பாக்கியம், பகவானின் இதய சிம்மாசனத்தில் அமரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. இதை விட பெரிய பாக்கியம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? அந்த மாதிரி கிடைத்துள்ள உயர்ந்த பாக்கியத்தை மறந்து விடுவதில்லையே? எனவே எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்கள் நாங்கள் என்ற இந்த நினைவிலேயே இருங்கள். யார் இதயத்தில் நிரம்பியிருக்கிறாரோ, பரமாத்மா இதயத்தில் நிரம்பியிருப்பவரை வேறு யாரும் அசைக்க முடியுமா? இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்கள் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாயாவின் புயலில் இருந்தும், இயற்கையின் புயலிலிருந்தும் -இரண்டு புயல்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். மாயாவின்

குழப்பங்கள் அசைக்க முடியாது மற்றும் இயற்கையின் குழப்பங்களும் அசைக்க முடியாது. அந்த மாதிரி அசையாதவர்களாக இருக்கிறீர்களா? அல்லது எப்பொழுதாவது அசையாமலும், எப்பொழுதாவது அசைபவர்களாகவும் இருக்கிறீர்களா? உங்களுடைய ஞாபகார்த்தமாக அச்சல்கர் (அசையாத வீடு) இருக்கிறது. அசையும் வீடாக கட்டவே இல்லை. அனேக தடவைகள் அசையாதவர்களாக ஆகி இருக்கிறீர்கள். இப்பொழுது கூட அசையாதவர்கள் தான் இல்லையா. ஆடுவது, அசைவதில் நஷ்டம் ஏற்படுகிறது மற்றும் அசையாமல் இருப்பதில் இலாபம் இருக்கிறது. ஏதாவது ஒரு பொருள் ஆடிக் கொண்டே இருக்கிறது என்றால் உடைந்து விடும் இல்லையா? நான் இதயம் நிறைந்தவரின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவன் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இந்த நினைவு தான் திலகம் ஆகும். திலகம் இருக்கிறது என்றால் ஆசனமும் இருக்கிறது. எனவே எப்பொழுது ஆசனத்தில் அமருகிறீர்கள் என்றால் இராஜ திலகமும் இடுகிறார்கள். இந்த நினைவின் திலகம் தான் இராஜ திலகம் ஆகும். அப்படி திலகமும் இடப்பட்டு இருக்கிறது. அல்லது எப்பொழுதாவது அழிந்து விடுகிறதா? திலகம் எப்பொழுதாவது பாதி இருந்து விடுகிறது மற்றும் எப்பொழுதாவது அழிந்து விடுகிறது அப்படியில்லையே. இது அழியாத திலகம் ஸ்தூல திலகம் இல்லை. யார் ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருக்கிறாரோ அவருக்கு எவ்வளவு குஷி இருக்கிறது. எவ்வளவு போதை இருக்கிறது. இன்றைய நாட்களில் தலைவர்களுக்கு ஆசனங்கள் கிடைப்பதில்லை நாற்காலிகள் கிடைக்கின்றன. இருந்தாலும் நம்முடைய கட்சியின் இராஜ்யம் இருக்கிறது என்று எவ்வளவு போதை இருக்கிறது. அதுவோ நாற்காலி தான், உங்களுடையதோ ஆசனம். அப்படி நினைவு போதையைக் கொடுக்கிறது. ஒருவேளை நினைவு இல்லை என்றால் போதையும் இல்லை. திலகம் இருக்கிறது என்றால் ஆசனமும் இருக்கிறது. எனவே நினைவின் திலகம் எப்பொழுதும் இடப்பட்டு இருக்கிறதா? அதாவது எப்பொழுதும் நினைவு சொரூபம் இருக்கிறதா? என்பதை சோதனை செய்யுங்கள். டில்லியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். இராஜ்யத்திற்காக என்ன தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். இராஜ்யத்திற்காக எவ்வளவு தயார் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இயற்கையும் தயாராக வேண்டும். இராஜ்யம் செய்யவரும் தயாராக வேண்டும். அப்படி என்ன தயார்

செய்திருக்கிறீர்கள்? பாதி டில்லியைத் தயார் செய்து விட்டீர்களா? டில்லியின் ஜனத்தொகை எவ்வளவு? (85-லட்சம்) மேலும் பிராமணர்கள் எத்தனை பேர்? (5-ஆயிரம்) இதுவோ ஒன்றுமே இல்லை. அப்படியானால் எப்பொழுது தயார் செய்வீர்கள்? எப்பொழுது வினாஷத்தின் மணி அடிக்குமோ அப்பொழுதா? சேரிட்டி பிகின்ஸ் அட் ஹோம் (முதலில் நம் வீட்டாருக்கு தானம் செய்வோம்). எனவே டில்லியைச் சேர்ந்தவர்களைத் தயார் செய்யுங்கள். முதன் முதலில் ஆரம்பத்தின் ஜனத்தொகையும் 9-லட்சம் தான் இல்லையா? அதையும் தயார் செய்யவில்லை. இப்பொழுதோ ஆயிரத்தில் தான் இருக்கிறது. அப்படியானால் என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? ஏற்கனவே தயாரான இராஜ்யத்தில் வருவீர்களா? அல்லது தயாரும் செய்வீர்களா? யார் செய்வார்களோ அவர்கள் அடைவார்கள். இராஜ்யம் தயாராகி விடும் பின்பு நாம் வந்து விடலாம் என்று அப்படி நினைக்காதீர்கள். இல்லை. யார் செய்கிறார்களோ அவர் அடைவார் என்பது நியமம். எனவே செய்ய வேண்டியதாக இருக்கும் இல்லையா? இதுவோ மிகவும் மெதுவான வேகம். தீவிர வேகம் எப்பொழுது ஏற்படும்? (5-வருடங்களில்) 5-வருடங்களில் விநாசம் ஏற்பட்டு விட்டால்? தயாராகவில்லை மற்றும் வினாசம் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வீர்கள்? (எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது) இதுவோ குஷியான செய்தி தான். உங்களுடைய சேவையிலும் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சேவாதாரிகளுக்கு சேவையின் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. மிருகங்கள் அதிகரித்துக் கொண்டே இருந்தால் வேட்டைக்காரர்களுக்கு குஷி இருக்கும் இல்லையா? அப்படி டில்லியைச் சேர்ந்தவர்கள் தன்னுடைய வேலையை முழுமையாகச் செய்யவில்லை. இப்பொழுது மிகவும் மீதம் இருக்கிறது. இப்பொழுது அதி வேகத்தில் செய்யுங்கள். ஒருவர் 10-பேரை உருவாக்க வேண்டும். 12-மாதங்களில் 10-பேரை உருவாக்க முடியும் இல்லையா? ஒரு மாதத்தில் ஒன்று என்றால் இது சுலபம் தான். நீங்கள் அனைவரும் 'ஆம்' என்று கூறினீர்கள். தானாகவே புகைப்படம் எடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. உறுதியான எண்ணத்தின் கையை உயர்த்துங்கள். உறுதியான எண்ணத்தின் கையை உயர்த்தினீர்கள் என்றால் நடந்தே தான் தீரும். டில்லியைச் சேர்ந்தவர்களுக்கோ அனைவரையும் அழைப்பிதழ் கொடுத்து அழைக்க வேண்டும். குழப்பமான பூமியிலோ இராஜ்யம் செய்வதில்லை. பொன்னான பூமியில் இராஜ்யம் செய்ய வேண்டும். அப்படியானால்

உருவாக்க வேண்டும் இல்லையா, இப்பொழுது மிக வேகமாகச் செய்யுங்கள். ஒருபொழுதும் கேட்பவர்கள் கிடைப்பதில்லை என்று கூறாதீர்கள். கேட்பவர்களோ அதிகமாக இருக்கிறார்கள் கொஞ்சம் முயற்சி செய்யுங்கள். உங்களுடைய நிலையை ஆன்மீக கவர்ச்சி நிறைந்ததாக ஆக்குங்கள். எப்பொழுது காந்தம் தன் பக்கம் இழுக்க முடியும் என்றால் உங்களுடைய ஆன்மீக சக்தி ஆத்மாக்களை இழுக்க முடியாதா என்ன? எனவே ஆன்மீகக் கவர்ச்சி செய்யும் காந்தமாக ஆகுங்கள். காந்தத்திற்கு ஊசியே வா என்று கூற வேண்டியது இருக்காது. இயல்பாகவே இழுக்கிறது. ஆன்மீகக் கவர்ச்சி நிறைந்த நிலை தானாகவே கவர்ச்சி செய்கிறது. கடின உழைப்பு தேவையில்லை. பிராமண வாழ்க்கையின் உயர்ந்த காரியம் 'சேவை' தான் இல்லையா. மற்றவை அனைத்தும் பொதுவானவை ஆனால் பிராமண வாழ்க்கையின் உயர்ந்த காரியம் சேவை ஆகும். நீங்கள் சேவாதாரி தான் இல்லையா. ஆடாதவர்களாக ஆகுங்கள். மேலும் பிறரையும் ஆடாதவர்களாக ஆக்குங்கள். எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்களா. புரோகிராம் (நிகழ்ச்சி) செய்யுங்கள். இது மிகவும் நல்லது. புரோகிராம் (program) என்றால் புராகிரஸ் (progress வளர்ச்சி)!

**குரூப்-3: சகஜ யோகாவின் ஆதாரம் -ஒருவரின் நினைவு!**

எப்பொழுதும் சுலபமான முயற்சி செய்வதற்கான ஆதாரம் என்ன? சுலபமான முயற்சியின் அனுபவம் இருக்கிறதா? என்ன விதியைக் கடைபிடித்தீர்கள் அதனால் சுலபமாகி விட்டது? 'ஒருவரை' நிளவை செய்வது -இது தான் சுலபமான விதி, ஏனென்றால் 'அனேகரை' நினைவு செய்வது கடினமாக இருக்கிறது ஆனால் ஒருவரை நினைவு செய்வதோ சுலபமாக இருக்கிறது. சகஜயோகாவின் அர்த்தமே 'ஒருவரை' நினைவு செய்வது தான். ஒரே ஒரு தந்தை, வேறு யாருமே இல்லை. அந்த மாதிரியாக இருக்கிறதா? அப்படி அல்லது தந்தையின் கூடவே வேறு யாரும் இருக்கிறார்களா? சில நேரம் தேக அபிமானத்தில் வந்து விடுகிறீர்கள். எப்பொழுது 'என்னுடைய உடல்' என்றால் நினைவு வருகிறது, ஆனால் என்னுடையது இல்லவே இல்லை என்றால் நினைவு வருவதில்லை அப்படியானால் உடல், மனம், பொருள் உன்னுடையதா? அல்லது என்னுடையதா? எப்பொழுது என்னுடையதே இல்லை என்றால் என்ன நினைவு வருகிறது? தேக உணர்வில் வருவது என்றால் என்னுடைய உடல் என்றிருக்கிறது ஆனால் இது என்னுடையது இல்லை,

தந்தையினுடையது, சேவைக்காக தந்தை என்னைப் பொறுப்பாளராக்கியிருக்கிறார் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் சேவை எப்படி செய்வீர்கள்? உடலோ தேவையாக இருக்கிறது இல்லையா? ஆனால் என்னுடையது இல்லை. நான் பொறுப்பாளராக இருக்கிறேன். என்னுடையது என்ற உணர்வு இருக்கிறது என்றால் குடும்பஸ்தன் மற்றும் உன்னுடையது என்றால் பொறுப்பாளர். பொறுப்பாளர் என்றால் டபுள் லைட். குடும்பஸ்தனுக்கு என்னுடைய, என்னுடைய என்ற எத்தனை சுமைகள் இருக்கின்றன -என்னுடைய வீடு, என்னுடைய குழந்தைகள், என்னுடைய பேரன்கள்... நீளமான பட்டியல் இருக்கிறது. இவை சுமை. பொறுப்பாளராகி விட்டீர்கள் என்றால் சுமை நீங்கி விடுகிறது. அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? அல்லது மாறிக் கொண்டு இருக்கிறீர்களா? யாருமே இல்லை, ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லையென்றால் என்ன நினைவு வரும்? சுலபமான விதி என்னவாகி விட்டது? 'ஒருவரை' நினைவு செய்வது, 'ஒருவரில்' அனைத்தையும் அனுபவம் செய்ய வேண்டும். எனவே தான் தந்தை தான் உலகம் என்று கூறுகிறீர்கள் இல்லையா? உலகத்தில் அனைத்தும் இருக்கிறது தான் இல்லையா? எப்பொழுது உலகமே தந்தை ஆகி விட்டார் என்றால் 'ஒருவரின்' நினைவு சுலபமாகி விட்டது இல்லையா? கடினமான காரியமோ இல்லையல்லவா. அரைக்கல்பம் கடினமாக உழைத்தீர்கள். தேடுவது, அலைவது -இதைத்தான் செய்தீர்கள் இல்லையா. அப்படி கடினமாக உழைக்க வேண்டியதாக இருந்தது இல்லையா. இப்பொழுது பாப்தாதா கடின உழைப்பிலிருந்து விடுவிக்கிறார். ஒருவேளை எப்பொழுதாவது யாருக்காவது கடினமாக உழைக்க வேண்டியது இருக்கிறது. என்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய பலஹீனம். பலஹீனமானவருக்கு காரியம் கூட கடினமானதாக இருக்கும். மேலும் யார் பலம் பொருந்தியவராக இருப்பாரோ அவருக்கு கடினமான காரியம் கூட சுலபமாக இருக்கும். சுலபமானது தான் ஆனால் பலஹீனம் கடினமானதாக ஆக்கி விடுகிறது. அப்படியானால் தந்தை என்ன விரும்புகிறார்? எப்பொழுதும் சகஜயோகியாகி இருங்கள். எப்பொழுதும் சகஜயோகி என்றால் எப்பொழுதும் குஷியாக இருப்பவர். சகஜயோகி வாழ்க்கை என்றால் பிராமண வாழ்க்கை. நீங்கள் உறுதியான பிராமணர்கள் தான், இல்லையா? அனைவரையும் விட பாக்கியம் நிறைந்த ஆத்மாக்கள் என்ற குஷி இருக்கிறது? உங்களைப் போன்ற குஷி

நிறைந்தவர்கள் உலகத்தில் வேறு யாரும் இருப்பார்களா? எப்பொழுதும் என்ன பாடல் பாடுகிறீர்கள் ஆஹா என்னுடைய உயர்ந்த பாக்கியமே! இந்தப் பாடலை அனைவருக்கும் பாடத் தெரியுமா, ஏனென்றால் மனதால் பாடும் பாடல் தானே. எனவே அனைவரும் பாட முடியும் மற்றும் எப்பொழுதும் பாட முடியும். "ஆஹா என்னுடைய பாக்கியம்! என்று கூறுவதினால் பாக்கியத்தை உருவாக்குபவரின் நினைவு தானாகவே வந்து விடுகிறது. அப்படி பாக்கியம் மற்றும் பாக்கியத்தை உருவாக்குபவர் இதைத்தான் சுலபமான நினைவு என்று கூறப்படுவது. சுலபம் சுலபம் என்று கூறிக் கொண்டே இலக்கைச் சென்று அடைந்து விடுவீர்கள்.

ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தன்னைப் போன்றவர்களை எழுப்பி விட்டீர்கள் என்றால் ஆசீர்வாதங்கள் கிடைக்கும். அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு வழி காண்பிப்பது மிகப் பெரிய புண்ணிய காரியம் ஆகும். ஆந்திராவின் சிறப்பு என்ன? படித்தவர்கள் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். அப்படி சேவையில் முன்னேறும் அளவிற்கு படித்தவர்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள். அந்த மாதிரி யாரையாவது பொறுப்பாளராக ஆக்குங்கள். அவர் அனேகரை எழுப்பி விடட்டும். நல்லது.

**குரூப்-4: பரமாத்ம அன்பைப் பெற விலகியவராக இருங்கள்!** சதா உங்களை ஒரு ஆன்மீக ரோஜாவாகக் கருதுகிறீர்களா? ஆன்மீக ரோஜா என்றால் சதா ஆன்மீக நறுமணம் நிரம்பிய ஆத்மா ஆகும். ஆன்மீக ரோஜாவாக இருக்கும் ஆத்மாவின் வேலை சதா நறுமணத்தைக் கொடுப்பது, நறுமணத்தைப் பரப்புவது. ஒரு ரோஜா பூவில் எந்தளவு நறுமணம் உள்ளதோ அந்தளவு முட்களும் உள்ளன, ஆனால் முட்களின் பிரபாவத்தில் அது வருவதில்லை. ரோஜா பூ ஒருபோதும் முட்களினால் கெட்டுப் போவதில்லை, அது சதா அப்படியே இருக்கிறது. முட்கள் உள்ளன, ஆனால் முட்களிலிருந்து விலகியதாக மேலும் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கிறது. சுயம் விலகியதாக இருப்பதால் பிடித்தமானதாக ஆகிறது. முட்களின் பிரபாவத்தில் வந்தால் அதை யாரும் தொடக்கூட மாட்டார்கள். எனவே, ஒரு ஆன்மீக ரோஜாவின் சிறப்பு என்னவென்றால், எப்பேர்பட்ட முட்கள் ஆயினும் சரி -சிறியதோ, பெரியதோ, லேசோ, கூர்மையோ -ஆனால் சதா விலகியவராகவும், தந்தைக்குப் பிரியமானவராகவும் இருப்பார். அன்பானவராக இருக்க

என்ன செய்ய வேண்டும்? விலகியருப்பதுதான் அன்பானவராக ஆக்குகிறது. ஏதேனும் பிரபாவத்தில் வந்தால், தந்தைக்கும், பிராமண பரிவாரத்திற்கும் பிரியமானவராக இல்லை. ஒருவேளை நீங்கள் உண்மையான அன்பைப் பெற விரும்பினால், அதற்காக விலகியவராக இருங்கள் -எல்லா வித எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்தும், உங்கள் தேகத்திலிருந்தும் விலகி இருங்கள். யாரால் தனது தேகத்திலிருந்தும் விலகி இருக்க முடியுமோ அவரால்தான் அனைத்திலிருந்தும் விலகி இருக்க முடியும். பலர் நினைக்கிறார்கள் நமக்கு வேண்டிய அளவு அன்பு கிடைக்கவில்லை என. ஏன் பெறவில்லை? ஏனென்றால் அந்த அளவு விலகியவராக இல்லை. இல்லையெனில், பரமாத்மாவின் அன்பு மாறாதது, குறையாதது, அனைவரும் பெறக்கூடிய அளவுக்கு உள்ளது ஆனால் பரமாத்மாவின் அன்பை அடைவதற்கான வழி -விலகியவராவது! சரியான வழியைப் பின்பற்றவில்லை எனில் வெற்றியும் கிடைக்காது. காரணம் என்ன? முதலில் விலகியவராக வேண்டும் அப்போது அன்பும் கிடைக்கும். அன்பைப் பெறுவதற்கான அடித்தளம் உறுதியாக இருந்தால், அடைய வேண்டிய இலக்கை அடைய முடியவில்லை என்பது ஒருபோதும் ஆக முடியாது! ஏனெனில் தந்தையின் உத்தரவாதம் உள்ளது. இது உத்தரவாதம் -நீங்கள் ஒரு காரியம் மட்டும் செய்யுங்கள், மற்ற அனைத்தையும் நான் செய்வேன்! ஒரு விஷயம் -என்னை மனதார நினைவு செய்யுங்கள், காரியம் ஆக வேண்டுமே என்பதற்காக அல்ல! ஏதேனும் தடைகள் வந்தால் 4-மணி நேரம் நினைவு செய்வது; தடை விலகிய பின் நினைவையும் முடித்து விடுவது. இதுவோ உங்கள் விருப்பம் நிறைவேற நினைவில் இருப்பதாகிறது. ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்காக நினைப்பது கூடாது ஆனால் நல்லவராகி நினைவு செய்ய வேண்டும். காரியம் நடக்கணும் என்பதற்காக நினைவு செய்யக் கூடாது. தகுதியானவராகி பரமாத்ம அன்பை அனுபவம் செய்ய வேண்டும். ஆன்மீக ரோஜா என்றால் பரமாத்ம அன்பிற்கு தகுதியான ஆத்மா. பரமாத்ம அன்பிற்கு முன் பிற ஆத்மாக்களின் அன்பு எம்மாத்திரம்? ஒன்றுமேயில்லை. நீங்கள் பரமாத்ம அன்பை அனுபவிக்கும்போது இதயத்திலிருந்து என்ன வருகிறது? எந்த பாடலைப் பாடுகிறீர்கள்? அடைய வேண்டியதை அடைந்தே விட்டேன்...மிச்சம் எதுவும் இல்லை! அத்தகைய பிராப்தியை அடைவதற்கு தகுதியான அதிகாரி ஆத்மாவாகுங்கள். தகுதியின் அடையாளம் பிராப்தியை அடைவது. ஒருவேளை எந்த பிராப்தியும் ஆகவில்லை, குறைவாக ஆனது எனில்

தகுதியும் குறைவாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் கொடுப்பவரோ வள்ளல் மற்றும் பொக்கிஷமும் குறையாதது எனில் எப்படி கிடைக்காமல் போய் விடும்? நீங்கள் தகுதியானவராக இருந்தால், அனைத்தும் கிடைக்கும். சதா பாபா என்னுடையவர் என்றால் பிராப்தியும் சதா அடைந்து கொண்டே இருப்பீர்கள். சதா எல்லைக்குட்பட்ட பிரபாவத்திலிருந்து விலகியே இருக்க வேண்டும், ஒருபோதும் பிரபாவத்தில் வரக்கூடாது. பின்னர் மீண்டும் மீண்டும் தகுதி பெற பயிற்சி செய்வது என்பது கடின உழைப்பு செய்ய வேண்டியதாகி விடும். எனவே, எல்லைக்குட்பட்ட பிரபாவத்தில் வராமல், சதா எல்லைக்கப்பாற்பட்ட பிராப்திகளில் மூழ்கி விடுங்கள். சதா சோதிக்கவும் -ஆன்மீக ரோஜா நான் எப்போதும் ஆன்மீக நறுமணத்தில் இருக்கிறேனா, விலகி இருக்கிறேனா, அன்பிற்குத் தகுதியானவனாக இருக்கிறேனா?ஏனெனில் ஆத்மாக்கள் மூலம் 63-பிறவிகள் பிராப்திகளை அடைந்தீர்கள் ஆனால் அதன் விளைவு என்ன? அவற்றை இழந்து விட்டீர்கள் அல்லவா! இப்போது பெறுவதற்கான நேரம் ஆகும். எல்லைக்குட்பட்ட பிராப்தி என்றால் இழப்பது, எல்லைக்கப்பாற்பட்ட பிராப்தி என்றால் சேமிப்பது. நல்லது.

**குரூப்-5: சுயராஜ்யத்தின் திலகம் தான் எதிர்காலத்து இராஜ திலகத்தின் ஆதாரம் ஆகும்!** அனைவரும் உங்களை வெற்றி இரத்தினங்கள் என்று அனுபவம் செய்கிறீர்களா? வெற்றி அடைவது சுலபமாக இருக்கிறதா அல்லது கடினமாக இருக்கிறதா? கடினமாக இருக்கிறதா? அல்லது கடினமாக ஆக்கி விடுகிறீர்களா, என்னவென்று கூறுவது? சுலபம் தான் ஆனால் கடினமாக ஆக்கி விடுகிறீர்கள். எப்பொழுது மாயா பலஹீனமாக ஆக்கி விடுகிறது என்றால் கடினமாகத் தோன்றுகிறது. மேலும் தந்தையின் துணை இருக்கிறது என்றால் சுலபமாகிறது. ஏனென்றால் கடினமான பொருள் இருக்கிறது என்றால் அது எப்பொழுதுமே கடினமானதாகப் படவேண்டும். சில நேரம் சுலபம், சில நேரம் கடினம் அப்படி ஏன்? எப்பொழுதும் வெற்றியின் போதை நினைவில் இருக்கட்டும். ஏனென்றால் வெற்றி பிராமண ஆத்மாக்களாகிய உங்கள் அனைவரின் பிறப்புரிமை! அப்படியானால் பிறப்புரிமையை அடைவது கடினமாக இருக்கிறதா அல்லது சுலபமானதா? எத்தனை தடவை வெற்றி அடைந்தவர்களாக ஆகியிருக்கிறீர்கள். ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்த

ஆத்மாக்களுக்கு மீண்டும் வெற்றி அடைபவராக ஆவது கடினமானதாகவா இருக்கும்? அமிர்தவேளை எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் வெற்றியின் திலகம் அதாவது நினைவின் திலகம் இட்டுக் கொள்ளுங்கள். பக்தி மார்க்கத்தில் திலகம் இடுகிறார்கள் இல்லையா. பக்தியின் அடையாளம் கூட திலகம். மேலும் சுமங்கல்யத்தின் அடையாளம் கூட திலகம் தான். இராஜ்யத்தை அடைவதற்கான அடையாளம் கூட இராஜதிலகம். எப்பொழுதாவது ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் வெற்றி அடைய விரும்புகிறார்கள் என்றால் செல்வதற்கு முன்பு திலகமிட்டு அனுப்புவார்கள். அப்படி உங்களுக்கு இராஜ்யத்தை அடைவதற்கான இராஜ்ய திலகமும் இருக்கிறது. மேலும் எப்பொழுதும் உயர்ந்த காரியம் மற்றும் வெற்றி இருக்கிறது. அதனால் கூட எப்பொழுதும் திலகம் இருக்கிறது. எப்பொழுதும் தந்தையின் துணையின் சுமங்கல்யம் இருக்கிறது. அதனால் கூட திலகம் இருக்கிறது. அப்படி அழியாத தலகம் இருக்கிறது. எப்பொழுதாவது அழிந்து விடவில்லையே? அழியாத தந்தை கிடைத்திருக்கிறார் என்றால் திலகமும் அழியாததாக கிடைத்து விட்டது. இப்பொழுது சுயராஜ்யத்தின் திலகம் இருக்கிறது மேலும் எதிர்காலத்தில் உலக இராஜ்யத்தின் திலகம் இருக்கிறது என்று கூறினோம் இல்லையா? சுயராஜ்யம் கிடைத்திருக்கிறதா? அல்லது கிடைக்க வேண்டுமா? எப்பொழுதாவது இறந்தும் விடுகிறீர்களா? நாங்கள் ஒவ்வொரு கல்பத்தின் அதிகாரிகளே தான் என்று எப்பொழுதும் நம்பிக்கையுடன் கூறுங்கள். இந்த நேரம் சுயராஜ்ய அதிகாரி மேலும் எதிர்காலத்தில் உலக இராஜ்ய அதிகாரி மேலும் துவாபர், கலியுகத்தில் பூஜைக்குரிய அதிகாரி ஆவீர்கள். எனவே பூஜைக்குரிய அதிகாரி ஆவீர்கள். உங்கள் அனைவருக்கும் பூஜை நடக்கும். உங்களுடைய கோவிலைப் பார்த்திருக்கிறீர்களா? இரட்டை வெளிநாட்டினருக்கு கோவில் இருக்கிறதா? தில்வாலா கோவிலில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்களா? ஏனென்றால் யார் பிராமணன் ஆகிறாரோ அந்த பிராமணன் தேவதை ஆவார். மேலும் தேவதைகளுக்கு பூஜை நடக்கும். ஒருவேளை பக்கா (உறுதியான) பிராமணன் என்றால் பக்கா பூஜைக்குரியவராக ஆவார். கச்சா (பல ஹீனமான) பிராமணன் என்றால் ஒருவேளை பூஜை நடக்கலாம். இரட்டை வெளிநாட்டினர் அனைவரும் உறுதியானவர்களா? உறுதியானவர்களாக இருந்தீர்கள், உறுதியானவர்களாக இருக்கிறீர்கள் மேலும் உறுதியானவர்களாக இருப்பீர்கள் -அந்த மாதிரி தான் இல்லையா? நல்லது. அனைவரும்

உறுதியானவர்களா? அனுபவி ஆகி விட்டீர்கள் இல்லையா? அனுபவி ஒருபொழுதும் ஏமாற்றப்பட மாட்டார். பார்ப்பவர்கள், கேட்பவர்கள் ஏமாற்றப்பட முடியும் ஆனால் அனுபவத்தின் அதிகாரம் உள்ளவர்கள் ஏமாற்றப்பட முடியாது. ஒவ்வொரு அடியிலும் புதுப்புது அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். தினந்தோறும் புதிய அனுபவம், ஊக்கம் உற்சாகம் உள்ளவர்கள் தான் இல்லையா? ஊக்கம் உற்சாகம் -இது தான் பறக்கும் கலைக்கான இறக்கைகள். எப்பொழுதாவது ஊக்கம் உற்சாகம் குறைந்து விட்டது என்றால் இறக்கை பலஹீனமாகி விட்டது. நல்லது. இதுவரை வேறு யாருமே செய்யாததை செய்து காண்பியுங்கள், அப்பொழுது புதுமை என்று கூறுவோம். சென்டர் திறப்பது, நிகழ்ச்சிகள் நடத்துவது இவைகளையோ அனைவரும் செய்கிறார்கள். எப்படி தந்தைக்கு அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு இருப்பிடம் கொடுக்க வேண்டும் என்று இரக்கம் வருகிறதோ அதே போல் குழந்தைகளின் மனதிலும் இந்த இரக்கம் வர வேண்டும். எனவே இப்பொழுது அனேக ஆத்மாக்களுக்குச் செய்திகள் கிடைக்குமளவு ஏதாவது ஒரு புது சாதனம் கண்டுபிடியுங்கள்.

**வரதானம்: துணைவனின் துணை மூலமாக எப்பொழுதும் மனமகிழ்ச்சியை அனுபவம் செய்யக்கூடிய சேர்ந்திருக்கும் ரூபம் உடையவர்கள் ஆகுக!**

எப்பொழுதெல்லாம் தனிமை அனுபவம் ஆகிறதென்றால் அந்த நேரம் புள்ளி ரூபத்தை நினைவு செய்யாதீர்கள். அது கடினமாக இருக்கும், அதன் மூலமாக போராகி (ஆர்வமற்ற நிலை) விடுவீர்கள். அந்த நேரம் தன்னுடைய சுவாரஸ்யமான அனுபவங்களின் கதைகளை நினைவில் கொண்டு வாருங்கள், தன்னுடைய சுவமானத்தின், பிராப்திகளின் பட்டியலை முன்னுக்குக் கொண்டு வாருங்கள். புத்தியால் மட்டும் நினைவு செய்யாதீர்கள் ஆனால் இதயப்பூர்வமாக துணைவனுடன் சேர்ந்திருந்து அனைத்து உறவுகளின் அன்பின் இரசனையை அனுபவம் செய்யுங்கள். இது தான் மன்மனாபவ மற்றும் இந்த மன்மனாபவவாக ஆவது தான் மன மகிழ்ச்சியாக இருப்பது.

**சுலோகன்: தந்தையின் ஸ்ரீமத்படி வந்தேன் அய்யா என்று செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அனைத்து சக்திகளின் அதிகாரம் கிடைத்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து பொக்கிஷங்களிலும் முழுமையானவர் ஆகுங்கள் -ஆசீர்வாதங்களைப் கொடுங்கள், ஆசீர்வாதங்கள் பெறுங்கள்!

அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி இன்று தனது முழுமையான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் அனேக விதமான அழியாத குறைவில்லாத பொக்கிஷங்கள் கிடைத்திருக்கின்றன. மேலும் அனைத்து பொக்கிஷங்களும் அந்த மாதிரியானவை அவை இப்பொழுதும் இருக்கின்றன. மேலும் வருங்காலத்திலும் அனேக ஜென்மங்கள் பொக்கிஷங்கள் கூடவே இருக்கும். பொக்கிஷங்கள் எவை மற்றும் எவ்வளவு கிடைத்திருக்கின்றது என்று தெரிந்திருக்கிறீர்களா? பொக்கிஷங்களின் மூலமாக எப்பொழுதும் பிராப்தி கிடைக்கிறது. பொக்கிஷங்களினால் முழுமையான ஆத்மா எப்பொழுதும் நிரம்பிய போதையில் இருக்கிறார். முழுமையின் ஜொலிப்பு அவருடைய முகத்தில் பிரகாசிக்கிறது. மேலும் ஒவ்வொரு காரியத்திலும் முழுமையின் ஜொலிப்பு இயல்பாகவே தென்படுகிறது. இந்த நேரத்து மனித ஆத்மாக்களுக்கு அழியும் பொக்கிஷங்களின் பிராப்தி இருக்கிறது. எனவே கொஞ்ச காலம் போதை இருக்கிறது. எப்பொழுதும் இருப்பதில்லை. எனவே காலியாகி போக வேண்டும் என்று உலகில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். நிரம்பிப் போக வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். உங்கள் அனைவருக்கும் பாப்தாதா அனேக பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கிறார்.

மிகவும் உயர்ந்த முதல் பொக்கிஷம், ஞான இரத்தினங்களின் பொக்கிஷம். அனைவருக்கும் இந்த பொக்கிஷம் கிடைத்திருக்கிறது இல்லையா? யாராவது வஞ்சிக்கப்பட்டு இருந்து விடவில்லையே. இந்த

ஞான இரத்தினங்களின் பொக்கிஷங்களினால் விசேஷமாக என்ன பிராப்தி செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஞான பொக்கிஷத்தின் மூலமாக இந்த நேரம் கூட முக்தி, ஜீவன்முக்தியின் அனுபவத்தை செய்து கொண்டிருக்கிறீர்கள். முக்தி தாமத்திற்கு போவீர்கள் மற்றும் ஜீவன்முக்தியில் தேவதைப் பதவியை அடைவீர்கள். இதுவோ வருங்காலத்து விஷயமாகி விட்டது ஆனால் இப்பொழுது கூட முக்தியான வாழ்க்கையின் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எத்தனை விஷயங்களிலிருந்து முக்தியாகி இருக்கிறீர்கள் என்று தெரியுமா? என்னென்ன துக்கம் மற்றும் அமைதியின்மைக்கான காரணங்கள் இருந்தனவோ அவைகளிலிருந்து முக்தியாகி இருக்கிறீர்கள். அப்படியின்றி இனிமேல் தான் முக்தி ஆக வேண்டுமா? இப்பொழுது ஏதாவது விகாரம் வரவில்லையே? முக்தியாகி விட்டீர்கள். ஒருவேளை வருகிறது என்றாலும் கூட வெற்றியடைபவர்கள் ஆகி விடுகிறீர்கள் இல்லையா. அப்படி எத்தனை விஷயங்களிலிருந்து முக்தியாகி இருக்கிறீர்கள். லௌகீக வாழ்க்கை மற்றும் ஆன்மீக வாழ்க்கை இரண்டையும் ஒன்றாக வைத்தீர்கள் என்றால் எவ்வளவு வித்தியாசம் தென்படுகிறது. அப்படி இப்பொழுது முக்தியையும் அடைந்திருக்கிறீர்கள் மேலும் ஜீவன் முக்தியையும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அனேக வீணான மற்றும் தீய எண்ணங்கள், பாவங்களிலிருந்து முக்தி ஆவது தான் ஜீவன்முக்தி நிலை ஆகும். எத்தனை பந்தனங்களிலிருந்து விடுபட்டிருக்கிறீர்கள்? எத்தளை பந்தனங்களின் சங்கிலிகள் மனித ஆத்மாக்களைக் கட்டிப் போட்டிருக்கின்றன என்று படத்தில் காண்பிக்கிறீர்கள் இல்லையா? இது யாருடைய படம்? அது நீங்கள் இல்லை அல்லவா? நீங்களோ முக்தியாகி விட்டீர்கள் இல்லையா? அப்படி வாழ்க்கையில் இருந்து கொண்டே ஜீவன்முக்தி ஆகி விட்டீர்கள். அப்படி ஞான பொக்கிஷத்தின் மூலமாக முக்கியமாக முக்தி ஜீவன் முக்தியின் பிராப்தியின் அனுபவம் செய்து.கொண்டிருக்கிறீர்கள்.

இரண்டாவது, நினைவு அதாவது யோகா மூலமாக அனைத்து சக்திகளின் பொக்கிஷத்தை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எத்தனை சக்திகள் இருக்கின்றன? அதிகமாக இருக்கின்றன இல்லையா. எட்டு சக்திகளை ஒரு உதாரணமாகத் தான் காண்பித்திருக்கிறீர்கள் ஆனால் அனைத்து சக்திகளின் பொக்கிஷங்களின் அதிபதி ஆகி விட்டீர்கள்.

மூன்றாவது, தாரணை என்ற பாடத்தின் மூலமாக எந்தப் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது? அனைத்து தெய்வீக குணங்களின் பொக்கிஷம். குணங்கள் எத்தனை இருக்கின்றன? அதிகம் இருக்கின்றன இல்லையா? அப்படி அனைத்து குணங்களின் பொக்கிஷம். ஒவ்வொரு குணத்தின் ஒவ்வொரு சக்தியின் விசேஷத்தன்மை எவ்வளவு பெரியது. ஒவ்வொரு ஞான இரத்தினத்தின் மகிமை எவ்வளவு பெரியது.

நான்காவது, சேவை மூலமாக எப்பொழுதும் குஷியின் பொக்கிஷத்தை அனுபவம் செய்கிறீர்கள். சேவை என்ன செய்கிறீர்களோ அதன் மூலமாக விசேஷமாக என்ன அனுபவம் ஆகிறது? குஷி ஏற்படுகிறது இல்லையா. அப்படி அனைத்தையும் விட மிகப் பெரிய பொக்கிஷம் அழியாத குஷி ஆகும். அப்படி குஷியின் பொக்கிஷம் சுலபமாக தானாக பிராப்தி ஆகிறது.

ஐந்தாவது, உறவு நெருக்கத்தின் மூலமாக பிராமண குடும்பத்தின் நெருக்கத்தில் வருகிறீர்கள். சேவையின் சம்மந்தத்திலும் வருகிறீர்கள். அப்படி உறவு நெருக்கம் மூலமாக எந்த பொக்கிஷம் கிடைக்கிறது? அனைவரின் ஆசீர்வாதங்கள் என்ற பொக்கிஷம் கிடைக்கிறது. இந்த ஆசீர்வாதங்களின் பொக்கிஷம் மிகப் பெரிய பொக்கிஷம் ஆகும். யார் அனைவரின் ஆசீர்வாதங்களின் பொக்கிஷங்களினால் நிரம்பி மற்றும் முழுமையாக இருக்கிறாரோ அவருக்கு ஒருபொழுதும் முயற்சி செய்வதில் கடுமையாக உழைக்க வேண்டியது இருக்காது. முதலில் தாய் தந்தையின் ஆசீர்வாதங்கள் மேலும் கூடவே அனைவரின் சம்மந்தத்தில் வருவதினால் அனைவர் மூலமக ஆசீர்வாதங்கள். மிகப் பெரியதிலும் பெரிய மிக வேகமாக முன்னேறி மேலே செல்வதற்கான துரித இயந்திரம் ஆசீர்வாதங்கள். எப்படி அறிவியலில் மிக வேகமாக செல்வதாக ராக்கெட் இருக்கிறது ஆனால் ஆசிர்வாதங்களின் ராக்கெட் அதையும் விட உயர்ந்தது. தடை கொஞ்சம் கூட தொடாது. தடையால் பாதிக்கப்படாதவர்கள் ஆகி விடுகிறார்கள். யுத்தம் செய்ய வேண்டியது இல்லை எளிதாக ஒவ்வொரு எண்ணம், சொல், செயல் இயல்பாகவே யோகயுக்த், யுக்தியுக்த் ஆகி விடுகிறது. அந்த மாதிரியானது இந்த ஆசீர்வாதங்களின் பொக்கிஷம். மிகப் பெரிய பொக்கிஷம் இந்த சங்கமயுக நேரத்தின் பொக்கிஷமாகும்.

அப்படி பொக்கிஷங்களோ அதிகம் இருக்கின்றன ஆனால் என்ன பொக்கிஷங்களை கூறினோமோ இந்த பொக்கிஷங்களை மட்டும் கூட தன்னுள் நிரப்புவதற்கான சக்தியை தாரணை செய்து விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் முழுமையான காரணத்தினால் கொஞ்சம் கூட தளும்ப மாட்டீர்கள். குறைவாக இருக்கும்பொழுது தான் தளும்பும். நிரம்பிய ஆத்மா ஒருபொழுதும் ஆடாது. அப்படி இந்த அனைத்து பொக்கிஷங்களையும் தன்னுள் நிரப்பி இருக்கிறேனா? என்று சோதனை செய்யுங்கள். இந்த அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பியிருக்கிறீர்களா? அல்லது சிலவற்றில் நிரம்பியிருக்கிறீர்கள் சிலவற்றில் இன்னும் கொஞ்சம் நிரம்ப வேண்டியதாக இருக்கிறது. பொக்கிஷங்கள் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது இல்லையா. ஒருவர் மூலமாக ஒரே மாதிரியா பொக்கிஷங்கள் அனைவருக்கும் கிடைத்திருக்கின்றன. தனித்தனியாகவோ பகிர்ந்து கொடுக்கவில்லை தானே. ஒருவருக்கு இலட்சம், இன்னொருவருக்கு கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அப்படி இல்லை அல்லவா? ஆனால் ஒருவர் எடுக்க மட்டும் செய்பவர், என்ன கிடைக்கிறதோ அதை எடுக்கவும் செய்கிறார் ஆனால் கிடைத்ததை சாப்பிட்டு, மகிழச்சியாக இருந்து அழித்து விட்டார். இரண்டாமவர் கிடைத்த பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறார். சாப்பிட்டு மகிழச்சியாக இருந்து கூடவே சேமிக்கவும் செய்கிறார். மூன்றாமவர், சேமிக்கவும் செய்கிறார் சாப்பிட்டு மகிழ்ச்சியாகவும் இருந்தார் ஆனால் கிடைத்த பொக்கிஷங்களை இன்னும் அதிகரித்தார். தந்தையின் பொக்கிஷங்களைத் தன்னுடைய பொக்கிஷமாக்கி அதிகரித்துக் கொண்டேயிருக்கிறார். அப்படி நான் யார்? முதல் நம்பரில் இருப்பவனா, இரண்டாவதா? அல்லது மூன்றாவதா? என பார்க்க வேண்டும்.

எந்தளவு பொக்கிஷத்தை தன்னுடைய காரியத்தில் அல்லது மற்றவரின் காரியத்தில் உபயோகிக்கிறீர்களோ அந்தளவு பொக்கிஷம் அதிகரிக்கும். பொக்கிஷத்தை அதிகரிக்கும் சாவி உபயோகிப்பது ஆகும். முதலில் தனக்காக எப்படி ஞானத்தின் ஒவ்வொரு இரத்தினத்தை தேவையான நேரத்தில் ஒருவேளை தனக்காக உபயோகிக்கின்றீர்கள் என்றால் பொக்கிஷத்தை உபயோகிப்பதனால் அனுபவி ஆகி விடுகிறீர்கள். பொக்கிஷத்தின் பிராப்தி வாழ்க்கை அனுபவத்தில் அதிகாரம் ஆகி விடுகிறது. அப்படி அதிகாரத்தின் பொக்கிஷம் சேர்ந்து விடுகிறது.

அப்படியானால் அதிகரித்து விட்டது இல்லையா. கேட்பது மட்டும் என்பது வேறு விஷயம். கேட்பது என்றால் எடுப்பதில்லை என்றாகும். உள்ளடக்குவது மற்றும் தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவதுதான் எடுப்பதாகும். கேட்பவர்கள் என்ன செய்கிறார்கள் மேலும் உள்ளடக்குபவர்கள் என்ன செய்கிறார்கள். இருவருக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

பாப்தாதா கேட்பவர்களின் காட்சியைப் பார்க்கிறார் என்றால் சிரித்துக் கொள்கிறார். தேவையான நேரத்தில் சூழ்நிலைக்கேற்றபடி மற்றும் தடைக்கு ஏற்றாற்போல், பிரச்சனைக்கு ஏற்றாற்போல், பாப்தாதா இந்த தடையைக் கடப்பதற்காக இந்த இந்த பாயின்ட்டுகள் (ஞான விஷயங்கள்) கொடுத்திருக்கிறார் என்று அந்த ஞான கருத்துக்களை நினைவு செய்கிறார்கள். இந்த மாதிரி செய்ய வேண்டும். அந்த மாதிரி செய்யக்கூடாது என்று மீண்டும் மீண்டும் நினைவு செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஒரு பக்கம் ஞான கருத்துக்களை நினைவிற்கு கொண்டு வருகிறார்கள், இன்னொரு பக்கம் (பலஹீனத்தின்) வசமாகியும் விடுகிறார்கள். இந்த மாதிரி செய்யக்கூடாது, இது ஞானம் இல்லை. இது தெய்வீக குணம் இல்லை. உள்ளடக்கும் சக்தியை தாரணை செய்ய வேண்டும். யாருக்கும் துக்கம் கொடுக்க வேண்டாம் என்றும் கூறுகிறார்கள் ஆனால் (தவறுகளை) ரிபீட், மீண்டும் மீண்டும் செய்து கொண்டேயிருக்கிறார்கள். அதனால் தோல்வியும் அடைந்து கொண்டேயிருக்கிறார்கள். ஒருவேளை இது சரியா? என்று அவர்களிடம் அந்த நேரம் கேட்டீர்கள் என்றால் சரியில்லை ஆனால் அப்படி ஆகி விடுகிறது என்று (பலஹீனமாக) பதில் சொல்வார்கள். கூறவும் செய்கிறார்கள். மறக்கவும் செய்கிறார்கள். அப்படியானால் அவர்களை என்னவென்று கூறுவது? கேட்பவர்கள் என்று கூறலாம். கேட்பது மிகவும் பிடித்திருக்கிறது. பாயின்ட்கள் மிகவும் சக்திசாலியானவை ஆனால் உபயோகிக்கும் நேரத்தில் ஒருவேளை சக்திசாலியான பாயின்ட் வெற்றியடையச் செய்யவில்லை மற்றும் பாதி வெற்றியடையச் செய்கிறது என்றால் அதை என்னவென்று கூறுவது. கேட்பவர் மட்டுமே என்று கூறுவோம் இல்லையா?

உள்ளடக்குபவர்கள் ஏதாவது ஒரு சூழ்நிலை அல்லது பிரச்சனை எதிரில் வருகிறது என்றால் திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து சுயஸ்திதி

மூலமாக மற்ற ஸ்திதிகளை ஒன்றுமே இல்லாதது போல கடந்து விடுகிறார்கள். இதைத்தான் உள்ளடக்குவது அதாவது தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவது, நேரத்திற்குத் தகுந்தாற் போல் ஒவ்வொரு சக்தியையும், ஒவ்வொரு பாயின்டையும், ஒவ்வொரு குணத்தையும் கட்டளைப்படி நடத்துவது என்று கூறப்படுகிறது. ஏதாவது ஸ்தூல பொக்கிஷம் இருக்கிறதென்றால் அந்த பொக்கிஷத்தை சுயம் பொக்கிஷமே உபயோகிப்பதில்லை. ஆனால் பொக்கிஷத்தை உபயோகிப்பவர்கள் மனித ஆத்மாக்கள். அவர்கள் எப்பொழுது விரும்பினாலும் எவ்வளவு விரும்பினாலும், எப்படி விரும்பினாலும் அப்படி உபயோகிக்க முடியும். அந்த மாதிரி என்னென்ன அனைத்து பொக்கிஷங்களும் கூறினோமில்லையா, அவற்றின் அதிபதி யார்? நீங்களா அல்லது வேறு யாருமா? அதிபதி நீங்கள்தான் இல்லையா? அதிபதியின் வேலை என்னவாக இருக்கிறது? பொக்கிஷம் அவரை நடத்துமா அல்லது அவர் பொக்கிஷத்தை நடத்துவாரா? அப்படி ஒவ்வொரு பொக்கிஷத்தின் அதிபதி ஆகி தேவையான நேரத்தில் ஞானி அதாவது எல்லாம் தெரிந்தவர். அறிவு நிறைந்தவர். திரிகாலதரிசி ஆகி பொக்கிஷத்தை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நேரம் வரும்பொழுது சகித்துக்கொள்ளும் சக்திக்கு ஆணையிடுகிறீர்கள். மேலும் காரியம் முடிந்த பின்பு சகித்துக் கொள்ளும் சக்தி வருகிறது என்று இப்படிடி இருக்க வேண்டாம். உள்ளடக்கும் சக்தி எந்த நேரம் எந்த விதியோடு தேவையாக இருக்கிறதோ அந்த நேரம் தன்னுடைய காரியத்தைச் செய்யட்டும். உள்ளடக்கத்தான் செய்தேன். கொஞ்சம் கொஞ்சம் வாயிலிருந்து வந்து விட்டது, அரை மணி நேரம் உள்ளடக்கினேன். ஒரு விநாடி உள்ளடக்குவதற்குப் பதிலாக சொல்லி விட்டேன் என்று அப்படி இருக்க வேண்டாம். அப்படியானால் இதை என்னவென்று கூறுவது. பொக்கிஷத்தின் அதிபதியா? அல்லது அடிமையா? அனைத்து சக்திகளும் தந்தையின் அதிகாரத்தின் பொக்கிஷம். ஆஸ்தி பிறப்புரிமையாகும். அப்படி பிறப்புரிமைக்கு எவ்வளவு போதை இருக்கிறது. சிறிய இராஜகுமாராக இருப்பார், என்ன பொக்கிஷம் இருக்கிறது என்பது கூட தெரியாமல் இருப்பார் ஆனால் சிறிதளவே நினைவில் வரும்பொழுது நான் இராஜாவின் குழந்தை என்று எவ்வளவு போதை இருக்கிறது. இது அதிகாரத்தன்மையின் போதை அல்லவா? எனவே பொக்கிஷங்களைக் காரியத்தில் குறைவாக ஈடுபடுத்துகிறீர்கள். நிறைந்திருக்கிறேன், அனைத்தும் கிடைத்திருக்கிறது என்று குஷியோடு இருக்கிறீர்களா?

ஆனால் காரியத்தில் ஈடுபடுத்துவது அதன் மூலம் தனக்கும் பிராப்தி செய்விப்பது மேலும் மற்றவர்களுக்கும் பிராப்தி செய்விப்பது என்பதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறார்கள். இல்லையென்றால் வரிசைக்கிரமம் ஏன் உருவானது? கொடுப்பவரும் ஒருவர். அனைவருக்கும் ஒரே மாதிரி தான் கொடுக்கிறார். பின்பு வரிசைக்கிரமம் ஏன்? பொக்கிஷங்களோ அதிகம் கிடைத்திருக்கின்றன. அனைவரும் நிறைந்தும் இருக்கிறார்கள் ஆனால் நிறைவின் இலாபத்தை எடுப்பதில்லை. எப்படி வெளியுலகத்தில் கூட அனேகருக்கு செல்வம் மூலமாக ஆனந்தம் அல்லது இலாபம் பிராப்தி செய்வதற்கான வழி தெரிந்திருக்கிறது மேலும் அனேகரிடம் செல்வம் அதிமாகவும் இருக்கும் ஆனால் உபயோகிக்கும் வழி தெரியாமல் இருக்கும், எனவே இருந்தும் இல்லாதது போல் தான். நீங்கள் என்ன கவனம் வைக்க வேண்டும்? கேட்பவராக மட்டும் ஆகாதீர்கள். உபயோகிக்கும் விதி மூலமாக இப்பொழுது ஸித்தியை (வெற்றி) பிராப்தி செய்யுங்கள். மேலும்) அனேக ஜௌமங்களுக்கு சத்கதியை அடையுங்கள்.

திவ்ய குணமும் தந்தையின் ஆஸ்தி ஆகும். அப்படி கிடைத்த ஆஸ்தியை காரியத்தி ஈடுபடுத்துவதில் என்ன கடினம் இருக்கிறது. கட்டளையிடுங்கள். கட்டளையிடத்தெரியாதா? எஜமானனுக்குத்தான் கட்டளையிடத் தெரியும். பலஹீனமானவருக்கு கட்டளையிடத் தெரியாது. சொல்லட்டுமா? அல்லது வேண்டாமா? உதவி கிடைக்குமா? அல்லது கிடைக்காதா? என்று யோசிப்பார். தன்னுடைய பொக்கிஷம்தான் இல்லையா. தந்தையின் பொக்கிஷம் தன்னுடைய பொக்கிஷம். அல்லது தந்தையினுடையது மேலும் என்னுடையது இல்லை அப்படியா? தந்தை எதற்காகக் கொடுத்திருக்கிறார்? தன்னுடையதாக ஆக்குவதற்காகக் கொடுத்திருக்கிறாரா? அல்லது பார்த்து மட்டும் குஷியடைவதற்காகக் கொடுத்திருக்கிறாரா? காரியத்தில் ஈடுபடுத்துவதற்காகப் கிடைத்திருக்கிறது. அனைத்துப் பொக்கிஷங்களையும் சேமிக்கும் விதியில் குறை இருக்கிறது என்று ரிஸல்ட்டில் (முடிவு) பார்க்க முடிந்தது. ஞானத்தின் அர்த்தம் கூட பாயின்ட்டை ரிபீட் செய்வது அல்லது புத்தியில் வைப்பது என்பது அல்ல, ஞானம் என்றால் அறிவு, திரிகாலதரிசி ஆவதற்கான அறிவு. சத்தியம் மற்றும் அசத்தியத்தின் அறிவு, நேரத்திற்கேற்றபடி காரியம் செய்வதற்கான அறிவு. இதைத்தான் ஞானம் என்று கூறப்படுகிறது.

ஒருவேளை யாராவது இவ்வளவு அறிவாளியாக இருந்தும் கூட நேரம் வரும்பொழுது அறிவில்லாத காரியம் செய்தாரென்றால் அவரை ஞானி என்று கூற முடியுமா? மேலும் புத்திசாலி ஒருவேளை முட்டாள் ஆகி விடுகிறார் என்றால் அவரை என்ன கூறுவார்கள்? முட்டாளை ஒன்றுமே கூறப்படுவதில்லை ஆனால் புத்திசாலியை அனைவரும் இவர் புத்திசாலி என்று சைகை காண்பிப்பார்கள். எளவே ஞானப் பொக்கிஷத்தை தாரணை செய்வது, சேமிப்பது என்றால் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு செயலிலும் அறிவோடு நடந்து கொள்வது புரிந்ததா? நீங்கள் மகான் புத்திசாலிகள் தான் இல்லையா? ஞான சொரூப ஆத்மாவா? அல்லது ஞானம் கேட்கும் ஆத்மாவா? அந்த மாதிரி ஞான சொரூப ஆத்மாவாக நடைமுறை காரியத்தில் பேச்சில் எதுவரை ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள். என்ன ஆவீர்கள் என்று அனைவரையும் கையை உயர்த்தச் சொன்னால், நான் லட்சுமி நாராயணள் ஆவேன் அனைவரும் கூறுவார்கள். நான் இராம் சீதை ஆவேன் என்று யாரும் கூற மாட்டார்கள். ஆனால் யாராவது ஆவார்கள் தான் இல்லையா? நான் உலக மகாராஜா ஆவேன் என்று அனைவரும் கூறுவார்கள். நல்லது தான். அப்படி இலட்சியம் உயர்ந்ததாகத் தான் வைக்க வேண்டும் ஆனால் இலட்சியத்தில் மட்டும் இல்லாமல், இலட்சியம் மற்றும் இலட்சணம் இரண்டும் இருக்கட்டும். இலட்சியம் இருக்கிறது உலக மகாராஜா ஆவதற்கு, மேலும் நடைமுறையில் குணம் அல்லது ஒரு சக்தி கூட கட்டளையை ஏற்கவில்லை என்றால் அவர் உலக மகராஜா எப்படி ஆவார். தன்னுடைய பொக்கிஷமே தன்னுடைய காரியத்திற்கு உதவவில்லை என்று உலக பொக்கிஷத்தை எப்படி பாதுகாப்பார்? எனவே அனைத்து பொக்கிஷங்களினால் ஆகுங்கள். மேலும் இந்த நேரம் விசேஷமாக அனைவரிடமிருந்தும் பாப்தாதாவிடமிருந்தும் ஒவ்வொரு நேரமும் ஆசீர்வாதங்களை எடுப்பதற்கான சுலபமான முயற்சி செய்யுங்கள்.

ஆசிவாதங்கள் யாருக்கு கிடைக்கிறது. யார் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்திப்படுத்துகிறாரோ. எங்கு திருப்தி இருக்கிறதோ அங்கு ஆசீர்வாதங்கள் இருக்கும். வேறு தெரியவில்லை என்றால் ஒன்றும் பாதகமில்லை. சொற்பொழிவு ஆற்றத் தெரியாது. இது விஷயமே இல்லை. அனைத்து குணங்களையும் தாரணை செய்வதில், அனைத்து

சக்திகளையும் கட்டுப்பாட்டில் வைப்பதில் கடினம் இருக்கிறது என்றால் அதையும் விட்டு விடுங்கள். அனைவருக்கும் ஆசீர்வாதங்களை கொடுக்க வேண்டும் மற்றும் ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும் என்ற ஒரு விஷயத்தை தாரணை செய்யுங்கள். இதில் கடின உழைப்பு எதுவும் செய்ய வேண்டியதில்லை. செய்து பாருங்கள். ஒரு நாள் அமிர்தவேளையிலிருந்து இரவு வரை ஆசீர்வாதங்கள் கொடுக்க வேண்டும். ஆசீர்வாதங்கள் பெற வேண்டும் என்ற இந்த காரியத்தை செய்யுங்கள். மேலும் இரவில் அன்று சுலபமான முயற்சியாக இருந்ததா? அல்லது கடின உழைப்பு இருந்ததா? என்று சோதனை செய்யுங்கள். வேறு எதுவுமே செய்ய வேண்டாம் ஆனால் ஆசீர்வாதங்கள் கொடுங்கள் மற்றும் ஆசீர்வாதங்களைப் பெறுங்கள். இதில் அனைத்தும் வந்து விடும். தெய்வீக குணங்கள், சக்திகள் தானாக வந்து விடும். யாராவது உங்களுக்குத் துக்கம் கொடுத்தால் கூட நீங்கள் ஆசீர்வாதங்கள் கொடுக்க வேண்டும். எனவே சகித்துக் கொள்ளும் சக்தி, உள்ளடக்கும் சக்தி இருக்கும் இல்லையா? சகிப்புத்தன்மை என்ற குணம் இருக்குமில்லையா?

ஆசிர்வாதங்கள் கொடுப்பது மற்றும் ஆசீர்வாதங்கள் பெறுவது இது விதையாகும். இதில் மரம் தானாகவே அடங்கியிருக்கிறது. இதற்கான விதி இரண்டு வார்த்தைகள் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று அறிவுரை மற்றும் இன்னொன்று மன்னிப்பது, இரக்கப்படுவது. அறிவுரை கூறுவதற்கு மிகவும் முயற்சி செய்கிறீர்கள், மன்னிக்கத் தெரிவதில்லை. மன்னிக்க வேண்டும். மன்னிப்பதே அறிவுரை கூறுவதாகி விடும். அறிவுரை கூறுகிறீர்கள் என்றால் மன்னிப்பதை மறந்து விடுகிறீர்கள் ஆனால் மன்னித்தீர்கள் என்றால் அறிவுரை இயல்பாகவே வந்து விடும். ஆசிரியர் ஆவது மிக சுலபம். ஏழு நாள் பாடத்திற்குப் பிறகு ஆசிரியர் ஆகி விடுகிறார்கள். எனவே மன்னிக்க வேண்டும். இரக்க மனம் உடையவராக வேண்டும். ஆசிரியராக மட்டும் ஆகக்கூடாது. மன்னிப்போம், இப்பொழுதிருந்தே இந்த சம்ஸ்காரத்தை தாரணை செய்யுங்கள் அப்பொழுதுதான் ஆசீர்வாதங்கள் கொடுக்க முடியும். மேலும் இப்பொழுதிருந்தே ஆசிர்வாதங்கள் கொடுப்பதின் ஸம்ஸ்காரத்தை உறுதியாக்கினீர்கள் என்றால் தான் உங்களுடைய ஜடச்சிலைகள் மூலமாக ஆசீர்வாதங்கள் பெற்றுக் கொண்டேயிருப்பார்கள். மேலும் சிலைகளின் எதிரில் போய் என்ன கூறுகிறார்கள்? ஆசீர்வாதங்கள்

கொடுங்கள். இரக்கம் காட்டுங்கள்.... எப்பொழுது உங்களுடைய ஜடச்சிலைகள் மூலமாக ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது என்றால் சைத்தன்யத்தில் ஆத்மாக்களிடமிருந்து எவ்வளவு ஆசீர்வாதங்கள் கிடைக்கும். ஆசீர்வாதங்களின் குறைவில்லா பொக்கிஷம் பாப்தாதாவிடமிருந்து ஒவ்வொரு அடியிலும் கிடைத்துக் கொண்டிருக்கிறது, எடுப்பவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். நீங்கள் பாருங்கள். ஒருவேளை ஸ்ரீமத்படி ஏதாவது அடி எடுத்து வைக்கிறீர்கள் என்றால் என்ன அனுபவம் ஆகிறது? தந்தையின் ஆசீர்வாதம் கிடைக்கிறது இல்லையா? ஒருவேளை ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடக்கிறீர்கள் என்றால் ஒவ்வொரு அடியிலும் எத்தனை ஆசீர்வாதங்கள் கிடைக்கும். ஆசீர்வாதங்களின் பொக்கிஷம் எவ்வளவு நிரம்பி விடும்.

யாராவது என்னதான் கொடுத்தாலும் ஆனால் நீங்கள் அவருக்கு ஆசீர்வாதங்கள் கொடுங்கள். யராவது கோபப்பட்டாலும் கூட அதிலேயும் ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. கோபத்தில் ஆசீர்வாதங்கள் இருக்கின்றனவா? அல்லது சண்டை இருக்கின்றதா? யார் எவ்வளவு தான் கோபப்பட்டாலும், அவர் நானோ பிற வசமாகி இருக்கிறேன் ஆனால் நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவாள் என்று உங்களுக்கு நினைவூட்டுகிறார். அப்படி ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது இல்லையா? நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் என்றும் நீங்கள் குளிர்ந்த நீர் தெளிப்பவர் என்றும் நினைவூட்டி இருக்கிறார். அப்படி கோபக்காரர் ஆசீர்வாதங்கள் கொடுத்தார் இல்லையா? அவர் என்னதான் செய்தாலும் ஆனால் நீங்கள் அதிலிருந்து ஆசீர்வாதங்களை எடுங்கள். ரோஜா மலரில் கூட எவ்வளவு விசேஷத்தன்மை இருக்கிறது என்று ஏற்கனவே கூறினோம் இல்லையா? எவ்வளவு நாற்றமான உரத்தில் இருந்து கழிவிலிருந்து அது என்ன எடுத்துக் கொள்கிறது? நறுமணம் எடுக்கிறது இல்லையா? ரோஜா மலர் துர்நாற்றத்திலிருந்து நறுமணத்தை எடுக்க முடியும். மேலும் நீங்கள் கோபக்காரரிடமிருந்து ஆசீர்வாதங்கள் எடுக்க முடியாதா? உலக மகாராஜனாக ரோஜா மலர் ஆக வேண்டுமா? அல்லது நீங்கள் ஆக வேண்டுமா? எனவே இது சரியானால் நான் சரியாவேன், இந்த முறை சரியானால் நான் சரியாவேன் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். கடலின் முன்னால் சென்று அலையே நீ பெரியதாக இல்லாமல் சிறியதாக வா, வளைந்து இல்லாமல் நேராக என்று எப்பொழுதாவது கூறுவார்களா? இந்த உலகமும் கடல்தான். அனைத்து அலைகளும் சின்னதாதாகவும்

இருக்காது, வளைந்தும் இருக்காது, நேராகவும் இருக்காது மேலும் பெரியதாகவும் இருக்காது. எனவே இது சரியாகி விட்டது என்றால் நான் சரியாகி விடுவேன் என்று இந்த ஆதாரத்தை வைக்காதீர்கள். அப்படி சூழ்நிலை பெரியதா? அல்லது நீங்கள் பெரியவர்களா?

பாப்தாதாவிடம் அனைத்து விஷயங்களும் வந்தடைகின்றன இல்லையா? இதை சரி செய்து விட்டீர்கள் என்றால் நானும் சரியாகி விடுவேன். இந்த கோபப்படுபவரைத் தணித்து விட்டர்கள் என்றால் நானும் சீதளமாகி விடுவேன். இந்த பிரச்சனை செய்யவரை ஒருபுறம் ஓரமாக ஆக்கி விட்டீர்கள் என்றால் சென்டர் சரியாகி விடும். அந்த மாதிரி தந்தையுடன் ஆன்மீக உரையாட செய்யாதீர்கள். உங்களுடைய சுலோகனே பழி வாங்காதீர்கள் மாறிக் காண்பியுங்கள். இவர் என அப்படி செய்கிறார். அந்த மாதிரி செய்யக்கூடாது, இவர் மாறியே ஆக வேண்டும் ஆனால் முதலில் தன்னை மாற்றுங்கள். சுயமாற்றம் மூலமாக உலக மாற்றம் மற்றும் மற்றவர்களின் மாற்றம் அல்லது மற்றவர்களிள் மாற்றம் மூலமாக சுயமாற்றமா? சுலோகனை தவறாக தயாரித்து விடவில்லையே? என்ன செய்வீர்கள்? தன்னை மாற்றுவீர்களா அல்லது மற்றவர்களை மாற்றுவதில் நேரத்தை செலவழிப்பீர்களா? தன்னை மாற்றாமல் மற்றவர்களை மாற்றுவதற்கு முயற்சி செய்வதற்கு ஒரு வருடத்தைக் கூட செலவழித்துப் பாருங்கள். நேரம் மாறி விடும் ஆனால் நீங்களும் மாற மாட்டீர்கள் அவரும் மாற மாட்டார், புரிந்ததா? அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி ஆவது என்றால் தேவையான நேரத்தில் பொக்கிஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்துவது நல்லது.

அனைத்து பொக்கிஷங்களினால் முழுமையான ஆத்மாக்களுக்கு, அனைத்து பொக்கிஷங்களைக் காரியத்தில் ஈடுபடுத்தும், அதிகரிக்கும், ஞான சொரூப குழந்தைகளுக்கு அனைத்து பொக்கிஷங்களின் அதிபதி ஆகி தேவையான நேரத்தில் விதிப்படி காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு குணத்தின் அதிகாரி ஆகி தன்னுள்ளும் அனைவரிலும் நிரப்பும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஆசீர்வதாங்களின் பொக்கிஷத்தினால் எளிதான முயற்சியை அனுபவம் செய்யும் சகஜயோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

**பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: உயர்ந்த ஸ்திதிக்கு (மனநிலை) ஆதாரம்.... உயர்ந்த நினைவு!** உயர்ந்த ஆத்மா நாள் எஜமானனாகவும் இருக்கிறேன். மேலும் குழந்தையாகவும் இருக்கிறேன் என்று அனைவருக்கும் இரட்டை போதை இருக்கிறதா? ஒன்று எஜமானத் தன்மையின் ஆன்மீகப் போதை மற்றும் இரண்டாவது குழந்தை என்பதின் ஆன்மீகப் போதை இருக்கிறதா?, அல்லது அவ்வப்போது தான் இருக்கிறதா? இந்த இரட்டை போதை எப்பொழுதும் இருக்கிறதா அல்லது அவ்வப்போதுதான் இருக்கிறதா? குழந்தை என்று எப்பொழுதுமா? அல்லது எப்பொழுதாவதா? குழந்தை என்றால் எப்பொழுதுமே குழந்தை தானே. பரமாத்மாவின் குழந்தை மற்றும் அனைத்து முதல் இடை கடையைத் தெரிந்திருக்கும் எஜமானன். அந்த மாதிரி எஜமானத்தன்மை மற்றும் குழந்தை என்பது முழு கல்பத்திலும் வேறு எந்த நேரத்திலும் இருக்க முடியாது. சத் யுகத்தில் கூட பரமாத்ம குழந்தை என்று கூற முடியாது. தேவ ஆத்மாக்களின் குழந்தைகள் ஆகி விடுவீர்கள். மூன்று காலத்தையும் தெரிந்திருக்கும் எஜமானன். இந்த எஜமானத்தன்மை கூட இந்த நேரம் மட்டும் தான் இருக்கிறது. அப்படி எப்பொழுது இந்த நேரம் மட்டும் தான் இருக்கிறது. பின்பு உள்ளடங்கிப் போய் விடும் என்றால் போதை எப்பொழுதும் இருக்க வேண்டும் இல்லையா. இரட்டை போதை வையுங்கள். இந்த இரட்டை போதையினால் இரட்டை பிராப்தி இருக்கும். எஜமானத்தன்மையினால் தன்னுடைய அனுபவம் ஆகும் மற்றும் குழந்தை என்பதின் போதை மூலமாக தன்னுடைய பிராப்தி இருக்கிறது. விதவிதமான பிராப்திகள் இருக்கின்றன, இல்லையா. இந்த ஆன்மீகப் போதை நஷ்டம் ஏற்படுத்துவது இல்லை. ஆன்மீகம் அல்லவா! தேகப்பற்றுதலின் போதை நஷ்டத்தில் கொண்டு வருகிறது. அந்த போதை கூட அநேகம் இருக்கின்றன. தேகப்பற்றுதலின் எத்தனை போதை இருக்கின்றன? நிறைய இருக்கிறது இல்லையா? -நான் இதுவாக இருக்கிறேன்... நான் இன்னவாக இருக்கிறேன்... ஆனால் அனைத்துமே நஷ்டத்தைக் கொடுப்பவை, கீழே கொண்டு வருபவை. இந்த ஆன்மீக போதை உயரே கொண்டு செல்கிறது. எனவே நஷ்டம் இல்லை. தந்தையின் குழந்தைகள் தான் எனவே தந்தை என்று கூறியவுடன் குழந்தைப் பருவம் நினைவு வருகிறது இல்லையா. தந்தை என்றால் நான் குழந்தை அப்பொழுது தான் தந்தை என்று கூறுகிறார். இல்லையா. அப்படியானால் முழு நாளும் என்ன நினைவு இருக்கிறது? என்னுடைய பாபா அல்லது வேறு ஏதாவது

நினைவு இருக்கிறதா? பாபா (தந்தை) என்று கூறுபவர் யார்? குழந்தை ஆனார் இல்லையா. அப்படி எப்பொழுதுமே குழந்தைகள் மேலும் எப்பொழுதுமே இருப்பார்கள். எப்பொழுதுமே இந்த பாக்கியத்தை... நான் யார். நான் யாருடையவன் மேலும் என்ன கிடைத்திருக்கிறது என்ற இந்த பாக்கியத்தை எதிரில் வையுங்கள் அதாவது நினைவில் வையுங்கள். என்ன கிடைத்திருக்கிறது என்பதற்கு எவ்வளவு நீளமான பட்டியல் இருக்கிறது. பட்டியலை நினைவு செய்கிறீர்களா? அல்லது நோட் புத்தகத்தில் மட்டும் எழுதி வைத்திருக்கிறீர்களா? நோட் புத்தகத்திலோ அனைவரிடமும் இருக்கும் ஆனால் புத்தியில் நான் யார் என்பது வெளித் தோன்றுதலாகவே இருக்கட்டும். அப்பொழுது அதற்கு எத்தனை பதில்கள் வரும்? அதிக பதில்கள் இல்லையா. இப்பொழுது நினைவு சொரூபமாக மட்டும் ஆகுங்கள். நினைவு வருவதினால், எப்படி நினைவோ அப்படியான நிலை சுலபமாக ஆகி விடும். நிலையின் ஆதாரம் நினைவாகும். குஷியின் நினைவில் இருந்தீர்கள் என்றால் நிலையும் குஷியானதாக ஆகி விடும். மேலும் துக்கத்தின் நினைவு இருக்கிறது என்றால் நிலையும் துக்கமானதாக ஆகி விடும். நினைவு செய்யுங்கள் அல்லது நினைவில் இருங்கள் என்ற ஒரே ஒரு வேலை தான் தந்தை கொடுக்கிறார். ஒரே ஒரு வேலை கடினமாக இருக்குமா என்ன? எப்போதாவது அதிகமான வேலை ஒன்றாக வந்து விட்டால், இவ்வளவு வேலையை எப்பொழுது செய்வது, எப்படிச் செய்வது என்று குழம்பி விடுவார்கள். ஒரே ஒரு வேலை என்றால் பயப்படுவதற்கு அவசியம் இல்லை அல்லவா. அப்படி நினைவு செய்யுங்கள் அவ்வளவு தான் என்று ஒரே ஒரு வேலை தான் தந்தை கொடுத்திருக்கிறார் இல்லையா. இந்த நினைவில் அனைத்தும் வந்து விடுகின்றன. அப்படி நான் எஜமானனாகவும் இருக்கிறேன். குழந்தையாகவும் இருக்கிறேன் என்று நினைவு செய்யுங்கள். ஆன்மீக போதையில் இருப்பதால் என்ன கிடைக்கிறது மேலும் மறப்பதினால் என்னவாகிறது. இரண்டின் அனுபவம் இருக்கிறது இல்லையா. மறப்பதற்கான பழக்கமோ 63-ஜென்மங்களாக இருக்கிறது ஆனால் நினைவு எவ்வளவு காலம் செய்ய வேண்டும்? ஒரு ஜென்மம் மேலும் இந்த ஜென்மம் கூட எவ்வளவு சிறியது. எனவே 'எப்பொழுதும்' என்ற வார்த்தையைக் கோடிட்டுக் காட்ட வேண்டும் நல்லது. அனைவரும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? நாம் குஷியாக இல்லையென்றால் வேறு யார் குஷியாக இருப்பார்கள் என்று யோசியுங்கள். மாதர்களும் எப்பொழுதும் குஷியாக இருக்கிறீர்களா?

அல்லது எப்போதாவது கொஞ்சம் துக்கத்தின் அலை வருகிறதா? எவ்வளவு உள் துக்கம் நிறைந்த உலகமாக இருந்தாலும் நீங்கள் சுகக் கடலின் குழந்தைகள் எப்பொழுதும் சுக சொரூபமானவர்கள். துக்கத்தில் துக்கமாகி விடுகிறீர்களா என்ன? உலகின் நேரமே துக்கத்திற்கானது தான் என்று தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் உங்களுடைய நேரம் எப்படிப்பட்டது? சுகமானதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் துக்கத்தினதும் தானா? உலகில் துக்கம் அதிகரிக்கவே வேண்டும். குறையப் போவதில்லை, இன்னும் அதிக அளவில் செல்லும் ஆனால் நீங்கள் துக்கத்திலிருந்து விலகி இருப்பவர்கள் சரிதான் இல்லையா. நல்லது மகிழ்ச்சியோடு இருங்கள். என்ன நடந்து கொண்டிருந்தாலும் நாங்கள் மகிழ்ச்சியில் இருப்பவர்கள். மகிழ்ச்சியில் இருப்பது நல்லது இல்லையா.

**குரூப்-2: பறக்கும் கலையினால் பிரச்சனைகளின் மலையை கடக்கவும்!** உங்கள் முயற்சியை நீங்கள் தொடர்ந்து சரி பார்க்கிறீர்களா? உங்கள் முயற்சி வேகமானதாக இருக்கிறதா அல்லது நேரம் வேகமாக சென்று கொண்டிருக்கிறதா, என்னவென்று சொல்வீர்கள்? நேரம் வேகமாக உள்ளது மற்றும் நீங்கள் தளர்வாக இருக்கிறீர்களா? காலம் படைப்பவரா அல்லது படைப்பா? படைப்பு எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தாலும், படைப்பவரோ படைப்பவராகத்தான் இருக்க வேண்டும், இல்லையா? எனவே நேரத்தை நீங்கள் அழைக்க வேண்டுமா அல்லது நேரம் உங்களை அழைக்குமா? காலம் உங்களை அழைக்கிறது, வாருங்கள் எனது எஜமானரே! என. எப்படி காலம் வேகமாக தொடர்ந்து முன்னேறுகிறது, ஒருபோதும் நிற்பதில்லை. வீழ்ச்சியடையும் நேரமாக இருக்கட்டும், வளர்ச்சியடையும் நேரமாக இருக்கட்டும், ஆனால் நேரம் ஒருபோதும் நிற்பதில்லை, சதா முன்னேறிக் கொண்டே செல்கிறது. யாராவது நேரத்தை நிறுத்த விரும்பினாலும், அது நிற்பதில்லை. மேலும் யாராவது உங்களைத் தடுத்தால், நீங்கள் நிற்கிறீர்கள் தானே? அப்படி நிற்கக் கூடாது. எந்த சூழ்நிலை வந்தாலும், மலை போன்ற பிரச்சனையும் முன் வரலாம், ஆனால் நீங்கள் நிற்கக்கூடியவர்களா? பறக்கும் கலையினர் தானே நீங்கள். எனில் மலையை என்ன செய்வீர்கள்? உங்களிடம் பறக்கும் கலை இருந்தால், நீங்கள் அதை ஒரு நொடியில் கடப்பீர்கள். எனவே, நீங்கள் ஏறும் கலையினரா அல்லது பறக்கும் கலையினரா? பறப்பவர்கள் ஒருபோதும் நிற்பதில்லை. இலக்கு இல்லாமல் பறக்கும் பொருள்

நின்றால் என்ன ஆகும்? விமானம் செல்லும்போது இலக்கை அடைவதற்கு முன்பாகவே நிறுத்தப்பட்டால், விபத்து ஏற்படும், இல்லையா? எனவே நீங்களும்கூட பறக்கும் கலையைச் சேர்ந்தவர்கள். பறக்கும் கலையினர் இலக்கை அடைவதற்கு முன்பு எங்கேயும் நிறுத்த மாட்டார்கள்? அல்லது நீங்கள் சோர்வடையும்போது நிறுத்துகிறீர்களா? எங்கே பிராப்தி இருக்கிறதோ, அதை அடைந்தவர் சோர்வடைய மாட்டார். வியாபாரிகளுக்கு அனுபவம் இருக்கிறது அல்லவா? வாடிக்கையாளர்கள் தாமதமாக வந்தாலும் சோர்வடைய மாட்டார்கள் -வாருங்கள் என அழைப்பார்கள்... ஏன் சோர்வடைவதில்லை? ஏனெனில் பிராப்தி இருக்கிறது. எனவே உங்களிடம் எத்தனை பிராப்திகள் உள்ளன? ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு பிராப்தி! ஒரு அடியில் பல மடங்கு வருமானம் சம்பாதிக்கும் ஒரு பணக்காரராவது இந்த முழு உலகிலும் இருக்கிறாரா? எவ்வளவு பிரபலமானவராக இருந்தாலும், யாரும் இந்தளவு பணக்காரர்கள் இல்லை. சுற்றி வாருங்கள். பாருங்கள், வெளிநாட்டில் கூட யாராவது இருக்கிறார்களா என்று. எவ்வளவுதான் பெரிய மனிதராக இருந்தாலும், அவர் உங்களுக்கு முன்னால் ஒன்றுமே இல்லை. எனவே, இவ்வளவு பெரிய பிராப்தி அடைபவர்கள் ஒருபோதும் சோர்வடைய முடியாது. பிராப்தியை மறந்து விடுவது என்றால் சோர்வடைதல்! அந்த வியாபாரத்தில் எவ்வளவு கடின உழைப்பு செய்ய வேண்டியுள்ளது மற்றும் கடின உழைப்புக்குப் பிறகும் உங்களுக்கு என்ன கிடைக்கிறது? சரி, அதிகபட்சம் ஒரு கோடி கிடைக்கலாம் ஆனால் இதுவோ கிடைப்பதில்லை, இருப்பினும் கிடைத்ததாகக் கொள்வோம். இங்கோ பல கோடிக்கான விஷயமாகும். எனவே பிராப்திகளை சதா உங்கள் முன் வைத்திருங்கள். வெறும் முயற்சி மட்டும் செய்யாமல், உங்கள் பிராப்திகளை முயற்சிக்கு முன் வையுங்கள். ஒருவேளை இதை அடைய வேண்டும் என்று தெரிந்தால், முயற்சியை மறந்தாலும், பிராப்தியைத்தான் முன்னால் வைப்பீர்கள். அவருக்கு முயற்சி கண்ணுக்குத் தெரியாது, பிராப்தி மட்டுமே தெரியும். நீங்கள் விவசாயம் செய்தாலும்கூட என்ன பார்க்கிறீர்கள்? கடின உழைப்பு தெரிகிறதா அல்லது பலன் தெரிகிறதா? பலனின் குஷி ஏற்படுகிறதல்லவா! எனவே இதை நினைவில் வைக்கும்போது ஒருபோதும் சோர்வடைய மாட்டீர்கள். சோர்வடைய மாட்டீர்கள், வேகமும் குறையாமல் தீவிரமாகவே இருக்கும், சதா தீவிரமாகவே இருக்கும்.

குஜராத் காரர்கள் தீவிரமானவர்கள் இல்லையா? குஜராத்தின் தாய்மார்களும் வேகவேகமாகச் செல்கிறார்கள். பாருங்கள், கர்பா நடனம் ஆடும்போது, குண்டானவரோ, வயதானவரோ, ஆனால் எவ்வளவு வேகமாக ஆடுகிறார்கள். எனவே குஜராத் மக்களுக்கு வேகமாக செயல்படும் பழக்கம் உள்ளது. உடலால் வேகமாக செயல்பட முடியும் என்றால் ஆத்மாவால் செய்ய முடியாதா? சதா குஷியாக இருப்பதுதான் குஜராத்தின் சிறப்பு. குஜராத் காரர்கள் அனைவருக்கும் கர்பா நடனம் தெரியும். நோயுற்றவர்களிடமும் கர்பா ஆட வருகிறீர்களா என்றால் உடனே படுக்கையில் இருந்து எழுந்து விடுவார்கள். எனவே இது குஷியின், பொழுதுபோக்கின் அடையாளம். குஜராத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஊஞ்சல் இருப்பதும் இதன் அடையாளம்தான். ஊஞ்சலாடி உடலை குஷிப்படுத்துவது போல் ஆத்மாவையும் குஷிப்படுத்த வேண்டும். ஆகவே குஜராத் என்றால் குஷியாக இருப்பவர்கள், பொழுதுபோக்குடன் வாழ்பவர்கள் என்று பொருள் ஆனால் எப்போதும், சில நேரங்களில் இல்லை. குஜராத் காரர்களின் மகிழ்ச்சி ஒருபோதும் குறைவதில்லை, இது நடக்காது. இவ்வாறு உங்களுக்கு அவ்வளவு உறுதியான நம்பிக்கை இருக்கிறதா அல்லது சில சமயங்களில் நீங்கள் குழப்பமடைகிறீர்களா? உங்கள் எல்லாப் பொறுப்புகளையும் எப்போது தந்தையிடம் ஒப்படைத்து விட்டீர்களோ அப்போது நீங்கள் மகிழ்ச்சியாகத்தான் இருப்பீர்கள், இல்லையா? பொறுப்புகள் தலையை கனமாக்குகின்றன. குஷி குறைவாக இருக்கும்போதெல்லாம், என்ன செய்வது இதையும் கவனித்துக் கொள்ள வேண்டும், இதையும் செய்யத்தான் வேண்டும், இது ஒரு பொறுப்பல்லவா என சொல்லுகிறீர்களா அல்லது நினைக்கிறீர்களா? அந்த நேரத்தில் நினைக்கிறீர்களா! ஆனால் பொறுப்பு தந்தையுடையது, நான் ஒரு கருவி மட்டுமே. என்னுடைய பொறுப்பு இருக்கிறது என்றால் பாரம் ஆகி விடுகிறது. நான் ஒரு கருவி மட்டுமே, பொறுப்பாளியோ தந்தை என்றால் லேசாகி விடுவீர்கள். லேசானது பறக்கும், கனமானது பறக்காது, மீண்டும் மீண்டும் கீழே வந்து விடும். கொஞ்சமாவது சிந்தனையில் வந்தால்கூட -நான் அதைச் செய்ய வேண்டும், நான்தான் அதைச் செய்ய வேண்டும் -என்றால் பாரமாகி விடும். எனவே நீங்கள் டபுள் லைட் ஆனவர்கள், இல்லையா? அல்லது கொஞ்சம் சுமையாக இருக்கிறதா? சதா பறந்து கொண்டே இருங்கள், பறக்கும் கலை என்றால் தீவிர வேகம். நீங்கள் அனைவரும் பாக்கியசாலிகள் ஏனெனில் நீங்கள் வந்திருப்பதே பறக்கும்

கலைக்கான நேரத்தில். எவ்வாறு இன்றையக் குழந்தைகள் கூறுகிறார்கள், நாங்கள் அதிர்ஷ்டசாலிகள் காளை மாட்டு வண்டிகள் இல்லாத நேரத்தில் வந்திருக்கிறோம் ஆனால் மோட்டார் வாகனங்கள் இருக்கும் காலகட்டத்தில் வந்திருக்கிறோம் என்று சொல்வது போல். இன்றைய குழந்தைகள் பழையவர்களிடம் சொல்கிறார்கள் -உங்கள் காலம் காளை வண்டிக் காலம், எங்கள் சகாப்தம் விமானத்திற்கானது, அதனால் அவர்களிடம் எவ்வளவு போதை இருக்கிறது! நாங்கள் பறக்கும் கலையின் சமயத்தில் வந்துள்ளோம் என்ற போதை உங்களிடமும் இருக்க வேண்டும். நேரமும் கூட, பாருங்கள், உங்களுக்கு ஒத்துழைப்பதாக மாறி விட்டது. எனவே நல்ல விதமாக பறக்கவும். உங்களுடன் சிறிய சுமைகளைச் சுமக்காதீர்கள் -முயற்சியின் சுமை, சேவையின் சுமை அல்லது சம்பந்தம் தொடர்பை பராமரிக்கும் சுமை, என. எவ்வித சுமையும் கூடாது அல்லது கொஞ்சம் கொஞ்சம் சுமை இருப்பது நல்லதா? பழக்கம் ஆகி விட்டது இல்லையா? 63-ஜென்மமாக சுமையைச் சுமந்த அந்த பழக்கம் இப்போதும்கூட அவ்வப்போது வேலை செய்கிறது ஆனால் சுமையைச் சுமந்ததால் என்ன கிடைத்தது? கனமாக இருந்தீர்கள் மற்றும் கனமாக ஆனதால் இன்னும் கீழே விழுந்து கொண்டே சென்றீர்கள். இப்போது ஏற வேண்டும், இல்லையா? நல்லது! குஜராத் காரர்கள் என்ன செய்வது, எப்படி செய்வது, மாயா வந்து விட்டது என்று ஒருபோதும் சொல்ல மாட்டீர்கள் அல்லவா? மாயாவைப் பார்த்து பயப்படுகிறவர்களா அல்லது வெற்றி அடைபவர்களா? சண்டையிட்டுக் கொண்டே இருந்தால் நீங்கள் சந்திர வம்சத்திற்குள் செல்வீர்கள். எனவே எப்போதும் வெற்றியாளர், தோற்பவர்கள் அல்ல. தோல்வி அடைவது பலவீனமானவர்களின் வேலை, பிராமணர்கள் எப்போதும் தைரியமானவர்கள். நல்லது.

**குரூப்-3: யார் தன்னுடைய கர்ம இந்திரியங்களை ஈஸ்வரிய சட்டம் ஒழுங்குப்படி நடத்துகிறாரோ அவர் தான் இராஜயோகி!** சப்தத்தில் வருவது சுலபமாக இருக்கிறது இல்லையா. அதே போல் சப்தத்தை விட்டு விலகிச் செல்வதும் சுலபமாக இருக்கிறதா? சப்தத்தில் வருவது சுலபமா? அல்லது சுப்தத்தை விட்டு விலகிச் செல்வது சுலபமா? சப்தத்தில் வருவது சுலபம் மற்றும் சப்தத்தை விட்டு விலகிச் செல்வது கடினம் அப்படியா? பார்க்கப்போனால் ஆத்மாக்கள் உங்களுடைய ஆதி சொரூபம் என்ன? சப்தத்தை விட்டு விலகியிருப்பதா? அல்லது சப்தத்தில் வருவதா?

அப்படியானால் இப்பொழுது ஏன் கடினமாகப்படுகிறது? 63-ஜென்மங்கள் ஆதி சம்ஸ்காரத்தை மறக்கச் செய்து விட்டன. எப்பொழுது அனாதி ஸ்தானமான 'பரம்தாமம்' சப்தத்தை விட்டு விலகியது, அங்கு சப்தம் இல்லை மேலும் ஆதி சொரூப ஆத்மாவிலும் சப்தமில்லை என்றிருக்கும் பொழுது சப்தத்தை விட்டு விலகி இருப்பது ஏன் கடினமாகிறது? இந்த இடைக்காலத்து தலைகீழான மதிப்பு எவ்வளவு உறுதியாகி விட்டது. பிராமண வாழ்க்கை என்றால் எப்படி சப்தத்தில் வருவது சுலபமோ அதே போல் சப்தத்திலிருந்து விலகிச் செல்லும் பயிற்சியும் சுலபமாக இருக்க வேண்டும். இதற்கான சுலபமான விதி என்னவென்றால் இராஜாவாகி நடந்து கொள்ள வேண்டும். மேலும் கர்ம இந்திரியங்களை நடத்த வேண்டும். இராஜா ஒருவேளை இந்த வேலை நடக்கக் கூடாது என்று கட்டளை இட்டால் பிரஜைகள் என்ன செய்வார்கள். ஏற்றுக் கொள்ள வேண்டும் இல்லையா. இன்றைய நாட்களிலோ இராஜா யாருமே இல்லை, பிரஜைகளின் மேல் பிரஜைகளின் இராஜ்யம். எனவே யாரும் யார் சொல்வதையும் ஏற்றுக் கொள்வதில்லை ஆனால் நீங்களோ இராஜயோகிகள் தான் இல்லையா. உங்களுடைய உலகில் பிரஜைகள் மேல் பிரஜைகளின் ராஜ்யம் இல்லை இல்லையா. இராஜாவின் இராஜ்யம் தான் இல்லையா. எனவே தந்தை கூறுகிறார் -ஹே இராஜாக்களே உங்களுடைய பிரஜைகள் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள்? அல்லது கட்டுப்பாட்டை விட்டு வெளியில் சென்று விடுகிறார்களா? தினந்தோறும் இராஜ தர்பாரைக் கூட்டுகிறீர்களா? தினந்தோறும் இரவு இராஜ தர்பாரைக் கூட்டுங்கள். தன்னுடைய இராஜ்யத்தின் காரியம் செய்பவர்கள். கர்ம இந்திரியங்களின் நிலைமையைக் கேளுங்கள் எப்படி இராஜா ராஜதர்பாரைக் கூட்டுகிறார் இல்லையா? அப்படி நீங்களும் உங்களுடைய இராஜதர்பாரைக் கூட்டுகிறீர்களா? அல்லது மறந்து விடுகிறீர்களா, தூங்கி விடுகிறீர்களா? இராஜதர்பார் கூட்டுவதில் எவ்வளவு நேரம் எடுக்கிறது? அவர்களுடைய இராஜதர்பாரிலோ பிரச்சனைகள். இங்கோ பிரச்சனைக்கான விஷயமே இல்லை. எதிர்ப்பவர்களே இல்லை அல்லவா. ஒருவரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. சில நேரம் தன்னுடைய வேலையாட்களே எதிர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். அப்படி இராஜயோகி என்றால் மாஸ்டர் சர்வசக்திவான் இராஜா ஆத்மா, ஒரு கர்ம இந்திரியம் கூட ஏமாற்ற முடியாது. நில் என்றால் நின்று விடும் ஒழுங்குப்படி நடப்பவர்கள் தான் இல்லையா? ஏனென்றால் எதிர்காலத்தில் சட்டம் ஒழுங்குப்படி நடக்கும்

இராஜ்யம் ஆகும். அப்படி ஸ்தாபனை இங்கிருந்து தான் ஏற்படவேண்டும் இல்லையா. இங்கேயே 'ஆத்மா` இராஜா தன்னுடைய கர்ம இந்திரியங்களைச் சட்டம் ஒழுங்குப்படி நடத்துபவராக ஆகட்டும், அப்பொழுது தான் உலக மகாராஜனாகி உலக இராஜ்யத்தை சட்டம் ஒழுங்குப்படி நடத்த முடியும். முதலில் சுயராஜ்யம் சட்டம் ஒழுங்குப்படி இருக்கட்டும். அப்படியானால் உங்களுடைய இராஜதர்பாரின் நிலைமை என்ன? மேலே கீழே இல்லை அல்லவா? அனைவரின் நிலை நன்றாக இருக்கிறதா? ஏதாவது பிரச்சனை ஒன்றும் இல்லையே? இங்கு தான் ஒழுங்கு முறையோடு நடத்த முடியும் மற்றும் சில நேரம் நடத்த முடியவில்லை என்றால் அங்கேயும் சில நேரம் இராஜ்யம் கிடைக்கும், எப்பொழுதும் கிடைக்காது. அஸ்திவாரம் இங்கிருந்து போடப்படுகிறது இல்லையா. எனவே நான் எப்பொழுதும் அழியாத ஆசனதாரி சுயராஜ்யத்தை நடத்தும் இராஜா ஆத்மாவா? என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். அனைவரிடமும் ஆசனம் இருக்கிறது இல்லையா. இழந்து விடவில்லையே சிம்மாசனத்தில் அமர்ந்து தான் இராஜ்யம் நடத்தப்படும் இல்லையா? அல்லது ஆசனத்தில் ஓய்வாக அலட்சியமாகித் தூங்கி விடுவீர்களா? ஆசனத்தில் இருப்பது என்றால் இராஜ்ய அதிகாரி ஆவது. அப்படியானால் ஆசனதாரியா? அல்லது சில நேரம் இறங்கி விடுகிறீர்களா? நான் ஆத்மா தான் ஆனால் எந்த மாதிரியான ஆத்மா இராஜா ஆத்மா, இராஜ்ய அதிகாரி ஆத்மா நான், சாதாரண ஆத்மா இல்லை என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எனவே இராஜாவாகி எந்த கர்ம இந்திரியம் அடிக்கடி ஏமாற்றம் கொடுக்கிறது என்று தன்னுடைய இராஜ்ய நடவடிக்கைகளைச் சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஏமாற்றம் கொடுக்கிறது என்றால் அதை சோதனை செய்து தன்னுடைய கட்டுப்பாட்டில் வையுங்கள். ஒருவேளை அலட்சியமாகி விட்டு விட்டீர்கள் என்றால் அதன் ஏமாற்றும் பழக்கம் உறுதியாகி விடும் மேலும் நஷ்டம் யாருக்கு ஏற்படும்? தனக்குத்தான் ஏற்படும் இல்லையா. எனவே என்ன செய்ய வேண்டும்? அழியாத ஆசனதாரி ஆகி சோதனை செய்யுங்கள். எதிர்காலத்தில் என்னவாகப் போகிறீர்கள் என்று எதன் ஆதாரத்தில் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும்? ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அதன் மூலம் நான் என்னவாகப் போகிறேன் என்று தெரிந்து கொள்வதற்கு? இலட்சியம் நல்லதாக வையுங்கள். ஏனென்றால் இப்பொழுது ரிஸல்ட் அவுட் ஆகவில்லை. நாற்காலிகளின் விளையாட்டு (மியூசிகல் சேர்) இருக்கிறது

இல்லையா! அதில் கடைசியில் விசில் ஊதுவார்கள். அந்தக் கடைசி விசிலில் தெரிந்து விடும். யார் வெற்றி பெற்றார் என்று. இப்பொழுது முதல் நம்பரைத் தவிர வேறு எதுவும் நிர்ணயம் செய்யப் படவில்லை. இரண்டு முடிவாகி விட்டது மீதி 6-ல் வாய்ப்பு இருக்கிறது. முதல் விஷ்வ மகாராஜன் அல்லது விஷ்வ மகாராணி ஆகவில்லையென்றால் முதல் பிரிவிலாவது வருவீர்கள் இல்லையா? முதல் இடத்தில் ஒருவர் இருப்பார் ஆனால் முதல் பிரிவில் அதிகம் பேர் இருப்பார்கள். அதனால் ஃபஸ்ட் நம்பரில் வர மாட்டீர்கள் ஆனால் ஃபஸ்ட் டிவிஷனில் வர முடியும். அங்கு இராஜ குடும்பத்தினரின் பதவி கூட சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் இராஜா இராணியைப் போல்தான் இருக்கும். எனவே முதல் டிவிஷனில் வர வேண்டும் என்ற இலட்சியத்தை எப்பொழுதும் வையுங்கள். இராயல் குடும்பத்தின் பதவி கூட குறைந்தது இல்லை. லட்சுமி-நாராயணனுக்கு இருக்கும் மரியாதை இவர்களுக்கும் இருக்கும். எனவே முதல் இராஜ குடும்பத்தில் வருவதும் லட்சுமி நாராயணன் ஆவதற்குச் சமம் தான். எனவே முயற்சி செய்யுங்கள். வாய்ப்பு இருக்கிறது. அப்படி இலட்சியம் கூட நல்லதாகத் தான் வைத்திருக்கிறீர்கள். வேறு எந்தத் தந்தைக்கும் இல்லாத குஷி பாப்தாதாவிற்கு இருக்கிறது. ஏனென்றால் அனைத்துக் குழந்தைகளும் நாங்கள் இராஜா என்று கூறுகிறார்கள் பிரஜை என்று யாரும் கூறுவது இல்லை. அப்படி ஒரு தந்தைக்கு இவ்வளவு இராஜாக் குழந்தைகள் இருந்தால் எவ்வளவு போதைக்குரிய விஷயம். மேலும் அனைவரும் லட்சுமி நாராயணன் ஆகக்கூடியவர்கள். எனவே பாப்தாதாவிற்கு குஷி இருக்கிறது. புரிந்ததா? இது பல விதத்தினரும் அடங்கிய குரூப் ஆனால் பாப்தாதாவோ அனைவரையும் மதுபன் நிவாசிகளாகத்தான் பார்க்கிறார். உங்களுடைய உண்மையான விலாசம் எது? மும்பையா, இராஜஸ்தானா, பெங்களூரா.... என்ன? பற்றுதலை வென்ற நிலை ஆவதற்கான சுலபமான வழி என்னுடைய வீடு என்று நினைக்காதீர்கள். என்னுடைய வீடு, என்னுடைய குடும்பம்... என்று இருந்தால் பற்றுதலை வென்ற நிலை உள்ளவராக ஆக முடியாது. நீங்கள் இருக்கும் இடம் சேவை ஸ்தானம், வீடு மதுபன் ஆகும். அப்படியானால் எப்பொழுதும் வீட்டில் இருக்கிறீர்களா? அல்லது சேவை ஸ்தானத்தில் இருக்கிறீர்களா? சேவை ஸ்தானம் என்று நினைப்பதில்லை பற்றுதலை வென்ற நிலையுள்ளவராக விடுவீர்கள். என்னுடைய பொறுப்பு, என்னுடைய வேலை, இது என்னுடைய கருத்து, நான் இதைச் செய்தாக வேண்டும், இவை அனைத்தும் பற்றுதலை உருவாக்குகின்றன.

சேவைக்காக பொறுப்பாளராக இருக்கிறேன். யார் உண்மையான சேவாதாரியோ அவருடைய விசேஷங்களாக என்ன இருக்கின்றன? சேவாதாரி எப்பொழுதும் தன்னைக் கருவியாக நினைப்பார், என்னுடையது என்று நினைக்க மாட்டார். மேலும் எவ்வளவு பொறுப்பு உணர்வு இருக்குமோ அவ்வளவு பணிவுத் தன்மையும் இருக்கும் மற்றும் எவ்வளவு பணிவாக இருப்பார்களோ அவ்வளவு படைக்கும் கடமையைச் செய்ய முடியும். பொறுப்புணர்வு இல்லையென்றால் உடல் பற்றுதலை அகற்றி பணிவுள்ளவராக ஆக முடியாது. எனவே சேவாதாரி என்றால் சமர்ப்பணத்தன்மை. சேவாதாரியில் ஒருவேளை சமர்ப்பணத்தன்மை இல்லையென்றால் ஒருபொழுதும் சேவை வெற்றியடைய முடியாது, என்னுடையது என்ற தன்மை வெற்றியைக் கொடுக்காது.

இரட்டை வெளிநாட்டினர் வெளிநாட்டில் ஏன் சென்றிருக்கிறீர்கள்? சேவைக்காகத்தான் இல்லையா ஆனால் நீங்கள் மதுபன் நிவாசிகள். பாரதவாசிகளா? அல்லது வெளிநாட்டுவாசிகளா? பாரதத்தின் ஆத்மாக்கள் தான் இல்லையா பாருங்கள், ஒருவேளை நீங்கள் இரட்டை வெளிநாட்டினராக ஆகவில்லையென்றால் சேவையில் மொழிப் பிரச்சனை எவ்வளவு இருக்கும். அனைத்து மொழிகளையும் கற்றுக் கொள்வதற்காக விசேஷமாகப் பள்ளி திறக்க வேண்டியதாக இருந்திருக்கும். இப்பொழுது சேவை எளிதாக நடந்து கொண்டிருக்கிறது இல்லையா. அப்படி சேவைக்காக வெளிநாடு சென்றிருக்கிறீர்கள். பாரதத்தில் தான் இராஜ்யம் செய்ய வேண்டும் இல்லையா? உலகமே பாரதம் ஆகி விடும். இப்பொழுதோ துண்டு துண்டாகி விட்டது. அனைவரும் மகா பாரதத்திலிருந்து அவரவர்களின் துண்டை எடுத்துக் கொண்டார்கள். என்ன எடுத்தார்களோ அதைக் கொடுக்க வேண்டியதாக இருக்கும் இல்லையா? ஏனென்றால் பாரதம் மகாதானி எனவே அனைவருக்கும் துண்டுகளைக் கொடுத்து விட்டது. துண்டைக் கொடுத்து விடுங்கள் என்று உங்களுக்குக் கேட்க வேண்டியதிருக்காது, அவர்களாகவே கொடுத்து விடுவார்கள். எனவே நாம் அனைவரும் எல்லைக்கப்பாற்பட்ட இராஜ்ய அதிகாரி என்ற எல்லைக்கப்பாற்பட்ட போதையை வைத்துக் கொள்ளுங்கள். சுயராஜ்யத்தின் ஸ்திதி (மனநிலை) மூலமாக உலக இராஜ்யத்தில் தன்னுடைய அதிர்ஷ்டத்தை தெரிந்து கொள்ள முடியும். ஒருவேளை இப்பொழுது சுய இராஜ்யம் சரி இல்லை என்றால் உலக இராஜ்யமும் முதலில் கிடைக்காது பின்னால்

கிடைக்கும் என்று தெரிந்து கொள்ளுங்கள். அனைவரிடமும் கண்ணாடி இருக்கிறது இல்லையா? நாரதரிடம் கண்ணாடி கொடுத்து பார்க்கச் சொன்னார்கள் இல்லையா 'பார் நான் யார்? இலட்சுமியை வரனாக அடைபவனா? அப்படி இது சுய இராஜ்யத்தின் நிலையின் கண்ணாடி இந்தக் கண்ணாடியில் நான் என்ன ஆகப்போகிறேன் என்று நீங்களே பார்க்கலாம். நல்லது.

**குரூப்-4: நாம் கல்ப கல்பமாக வெற்றி அடைந்தவர்கள் -இந்த நம்பிக்கையுடன் பெரிய விஷயத்தைக்கூட சிறியது ஆக்குங்கள்!**

அனைவருக்கும் அனைத்திலும் அதிக குஷியானது எது? அனைத்திலும் அதிக குஷியான விஷயம் என்னவென்றால், யார் மீது இவ்வுலக ஆத்மாக்களின் பார்வை படவில்லையோ, அவர்கள் மீது பரம் ஆத்மாவின் பார்வை விழுந்ததுதான்! இன்றைய காலகட்டத்தில், தேர்தல் நடக்கிறது இல்லையா. அப்படியானால் உங்களை யார் தேர்ந்தெடுத்தார்கள்? தேர்தலில் ஏதேனும் தவறு நடந்ததா? நீங்கள் ஏதாவது பணம் செலவழிக்க வேண்டியிருந்ததா? எனவே தந்தை ஆத்மாக்கள் நம்மைத் தேர்ந்தெடுத்து மேலும் அவருடையவராகவும் ஆக்கிக் கொண்டார். உலக ஆத்மாக்களின் பார்வையில் மிகவும் சாதாரண ஆத்மாக்களாக இருந்தோம், ஆனால் இன்று தந்தையின் பார்வையில் மஹான் ஆத்மாக்களாக, விசேஷ ஆத்மாக்களாக ஆகி விட்டோம். எனவே இந்த குஷியில் இருங்கள் -நேற்று என்னவாக இருந்தோம், இன்று என்ன ஆகி விட்டோம், யாருடைய பார்வையில் விட்டோம்? உலகத்தினர் அற்பமாகக் கருதி நம்மை புறக்கணித்தனர் ஆனால் தந்தையோ நம்மை அவருக்கு சொந்தமாக்கி விட்டார். எத்தனை அடி உதை காயப்படுவதிலிருந்து நம்மை காப்பாற்றி விட்டார். 63-ஜென்மங்களாக அல்லல்பட்டுக் கொண்டிருந்தீர்களா! பக்தி மார்க்கத்திலும் இதே நிலைமை தானே. குடும்ப வாழ்க்கையிலும் பல்வேறு வகையான கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு இருந்தீர்கள் அல்லவா! தந்தை வந்து புகலிடம் கொடுத்து விட்டார். புகலிடம் கிடைத்தவுடன், தடுமாற்றங்கள் முடிந்து விட்டன எனில் புகலிடம் கிடைத்து விட்டதல்லவா! ஆகவே என்னவாக இருந்தீர்கள், என்னவாக ஆனீர்கள்! இந்தளவு மகான் ஆவீர்கள் என்பது கனவில்கூட இருந்ததா? ஆனால் எவ்வளவு எளிதாக ஆகி விட்டீர்கள்! எந்த ஒரு கஷ்டத்தையும் பார்க்கவே இல்லை. எவ்வளவு சிரேஷ்ட பாக்கியம்! ஆகவே நீங்கள் எந்த பாடலைப் பாடுகிறீர்கள்? அடைய வேண்டியதை அடைந்தே விட்டேன்!

இந்தப் பாடல் தானாகவே ஒலித்துக் கொண்டே இருக்கிறது. வாயால் பாடத் தேவையில்லை ஆனால் இதயம் பாடிக் கொண்டே இருக்கிறது. இது இதயத்தின் டேப் ரிகார்ட், ஒருபோதும் கெட்டுப் போகாது, அதை மீண்டும் மீண்டும் போடத் தேவையில்லை, தானாகவே ஓடிக் கொண்டே இருக்கும். நல்லது!

எல்லோரும் மாயாவை வென்று விட்டீர்களா? நீங்கள் அனைவரும் மாயையை வென்றவர்களாக ஆகி விட்டீர்களா? எனில் இப்போது வெற்றி பெற வேண்டும்? மாயாவின் வேலை விளையாடுவது, உங்கள் வேலை விளையாட்டைப் பார்ப்பது! விளையாட பயப்படக் கூடாது. நீங்கள் பயப்படுகிறீர்கள் என்றால், மாயா புரிந்து கொள்கிறது, இவரோ பயப்படுகிறார் ஆகவே இப்போது இவரை நன்றாகப் பிடித்துக் கொள்வோம் என. மாயாவும் கூட அதி புத்திசாலி அல்லவா. எது நடந்தாலும், பயப்படக் கூடாது. வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது. இதற்குத்தான் முழு நிச்சய புத்தி என்று கூறப்படுகிறது. என்ன நடக்கும் என்று தெரியலையே, தோற்க மாட்டேன் ஆனால் நான் ஜெயிப்பேனா... ... இது கூடாது. பாண்டவ சேவை வெற்றி கிடைக்கவில்லை எனில் பின் வேறு யாருக்கு கிடைக்கும் என்ற இந்த போதையில் சதா இருங்கள். கௌரவர்களுக்கா கிடைக்கும்? அப்படியென்றால் நீங்கள் யார்? பாண்டவர்களின் வெற்றி நிச்சயிக்கப்பட்டது, இல்லையா!

எந்த ஒரு பெரிய விஷயத்தையும் சிறியதாக்குவது அல்லது சிறிய விஷயத்தை பெரியதாக்குவது என்பது நம் கையில்தான் உள்ளது. யாருக்கு சிறிய விஷயத்தை பெரிதாக்கும் சுபாவம் உள்ளது மற்றும் யாருக்கு பெரிய விஷயத்தை சிறியதாக்கும் சுபாவம் உள்ளது. எனில் மாயாவின் எவ்வளவு பெரிய விஷயம் முன்னே வந்தாலும் நீங்கள் அதை விட பெரியதாக மாறினால், அது சிறியதாகி விடும். நீங்கள் கீழே வந்தால், அது பெரியதாகவும் மேலும் மேலே சென்றால் சிறியதாகவும் தோன்றும். எவ்வளவு பெரிய சூழ்நிலை வந்தாலும், நீங்கள் உயர்ந்த சுய ஸ்திதியில் நிலைத்து விட்டால், நிலைமை ஒரு சிறிய விஷயமாக ஆகி விடும் மேலும் சிறிய விஷயத்தை வெல்வது எளிது. பல முறை வெற்றி பெற்றவன் என்ற இந்த நிச்சயம் வையுங்கள். இந்த கல்பத்தில் இப்போது யாரும் வெற்றி பெறவில்லை; நான் பல முறை வெற்றி பெற்றவன். எனவே இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல, பழைய விஷயம்தான் ஆனால் இது அந்த

நேரத்தில்  நினைவிற்கு வர வேண்டும். இப்படி இல்லை -நேரம் கடந்த பின், இது ஒரு சிறிய விஷயம்தான், நான் ஏன் அதை பெரிதாக்கினேன் என. தக்க சமயத்தில் நினைவிற்கு வர வேண்டும் -நான் கல்ப கல்பமாக வெற்றி பெற்றவன் என்பது!

தாய்மார்களுக்கு பெருமிதம் உள்ளதா? தாய்மார்களுக்கோ பாக்கியம் திறந்து விட்டது. எப்படி இருந்த தாய்மார்கள் எப்படி  ஆகி விட்டனர். எந்த தாய்மார்களை மனிதர்கள் கீழாக வைத்தார்களோ, கால் செருப்பாக ஆக்கினார்களோ, கால் கீழே உள்ளது மற்றும் செருப்பும் அதை விட காலின் கீழ் உள்ளது -அவர்களை தந்தை தலையின் கிரீடமாக ஆக்கி விட்டார். தாய்மார்களுக்கு மிகுந்த குஷி தானே! எனில் நீங்கள் மகிழ்ச்சியில் நடனமாட வேண்டும். எனவே நடனமாடுகிறீர்களா? கால்களால் அல்ல, மனதால் மகிழ்ச்சியில் நடனமாடுங்கள். தந்தை கிடைத்தார், அனைத்தும் கிடைத்து விட்டது. தந்தை மகிழ்ச்சியாக இருக்கும்போது, குழந்தைகளும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் தானே. இன்றைய உலகில் எல்லாமே கிடைக்கும் ஆனால் உண்மையான மகிழ்ச்சி கிடைக்காது! உங்களுக்கோ உண்மையான மகிழ்ச்சி கிடைத்து விட்டது. தந்தையையும் அதனால்தான் நீங்கள் நினைவு செய்கிறீர்கள் ஏனெனில் பிராப்தி கிடைக்கிறது அல்லவா! தந்தையும் கூட ஆஸ்தி கொடுக்கும் போதுதான் அன்பானவராக உணர்கிறீர்கள். தந்தை குஷியின் பொக்கிஷத்தைக் கொடுத்திருக்கிறார். ஆதலால் நீங்கள் குஷி குஷியாக நினைவு செய்கிறீர்கள். யாராவது ஒரு கோடி செலவு செய்தால்கூட இந்த மகிழ்ச்சியை அடைய முடியாது. எனில் நீங்கள் என்ன செலவு செய்தீர்கள்? 'பாபா' என்று கூறினீர்கள் மற்றும் புதையல் கிடைத்தது! எனில் ஒரு பைசா கூட இல்லாமல் ராஜா ஆகி விட்டீர்கள்! மிகப் பெரிய ராஜா யார்? (கவலையற்ற ராஜா). எனவே நீங்கள் கவலையற்ற ராஜாவா? அல்லது இங்கு வந்து கவலையற்றவராக, பின்னர் அங்கு சென்ற பின் கவலைப்படுகிறீர்களா? தாய்மார்களுக்கு கவலை இருக்கும் -குழந்தைகளை என்ன செய்வது, பேரக்குழந்தைகளை என்ன செய்வது? இங்கும் இல்லை, அங்கும் இருக்காது.  இன்றைய ராஜாக்கள் கவலையுள்ள ராஜாக்கள் மேலும் நீங்களோ கவலையற்ற ராஜாக்கள். குழந்தை கவலைப்படுகிறதா?  தந்தை இருக்கும்போது குழந்தைகள் கவலையின்றி இருக்கிறார்கள். எனில் நீங்கள் கவலையற்ற ராஜா ஆகி விட்டீர்கள்.  அப்படியே எதைப் பற்றியாவது நீங்கள்

கவலைப்பட்டால், கவலைப்படுபவருக்கு ஒருபோதும் வெற்றி கிடைப்பதில்லை. கவலைப்படுபவர் நேரத்தையும் இழக்கிறார், தன்னையும் இழக்கிறார், ஏனென்றால் ஆற்றல் (energy) வீணாகிறது மேலும் வேலையையும் வீணாக்கி விடுவார். அவர் எந்த வேலையைக் குறித்து கவலைப்படுகிறாரே அதையும் கெடுத்து விடுகிறார். ஒருவேளை நீங்கள் வெற்றியை விரும்பினால், அதன் விதி -கவலையற்றவர் ஆக வேண்டும்! அந்த மாதிரி கவலையற்ற ராஜா!

சேவைக்காக ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்யுங்கள். லட்சியம் வைப்பதால் தானாகவே 'டச்சிங்' (தொடுதல்) ஆகும். சேவையில் முன்னேறுவது என்பது உங்கள் முயற்சியிலும் முன்னேறுவதாகும். நேர்மையான இதயத்துடன் சேவை செய்பவர்கள் சதா முன்னேற்றத்தை அடைவார்கள். ஒருவேளை கலப்படமான சேவை செய்தால், வெற்றியும் கிடைக்காது, சுய முன்னேற்றமும் ஆகாது. நல்லது.

**குரூப்-5: நல்லவராக ஆனால் அனைத்து ஆசைகளும் தானாகவே நிறைவேறும்!** உங்கள் நெற்றியில் வெற்றியின் திலகம் இடப்பட்ட அனுபவம் சதா உள்ளதா? அழியாத திலகம் அழியாத தந்தையினால் இடப்பட்டுள்ளது. எனில் நினைவின் அடையாளம் திலகம் ஆகும். திலகம் எப்போதும் நெற்றியில் வைக்கப்படுகிறது. எனில் நெற்றியின் சிறப்பு என்ன? நினைவு! எனவே வெற்றியின் திலக்-தாரி என்பது 'சதா விஜய் பவ!' என்பதன் வரதானி. யார் நினைவு சொரூபமானவரோ அவர் சதா வரதானி ஆவார். எனவே நீங்கள் வரம் கேட்கத் தேவையில்லை. ஒரு வரம் கொடுங்கள் என நீங்கள் கேட்கிறீர்களா? உங்களுக்கு என்ன கேட்பது என்று கூட தெரியாமல் இருந்தது. நீங்கள் என்ன கேட்க வேண்டும் என்பதை தந்தைதான் வந்து சொல்கிறார் -நீங்கள் கேட்க விரும்பினால், முழு ஆஸ்தியையும் கேளுங்கள் என்று! மற்ற அனைத்தும் எல்லைக்குட்பட்ட வரங்கள் -ஒரு ஆண் குழந்தையை கொடு, ஒரு பெண் குழந்தையை கொடு, ஒரு வீட்டைக் கொடு, ஒரு நல்ல காரை கொடு, ஒரு நல்ல கணவனை கொடு .......... இதைத் தானே கேட்டுக் கொண்டே இருந்தீர்கள். எல்லையற்றது வேண்டும் என்று கேட்க உங்களுக்கு வரவில்லை. அதனால்தான் தந்தைக்குத் தெரியும், கேட்பதுகூட ஒரு எல்லைக்குட்பட்டதை, அல்ப காலத்துக்கானதை கேட்குமளவு இவ்வளவு கீழே விழுந்து விட்டீர்கள் என்பது. இன்று ஒரு கார் கிடைக்கிறது, நாளை

பழுதடைந்து விடுகிறது, விபத்து ஏற்படுகிறது எனில் பிறகு என்ன செய்வீர்கள்? இன்னும் ஒரு காரைக் கொடுங்கள் என கேட்பீர்களா! நீங்களோ அதிகாரியாகி விட்டீர்கள். எல்லையற்ற தந்தையின் எல்லையற்ற ஆஸ்திக்கு அதிகாரியாகி விட்டீர்கள். இப்போது தானாகவே வரத்தைப் பெற்றுள்ளீர்கள். எப்போது வள்ளலின் குழந்தையாகி விட்டீர்கள், வரமளிப்பவரின் குழந்தையாகி விட்டீர்கள் எனில் வரதானங்களின் பொக்கிஷம் குழந்தைகளுடையது என ஆகி விட்டதல்லவா! எனில் எப்போது வரதானங்களின் பொக்கிஷம் நம்முடையது என ஆன பின் கேட்பதற்கு என்ன அவசியம் உள்ளது! இப்போது நாம் கேட்பதிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டோம் என்ற மகிழ்ச்சியில் இருங்கள். எதை நினைத்து கூட பார்க்கவில்லையோ அது சாகார ரூபத்தில் கிடைத்து விட்டது. நீங்கள் எல்லாவற்றிலும் நிரம்பியிருக்கிறீர்கள், எந்த பற்றாக்குறை இல்லை. உங்கள் தேவதை வாழ்க்கையை கூட என்ன மகிமை செய்யப்பட்டுள்ளது -சர்வ குணம் சம்பன்னமானவர்கள் என, கொஞ்சம் குணம் நிரம்பியவர் என்று கூறப்படுவதில்லை. சர்வ குணங்களும் நிரம்பியவர், 16-கலைகள் நிரம்பியவர்! 14-கலைகள் என்று சொல்வதில்லைதானே? புருஷோத்தமர் என்று சொல்கின்றனர், சாதாரணமான புருஷ் (ஆத்மா) என்று சொல்வதில்லை. ஆத்மாக்களிலும் உத்தமர் எனில் சர்வ என்றால் நீங்கள் சம்பன்னம், சம்பூர்ணம் ஆகி விட்டீர்கள். ஏனெனில் தந்தை சர்வ சக்திவான் என்பதால் நீங்கள் அனைவரும் கூட 'சர்வ' என ஆகி விட்டீர்களா -சர்வ குண சம்பன்ன, மாஸ்டர் சர்வ சக்திவான்! எனில் அவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறதா?எப்படியிருந்தாலும், கேட்காமல் எது கிடைத்தாலும் அது நல்லதாகக் கருதப்படுகிறது. தந்தையும் ஆஸ்தியின் அதிகாரத்தின் ரூபத்தில் அனைத்தையும் கொடுத்து விட்டார், உரிமையையும் குறைக்கவில்லை. ஏதாவது குறை உள்ளதா? ஒரு சிறிய வீடு உள்ளது, இதை விட இன்னும் சிறந்த, ஒரு பெரிய வீடு இருக்க வேண்டும் -இவ்வாறு நீங்கள் நினைக்கிறீர்களா? பெரிய வீடு கிடைத்தால் ஒரு கீதா பாடசாலை திறந்து விடுவேன் -இப்படி நினைக்கிறீர்களா? இவ்வாறு கேட்கிறீர்களா? எதையும் கேட்கக் கூடாது. கேட்பதால் கிடைக்கப் போவதில்லை ஏனெனில் கேட்பது என்றாலே ஆசை! இது எல்லைக்குட்பட்ட ஆசையாயிற்று தானே. சேவை மனப்பான்மையாக இருக்கலாம் ஆனால் 'கேட்பது' -இது சரியானதல்ல! கேட்க வேண்டிய அவசியமில்லை; ஒருவேளை எல்லையற்ற சேவையின் நினைவு, எவ்வித

எல்லைக்குட்பட்ட ஆசைகளற்றதாய் இருந்தால், அது நிச்சயமாக நிறைவேறும். ஆசைப் படுபவரின் ஆசை நிறைவேறாது! ஆனால் நல்லவராக மாறுபவரின் ஆசை நிறைவேறும், அது தானாகவே பிராப்தியாகும். இதற்காக எதையும் கேட்கத் தேவையில்லை. பிராப்தி சொரூபமானவர்களா? இல்லை கேட்கும் சொரூபமானவர்களா? சுப ஆசைகள் தானாக நிறைவேறும். என்ன நடக்கும், எப்படி நடக்கும் என்று கூட அவர்கள் யோசிக்க மாட்டார்கள், ஆனால் தானாகவே அது நடக்கும். நாம் இவ்வளவு உயர்ந்த பிராமணர் ஆவோம்னு யோசித்துப் பார்த்தீங்களா? யோசிக்கவில்லை ஆனால் சகஜமாக ஆனீர்கள் அல்லவா! எப்போதும் நிறைவாக இருங்கள். நிறைவான ஆத்மா ஆடாது! நிறைவில்லை எனில் குழப்பம் உண்டாகும். இந்த நேரத்திலும் நீங்கள் நிறைவாக ஆகி விட்டீர்கள், பின்பு எதிர்காலத்தில் ராஜ்யத்தை ஆளும்போது எவ்வளவு நிறைந்து இருப்பீர்கள்! பற்றாக்குறையே இருக்காது. மேலும் நீங்கள் பூஜைக்குத் தகுதியானவர்களாக ஆகும்போது, உங்கள் கோவில்களும் எவ்வளவு நிரம்பி விடும்! பாரதத்தின் கோவில்களில் இருந்து மற்றவர்கள் பணக்காரர்களாக ஆனார்கள். எப்போது உங்கள் ஜட ஸித்திர கோவில்களும் இவ்வளவு நிரம்பியபோது, நீங்கள் எவ்வளவு நிரம்பியவராக இருந்திருப்பீர்கள்! அபிராப்தி என்பதன் பெயர் அடையாளமே இருக்காது. சத்யுகத்தில் அபிராப்தி ஏதேனும் இருக்குமா? இப்போது ஏதாவது அபிராப்தி உள்ளதா? எல்லாம் கிடைத்து விட்டது! சரி, சத்யுகத்தில் தந்தை (சிவபாபா) இருப்பாரா? எனில் அபிராப்தி ஆனதா? இல்லையா? ஆனது தானே! எனவே, சத்யுகத்தை விட, அதிகமாக எல்லா பிராப்திகளும் இப்போது உள்ளன. எவ்வளவு குஷி! எவ்வளவு பெருமிதம்! நாம் தான் அரை கல்பம் ராஜ்ய அதிகாரி ஆகிறோம், அரை கல்பம் பூஜைக்குரிய ஆத்மாக்களாகிறோம் மேலும் சங்கம யுகத்தில் அனைத்து பிராப்திகளும் நிறைந்த ஆத்மாக்களாகிறோம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எனவே முழு கல்பமும் நிரம்பியவர் ஆகிறீர்கள், இல்லையா? ஏனெனில் இந்த சமயத்தின் சம்பன்னதா தான் கல்பம் முழுவதும் ராஜ்யத்தின் ரூபத்திலும், பூஜைக்குரிய ரூபத்திலும் தொடர்கிறது. பாருங்கள், இப்போது கூட, கலியுகம் இறுதியிலும், நீங்கள் காய்ந்த ரொட்டி சாப்பிடுவீர்கள், ஆனால் தேவதைகளுக்கு நல்ல பிரசாதம் ('போக்') செய்வீர்கள். மனிதர்களுக்கு வாழ இடம் இருக்காது, அவர்கள் நடைபாதைகளில் தூங்குகிறார்கள், குடிசைகளில் தூங்குகிறார்கள் ஆனால் உங்கள் ஜட ஸித்திரங்கள்

விதிப்பூர்வமாக கோவில்களில் இருக்கின்றன! மனிதர்களுக்கு வாழ இடம் கிடைக்கவில்லை எனினும் உங்கள் ஜட ஸித்திரங்களுக்கு இடம் கொடுக்கின்றனர்! எத்தனை பெரிய பெரிய கோவில்கள் உள்ளன? அதில் எத்தனை சிலைகள் உள்ளன! மூன்று அடி நிலம் தேவை ஆனால் எவ்வளவு பெரிய கோவில் கட்டுகிறார்கள். எனவே இந்த கடைசி பிறவியில் கூட, ஆத்மாக்கள் நீங்கள் எவ்வளவு சம்பன்னமாக இருக்கிறீர்கள்! ஜட ஸித்திரங்கள் கூட உங்களது சம்பன்ன நிலைதான், எனவே சைதன்யத்திலும் சம்பன்னமானவர்களா! முழு கல்பத்தின் சிரேஷ்ட பாக்கியம் இப்போது கிடைத்துக் கொண்டுள்ளது. கிடைத்தும் விட்டது! பாக்கிய விதாதா ஒவ்வொரு குழந்தையின் அதிர்ஷ்டத்தின் ரேகையை வரைந்து விட்டார். முழு கல்பமும் பெயர் புகழ் எனில் அவ்வளவு பெருமிதம் அடைகிறீர்களா? நமக்குதான் பூஜை நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குப் புரிகிறதா? யாருக்குப் பூஜை நடந்து கொண்டிருக்கிறது? உங்களுடைய கோவிலா? அல்லது பெரிய பெரிய மஹாரதிகளின் கோவிலா? யார் பிராமணன் ஆகிறாரோ, அவர் பிராமணன் -to- தேவதை ஆகிறார் மேலும் தேவதையிலிருந்து நிச்சயமாக பூஜைக்குத் தகுதியானவராகிறார். நம்பர்வாரியாக இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நிச்சயமாக பூஜைக்குத் தகுதியானவர்கள் ஆகிறார்கள். கோவில்களும் நம்பர்வாரியாக, இல்லையா? சில கோவில்களில் வழிபாடு எவ்வளவு முறையாக செய்யப்படுகிறது மேலும் சில கோவில்களில் எப்போதாவது வழிபாடு செய்யப்படுகிறது. சில நேரங்களில் நினைவில் இருப்பவரின் சிலை சில சமயங்களில் வழிபடப்படுகிறது மேலும் எப்போதும் நினைவில் இருப்பவர்கள், எப்போதும் ஸ்ரீமத்தைப் பின்பற்றுபவர்களின் வழிபாடும் எப்போதும் செய்யப்படுகிறது. யார் ஒவ்வொரு செயலிலும் கர்ம யோகி ஆகிறாரோ, அவருக்குப் பூஜையும் அவரது ஒவ்வொரு செயலுக்கும் செய்யப்படுகிறது. பெரிய பெரிய கோவில்களில், ஒவ்வொரு செயலுக்கும் பூஜை நடைபெறுகிறது -உணவுக்கும் (நைவேத்யம்) பூஜை, ஊஞ்சலாட்டும்போதும் பூஜை, தூங்கப் போகும்போதும் (பள்ளி அறை) பூஜை, எழுந்திருக்கும் போதும் பூஜை! எனவே, எந்தளவு நினைவோ, அந்தளவு ராஜ்யம் மற்றும் பூஜை! இப்போது தன்னைத்தானே உங்களை கேட்டுக் கொள்ளுங்கள், நான் எந்தளவு நினைவில் இருக்கிறேன்? நல்லது.

**வரதானம்: ஞானம் நிறைந்தவராகி வீணானதைப் புரிந்து, நீக்கும் மற்றும் மாற்றம் செய்யக்கூடிய இயல்பான யோகி ஆகுக!**

இயல்பான யோகி ஆவதற்காக மனம் மற்றும் புத்தியை வீணானதிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக வையுங்கள். இதற்காக ஞ னம் நிறைந்ததின் கூடவே சக்தி நிறைந்தவராகவும் ஆகுங்கள். ஞானத்தின் ஆதாரத்தில் இது தவறு, இது சரி, இது அப்படியிருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள் ஆனால் உள்ளே நிரப்பி வைக்காதீர்கள். ஞானம் என்றால் அறிவு மேலும் யாருக்கு அறிநது கொள்ளவும் தெரியுமோ, அழிக்கவும் மற்றும் மாற்றவும் தெரிகிறதோ அவரைத்தான் அறிவாளி என்று கூற முடியும். அப்படி எப்பொழுது வீணான உள்ளுணர்வு, வீணான எண்ண அதிர்வுகளை அர்ப்பணம் செய்வீர்களோ அப்பொழுதுதான் இயல்பான யோகி என்று சொல்ல முடியும்

**சுலோகன்: அலட்சியமானவராக வீணானவைகள் மேல் இருங்கள்; மரியாதைகள் மேல் இல்லை!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 10.12.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பூர்வஜ் (மூதாதையர்) மற்றும் பூஜைக்குரியவர் என்ற நினைவில் இருந்து அனைவரின் தெய்வீக வளர்ப்பைச் செய்யுங்கள்!

இன்று உலகைப் படைக்கும் தந்தை தன்னுடைய உயர்ந்த படைப்பை பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்துப் படைப்புகளிலும் உயர்ந்த படைப்பு பிராமண ஆத்மாக்கள் நீங்கள் ஏனென்ற நீங்கள் தான் உலகின் பூர்வஜ் (முதாதையர்) ஆத்மாக்கள். ஒரு பக்கம் பூர்வஜ், கூட பூஜைக்குரிய ஆத்மாக்களும் தான். இந்த கல்ப மரத்தின் அஸ்திவாரம் அதாவது வேர் பிராமணர்கள் நீங்கள் தான். இந்த மரத்தின் மூல ஆதாரமான ஆத்மாக்கள் தண்டு கூட நீங்கள் தான். எனவே நீங்கள் அனைத்து ஆத்மாக்களுக்காக பூர்வஜ் ஆவீர்கள். படைப்புச் சக்கரத்தினுள் தர்மத்தந்தைகள் என்று யார் யார் அழைக்கப்படுகிறார்களோ அந்த தர்மத் தந்தைகளுக்கும் கூட பூர்வஜ் ஆத்மாக்களாகிய உங்கள் மூலமாகத் தான் தந்தையின் செய்தி கிடைக்கிறது. அந்த ஆதாரத்தில் தான் அந்த தர்மத்தந்தைகள் அந்தந்த நேரத்தில் அவர்களுடைய தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாகளுக்காக செய்தி கொடுப்பதற்கு பொறுப்பாளர்கள் ஆகிறார்கள். எப்படி தந்தை பிரம்மா முப்பாட்டனாராக இருக்கிறார் என்றால் பிரம்மாவுடன் நீங்கள் பிராமண ஆத்மாக்களும் துணையாக இருக்கிறீர்கள். எனவே பூர்வஜ் ஆத்மாக்கள் என்று நீங்கள் மகிமை செய்யப்படுகிறீர்கள்,

பூர்வஜ் ஆத்மாக்களுக்கு அனைத்து ஆத்மாக்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருக்கிறது. எப்படி மரத்தின் அனைத்து கிளைகள், இலைகளின் தொடர்பு வேர் மற்றும் தண்டுடன் அவசியம் இருக்கிறது. அரைக் கல்பம் இராஜ்ய அதிகாரி ஆனதற்குப்

பிறகு பூஜைக்குரிய ஆத்மாக்களாக ஆகிறீர்கள். பூஜைக்குரியவர்களாக ஆவதில் கூட ஆத்மாக்கள் உங்களுக்கு நடப்பது போன்ற பூஜை வேறெந்த தர்ம ஆத்மாக்களுக்கும் நடப்பதில்லை. எப்படி பூஜைக்குரிய ஆத்மாக்கள் உங்களுக்கு விதிப்பூர்வமாக பூஜை நடக்கிறது. அந்த மாதிரி வேறு எந்த தர்மத்தந்தைக்குக்கூட பூஜை நடப்பதில்லை. தந்தையின் காரியத்தில் எந்த பிராமண ஆத்மாக்கள் தேவதை மற்றும் தேவி ரூபத்தில் விதிப்பூர்வமாகப் துணைவர்களாக ஆகிறார்களோ அவர்களுக்கும் பூஜை நடக்கிறது. மேலும் வேறெந்த தர்மத் தந்தையின் துணைவர்கள் தர்மத்தை வளர்க்கக்கூடிய ஆத்மாக்களுக்கு விதிப்பூர்வமாக பூஜை நடப்பதில்லை, மகிமை செய்யப்படுகிறது. சிலைகள் வடிக்கிறார்கள் ஆனால் உங்களுக்குப் நடப்பதுபோல் பூஜை நடப்பதில்லை.

உங்களுக்கு மகிமையும் செய்யப்படுகிறது என்றால் பூஜையும் செய்யப்படுகிறது. மகிமை செய்வதின் விதி கூட பிராமண ஆத்மாக்கள் உங்களுடையது மற்ற அனைத்தையும் விட வேறுபட்டது. எப்படி தேவ ஆத்மாக்களினுடைய மகிமை மிக அழகான வடிவத்தில் கீர்த்தனையில் ரூபத்தில் நடக்கிறது, ஆர்த்தியின் ரூபத்தில் நடக்கிறது. அந்த மாதிரி மற்ற ஆத்மாக்களின் மகிமை இந்த மாதிரி நடப்பதில்லை. அப்படி ஏன் நடக்கிறது? ஏனென்றால் உயர்ந்த படைப்பாகிய நீங்கள் பூர்வஜ் மற்றும் பூஜைக்குரியவர்கள். ஆதி (முதல்) ஆத்மாக்கள் பிராமண ஆத்மாக்கள் நீங்கள். ஏனென்றால் ஆதிதேவ் பிரம்மாவின் உதவியாளராக உயர்ந்த காரியத்தின் பொறுப்பாளர் ஆகிறீர்கள். அனாதி ரூபத்தில் (பரம்தாமத்தில்) கூட பரம் ஆத்மாவின் மிக அருகில் இருக்கக்கூடியவர்கள். ஆத்மாக்களின் படம் காண்பிக்கிறீர்கள் இல்லையா? அதில் மிக அருகில் இருக்கும் ஆத்மாக்களாக யாரைக் காண்பிக்கிறீர்கள்? அதில் நீங்கள் இருக்கிறீர்கள். அப்படி அனாதி ரூபத்திலும் மிக அருகில் நீங்கள் இருக்கிறீர்கள். இதைத் தான் வெளிநாட்டினர் நியரஸ்ட் (அருகில் இருப்பவர்கள்) மற்றும் டிரஸ்ட் (அன்பானவர்கள்) என்று கூறுகிறார்கள். அப்படி உங்களை நினைக்கிறீர்களா?

பூர்வஜமானவர்களின் வேலை என்னவாக இருக்கிறது? பூர்வஜமானவர்கள் அனைவரது பாலனை (வளர்ப்பை) செய்கிறார்கள். பெரியோர்களின் பாலனைதான் பிரஸித்தி பெற்றது. அனைத்து பூர்வஜ்

ஆத்மாக்கள் நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் பாலனை செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது உங்களிடம் வரும் மாணவர்களின் பாலனை மட்டும் செய்து கொண்டிருக்கிறீர்களா? மற்றும் உறவு நெருக்கத்தில் வரும் ஆத்மாக்களின் பாலனை செய்து கொண்டிருக்கிறீர்களா? முழு உலகத்து ஆத்மாக்களின் முன்னோர்கள் நீங்கள், அல்லது பிராமண ஆத்மாக்களுக்கு மட்டும் முன்னோர்களா? வேர் மற்றும் தண்டு இருக்கிறது அல்லவா? அது மரத்திற்காக இருக்கிறதா? அல்லது தன்னுடைய தண்டிற்காக மட்டும் இருக்கிறதா? அனைத்து கிளைகள், இலைகளுக்காக இருக்கிறது இல்லையா? வேர் மற்றும் தண்டு மூலமாக முழு மரத்தின் இலைகளுக்கு தண்ணீர் கிடைக்கிறது. அல்லது கொஞ்ச கிளைகள் இலைகளுக்கு மட்டும் தண்ணீர் கிடைக்கிறதா? அனைவருக்கும் கிடைக்கிறது இல்லையா? கடைசியில் வரும் இலைக்குக் கூட கிடைக்கிறது. அந்த அளவிற்கு எல்லைக்கப்பாற்பட்ட போதை இருக்கிறதா? அல்லது எல்லைக்கு அப்பாற்பட்டதிலிருந்து எல்லைக்குள் வந்து விடுகிறீர்களா? எவ்வளவு சேவை செய்ய வேண்டியது இருக்கிறது, ஒவ்வொரு இலைக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் அதாவது அனைத்து ஆத்மாக்களின் பாலனை செய்வதற்கு பொறுப்பாளர் நீங்கள் தான்.

வேறெந்த தர்ம ஆத்மாக்களை சந்திக்கிறீர்கள் அல்லது பார்க்கிறீர்கள் என்றாலும் ஹே பூர்வஜ் ஆத்மாக்களே! இந்த அனைத்து ஆத்மாக்களும் நம்முடைய முப்பாட்டனாரின் வம்சாவளி என்று அனுபவம் செய்கிறீர்களா? பிராமண ஆத்மாக்கள் நாமும் கூட மாஸ்டர் முப்பாட்டனார் அதாவது பூர்வஜ்மானவர்கள். இவர்கள் அனைவரும் நம்முடையவர்கள் என்று அனுபவம் ஆகிறதா அல்லது பிராமண ஆத்மாக்கள் மட்டும் நம்முடையவர்களா? அனைவரும் சகோதர சகோதரன் என்று அறிகிறீர்கள் என்றால் பூர்வஜ் ஆத்மாக்கள் நீங்கள் முத்த சகோதரன் அதாவது தந்தைக்குச் சமமானவர்கள். இந்த நினைவைத் தான் நடைமுறை வாழ்க்கையில் அனுபவம் செய்ய வேண்டும், செய்விக்க வேண்டும். அனைத்து பூர்வஜ் ஆத்மாக்கள் உங்களுடைய பாலனையின் சொரூபம் என்ன? லௌகீக வாழ்க்கையில் கூட பாலனையின் ஆதாரம் என்னவாக இருக்கிறது? பாலனை செய்வது என்றால் யாரையாவது சக்திசாலி ஆக்குவது. எந்த விதி மூலமாகவும் சாதனம் மூலமாகவும் பாலனையால் சக்திசாலி ஆக்குகிறார்கள். அது உணவு மூலமாகவும் இருக்கலாம். படிப்பு

மூலமாகவும் இருக்கலாம் ஆனால் பாலனையின் பிரத்யக்ஷ சொரூபமாக ஆத்மாவில் மற்றும் உடலில் சக்தி வருகிறது. அப்படி பாலனையின் பிரத்யக்ஷ சொரூபம் சக்திசாலியாக ஆக்குவது ஆனது.

பூர்வஜ் ஆத்மாக்கள் உங்களின் பாலனைக்கான விதி என்னவாக இருக்கிறது? தந்தை மூலமாக தனக்கு கிடைத்துள்ள அனைத்து சக்திகளை மற்ற ஆத்மாக்களில் நிரப்புவது தான் தெய்வீகப் பாலனையின் சொரூபமாகும். எந்த ஆத்மாவிற்கு எந்த சக்தி தேவையாக இருக்கிறதோ அந்த நேரம் அந்த சக்தி மூலமாக அவரை பாலனை செய்ய தெரியுமா? பூர்வஜ்மானவர்கள் தான் இல்லையா. அனைவரும் பூர்வஜ் ஆத்மாக்களா? அல்லது சிறியவர்களா? அனைவரும் பூர்வஜமானவர்களா? அல்லது ஏதாவது விசேஷ ஆத்மாக்களா? அப்படியானால் பூர்வஜமானவர்களுக்கு பாலனை செய்யத் தெரியுமா? சென்டரின் பாலனை மட்டும் செய்கிறீர்களா? அல்லது இந்த உலகத்தின் ஆத்மாக்களையும் பாலனை செய்கிறீர்களா? குடும்பத்தை மட்டும் பாலனை செய்கிறீர்களா? அல்லது உலகத்தின் பாலனை செய்கிறீர்களா? இந்த நேரம் பூர்வஜ் ஆத்மாக்கள் உங்களுடைய பாலனை அனைத்து ஆத்மாக்களுக்கும் அவசியமாக இருக்கிறது.

என்னென்ன நடந்து கொண்டிருக்கிறதோ அந்த செய்திகளை மிகுந்த ஆர்வத்தோடு கேட்கிறீர்கள் (அயோத்தியாவில் நடந்த சம்பவத்திற்கு பிறகு சில சில இடங்களில் வன்முறை நடந்தது). அப்படியானால் செய்தி கேட்ட பின்பு பூர்வஜ் ஆத்மாக்கள் அனைவரின் பாலனை செய்தீர்களா? அமைதியில்லாத நேரத்தில் பூர்வஜ் ஆத்மாக்கள் உங்களின் விசேஷ காரியம் தானாக நடந்து விடுகிறது. அதனால் ஹே பூர்வஜ் ஆத்மாக்களே! உங்களுடைய பாலனையின் சேவையில் ஈடுபட்டு விடுங்கள். எப்படி அமைதியில்லாத நேரத்தில், அமைதியில்லா நிலையை அமைதி ஆக்குவது நம்முடைய காரியம் என்று முக்கியமாக காவல் படையினரும் இராணுவத்தினரும் நினைக்கிறார்கள். ஆணைப்படி வந்து சேர்ந்து விடுகிறார்கள். மேலும் அந்த மாதிரி நேரத்தில் விசேஷ சுவனத்தோடு தங்களுடைய சேவைக்காக தயார் நிலையில் இருப்பார்கள். நீங்கள் அனைத்து குழப்பங்களின் செய்தியையோ கேட்டீர்கள், ஆனால் சேவைக்காக தயார் ஆனீர்களா? வரும் குழப்பங்களின் செய்தியையோ கேட்டீர்கள் ஆனால் சேவைக்காக தயாரானீர்களா? அல்லது கேட்டதின்

ஆனந்தத்தை மட்டும் எடுத்தீர்களா? உங்களுடைய பூர்வஜ்தன்மை நினைவில் வந்ததா? அனைத்து ஆத்மாக்களுக்கும் அமைதியின் சக்தி மூலமாக பாலனை செய்தீர்களா? அல்லது இந்த இடத்தில் இது நடந்தது அந்த இடத்தில் இது நடந்தது என்று யோசித்துக் கொண்டு இருந்தீர்களா? அந்த மாதிரி நேரத்தில் விசேஷ ஆத்மாக்களின் சேவையின் அவசியமாக இருக்கிறது. தன்னுடைய உள்ளுணர்வு மூலமாக விசேஷமாக சேவை செய்தீர்களா? அல்லது எப்பொழுதும் போல் விதிப்பூர்வமாக நினைவில் இருக்கிறீர்கள், சேவை செய்கிறீர்கள் அதே மாதிரி செய்தீர்களா? நீங்கள் ஆன்மீக சமூக சேவகரும்தான். அப்படி ஆன்மீக சமூக சேவகர்கள் தன்னுடைய விசேஷ அதிகப்படியான சமூக சேவை செய்தீர்களா? அந்த அளவு தன்னுடைய பொறுப்பை உணர்ந்தீர்களா? அல்லது புரோகிராம் கிடைத்தது என்தால் செய்வீர்களா? அந்த மாதிரியான நேரத்தில் ஒரு நொடியில் தன்னுடைய சேவைக்காகத் தயாராக வேண்டும். இது தான் பூர்வஜ் ஆத்மாக்கள் உங்களுடைய பொறுப்பு ஆகும்.

இப்பொழுது கூட உலகத்தில் குழப்பமான சூழ்நிலை இருக்கிறது. மேலும் இந்த நிலை வர வர அதிகரித்துக் கொண்டே இருக்கும். அந்த மாதிரியான நேரத்தில் ஆத்மாக்களுக்கு முக்கியமாக அமைதி சக்தி, சகித்துக்கொள்ளும் சக்தியின் துணிவை நிரப்ப வேண்டும். லைட் ஹவுஸ் ஆகி அனைவருக்கும் அமைதியின் லைட் கொடுக்க வேண்டும். புரிந்ததா? என்ன செய்ய வேண்டுமென்று? இப்பொழுது உங்களுடைய பொறுப்பு மற்றும் கடமையை இன்னும் அதிகமாக பாலனை செய்யுங்கள் அதன் மூலமாக ஆத்மாக்களுக்கு ஆன்மீக சக்தியின் தீர்வு கிடைக்கட்டும். துக்க அக்னியில் எரிந்து கொண்டிருக்கும் அவர்கள் குளிர்ந்த நீர் நிரம்புவதின் அனுபவம் செய்யட்டும். இந்த கடமையைச் செய்ய முடியுமா? தூரத்திலிருந்தும் செய்ய முடியுமா? அல்லது எப்பொழுது எதிரில் வருகிறதோ அப்பொழுது செய்வீர்களா? செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது குழப்பம் எப்படி அதிகம் ஆனதோ அப்பொழுது உங்களுடைய சேவையும் இன்னும் வேகமாக இருக்க வேண்டும். புரிந்ததா? பூர்வஜ் ஆத்மாக்களின் பாலனை என்னவென்று? பூர்வஜ்மானவர்கள் ஆனால் பாலனை செய்ய முடியாது என்று அப்படி இருக்க வேண்டாம். பாலனை மூலமாக சக்தி கொடுப்பது தான் பூர்வஜ்மானவர்களின் வேலையே. உயர்ந்த சக்திசாலியான நிலை

மூலமாக சூழ்நிலையைக் கடப்பதற்கான சக்தியின் அனுபவம் செய்வியுங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து ஆதிதேவ் பிரம்மாவின் உதவியாளர்கள் ஆத்மாக்களுக்கு, அனைத்து ஆத்மாக்களின் அஸ்திவாரமாகிய பூர்வஜ் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து ஆத்மாக்களுக்காக எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் உயர்ந்த உள்ளுணர்வு வைக்கும் ஆத்மாக்களுக்கு, அனைத்து ஆன்மீக சமூக சேவாதாரி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தாதிகளுடன் சந்திப்பு:** இப்பொழுதைய நேரத்தில் அமைதியில்லா ஆத்மாக்களுக்கு அமைதி கொடுப்பது தான் அனைவரின் முக்கியமான காரியம் ஆகும். இரக்கமனமுடைய தந்தையின் குழந்தைகளுக்கு அனைத்து ஆத்மாக்களின் மேல் இரக்கம் வருகிறது இல்லையா? இரக்க மனம் உடையவர் என்ன செய்கிறார்? இரக்கத்தின் அர்த்தமே ஏதாவது ஒரு வகையில் தைரியம் கொடுப்பது, பலமில்லாத ஆத்மாக்களுக்கு பலம் கொடுப்பது. அப்படி ஆத்மாக்களின் துக்கமான எண்ணம் மாஸ்டர் சுக வள்ளல் ஆத்மாக்களிடம் வந்து சேரவே செய்கிறது. எப்படி அங்கு துக்கத்தின் அலை இருக்கிறதோ அதே போல் விசேஷ ஆத்மாக்களில் கொடுக்க வேண்டும், ஏதாவது செய்ய வேண்டும் என்று சேவையின் விசேஷ அலை பாயட்டும். என்ன செய்தார்கள் என்று ஒவ்வொருவரின் சேவையின் எக்ஸ்ட்ரா சார்ட்டை செக் பண்ண வேண்டும். சாதாரண சேவை எப்படி நடந்து கொண்டிருக்கிறதோ அது நடக்கத்தான் செய்யும் ஆனால் இந்த நேரம் வாயுமண்டலம் மூலமாக, உள்ளுணர்வு மூலமாக சேவை செய்வதற்கான விசேஷ கவனம் வையுங்கள். இதன் மூலமாக தன்னுடைய நிலையும் தானாகவே சக்திசாலி ஆகி விடும். அந்த மாதிரி அலையைப் பரப்பினீர்களா? உலகின் இராஜா ஆகுகிறீர்கள் என்றால் அனைத்து ஆத்மாக்களுக்காக அலை பரப்ப வேண்டும் இல்லையா? எந்தவொரு ஆத்மாவும் வஞ்சிக்கப்பட்டு இருந்து விடக் கூடாதுதான். மற்ற தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக்களாக இருந்தாலும் அவர்களும் உங்களுடைய வம்சாவளிதான். எந்தவொரு தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாவானாலும் வேர் ஒன்றே தான் இல்லையா? இந்த அலை இருக்கிறதா? (இல்லை என்று பதில்) அடென்ஷன் ப்ளீஸ்.

**பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: வீணானதில் பிரபாவத்தில் வருபவர்களாக இல்லாமல் தன்னுடைய உயர்ந்த பிரபாவத்தை ஏற்படுத்துபவர்கள் ஆகுங்கள்!**

எப்பொழுதும் தன்னை முயற்சி செய்வதில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? முயற்சி செய்வதில் சில நேரம் நிற்கும் கலை, சில நேரம் இறங்கும் கலை என்று அந்த மாதிரி இருக்கக்கூடாது. சில நேரம் மிக நன்றாக, சில நேரம் நன்றாக, சில நேரம் கொஞ்சம் நன்றாக என்று அப்படி இருக்கக்கூடாது. எப்பொழுதும் மிக நன்றாக இருக்க வேண்டும். ஏனென்றால் நேரம் குறைவு மேலும் சம்பூர்ணம் ஆவதின் இலக்கு உயர்ந்ததாக இருக்கிறது. எனவே தன்னுடைய முயற்சி செய்வதின் வேகத்தையும் அதிகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. முயற்சி செய்வதின் வேகம் அதிகமாக இருப்பதின் அடையாளம் அவர் எப்பொழுதும் டபுள் லைட் ஆக இருப்பார். எந்த விதமான சுமையும் அனுபவம் ஆகாது. இயற்கை மூலமாக ஏதாவது சூழ்நிலைகள் வந்தாலும், நபர்கள் மூலமாக ஏதாவது சூழ்நிலைகள் வந்தாலும் ஒவ்வொரு சூழ்நிலையும் சுயநிலைக்கு முன்பு எதுவுமே அனுபவம் ஆகாது. சுயநிலையின் சக்தி மற்ற வெளி நிலைகளை விட மிக உயர்ந்தது, ஏன்? உங்களுடைய சக்தியை மறந்து விடுகிறீர்கள் அப்பொழுது தான் சூழ்நிலை பெரியதாக தென்படுகிறது. எப்பொழுதும் டபுள் லைட்டின் அர்த்தமே உயர்ந்த இடத்தில் இருப்பவர் என்பதாகும். லேசாக இருப்பவர் எப்பொழுதும் உயர்வாகச் செல்வார், சுமையுள்ளவர் எப்பொழுதும் கீழே வருவார். அரைக் கல்பமோ கீழேயே வந்து கொண்டிருந்தீர்கள் இல்லையா? ஆனால் இப்பொழுது உயர்வாக செல்வதற்கான நேரம். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? எப்பொழுதும் மேலே இருக்க வேண்டும். உடலில் கூட பாருங்கள் ஆத்மாவின் இருப்பிடம் மேலே இருக்கிறது. உயர்ந்த இடத்தில் இருக்கிறது. எப்படி உடலில் ஆத்மாவின் இடம் உயர்ந்ததாக இருக்கிறதோ அதே போல் நிலையில் கூட எப்பொழுதும் உயர்வாக இருக்கட்டும். பிராமணர்களின் அடையாளம் கூட உயர்ந்த இடத்தில் குடுமியைத் தான் காண்பிக்கிறார்கள். குடுமியின் அர்த்தம் உயர்வானவர். அப்படி நிலை உயர்வாக இருக்கிறது எனவே ஸ்தூல அடையாளங்கள் காண்பித்திருக்கிறார்கள். சூத்திரனை கீழே கண்பிக்கிறார்கள். பிராமணனை உயர்வாக காண்பிக்கிறார்கள். அப்படி பிராமணர்களின் இடம் மற்றும் நிலை இரண்டும் உயர்வானது. ஒருவேளை இடத்தின்

நினைவு இருக்கிறது என்றால் நிலையும் இயல்பாகவே உயர்ந்ததாக இருக்கும். பிராமணர்களின் பார்வையும் எப்பொழுதும் மேலே இருக்கிறது ஏனென்றால் ஆத்மா. ஆத்மாக்களைப் பார்க்கிறது, ஆத்மா மேலே இருக்கிறது என்றால் பார்வையும் மேலே செல்லும். எப்பொழுதாவது யாரையாவது சந்திக்கிறீர்கள் அல்லது பேசுகிறீர்கள் என்றால் ஆத்மாவைப் பார்த்து பேசுகிறீர்கள், ஆத்மாவுடன் பேசுகிறீர்கள். உங்களுடைய பார்வை ஆத்மாவின் பக்கம் போகிறது. ஆத்மா நெற்றியில் இருக்கிறது இல்லையா. எனவே உயர்ந்த நிலையில் நிலைத்திருப்பது சுலபமாகும். எப்பொழுது அந்த மாதிரியான நிலை ஆகி விடுகிறது என்றால் கீழே உள்ள சூழ்நிலைகளிலிருந்து எப்பொழுதும் தூரத்தில் இருப்பார். அதன் பிரபாவத்தில் வர மாட்டார். நல்ல பிரபாவம் உங்கள் மேல் ஏற்படுகிறதா அல்லது கெட்டதும் கூட ஏற்பட்டு விடுகிறதா? ஒருவேளை குடும்பத்தில் மோசமான சூழ்நிலை இருக்கிறது என்றால் என்ன செய்கிறீர்கள்? பிரபாவம் ஆகி விடுகிறீர்களா? கெட்டதை நல்லதாக ஆக்குபவரா அல்லது பிரபாவத்தில் வருபவரா? ஏனென்றால் விரலைப் பிடித்தாகி விட்டது என்று மாயாவும் பார்க்கிறது. விரலுக்குப் பின்பு கையைப் பிடிக்கும், கைக்குப் பின்பு காலையும் பிடிக்கும். எனவே பிரபாவத்தில் வராதீர்கள். பிரபாவத்தில் வருபவர்களாக இல்லாமல் உயர்ந்த பிரபாவம் ஏற்படுத்துபவர்கள் நீங்கள். அப்படி பிராமண ஆத்மா என்றால் எப்பொழுதும் டபுள் லைட்டாக உயர்வாக இருப்பவர், இந்த நினைவிலேயே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். நல்லது.

அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? துக்கத்தின் அலை வரவில்லையே? அப்படி என்றால் யார் துக்கதாமத்தை விட்டுச் சென்று விட்டாரோ அவரிடம் துக்கத்தின் அலை எப்படி முடியும்? சங்கமயுகத்தில் துக்கதாமம் மற்றும் சுகதாமம் இரண்டின் ஞானம் இருக்கிறது. இரண்டின் ஞானம் நிறைந்த சக்திசாலியான ஆத்மாக்கள் நீங்கள். தவறாகக் கூட துக்கதாமத்தில் போக முடியாது. எப்பொழுதும் குஷியாக இருப்பவரிடம் துக்கத்தின் அலை ஒருபொழுதும் வர முடியாது. நல்லது, சேவை மற்றும் சுயமுன்னேற்றம் இரண்டின் சமநிலை வையுங்கள். சேவையிலேயே மூழ்கி விட்டு சுயமுன்னேற்றத்தை மறந்து விட்டோம் என்று அப்படி இருக்க வேண்டாம். சேவையின் ஆர்வம் அதிகமாக இருக்கிறது ஆனால் இரண்டின் சமநிலை வேண்டும். புரிந்ததா? நன்றாக போய்க்

கொண்டிருக்கிறோம் என்றாலும் நன்றாக என்பது வரை மட்டும் இருக்க வேண்டாம். இன்னும் நல்லதிலும் நல்லதாக இருக்க வேண்டும். நல்லது.

**குரூப்-2: பல உணர்வுகளை நீக்கி, சிரேஷ்ட ஆன்மீக உணர்வை தாரணை செய்யுங்கள்!** முன்னேறுவதற்கான மிக எளிதான வழி என்ன? எல்லோரும் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் எளிதான வழி என்ன? நினைவும் எளிதாக இருக்க வேண்டும், அதற்கான வழி என்ன? எளிதான வழி -மேரா பாபா! மேலும் வேறு எதையும் நினைவில் கொள்ளாதீர்கள், எல்லா நேரங்களிலும் ஒரே ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள் -மேரா பாபா. ஏனென்றால் மனம் அல்லது புத்தி எங்கே போகிறது? எங்கு எனது என்பது உள்ளதோ, அங்கு. ஒருவேளை தேகஉணர்வில் கூட வந்தால், ஏன் வருகிறீர்கள்? ஏனென்றால் அது என்னுடையது (மேரா). ஒருவேளை மேரா பாபா என்றிருந்தால், தானாகவே புத்தி 'மேரா'வை (பாபாவை) நோக்கி செல்லும். எளிதான வழி மேரா பாபா. விரும்பாவிட்டால்கூட என்னுடையது என்பது நினைவிற்கு வருகிறது. விரும்பவில்லை ஆனாலும் அது ஏன் நினைவிற்கு வருகிறது? என்னுடையது என்பது இழுக்கிறதல்லவா, விரும்பாவிடினும் இழுக்கிறது. எப்பொழுது நிச்சயத்துடன் இது நினைவில் இருக்கிறதோ -மேரா பாபா -பிறகு கஷ்டப்பட்டு முயற்சி செய்வதற்குப் பதிலாக, தானாகவே மேரா என்பது ஈர்க்கும். எனவே எளிதான வழிமுறையாக எது ஆயிற்று? அதனால்தான் 'ஒருவரை' மட்டும் நினைவில் கொள்ளுங்கள், அது மிகவும் எளிது. உறவு எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, அவ்வளவு நினைவும் எளிதாக இருக்கும் மேலும் சகஜமான விஷயம் நிரந்தரமாக இருக்கும். ஒருவேளை சகஜமாக இல்லையேல் அது நிரந்தரமாகவும் இருக்காது. ஒருவர் தொடர்ந்து எந்த கடின உழைப்பையும் செய்ய முடியாது. ஒருவருக்கு இரவும் பகலும் கடின உழைப்பை கொடுத்தால், அவர் அதை நிர்பந்தத்தால் செய்வாரே அன்றி அன்போடு செய்ய மாட்டார். அதனால் பாப்தாதா எளிதாக்கி கொடுக்கிறார். சகஜமானதால் நிரந்தரமாகச் செய்வது என்பது கடினமாக இருக்காது. சதா இந்த நினைவில் இருப்பவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஏனென்றால் தந்தையிடமிருந்து பிராப்தி ஆகிறது. அதனால், அடைந்ததில் மகிழ்ச்சி இருக்கிறதுதானே. எனவே மேரா பாபா என்ற நினைவில் இருப்பதன் நடைமுறை அடையாளம் மகிழ்ச்சி. என்ன நடந்தாலும் சரி மகிழ்ச்சி போகக் கூடாது.

ஏனெனில் அடைந்த பிராப்திக்கு முன்னால் அது ஒன்றுமே இல்லை. தந்தை என்றாலே ஆஸ்தி. தந்தையுடனான சம்பந்தம் ஏன் பிரியமானதாக உள்ளது? ஏனென்றால் ஆஸ்தி கிடைக்கிறது. எனவே, தந்தை என்று கூறும்போதே ஆஸ்தியும் நினைவுக்கு தானாகவே வருகிறது. தந்தையும் கிடைத்து விட்டார், ஆஸ்தியும் கிடைத்து விட்டது எனில் மகிழ்ச்சி தானே! அல்ப கால பிராப்தியின் மூலமும் குஷி கிடைக்கிறது ஆனால் இதுவோ அழியாத பிராப்தி ஆதலால் குஷியும் ஒருபோதும் அழியாததாக இருக்க வேண்டும். எனில் நீங்கள் சதா மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? அல்லது எப்போதாவதா? நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் அல்லவா? எது நம்முடைய பொருளோ அது ஒருபோதும் மறப்பதில்லை. சிறியதாக இருந்தாலும்கூட, அதை நீங்கள் மறந்து விடுவீர்களா? எனவே இந்த மகிழ்ச்சி உங்கள் பொக்கிஷம். தந்தையின் பொக்கிஷம் உங்கள் பொக்கிஷம். தனது விஷயத்தை மறக்க முடியாது எனில் நிரந்தர யோகியாக மாறுவது எளிது அல்லவா? இந்த சுலபமான முறையால், நீங்கள் மற்றவர்களையும் எளிதாக பிராப்தி அடையச் செய்ய முடியும். ஏனென்றால் நீங்கள் மகிழ்ச்சியைப் பெறும்போது, நிச்சயமாக மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பீர்கள். ஒருவருக்கு நல்ல பொருள் கிடைத்தது எனில் அதை பிறருக்குக் கொடுக்காமல் அவரால் இருக்க முடியாது. சதா தந்தையைப் போல் விலகியவராகவும் அன்பானவராகவும் அனுபவம் செய்கிறீர்களா? தந்தை அனைவருக்கும் பிரியமானவர், ஏன்? ஏனென்றால் விலகியிருப்பதால்! நீங்கள் எவ்வளவு விலகியவராகிறீர்களோ, அந்தளவு அனைவருக்கும் பிரியமானவராக ஆகிறீர்கள். யாரிடம் விலகியவர்? முதலில், உங்களது தேகத்தின் நினைவிலிருந்து விலகியவர்; நீங்கள் எந்தளவு தேகத்தின் நினைவிலிருந்து விலகியவராக இருக்கிறீர்களோ, அந்தளவு தந்தைக்கு அன்பானவராக, அனைவருக்கும் அன்பானவராக இருப்பீர்கள். ஏனெனில் விலகியிருப்பது என்றால் ஆத்ம அபிமானி நிலை! இடையில் தேக உணர்வு வரும்போது, அன்பானது முடிந்து விடுகிறது. எனவே, தந்தையைப் போலவே, சதா விலகியவராகவும் அனைவருக்கும் அன்பானவராகவும் இருங்கள். ஆத்மாவின் ரூபத்தில் யாரைப் பார்த்தாலும் ஆன்மீக அன்பு எழும், இல்லையா? மேலும் தேக உணர்வுடன் பார்த்தால், வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சியின் காரணமாக, பல உணர்வுகள் எழும் -அது சில சமயம் நல்லதாகவும், சில சமயம் மோசமாகவும் இருக்கும்; ஆனால் ஆத்மீக உணர்வில், ஆத்மீக

பார்வையில், ஆத்மீக உள்ளுணர்வில் இருப்பவர் யாருடைய சம்பந்தத்திலும் வந்தாலும் மிக அன்பாகவே இருக்கும். எனவே ஒரு நொடியில் நீங்கள் விலகியவராக மாற முடியுமா? அல்லது நேரம் எடுக்குமா? எவ்வாறு உடலில் வருவது மிக எளிதோ, அதே போல, உடலுக்கு அப்பால் இருப்பதும் அவ்வளவு எளிதாக இருக்க வேண்டும். எந்த ஒரு பழைய சுபாவம், சம்ஸ்காரமும் உங்களை அதன் பக்கம் கவர்ந்து இழுக்கக்கூடாது மேலும் ஒரு நொடியில் விலகியவராகி விட வேண்டும். இந்த பயிற்சியை நாள் முழுவதும் அடிக்கடி செய்யுங்கள். அப்படியில்லை, நினைவில் அமரும்போது மட்டுமே அசரீரி நிலையை அனுபவிப்பது. இல்லை, போகும்போதும் வரும்போதும் இந்த பயிற்சியை பக்கா ஆக்குங்கள் -நான் ஆத்மா தான்! எனில் ஆத்மாவின் ரூபம் அதிகமாக நினைவில் இருக்க வேண்டும், இல்லையா? சதா குஷியாக இருக்கிறது, இல்லையா? குறையக்கூடாது, அதிகரிக்க வேண்டும். இதற்கான சாதனத்தைக் கூறினேன் -மேரா பாபா! எதை வேண்டுமானாலும் மறந்து விடுங்கள், ஆனால் 'மேரா பாபா'வை மறந்து விடாதீர்கள். நல்லது!

இப்போது அந்த மாதிரி ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்யுங்கள் -குறைந்த செலவில் அதிக லாபம்! என்கிற மாதிரி. செலவும் குறைவாக இருக்க வேண்டும், ஓசையும் அதிகமாகப் பரவ வேண்டும். படக் கண்காட்சி, மேளா போன்ற கண்டுபிடிப்புகள் ஒரு கால கட்டத்தில் இருந்தது, புதுமையாகத்தானே இருந்தன; ஆனால் இப்போது அவை பழைய விஷயம் என்றாகி விட்டன. நாமும் இவ்வாறே செய்ய வேண்டும் என்று எல்லோரும் சொல்லும்படியாக ஏதாவது புதிய கண்டுபிடிப்புகளை செய்யுங்கள். நீங்கள் இப்போது அமைதியின் அனுபவத்தை செய்விப்பது அனைவரும் நன்றாக அனுபவம் செய்தார்கள் அல்லவா! அது போல சேவையில் ஏதாவது புதிய கண்டுபிடிப்புகளை செய்யுங்கள். மாநாடு அல்லது கண்காட்சி நடத்துவது என்பது இப்போது பழைய பட்டியலில் வந்து விட்டது. எனவே ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள், புரிந்ததா? சுயத்தையும் முன்னேற்றுங்கள், சேவையையும் முன்னேற்றுங்கள். ஏனெனில் கேட்டீர்களா, இப்போது எல்லையற்ற சேவையைச் செய்ய வேண்டும் என்று. அனைத்து மதங்களின் ஆத்மாக்களுக்கும் இந்த செய்தி சென்றடைய வேண்டும், எனில் இப்போது எவ்வளவு சேவை மீதம் உள்ளது! இப்போது சேவையை தீவிர வேகத்தில் அதிகரிக்கவும் ஆனால் முதலில் சுய முன்னேற்றம், பிறகு சேவை! சேவை மட்டுமல்ல ஆனால் சுய

முன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றம் -இரண்டும் ஒன்றாக இருக்கும்போது, சேவையின் வெற்றி அழியாது. இல்லையெனில், குறுகிய கால வெற்றியே கிடைக்கும். நல்லது! இப்போது நீங்கள் என்ன புதுமையை வெளிப்படுத்தப் போகிறீர்கள் என்பதைப் பார்ப்போம்.

**குரூப்-3: பரிஷ்தா ஆக வேண்டும் என்றால் அனைத்து பற்றுதல்களின் சங்கிலிகளை அகற்றுங்கள்!** தந்தைக்குச் சமமாக நிராகாரி (உடலற்ற) மற்றும் ஆகாரி (சூட்சும உடல்) நிலையில் நிலைத்திருக்கும் ஆத்மாக்களாக அனுபவம் செய்கிறீர்களா? ஏனென்றால் சிவபாபா நிராகாரியாக இருக்கிறார் மற்றும் பிரம்மாபாபா ஆகாரியாக (Subtle - சூட்சும) இருக்கிறார். அப்படி நீங்கள் அனைவரும் கூட சாகாரியாக (இவ்வுலகில் உடலில்) இருந்த போதிலும் நிராகாரி மற்றும் ஆகாரி அதாவது அவ்யக்த நிலையில் நிலைத்திருக்க முடியுமா? அல்லது சாகாரத்தில் அதிகம் வந்து விடுகிறீர்களா? எப்படி சாகாரத்தில் இருப்பது இயற்கையாகி விட்டதோ, அதே போல் நான் ஆகாரி பரிஷ்தா ஆவேன் மற்றும் நிராகாரி உயர்ந்த ஆத்மா ஆவேன் அப்படி இரண்டு நினைவுகளும் இயற்கையாகவே இருக்கட்டும். ஏனென்றால் யார் மேல் அன்பு இருக்கிறதோ அந்த அன்பின் அடையாளம் அவருக்குச் சமமாக ஆவது. பாப் (தந்தை) மற்றும் தாதா (மூத்த சகோதரர்) -நிராகாரி மற்றும் ஆகாரியாக இருக்கின்றனர், மேலும் இருவர் மேலும் அன்பு இருக்கிறது என்றால் சமமானவராக ஆக வேண்டும் இல்லையா? அப்படியானால் இந்த நேரம் ஆகாரி மற்றும் அடுத்த நேரம் நிராகாரி ஆவதற்கான பயிற்சியை எப்பொழுதும் செய்யுங்கள். சாகாரத்தில் வந்தும் கூட ஆகாரி மற்றும் நிராகாரி நிலையில் நான் எப்பொழுது விரும்புகிறேனோ அப்பொழுது நிலைத்திருக்க முடிய வேண்டும். எப்படி ஸ்தூலமான கர்ம இந்திரியங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கண்ணை மற்றும் வாயை மூட விரும்பினீர்கள் என்றால் செய்ய முடியும். அதே போல் மனம் மற்றும் புத்தியை எந்த நிலையில் விரும்புகிறீர்களோ அந்த நிலையில் நிலைத்திருக்கச் செய்ய முடிய வேண்டும். ஒருவேளை பரிஷ்தா ஆக விரும்பினீர்கள் என்றால் ஒரு நொடியில் பரிஷ்தா ஆகுங்கள் -- அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? அல்லது நேரம் எடுக்கிறதா? ஏனென்றால் குழப்பம் அதிகரிக்கிறது என்றால் அந்த நேரத்தில் எந்த நிலையை உருவாக்க வேண்டியதாக இருக்கும்? ஆகாரியா அல்லது நிராகாரியா? சாகார தேகதாரியின் நிலை தேர்ச்சி

பெற விடாது, தோல்வியடையச் செய்து விடும். இப்பொழுது கூட பாருங்கள். எந்த ஒரு குழப்பமான நேரத்திலும் ஆடாமல் உறுதியாக இருக்கும் நிலை பரிஷ்தா சொரூபம் அல்லது ஆத்ம அபிமானி நிலையே தான். இந்த நிலை குழப்பத்திலும் உறுதியாக ஆக்கக்கூடியது. அப்படியானால் என்ன பயிற்சி செய்ய வேண்டும்? ஆகாரி மற்றும் நிராகாரி. எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது நிலைத்து விட வேண்டும். இதற்காக அமிர்தவேளையில் மட்டுமின்றி முழு நாளும் பயிற்சி செய்ய வேண்டும். இடை யிடையே இந்தப் பயிற்சியை செய்யுங்கள். பரிஷ்தா எப்பொழுதுமே மேலிருந்து கீழே வருவார். பின்பு கீழேயிருந்து மேலே பறந்து செல்வார். பரிஷ்தா ஒரு நொடியில் உயரத்தில் ஏன் பறந்து விடுகிறார்? ஏனென்றால் அவருக்கு எந்தப் பற்றுதலும் இருப்பதில்லை, உடல் மேலும், பழைய உலகத்தின் மேலும் பற்றுதல் இருப்பதில்லை. எனவே பற்றுதலின் ஏதாவது சங்கிலிகள் இருந்து விடவில்லையே என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஏதாவது பற்றுதலின் சங்கிலி மற்றும் கயிறு இருக்கிறது என்றால் பறக்க முடியுமா? அந்த கயிறு இழுத்து கீழே கொண்டு வந்த ரிஷ்தா (உறவும்) இல்லையோ அவர்தான். அப்படி இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் ரிஷ்தா இருக்கிறதா? பெரிய பெரிய கயிறுகள் அறுந்து விட்டன. சூட்சுமமாக ஏதாவது தங்கிப் போய் விடவில்லையே? மிகவும் நுண்ணிய மெல்லிய கயிறுகள். மிகப் பெரியவைகளைப் பார்த்து நான் சுதந்திரமாகி விட்டேன் என்று நினைக்க வேண்டாம் மேலும் எப்பொழுது பறக்க ஆரம்பிக்கிறீர்களோ அப்போது கீழே வந்து விடுகிறீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். எனவே சூட்சுமத்தில் சோதனை செய்யுங்கள். அம்ச மாத்திரம் கூட இருக்க வேண்டாம். அனேக குழந்தைகள் எந்தப் பொருளின் மேலும் இச்சா (ஆசை) இல்லை ஆனால் அச்சாவாக இருக்கிறது (நன்றாக இருக்கிறது) என்று சொல்கிறார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அப்படியானால் என்ன? அம்சம் மாத்திரம் இருக்கிறது இல்லையா? எந்தப் பொருள் நல்லதாகப் படுகிறதோ அது தன் பக்கம் கவரும் இல்லையா? 'இச்சா' பெரிய கயிறு மற்றும் 'அச்சா' சூட்சும கயிறு. பெரியதை அறுத்து விட்டீர்கள் ஆனால் சூட்சுமம் இருக்கிறது என்றால் பறக்க விடாது, தந்தை மேல் அன்பு இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். தினந்தோறும் பரிஷ்தாவைப் பற்றிய விஷயங்கள் கேட்கிறீர்கள் இல்லையா. கேட்க மட்டும் செய்கிறீர்களா? அல்லது ஆகி விட்டீர்களா? ஆகிக்

கொண்டிருக்கிறீர்களா அல்லது ஆகி விட்டீர்களா? எது வரை ஆவீர்கள்? வினாசம் ஏற்படும் வரையிலா. அதற்கு முன்பு ஆனீர்கள் என்றால் அதற்கும் கணக்கு இருக்கிறது. பத்து வருடங்களுக்குப் பிறகு வினாஷம் ஏற்படுகிறது என்றால் ஒன்பது வருடங்களுக்குப் பிறகு ஒரு வருடத்திற்குள் ஆகி விடுவோம் என்று அப்படி எண்ண வேண்டாம். அந்த மாதிரி செய்யாதீர்கள். அதிக காலம் வேண்டும். ஒருவேளை குறைந்த நேரத்தின் பயிற்சி இருக்கிறது என்றால் குறைந்த காலமே நிலையாக இருப்பீர்கள் ஆனால் வெகு காலம் ஆக முடியாது, கடுமையாக உழைக்க வேண்டியதாக இருக்கும். இப்பொழுது உழைத்து விட்டீர்கள் என்றால் பின்பு அந்த நேரம் உழைக்க வேண்டியது இருக்காது. ஒருவேளை கடுமையாக உழைத்துக் கொண்டே இருக்கும் பொழுது உடலை விட்டு சென்று விட்டீர்கள் என்றால் முடிவு என்னவாகும்? எங்கே செல்வீர்கள். சூர்ய வம்சத்திலா? அல்லது சந்திரவம்சத்திலா? எனவே சோதனை (Check) செய்யுங்கள் மற்றும் மாறுங்கள் (Change). எது குறைவாக இருக்கிறதோ அதை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள். நிரம்பியவர்கள் ஆகுங்கள். தந்தை மேல் இருக்கும் அன்பிற்கு நிரூபணம் கொடுக்க வேண்டும் என்றும் சமமாக ஆக வேண்டும் என்றும். எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் தன்னை தந்தைக்குச் சமமானவராக ஆவதற்கான பயிற்சியை இன்னும் அதிவேகத்தில் அதிகரியுங்கள். நல்லது.

**குரூப்-4: நன்மை செய்பவராக மட்டும் இல்லாமல் உலக நன்மை செய்பவராக ஆகுங்கள்!** தங்களை எப்பொழுதும் சங்கமயுகத்து நன்மை செய்யும் ஆத்மாக்களாக அனுபவம் செய்கிறீர்களா? சங்கமயுகம் மட்டும் தான் இந்தப் படைப்புச் சக்கரத்தில் ஏறும் கலைக்கான யுகம் ஆகும். மற்ற யுகம் மெது மெதுவாக கீழே இறக்குகிறது. சத்யுகத்திலிருந்து கலி யுகத்தில் வருகிறீர்கள் என்றால் எத்தனை கலைகள் குறைந்து விடுகின்றன? அனைத்து யுகங்களிலும் இறங்குகிறீர்கள் மற்றும் சங்கமயுகத்தில் ஏறுகிறீர்கள். ஏறுவதற்காக லிஃப்ட் கூட கிடைக்கிறது. அப்படி அனைவருக்கும் லிஃப்ட் கிடைத்திருக்கிறது இல்லையா? இடையில் மாட்டிக் கொள்வதில்லையே. எப்பொழுதாவது மாட்டிக் கொள்வது மற்றும் எப்பொழுதாவது சிக்கிக் கொள்வது அப்படி இல்லையே. உங்களுக்கு ஒருபொழுதும் மாட்டிக்கொள்ளாத, சிக்கிக்கொள்ளாத லிஃப்ட் கிடைத்திருக்கிறது.

உங்களுடைய தொழிலும் கூட உலகிற்கு நன்மை செய்பவர் அப்படி தந்தையும் நன்மை செய்பவர், யுகமும் நன்மை செய்வது. அப்படி எவ்வளவு அதிர்ஷ்டசாலி நீங்கள். சரி, இந்த அதிர்ஷ்டம் எவ்வளவு காலம் வரும்? முழு கல்பமா? அல்லது அரை கல்பமா? யார் அரைக்கல்பம் என்று கூறுகிறார்களளோ அவர்கள் கையை உயர்த்துங்கள். யார் முழுக்கல்பம் என்று கூறுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். அனைவர் கூறுவதும் சரி தான். ஏனென்றால் அரைக்கல்பம் இராஜ்யம் செய்வீர்கள், அரைக்கல்பம் பூஜைக்குரியவராக ஆவீர்கள். இதுவும் கூட அதிர்ஷ்டம் தான். வெளிநாட்டினர் பூஜைக்குரியவர்களாக ஆவீர்களா? உங்களுக்கு கோவில் இருக்கிறதா? பாருங்கள், தேவதா தர்மத்தில் மட்டும் தான் 33-கோடி மஹிமை செய்யப்படுகிறார்கள் மற்றும் பூஜிக்கப்படுகிறார்கள். அதில் நீங்கள் நிச்சயம் இருக்கிறீர்கள் இல்லையா. நல்லது. அபுவில் தங்களது கோவிலைப் பார்த்தீர்களா? அதில் உங்களுடைய மூர்த்தி இருக்கிறதா? இது என்னுடைய சிலை என்று நம்பர் எழுதி விட்டு வந்திருக்கிறீர்களா? எப்பொழுது நீங்கள் தந்தையைப் பின்பற்றுபவர்களோ அப்பொழுது எப்படி தந்தை பிரம்மா பூஜைக்குரியவராக ஆகிறார் என்றால் பின்பற்றுபவர்களும் கூட அவசியம் பூஜைக்குரியவர்களாகவே ஆவார்கள். முழு கல்பமும் பிரம்மாபாபாவுடன் இராஜ்யத்தின், பூஜையின் மற்றும் பூஜைக்குரியவர் ஆவதின் அனைத்து பாத்திரங்களையும் சேர்ந்தே செய்வீர்கள். அந்த மாதிரி நிச்சயம் இருக்கிறதா? பூஜையும் பிரம்மாபாபாவுடன் சேர்ந்து ஆரம்பம் செய்வீர்கள். யாருடைய பூஜையை ஆரம்பம் செய்வீர்கள்? நீங்கள் பூஜை செய்திருக்கிறீர்களா? தன்னையும் பூஜை செய்திருக்கிறீர்களா? தேவதைகளை பூஜை செய்தீர்கள் என்றால் தன்னைச் செய்தீர்கள் தான் இல்லையா? எனவே தான் நீங்களே பூஜைக்குரியவர், நீங்களே பூஜாரி என்று பாடப்பட்டிருக்கிறது. பிரம்மாபாபா மேல் இவ்வளவு அன்பு இருக்கிறது என்றால் எப்பொழுதும் கூடவே இருப்பீர்கள். ஆனால் யார் உடன் இருப்பார்? யார் பின்பற்றி நடப்பாரோ அவர். எனவே என்ன காரியம் செய்தாலும் இது பிரம்மாபாபாவிற்குச் சமமான உயர்ந்த காரியமா அல்லது சாதாரண காரியமா என்று சோதனை செய்யுங்கள். எப்பொழுது விசேஷ காரியம் செய்பவர்களாக ஆவீர்களோ அப்பொழுது தான் விசேஷமாக பிரம்மா ஆத்மாவுடன் பாத்திரம் ஏற்று செய்வீர்கள். எப்பொழுதும் நான் உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மா என்ற இந்த நினைவில் இருப்பதினால் என்ன

காரியம் செய்தாலும் அது நன்மையே ஏற்படுத்தும். நன்மை செய்வது என்று நினைப்பதினால் நன்மையே பயக்கும் சங்கமயுகம் நினைவு வரும், மேலும் நன்மையே செய்யும் தந்தையின் நினைவும் இயல்பாகவே வரும். நன்மை செய்பவராக மட்டும் இல்லாமல் உலக நன்மை செய்யவராக ஆக வேண்டும். மிகப் பெரிய பாக்கியத்தின் அடையாளம் என்னவென்றால் சங்கமயுகத்தில் சாதாரண ஆத்மாவாக ஆவது தான். ஒருவேளை செல்வந்தனாக இருந்திருந்தீர்கள் என்றால் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்க மாட்டீர்கள். கலியுகத்தின் செல்வந்த நிலை மட்டும் தான் பாக்கியத்தில் கிடைத்திருந்திருக்கும். அப்படி சாதாரணமானவராக ஆவது நல்லது தான் இல்லையா. ஸ்தூல செல்வத்தில் சாதாரணமானவர்கள் ஆனால் ஞான செல்வத்தில் செல்வந்தர்களாக இருக்கிறீர்கள். அப்படி முழு உலகத்திலிருந்தும் தந்தை என்னை தன்னுடையவராக்கி விட்டார் என்ற குஷி இருக்கிறது இல்லையா. முழு நாளும் குஷியாக இருக்கிறீர்களா? தினந்தோறும் முரளி கேட்கிறீர்களா? எப்பொழுதாவது தவற விடுவதில்லையே. தவற விட்டீர்கள் என்றால் தந்தையைப் பின்பற்றுபவர்களாக ஆகவில்லை. பிரம்மாபாபா ஒரு நாள் கூட முரளியைத் தவற விடவில்லை. நல்லது.

மதுபன்நிவாசிகள் மற்றும் குளோபல் ஹாஸ்பிடலைச் சேர்ந்தவர்கள் இருவருமே தன்னுடைய சேவையை நன்கு செய்து கொண்டிருக்கிறார்கள். குளோபலைச் சேர்ந்தவர்கள் உடலை நோயற்றதாக்கி ஆத்மாவை சக்திசாலியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் மதுபன்நிவாசி அனைவரையும் திருப்திபடுத்தும் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இருவரின் சேவையைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார். சேவாதாரியும் களைப்பற்றவராகி சேவையில் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். அனைவருக்கும் சேவைக்காக பாராட்டுக்கள். சால்காவ் (Peace Park) என்ற இடத்திலும் கூட நன்கு அன்போடு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய அன்பான சேவை வெற்றியை அருகாமையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. கீழே தல்ஹட்டியில் (சாந்திவன்) இருப்பவர்கள் கூட நன்கு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இரட்டை வெளிநாட்டினர் கூட நன்கு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். நன்கு செய்து கொண்டிருக்கிறார்கள் மேலும் நல்லதாகவே இருக்கும். வெளிநாட்டில் கூட சேவையின் நல்ல

ஊக்கம் இருக்கிறது. பாரதம் மற்றும் வெளிநாட்டில் சேவை வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறது மேலும் மிக வேகமாக வளர்ச்சியை அடைய வேண்டியது தான். நல்லது.

**வரதானம்: புயல்களை பறக்கும் கலைக்கான பரிசு என்று புரிந்து கொள்ளும் நிரந்தர சுகம் சாந்தி நிறைந்தவர்கள் ஆகுக!**

நிரந்தர சுகம். சாந்தி நிரம்பிய நிறைவான வாழ்க்கையை அனுபவம் செய்வதற்காக சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள். சுயராஜ்ய அதிகாரிக்கு புயல்கள், பறக்கும் கலையின் அனுபவம் செய்விக்கும் பரிசு ஆகி விடுகிறது. அவருக்கு சாதனம், நிவர்த்தி மற்றும் பாராட்டின் ஆதாரத்தில் சுகத்தின் அனுபவம் ஆவதில்லை. ஆனால் பரமாத்ம பிராப்தியின் ஆதாரத்தில் நிரந்தர சுகம். சாந்தியின் அனுபவம் செய்கிறார்கள். எந்தவிதமான அமைதியில்லாமல் ஆக்கக்கூடிய சூழ்நிலைகள் அவர்களுடைய துண்டுபடாத அமைதியை துண்டிக்க முடியாது.

**சுலோகன்: எப்பொழுதும் நிறைந்திருப்பதாக அனுபவம் செய்ய வேண்டும் என்றால் ஆசீர்வாதங்கள் கொடுங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் பெறுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.12.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கீழ்படிந்து (Obedient) நடப்பவர்கள் தான் சர்வ சக்திகளுக்கும் அதிகாரி!

இன்று சர்வ சக்திகளையும் வழங்கும் வள்ளல் தன்னுடைய சக்தி சேனையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். சர்வ சக்திவாள் பாபா அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும் சர்வ சக்திகள் எனும் ஆஸ்தியை சமமாக கொடுத்திருக்கின்றார். சிலருக்கு குறைந்த சக்தியோ சிலருக்கு அதிக சக்தியோ கொடுத்து வித்தியாசப்படுத்தவில்லை. அனைவருக்கும் ஒருவர் மூலமாக, ஒன்றாக, ஒரே சமமாக சக்திகளை கொடுத்திருக்கின்றார். ஒரே சமமாக கிடைத்தாலும் கூட ஏன் வித்தியாசம் இருக்கிறது என்று முடிவை (ரிசல்ட்) பார்த்துக் கொண்டிருந்தார். சிலர் சர்வ சக்திகளும் நிரம்பிய ஆகியுள்ளார்கள். இன்னும் சிலர் சக்தி நிரம்பியவர்களாக மட்டுமே ஆகியுள்ளார்கள். அனைத்து சக்திகளும் நிரம்பியவர்களாக ஆகவில்லை. சிலர் சதா சக்தி சொரூபமாக ஆகியுள்ளார் சிலர் அவ்வப்பொழுது சக்தி சொரூபமாக ஆகியுள்ளார்கள். சில பிராமண ஆத்மாக்கள் தன்னுடைய சர்வ சக்திவான் என்ற அதிகாரத்தின் மூலம் எந்த சமயத்தில் எந்த சக்திக்கு கட்டளை இடுகிறார்களோ, அந்த சக்தி படைப்பு என்ற ரூபத்தில் மாஸ்டர் படைப்பவரின் முன்னால் வருகிறது. கட்டளையிட்டவுடன் ஆஜராகி விடுகிறது. சிலர் கட்டளை இடுகிறார்கள் ஆனால் சக்திகள் சமயப்படி ஆஜராவதில்லை, ஏற்றுக் கொண்டு ஆஜராவதில்லை. இதற்கு என்ன காரணம்? காரணம் என்னவென்றால், குழந்தைகள் சர்வ சக்திவான் பாபாவை எஜமானன் (ஹஜூர்) என்றும், சர்வ வியாபி என்றும் கூறுகிறார்கள் -ஆகவே எந்தக் குழந்தைகள் ஒவ்வொரு அடியிலும் உயர்ந்தவர் அதாவது பாபாவின் ஸ்ரீமத்படி நடைமுறையில் ஒவ்வொரு சமயமும் நடக்க ஆயத்தமாக, அல்லது ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்ற தயாராக இருக்கிறார்களோ அப்படி ஆயத்தமாக இருப்பவர்களுக்கு முன்னால் ஒவ்வொரு சக்தியும் கூட ஆயத்தமாக அல்லது இதோ தயாராக இருக்கின்றேன் என்று வருகிறது.

ஒருவேளை சில ஆத்மாக்கள், ஸ்ரீமத் அல்லது கட்டளை எது சகஜமாக கடைபிடிக்க முடியுமோ அதை கடைபிடிக்கிறார்கள், மேலும் எது கடினமாக இருக்கிறதோ அதை கடைபிடிக்க முடிவதில்லை -சிலவற்றை கடைபிடிக்கிறார்கள், சிலவற்றை கடைபிடிப்பதில்லை, சில நேரங்களில் இதோ தயாராக இருக்கின்றேன் சில நேரங்களில் தயாராக இருக்கின்றேன் இப்படி இருப்பதின் வெளிப்படையான முடிவு என்னவென்றால், அதுபோன்ற ஆத்மாக்களுக்கு முன்பாக சர்வ சக்திகளும் சமயப்படி வருவதில்லை. ஏதாவது ஒரு சூழ்நிலையின்படி சகித்துக் கொள்ளும் சக்தி தேவைப்படும்போது, நாம் கண்டிப்பாக சகித்துக் கொள்ளும் சக்தியின் மூலம் இந்த சூழ்நிலையை கடந்து விடுவோம், வெற்றியடைந்து விடுவோம் என்று சங்கல்பம் வைப்பார்கள் ஆனால் நடப்பது என்ன? இரண்டாம் இடத்தில் வரக்கூடியவர்கள், அதாவது அவ்வப்போது கடைப்பிடிப்பவர்கள் சகித்துக் கொள்ளும் சக்தியை பிரயோகம் செய்வார்கள், 10-முறை சகித்துக் கொள்வார்கள் ஆனால் சகித்துக் கொண்டாலும் கூட ஒன்று அல்லது இரண்டு முறைகள் சகித்துக் கொள்ள நினைத்தாலும் சகித்துக் கொள்ள முடியாது. பிறகு என்ன யோசிக்கிறார்கள்? நான் யாருக்கும் சொல்லவில்லை, நான் சகித்துக் கொண்டேன் ஆனால் இவர்கள் என்னுடன் இருந்தவர்கள், நம்முடைய சகயோகிகளாக இருந்தனர், நெருங்கியவர்களாக இருந்தனர், சைகைதான் காட்டினேன், எதுவும் பேச வேண்டும் என்று விரும்பவில்லை, ஒரு வார்த்தை அரை வார்த்தை தான் வந்து விட்டது. இதற்கு என்ன சொல்வது? சகித்துக் கொள்வதா என்ன? 10-பேருக்கு முன்னால் பொறுத்துக் கொண்டீர்கள், ஆனால் ஓரிருவருக்கு முன்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால் என்ன சொல்வது, சகித்து கொள்ளும் சக்தி கட்டளையை ஏற்றதா? அது உங்களுடைய சக்தி. பாபா ஆஸ்தியாக கொடுத்திருக்கின்றார். பாபாவின் ஆஸ்தி குழந்தைகளுடைய ஆஸ்தி ஆகி விடுகிறது. தன்னுடைய சக்தி தன்னுடைய காரியத்திற்கு வரவில்லையென்றால் என்னவென்று சொல்லுவது? கட்டளையை ஏற்பவர் என்றா? அல்லது கட்டளையை ஏற்காதவர் என்றா? இன்று பாப்தாதா அனைத்து பிராமண ஆத்மாக்களும் எந்தளவிற்கு சர்வ சக்திகளுக்கும் அதிகாரியாக ஆகியுள்ளார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தார். அதிகாரியாக ஆகவில்லை என்றால், அந்த சமயத்தில் சூழ்நிலைக்கு அடிமையாக வேண்டி இருக்கும். குழந்தைகள் ஏதாவதொரு

சக்தியை காரியத்தில் ஈடுபடுத்த முடியாத போது தான் பாப்தாதாவிற்கு மிகுந்த இரக்கம் வருகிறது. அந்த சமயத்தில் என்ன செய்கிறார்கள்? ஏதாவதொரு விஷயம் எதிர்கொள்ளும்போது பாபாவிடம் எந்த ரூபத்தில் வருகிறார்கள்? ஞானிகள் பக்த ரூபத்தில் வருகிறார்கள். பக்தர்கள் என்ன செய்கிறார்கள்? பக்தர்கள் இதைக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டே இருப்பார்கள் பாபாவிடம் ஓடுகிறார்கள். பாபாமீ து அதிகாரம் செலுத்துகிறார்கள் ஆனால் ரூபம் ராயல் பக்த ரூபமாகும். மேலும் அதிகாரத்திற்குப் பதிலாக ஞானி பக்தனாக அல்லது ராயல் பக்தனாக ஆகிறர். சத்கதி அதாவது வெற்றி அடைய முடியாது, ஏனென்றால் எங்கே பக்தியின் அம்சம் மீதம் நின்று விடுகிறதோ, அங்கே பக்தியின் பலனான ஞானம் அதாவது சர்வ பிராப்திகளும் கிடைக்க முடியாது வெற்றி கிடைக்க முடியாது. பக்தி என்றால் உழைப்பு, ஞானம் என்றால் அன்பாகும். பக்தியின் அம்சம் இருந்தது என்றால் கண்டிப்பாக உழைக்க வேண்டி இருக்கும், மேலும் பக்தியின் பழங்க வழக்கங்களால், நெருக்கடி வரும்போது தான் பகவானின் நினைவு வரும், இல்லையென்றால் கவனக்குறைவாக இருப்பார்கள். ஞானி பக்தர்கள் கூட என்ன செய்கிறார்கள்? ஏதாவது தடைகள் வரும்போது விசேஷமாக நினைவு செய்வார்கள்.

ஒன்று சேவைக்காக நினைவில் அமர்வது, மற்றொன்று தன்னுடைய பலவீனங்களை நிறைத்துக் கொள்வதற்காக நினைவில் அமர்வதாகும். இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. இப்போது கூட உலகத்தில் ஏதாவது அமைதியற்ற சூழ்நிலை நிலவும் போது, சேவைக்காக குழுவாக நினைவில் இருப்பதற்கான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கின்றீர்கள். அது தனிப்பட்ட விஷயம். அது வள்ளலாகி கொடுப்பதற்காக செய்கின்றீர்கள். அது கேட்பதற்காக செய்யவில்லை. மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக செய்கின்றீர்கள். ஆக அது சேவைக்காக என்றாகிறது ஆனால் தன்னுடைய பலஹீனத்தை போக்குவதற்காக, அந்த சமயத்தில் விசேஷமாக நினைவு செய்கிறீர்களே, அது சோம்பேறித்தனமான நினைவு ஆகும். அதுவும் நினைவு தான், மறப்பதில்லை ஆனால் நாங்கள் பாபாவின் குழந்தைகள் அல்லாமல் வேறு யாருடைய குழந்தைகள் என்று, சோம்பேறித்தளமாக நினைவு வருகிறது; ஆனால் யதார்த்தமான சக்திசாலி நினைவின் வெளிப்படையான நிரூபணம் என்னவென்றால், சமயத்தின்படி சக்தி ஆஜராவதாகும். யார் எவ்வளவுதான் நான்

நினைவில் தான் இருக்கின்றேன் என்று சொன்னாலும், நினைவின் சொரூபம் வெற்றியாகும். எந்த சமயத்தில் நினைவில் அமர்கிறோமோ, அந்த சமயத்தில் குஷி அனுபவமாகிறது. சக்தியும் அனுபவமாகிறது பிறகு கர்மம், சம்பந்தம் தொடர்பில் வரும்போது சதா வெற்றி கிடைப்பதில்லை, என்பது கிடையாது. இதற்கு கர்மயோகி என்று சொல்ல முடியாது. சக்திகள் சஸ்திரங்களாகும், மேலும் அஸ்திரங்கள் எந்த சமயத்திற்காக இருக்கிறது? அஸ்திரங்கள் (ஆயுதங்கள்) எப்போதும் சமயப்படி காரியங்களில் பயன்படுத்தப்படுகிறது.

யதார்த்தமான நினைவு என்றாலே சர்வ சக்திகளும் நிரம்பிய நிலையாகும். சதா சக்திசாலி அஸ்திரங்கள் இருக்க வேண்டும். சூழ்நிலை எனும் எதிரி வருகிறான். அஸ்திரம் காரியத்தில் வரவில்லை என்றால், இதற்கு என்ன சொல்வது? சக்திசாலி அல்லது சஸ்த்தரதாரி என்று சொல்ல முடியுமா? ஒவ்வொரு கர்மத்திலும் நினைவு அதாவது வெற்றி இருக்க வேண்டும். இதற்குத்தான் கர்மயோகி என்று சொல்ல முடியும். அமர்ந்து யோகம் செய்யும்போது மட்டும் யோகி இல்லை. உங்களுடைய யோகத்தின் பெயர் என்ன? அமர்ந்து யோகம் செய்யும் யோகிகளா அல்லது கர்மயோகிகளா? கர்மயோகிகள் அல்லவா. எப்போதும் கர்மம் மற்றும் எப்போதும் கர்மயோகிகள். கர்மம் இல்லாமல் எப்படி ஒரு வினாடி கூட இருக்க முடியாதோ, உறங்கிக் கொண்டிருந்தாலும் உறங்கும் கர்மம் செய்து கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா? எப்படி கர்மம் செய்யாமல் இருக்க முடியாதோ, அதே போல் ஒவ்வொரு கர்மமும் யோகம் இல்லாமல் செய்ய முடியாது. இதற்கு தான் கர்மயோகி என்று சொல்லப்படுகிறது. விஷயம் அதுபோல் இருந்தது அல்லவா, சூழ்நிலை அதுபோல் இருந்தது அல்லவா, பிரச்சினை அதுபோல் இருந்தது அல்லவா, என்று நினைக்காதீர்கள். இவைகள் தான் எதிரிகள். பிறகு அந்த சமயத்தில் எதிரி வந்து விட்டான் அல்லவா, அதனால்தான் வாள் வீச முடியவில்லை. வாளை காரியத்தில் பயன்படுத்த முடியவில்லை அல்லது வாள் வேலை செய்யவில்லை என்பவர்களை என்ன சொல்வது? அஸ்த்ரதாரி என்று சொல்ல முடியுமா? நீங்கள் சேனை அல்லவா. சேனையின் சக்தி என்ன? அஸ்திரம் அல்லவா. சர்வ சக்திகள் தான் அஸ்திரமாகும். ஆக பாபா என்ன ரிசல்ட் பார்த்தார்? அதிகமானோர் சதா சமயப்படி அனைத்து சக்திளையும் கட்டளைப்படி நடத்துவதில்லை, குறைகள் தெரிந்தது. புரிந்து கொள்கின்றார்கள் ஆனால் வெற்றி சொரூபம் ஆவதில் சமயப்படி ஒன்று

பலஹீனமாக ஆகி விடுகிறார்கள். இல்லையென்றால் கொஞ்சம் வெற்றியற்ற தன்மையை அனுபவம் செய்து பிறகு உடனே வெற்றியின் பக்கம் செல்கிறார்கள். மூன்று விதமானவர்களை பாபா பார்த்தார்.
முதலாவது: அந்த சமயத்தில், இது சரியல்ல, இதை செய்யக் கூடாது, என்று புத்தியின் மூலம் புரிந்து கொள்கிறார்கள் ஆனால் புரிந்து கொண்டதை சக்தி சொரூபமாக மாற்ற முடியவில்லை.

இரண்டாவது: புரிந்து கொள்ளவும் செய்கிறார்கள் ஆனால் புரிந்து கொண்டாலும் கூட சமயம் அல்லது சூழ்நிலை கடந்த பிறகு யோசிக்கின்றார்கள். அவர்கள் கொஞ்ச நேரத்தில் யோசிக்கின்றார்கள், இவர்கள் முடிந்த பிறகு யோசிக்கின்றார்கள்.

மூன்றாவது: இது தவறு என்று உணர்வதே இல்லை. எப்போதும் தன்னுடைய தவறை சரி என்றே நிரூபிப்பார்கள். அதாவது சத்தியத்தை உணரும் சக்தி இல்லை. ஆக இதில் நான் யார் என்று உங்களை சோதனை செய்யுங்கள்.

நிகழ்கால நேரத்தின்படி எப்போதும் மற்றும் சகஜமான வெற்றி எந்த குழந்தைகள் அடைந்திருக்கிறார்கள், என்று பாப்தாதா பார்த்தார். அதிலும் கூட வித்தியாசம் இருக்கிறது. ஒன்று சகஜமாக வெற்றி அடையக் கூடியவர்கள், மற்றொன்று உழைப்பு மற்றும் சகஜம் -இரண்டிற்கு பிறகு வெற்றியடையக் கூடியவர்கள். யார் சகஜமாகவும் எப்போதும் வெற்றியடைகிறார்களோ, அவர்களின் முக்கிய ஆதாரமாக எதைப் பார்த்தார்? எந்த ஆத்மாக்கள் எப்போதும் தன்னை பணிவுத்தன்மை எனும் விசேஷத்தன்மையின் மூலம் நடத்திக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் தான் எப்போதும் சகஜமாக வெற்றியடைந்து வந்திருக்கிறார்கள். பணிவு என்ற சொல் ஒன்று தான், ஆனால் பணிவான நிலை என்பதின் விளக்கம், மேலும் பணிவாக இருக்கும் சமயத்தில் கிடைக்கும் விளைவுகள்....... அது அதிகமாக இருக்கிறது. இதைப் பற்றி இன்னொரு சமயம் சொல்கிறேன் ஆனால் பணிவுடையவர்களாக ஆவதுதான் சுயமரியாதையாகும். மேலும் அனைவரிடம் இருந்தும் மரியாதையை அடைவதற்கான சகஜமான வழி என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பணிவு என்பது தாழ்ந்து போவதில்லை

ஆனால் அனைவரையும் தன்னுடைய விசேஷத்தன்மை மற்றும் அன்பின் மூலம் வணங்க வைப்பதாகும். புரிந்ததா?

அனைவரும் முடிவைக் கேட்டீர்கள். சமயம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது ஆனால் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் சமயத்திற்காக காத்திருக்கிறீர்களா? எஜமானரின் குழந்தைகள் அல்லவா. ஆக இவர்கள் என்னுடைய எஜமானர்கள் எப்போது சமயமாகிய என்னை மாற்றப் போகிறார்கள் என்று சமயம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. அது காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். காத்துக் கொண்டிருக்கக் கூடாது. அனைவருக்கும் செய்தியைக் கொடுப்பது, நேரத்தை முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். எப்போது இவ்விரண்டு காரியங்களும் முழுமையடைகிறதோ அப்போதுதான் சமயத்தின் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். ஆக இது போன்ற ஏற்பாடுகள் அனைவரும் செய்து கொண்டிருக்கின்றீர்கள் அல்லலா? எந்த வேகத்தில் செய்கின்றீர்கள்? தாலத்தைப் பார்த்து, காலம் மிக வேகமாக கடந்து கொண்டிருக்கிறது, என்று நீங்களும் கூட சொல்கின்றீர்கள். இத்தனை ஆண்டுகள் எப்படி முடிந்தது என்று யோசிக்கின்றீர்கள் அல்லவா! அவ்யக்த பாபாவின் வளர்ப்பும் கூட எத்தனை ஆண்டுகள் ஆகி விட்டது. காலம் எவ்வளவு வேகமாகச் சென்று விட்டது. உங்களுடைய நிலை என்ன? வேகமாக இருக்கிறதா? அல்லது வேகமாக சென்று அவ்வப்போது களைப்படைந்து விட்டு பிறகு ஓய்வெடுக்கின்றீர்களா? செய்து கொண்டிருக்கின்றோம் என்றால் நாடகத்தின் பந்தனத்தில் கட்டப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள் ஆனால் நிலை என்ன என்று சோதனை செய்யுங்கள். சேவை நடந்து கொண்டிருக்கிறது, முயற்சி நடக்கிறது, முன்னேறிக் கொண்டிருக்கின்றீகள்- அது எல்லாம் சரிதான். வேகத்தை சோதனை செய்யுங்கள், நடப்பதை மட்டும் சோதனை செய்யாதீர்கள். முறையை சோதனை செய்யுங்கள், வேகத்தை சோதனை செய்யுங்கள். புரிந்ததா? அனைவரும் தன்னுடைய காரியத்தை செய்கிறீர்கள் அல்லவா. நல்லது.

நாலாபுறமும் உள்ள சதா பாபாவிடம் தயாராக இருக்கின்றேன் என்று சொல்லக்கூடிய எப்போதும் மாஸ்டர் சர்வசக்திவானாக ஆகி சர்வசக்திகளையும் தன்னுடைய கட்டளைப்படி நடத்தக்கூடிய, சர்வ

சக்திகளும் தயாராக இருக்கின்றேன் என்ற நடிப்பை நடிக்கக்கூடிய -அது போன்று எப்போதும் வெற்றி மூர்த்தியாக இருக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, எப்போதும் ஒவ்வொரு கர்மத்திலும் நினைவு சொரூபத்தை அனுபவம் செய்யக்கூடிய, மேலும் மற்றவர்களுக்கு செய்விக்கக்கூடிய -இது போன்ற அனுபவி ஆத்மாக்களுக்கு, எப்போதும் ஒவ்வொரு கர்மத்திலும் சம்பந்தத்திலும், தொடர்பிலும் பணிவுடையவர்களாகி வெற்றி ரத்தினமாக ஆகக்கூடிய வெற்றி மூர்த்தியான உயர்ந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும் உரித்தாகுக.

**குழுக்களுடன் சந்திப்பு: குரூப்-1: சாதாரண செயலிலும் உயர்ந்த ஸ்திதியின் ஜொலிப்பைக் காட்டுவதுதான் தந்தையைப் பின்பற்றுவது ஆகும்!** சதா சங்கம யுக புருஷோத்தம ஆத்மா நான் -இப்படி அனுபவம் செய்கிறீர்களா? சங்கம யுகத்தின் பெயரே புருஷோத்தம், அதாவது சாதாரண ஆத்மாவிலிருந்து உத்தம ஆத்மாவாக ஆக்கக் கூடிய யுகம்! எனில் சங்கம யுகத்தவர்தானே? நீங்கள் அனைவரும் புருஷோத்தமராகி விட்டீர்களா! ஆத்மா புருஷ் மற்றும் உடல் பிரக்ருதி. எனில் புருஷோத்தம் என்றால் உத்தம ஆத்மா ஆவேன்! எல்லோரையும் விட நம்பர்-1 புருஷோத்தமர் யார்? பிரம்மாபாபா! எனவே தான் பிரம்மாவை ஆதி தேவ் எனக் கூறுகின்றனர். பரிஷ்தா பிரம்மாவும் உத்தமர் ஆகி விட்டார் மற்றும் பின்னர் எதிர்காலத்தில் தேவ ஆத்மா ஆனதால் புருஷோத்தமர் ஆகி விடுகிறார். லக்ஷ்மி - நாராயணனையும் புருஷோத்தமர் எனக் கூறுவோம் அல்லவா. எனில் யுகமும் புருஷோத்தம், ஆத்மா நானும் புருஷோத்தம். புருஷோத்தம ஆத்மாக்களின் கடமையும் சர்வ சிரேஷ்டமானது. எழுவது, அமர்வது, உண்பது, வேலை செய்வது,... இவை சாதாரண செயல்கள் அல்ல ஆனால் சாதாரண செயல்கள் செய்தாலும் சிரேஷ்ட நினைவு, சிரேஷ்ட ஸ்திதியில் இருப்பது. இவர் சாதாரண மனிதர் அல்ல என்பதை பார்ப்பவர்கள் அனுபவம் செய்வார்கள். எப்படி ஒரு அசலான வைரக்கல் மீது எவ்வளவுதான் தூசி படிந்திருந்தாலும் தனது ஜொலிப்பைக் காட்டுகிறது, ஒருபோதும் மறைக்க முடியாது. எனில் உங்கள் வாழ்க்கையும் வைரத்திற்குச் சமமாக உள்ளதுதானே? எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும், எப்படிப்பட்ட குழுவில் இருந்தாலும் ஆனால் எப்படி வைரம் தனது ஜொலிப்பை மறைக்க முடியாதோ, அது போல புருஷோத்தம ஆத்மாக்களின் சிரேஷ்ட ஜொலிப்பு

அனைவருக்கும் அனுபவம் ஆக வேண்டும். எனில் அவ்வாறு இருக்கிறீர்களா அல்லது அலுவலகம் சென்ற பின் அங்கு சாதாரணமாக ஆகி விடுகிறீர்களா? இப்போது குப்தமாக இருக்கிறீர்கள், வேலையும் சாதாரணமாக உள்ளது. ஆதலால் பாண்டவர்களை குப்த ரூபத்தில் காட்டியுள்ளனர். குப்த ரூபம் ராஜ்யத்தினுடையது இல்லை, சேவையினுடையது. பிறரது ராஜ்யத்தில் அரசாங்க ஊழியர் (government servant) எனக் கூறுப்படுகிறதல்லவா. அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருக்கலாம் ஆனால் ஊழியர் தானே! அது போல குப்த ரூபத்தில் நீங்கள் சேவாதாரிகள் ஆனால் கூடவே புருஷேத்தமர்கள் ஆவீர்கள். எனில் அந்த ஜொலிப்பைக் காட்டுங்கள். எப்படி தந்தை பிரம்மா சாதாரண உடலில் இருந்து கொண்டே புருஷோத்தமரின் அனுபவம் செய்தார் என்பதை அனைவரும் கேட்டிருப்பீர்கள். பார்த்திருக்கிறீர்களா அல்லது கேட்டிருக்கிறீர்களா? இப்போதும்கூட அவ்யக்த ரூபத்தில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள் -சாதாரணத்தில் புருஷோத்தமரின் ஜொலிப்பு, எனில் தந்தையைப் பின்பற்ற வேண்டும். அப்படியில்லை, சாதாரண வேலை செய்து கொண்டிருக்கிறோம். மாதாக்கள் சமைக்கிறீர்கள், துவைக்கிறீர்கள் -வேலை சாதாரணமானது ஆனால் ஸ்திதி சாதாரணம் இல்லை, ஸ்திதி உயர்ந்ததாக இருக்கட்டும். அப்படி இருக்கிறதா? அல்லது சாதாரண வேலைகள் செய்து சாதாரணமாகி விடுகிறீர்களா? மற்றவர்கள் எப்படியோ, அவ்வாறு நாம் கிடையாது. முகத்தில் அந்த சிரேஷ்ட வாழ்க்கையின் பிரபாவம் இருக்க வேண்டும். இந்த முகம்தானே கண்ணாடி! இதன் மூலம் தான் உங்களது ஸ்திதியைப் பார்க்க முடிகிறது. மகானாக இருக்கிறதா அல்லது சாதாரணமாகவா -இதை இந்த முகம் என்ற கண்ணாடி மூலம் பார்க்க முடியும். நாமும் பார்க்க முடியும், பிறரும் பார்க்க முடியும். எனில் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? சதா நினைவும், நிலையும் உயர்ந்ததாக இருக்கட்டும். ஸ்திதி சிரேஷ்டமாக இருந்தது எனில் ஜொலிப்பும் தானாகவே சிரேஷ்டமாக இருக்கும். சமமான ஸ்திதியில் இருப்பவர்கள் சதா தந்தையுடன் கூடவே இருக்கிறார்கள். உடலால் ஏதாவது ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கலாம், தூரமாக உட்கார்ந்திருக்கலாம், பின்னால் உட்கார்ந்திருக்கலாம் ஆனால் மனதின் ஸ்திதியில் கூடவே இருப்பார்கள் அல்லவா. யார் சமமாக இருக்கிறார்களோ அவர் தான் கூடவே இருப்பார். ஸ்தூலத்தில் முன்னால் உட்கார்ந்திருக்கலாம் ஆனால் சமமாக இல்லையேல் சதா கூடவே இருக்க முடியாது, ஓரத்தில்

இருப்பார்கள். எனில் அருகில் இருப்பது என்றாலே சமமான ஸ்திதியை உருவாக்குவது. எனவே தந்தை பிரம்மாவுக்குச் சமமாக புருஷோத்தம் ஸ்திதியில் நிலைத்து இருங்கள். லௌகீகத்திலும் பல குழந்தைகளின் முகம் மற்றும் நடத்தை அப்பாவுக்குச் சமமாக இருக்கிறது எனில் சொல்கிறோம்தானே -இவரோ அப்பாவைப் போலவே இருக்கிறார் என்று. எனில் இங்கோ முகத்திற்கான விஷயம் இல்லை ஆனால் நடத்தை தான் ஸித்திரம் (சரித்திரம்). எனவே ஒவ்வொரு நடத்தையிலும் தந்தையின் அனுபவம் ஆகட்டும் -இவருக்குத்தான் கூறப்படுகிறது 'பாப்-சமான்'! ஆகவே அருகில் இருக்க விரும்புகிறீர்களா அல்லது தூரமாகவா? இந்த ஒரு ஜென்மத்தில் சங்கமத்தில் ஸ்திதியில் யார் அருகில் இருக்கிறாரோ, அவர் பரந்தாமத்திலும் அருகில் இருப்பார் மேலும் ராஜ்யத்திலும் அருகில் இருப்பார். ஒரு ஜென்மத்தின் அருகாமை அநேக ஜென்மங்களுக்கு அருகில் இருப்பவராக்கி விடுகிறது. ஒவ்வொரு செயலையும் சோதனை செய்யுங்கள் -பாப் சமான் ஆக இருக்குமானால் செய்யுங்கள், இல்லை எனில் மாற்றிக் கொள்ளுங்கள். முதலில் சோதனை செய்யுங்கள், பின்பு செய்யுங்கள். அப்படி இல்லை, செய்த பின்பு இது சரியில்லை என சோதனை செய்வது கூடாது. ஞானியின் லக்ஷணம் -முதலில் சிந்திப்பது, பின்பு செய்வது! அஞ்ஞானியின் லக்ஷணம் - செய்த பின் சிந்திப்பது. எனில் நீங்கள் 'ஞானி தூ ஆத்மா' தானே! அல்லது அவ்வப்போது பக்தர்களாகி விடுகிறீர்களா? பஞ்சாப் காரர்களோ தைரியசாலிகளா! மனதாலும் தைரியசாலிகள். மாயா ஒரு எறும்பின் சிறிய ரூபத்தில் வந்தது, பயந்து விடுவீர்கள் -இல்லை. சவால் விடுபவர்கள். மாணவன் ஒருபோதும் பேப்பரைப் பார்த்து பயப்படுவாரா? எனில் நீங்கள் தைரியசாலிகளா அல்லது சிறிய பேப்பரைப் பார்த்து பயப்படுபவர்களா? யார் தகுதியான மாணவரோ அவர் அதை வரவேற்பார், எவ்வளவு சீக்கிரம் தேர்வு வருமோ நல்லது, வகுப்பில் முன்னேறி விடலாம் என்று. பலகீனமானவர் சிந்தித்துக் கொண்டே இருப்பார் -ஒத்தி வைத்தால் நல்லது என்று. நீங்களோ புத்திசாலிகள் அல்லவா! நாம் தான் கல்பகல்பமாக வெற்றி அடைந்தவர்கள் மேலும் நாம் தான் அடிக்கடி வெற்றி பெற்றுள்ளோம் என்ற இந்த நிச்சயம் உறுதியாக இருக்கட்டும். இந்தளவு முயற்சி செய்துள்ளீர்களா? நீங்கள் ஆகவில்லை எனில் வேறு யார் ஆவார்கள்? நீங்கள்தான் வெற்றி அடைந்தீர்கள், வெற்றி அடைகிறீர்கள் மேலும் வெற்றி அடைவீர்கள். வெற்றி என்று சொல்லும் போதே எவ்வளவு குஷி ஏற்படுகிறது. முகம் மாறி விடுகிறதல்லவா. யார்

சதா வெற்றியாளராக இருக்கிறாரோ அவருக்கு எவ்வளவு குஷி இருக்கும். ஆதலால் எப்போதாவது யாராவது ஏதாவது ஒரு இடத்தில் வெற்றி பெறுகிறார் எனில் குஷியின் வாத்தியம் இசைக்கிறார்கள். நீங்களோ சதா இசைத்துக் கொண்டே இருக்கிறீர்கள். ஒருபோதும் குஷியின் வாத்தியம் நின்று விடக் கூடாது. அரை கல்பத்திற்காக அழுவது நின்று விட்டது. எங்கு குஷியின் வாத்தியம் இசைக்கிறார்களோ அங்கு அழுவது இருப்பதில்லை! நல்லது.

**குரூப்-2: சரியாக நிர்ணயம் செய்வதற்கான ஆதாரம் -நிச்சயபுத்தி மற்றும் கவலையற்ற ஸ்திதி!** சதா தன்னை வெற்றி ரத்தினம் என்று அனுபவம் செய்கிறீர்களா? சதா வெற்றி அடைவதற்கான சகஜ சாதனம் என்ன? சதா வெற்றி அடைவதற்கான சகஜ சாதனம் -ஒரே பலம் ஒரே நம்பிக்கை! ஒருவர் மீது நம்பிக்கை மற்றும் அந்த ஒரு நம்பிக்கையின் மூலம் ஒரே பலம் கிடைக்கிறது. நம்பிக்கை சதா கவலை அற்றவராக ஆக்குகிறது. எனக்கு நம்பிக்கை உள்ளது என்று யாராவது புரிந்து கொண்டார் எனில் அதன் அடையாளம் அவர் சதா கவலையற்று இருப்பார் மேலும் கவலையற்ற ஸ்திதியில் எந்த ஒரு செயலை செய்தாலும் அது நிச்சயமாக பலனளிக்கும். எப்போது கவலையற்று இருக்கிறீர்களோ அப்போது புத்தியும் சரியான முறையில் தீர்மானிக்கும். ஏதாவது யோசனை கவலை குழப்பம் இருந்தது எனில் ஒருபோதும் தீர்மானம் சரியாக இருக்காது. தராசை பார்த்திருக்கிறீர்கள் தானே. தராசில் சரியான எடை எப்போது இருக்குமெனில் அது மேலும் கீழும் செல்லாத போதுதான், அதாவது ஆடாத நிலையில் இருக்கும்போது. ஆடிக்கொண்டே இருந்தது என்றால் அதை சரியான எடை என்று கூற மாட்டோம். அதுபோல் புத்தியிலும் குழப்பம் கவலை யோசனை ஏதாவது இருந்தது எனில் நிச்சயமாக குழப்பம் இருக்கும். ஆதலால் சரியாக நிர்ணயம் செய்வதற்கான ஆதாரம் நிச்சய புத்தி மற்றும் கவலையற்ற நிலை. எதைப் பற்றியும் சிந்திக்க வேண்டியது இல்லை ஏனெனில் தந்தையை பின்பற்ற வேண்டும் அவ்வளவே. நாமாகவே ஏதாவது செய்ய வேண்டுமெனில் இதை இப்படிச் செய்யலாமா அப்படிச் செய்யலாமா என்ற சிந்தனை வரும். இங்கோ தந்தையை பின்பற்ற வேண்டியது எனில் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. அடிமேல் அடி எடுத்து வைப்பது, அடி என்பதே ஸ்ரீமத்! என்ன ஸ்ரீமத் கிடைத்துள்ளதோ அதன்படி நடப்பது அதாவது அடி மேல் அடி எடுத்து வைப்பது. ஏனெனில் சிந்திக்க வேண்டிய

அவசியம் என்ன? இல்லைதானே. கவலையற்று இருந்தால் எப்போதும் சரியாகவே தீர்மானிப்போம். எப்போது தீர்மானிப்பது சரியாக உள்ளதோ அப்போது வெற்றியும் உள்ளது. சரியாக நிர்ணயம் செய்யவில்லை எனில் அங்கு நிச்சயம் குழப்பம் இருக்கிறது. எப்போதாவது ஏதாவது குழப்பம் ஏற்பட்டது எனில் அப்போது பிரம்மாபாபா என்ன செய்தார் என நினைத்துப் பாருங்கள். ஏனெனில் தந்தை பிரம்மா கர்மத்தின் முன்னுதாரணம் ஆவார். தந்தை பிரம்மா ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி எடுத்து வைத்தார். எனவே 'ஃபாலோ ஃபாதர்' தந்தையை பின்பற்றுங்கள். அப்படியே பின்பற்ற வேண்டும், ஏதாவது புதிய வழியை உருவாக்க கூடாது, வேறு எதையும் சிந்திக்கவும் கூடாது. எப்போது மனவழியை கலக்குகிறீர்களோ அப்போது கடினமாகி விடுகிறது. ஒன்று, கடினமாக இருக்கும், இரண்டாவது பலனளிக்காது. கடினமாக உழைத்தீர்கள் தானே. கிராமத்தில் வயல் வேலை செய்பவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். நீங்கள் கடின உழைப்பு செய்யத் தேவையில்லை. எளிதானது பிடித்து இருக்கிறதா அல்லது கடினமானதா? கடினமாக உழைத்து அனுபவமும் செய்து பார்த்து விட்டீர்கள். இப்போது தந்தை கூறுகிறார் -கடின உழைப்பை விட்டுவிட்டு அன்பில் மூழ்கி விடுங்கள். யார் அன்பில் மூழ்கியவரோ, அவருக்கு கடின உழைப்பு செய்யத் தேவையில்லை. பிராமணன் என்றால் கொண்டாடுபவர், கடின உழைப்பாளி அல்ல! தந்தை சொன்னார், குழந்தைகள் செய்தனர் -இதில் கடின உழைப்பிற்கான விஷயம் என்ன உள்ளது. குழந்தைகள் வேலை செய்ய வேண்டும், யோசிக்க வேண்டியதில்லை. சகஜ யோகி அல்லவா. சதா வெற்றி ரத்தினம் தானே. நாம் ஆகவில்லை எனில் வேறு யார் ஆவார் என்ற இந்த நிச்சயம் வேண்டும். இந்தளவு அசைக்க முடியாத நிச்சயம் உள்ளதா. எப்போது தந்தையைப் பின்பற்றுகிறீர்கள் எனில் யார் ஆவார்? பின்பற்றுபவர்தானே ஆவார்! நிச்சயத்திலும் நிச்சயமாக இருக்கிறீர்களா? ஒருவேளை 10, 20-சதவீதம் குறைவானது எனில் நிச்சயம் எனக் கூற மாட்டோம். யார் சதா வெற்றியாளராக உள்ளாரோ அவரைத்தான் கவலையற்ற ராஜா எனக் கூறப்படுகிறது. இப்போது யார் ராஜா ஆகிறாரே அவரே எதிர்காலத்திலும் ராஜா ஆவார். இப்போது கவலையற்ற ராஜாவாக இல்லையேல் எதிர்காலத்திலும் இல்லை. எனில் ராஜா ஆகக் கூடியவர்களா அல்லது பிறர் ராஜ்யம் செய்வதைப் பார்ப்பவர்களா? சுய ராஜ்யம் இருந்தது எனில் விஷ்வ ராஜ்யம் உண்டு. அந்த மாதிரி அதிகாரிகள் தானே? பிறருக்கு அடிமையாக இல்லையே

-என்ன செய்வது. சம்ஸ்காரம் பக்கா ஆகி விட்டது? அப்படியில்லைதானே -விரும்புகிறேன் ஆனால் ஆகி விடுகிறது? இதைத்தான் அடிமை என்போம். எனில் எப்போதாவது இப்படி ஆவதில்லைதானே? கோபப்படவோ விரும்பவில்லை ஆனால் வந்து விடுகிறது. விரும்பவில்லை ஆனால் வலுக்கட்டாயம் ஆகி விடுகிறது. இல்லை, அதிகாரி ஆகி விட்டீர்கள் எனில் அடிமைத்தனம் முடிந்து விட்டது. எப்படி வேண்டுமோ, என்ன வேண்டுமோ அதைச் செய்ய முடியும். அதிகாரியின் சங்கல்பத்தில் இது ஒருபோதும் எழாது -விரும்பவில்லை ஆனால் நடந்து விடுகிறது, முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், ஆகி விடும்! என்பது. இதிலிருந்து தெரிகிறது அவர் அடிமை என. யார் அடிமையோ அவர் அதிகாரி இல்லை. யார் அதிகாரியோ அவர் அடிமை இல்லை. இரவு அல்லது பகல், இரண்டும் சேர்ந்தே இருக்க முடியாது. அதிகாரம் மற்றும் அடிமைத்தனம் இரண்டும் சேர்ந்து இருக்க முடியாது. மாதாக்கள் அதிகாரி ஆகி விட்டீர்களா? உலகத்தினர் எங்கு தூக்கி எறிந்தனர் மற்றும் தந்தை எங்கு வைத்தார்? உலகத்தினர் காலில் போடும் செருப்பாக ஆக்கினர் மற்றும் தந்தையோ தலையின் கிரீடமாக ஆக்கினார். குஷி தானே! செருப்பு எங்கே, தலைக்கிரீடம் எங்கே -எவ்வளவு வித்தியாசம்! இப்போதோ சக்தி சொரூபமாகி விட்டீர்கள். பாண்டவர்களும் சக்தி ரூபத்தில் பார்க்கிறீர்களா. சிவ சக்திகளுக்கு வெற்றி எனில் பாண்டவர்களுக்கும் வெற்றி. அழியாத நிச்சயம், அழியாத போதை இருந்தது எனில் எப்போதுமே வெற்றி நிச்சயிக்கப்பட்டது தான்! நல்லது.

**குரூப்-3: சதா ஆரோக்கியமாக இருப்பதற்கு குஷியின் சத்துணவு சாப்பிடுங்கள்!** அனைவரும் தன்னை அதிர்ஷ்டசாலி ஆத்மாக்கள் என அனுபவம் செய்கிறீர்களா? யார் அதிர்ஷ்டசாலி ஆத்மாக்களோ அவர்களது மனதில் சதா குஷியின் கீதம் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஆஹா எனது சிரேஷ்ட பாக்கியம்! -இந்தப் பாடல் ஒலிக்கிறது தானே. இந்த குஷியின் பாடலைப் பாடுவதற்கு அனைவருக்கும் வருகிறது தானே. வயதானவரோ குழந்தையோ வாலிபரோ அனைவருமே பாடுகிறீர்கள். மனதில் என்ன ஓடிக் கொண்டிருக்கிறதோ அதைத்தான் குஷியின் பாடலாகப் பாடுவீர்கள் அல்லவா. மேலும் மற்ற எல்லா விஷயங்களும் முடிந்து விடுகிறது. அவ்வளவுதான், பாபா மற்றும் நான், மூன்றாமவர் யாரும் இல்லை! எப்போது இத்தகைய ஸ்திதியில் இருக்கிறீர்களோ அப்போது குஷியின் பாடலைப் பாடுகிறீர்கள் -ஆஹா

பாபா ஆஹா, ஆஹா எனது பாக்கியம் ஆஹா! குஷி அனைத்தையும் விட சிறந்த சத்துணவு, குஷியைப் போன்று வேறு எந்த சத்துணவும் இல்லை என இப்படியும் பாடப்பட்டுள்ளது. எனவே குஷியின் சத்துணவை சாப்பிடுபவர்கள் சதா ஆரோக்கியமாக இருப்பார்கள், ஒருபோதும் பலஹீனம் அடைய மாட்டார்கள். யார் நல்ல சத்துணவு சாப்பிடுகிறார்கள் அவர்கள் உடல் பலஹீனம் அடைவதில்லை. குஷி மனதிற்கான சத்துணவு. மனது ஒருபோதும் பலவீனம் அடையாது, சக்திசாலியாக இருக்கும். ஸ்திதியும் சக்திசாலியாக இருக்கும். அத்தகைய சக்திசாலியான ஸ்திதியில் இருப்பவர்கள் ஆடாது அசையாது இருப்பார்கள். எனில் குஷியின் சத்துணவு சாப்பிடுகிறீர்களா? எப்போதாவது சாப்பிடுவது மற்றும் மறந்து விடுகிறீர்களா? இப்படியும் ஆகிறது தானே. உடல் சக்திக்காவும் ஏதாவது உண்ண கொடுத்தால் சில நேரம் சாப்பிடுவது, சில நேரம் மறந்து விடுகிறது இல்லையா. எனில் இந்த சத்துணவை எப்போது சாப்பிடுகிறீர்கள்? சில நேரம் சாப்பிடுவது, சில நேரம் மறப்பது அப்படி இல்லை தானே? அனைத்திலும் மிகவும் குஷியான விஷயம் தந்தை நம்மை அவருடையவராக ஆக்கியதுதான்! உலகத்தினர் பகவான் ஒரு நொடி என் கண்ணில் பட்டால்கூட போதுமே என்று துடித்துக் கொண்டுள்ளனர் ஆனால் நீங்களோ சதா கண்களிலேயே இருக்கிறீர்கள். அவர்களோ ஒரு நொடிப்பொழுது என்கின்றனர் ஆனால் நீங்களோ சதா தந்தையின் கண்களில் இருக்கிறீர்கள். ஆதலால், 'நூரே ரத்தன்', கண்களின் ஒளி என்ற பட்டம் உள்ளது. எனில் அவர்கள் துடிக்கின்றனர் மற்றும் நீங்கள் கண்களிலே ஒன்றி விட்டீர்கள். அதிர்ஷ்டசாலிகள் என இதற்குத்தான் கூறப்படுகிறது. நினைத்துக்கூட பார்க்கவில்லை ஆனால் ஆகி விட்டீர்கள். தன்னுடைய அதிர்ஷ்டத்தை பார்த்து போதையில் இருக்கிறீர்கள் தானே. இப்போது ஐயோ ஐயோ என்று கதறுவதில்லையே. எப்போதாவது ஐயோ ஐயோ என்கிறீர்களா? துக்கத்தின் அலை கொஞ்சமாவது அனுபவம் ஆகிறது என்றால் ஐயோ ஐயோ என ஆயிற்று. ஐயோ -இது ஒருபோதும் ஆகக்கூடாது, இப்படி ஆயிடுச்சே... ... எப்போதாவது துக்கத்தின் அலை வருகிறதா? சுக வள்ளலின் குழந்தைகளுக்கு துக்கம் எங்கிருந்து வந்தது? கடலின் குழந்தைகள் ஆனால் தண்ணீர் வற்றி விட்டது எனில் என்னவென்று சொல்வது? துக்கத்தின் அலை ஓய்ந்து விட்டதா? சில சமயம் உடல், சில சமயம் செல்வம், சில சமயம் நோயின் துக்க அலைகள் ஏற்படுகிறதா? சில சமயம் பேரன் பேத்திகள் நோயுறுகின்றனர், சில சமயம் விவசாயத்தில்

நஷ்டம் ஏற்படுகிறது எனில் துக்கம் ஏற்படுகிறதா? நாம் சுக வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் சுக வள்ளல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யார் வள்ளலோ அவரிடம் இருந்தால்தானே கொடுப்பார். எனவே கொடுக்கும் அளவிற்கு மாஸ்டர் வள்ளல் ஆகி இருக்கிறீர்களா? யாருக்கு தான் சாப்பிடுவதற்கே ஒன்றுமே இல்லை எனில் அவர் எப்படி வள்ளலாக முடியும்? எனவே எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள். தந்தையை கடல் என்று கூறுகிறீர்கள். கடல் என்றால் எல்லையற்றது, வற்றாதது. எவ்வளவுதான் கடல் காய்ந்தாலும் அது வற்றிப் போவதில்லை. எனில் நீங்களும் மாஸ்டர் கடல், நதி -வாய்க்கால் இல்லை. பாக்ய விதாதாவின் குழந்தைகள் ஆகி விட்டீர்கள் எனில் தந்தையிடம் என்ன உள்ளதோ அது குழந்தைகளுக்காகத்தான். பாக்கியம் உங்களது ஆஸ்தி! ஆஸ்தியை பாதுகாக்கத் தெரியுமா? அல்லது இழப்பவர்களா? பல குழந்தைகளுக்கு பாதுகாக்க தெரிவதில்லை எனில் முடித்து விடுகின்றனர் மற்றும் பலருக்கு பாதுகாக்கத் தெரியும் எனில் அதிகரித்து விடுகின்றனர். நீங்கள் யார்? அதிகப்படுத்துபவர்களா! இத்தகைய பாக்கியம் முழு கல்பத்திலும் இப்போதுதான் கிடைக்கிறது எனில் இத்தகைய விலைமதிக்க முடியாத பொருளை அதிகரிக்க வேண்டும், இழக்கக் கூடாது. அதிகப்படுத்துவதற்கான சாதனம் -பகிர்ந்தளித்தல்! எத்தனை பேரை பாக்கியவான் ஆக்குவீர்களோ, அதாவது பாக்கியத்தை பகிர்ந்து அளிப்பீர்களோ அந்தளவு பாக்கியம் பெருகிக் கொண்டே இருக்கும். பிரம்மா பாக்கியத்தை அளிக்கும்போது என்ன தூங்கிக் கொண்டிருந்தாயா என்ற மகிமையும் உள்ளது அல்லவா! எனில் பிரம்மா பாக்கியத்தை பகிர்ந்தளித்தார் மற்றும் பிரம்மா குமார் குமாரிகள் என்ன செய்தீர்கள்? பாக்கியத்தை பகிர்ந்து அளிக்கிறீர்கள் தானே. எவ்வளவு பகிர்ந்து அளிப்பீர்களோ அவ்வளவு அதிகமாகும். ஸ்தூல செல்வத்தை பகிர்ந்திடும் போது அது குறைந்து விடும் ஆனால் இதுவோ அதிகரிக்கும். பாண்டவர்கள் சம்பாதிப்பதில் புத்திசாலிகள் ஏனெனில் ஒரு ஜென்மம் சேமிப்பதற்காக மற்றும் பல ஜென்மங்கள் சாப்பிடுவதற்காக. சத்யுகத்தில் என்ன சம்பாதிப்பீர்கள்? ஓய்வாக சாப்பிட்டுக் கொண்டிருப்பீர்கள். ஒரு ஜென்மத்தின் முயற்சி மற்றும் பல ஜென்மங்களுக்கு பலன். எனவே ஜென்ம ஜென்மத்திற்காக இந்த ஒரு ஜென்மத்தில் தான் சேர்க்க வேண்டும். நல்லது. அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? இந்த பிராமண வாழ்க்கையில் திருப்தி இல்லையேல் பிறகு எப்போது இருக்கும். இப்போதுதான் திருப்தியை அனுபவிக்கும் நேரம். பிராமண

வாழ்க்கையில லக்ஷணமே திருப்தியாய் இருப்பது. திருப்தியிருந்தால் குஷி இருக்கும், திருப்தி இல்லையேல் குஷியும் இருக்காது! நல்லது.

**குரூப்-4: டிராமாவினுடைய ஞானத்தின் நினைவு ஒவ்வொரு தடையையும் 'எதுவும் புதிதல்ல' என்றாக்கி விடும்!** தன்னை சதா விக்ன விநாசக் ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? அல்லது தடை வந்தது எனில் பயப்படுபவர்களா? விக்ன விநாசக் ஆத்மா சதா சர்வ சக்திகளாலும் நிரம்பியவராக இருப்பார். தடைகளுக்கு வசமாகுபவர் இல்லை! எப்போதாவது தடைகளின் பிரபாவம் கொஞ்சமாவது ஏற்படுகிறதா? எப்போதும் எந்த வித தடை வந்தாலும் நினைவிருக்கட்டும் -தடையின் வேலை வருவது மற்றும் நமது கடமை விக்ன விநாசக் ஆவது. எப்போது பெயரே விக்ன விநாசக் என்றால் தடைகள் வந்தால் தானே அழிப்பீர்கள். எனவே நம்மிடம் ஏன் இந்த தடை வருகிறது என ஒருபோதும் நினைக்கக் கூடாது. தடை வந்தே தீரும் மற்றும் நாம் வெற்றியாளர் ஆக வேண்டும். ஆகவே, விக்ன விநாசக் ஆத்மா ஒருபோதும் தடைகளால் பயப்படுவதில்லை, தோல்வியும் அடைவதில்லை. இந்த மாதிரி தைரியம் உள்ளதா? ஏனெனில் எந்தளவு தைரியமோ, ஒரு மடங்கு குழந்தைகளின் தைரியம் மற்றும் ஆயிரம் மடங்கு தந்தையின் உதவி! இந்தளவு தந்தையின் உதவி கிடைக்கும்போது தடை என்ன கஷ்டமா? எனவே எவ்வளவு பெரிய தடையானாலும் என்ன அனுபவம் ஆகிறது? தடை இல்லை ஆனால் விளையாட்டு. விளையாட பயப்படுவீர்களா? விளையாடுவது குஷியாக இருக்குமல்லவா! அப்படி விளையாட்டு என புரிந்து கொண்டால் பயப்பட மாட்டீர்கள் ஆனால் குஷி குஷியாக வெற்றி அடைவீர்கள். சதா டிராமாவினுடைய ஞானத்தின் நினைவு மூலம் ஒவ்வொரு தடையையும் எதுவும் புதிதல்ல என புரிந்து கொள்வீர்கள். புது விஷயம் இல்லை, மிகப் பழமையானது. எத்தனை முறை வெற்றி அடைந்திருப்பீர்கள்? பலமுறை! ஞாபகம் இருக்கிறதா அல்லது அப்படியே கூறுகிறீர்களா? டிராமா அப்படியே திரும்ப நடைபெறுகிறது என கேட்டிருக்கிறீர்கள் ஆதலால் கூறுகிறீர்களா அல்லது பல முறை செய்துள்ளோம் என புரிந்துள்ளீர்களா? ஒருவேளை டிராமாவின் கருத்து திரும்பவும் அப்படியே நடக்கிறது என்பது புத்தியில் தெளிவாக இருக்கிறது என்றால் அந்த நிச்சயத்தின் பேரில் எப்போது அப்படியே திரும்ப நடக்கிறது எனில் பல முறை திரும்ப நடந்துள்ளது மற்றும் இப்போது திரும்ப நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; ஆனால்

நிச்சயத்தின் விஷயம் ஆகிறது! அடுத்த கல்பத்தில் வேறொருவர் வெற்றி பெறுவார் மற்றும் இந்த கல்பத்தில் நாம் வெற்றி பெறுவோம் -இது நடக்க முடியாது. ஏனெனில் எப்போது உருவான உருவாக்கப்பட்ட டிராமா எனும்போது உருவாக்கப்பட்டது மற்றும் உருவாகிக் கொண்டிருக்கிறது என்றால் திரும்பவும் நடைபெறுகிறது என்று அர்த்தம். இப்படி நிச்சய புத்தி உடையவர் ஆடாத அசையாதவராத இருப்பார். அசல்கர் யாருடைய நினைவுச்சின்னம்? ஞானத்தின் ரகசியங்களில் யார் அசைக்க முடியாதவராக இருக்கிறாரோ அவருடையது. எனில் நாம் நடைமுறையில் நமது நினைவுச்சின்னத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற இந்த போதை இருக்கிறதல்லவா. யார் சதா விக்ன விநாசக் ஸ்திதியில் நிலைத்து இருக்கிறாரோ அவர் சதா டபுள் லைட் ஆக இருப்பார். ஏதாவது சுமை உள்ளதா? எல்லாம் உன்னுடையது என்றாகியது தானே? இல்லை பாதி உனது, பாதி எனதா? 75-சதவீதம் தந்தைக்கு, 25-எனக்கா? சில சமயம் உன்னுடையது, தேவையானபோது என்னுடையதா? எனது எனது என கூறியதன் அனுபவம் இருக்கிறதல்லவா, என்ன கிடைத்தது? உன்னுடையது என்று கூறுவதால் நிரம்பியவர் ஆகி விடுவீர்கள். எனது எனது என்றால் காலியாகி விடுவீர்கள். சதா டபுள் லைட் என்றால் எல்லாமே உன்னுடையது! ஒருவேளை கொஞ்சமாவது பற்று இருந்தது எனில் என்னுடையது என்றானது. உன்னுடையது என்றால் பற்றற்றவர். நல்லது.

**குரூப்-5: அனைத்தையும் அர்ப்பணம் செய்து எவர் ரெடி ஆகுங்கள்!**

அனைவரும் தன்னை ஒவ்வொரு அடியிலும் கோடி வருமானம் சேமிப்பவர் என புரிந்துள்ளீர்களா? எவ்வளவு சேமித்துள்ளீர்கள்? 100-கோடி, 10,000-கோடி, எவ்வளவு? கணக்கிட முடியுமா? இன்றைய கம்ப்யூட்டரால் கணக்கிட முடியுமா? எனில் முழு கல்பமும் மற்றும் முழு உலகிலும் இப்படிப்பட்ட பணக்காரர் யாராவது உண்டா? நீங்கள் அனைவரும் தானே? இல்லை, சிலரிடம் குறைந்தும், சிலரிடம் அதிகமாகவும் உள்ளதா? அனைவரும் நிரம்பி உள்ளீர்களா? ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் ஈட்டுகின்ற ஆத்மா நான் என்ற இந்த போதை சதா இருக்கட்டும். பரம்பரை பரம்பரையாய் உட்கார்ந்து சாப்பிடுகிற அளவு இவ்வளவு சம்பாதித்து சேர்த்து வைத்திருக்கிறார் என லௌகீகத்திலும் கூறுகின்றனர் அல்லவா. எனில் உங்கள் வருமானத்தில் எத்தனை பரம்பரைகள் உட்கார்ந்து சாப்பிடுவார்கள்? ஒரு ஜென்மத்தில்

பல ஜென்மத்திற்கானதை சேர்த்து வைத்து விட்டீர்கள் மேலும் ஓய்வாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருப்பீர்கள். சத்யுகத்தில் அமிர்தவேளை எழுந்து யோகம் செய்வீர்களா? யோகத்தின் ஸித்தியை அனுபவிக்கிறீர்கள். எப்படி எது வரை படித்துக் கொண்டிருக்கிறோமோ அது வரை 'பாஸ்' ஆக முடியாது, எனில் பல ஜென்மங்களில் எவ்வளவு சேமித்துள்ளீர்கள்? எப்போது விநாசமானாலும் கூட உங்களுடைய சேமிப்பு இருக்கும் தானே! இல்லை, இன்னும் கொஞ்சம் நேரம் கிடைத்தால் இன்னும் சேமித்து விடுவோம் என கூறுவீர்களா? இப்போது இன்னும் நேரம் வேண்டுமா? எவர் ரெடியா? நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் மற்றும் இங்கேயே விநாசம் ஆரம்பித்து விட்டால் சென்டர் அல்லது சென்டரின் சாமான்கள் நினைவுக்கு வருமா? எதுவும் ஞாபகத்திற்கு வராது. இந்தளவு கவலையற்ற ராஜா ஆகி விட்டீர்களா? எப்போது இந்த தேகம் கூட நம்முடையது இல்லையோ, வேறு எது தான் நம்முடையது? உடல், மனம், செல்வம் -அனைத்தும் தந்து விட்டீர்களா! எப்போது அனைத்தும் உங்களுடையது என சங்கல்பம் செய்தீர்களோ அப்போதே எவர் ரெடி ஆகி விட்டீர்கள் அல்லவா. நான் பாபாவுடையவன் மற்றும் பாபா என்னுடையவர் என்று எல்லோரும் திட சங்கல்பம் செய்து விட்டீர்களா? எந்தக் கவலையும் இல்லை. ஏதாவது அந்த மாதிரி செய்தி வந்தது எனில் கவலைப்படுவீர்களா? விமானத்தின் நினைவு வராதல்லவா? நல்லது, உறுதியாக இருக்கிறீர்கள். எப்போது பிராமணன் ஆகத்தான் வேண்டுமெனில் பக்காவாக ஆகுங்கள், அரைகுறையாக ஆவதால் என்ன லாபம்? வாழ்ந்து கொண்டே இறந்தபோதும் கொஞ்சம் கொஞ்சம் மூச்சு வாங்குகிறதா? மூச்சு நின்று விடவில்லை என்றால் இறக்கவும் இல்லை. பாருங்கள், தந்தைக்கு குழந்தைகள் மீது அன்பு உள்ளது எனில் அன்பின் அடையாளம் என்ன? அன்பின் அடையாளமாவது -யாரிடம் அன்பு உள்ளதோ அவர் மீது அனைத்தையும் தியாகம் செய்து விடுவது. எனில் தந்தை ஆஸ்தி முழுவதும் உங்களுக்குத் தந்து விட்டாரல்லவா. ஏதாவது தனக்காக வைத்துக் கொண்டாரா? மேலும் பாருங்கள், தினமும் இவ்வளவு அன்பின் கடிதங்கள் எழுதுமளவு வேறு யாரும் இப்படி அன்பு செலுத்த முடியாது. தினமும் நினைவின் கடிதம் (முரளி) கிடைக்கிறதுதானே. குழந்தைகள் மீது அன்பு இருப்பதால்தான் தந்தையும் அன்பிற்கான பதில் அளிக்கிறார். உங்களுக்கும் இந்தளவு அன்பு உள்ளதுதானே! தந்தையை விட அதிக அன்பு உள்ளதா? அன்பின் இன்னொரு அடையாளம் -யார் மீது அன்பு உள்ளதோ அவரிடமிருந்து

ஒருபோதும் பிரியாமல் இருப்பது. எனில் தந்தை குழந்தைகளை ஒருபோதும் தனிமைப்படுத்துவதில்லை, சதா கூடவே இருக்கிறார் மேலும் சதா கூடவே இருப்பார். வேறு யாருடனாவது இருக்குமளவுக்கு எவருமே இல்லை. பாப்சமான் ஆவதற்கான முயற்சி தீவிர வேகத்தில் செய்து கொண்டிருக்கிறீர்களா; அருகில் வரக்கூடியவர்களா. எந்த மாலையில் வரக்கூடியவர்கள்? 108! 16108'ல் வரக்கூடியவர்கள் யாருமே இல்லையா? எனில் 108'ன் மாலை இரட்டை வெளிநாட்டவருடையதா? நல்லது, லட்சியம் சதா உயர்ந்ததாக வைப்பதுதான் யதார்த்த புருஷார்த்தமாகும். மனதால் சேவை மற்றும் வார்த்தையால் சேவை இரண்டும் செய்கிறீர்களா அல்லது ஏதாவது ஒன்றா? இரட்டை சேவை செய்கிறீர்களா? எது சுலபமாக உள்ளது? (சிலர் மனசா சேவை, சிலர் வார்த்தையால் சேவை, சிலர் இரண்டும் என்றனர்). இரண்டின் பயிற்சியும் மிக அவசியம். ஏனெனில் நேரத்திற்கு ஏற்றவாறு சேவை செய்ய வேண்டும் எனில் எல்லா இடங்களிலும் நன்றாக சேவை நடந்து கொண்டிருக்கிறது. வெளிநாட்டில் சத்யுக ஆதியில் தேவைப்படும் ஆத்மாக்களில் எத்தனை தயார் செய்துள்ளீர்கள்? 1-லட்சம் தயாராகி இருக்குமா? இந்தியா 8-லட்சம் தயார் செய்யட்டும் எனில் வெளிநாட்டினர் 1-லட்சமாவது செய்யுங்கள். எப்போது செய்வீர்கள்? எவ்வளவு காலம் தேவைப்படும்? இப்போது அனைவருக்கும் செய்தி சென்று விட்டதல்லவா. ஒரு மாதத்தில் 1-லட்சம் தயார் செய்ய முடியும்தானே. செய்ய முடியுமா? எனில் 12-மாதத்தில் எத்தனை ஆகி விடும்? எஜமானர்கள் உங்களுக்காக நேரம் காத்துக் கொண்டிருக்கிறது. குறைந்த பட்சம் 9-லட்சம் தயாராக வேண்டும். மனதால் மற்றும் வார்த்தையால் -இந்த இரட்டை சேவை மூலம் சீக்கிரம் சீக்கிரமாக சேவையை அதிகரியுங்கள். சேவையின் ஊக்கம் நன்றாக உள்ளது ஆனால் சதா முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். பாப்தாதா குழந்தைகளின் முயற்சியின் ஈடுபாடு மற்றும் சேவையின் ஈடுபாடு இரண்டையும் பார்த்து புன்முறுவல் செய்கிறார். எனவே வெகு வேகமாக தயார் செய்யுங்கள். இப்போது ஏறும் கலையின் ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் தானே. இரட்டை வெளிநாட்டினர் உறுதியாக இருக்கிறீர்களா? பயப்படுபவர்கள் அல்ல! பாப்தாதா சதா கூறுகிறார் இரட்டை வெளிநாட்டினர்கள் இப்போது ஒரு வார்த்தையை சதா காலத்திற்கும் முடித்து விட வேண்டும். எந்த வார்த்தை? சில சமயம் (sometimes)! என்ற சொல்லை முடித்து விட்டீர்களா? அல்லது இப்போதும் கூட இருக்கிறதா? எப்போது தந்தையின் அன்பு சதா உள்ளது எனில் குழந்தைகளின் அன்பும்

சதா இருக்க வேண்டும் அல்லது சில சமயமா? எனில் சில சமயம் (sometimes)! என்ற சொல்லை முடித்து விட்டீர்களா? ஏனெனில இப்போதிலிருந்து சதா குஷியில் இருப்பதற்கான, சதா சக்திசாலியாக இருப்பதற்கான பயிற்சி செய்தீர்கள் எனில் நீண்ட காலத்து பயிற்சி இறுதியில் வேலைக்கு உதவும். போகப் போக ஆயிடுவோம் என இவ்வாறு ஒரு போதும் நினைக்கக் கூடாது. எல்லோரும் திருப்தியாய் இருக்கிறீர்களா? திருஷ்டி கிடைத்தது மற்றும் வரதானமும் கிடைத்தது -'சில சமயம்' முடிந்தது; 'சதா' என்ற சொல்லை சதி ஞாபகம் இருக்கட்டும்! இச்சமயம் அனைவரும் மதுவாசிகளே. மதுபன் நிவாசி ஆவது நன்றாக உள்ளதல்லவா. உண்மையான முகவரி மதுபன்தானே. வீடும் மதுபன் மற்றும் செல்வதோ சேவை ஸ்தானத்திற்கு முழு உலகிலும் சேவை நடக்க வேண்டும் ஆதலால் தனித்தனி இடங்களுக்கு சேவை செய்வதற்காக சென்றுள்ளீர்கள். ஆனால் உண்மையாக மதுபன் நிவாசிகள் மற்றும் அடுத்ததாக பாரதத்தில்தான் ராஜ்யம் செய்யப் போகிறீர்கள். பாரதம் தான் எல்லாவற்றையும் விட உயர்ந்ததாகவும் அழகாகவும் ஆகும். யார் முதன் முறையாக வந்திருக்கிறீர்களே அவர்களுக்கான வரதானம் -சதா முதல் எண்ணில் வர வேண்டும்! நம்பர்-1 ஆவதற்காக யார் ஒவ்வொரு சமயமும் ஜெயிக்கிறார்களோ அவர் ஒன்(1)னில் வருவார். வேகமாக பறந்து கொண்டே இருக்க வேண்டும். சக்தி உள்ளது தானே. இறக்கைகள் உறுதியாக இருக்கின்றனவா? எந்த குறையும் இல்லைதானே? ஞானம் மற்றும் யோகம் -இவ்விரண்டு இறக்கைகளும் உறுதியாக இருந்தால் பறந்து கொண்டே இருப்பீர்கள். ஞானம் என்றால் ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடப்பதற்கான புரிதல்; நினைவு என்றால் சதா தந்தையுடன் கூடவே இருக்கும் அனுபவம் செய்தல். எனவே இரண்டு இறக்கைகளும் உறுதியாக உள்ளனவா? ஒருவேளை எவ்விதமான குறை இருப்பின், குறையானது எளிதை கடினமாக்கி விடும் மற்றும் சக்திசாலியாக இருந்தால் கஷ்டமும் சகஜமாகி விடும், அசம்பவமும் சம்பவமாகி விடும். இந்தளவு சக்திசாலியாக இருக்கிறீர்கள் அல்லவா!

**கிறிஸ்துமஸ், புது வருடத்திற்காக வாழ்த்து அட்டை அனுப்பிய அனைவருக்கும் பாப்தாதாவின் கோடி மடங்கு அன்பு மற்றும் நினைவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்!** கிருஸ்துமஸ் என்றால் பெரிய நாள் என்று பொருள். அவர்கள் பெரிய நாள் என ஒப்புக்

கொள்கின்றனர் மற்றும் நீங்களோ பெரிய மனசுக்காரர்கள். எனில் பெரிய மனது வைப்பவர்கள் சதா தானும் நிரம்பியவர்களாக இருக்கிறார்கள் மற்றும் பிறரையும் நிரம்பியவராக ஆக்குகிறார்கள். எனவே பெரிய மனசின் மூலம் பெரிய நாளைக் கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் நாளுக்கான பரிசாக பாப்தாதா அனைவருக்கும் வரதானம் கொடுத்தார், அது அனைத்தையும் விட பெரிய பரிசு. வரதானம் நினைவிருக்கிறதுதானே. நல்லது.

**வரதானம்: திரிகாலதரிசி (முக்காலத்தையும் தரிசிக்கும்) நிலையில் இருந்து நாடகத்தின் ஒவ்வொரு நேரத்தின் நடிப்பையும் பார்க்கக்கூடிய மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகுக!**

திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து, நாம் என்னவாக இருந்தோம். என்னவாக இருக்கின்றோம். மேலும் என்னவாக ஆகப் போகின்றோம் என்பதைப் பாருங்கள்... இந்த நாடகத்தில் நம்முடைய விசேஷமான நடிப்பு அடங்கியுள்ளது. நேற்று நாம் தேவதைகளாக இருந்தோம், பிறகு நாளை தேவதைகளாவோம் என்பது அந்தளவிற்கு தெளிவாக அனுபவம் ஆக வேண்டும். நமக்கு மூன்று காலங்களின் ஞானம் கிடைத்து விட்டது, எப்படி ஒரு தேசத்தின் உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டு முழு நகரத்தையும் பார்த்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறதோ, அதேபோல் சங்கமயுகம் உயர்ந்த இடமாகும். இதன் மீது நின்று கொண்டும் ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு நடிப்பையும் பார்த்தால் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும்.

**சுலோகன்: யார் சதா யோகயுக்தமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு அனைவருடைய சகயோகமும் (உதவியும்) தானாகக் கிடைக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1992 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றி அடைவதற்கான சாதனம் அனைத்தையும் பயனுள்ளதாக உபயோகியுங்கள்!

இன்று புது வாழ்வு கொடுக்கும் படைப்பவர் தந்தை தன்னுடைய புது வாழ்வை உருவாக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த புது வாழ்க்கை அதாவது உயர்ந்த பிராமண வாழ்க்கை இருப்பதே புது யுகம் படைப்பதற்காகத் தான். அப்படி ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் புது வாழ்க்கை, புது யுகத்தை கொண்டு வருவதற்காகத் தான். அந்த புது யுகத்தில் அனைத்துமே புதியதே புதியதாகத் தான் இருக்கும். இயற்கைக் கூட சதோபிரதானமாக அதாவது புதியதாக இருக்கும்.

உலகின் கணக்குப்படி புது வருடம் கொண்டாடுகிறார்கள் -புது வருடத்திற்கான வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார்கள் மேலும் ஒருவர் இன்னொருவருக்கு புது வருடத்தின் அடையாளமாக பரிசும் கொடுக்கிறார்கள் ஆனால் தந்தை மற்றும் நீங்கள் புது யுகத்திற்கான வாழ்த்துக்கள் கொடுக்கிறீர்கள். இப்பொழுது புது யுகம் அதாவது பொன்னுலகம் சத்யுகம் மற்றும் சொர்க்கம் வந்தே விட்டது என்று இந்த நற்செய்தியை அனைத்து ஆத்மாக்களுக்கும் கூறுகிறீர்கள். இந்த சேவை தான் செய்கிறீர்கள் இல்லையா? இந்த நற்செய்தியைத் தான் கூறுகிறீர்கள் இல்லையா? புது யுகத்தின் பொன்னான பரிசையும் கொடுக்கிறீர்கள். என்ன பரிசு கொடுக்கிறீர்கள்? பல ஜென்மங்களுக்காக உலக இராஜ்ய பாக்கியம் கொடுக்கிறீர்கள். இந்த பொன்னான பரிசில் அனைத்து பரிசுகளும் அடங்கி விடுகின்றன. ஒருவேளை இன்றைய உலகில் யாராவது பெரியதிலும் பெரிய மற்றும் நல்லதிலும் நல்ல பரிசு கொடுக்கிறார்கள் என்றாலும் என்ன கொடுப்பார்கள்? ஒரு வேளை யாராவது யாருக்காவது இன்றைய நாட்களின் கிரீடம் மற்றும் ஆசனம்

கொடுத்தால் கூட உங்களுடைய சதோபிரதான பொன்னான பரிசிற்கு முன்பு இவையெல்லாம் என்ன? பெரிய விஷயமா என்ன?

புது வாழ்க்கை கொடுத்த தந்தை தன்னுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்த விலை மதிப்பில்லாத அழியாத பரிசு கொடுத்து விட்டார். உரிமையாளர்கள் ஆகி விட்டீர்கள் இல்லையா? பிராமண ஆத்மாக்கள் எப்பொழுதும் அசைக்க முடியாத நம்பிக்கையோடு என்ன கூறுகிறார்கள். உலக இராஜ்ய பாக்கியம் எங்களுடைய பிறப்புரிமை என்று தான் கூறுகிறாம். இல்லையா? அந்தளவு போதை இருக்கிறது இல்லையா? அல்லது சில நேரம் குறைந்து விடுகிறது மற்றும் சில நேரம் அதிகரித்து விடுகிறதா? இந்த உரிமையை யாரும் மாற்ற முடியாது என்ற நிச்சயமும் இருக்கிறது கவலையற்ற நிலையும் இருக்கிறது. நிச்சய புத்தி உடைய ஆத்மாக்களுக்கு இது கவலையில்லாத நிலை. கவலையில்லாத நிலையா? அல்லது கிடைக்குமா? அல்லது கிடைக்காதா? என்று தெரியவில்லை என்ற ஏதாவது கவலை இருக்கிறதா? எப்பொழுது அந்த மாதிரி எண்ணம் வருகிறதா? ஒருவேளை பிராமணனன் என்றால், பிராமணனிலிருந்து பரிஷ்தா ஆவேன், பரிஷ்தாவிலிருந்து தேவதை ஆவேன் என்ற கவலையற்ற நிலை இருக்கிறது. உறுதியான நிச்சயம் இருக்கிறது இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் குழப்பம் இருக்கிறதா? ஆத்மாக்களும், ஆடாத அசையாத நிலை இருக்கிறதா? அந்த மாதிரியான பொன்னான பரிசை தந்தை உங்களுக்கு கொடுத்திருக்கிறார். மேலும் நீங்கள் என்ன செய்வீர்கள்? மற்றவர்களுக்கு கொடுப்பீர்களா? அற்ப கால பரிசு என்றால் அற்ப காலம் முடிந்தவுடன் பரிசும் முடிந்து விடும் ஆனால் இது அழியாத பரிசு ஒவ்வொரு ஜென்மமும் உங்களுடன் இருக்கும்.

உண்மையிலேயே கொண்டாட வேண்டும் என்றால் புது யுகத்தைத் தான் கொண்டாட வேண்டும் ஆனால் இந்த சங்கமயுகத்தில் ஒவ்வொரு நாளும் கொண்டாடுவதற்காகவேதான் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடு இருப்பதற்கு, ஒவ்வொரு நாளும் குறியின ஊஞ்சலில் ஆடுவதற்காக மற்றும் குஷியில் ஆடுவதற்காகவும் மற்றும் அழியாத பாடல் பாடுவதற்காகவும் தான் இருக்கிறது. எனவே பிராமண வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கொண்டாடிக் கொண்டேயிருங்கள். பிராமணர்களுக்காக ஒவ்வொரு நாளும் ஊக்கம் உற்சாகத்தை

அதிகரிக்கும் உற்சவம் ஆகும். எனவே ஞாபகார்த்த ரூபத்தில் பாரதத்தில் அனேக பண்டிகைகள் (உற்சவம்) கொண்டாடுகிறார்கள். பாரதத்தில் வருடத்தில் அனைத்து தினங்களும் கொண்டாடுவதற்காகத்தான் என்பது தெரிந்ததுதான். வேறு எங்குமே பாரதத்தைப் போல் பண்டிகைகள் கொண்டடப்படுவதில்லை. அப்படி பிராமணர்கள் நீங்கள் ஒவ்வொரு நாளையும் கொண்டாடுவதின் ஞாபகார்த்தமாக இது ஏற்பட்டிருக்கிறது. எனவே புது வருட நாளையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். புது வருடம் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். அப்படியானால் ஒரு நாள் மட்டும் கொண்டாடுவீர்களா? முதல் தேதி முடிந்து விட்டது என்றால் கொண்டாடுவதும் முடிந்து விடுமா?

உயர்ந்த ஆத்மாக்கள் உங்களின் புதிய ஜென்மம் அதாவது இந்த பிராமண ஜென்மத்திற்கு ஒவ்வொரு நாளும் கொண்டாடுவது மற்றும் ஒவ்வொரு நாளும் உற்சவம் என்ற உயர்ந்த ராசி இருக்கிறது. ஒவ்வொரு நாளும் எப்பொழுதும் உயர்ந்ததிலும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று உங்களுடைய ஜாதகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் உயரும் கலை என்பதுதான் பிராமணர்கள் உங்களுடைய உயர்ந்த ராசியாகும். இரண்டு நாள் மிக நன்றாக இருந்தது மற்றும் இரண்டு நாட்களுக்குப் பிறகு கொஞ்சம் வித்தியாசம் இருந்தது என்று அப்படியில்லை. செவ்வாய் நன்றாக இருந்தது. வியாழன் அதை விட நன்றாக இருந்தது. வெள்ளியில் தடை வந்தது என்று அப்படிப்பட்ட ராசியா உங்களுடையது? என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அதுவும் நல்லது மேலும் என்ன நடக்குமோ அது இன்னும் நல்லது. இதைத்தாள் பிராமணர்களிள் ஏறும் கலையின் ராசி என்று கூறப்படுகிறது. பிராமண வாழ்க்கையின் ராசி மாறி விட்டது. ஏனென்றால் புதிய ஜென்மம் ஏற்பட்டதில்லையா. எனவே இந்த வருடம் ஒவ்வொரு நாளும் உங்களுடைய உயர்ந்த ராசியைப் பார்த்து நடைமுறையில் கொண்டு வர வேண்டும்.

உலகைப் பொறுத்த வரையில் இது புது வருடம். மற்றும் பிராமணர்கள் உங்களைப் பொறுத்தவரையில் விசேஷமாக அவ்யக்த வருடமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். புது வருடம் என்றால் அவ்யக்த வருடத்தின் ஆரம்பம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எப்பொழுதும் வெற்றி அடைவதற்கான விசேஷ சாதனம் ஒவ்வொரு நொடியை, ஒவ்வொரு

மூச்சை, ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயனுள்ளதாக உபயோகிக்க என்ற இந்த புது வருடத்தின் மற்றும் அவ்யக்த வருடத்தின் விசேஷ சுலோகனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பயனுள்ளதாக உபயோகிப்பது தான் வெற்றியின் ஆதாரம் ஆகும். எந்த விதமான வெற்றியை ண்ணத்திலானாலும் சரி, வார்த்தையில் செயலில் உறவு நெருக்கத்தில் என்று அனைத்து விதமான வெற்றியை அனுபவம் செய்ய விரும்புகிறீர்கள் என்றால் பயனுள்ளதாக உபயோகித்துக் கொண்டே செல்லுங்கள். வீணாகி விட வேண்டாம். தனக்காக உபயோகியுங்கள் அல்லது மற்ற ஆத்மாக்களுக்காக உபயோகியுங்கள் அப்பொழுது தானாகவே வெற்றியின் குஷியை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். ஏனென்றால் பயனுள்ளதாக உபயோகிப்பது என்றால் நிகழ்காலத்திற்காக வெற்றி மற்றும் எதிர்காலத்திற்காக சேமிப்பு செய்வதாகும்.

எவ்வளவு இந்த வாழ்க்கையில் நேரத்தை பயனுள்ளதாக ஆக்குகிறீர்கள் என்றால் நேரத்தின் வெற்றியின் பலன் இராஜ்ய பாக்கியத்தின் முழு காலமும் இராஜ்ய அதிகாரி ஆகிறீர்கள். ஒவ்வொரு மூச்சையும் பயனுள்ளதாக ஆக்கினீர்கள் என்றால் இதன் பலனாக அனேக ஜென்மங்கள் எபொழுதும் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள். ஒருபொழுதும் திடீர் என்று முச்சு நின்று விடாது. மாரடைப்பு ஏற்படாது. ஒன்றிற்கு ஆயிரம் மடங்கு வெற்றியின் அதிகாரத்தை பிராப்தி செய்கிறீர்கள். இந்த மாதிரி அனைத்துப் பொக்கிஷங்களையும் பயனுள்ளதாக உபயோகித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். இதில் கூட முக்கியமாக ஞான பொக்கிஷத்தை உபயோகிக்கிறீர்கள். ஞானம் என்றால் அறிவு. இதன் பலனாக அறிவாளி ஆகிறீர்கள். அங்கு எதிர்காலத்தில் அனேக மந்திரிகளின் அறிவுரைகளை எடுக்க வேண்டியது இருக்காது. தானே அறிவு நிறைந்தவர் ஆகி இராஜ்ய பாக்கியத்தை நடத்துகிறீர்கள். இன்னொரு பொக்கிஷம் அனைத்து சக்திகளின் பொக்கிஷம். எவ்வளவு சக்திகளின் பொக்கிஷத்தை காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்களோ, பயனுள்ளதாக உபயோகிக்கிறீர்களோ அவ்வளவு உங்களுடைய எதிர்காலத்தில் எந்த சக்தியின் குறை இருக்காது, அனைத்து சக்திகளும் தானாகவே இடைவிடாது தொடர்ந்து தடைகளற்ற வெற்றியை அனுபவம் செய்விக்கிறது. எந்த சக்தியின் குறையும் இல்லை. தர்ம சக்தி மற்றும் இராஜ்ய இரண்டுமே கூடவே ஒன்றாக இருக்கிறது. மூன்றாவது சர்வ

குணங்களின் பொக்கிஷம். இத பலனாக இந்தக் கடைசி நேரம் வரை உங்களுடைய ஜடச்சிலைகளை அனைத்து குணங்கள் நிரம்பிய தேவதை என்று மகிமை செய்யும் அளவிற்கு குணமூர்த்தி ஆகி விடுகிறீர்கள். அந்த மாதிரி ஒவ்வொரு பொக்கிஷத்தின் வெற்றியின் பலனை சிந்தனை செய்யுங்கள். புரிந்ததா? இதைப் பற்றி உங்களுக்குள் ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். அப்படி இந்த அவ்யக்த வருடத்தில் பயனுள்ளதாக உபயோகியுங்கள் மற்றும் வெற்றியை அனுபவம் செய்து கொண்டேயிருங்கள்.

இந்த அவ்யக்த வருடத்தை விசேஷமாக பிரம்மாபாபாவின் அன்பில் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி அன்பின் அடையாளமாக, எது அன்பானவருக்கு பிரியமானதோ, அது அன்பிற்குரியவருக்கும் பிரியமானதாக இருக்கட்டும். அப்படி பிரம்மாபாபாவின் அன்பு எதன் மேல் இருந்தது? முரளி மேல். அனைத்தையும் விட அதிகமாக முரளியின் மேல் அன்பு இருந்ததது அல்லவா? அதனால்தான் முரளிதரன் ஆனார் இல்லையா! எனவே எதிர்காலத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் ரூபத்தில் கூட முரளி (புல்லாங்குழல்) அடையாளமாக காண்பித்திருக்கிறார்கள். எனவே எதன் மேல் தந்தையின் அன்பு இருந்ததோ அதன் மேல் அன்பு இருக்க வேண்டும். இதுதான் அன்பின் அடையாளமாகும். பிரம்மாபாபா மிகவும் அன்பானவராக இருந்தார் மற்றும் இருக்கவும் செய்கிறார் என்று சொல்பவராக மட்டும் இருக்க வேண்டாம் ஆனால் அடையாளம்? எதன் மேல் பிரம்மாபாபாவின் அன்பு இருந்ததோ அதன் மேல் உள்ள அன்பு இப்பொழும் தென்பட வேண்டும். இதைத் தான் பிரம்மாபாபாவின் அள்பிற்குரியவர் என்று கூறப்படுகிறது இல்லையென்றால் வரிசைக்கிரமமான அன்பிற்குரியவர் என்று தான் கூறப்படுமேயன்றி நம்பர் ஒன் அன்பிற்குரியவர் என்று கூறப்பட மாட்டாது. அவ்யக்த வருடத்தின் லட்சியம் தந்தை மேல் உள்ள அன்பின் அடையாளங்களை நடைமுறையில் காண்பிப்பது தான். இது தான் கொண்டாடுவது ஆகும். இதைத் தான் வேறு வார்த்தைகளில் தந்தைக்குச் சமமாக ஆவது என்று கூறுவது. என்ன காரியம் செய்தாலும் காரியத்திற்கு முன்பு, சொல்வதற்கு முன்பு, எண்ணத்திற்கு முன்பு இது பிரம்மாபாபாவிற்குச் சமமாக இருக்கிறதா, இது அன்பின் அடையாளமா? என்று விசேஷமாக இரட்டை கவனம் வைத்து சோதனை செய்யுங்கள். பின்பு எண்ணத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள், வார்த்தைகளை வாய் மூலமாகச்

சொல்லுங்கள், காரியத்தை கர்மேந்திரியங்கள் மூலம் செய்யுங்கள். முதலில் சோதியுங்கள் பின்பு நடைமுறையில் கொண்டு வாருங்கள். நினைக்கவில்லை ஆனால் நடந்து விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். பிரம்மாபா பா என்ன நினைத்தாரே அதைச் செய்தார், என்ன சொன்னாரோ அதைச் செய்தார், என்பது தான் பிரம்மபாபாவின் முக்கியமான விசேஷத்தன்மை ஆகும். புதிய ஞானமாக இருந்த காரணத்தினால் எவ்வளவுதான் எதிர்ப்பு இருந்த போதும் ஆனால் தன்னுடைய சுயமரியாதையின் நினைவு மூலமாக தந்தையின் துணையின் சக்தி மூலமாக மற்றும் நிச்சயம், திடத்தன்மை என்ற ஆயுதங்கள் மூலமாக தன்னுடைய நிலை (பொசிஷன்) என்ற இருக்கையில் எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருந்தார். அப்படி எங்கு பொசிஷன் இருக்கிறதோ அங்கு ஆப்பொசிஷன் (எதிர்ப்பு) என்ன செய்ய முடியும். ஆப்பொசிஷன் பொசிஷனை உறுதியாக்குகிறது. அசைப்பதில்லை. மேலும் உறுதியாக்குகிறது. அதனுடைய நடைமுறை வெற்றியடைந்ததின் பலன் நீங்கள் தான், மேலும் கூடவே நாலாபுறமும் உள்ள சேவையின் அடையாளம். யார் முதலில் தமால் (குழப்பம்) செய்பவர்கள் என்று கூறினார்களோ அவர்களே இப்பொழுது கமால் (அதிசயம்) செய்து காண்பித்தார்கள் என்று கூறுகிறார்கள். அப்படியானால் இது எப்படி நடந்தது? ஆப்பொசிஷனை உயர்ந்த பொசிஷன் மூலமாக முடிவு கட்டினார்.

அப்படியானால் இந்த வருடத்தில் என்ன செய்வீர்கள்? எப்படி பிரம்மாபாபா நிச்சய ஆதாரத்தில், ஆன்மீக போதையின் ஆதாரத்தில் நிச்சயம் நடக்கும் என்று தெரிந்தவராகி நொடியில் அனைத்தையும் பயனுள்ள காரியத்திற்கு கொடுத்து விட்டார், தனக்காக வைத்துக் கொள்ளவில்லை. அதன் பிரத்யக்ஷ பலனாக பிரத்யக்ஷ நிரூபணமாக கடைசி நாள் வரை உடல் மூலமாக கடிதங்கள் எழுதுவதன் மூலமாக சேவை செய்தார், வாய் மூலமாக மகாவாக்கியங்களை உச்சாரணை செய்தார். கடைசி நாளில் கூட நேரம், எண்ணம், உடலை பயனுள்ளதாக உபயோகித்தார். அப்படி பயனுள்ளதாக உபயோகிப்பது தான் அன்பின் அடையாளமாகும். உயர்ந்த காரியங்களில் ஈடுபடுத்துவது தான் பயனுள்ளதாக உபயோகிப்பதின் அர்த்தமே. அப்படி பயனுள்ளதாக்க வேண்டும் என்ற இலட்சியம் வைத்தீர்கள் என்றால் வீணாளவை தானாகவே முடிவடைந்து விடும். எப்படி வெளிச்சத்தினால் இருள்

தானாகவே நீங்கி விடுகிறது அப்படி ஒருவேளை இருளை நீக்குங்கள் என்று நினைத்துக் கொண்டேயிருந்தீர்கள் என்றால் நேரமும் வீணாகும் உழைப்பும் வீணாகும். அந்த மாதிரி உழைக்காதீர்கள். இன்று கோபம் வந்து விட்டது. இன்று பேராசை வந்து விட்டது, இன்று வீணாளதைக் கேட்டு விட்டேன். சொல்லி விட்டேன். இன்று வீணாகி விட்டது. இதை நினைத்து நினைத்து கடுமையாக முயற்சி செய்து மனமுடைந்து போய் விடுவீர்கள் ஆனால் பயனுள்ளதாக்க இந்த இலட்சியத்தின் மூலமாக வீணானவை தானாகவே முடிவடைந்து விடும். இந்த இலட்சியம் வைப்பது என்றால் வெளிச்சத்தை ஏற்படுத்துவது என்பதாகும். அப்போது இருள் தானாகவே விலகி விடும். புரிந்ததா! அவ்யக்த வருடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று. நம்பர் ஒன் அன்பிற்குரியவர்களாக ஆகிறார்களா? அல்லது நம்பர்வார் (வரிசைக்கிரமம்) அன்பிற்குரியவர்களாக ஆகிறார்களா? என்று பாப்தாதாவும் பார்ப்பார். அனைவரும் நம்பர் ஒன் ஆவீர்களா? இரட்டை வெளிநாட்டினர் என்ள ஆவீர்கள்? நம்பர் ஒன் ஆவீர்களா, நம்பர் ஒன் என்று கூறுவது மிக சுலபம் ஆனால் இலட்சியம் உறுதியாக இருக்கிறது என்றால் இலட்சணமும் அவசியம் வரும். இலட்சியம் இலட்சணத்தை இழுக்கிறது. இப்பொழுது உங்களுக்குள் திட்டம் போடுங்கள் யோசியுங்கள். பாப்தாதா குஷியடைகிறார். ஒருவேளை அனைவரும் நம்பர் ஒன் ஆகி விடுவார்கள் என்றால் மிகவும் குஷியடைவார். முதல் டிவிஷனோ மிகவும் நீளமானது, அதில் நீங்கள் வர முடியும். முதல் டிவிஷனில் அனைத்தும் முதன்மையாக இருக்கும். அப்படி அனைவரும் நம்பர் ஒன் ஆவோம் என்பது புது வருடத்தின் வாழ்த்துக்களாக இருக்கட்டும்.

வீணானதின் மேல் வெற்றி அடைந்தீர்கள் என்றால் ஆகி விடுவீர்கள். வீணானதின் மேல் வெற்றி அடையவில்லை என்றால் ஆக முடியாது. இப்பொழுது கூட வீணான கணக்கு இருக்கிறது. சிலருக்கு எண்ணத்தில், சிலருக்கு வார்த்தைகளில், சிலருடையது உறவு நெருக்கத்தில் இருக்கிறது. இப்பொழுது முழுமையான கணக்கு முடிவடையவில்லை. எனவே எப்பொழுதாவது வெளிப்பட்டு விடுகிறது. ஆனால் இலட்சியம் தன்னுடைய இலக்கை அவசியம் அடையச் செய்யும். வீணானதை நில் என்று சொன்னால் உடனே நின்று விட வேண்டும். எப்பொழுது நிறுத்துவதற்கு சக்தி வருகிறது என்றால் பழைய கணக்கின் இருப்பு இருக்கிறது அல்லவா? அது முடிவடைந்து விடும். அந்தளவிற்கு சக்தி

இருக்கட்டும். இது தான் பரமாத்மா ஸித்தி ஆகும். வெளியுலக ரித்தி-ஸித்தி செய்பவர்கள் அற்ப கால அதிசயங்களை செய்து காண்பிக்கிறார்கள். மேலும் பரமாத்மா ஸித்தி பெற்ற நீங்கள் விதி மூலமாக ஸித்தியை அடையக்கூடியவர்கள். பரமாத்மா ஸித்தியால் என்ன செய்ய முடியாது. நில் என்று நினைத்தால் உடனே நின்று விட்டது. அந்தளவிற்கு சக்தி இருக்கிறதா? அல்லது நில் என்று சொன்னதற்கு பிறகு ஓரிரு நாளும் ஆகி விடுகிறது மற்றும் ஒரு மணி நேரமும், சில தடவை பத்து மணி நேரமும் ஆகி விடுகிறதா? நில் என்றால் நின்று விட வேண்டும். அப்படி இந்த அடையாளத்தை தந்தைக்கு நீங்கள் காண்பிக்க வேண்டும். புரிந்ததா?

சேவையின் வெற்றி மற்றும் பிரத்யக்ஷதா டிராமாபடி அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இப்பொழுது அதிகரித்துக் கொண்டிருக்கிறது அல்லவா? முன்பெல்லாம் நீங்கள் அழைப்பிதழ் கொடுத்தீர்கள், இப்பொழுது அவர்கள் உங்களுக்கு அழைப்பு கொடுக்கிறார்கள். அப்படி சேவையின் வெற்றியின் பிரத்யக்ஷதா ஆகிறது இல்லையா. உங்களுக்கு ஏதாவது ஒரு மேடை கிடைப்பதற்கும் மற்றும் பட்டம் கிடைப்பதற்கும் அவசியம் இல்லை ஆனால் இது சேவையின் பிரத்யக்ஷதா ஆகும். பகவானின் பட்டத்தின் எதிரில் இந்த பட்டங்கள் எல்லாம் என்ன? (உதய்பூர் பல்கலைக் கழகம் தாதிஜி அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறார்கள்). இது கூட பிரத்யக்ஷதாவின் சாதனம் ஆகும். சாதனம் மூலமாக சேவையின் பிரத்யக்ஷதா ஆகிக் கொண்டிருக்கிறது. தயாரான மேடை கிடைத்துத் தான் ஆக வேண்டும். தர்மத் தலைவர்கள் கூட உங்களை அழைத்து உங்களையே முக்கிய விருந்தினர் ஆக்கக் கூடிய நாளும் வந்தே தான் வேண்டும். இப்பொழுது கொஞ்சம் வெளியுலக நடைமுறைகளை அவர்கள் கடைபிடிக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் உள்ளுக்குள் இந்த பவித்திர ஆத்மாக்களுக்கு ஆசன கிடைக்க வேண்டும் என்று உணருகிறார்கள். அரசியல்வாதிகளோ எங்களை முக்கிய விருந்தினர்களாக ஆக்குகிறீர்கள் ஆனால் நீங்களே முக்கிய விருந்தினர்களாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறியும் விடுகிறார்கள் ஆனால் டிராமாவில் பெயர் அவர்களுக்கும் காரியம், உங்களுடையதும் நடந்து விடுகிறது.

எப்படி சேவையில் பிரத்யக்ஷதா ஆகிக் கொண்டிருக்கிறதோ அப்படி ஒவ்வொருவரும் தன்னில் சம்பூர்ணம் மற்றும் சம்பன்னதாவின் பிரத்யக்ஷதா காண்பியுங்கள். இப்போது அதன் அவசியம் இருக்கிறது மேலும் அவசியம் சம்பன்னம் ஆகவே வேண்டும். ஒவ்வொரு கல்பமும் உருவான அடையாளங்கள் உங்களுக்கு வெற்றி நிச்சயிக்கப்பட்து என்பதை நிரூபிக்கிறது. இந்த வெற்றி மாலை என்ன? வெற்றியடைந்தீர்கள் வெற்றி மூர்த்திகளாக ஆனீர்கள் எனவே தான் அந்த அடையாளம் இருக்கிறது இல்லையா? இது நடப்பதை யாராலும் மாற்ற முடியாது. யாராவது இன்னும் அந்தளவு தயாராகவில்லை, இப்பொழுதும் பிரச்சனைகள் எவ்வளவுதான் நடந்து கொண்டிருக்கிறது என்று நினைத்தாலும் இதில் பயப்படுவதற்கான அவசியம் இல்லை. ஒவ்வொரு கல்பமும் வெற்றி அடைவதற்காள உத்தரவாதம் இந்த நினைவுச்சின்னம் ஆகும். என்னவாகும் எப்படியாகும் இந்த கேள்விக்குறிகளுக்கு அவசியமே இல்லை. நடந்தே தான் ஆக வேண்டும். கவலையில்லை தானே. கவலையில்லாத நிலையை யாரும் அசைக்க முடியாது. ஒருவேளை படகு மற்றும் படகோட்டி உறுதியாக இருக்கிறார்கள் என்றால் எந்தவொரு புயலும் முன்னேறிச் செல்வதற்கான சாதனம் ஆகி விடுகிறது. புயலும் பரிசாகி விடுகிறது. எனவே இடையிடையே இவையெல்லாம் துணைக் காட்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன ஆனால் நடந்தே தான் ஆக வேண்டும் என்பது உறுதியானது. அந்தளவு நிச்சயம் இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது கொஞ்சம் மேலே கீழே ஆவதை பார்க்கிறீர்கள் என்றால் எப்படி ஆகும், எப்பொழுது ஆகும் என்று பயந்து விடுகிறீர்களா? கேள்விக்குறி வருகிறதா? இந்த புயலே பரிசு ஆகும். புரிந்ததா? இதைத் தான் நிச்சயப்புத்தி உடையவர் வெற்றி அடைவார் என்று கூறப்படுகிறது. தந்தையைப் பின்பற்றி மட்டும் நடங்கள் நல்லது.

அனைத்து அசைக்க முடியாத நிச்சயபுத்தி உடைய வெற்றியடையும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயனுள்ளதாக்கும் வெற்றி மூர்த்தி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடியையும் எளிதாக பின்பற்றும், எப்பொழுதும் புது வாழ்க்கை மற்றும் புது யுகத்தின் நினைவிலிருக்கும் சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னில் தந்தை மேல் உள்ள அன்பின் அடையாளங்களை பிரத்யக்ஷம் செய்யும் விசேஷ

ஆத்மாக்களுக்கு, உயர்ந்த மாற்றத்திற்கு மற்றும் அவ்யக்த வருடத்தின் வாழ்த்துக்கள் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**தனிப்பட்ட சந்திப்பு -குழுக்களுடன்:**

**குரூப்-1: எவருடைய கனவிலும் கூட துக்கத்தின் அலைகள் வருவதில்லையோ அவர்தான் மகாவீர்!** அனைவரும் தன்னை மகாவீரர் என அனுபவம் செய்கிறீர்களா? மகாவீர் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான்! யார் மகாவீர் ஆத்மாவோ அவருக்காக சர்வ சக்திகளும் சதா சகயோகி ஆகின்றன. சில சமயம் சில சக்திகள் ஸஹயோகி ஆகின்றன மற்றும் சில சக்திகள் தேவையானபோது அவரை ஏமாற்றி விடுகின்றன என்பது இல்லை. எந்த நேரத்தில் எந்த சக்தி தேவையோ அது சகயோகியாகிறதா அல்லது நேரம் எடுத்துக் கொண்டு பின்னர் அந்த சக்தி வேலை செய்கிறதா? கட்டளையிட்டதும் நடந்தது. செய்யக்கூடாது தான் ஆனால் செய்துவிட்டேன், பேசக்கூடாது தான் ஆனால் பேசிவிட்டேன் என்று இப்படி சிந்திப்பது அல்லது சொல்வது இருக்கக் கூடாது. இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் சக்தி தேவையான நேரத்தில் ஆஜராக வில்லை என. கேட்கக்கூடாததுதான் ஆனால் கேட்டு விட்டேன் எனில் காதுகள், அதாவது கர்ம இந்திரியம் தனது வசத்தில் இல்லை என்று ஆகியது தானே; அதாவது காதுகள் ஏமாற்றி விட்டன. தனது கர்ம இந்திரியங்களே ஒருவேளை தேவையான நேரத்தில் ஏமாற்றி விடுகின்றன எனில் அவரை ராஜா என்று எப்படி சொல்வோம்? ராஜ யோகி என்றாலே ஒவ்வொரு கர்ம இந்திரியமும் கட்டளைப்படி நடத்துபவர். எது தேவையோ, எப்போது தேவையோ, எப்படித் தேவையோ -எல்லா கர்ம இந்திரியங்களும் அதே போல் நடக்க வேண்டும். நேரம் இப்படி இருந்தது, சூழ்நிலைகள் இப்படி இருந்தன, பிரச்சனைகள் இவ்வாறு இருந்தன என இத்தகைய சாக்கு போக்குகளை மகாவீர் ஒருபோதும் கூற முடியாது. இல்லை, பிரச்சினைகளின் வேலை வருவது மற்றும் மகாவீரரின் வேலை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, தோல்வியடைவது அல்ல. எனில் நீங்களும் தனக்குத்தானே பரீட்சை சமயத்தில் சோதனை செய்யுங்கள். அப்படியில்லை, பரிட்சையோ வரவில்லை, நான் சரியாகத்தான் இருக்கிறேன் என்பது. பேப்பர் வரும்போது பாஸ் ஆகத்தான் வேண்டும். அல்லது பேப்பரே வரவில்லை மற்றும் நான் பாஸ் ஆகி விட்டேன்? எனில் சதா பயமற்றவராகி வெற்றி அடைய வேண்டும். சொல்லக்கூடாது, செய்தாக வேண்டும். சின்ன சின்ன

விஷயங்களில் பலஹீனம் அடையக்கூடாது. சதா ஒவ்வொரு அடியிலும் உடலாலும் மனதாலும் குஷியாக இருக்கின்ற மகாவீரர் தான் வெற்றி ஆத்மாவாக ஆகிறார், துக்கமோ வருத்தமோ அடைவதில்லை. சதா குஷியாக மற்றும் கவலையற்றவராக இருப்பார். மகாவீரரின் அருகே கனவில் கூட துக்கத்தின் அலைகள் வர முடியாது, ஏனெனில் சுகக்கடலின் குழந்தை ஆகி விட்டார் அல்லவா. ஏனெனில் எங்கே சுகக்கடல் மற்றும் எங்கே துக்கத்தின் அலை! கனவும் கூட மாற்றம் அடைந்து விடும். புதிய ஜென்மம் ஆகி விட்டது எனில் கனவும் கூட புதியது தானே வரும். சங்கல்பமும் புதியது, வாழ்க்கையும் புதியது. எப்போது தந்தையுடையவராகி விட்டீர்களோ எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகள். தந்தையோ கடல் மற்றும் குழந்தைகள் காலியானவர்களா -இப்படி நடக்க முடியுமா? கடல் என்றால் சதா நிரம்பியது. கடலின் குழந்தைகள் மற்றும் சுகத்தில் காலியானவர்கள் -யார் ஏற்றுக் கொள்வார்கள். கடல் ஒருபோதும் வற்ற முடியாது. எவ்வளவு காய்ந்தாலும் சரி, கடலில் ஒருபோதும் வற்றாது. சதா தந்தையின் விசேஷங்களை நினைவில் வையுங்கள் -தந்தை யார் மற்றும் நான் யார்? ஒருபோதும் மனதால் கூட அழக்கூடாது. துக்கத்தின் அடையாளம் அழுவது மற்றும் குஷி நடனம் ஆடுவது பாடுவது. ஒருவேளை மனதால் கூட அழுதால்கூட துக்கத்தின் அலை இருக்கிறது என புரிந்து கொள்ளுங்கள். சுகக்கடலின் குழந்தைகளுக்கு துக்கமும் எங்கிருந்து வந்தது? ஆகி விடும், இறுதியில் எல்லாம் சரியாகி விடும் என்று இந்த மாதிரி அலட்சியமாக இருக்கக்கூடாது, ஏமாற்றம் அடைவீர்கள். எனில் சதி சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். இவரைத்தான மகாவீர் என கூறப்படுகிறது.

**குரூப்-2: பரிஷ்தா ஆவது என்றால் கர்மங்கள் செய்து கொண்டே கர்மத்தின் பத்தனத்தில் இருந்து விடுபட்டிருப்பது!** அனைவரும் தங்களை டபுள் லைட், அதாவது பரிஷ்தா என புரிந்துள்ளீர்களா? பரிஷ்தாவின் விசேஷ அடையாளம் -பரிஷ்தா என்றால் விலகியவராக மற்றும் தந்தைக்கு அன்பானவராக, பழைய உலகம் மற்றும் பழைய தேகத்தின் ஈர்ப்பின் உறவு இல்லாதவர். தேகத்துடன் ஆத்மாவிற்கு சம்பந்தமோ உண்டு ஆனால் ஈர்ப்பின் சம்பந்தம் இல்லை. ஒன்று சம்பந்தம், மற்றொன்று பந்தனம். ஒன்று, கர்மபந்தனம், மற்றொன்று கர்ம சம்பந்தம். எனில் சம்பந்தமோ இருக்கத்தான் செய்யும்.கர்ம இந்திரியங்கள் உள்ள வரை கர்மத்தின் சம்மந்தம் இருக்கும் ஆனால்

பந்தனம் இருக்கக்கூடாது. பத்தனத்தின் அடையாளம் - எவருடைய பந்தனத்தில் இருக்கிறாரோ அவருடைய வசத்தில் இருப்பது. யார் சம்பந்தத்தில் இருக்கிறாரோ அவர் சுதந்திரமாக இருப்பார், வசம் ஆக மாட்டார். கர்ம இந்திரியங்கள் மூலம் கர்மத்தின் சம்பந்தத்தில் வருவது தனி விஷயம் ஆனால் கர்மபந்தனத்தில் வரக் கூடாது. பரிஷ்தா என்றால் கர்மம் செய்து கொண்டிருந்தாலும் கர்மத்தின் பந்தனத்தில் இருந்து விடுபட்டவர். இன்று கண்கள் கூறும் இதைப் பார் என, எனில வசமாகி பார்ப்பது என்று இப்படி இல்லை. எப்படி யாராவது ஜெயிலின் பந்தனத்தில் வந்தார் எனில் சிறைக் காப்பாளரின் விருப்பப்படி உட்காருவது, நடப்பது, சாப்பிடுவது என்பது பந்தனத்தில் இருப்பதுதானே. அவர் விரும்பினால் ஜெயிலிருந்து சென்று விடலாம் என்றால் செல்ல முடியுமா? பந்தனம் உள்ளதல்லவா. இந்த மாதிரி பழைய சரீரத்தின் பந்தனம் இருக்கக்கூடாது ஆனால் சேவைக்கான சம்பந்தம் இருக்கட்டும். இப்படி இருக்கிறதா உங்கள் நிலை? அல்லது சில சமயம் பந்தனம், சில சமயம் சம்பந்தமா? பந்தனம் அடிக்கடி கீழே கொண்டு வந்து விடும். எனில் பரிஷ்தா என்றால் பந்தன் முக்த்! முயற்சி செய்வோம் என இப்படி கூடாது. முயற்சி என்ற சொல்லே காட்டி விடுகிறது, பழைய வாழ்க்கையின் கவர்ச்சி உள்ளது என்பதை. முயற்சி என்ற சொல்லே கூடாது, செய்தே ஆக வேண்டும், ஆகியேத் தீரணும். பரிஷ்தா என்றால் ஜீவன்முக்தி, ஜீவன் பந்தனம் இல்லை. தேகத்தின் பந்தனம் இல்லை, தேக சம்பந்தத்தின் பந்தனம் இல்லை, தேக பதார்த்தங்களின் பந்தனம் இல்லை -இப்படி ஜீவன்முக்தி ஆகியிருக்கிறீர்களா? அவ்யக்த வருஷம் என்றால் பரிஷ்தா ஸ்திதியில் நிலைத்து இருப்பது! எந்த ஈர்ப்பு உங்களை கீழே இழுக்கிறது என சோதியுங்கள்? தனது தேகத்தின் ஈர்ப்பை முடித்து விட்டீர்கள் எனில் சம்பந்தம் மற்றும் பொருட்கள் தானாகவே முடிந்து விடும்; ஒருவேளை ஈர்ப்பு இருந்தால் சம்பந்தம், பொருட்களின் ஈர்ப்பும் கண்டிப்பாக இழுக்கும் எனவே முதல் பாடம் கற்பிக்கிறீர்கள்-தேக உணர்வை விட்டு விடுங்கள், நீங்கள் தேகம் அல்ல ஆத்மாக்கள் என! எனில் இந்த பாடத்தை முதலில் உங்களுக்கே கற்பித்தீர்களா? தேத உணர்வை விடுவதற்கான மிக எளிய வழி என்ன? சரி, ஆத்மா புள்ளி என்ற நினைவு வரவில்லை, வழுக்கி விடுகிறது ஆனால் இந்த உடலும் உங்களுடையது, மனமும் உங்களுடையது, செல்வமும் உங்களுடையது,... என்ற இந்த உறுதிமொழி செய்தீர்களா! எப்போது உடல் என்னுடையது என ஆன பின் யாரிடமிருந்து ஈர்ப்பு? எப்போது என்னுடையது என்பது எதுவுமே இல்லை என்றான பின்

'எனது' என்பது எங்கிருந்து வந்தது? எப்போது கொடுத்து விட்டோமோ அப்போதே ஈர்ப்பு முடிந்து விட்டது. இந்த ஒரு விஷயத்தின் மூலம் எல்லா ஈர்ப்புகளும் சகஜமாக முடிந்து விடும். இப்போது இந்த தேகம் சேவைக்காக தந்தையின் அடகுப்பொருள். எனில சதா பரிஷ்தா ஆவதற்கு முதலில் இந்த பயிற்சியை செய்யுங்கள் -சேவைக்கான அடகுப் பொருள், நான் டிரஸ்டி ஆவேன்! டிரஸ்டி'க்கு ஒருவேளை டிரஸ்ட்'ன் பொருட்களில் டிரஸ்ட் இல்லை எனில் அவரை என்னவென்று கூறுவது? இந்த விஷயத்தைப் பக்கா செய்யுங்கள். அப்புறம் பாருங்கள், பரிஷ்தா ஆவது எவ்வளவு சகஜம் என்பதை! எனக்கு 'ஒரே ஒரு பாபா' மற்றும் என்னுடைய அனைத்தும் இந்த 'ஒரு என்னுடைய' என்பதில் அடங்கி விடும். 'ஒரு என்னுடைய' என்று கூறினால் அனைத்தும் விடுபட்டு விடும். நல்லது.

டில்லிக் காரர்கள் மைக் தயார் செய்து விட்டீர்களா? டில்லியிலோ மைக் அதிகம் உள்ளன, இங்கிருப்பது போல் வேறெங்குமே இல்லை. … … … தைரியம் வைப்பவர்களுக்கு தந்தையின் உதவி நிச்சயம் கிடைக்கும். நல்லது.

**குரூப்-3: விஷ்வ ராஜ்யத்தின் சிம்மாசனம் ஆவதற்கான ஆதாரம் -அழியாத சிம்மாசனதாரி ஆவது!** சதா தன்னை சிம்மாசனதாரி சிரேஷ்ட ஆத்மா என்ற அனுபவம் செய்கிறீர்களா? ஆத்மா சதா எந்த ஆசனத்தில வீற்றிருக்கிறது, தெரியுமா? அழியாதது அல்லவா! ஆத்மா அழியாதது எனவே அது இருக்குமிடத்திற்குப் பெயர் அழியாத ஆசனம். ஆத்மா சரீரத்தில் சதா இரு புருவ மத்தியில் அழியாத சிம்மாசனம் ஆகும். எனில் ஆசனம் இருக்குமிடத்தை ராஜா என்று கூறப்படுகிறது. சிம்மாசனத்தில் ராஜா தான் அமர்வார இல்லையா. ஆகவே ஆத்மாக்கள் நீங்களும் அழியாத சிம்மாசன ராஜாக்கள். அழியாத சிம்மாசனதாரி ஆத்மாக்கள் பாபாவின் இதய சிம்மாசனம் மற்றும் உலக ராஜ்யத்தின் சிம்மாசனத்தையும் பெறுகின்றனர். எனில் மூன்று திலகங்களும் நிரந்தரமாக உள்ளதா? சிம்மாசனத்தில் அமர வருகிறதா? அல்லது அவ்வப்போது கீழே வந்து விடுகிறீர்களா? யாரால் முதலில் அழியாத சிம்மாசனதாரி ஆக முடியுமோ அவரால்தான் தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆக முடியும் மற்றும் யார் இதய சிம்மாசனதாரியோ அவர் தான் உலக ராஜ்யத்தின் சிம்மாசனதாரி ஆக முடியும். எனில் முதல் ஆதாரம் -அழியாத சிம்மாசனம். சுயராஜ்யம் இருந்தது எனில் விஷ்ய

ராஜ்யம் உண்டு. யாருக்கு சுயத்தை ஆளத் தெரியவில்லையோ அவரால் உலகத்தையும் ஆள முடியாது. எனில் சுய ராஜ்யத்திற்கான சிம்மாசனம் இந்த பிருகுட்டி-அழியாத சிம்மாசனம். தந்தை மற்றும் குழந்தைகளின் சம்பந்தத்தினுடைய சிம்மாசனம்தான் தந்தையின இதய சிம்மாசனம். உலக ராஜ்யத்தின் சிம்மாசனத்திற்கு ஆதாரம் இந்த இரு சிம்மாசனங்கள். எனில் முதல் ஆதாரம் எது? அழியாத சிம்மாசனம்! அழியாத சிம்மாசனதாரி ஆத்மா சதா பெருமிதத்தில் இருக்கும். சிம்மாசனத்தின் போதை இருக்குமல்லவா ஆனால் இது ஆன்மீக போதை. அல்ப காலத்திற்கான போதை அல்ல, துக்கம் தரும் அந்த போதை அல்ல! இது ஆன்மீக போதை எல்லைக்குட்பட்ட எல்லா போதைகளையும் முடித்து விடும். எல்லைக்குட்பட்ட போதையோ பல விதங்கள் உள்ளன மற்றும் ஆன்மீக போதையோ ஒன்றே ஒன்றுதான். நான் தந்தையுடையவன், தந்தை என்னுடையவர் -இது ஆன்மீக போதை. தந்தையுடையவராகி விட்டோம் -இது ஆன்மீக போதை எனில் இந்த ஆன்மீக போதை சதா இருக்கிறதா? அல்லது ஏறுவது, இறங்குவதாக உள்ளதா? சில சமயம் அதிகமாக, சில சமயம் குறைவாக? ஒருவேளை யாராவது ராஜாவாக இருந்தால், சிம்மாசனமும் இருக்கும் ஆனால் சிம்மாசனத்தின், ராஜாங்கத்தின் போதை இல்லையேல் அவர் பெருமிதமின்றி ராஜ்யத்தை ஆள முடியுமா? ஒருவேளை ஆத்மா ஆன்மீக போதையில் இல்லையேல் சுய ராஜ்யம் எப்படி செய்ய முடியும்? ராஜ்யத்தில் குழப்பம் ஏற்பட்டு விடும். பாருங்கள், பிரஜை மீது பிரஜை ராஜ்யம் செய்தால் குழப்பம்தானே. ஒருவேளை ஆத்மா சுயராஜ்யத்தின் போதையில் இல்லையேல் பிரஜை மீது பிரஜை ராஜ்யம் தான் நடக்கும். இந்த கர்ம இந்திரியங்கள்தான் ராஜ்யம் செய்கின்றன. எனில் பிரஜையின் ராஜ்யம் என ஆயிற்று தானே. இதன் விளைவுதான், குழப்பம். எனில் சதா சிம்மாசனதாரி ஆத்மா என்ற ஆன்மீக போதை வையுங்கள். இத்தகைய மேன்மையான தந்தையின் இதய சிம்மாசனம் முழு கல்பமும் கிடைக்காது. உலக ராஜ்யத்தின் சிம்மாசனத்தையோ பல ஜென்மங்கள் கிடைக்கின்றன ஆனால் தந்தையின் இதய சிம்மாசனம் இப்போது மட்டுமே கிடைக்கிறது எனில் அதன் பலனைப் பெற வேண்டுமல்லவா! யார் தந்தையின் இதய சிம்மாசனதாரியாக உள்ளாரோ அவருக்கு முன்னால் எந்த ஒரு தடையும், பிரச்சனையும் வர முடியாது. இயற்கையும் போரிட முடியாது, மாயாவும் போரிட முடியாது. இதய சிம்மாசனதாரி ஆவது என்றால் சகஜமாக பிரக்ருதிஜீத், மாயாஜீத் ஆவது! எனில் இப்படி பிரக்ருதிஜீத், மாயாஜீத்

ஆகி விட்டீர்களா? இயற்கையும் கூட குழப்பத்தில் கொண்டு வருகிறதுதானே. இயற்கையின் குழப்பம் பிராமண ஆத்மாக்களை ஆட்டுகிறதுதானே? எனவே குழப்பமடையக் கூடாது. சிம்மாசனத்தில் இல்லாததால் குழப்பத்தில் வருகிறீர்கள். ஒருவேளை சிம்மாசனத்தில் இருந்தால் குழப்பத்தில் கொண்டு வர எதற்கும் தைரியம் இருக்காது. எனில் குழப்பதத்தில் வருவது நன்றாக உள்ளதா? நன்றாக இல்லை தான் ஆனால் ஆகி விடுகிறது என்றால் பிற வசமாகி விட்டீர்கள் தானே. கட்டிப்போடுவது யாருக்குமே பிடிக்காது ஆனால் எப்போது பிற வசமாகி விட்டீர்கள் எனில் கட்டப்பட்டு விடுகிறீர்கள். ஆகவே பிற வசமான ஆத்மாவா அல்லது சுதந்திர ஆத்மாவா? எப்போது முக்தி அடைவீர்கள்? ஜீவன்முக்தியின் குஷியோ இப்போது தான் உள்ளது. எதிர்காலத்தில் ஜீவன்முக்தி, ஜீவன்பந்தனத்தின் வித்தியாசம் தெரியாது ஆனால் இப்போதோ புரிந்து கொள்கிறீர்கள் அல்லவா, ஜீவன்முக்தி என்றால் என்ன, ஜீவன்பந்தனம் என்றால் என்ன என்பதை. இச்சமயத்தின் ஜீவன்முக்தியின் அனுபவம் உயர்ந்தது. வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ஆனால் முக்தியில் உள்ளோம், பந்தனத்தில் அல்ல. உங்களது ஸ்லோகன் - முக்தி, ஜீவன்முக்தி பிறப்புரிமை, எனில் பிறப்புரிமையை பெற்று விட்டீர்களா? இல்லை பரந்தாமம் செல்லும்போது தான பெறுவீர்களா? முக்தி என்பது என்ன, ஜீவன்முக்தி என்ன என்பது அங்கேயோ ஒன்றுமே தெரியாது. இதன் அனுபவம் இப்போதுதான் ஆகிறது. அனுபவிகளா. எல்லோரும் ஜீவன்முக்தியை அனுபவம் செய்துள்ளீர்களா அல்லது எப்போது சத்யுகம் செல்வீர்களோ அப்போது செய்வீர்களா? பிராமண வாழ்க்கையிலேயே ஜீவன்முக்தியின் அனுபவம் ஆகுமா? ஆக வேண்டுமானால் ஆகுமா? பாப்தாதா முன்பேயும் கூறினார் அல்லவா -எப்போது உங்கள் படைப்பான தாமரைப் பூவால் விலகி இருக்க முடிகிறது, நீரில் இருந்தாலும் நீரின் சம்பந்தத்திலிருந்து முக்தி, எனில் மனித ஆத்மாக்கள் படைப்பவர்கள் மற்றும் அது படைப்பு, எனில் படைப்பிடம் இந்த விசேஷம் உள்ளது மற்றும் மாஸ்டர் படைப்பவரிடம் இல்லையா என்ன? எப்போதாவது பந்தன் முக்த்திற்குப் பதிலாக ஒருவேளை பந்தன்யுக்த் ஆனீர்கள், பந்தனத்தில் சிக்கினீர்கள் எனில் இந்த தாமரைப்பூவின் உதாரணத்தை நினைத்துப் பாருங்கள், தாமரைப் பூவால் நியாரா-பியாரா ஆக முடியும் எனில் மாஸ்டா சர்வ சக்திவான் நான் ஆக முடியாதா! அப்போது சதா ஆகி விடுவீர்கள். கொஞ்ச நேரம் ஆவது, கொஞ்ச நேரம் ஆகாமல் போவது இதில் குறி இருக்காதுதானே. சில

நேரம் பந்தனம், சில நேரம் பந்தன்முக்த் -இது நன்றாக உள்ளதா? எனில் எது நல்லதாக இல்லையோ அதை விட்டு விடுவார்கள்; இல்லை கொஞ்சம் கொஞ்சம் வைத்துக் கொள்வார்களா? எனில் ஜீவன்முக்தி ஆவதற்கான விதி என்ன? நியாரா-பியாரா ஆவதற்கான விதி என்ன? சிம்மாசனதாரி ஆவது! சதி சிம்மாசனதாரி ஆத்மாவாகி ஜீவன்முக்தியின் அனுபவம் செய்து கொண்டே இருங்கள். இந்த ஜீவன்முக்தியின் ஸ்திதி மிகவும் அன்பானது. எல்லோரும் சதா திருப்தியாக இருப்பவர்களா? ஒவ்வொரு விஷயத்திலும் திருப்தி -யாராவது திட்டினாலும் சரி, அவமதித்தாலும் சரி அல்லது அந்த நேரத்தில் போராளி ஆகிறீர்களா? சதா குஷியாக இருப்பவர்கள், சதா திருப்தியாய் இருப்பவர்கள், அருகில் இருப்பவர்களாகவும் சமமானவர்களாகவும் ஆகின்றனர். திருப்தியாத இருப்பது என்றால் எல்லா ரகசியங்களும் தெரிந்து கொள்வது. கோபமடைவது என்றால் ரகசியம் தெரியாதவர், எனவே கோபமடைகிறார். நீங்களே எல்லா ரகசியங்களையும் தெரிந்து கொண்டு விட்டீர்களா. எனில் ரகசியத்தைத் தெரிந்தவர் திருப்தியாக இருப்பார். ரகசியத்தைத் தெரியாதவர் கோபமடைகிறார். நீங்களோ திரிகாலதரிசி, ஞானம் நிறைந்தவர்தானே. எனில் எல்லா ரகசியங்களையும் தெரிந்து கொண்டவர்கள், சதா திருப்தியாக இருப்பவர்கள். அல்லது குடும்பத்தில் கொஞ்சம் முரண்பாடு ஆனது எனில் கோபப்படுகிறீர்களா? சதா திருப்தியாக இருக்கிறீர்களா -கூறுங்கள் நாங்கள் இருக்கவில்லை எனில் வேறு யார் இருப்பார்கள் என. பகவான் தந்தையுடையவர் ஆவதால் இப்போது திருப்தியாக இல்லையேல் பின் எப்போது ஆவோம் என்பது சதா நினைவிலிருக்கட்டும். இப்போது தானே ஆக வேண்டும். எனவே தான் குஷிதான் ஆரோக்கியமானது என கூறுகின்றனர். யார் குஷியாக இருக்கிறாரோ அவர் ஆரோக்கியமாக இருப்பார், யார் ஆரோக்கியமாக இருக்கிறாரோ அவர் குஷியாக இருப்பார். ஒருவரைப் பார்த்து ஒருவர் கேட்கிறார்கள் தானே நல்லா இருக்கீங்களா என. எனில் சதா ரகசியம் தெரிந்தவர் என்றால் சதி குஷியாக இருப்பவர். அப்படியில்லை, இங்கே ஆம் என சொல்லி விட்டு, அங்கு சென்ற பின் 'என்ன செய்வது?' என சொல்லக் கூடாது. நல்லது.

**குரூப்-4: சிறப்புகள் தந்தையால் அளிக்கப்பட்டவை ஆதலால் ஒருபோதும் என்னுடையது என்பது வரக்கூடாது!** பாப்தாதா மூலம் கிடைக்கப் பெற்ற எல்லா கஜானாக்களுமான சாவி எது? எந்த சாவியை போடுவது மூலம் அனுபவம் ஏற்படுகிறது? மேரா பாபா என்பதே இந்த

சாவி! மேரா மற்றும் பின்பு பாபா. எனில் எப்போது என்னுடையது என ஆனதோ, எது தந்தையுடையதோ அது உங்களுடையதாகி விட்டது மற்றும் பாபா என்று கூறுவதன் அர்த்தம் ஆஸ்தியின் அதிகரி ஆகி விட்டீர்கள். எல்லா கஜானாக்களும் எல்லா ஆத்மாக்களுக்கும் பிராப்தியாகி விட்டது ஆனால் 'மேரா பாபா' என்ற இந்த நினைவு இதயத்தில் இருக்கும்போதுதான் இந்த கஜானாக்களின் அனுபவம் ஏற்படும். அப்பா என்று கூறும்போதே ஆஸ்தியின் நினைவு வர வேண்டும். எஜமானன் உடன் குழந்தை மற்றும் குழந்தை உடன் எஜமானன் ஆகுங்கள். குழந்தை ஆவதால் சதா கவலையற்று, சதா டபுள் லைட் ஆக இருப்பீர்கள் மற்றும் எஜமானன் என்று அனுபவம் செய்வதால் எஜமானத்தன்மையின் ஆன்மீக போதை இருக்கும். எனில் குழந்தைத்தன்மையின் அனுபவமும் தேவை, எஜமானத்தன்மையின் அனுபவமும் தேவை. உடனுக்குடன் குழந்தை, உடனுக்குடன் எஜமானன் -இந்த இரண்டின் வழிமுறையும் வருகிறதா? பல சமயங்களில் எதில் எங்கு எஜமானன் ஆக வேண்டும் மற்றும் குழந்தை ஆக வேண்டும் என்று இப்படி பல விஷயங்கள் அல்லது சம்பந்தம்-தொடர்பில் வரும்போது வருகின்றன. ஒருவேளை அப்போது குழந்தை ஆவதற்குப் பதில் எஜமானன் ஆகி விட்டால் குழப்பத்தில் வந்து விடுகின்றனர் மற்றும் எஜமானன் ஆவதற்குப் பதில் குழந்தை ஆகி விட்டால் குழப்பத்தில் வந்து விடுகின்றனர். எப்படி நேரமோ அப்படி சொரூபம் இருக்க வேண்டும். எந்த ஒரு காரியம் செய்யும்போதும் எஜமானன் ஆகிச் செய்ய வேண்டும் ஆனால் எப்போது யாராவது பெரியவர்கள் இவ்வாறு முடிவு செய்கிறார், இந்த வேலையை அப்படி செய்யாமல் இப்படி செய்ய வேண்டும் எனும்போது அந்த நேரம் மீண்டும் குழந்தை ஆகி விட வேண்டும். கருத்து கூறும் நேரம் எஜமானன் மற்றும் எப்போது பெரும்பான்மையினர் தீர்மானிக்கின்றனர் எனில் அந்த நேரம் குழந்தை, அச்சமயம் எஜமானத்தன்மையின் போதை கூடாது -நான் என்ன நினைத்தேனோ அதுதான் சரி. உடனுக்குடன் எஜமானன், உடனுக்குடன் குழந்தை. எனில் எந்த நேரத்தில் எந்த சொரூபத்தில் நிலைப்பது -இந்த வழிமுறை வருகிறதா? இவருக்குத்தான் கூறப்படுகிறது 'ஆல்ரவுண்ட்' பாகத்தை நடிப்பவர் என! சொல்வேந்தன் ஆவது மற்றும் சரிங்க ஐயா என ஆவது. எனில் இப்படிச் செய்ய வருகிறதா? ஏனெனில இந்த ஈஸ்வரிய மார்க்கத்தில் ஒருபோதும் யாராலும் என்னுடைய புத்தியின் திட்டங்கள்தான் மிகச் சிறந்தவை என கூற முடியாது, என்னுடைய ஆலோசனை ரொம்ப நல்லா இருக்கு ஏன் அவர்கள் ஏற்றுக்

கொள்ளவில்லை என. என்னுடையது என்பது இருக்கிறதா? என்னுடைய புத்தி மிக நன்றாக வேலை செய்கிறது, என்னுடைய புத்திக்கு மதிப்பு தரவில்லை, எனில் என்னுடையது? எந்த ஒரு சிறப்பும் என்னுடையதா அல்லது தந்தை அளித்ததா? தந்தை அளித்ததில் என்னுடையது என்பது வர முடியாது. எனவே சதா நியாரா-பியாரா ஆக இருப்பது போல இதுவும் குழந்தை மற்றும் எஜமானன் ஆவதற்கான ஒரு ஏணி தான். இந்த ஏணியில் ஏறுங்கள், இறங்குங்கள். சில சமயம் குழந்தை ஆகுங்கள், சில சமயம் எஜமானன் ஆகுங்கள். இதனால் சதா லேசாக இருப்பீர்கள், எவ்வித சுமையும் இருக்காது. எல்லா வித சுமையையும் தந்தையிடம் தந்து விட்டீர்களா. சுமை தூக்கும் பழக்கமோ இல்லை தானே. சுமை தூக்கும் பழக்கம் இருக்கிறது எனில் எவ்வளவுதான் சொன்னாலும் கண்டிப்பாக சுமை தூக்குவார். சுமை சுமப்பவர் அல்ல, லேசாக இருப்பவர். எந்தளவு லேசானவரோ அந்தளவு உயர்ந்த ஸ்திதியில் பறந்து கொண்டே இருப்பார். சுமையிருப்பவரின் அடையாளம் -அவர் தானாகவே கீழே வந்து விடுவார் மேலும் லேசானவரின் அடையாளம் - அவர் பறந்து கொண்டே இருப்பார். எனில் நீங்கள் யார்? பறப்பவர்களா. எப்போது நேரமே பறக்கும் கலையில் உள்ளது எனில் பறக்கும் கலையின் நேரத்தில் பறப்பதுதான் பிராப்தி உள்ளது. இரண்டிலும் பிஸியாக இருக்கிறீர்களா -நினைவிலும் மற்றும் சேவையிலும்கூட! சேவாதாரிக்கு இரவு பகல் சேவையின்றி சுகம் இருப்பதில்லை. அப்படிப்பட்ட சேவாதாரிகளா நீங்கள்? அல்லது சந்தர்ப்பம் கிடைக்கும் போது சேவை செய்பவரா? யார் சேவையில் முன்னேறுகிறீர்களோ, அதே போல நினைவிலும் முன்னேறுங்கள். நினைவு மற்றும் சேவை இரண்டின் சமநிலை வைப்பது சதா முன்னேற வைக்கும். சமநிலை வைக்க வருகிறதா? சில நேரம் சேவையில் அதிகமாக முன்னேறுவது, சில நேரம் நினைவில் முன்னேறுவது -இப்படி கூடாது. நினைவும் சேவையும் சதா சேர்த்தே இருக்க வேண்டும். நல்லது.

குடும்பத்திலிருப்பவர்கள் சதா நியாரா-பியாராவாக இருக்கிறீர்களா. எந்த ஒரு பந்தனத்திலும் சிக்கிக் கொள்வதில்லைதானே? அரை கல்பம் தன்னை சிக்க வைத்துக் கொண்டிருந்தீர்கள், நீக்குவதற்கு முயற்சி செய்த போதிலும் முடியவில்லை. இப்போது தந்தை எல்லா பந்தனத்திலிருந்தும் விலகச் செய்து விட்டார், எனில் எண்ணத்தால் கூட எந்த ஒரு சம்பந்தத்திலும், தனது தேகத்திலும், பொருட்களிலும் சிக்கக் கூடாது. 63-ஜென்மங்கள் அனுபவம் செய்து பார்த்து விட்டீர்களா, சிக்கியதால்

என்ன கிடைத்தது? இருந்த கொஞ்சத்தையும் இழந்தீர்கள் தானே. எனில் சங்கல்பத்தில் கூட பந்தன் முக்த்! இதற்குத்தான் சொல்லப்படுகிறது, நியாரா-பியாரா! எண்ணத்தில் கூட பந்தனம் ஈர்க்கக்கூடாது. ஏனெனில் எண்ணத்தில் வந்தது எனில் பின்னர் அது செயலிலும் வந்து விடும். எனவே எண்ணத்திலேயே முடித்து விடுங்கள். இந்த நியாரா-பியாரா ஸ்திதியை, அதாவது அவ்யக்த ஸ்திதியின் விசேஷ பயிற்சி செய்யுங்கள். உடல் உணர்வில் வந்தாலும் அதன் ஈர்ப்பில் வரக் கூடாது. அவ்யக்தம் என்பதன் அர்த்தம் வ்யக்த உணர்வைக் கடந்திருப்பது. அவ்யக்தம் ஆவதற்கு வருகிறது எனில் இப்போது சதா என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். எல்லோரும் குஷியாக இருக்கிறீர்களா? எப்போதாவது குஷி சென்று விடுவதில்லை தானே? எப்போதாவது குறைந்து விடுகிறதா? உங்களுடைய கஜானாக்கள சதா பெருகிக் கொண்டே இருக்க வேண்டும், குறைந்து போகக் கூடாது. எனில் குஷியாக இருக்க வேண்டும் மற்றும் குஷியைப் பகிர்ந்தளிக்க வேண்டும். நல்லது. சேவையையும் அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள் மற்றும் தன்னையும் பறக்க வைத்துக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

**குரூப்-5: விவேகம் மற்றும் புன்சிரித்த முகத்தின் சமநிலை மூலம் ஒரே ரசனை நிலையின் அனுபவம் செய்யுங்கள்!** அனைவரும் தந்தையுடன் கூடவே இருக்கும் அனுபவம் சதா செய்கிறீர்களா? சதா கூடவே எனில் ஒவ்வொரு அடியிலும் தந்தையின் உதவி சகஜமாக அனுபவம் ஆகிக் கொண்டே இருப்பது. எப்படி குழந்தைக்கு அப்பா அல்லது அம்மா உடன் இருந்தது எனில் அது எவ்வளவு சகஜமாக முன்னேறிக் கொண்டே இருக்கிறது. எனில் இப்படிப்பட்ட அனுபவம் ஆகிறதா? எப்பொழுதுமா அல்லது எப்போதாவதா? எப்போதாவது (sometimes) முடிந்து விட்டதா அல்லது இப்போதும் எப்போதாவது வருகிறதா? தந்தையுடன் இருப்பது எளிது மற்றும் தந்தையுடன் இல்லாமல், தந்தையிடமிருந்து விலகி இருந்தால் கடினமாகி விடும். தந்தை குழந்தைகளுக்கு இந்த நேரத்தில்தான் கூடவே இருப்பதற்கான சலுகை அளிக்கிறார். ஆகவே எப்போது தந்தை சலுகை அளிக்கிறாரே அப்போது இந்த சலுகையை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமல்லவா. 63-ஜென்மங்களாக பல வித பெயர்களைக் கூறி அழைத்துக் கொண்டே இருந்தீர்கள்; இப்போது தந்தை கிடைத்து விட்டார் எனில சதா கூட வே இருக்கும் அனுபவம் செய்யுங்கள். உங்கள்

எல்லோருக்கும் பிரம்மா தந்தை மீது எவ்வளவு அன்பு உள்ளது? அவர் மீது அன்பு உள்ளது எனில் பிராமண கலாச்சாரத்தின் மீதும் அன்பு உள்ளது. அனைத்தையும் விட சிறந்த பார்வை அனுபவத்தினுடையது. அனுபவத்தின் பார்வை மூலம் யார் பார்க்கிறாரோ அவரால் ஒருபோதும் யாராவது ஏதாவது சொன்னால் கூட குழப்பத்தில் வர முடியாது. ஸ்தூல கண்களால் நாம் பார்த்ததை சரியாக பார்த்தேனா எனத் தெரியவில்லை என்கிறோம் ஆனால் அனுபவத்தின் கண் மூலம் பார்ப்பது, அனுபவம் செய்கின்ற பொருள் சதா சரியாகத்தான இருக்கும். இந்த அனுபவம் எல்லோருக்கும் இருக்கிறதுதானே. ஒருவேளை ஒரு லட்சம் ஆத்மாக்கள் உங்களிடம் நீங்களோ பிரம்மா தந்தையைப் பார்த்ததேயில்லையே எனக் கூறினால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? கூறுவோம் பார்த்திருக்கிறோம் என! இதிலிருந்து யாராலும் உங்களை அசைக்க முடியாது.

வெளிநாட்டில் எத்தனை மாலைகள் தயார் செய்துள்ளீர்கள்? 108'ன் மாலை தயாரா அல்லது 16,108'டா? எனில் இரட்டை வெளிநாட்டினரின் 108'ன் மாலை தனியாக உருவாகுமா அல்லது கலந்து வருவீர்களா? தனியாக இல்லை தானே. எனில் எல்லோரும் 108'ல் தான்! என்றால் இந்தியா காரர்கள் எந்த மாலையில் வருவீர்கள்? (எல்லோரும் ஒன்றிலேயே வருவோம்). தைரியம் நன்றாக வைத்துள்ளீர்கள் மற்றும் இனி மேலும் தைரியமானது சதா முன்னேற்றிக் கொண்டே இருக்கும். இப்போது குழப்பத்தில் வருவதற்கு மாயாவோ வருவதில்லைதானே. சில சமயம் குழப்பி விடுகிறதா? மனநிலை மாறுவதில்லையே? எனில் இந்த வருஷம் எவ்வித குழப்பமும் அடையக்கூடாது மற்றும் எந்த ஒரு விஷயத்திலும் மனநிலை மாற்றம் வரக்கூடாது. சதா எல்லா கர்மங்களிலும் பிரம்மா தந்தையைப் பின்பற்றுங்கள். பிரம்மா தந்தையும் சதா புன்சிரித்த முகம் மற்றும் விவேகம், இரண்டையும் சமன் செய்து ஒரே ரசனையில் இருந்தார் எனில் பிரம்மா தந்தையைப் பின்பற்றுங்கள். எவ்வித மாயாவும் வருவதில்லைதானே. சதா தன்னை வெற்றியாளன் அதாவது மாயாஜீத் என அனுபவம் செய்தவாறே பறந்து செல்லுங்கள். ஆகவே அனைவரும் மாயாஜீத் ஆகி விட்டீர்களா. எண்ணத்தில் கூட மாயா வருவதில்லையா? வீண் எண்ணங்களின் ரூபத்தில் வருகிறதா? எனில் மாயாஜீத் பட்டம் கிடைத்து விட்டதா அல்லது பெற வேண்டுமா? விழா முடிந்து விட்டதல்லவா அல்லது இல்லையா? பரிஷ்தாவின் உடை அணிந்து விட்டீர்களா? கிடைத்ததா? எப்படி தாதிக்கு 'டாக்டரேட்'ன் ஆடை கிடைத்தது,

அதே போல உங்களுக்கும் கூட பரிஷ்தாவின் ஆடை கிடைத்ததா? பின் வீண் எண்ணம் எங்கிருந்து வந்தது? பரிஷ்தாவுக்கு வீண் எண்ணங்கள் வருமா? இப்போது வீண் என்பதன் பெயர் அடையாளத்தை முடித்து விட வேண்டும். பாப்தாதா குழந்தைகளின் ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து புன்முறுவல் செய்கிறார். சதா என்ற வார்த்தையை அடிக்கடி அடிக்கோடு இட்டுக் கொண்டே செல்லுங்கள். எனில் இது எந்த குரூப்? பரிஷ்தா குரூப். இரட்டை வெளிநாட்டினர் குரூப் இல்லை, பரிஷ்தா குரூப். நல்லது. எப்படி சங்கல்பம் செய்துள்ளீர்களோ அதே போல சுயம் பரிஷ்தா ஆகி பறந்து கொண்டே செல்லுங்கள் மற்றும் பிறரையும் பரிஷ்தா ஆக்கி பறக்க வைக்க வேண்டும். நல்லது.

**குரூப்-6: கவலையற்றவராக இருப்பதற்காக புத்தியை தூய்மை ஆக்குங்கள்!** சதா தன்னை கவலையற்ற ராஜா என அனுபவம் செய்கிறீர்களா? ஏனெனில் எப்போது என்னுடையது என்பது வருகிறதோ அப்போது கவலை வரும். தந்தையிடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டால் கவலையற்றவர் ஆகலாம். தனது தேகம், தேக சம்பந்தம், என்ன ஆகும், எப்படி ஆகும், நாளை என்ன நடக்கும்,... எதுவுமே இல்லை எனில் கவலையற்றவர். கவலை இருந்தது எனில் புத்தி சரியாக தீர்மானம் செய்யாது. தீர்மானம் சரியாக இருந்தால் வெற்றியும் நிச்சயம். புத்தி காலியாக இருந்தால்தான் நிர்ணய சக்தியும் சரியாக வேலை செய்யும். கவலையில் புத்தி சரியாக வேலை செய்யாது, துக்கம் தான் மிஞ்சும். எனவே கவலையற்றவர் என்றால் மனம் புத்தியை காலியாக வைத்திருத்தல்! யோக அக்னி மூலம் புத்தியில் இருக்கும் குப்பையை எரித்து விட வேண்டும். எந்தளவு புத்தி தூய்மையாக உள்ளதோ அந்தளவு கவலையற்றவராக இருக்க முடியும். எவ்விதமான பலவீனமும் -வீண் எண்ணம்,... குப்பை தான். வீணானதை சக்திசாலியாக மாற்றுவதற்கான சகஜ சாதனம் சதா புத்தியை பிஸியாக வைத்திருப்பது. இதனால் கவலையற்றவராக, டபுள் லைட் ஆக இருக்க முடியும், தேவை திடசங்கல்பம்! இவ்வருடம் முழுவதும் ஒரு நொடி கூட கவலையின்றி இருங்கள். நல்லது.

**அமிர்தவேளை 2.30am'கு புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை அளித்தவாறே பாப்தாதா கூறினார் -நாலாபுறமும் உள்ள அதி சிநேகி, சதா அருகில் இருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும்**

**புத்தாண்டினுடைய ஒவ்வொரு நாளுக்கும் கோடி மடங்கு வாழ்த்துக்கள்!** ஏனெனில் வருஷத்தினுடைய ஒவ்வொரு நாளும் ஏதாவது புதுமையைக் கொண்டு வருகிறது. எல்லா பிராமண ஆத்மாக்களும் ஒவ்வொரு நேரமும் ஏதாவது புதுமையைத் தன்னுள் மற்றும் சேவையில் அவசியம் கொண்டு வர வேண்டும். எனவே இந்த வருஷம் இதைச் சோதியுங்கள் ஒவ்வொரு நாளும் சுய முன்னேற்றம் பற்றி அல்லது சேவை பற்றி என்ன புதுமையைக் கொண்டு வந்துள்ளேன்? சதா தனது சிரேஷ்ட நிலை மற்றும் முயற்சியின் வேகத்தை முன்னேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இப்போது எல்லா பிராமண ஆத்மாக்களும் முன்னேற வேண்டும், அதாவது உலக மாற்றத்தின் காரியத்தில் முன்னேறுவதற்கான அடையாளம் உள்ளது என்றால் அது சதா ஒவ்வொரு நேரமும் புதுமைக்கான வாழ்த்துக்களை எடுத்துக் கொண்டே இருப்பது மற்றும் மற்றவர்களையும்கூட புதிய ஊக்கம் உற்சாகத்தின் மூலம் முன்னேற்றிக் கொண்டே இருப்பது. சதா ஊக்கம் உற்சாகம் மூலம் ஒவ்வொரு நாளையும் உற்சவமாகக் கொண்டாட வேண்டும். எனவே சதா உற்சவத்தின் குஷியில் நடனமாடிக் கொண்டேயிருப்பது மற்றும் தந்தையின் குணங்களின் பாடலைப் பாடிக் கொண்டேயிருப்பது. இனிமையின் மிட்டாய் மூலம் தனது வாயை இனிமையாக்க வேண்டும் மற்றும் இனிமையான பேச்சு, இனிமையான சம்ஸ்காரம், இனிமையான சுபாவம் மூலம் மற்றவர்களின் வாயையும் இனிப்பாக்க வேண்டும் -அத்தகைய இந்த புத்தாண்டிற்காக கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

அன்பு நினைவுகளை அனுப்பி இருந்தவர்கள், வாழ்த்தட்டை அனுப்பியவர்கள், பரிசு அனுப்பிவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு தேசத்தில் மற்றும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் பெயர் சகிதமாக விசேஷ வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகள். நல்லது!

**வரதானம்: துக்கமான உலகத்திலிருந்து விலகிச் செல்லக் கூடிய சுகதேவன், சுக சொரூபமானவர் ஆகுக!**

சுகக்கடலின் குழந்தைகள் நீங்கள் சுக சொரூபம் மற்றும் சுகதேவன் ஆவீர்கள். துக்கமான உலகத்தை விட்டு விட்டீர்கள் விலகி வந்து விட்டீர்கள் என்றால் எண்ணத்தில் கொடுக்காதீர்கள் மற்றும் துக்கத்தை எடுக்காதீர்கள். ஒருவேளை யாருக்காவது ஏதாவது ஒரு விஷயம் பீல் (feel

மனக்கசப்பு) ஆகிறது என்றால் இதையும் துக்கம் எடுப்பது என்று கூறப்படும். ஒருவேளை யாராவது கொடுத்து நீங்கள் எடுக்காமல் இருப்பது உங்கள் கையில் இருக்கிறது. யாராவது துக்கம் கொடுக்கிறார் என்றால் நான் என்ன செய்ய முடியும் என்று கூறும் நிலை இருக்க வேண்டாம். என்ன எடுப்பது? என்ன எடுக்கக் கூடாது? என்று சோதனை செய்யுங்கள். எடுப்பதில் கூட புத்திசாலி ஆனீர்கள் என்றால் சுக சொரூபமானவர், சுகதேவன் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: மனநிலையின் ஆதாரம் நினைவு ஆகும். எனவே எப்பொழுதும் குஷியின் நினைவு நிலைத்திருக்கட்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂